# இனியும் சூல் கொள்



23 வது இலக்கிய சந்திப்பு

13 – 14 செப்டம்பர் 1997

**GARGES LES GONESSE - FRANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனா கலையரங்கம்

பாரிஸ்

அர்ச்சனா கலையரங்கத்தின் விசேட சேவையாக உங்கள்
விருப்பத்திற்கு அமைய மண்டப ஒழுங்குகள்
மணவறை - அலங்காரங்கள், சுவையுள்ள சைவ-அசைவ உணவு
வகைகள், கேக் வகைகள், வீடியோ, நிழற்படம், ஐயர், மாலை மற்றும்
உங்கள் சுபகாரியங்களை சரியான முறையில் ஐரோப்பிய
நேரத்தின்படி அர்ச்சனா ஐரோப்பிய வாக்கிய பஞ்சாங்க கலண்டர்
மூலம் கணித்து தருவதற்கும், வாகன வசதிகள் போன்ற உங்கள்
அனைத்துத் தேவைகளுக்கும் நாடுங்கள்

**01 40 05 09 00 / 01 39 86 61 85**

**மண்டபங்கள்:** Gare de l'Est, Marx Dormoy, Montparannasse, La Plaine
Voyagers, La Courneuve, St. Sebastian, Maraichers, Porte d'Italy.

(எங்கள் நிரந்தர வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.)

காலை 10.00 மணிமுதல் மாலை 11.30 மணிவரை

காலை மதிய இரவு நேர இலங்கை இந்திய ஐரோப்பிய உணவு
வகைகளை அறுசுவையுடனும் மகிழ்வுடனும் அருந்திட

**லா சப்பலில் அர்ச்சனாவின்**

## Gandhi Tiffin Stall - Restaurant

22, rue Cail, 75010 Paris
M°: Gare du Nord / La Chapelle

**01 40 05 09 00**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் சூல் கொள்



23 வது இலக்கிய சந்திப்பு

13 – 14 செப்டம்பர் 1997

**GARGES LES GONESSE**
**FRANCE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# INYUM SOOL KOL

## இனியும் சூல் கொள்

**Published:** September, 1997

© Organising Committee

Number of pages 168
Size 210x276 cm

**Publishers:** **Organising Committee of the 23rd Tamil Literary Conference - FRANCE**
S.Pushparajah
Luxmy
Ashok
Kalaichchelvan
Sugan
Ashokprakash
Gnanam
Viji
J.Baskaran

**Cover Design & Layout:** Krishnarajah

**Printers:** Set Line Data Ltd., UK

**Graphics:** Transnews International Ltd., UK

**Contacts:** S.Pushparajah
7, Rue Racine
95140 Garges Les Gonesse
FRANCE

**Tel:** 01 39 86 31 30
**Fax:** 01 39 93 50 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்ட...



சபாலிங்கம்

கொல்லப்படப்போகும் அனைவருக்கும்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S C S Informatique இன் தொடர்ந்து வரும் சேவையில் ...

**AMIGA 500, 500 PLUS, 1200 AGA, 2000,3000,4000,4000T, PC, MAC** பாவனையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

உங்களிடம் தமிழ் எழுத்துக்கள் இல்லையா? கவலைப்படாதீர்கள்! இன்றே நாடுங்கள்

## S C S Informatique

புதிய கொம்பியூட்டர் உத்தரவாதத்துடன் வழங்கப்படுவதுடன் உங்கள் பழைய கொம்பியூட்டர்களை நியாயமான விலைக்கு வாங்கிக் கொள்ளப்படும்.


Amiga 500
900F

Amiga 1200
1500F

Amiga 600
1100F

Genlock
1400

**AMIGA 2000**
**DD 100 Mo C S I**
**Ram 9 Mo**
**Turbo Carte 68030 Mhz**
**Gen Lock Internal**
**3500 FF**



மற்றும் AMIGA,PC, MAC கொம்பியூட்டர்களை திருத்திக் கொள்வதுடன் புதிய உதிரிப்பாகங்கள் போன்ற தேவைகளையும் உடன் பூர்த்தி செய்யுங்கள்

CB | Cetelem கடன்வசதி

தவணைமுறை கடன்வசதி

**புதிய Program**

Scala MM 300
Scala MM400 New
Dpaint Iv
Dpaint Iv AGA
Dpaint Iv AGA New
Adorag 2.01AGA
Adorag 2.02 AGA
Adorag 2.5 AGA New
Demo Maker MM
Intermaker
Imagine 4.0
Start Menu system Win 95

**Turbo Card**

Blizzard 1230 Iv 50 Mhz
Blizzard 1240 T
Blizzard 1260

**Disques Durs**

100 Mo 250FF
250 Mo 350FF
540 Mo 700FF
850 Mo 950FF
1.2 Go 1150 FF

**S C S Informatique**
**61, Rue Louis Blanc**
**75010 Paris**
**Tel: 01 40 36 12 12**
**Fax: 01 40 36 12 17**
**M°: La Chapelle**

**உங்கள் தொடர்புகளுக்கு:**
சுவிஸ் தயா 0794334369
ஜேர்மனி கந்தா 2181499368


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு விளிக்கிறது!

23வது இலக்கியச் சந்திப்பின் இச் சிறப்பிதழ் புகலிட இலக்கியத்தினதும், தமிழ்ச் சூழல் எதிர்கொள்ளும் எல்லாவிதமான அரசியல், ஆய்வுகளினதும் இலக்கியப் போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று சொல்வதற்கு நாம் தயாரில்லை, அப்படியான குத்தகை மனோபாவமும் நமக்கில்லை.

புகலிட சஞ்சிகைகள், மற்றும் வெளியீடுகளின் தொடர்ச்சியும் அச் செயற்பாடுகளில் பங்கு கொண்டோர் அனைவரினதும் தொடர்ச்சியான உழைப்பே இம்மலர்.
பாசிசச் சூழலில் எழுத்துக்கு ஏற்பட்ட அதே நெருக்கடிகள் நமது சஞ்சிகைகளையும் சந்திப்புகளையும் பாதிக்கிறது.

நெருக்குவாரங்கள், இழப்புகள் இவையெல்லாவற்றையும் மீறி
மனிதம் சார் முனைப்பு, தேடல், மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்வதில்
நமது பக்குவம் . . .
இவையே இம் மலரையும் இவ் இலக்கியச்சந்திப்பையும் சாத்தியமாக்குகிறது.
நாம் துணிச்சற்காரர்கள் அல்ல. உண்மையிலேயே நாம் மிகவும் பயந்து போயுள்ளோம்.
மேற்கத்திய ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கையிழந்துள்ளோம்.

அடுத்தவனைச் சூடுவாங்க வைத்துவிட்டு, ஓர் இலக்கியப் போக்கை நிறுவுகின்ற சாமர்த்தியம் நமக்குச் சுட்டுப் போட்டாலும் கைவருவதில்லையாகையால் எதிர்ப்பியக்கப் பரிமாணம் இம்மலரிலும் காணக் கிடைக்கிறது.
நமது குரல்கள் ஈனஸ்வரத்தில் ஒலித்துக் கொண்டிருந்த போதிலும், தமிழ்ச் சூழலில், குறிப்பாக இலங்கையில் நாம் நிராகரிக்கமுடியாத அபிப்பிராயக்காரராக இருக்கிறோம்.
நமது புகலிட சஞ்சிகைகள், சந்திப்புகள் இவற்றிலெல்லாம்,
இலங்கையின் யுத்த வெறியர்களுக்கு எதிரான கடுமையான கண்டனங்களை நாம் விடுத்து வந்திருக்கிறோம். இவ் யுத்தம் மறு கேள்வியின்றி நிறுத்தப்படவேண்டியது என்று குரல் கொடுக்கின்ற அப்பாவி மக்கள் நாங்கள்தான்.
நம்மையும் நம் எழுத்துக்களையும் கௌரவிக்கிற யாவரும் நமது சுக துக்கங்களைப் புரிந்துகொள்கிற எல்லோரும் இந்த யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாடு உடையவர்களே.

இறுதியாக, ஒரு வேறுபட்ட அபிப்பிராயத்தை நாம் விரும்பாத காரணத்தால்
அதை மிதித்து வலுக்கட்டாயமாக நசுக்கி விடுவதும்,
அதை வெளியிடுவதற்கு அனுமதிக்காதிருப்பதும்
நமது இலக்கியச்சந்திப்பின் மரபுக்கும் நமது வெளியீடுகளிற்கும் ஒத்துவராதவை.



இத் தொகுப்பிற்கான வாசகர்களது விமர்சனங்களை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகிறோம்

ஈழநாடு

RADIO ASIA
தமிழ் ஒளி

ரேடியோ ஏசியா

தமிழாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நன்றிகள்

இம்மலரை உருவாக்க உழைத்தவர்கள்
நிதி உதவியவர்கள்
நண்பர்கள்
ஆதரவாளர்கள்
விளம்பரம் தந்துதுதவிய வர்த்தக ஸ்தாபனங்கள்
மக்கள் தொடர்பு சாதனங்கள்
மண்டபம் தந்துதவிய கார்ஜ் நகரசபை

## இதுவரை நடந்த இலக்கியச்சந்திப்புகள்

1வது - 24.09.1988 - Herne, GERMANY
2வது - 26.11.1988 - Dortmund, GERMANY
3வது - 18.03.1989 -Neuss, GERMANY
4வது - 10.06.1989 -Stuttgart, GERMANY
5வது - 23.09.1989 -Frankfurt, GERMANY
6வது - 22/23/24.12.1989 -West Berlin, GERMANY
7வது - 07.04.1990 -Krefeld, GERMANY
8வது - 09.07.1990 -Essen, GERMANY
9வது - 29/30.09.1990 -Aalen, GERMANY
10வது - 29.12.1990 -Bielefeld, GERMANY
11வது - 20.04.1991 -Duisberg, GERMANY
12வது - 11.04.1992 -Reutlingen, GERMANY
13வது - 22.08.1992 -Bonn, GERMANY
14வது - 26/27.12.1992 - Paris, FRANCE
15வது - 10/11.04.1993 -Berlin, GERMANY
16வது - 07/08.08.1993 -Utrecht, THE NETHERLANDS
17வது - 30/31.10.1993 - Bremen, GERMANY
18வது - 02/03.04.1994 - Bern, SWITZERLAND
19வது - 24/25.09.1994 - London, U.K.
20வது - 09/10.09.1995 - Toronto, CANADA
21வது - 17/18.05.1996 -Berlin, GERMANY
22வது - 29/30.03.1997 - Karlsruhe, GERMANY
23வது - 13/14.09.1997 -Garges-Les-Gonesse, FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. I Was There Again | Mallika - Germany | 01 |
| மீண்டும் அங்கிருந்தேன் | மல்லிகா - ஜேர்மனி | 02 |
| 02. துடைப்பானின் குறிப்புகள் | துடைப்பான் - பிரான்ஸ் | 03 |
| 03. கனி | க.கலாமோகன் - பிரான்ஸ் | 05 |
| 04. பித்தனும் பிரேமிளும் சுடரேந்திய தொடரோட்டம் | வே.மு.பொதியவெற்பன் - தமிழ்நாடு | 08 |
| 05. கரிகொள் இருள் | அ.இரவி - ஜேர்மனி | 11 |
| 06. பூக்களும் Bulletsம் | பொறுக்கி - பிரான்ஸ் | 18 |
| 07. நான் தொலைத்த இரவுகள் | தயாநிதி - நோர்வே | 19 |
| 08. புதிய பார்வை | தாடகை - தமிழ்நாடு | 19 |
| 09. புகலிடமும் புதிய நூற்றாண்டும் | தி. உமாகாந்தன் - பிரான்ஸ் | 20 |
| 10. மரணித்த மனிதனின் மரணங்கள் | உதயசேனன் - பிரான்ஸ் | 22 |
| 11. இலங்கையின் கவனிக்கப்படாத கவிதைப் பாரம்பரியம் | செ. யோகராசா - இலங்கை | 23 |
| 12. றஜீன்குமார் கவிதைகள் | இரா.றஜீன்குமார் - ஜேர்மனி | 25 |
| 13. விவேகிகளின் தாய் (மொழிபெயர்ப்பு) | பிரணவி குணசீலன் - சுவிஸ் | 27 |
| 14 குருட்டு வெளிச்சத்திலிருந்து | சுகன் - பிரான்ஸ் | 30 |
| 15. இலங்கை அரசியல் போராட்டத்தில் முன்னுரிமை மறுதலிக்கப்பட்ட தமிழ்ப்பெண்கள் | சி. புஷ்பராஜா - பிரான்ஸ் | 31 |
| 16. இராப்பயணம் | ஆடலரசன் - தமிழ்நாடு | 34 |
| 17. சில முன்னுரைகள் | நீர்கொழும்பூர் முத்துலிங்கம் - இலங்கை | 36 |
| 18. நிலவுப்பொட்டும் என் தாய்நிலமும் | ந.சுசீந்திரன் - ஜேர்மனி | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. கேள்விச்செவியன் | இளவாலை விஜயேந்திரன் - இலங்கை | 40 |
| 20. பிடி | க. கலாமோகன் - பிரான்ஸ் | 41 |
| 21. உடலரசியல் | ஜமாலன் - சவூதி அரேபியா | 42 |
| 22. சிறுமிகள் (மொழிபெயர்ப்பு) | இரா. விசயகுமார் - தமிழ்நாடு | 50 |
| 23. இடம் மாறும் அசோகவனங்கள் | நிலாவெளிக்கைலை - பிரான்ஸ் | 53 |
| 24. திருமாவளவனின் இரண்டு கவிதைகள் | திருமாவளவன் - கனடா | 54 |
| 25. நிஜங்கள் என்பன | தேவா - ஜேர்மனி | 56 |
| 26. நீங்களுமா..? நீங்களுமா..? | பொதிகைச்சித்தர் - தமிழ்நாடு | 60 |
| 27. யாருடைய கலைகள், யாருடைய கடவுள்கள் | சி. சிவசேகரம் - இலங்கை | 61 |
| 28. பரிசுத்த ஆவி | ஏ.எம். ஜாபீர் - இங்கிலாந்து | 64 |
| 29. ஒரு நாட்டின் சோசலிசம் | வ.அழகலிங்கம் - ஜேர்மனி | 68 |
| 30. காற்றில் ஒரு சேதி | மணிமாறன் - சுவிஸ் | 74 |
| 31. நேற்றைய என் சிநேகைக்கு | குட்டியான் - பிரான்ஸ் | 77 |
| 31. தலித்தியம் பரவும் புகலிடம் | சுகன் - பிரான்ஸ் | 78 |
| 32. கலாச்சார முக்கியமின்மையும் குறிப்பீடற்ற எழுத்துமுறையும் | எஸ். சண்முகம் - தமிழ்நாடு | 79 |
| 33. சகாப்தம் | பரா - ஜேர்மனி | 82 |
| 34. விக்ரமாதித்யன் கவிதைகள் | விக்ரமாதித்யன் - தமிழ்நாடு | 85 |
| 35. தேவதை சொன்ன கதை | ஷோபாசக்தி - பிரான்ஸ் | 88 |
| 36. தேசியவிடுதலைப்போராட்டம் | செ. கணேசலிங்கன் - தமிழ்நாடு | 92 |
| 37. இரட்சித்த சூரியர் | ஜீவமுரளி - ஜேர்மனி | 94 |
| 38. பிக்காஸோவின் கெஸ்டாப்போவும் | ந. சுசீந்திரன் - ஜேர்மனி | 98 |
| 39. கௌரிமனோகரன் கவிதைகள் | கௌரிமனோகரன் - பிரான்ஸ் | 99 |
| 40. வீதியும் செம்மண்கால்களும் | மணிவண்ணன் - பிரான்ஸ் | 100 |
| 41. அம்மா நான் விளையாடமாட்டேன் | உமா - ஜேர்மனி | 101 |
| 42. நவீனத்துவத்திலிருந்து பின்நவீனம்வரை | கொ.றொ. கொன்ஸ்ரன்ரைன் - இலங்கை | 104 |
| 43. காயம்பட்டு | தேவிகணேசன் - பிரான்ஸ் | 109 |
| 44. தரிசிப்பு | ப.வி.ஸ்ரீரங்கன் - ஜேர்மனி | 111 |
| 45. விச்வநாதன் கவிதைகள் | நா. விச்வநாதன் - தமிழ்நாடு | 116 |
| 46. நான் ஒரு கேள்வியாக? | சி.புஷ்பராஜா - பிரான்ஸ் | 117 |
| 47. இருப்பு | றஞ்சினி - ஜேர்மனி | 119 |
| 48. கத்தார், மக்களை உருவாக்கிய மாக்கலைஞன் | சின்னமருது - தமிழ்நாடு | 120 |
| 49. மோகினிப்பேய் | ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் - இங்கிலாந்து | 122 |
| 50. காதல் (மொழிபெயர்ப்பு) | சே.கோச்சடை - தமிழ்நாடு | 127 |
| 51. யாழ்ப்பாணக்கூத்துகளும், சமூக வரலாற்றுப்பின்புலங்களும் - ஓர் பார்வை | ச.தில்லைநடேசன் - பிரான்ஸ் | 128 |
| 52. கொள்ளிக்கு வந்த தேக்கு | கௌரிமனோகரன் - பிரான்ஸ் | 130 |
| 53. தலைமுறைகளின் முரண்பாடுகள் | ஆத்மன் - பிரான்ஸ் | 132 |
| 54. ருது | நா.கண்ணன் - ஜேர்மனி | 136 |
| 55. முருகேசபாண்டியன் கவிதைகள் | ந. முருகேசபாண்டியன் - தமிழ்நாடு | 139 |
| 56. சந்தை இலையான்கள் (மொழிபெயர்ப்பு) | ந. வாசுதேவன் - பிரான்ஸ் | 140 |
| 57. அலகு | இலக்குமிகுமாரன் ஞானதிரவியம் - தமிழ்நாடு | 141 |
| 58. நிழலும் ஈபிள்கோபுரமும் | கலைச்செல்வன் - பிரான்ஸ் | 142 |
| 59. நட்சத்திரங்கள் உதிரா | அ.ஜ. கான் - தமிழ்நாடு | 146 |
| 60. செபஸ்தியானின் சிற்பங்கள் | ந.சுசீந்திரன் - ஜேர்மனி | 148 |
| 61. இனி எழுந்து | தேவிகணேசன் - பிரான்ஸ் | 150 |
| 62. அக்கரையில் ஒரு கிராமம் | பொ. கருணாகரமூர்த்தி - ஜேர்மனி | 151 |
| 63. வன்முறையும் மனித உரிமைகளும் | ரெஜி சிறிவர்த்தனா | 156 |
| ஓவியங்கள் | தோழன் - தமிழ்நாடு<br>கிருஷ்ணராஜா - இங்கிலாந்து<br>தேவதாசன் - பிரான்ஸ்<br>றஞ்சினி - ஜேர்மனி<br>ந.பிரபு - இலங்கை | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I Was There Again

It was even better than the good old days
My country was flourishing in many ways
There was no fighting for status or land
People were happy in their own sand
They have done it ! They have stopped the war
"It was enough" they said, "with the dirty war"
Things were normal in Jaffna too
I could go there again oh! boo boo boo
Yaldevi was running to norm
No queues or crushing in any form
I was lucky to find a corner seat
I enjoyed the trip despite the heat
I looked around, everything was fine
When I was there, I felt that everything was mine
What a difference it makes when there is peace
Heaven is on earth when things are at ease
There was no difference in cast or creed
No hunger and sorrow as there was plenty to feed
Fields were full with paddy and grain
Farmers were happy there was enough rain
Onions and chillies, fruits and gourds
Now they needn't pay bulks to the Lords
Temples I passed, as I was going to Town
To see the buildings that were broken down
Who says there was war in this beautiful place?
Everything was the same in its splendid grace
I went to the Library bowing at Fr. Long
" Nothing is burnt ", he said standing strong
From there I went to the Weerasingam Hall
They have built it again never to fall
The event of the day was a women's meeting
I met many friends whom I enjoyed greeting
Fatima was there with Sitty and Naeema
We are here again said smiling Shahima
Shanthi was happy to see me there
I asked her how the women would fare
"we are better off now" she said aloud
We are being recognised as women, we must be proud
Selvi was there, busy making the program
Sivaramani was recite a poem
"How nice to see women in their due identity,
with equality, dignity and humanity"
A voice from behind uttered with echo
It was Rajini in her usual glow
I was so happy, I couldn't help but scream
Then I woke up, it was a dream!



Mallika



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அங்கிருந்தேன்



நன்றாய்த்தான் இருந்தது எல்லாம்...
இனிய பழைய நாட்களைவிடவும்.
நிலத்திற்காகவும் நிலைமைக்காகவும்
சண்டைகள் இனியும் இல்லை.
சொந்த மண்ணில் மகிழ்ச்சியில்
மனிதர்கள் வாழ்ந்தனர் அங்கு.
"ஓம் அதை அவர்கள் செய்துதான் விட்டார்கள்."
யுத்தத்தை நிறுத்திவிட்டார்கள்
"போதும் போதுமிந்த சவம்பிடித்த யுத்தம்"
என்று சொல்லித்தான் விட்டார்கள்.
யாழ்ப்பாணத்திலும் நிலைமை வழமையாம்
திரும்பவும் நானங்கு போகமுடியுமாம்!
வழமைபோல் ஓடினாள்
யாழ்தேவியாள்.
நெரிசலும் இல்லை, வரிசையும் இல்லை
ஜன்னலோர மூலையில்
எனக்கொரு இடம் கிடைத்தது
அந்த வெக்கையிலும் பயணம் இனித்தது.
திரும்பும் இடமெல்லாம் நல்லாய்த்தான் இருந்தது.
போய் இறங்கிய பின்னர்
எல்லாம் எனதாய் உணர்ந்தேன்.
பாருங்கள்
எவ்வளவு பெரிய வித்தியாசத்தை
இந்த அமைதி (சமாதானம்) கொடுத்துவிடுகிறது.
எல்லாமே இலகுவாகையில்
கைபடும் தூரத்தில் எல்லாம் இருக்கையில்
சொர்க்கம் இந்த மண்ணில் வருகுதே!
சாதிமத பேதம் இல்லை
உண்ண உணவு நிறைய இருப்பதால்
பசியும் துயரும் பிணியும் இல்லை.
மெத்த மழை நித்தம் பெய்வதால்
துயரம் இல்லை
விவசாயிகள் மனசில் துயரம் இல்லை.
வெங்காயம் மிளகாய் மரக்கறி வகைகள்
பழங்களுக்கும் குறைவில்லை.
இவை ஒன்றுக்குமங்கு வரியுமில்லை.
உடைத்திருந்த நகரைப் பார்க்கப் போனேன்.
போகிற வழியினில் கோவில்கள் கண்டேன்.
அழகான இந்த மண்ணில் போரென்று சொன்னவர் யார்?
அதே அதே அழகுடன் எல்லாம் இருந்தன.
யாழ் நூலக வாசலில்
வண.பிதா லோங்கிற்கு வணக்கம் தெரிவித்தேன்.
"எதுவுமிங்கு எரிந்துவிடவில்லை"
சொன்னார் பாதிரியார் நிமிர்ந்தபடி
வீரசிங்கம் மண்டபத்திற்கு போனேன் பிறகு,
கட்டி இருந்தார்கள் இனி என்றுமே விழாதபடி
அன்று அங்கு ஒரு பெண்கள் கூட்டம்
நிறையத் தோழிகளைக் கண்டதில் மகிழ்ச்சி.
பாத்திமா அங்கிருந்தாள்
சித்தியும் நயீமாவுடன்
"நாங்கள் மீண்டும் எங்கள் மண்ணில்"
புன்னகை தவழச் சொன்னாள் சகீமா.
என்னைக் கண்டதில் சாந்தினி மகிழ்ந்தாள்.
"பெண்களின் நிலைமை எப்படி?" என்றேன்
"எமக்கெல்லாம் நல்லகாலம்" என்றவள்
"பெண்களாக மதிக்கப்படுகிறோம்
பெருமை தரும் விசயந்தானே"
சத்தமாகச் சொன்னாளவள்.
நிகழ்ச்சி ஒழுங்கு வேலைகளில் செல்வி இருந்தாள்.
சிவரமணியோ கவிதை ஒன்றைப் படிக்க இருந்தாள்.
"சமத்துவம் கௌரவம் மனிதநேயம் இவற்றுடன்
அவர்களின் அடையாளத்துடன் பெண்களைப் பார்க்கையில்
எத்தனை மகிழ்ச்சி, எத்தனை மகிழ்ச்சி"
என்று சொல்லி எதிரொலித்திடும் ஒரு குரல்.
திரும்பினேன்,
வழமையான பிரகாசம் மின்ன
ராஜினி நின்றாள்.
சந்தோசம் மிஞ்சிக் கத்தவும் முடியவில்லை,
விழித்துவிட்டேன்.
கண்டது கனவு.

**மல்லிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடைப்பானின் குறிப்புகள்

"யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்.
மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை அளியுங்கள்." -பாப்லோ நெருடா

மே மாதம் 1ம் திகதி ஒன்றில் தன்னுடைய பாரிஸ் வீட்டில் குழந்தை மனைவி முன்னிலையில் கொல்லப்பட்ட எனது நண்பனும் மனித உரிமைகள்வாதியுமான சபா லிங்கத்தின் துயரமான மரணநினைவோடு என் மனம் கொண்ட கவிஞன் பாப்லோ நெருடாவின் கவிதை ஒன்றின் வாசகங்களோடு இக் குறிப்புக்களைத் தொடர்கின்றேன்.

மனிதநேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிக்கும், மனித அக்கிரமங்களைக் கண்டிக்கும் இந் நண்பன் யாருடைய ஆணையின் பேரில் கொன்றொழிக்கப்பட்டான்?

ஏன் இந்த நிலை? கருத்துச் சுதந்திரமறுப்பு, கொலைக் கலாச்சாரம். நாம் யாராவது இதுபற்றி கொண்ட கரிசனை யாது? நிறவாதம், இனவாதம் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகள்பற்றி எழுதும், பேசும் நாம், தமிழ் பேசும் ஓர் குறிப்பிட்ட குழுவினரால் புலம்பெயர்சூழலில் கட்டவிழ்த்தப்பட்டிருக்கும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தொடர்பாக என்ன நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளோம்?

தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்குகள் பயங்கர தனிமனித மீறல்களை தன்னிச்சையான செயற்பாடுகளை ஊக்கமூட்டும் தன்மைக்கூறுகளைக் கொண்டுள்ளனவாக இருப்பினும் இவ்வாறான பயங்கரவாத வடிவங்களுக்குப் பின்னால் ஓர் அரசியற் காரணி உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. இக்காரணிகளையும் அதன் பின்னாலுள்ள அரசியல் இயக்கங்களையும் நாம் இனம் காண்பதன் ஊடாக மாத்திரமே இப் பயங்கரவாத செயல் வடிவங்களுக்கு எதிராக நாம் போராட முடியும். சில தேசிய விடு தலை இயக்கங்களின் சில முற்போக்கு நல் உதாரணங்களை நாம் எடுத்து, அதனின்று இவ்வன்செயல்களைப் புறக்கணிக்க முயல்வோமாயின் அது எமது தற்கொலைச் செயற்பாட்டின் கருத்தமை வுக்கு இசைவாகவே இருக்கமுடியும். இது ஆபத்தான நிலையும் கூட. கடந்தகாலம் எமக்கு மிகமோசமான முன்னுதாரணங்களை புலம்பெயர்சூழலில் விட்டுச்சென்றுள்ளது. எனவே இவற்றிலிருந்து புதியபாடங்களை நாம் கற்றுக்கொள்வோம்.

○○○

நம் சூழலில் மலிந்து காணப்படும் வன்முறைப் பயங்கரவாத கலாச்சாரங்களுக்கு, விலங்கியல் பலாத்காரங்களுக்கு முக்கிய காரணம் விமர்சனங்களுக்கு அஞ்சி நடுங்கும் தலைமை மனக் கோளாறு, போராட்டம்பற்றிய கோட்பாட்டில் தெளிவின்மை, அதனை வளர்த்தெடுக்க முடியாத அரசியல் வங்குரோத்து இவைகளே தூண்டுகோலாக அமைகின்றன. இப் பாஸிச செயற்பாடுகள் வெவ்வேறு வழிகளில் பல்வேறு வடிவங்களில் வெளிக் காட்டப் படலாம். புலம்பெயர்சூழலில் அதன் செயற்பாடு உலக பிற்போக்குவாத சக்திகளின் தொடர்புகளையும், உறவுகளையும் பொறுத்ததாகும். கவனம் கொள்வோம்.

○○○

தேசிய விடுதலை இயக்கங்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான பயங்கரவாத செயற்பாடுகளை-பாஸிஸ போக்கின் கூறுகளை இனம் கண்டு அவற்றிற்கெதிரான கறாரான விமர்சனங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது தமிழ்பேசும் மார்க்சியர்களின் கடமையாகும். தேசியம் மக்களின் நலன்களின்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு கொள்வதாய் கூறலாம். புரட்சி கரமான கோரிக்கைகளை கபடமாகக் குரல் கொடுத்து அவர்க ளைக் கவர முயலலாம். மொழி, மதம், இனம் மீது பாரிய சத்தியங்கள் பொழியலாம். ஆனால் எங்கும் எப்பொழுதும் சாராம்சம் ஒன்றுதான். குறுகியவெறியும் எதிர்ப்புரட்சித்தன்மையும் ஆக்கிரமிப்பும் விலங்கியல் பலாத்காரமும் கொண்டவை தான் அநேக தேசிய விடுதலை இயக்கங்கள். இவ் இயக்கங்கள் சிலவற்றை தமிழ் பேசும் மார்க்சியர்கள் ஜனநாயகம் மிக்க மக்கள் அமைப்பாக இனம் காணவி ழைவதுதான் சிறுபிள்ளைத்தனமாகவும் சிலவேளை கபடம் நிறைந்ததாகவும் உள் ளது. இதற்கு உதாரணம் இலங்கை ஜனநாயகக்கட்சியும் அதன் அங்கத்தவர்களும். பொதுவுடைமைத் தத்துவங்களை சுவீகரித்துக் கொண்டவர்களாக இனம் காட்டும் இவர்கள் இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களில் தங்கள் அரசியல் வியாபாரம் செழித்தோங்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு "அரசியல் விபச்சாரம்" செய்கின்றார் களோ தெரியவில்லை.

ooo

"அராஜகம்" என்னும் செயல் வடிவம் எப்பொழுதும் மௌனங் களையும் எதிர்ப்பின்மையையும் சரணாகதிகளையும் கண்டு களிப்புறும் தன்மை கொண்டது. புலம்பெயர்சூழலில் இலக்கிய உலகம் இவ் அராஜகங்களின் முன்னால் சரணாக தியாகிப் போய்விட்டதென்றே கூறவேண்டும். ஐந்து வருடங்களிற்கு முன்னால் சுமார் நாற்பது இலக்கிய சிறுசஞ்சிகைகள் புகலிடத்தில் வெளிவந்து கொண்டிருந்தன. இன்று அவற்றில் பலவற்றின் சுவடு களையே காணோம். மரணபயம் அவற்றினைப் பற்றிக்கொள்ள அவை சரணாகதியாகி மௌனம் கொண்டுவிட்டன. ஒரு சில சஞ்சி கைகள் சமரசம் செய்துகொண்டு பிழைக்க வழிதேடிக்கொண்டன. இதில் முதன்மை பெறுவது பாரிஸிலிருந்து வெளிவரும் "மௌனம்" என்னும் காலாண்டிதழ். எனினும் இச்சஞ்சிகை ஓர் இலக்கியப் பயன்பாட்டுத்தளத்தில் சில நல்ல செய்திகளை கொண்டி ருப்பினும், இலக்கியம் என்பது கபடங்களுக்கு எதிராக, மக்களின் மனிதநேய மேம்பாட் டிற்கான தன்மைகளை கொண்டிருக்கவேண்டும் என்பதும் கவனிக்கப் படவேண்டியதொன்று. இதன் வெளியீட்டாளர்கள் இக்குறிப்பைக் கவனத்தில் கொள் வார்களாக.

ooo

"வெள்ளைத்திமிர்" புலம்பெயர்வாழ்வுபற்றி அண்மையில் வெளி வந்த சமீபத்திய பயண நூல். ஒடுக்கப்பட்ட மக்களின் செயற்பா டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாக தன்னை பிரகடனப்படுத்திக் கொள்ளும் அ.மார்க்ஸ் அவர்கள்தான் இந்நூலின் ஆசிரி யர். ஐரோப்பாவில் ஒருமாதகாலம் தங்கியிருந்த நூலாசிரியர் புகலிட தமிழ்பேசும் மக்கள் எதிர்கொள்ளும் மனிதஉரிமைமீறல் தொடர்பான துயரங்களை, தமிழர் தாக்கு தல்களை, தமிழர் அராஜகங்களைக் கேள்விப்படாதது மாபெரும் ஆச்சரியமாகவே உள்ளது. "மனிதம்" சஞ்சிகையின் அழைப்பின்பேரில் வருகை தந்த மார்க்ஸ் அவர்கள் மனிதம் சஞ்சிகைக்கு எதிராக நடத்தப்பட்ட கருத்துச் சுதந்திர மறுப்புக்களை, தாக்குதல்களை, மனித உரிமைமீறல்களை பற்றி ஒன்றும் அறியாத "பாப்பாவாகவே" திகழ்கின்றார். பாவம்! தூய்மை, ஒழுக்கம், மரபு மீறாமை போன்ற வற்றை பாஸிஸத் தின் கூறுகளாக ஐரோப்பாவில் இனம்கண்ட அ.மார்க்ஸ் அவர்களால் சபாலிங்கத்தின் கொலையை, சிறு சஞ்சிகைகளின் தடையை இனம்காண முடியாமல் போய்விட்டது விந்தைதான். பாரிஸில் தன்னோடு அலைந்த அசோக்குக்கு நன்றி சொல்லும் மார்க்ஸ் அந்த அசோக் சொன்ன புகலிட அராஜக ங்களின் துயர்க் கதைகளை, கோரத்தன செயல் வடிவங்களில் ஒன்றைத்தானும் பதிவு செய்யாமல் விட்டது மார்க்ஸின் நம்பகத்தன்மை மீது பாரிய சந்தேகத்தைக் கொடுக்கின்றது. சிலவேளை மார்க்ஸ் பேசும் தலித்தியம், பெரியாரியம், மார்க்சியம் இவைகள் ஒடுக்குமுறைகள் பற்றி பேசு வதை பாவம் என்று கருதுகின்றனவோ தெரியவில்லை.

ooo

இவ் இலக்கியச் சந்திப்பு மலர் வெளிவரும் இம்மாதம் ராஜனி திரணகமவின் 6வது ஆண்டு நினைவு மரணச்செய்தியை நினைவு கொள்கின்றது. உண்மையை எழுதிய குற்றத்திற்காக நடுவீதியில் *21.09.1991* அன்று சுட்டுக்கொல்லப்பட்ட ராஜனியின் நினைவோடு என் குறிப்புக்களை நிறைவு செய்கின்றேன்.

> "ஒருபக்கச் சார்பின்மை, சத்தியத்தேடல் விமர்சன ரீதியிலான நேர்மை யான கண்ணோட்டம் என்பன எங்களின் இன்றைய சமூகத்தின் ஜீவாதார மான அம்சங்கள். ஆனால் இத்தகைய ஒரு நிலைப்பாடுஎங்களில் பலரது உயிரைக் காவுகேட்டு நிற்கி றது. மந்தித்துப்போன எங்கள் சமூகத்திற்கு ஒரு புத்தியக்கத்தைக் கொண்டு சேர்க் கவே இத்தகைய ஒரு நிலைப் பாட்டை நாம் வரித்துக்கொண்டோம்." ராஜனி திரண கம, யாழ். மருத்து வபீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.கலாமோகன்



(ஆதியாகமம், அதிகாரம் 3 இலிருந்து . . .
1. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல ஜீவன்களைக் காட்டிலும் சர்ப்பம் தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி, நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனிகளையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ என்றது)

எனக்குப் பசித்தது. அப்போது நான் மட்டும் தான் நிர்வாணமாக இருக்கவில்லை. அவளும் நிர்வாணமாக. அவளிற்கும் பசித்தது. நாங்கள் விருந்துண்ண வெளிக்கிட்டோம். சாஸ்திரங்கள் அனைத்துமே எமது பசியின் முன் பஸ்பமாயிற்று. உடலின் சங்கமத்தில் புஸ்பித்துக்கொண்டிருந்த இலட்சக்கணக்கான மலர்களின் நறுமணங்களை மட்டுமே நாம் முகர்ந்தோம். இருளைப் பறித்துச் செல்லத் தயாராக நின்ற ஒளியை இறக்கைகளுடன் கூடிய பரிசுத்த ஆவிகள் வந்து துரத்தின. எமக்குக் காவல்கள் உண்டென்பதுகூடத் தெரியாதிருக்க வேண்டுமென்பதற்காக நாம் எமது கண்களைப் பிடுங்கி எறிந்திருந்தோம். வார்த்தைகள் அற்ற ஒரு மொழியிலேயே சல்லாபித்தோம். தேகங்களின் சரசத்தில் தேசங்களும் எல்லைகளும் எமக்குத் தொலைத்துப் போயின. நாம் சர்ப்பங்களாகி முடிவற்ற ஓர் பின்னலுள் பிணைந்துவிட்டோம். எங்கே அந்தச் சர்ப்பம்? தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனிகளையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ எனக் கேட்ட சர்ப்பம் எங்கே போய்விட்டது? ஏ! சர்ப்பமே! கொல்வதற்காகவல்ல உன்னைத் தேடுகின்றேன். ஆன்ம லயிப்பின் மகோன்னதத்தை விளக்க, கனிகளைப் புசிக்கும் மார்க்கத்தைக் காட்டிய உன்னை வாழ்த்தவே. ஏ! சர்ப்பமே! வா! வந்து எங்களின் முன்ஆடு.

ооо

ஒரு நத்தார் தின இரவில் நானும் அவளும். நான் அழைக்கப்பட்டிருந்தேன். ஓர் தெய்வீக உறவிற்காக. திராட்சைப் பழங்கள் நிரம்பிய தாம்பாளத்தோடு, அவள் என் முன் வந்து பவ்வியமாகப் "புசியுங்கள்" என்றாள். நான் அவளைச் சீண்டினேன்.

"கனிகளைப் புசித்தல் தேவனால் தடை செய்யப்பட்டுள்ளதல்லவா?"

"சர்ப்பம் சொல்லியதைக் கேட்போம்"

"ஆடை போடுவதற்கான வழியையல்லவா, கனிகளைப் புசிப்பதற்கூடாக அது எமக்கு உணர்த்தியுள்ளது."

"கனிகளை அழுக விடுதலில் எனக்கு உடன்பாடில்லை."

"தேவனின் கட்டளைகளை நீ மீறுகின்றாய்."

"நீங்களும் மீறவில்லை எனச் சொல்வீர்களா? என் தேகவனப்பில் நீங்கள் லயித்ததால்தானே, களவாக இந்த நிர்வாண சாம்ராஜ்யம் உருவாக்கப்பட்டது..."

"நீ தேவதை. தேவனைக் காட்டிலும் மேலானவள். நான் உனது கட்டுப்பாடுகளை மீறமாட்டேன்."

"உங்களது தேகத்தின் ஸ்பரிஸத்தால் என்னைக் கொல்லுங்கள்."

"கொலை தண்டனைக்குரியது. நான் உன்னைக் கொல்லமாட்டேன்."

"கொல்"

நான் பெட்டிச் சர்ப்பமாகி அவளைக் கொத்திக் கொத்திக் கொல்ல வெளிக்கிட்டேன். அவள் இறந்தாளா? தெரியாது. நான் அவளிற்கு முதல் இறந்து விட்டேன்.

ооо

நாம் சர்ப்பங்களாகியதாலும் சர்ப்பத்தை நேசித்ததாலும் எப்படியோ அவளின் வயிற்றில் கர்ப்பம் ஏற்பட்டு விட்டது. நத்தார் கழிந்து, ஒரு மாதத்தின் பின்னர், நான் அவளது இல்லம் சென்ற போது, அவள் கலக்கம் சூழ்ந்த முகத்துடன் இருப்பதைக் கண்டேன்.

"எனது வயிற்றில் தரித்த கருவின் பிதா நீங்களே. இனி நீங்கள்தான் எனக்கு வாழ்வு தரவேண்டும்"

"ஏற்கனவே உனக்கு ஒருவன் வாழ்வு தந்துவிட்டான். உனது திருமணத்தின்போது நான் வந்து உன்னைத் தேவபாஷையால் ஆசீர்வதித்ததை மறந்துவிட்டாயா?"

"தேவன் என்னை ஆசீர்வதிக்கவில்லை."

"ஏன்?"

"நான் அம்மாவாக விரும்பினேன். மூன்று வருடங்களாக ஒவ்வொரு இரவிலும் பல தடவைகளென நானும் அவரும் இடைவிடாது முயற்சித்தோம். எதுவுமே பலனளிக்கவில்லை. அவர் என்னை மலடி எனப் பழித்தார். மருத்துவரிடம் உண்மையை அறியப் போன போதுதான் எனது அவரின் ஜீவ அணுக்களை வைத்து எனக்குள் ஒரு ஜீவனிற்கு உயிர்கொடுப்பது முடியாதெனத் தெரிய வந்தது."

"இதனை நீ ஏன் எனக்கு முதலிலேயே சொல்லவில்லை?"

"ஏன் சொல்லவேண்டும்?"

"சொல்லியிருப்பின், பொருத்தமான தினங்களைத் தெரிவுசெய்து பிரச்சனைகள் வராமல் நாங்கள் ரகஸியமாக எமது நிர்வாண சாம்ராஜ்யத்தை வாழ்ந்து கொண்டிருக்கலாமே!"

"நான் உங்களது தேகதாகங்களின் தீனிமட்டும் தானா?"

"ஏன் நீ மட்டும் உனது தேகதாகங்களிற்கான தீனியை எனது உடலிலிருந்து பெற்றுக்கொள்ளவில்லையா?"

"நடந்ததை ஒரு விபத்து என வைத்து என்னை உங்களோடு கூட்டிச் செல்லுங்கள்... இனிமேல் உங்களது ராஜ்யம்தான் எனது ராஜ்யமாகவும் இருக்க வேண்டுமெனத் தேவன் தீர்மானித்து விட்டார்"

"தேவனை விடுத்து, உனது அவரைப்பற்றிப் பேசு நீ கர்ப்பம் தரித்திருப்பது அவருக்குத் தெரியுமா?"

"தெரிந்தால் என்னைக் கொன்றுவிடுவார். உங்களது ராஜ்யத்திற்கு என்னைக் கூட்டிச் செல்லுங்கள்..."

"நான் உன்னைக் கூட்டிச் சென்றால், எனது, அவளை யார் வந்து கூட்டிச் செல்வார்களோ?" "உங்களது ராஜ்யத்தில் இரண்டு ஸ்திரீகளுக்கு இடமில்லையா?"

எனக்கு இன்னொரு ஸ்திரீ இருப்பது அவளுக்குத் தெரியாது. நீ எனது ராஜ்யத்துக்கு வந்தால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் அடிதடிக்குப் பெயர்போன அவளது அண்ணன்மார் என்னைப் பரலோக சாம்ராஜ்யத்துக்கு அல்லவா அனுப்பிவிடுவார்கள்.

"உங்கள் முடிவு இதுவாயின் நான் பரமனிடம் சென்றுவிடுவேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் இந்தப் பரமன்? என்னைத் தவிர்த்துப் பரமன் என்பவனுடனும் உனக்குக் கள்ள உறவு உண்டா?"

"பரமன் என நான் சொன்னது பரமபிதாவை"

"ஓ! நீ தற்கொலை செய்ய முடிவு எடுத்துவிட்டாயா?"

"ஆம்!"

"பரமபிதா சர்வவல்லமை பொருந்தியவர். உன்னுள் தரித்த கர்ப்பம் என்னிலிருந்தல்ல, அவரிடமிருந்தே வந்ததென உனது புருஷனுக்குச் சொல்"

"எனக்கு நீங்கள் பேசுவது விளங்கவில்லை."

"நான் உனக்கு வாசித்துக் காட்டுபவைகளை, உனது புருஷனுக்கும் பயப்படாமல் வாசித்துக் காட்டுவாயாக. அவரிடம் அவரை ஒரு ஜோசேப்பாக இருக்கும்படி வற்புறுத்திக் கேட்பாயாக. லூக்கா எழுதிய சுவிசேசத்தின் 1வது அதிகாரத்தில் இப்படியும் எழுதப்பட்டுள்ளது. நான் வாசிப்பவைகளைக் கவனமாகக் கேள். "

"தேவதூதன் அவளை நோக்கி : மரியாளே, பயப்பிடாதே. நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்

இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு யேசு என்று பெயரிடுவாயாக.

அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

அவர் யாக்கோப்பின் குடும்பத்தவரை என்றென்றைக்கும் அரசாளுவார், அவரது ராஜ்யத்துக்கு முடிவிராது என்றார்.

அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி : இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும் ஆனால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்."

இதோ உனது இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர் வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பம் தரித்திருக்கிறாள். மலடி எனப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான்"

லூக்காவை அவளிற்கு வாசித்துக் காட்டிவிட்டு இப்படிச் சொன்னேன்:

"எம்மால் ஆவது ஒன்றுமில்லை. அனைத்தும் தேவனின் கிருபையே. நீ உன்னை மரியாளாக வரித்துக்கொள். உனது புருஷனை ஜோசேப்பாக இருக்குமாறு கேள். எக்கோக்கிறாபி (வயிற்றுக்குள் தரித்திருக்கும் கரு ஆண்பாலா பெண்பாலா என்பதைச் சொல்லும் மருத்துவ விஞ்ஞானக் கண்டுபிடிப்பு) தான் உன்னுள் தரித்திருப்பது தேவபுத்திரியா அல்லது தேவபுத்திரனா என்பதைச் சொல்ல வேண்டும். எனது கண்டுபிடிப்பு எப்படி?"

அவள் சர்ப்பமாகிச் சீறினாள்.

"போக்கிரியே! எனது தேகத்தின் வனப்பில் லயிப்பதற்கு முன்னர் இந்த புனித வேதாகமத்தின் வார்த்தைகளை நீ என்னிடம் சொல்லியிருப்பாயாயின் நான் உன்னைத் துரத்தியிருப்பேன். ஓடு! ஓடு! உனக்காக நரக சாம்ராஜ்யத்தின் கதவுகள் திறபட்டபடியுள்ளன.ஓடு! ஓடு! தாலி கட்டியுள்ள உனது ஸ்திரீயின் வயிற்றினுள் ஒரு பரிசுத்த ஆவி நுழையக் கடவுவதாகுக"

அவளின் வார்த்தைகள் முடியமுன் நான் மூசி மூசி எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். தட்டினேன். கதவு திறக்கப்பட்டது.

"ஏன் தட்டினீர்கள்? உங்களிடம் தான் திறப்புள்ளதே!"

எனது ஸ்திரீ கேட்டாள்.

"வழியில் வரும்போது, ஒருவர் என்னிடம் 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்றார். இதனைப் பரீட்சிப்பதற்காகவே"

"இதில் பரீட்சிப்பதற்கு எதுவும் இல்லை. இயக்கங்கள் வந்து கதவைத் தட்டினால், அவர் வந்த பின்னர் வந்து 'தட்டுங்கள்' என நீங்கள் உள்ளிருந்த வேளைகளில் கூட எனக்குச் சொன்னதை மறந்து விட்டீர்களா?"

"நீ என்னை இயக்கக்காரன் என்று நினைத்துவிட்டாயா?"

"கதவைத்தட்டும் கலையில் கைவந்தவர்கள் அவர்கள்தானே!"

"இயக்கங்களை விடு நான் சுத்தமானவன். நேற்று நான் லாச்சப்பலில் (குட்டி இந்தியா எனப்படும் பாரிஸ் ஏரியா ஒன்று) வாங்கி வந்த சுத்தமான வெள்ளாட்டின் துடையை எனது நாவிற்கு இதமாகச் சமைத்து வைத்துள்ளாயா?"

"நான் முன்பு ஒருபோதுமே உங்கள் நாவிற்கு இதமாக எதுவுமே சமைத்து வைக்கவில்லை என்பது போலல்லவா, நீங்கள் சொல்வது தொனிக்கிறது."

"நீ சித்தமாக இருப்பதால், நீ சொல்பவைகள் சுத்தமாக இருக்கக் கடவுவதாகுக"

"நீங்கள் என்மீது சித்தமாக உள்ளீர்களா?"

"நீ சித்தமாக இருப்பதைப் போல நானும் உன்மீது சித்தமாக இருந்து என்னைச் சுத்தமாக வைத்துக் கொண்டுள்ளேன். நீ கேட்டவைகள் அனைத்தும் உனக்குத் தந்துள்ளேன்."

"என்னால் யாசிக்கப்பட்டவைகளில் பலவற்றைத் தந்த நீங்கள், ஒன்றை மட்டும் இன்னும் தராதுள்ளீர்கள்"

"அது எதுவோ?"

"நாங்கள் தாலாட்டிச் சீராட்டுவதற்கான ஒரு குழந்தை "

"உனது இந்த யாசிப்பினுள் அசுத்த ஆவியே ஆட்சி செய்வதால் உனது வயிற்றினுள் ஒருபோதுமே கர்ப்பம் தரிக்காது."

"இது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நான் என்னைப் பரிசோதித்துவிட்டேன்"

"எங்கே? சார்சலில் உள்ள தமிழ் டாக்டரிடமா?"

"அது உனக்குத் தேவையில்லை."

"நானும் என்னைப் பரிசோதிக்க விரும்புகிறேன்".

"நான் பரிசோதிக்கப்பட்டபோது, நீயும் பரிசோதிக்கப்பட்டாய் எனக்கொள்வாயாக..."

"எனக்குக் குழந்தை வேண்டும்"

"என்னை உனது குழந்தையாக எடுத்துக் கொள்வாயாக"

"இந்தக் கணத்தில் யாரோ கதவைத் தட்டுகின்றனர். திறக்கப்போன அவளை நான் தடுத்தேன். பரிசுத்த வேதாகமத்தில 'தட்டுங்கள் திறக்கப்படும்' என எழுதப்பட்டுள்ளதாகச் சில கணங்களின் முன்னர்தான் சொன்னீர்கள் " என்றபடி கதவைத் திறந்தாள். எவளிடம் மரியாளாக இருக்குமாறு கேட்டேனோ அவள் அங்கே. உடல் நடுக்கம் போட்டது.

"நான் உங்களது ராஜ்யத்திற்கு வந்துவிட்டேன்"

"எனது ஸ்திரீயின் ராஜ்யத்துள் நீ நுழைதல் தடுக்கப்பட்டுள்ளது."

"நீங்கள் என்னைப் பிரிந்து சென்ற பின்னர் நான் புதிய ஏற்பாட்டை வாசித்தேன். அங்கே 'கேளுங்கள் தரப்படும்' எனவும், 'தட்டுங்கள் திறக்கப்படும்' எனவும் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் கேட்காமலேயே எனக்குத் தந்துவிட்டீர்கள். நான் தட்டுவதற்கு முன் நீங்கள் திறந்திருக்கவேண்டும். உங்களை நான் போக்கிரி எனத் தூஷித்ததை மன்னிப்பீர்களாக."

"யார் இந்த ஸ்திரீ " எனது ஸ்திரீ நடுக்கமெதுவுமில்லாமல் கேட்டாள். தேவபாஷையில் நடந்ததை விளங்கப்படுத்தினேன். உள்ளே சென்று சில நிமிடங்கள் செபம் செய்துவிட்டு வந்து இப்படிச் சொன்னாள்.

"அனைத்தும் கர்த்தரின் கட்டளைகள் எனக் கொள்வோம். அவர் சகல வல்லமையும் கொண்டவர். இந்த ஸ்திரீயின் கர்ப்பப்பைக்குள் உங்களது ஜீவ அணுக்களைப் புகுத்தி, பரிசுத்த விபத்தால் தரிசிக்கச் செய்த ஜீவனை, எனது குழந்தையாகவும் நான் ஏற்றுக் கொள்ளத் தயார். எங்களது சாம்ராஜ்யத்தில் இவளையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.இடம் போதாது விட்டால், இப்போதுள்ள வீட்டை யாரிடமாவது விற்றுவிட்டு புதிய வீடொன்றை எடுத்துக் கொள்ளலாம்"

தேவனின் வேதவாக்குகளாக இவை எனக்குப் பட்டதால் எனது ஸ்திரீயின் முன்னர் சாஸ்டாங்கமாக வீழ்ந்து பாதங்களை வெட்கப்படாமல் முத்தமிட்டேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VS.CO

**Cash & Carry**

Epicerie Fine Indienne

197, Rue du Fg. St. DENIS - 75010 PARIS

TEL : 01 40 34 71 65    FAX : 01 30 34 71 66

M° : LA CHAPELLE ou GARE DU NORD




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தனும் பிரேமிளும் சுடரேந்திய தொடரோட்டம்...

## வே. மு. பொதியவெற்பன்

தமிழ்ச் சூழலில் புதுமைப்பித்தன் போன்ற ஒரு மேதைக் குப்பிறகு 'வாராது போல் வந்த மாமணி'யாய் நமக்கு வாய்த்த மற்றொரு அபூர்வமேதை பிரேமிள். இந்த வாக்கியத்தின் மறுபக் கத்தை இப்படியும் வாசிக்கலாம் இனி. இனங்காணமாட்டாத இயக்கங்களுக்கும், இருட்டடிக்க முனையும் சக்திகளுக்கும் இடையே நம் தமிழ்ச் சமூகம் கௌரவிக்கத் தவறிய இன்னொரு மேதை பிரேமிள்.

சமகாலத் தமிழ்ச் சமூகத்தின் தன்னேரிலா மனச்சாட்சியாய் நின்றிலங்கிச் சமரசங்கள் ஏதுமின்றிச் சமராடிய ஒரு தனிக் கொரில்லா பிரேமிள். அந்த மகத்தான கலைப்போராளியின், அபூர்வமேதையின் சாதனை வீறுகளுக்கு ஆதாரமான அவரது தனித்துவக் கூறுகளையும் அவற்றிற்கான தாய்ப்படிவ வேர் மூலங்களையும் இனங்காண முயலும் என் அனுபவங்களையே இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்ள எத்தனிக்கின்றேன். பிரேமிளின் எழுத்தியக்கமும் வாழ்வும், ஆதிநிலையை அவாவி நிற்கும் மனோலயமும், நீதியுணர்வு நெறிபிறழா மனோதர்மமும், சுயமான தர்சன வீரியமும், ஞானத்தேட்டமும், சிருஷ்டித்திறமும் கலாபூர்வமாய் முயங்கி இயங்குவதாகும் என்பதனாலேயே அதன் பெறுபேறாகிய சமூகதர்ம உணர்வும், சரித்திரார்த் தமும், நிர்த்தாட்சண்யமான தராதர நிர்ணயமும், கலை நுட் பமும் ஒன்றிப் பொதிந்த புதுமலர்ச்சி மதிப்பீட்டியக்கமாக அவ ரால் வெளிப்பட முடிகின்றது.

கவிதை, புனைகதை, நாடகம், விமர்சனம், வியாசம், பேட்டி, கடித இலக்கியம், ஓவியம், சிற்பம், மொழியாக்கம் என்று இத் தகைய பல்திறப் பரிமாணங்களுடன் பரிணமிக்கும் பன்முக ஆளுமை வாய்ந்தது பிரேமிளின் மேதைமை.

"பிரேமிள் முதன்மையாக ஒரு கவிஞர். இவரது கவிதை மெட்ட ஃபிஸிக்கல் ஆனது " என்பார் ஆன்ரன் பாலசிங்கம்.

"பிரேமிளின் படிமயியல் 2000 வருடத் தமிழ்க் கவிதைச் சரித்திரத்தில் பழமையானது" என்பார் சி.சு.செல்லப்பா.

'Melata Physiba' என்ற ஜேர்மன் மூலப்பதமான இது மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளும் உயர்வகை ரிய லிசம். பொருட்களின் ஸ்தூலத் தன்மையான பௌதீகத் தோற் றம் முதன்மையாகவும் அதைச் சுற்றிச் சுழன்று உற்று உணரும் மனித ஞானத்தை இரண்டாம் பட்சமாகவும் ஏற்றுச் செல்லும் ஒரு மனோ தத்துவ ஆன்ம விஞ்ஞானம் இது. முழுக்க முழுக்க அறி வியல் பார்வை கொண்ட இதன் தளங்களில் தமிழில் முதல் முதல் சோதனை செய்தவர் பிரேமிள். இக் கடினமான கலையில் உலக அளவில் ஒரு சிலரே வெற்றி கண்டுள்ளனர்."உலகக் கவிதை இயக்க வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் விடி வெள்ளி பிரேமிள்" என்பார் 'சதுக்கப்பூதம்' மாரப்பன்.

தமிழ்ச் சூழலில் ஒரு புறம் பிரேமிளைப் படைப்புக் கலை ஞராகத் தவிர்க்க இயலாமல் அங்கீகரித்தவாறே இன்னொரு புறம் அவர் பேணிய மதிப்பீட்டியக்கத்தை இருட்டடிக்க முயன் றும், மலினப்படுத்தித் திருத்திக் கட்டி உள்நோக்கம் கற்பித்தும் நிறையத் திருகுதாளங்கள் நேர்ந்து வரல் கண்கூடே.

ஒருமுறை நேர்ப் பேச்சின்போது "என்னிடம் கவிதை கேட் டெழுதும் பத்திரிகைக்கு, முதலில் என் கட்டுரையைப் போடு. அப்புறம் கவிதை தருகிறேன் என்பேன். என் கட்டுரையைப் போடத் தயாராக இல்லாவிட்டால் கவிதை தர மாட்டேன். ஏன்னா, என் கட்டுரையைப் போட்டால் பிரச்சனை, கவிதைன்னா கௌரவம் என்பதனால் தானே. என் கட்டுரையால் ஏற்பட நேரும் பிரச்சனையை ஏற்கத் தயாராயில்லாத உனக்கு என் கவி தையால் வரும் கௌரவம் மட்டும் வேணுமா?." என்கிற ரீதியில் என்னிடம் அவர் விபரித்தார்.

" தமிழ் இலக்கியக் கருத்துலகிலும் சிருஷ்டித்துறையிலும் நான் ஒரு கொரில்லா. ஒரு பிரசுர சாதனம் தனது தேவைகளுக்கு ஏற்ப என்னை உபயோகித்துவிட நான் இடம் தர மாட்டேன். என க்கு ஒரு புரோகிராம் உண்டு. அந்த புரோகிராமுடன் இணைந்து தொடர்ந்து செயல்பட முன்வருகிற ஒரு சாதனத்தின் மூலம் தான் நான் செயல்படுவேன்." என்பதே பிரேமிளின் பிரகட னமாகும். பிரேமிளின் மதிப்பீடுகள் எல்லாவற்றோடும் நம்மால் முற்றுமுழுதாக உடன்பட முடியாமல் போகலாம். நம்மில் சிலர் அவரது விமர்சன வெளியீட்டுத் தொனியோடு மட்டும் முரண் படவும் நேரலாம். அது வேறு. ஆனால் ஒரு படைப்புக் கலைஞன் என்னும் போதிலும் சரி விமர்சகன் என்னும் போதிலும் சரி பிரேமிளின் உள்ளோடும் எழுத்தியக்கத்தின் ஊடிழையான குணாம்சங்கள் இத்தகையன என இனங் காண்பதிலேயே இங்கே நான் மையங் குவிக்கின்றேன். எவ்வாறு பிரேமிளின் தரிச னப்பண்பு கவிதையாக்கத்தின் மூலம் ஆதிநிலையினை அவாவிநிற்கும் அப்பாலைப் பண்பார்ந்த படிமஞ் செறிந்து வெளிப்படுகின்றதோ அவ்வாறே அவர் பேணிய மதிப்பீட்டியக் கத்தின் போதும் அது தொல்படிவ மூலங்களைத் தேடித் துரு வும் தொன்மத் திறனாய்வாகவும் (Archytypal Criticism) வெளிப் படலாகின்றது.

"'அகவுலகக் கலைஞர்களில்' நான் உபயோகித்த அணு குமுறை எனது விமர்சனத்தின் மூலம் குறிப்பான ஒரு விமர்சனச் சிந்தாந்தத்தையே வெளியிடுகின்றது. இந்த விமர்சனச் சித் தாந்தத்தின் பெயர் 'ஆர்க்கிடைப்பல் கிரிடிசிஸம்'. இது பொது வாக, அத்யாத்மிகமான விஷயங்களைக் கவனிக்கும் பார் வையின் விளைவாக உருப்பெறும் சித்தாந்தமாகும்.." என்பார் பிரேமிள்.

விமர்சனச் சித்தாந்தங்களின் பல்வேறு அணுகுமுறைக ளையும் தன்னுள் அடக்கி அவை எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் அதன் ஆற்றலால் சமீப காலமாக மூலப்படிவத் தொன்ம அணுகுமுறை பெரிதும் கவன ஈர்ப்புக்குரித்தாகி வருவதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.[1]

சமூகவியல், மானுடவியல், வரலாற்றியல், உளவியல், வடிவ யியல், மொழியியல், அமைப்பியல் என்று இத்தகைய அணுகு முறைகளை ஒருங்கிணைத்துத் தொகுப்பளவை முறையிலும் (Inductive method) மூலப் படிமத் தொன்ம மீட்டுருவாக்கப் போக்கை அகழ்ந்து முன்வைக்கும் பகுப்பளவை முறையிலும் (Deductive method) ஆக ஒன்றோடொன்று ஊடாடிச் சிறக்கும் அணுகுமுறையாகின்றது அது.

வெளியீட்டியலை ஒரு மனோதர்மக் கருவியாகக் கொண்டு பிரேமிள் பேணிய மதிப்பீட்டியக்கம் சனாதன, சைவாதீன, விமர்சனாஸ்ரம மனோவியாதி மண்டலங்களோடும் அழகியலை வறண்ட இயலாகப் பயின்ற வெற்றுக் கைவினைஞர்களோடும் அதிகார மையங்களாய் இறுகி மூடுண்ட போலி அரசியல் ஆதிக்கப் போதகர்களோடும் இடையறாது முரண்பட்டு மோதிச் சிதைக்கும் இயல்பினதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கையாளும் மூலப்படிமத் தொன்ம அணுகுமுறை யானது 'முன்னைப் பழமைக்கும் முதுபழந் தொன்மமுமாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்' இயல்வதாகின்றது.

«உள்ளே சமூகத்தை அரிக்கும் புழு மதிப்பீடுகளைக் கிழித்துக் காட்டும் அணுகுமுறையை நான் தமிழில் முதன் முதலாகப் பூரணமாக வளர்த்தவன்.» என்னும் பிரேமிள் அத்தகைய அணுகுமுறைகளுக்கு மூலாதாரமான ஆணிவேர்களையும் நமக்கு அடையாளங் காட்டி விடுகின்றார்.

«மேனாட்டு சமூகதர்ம அடிப்படைகளை உணராமல் மேனாட்டு விமர்சன இயக்கத்தை அணுக முடியாது. பிரேமிள் ஒருவன் தான் இதனை உணர்ந்து இங்கே சமூக தர்ம உணர்வையும் விமர்சனத்தையும் இணைத்து இயங்குகிறவன். இந்த வகை உணர்வின் அடிப்படைகளைப் புதுமைப்பித்தனிடம் வேறுவிதங்களில் காணமுடியும். என்னமோ 'தேஜஸ்' என்கிறார்களே, அன்று அந்த வெளித்தோல் மினுக்கைக் கீறி அடியில் உள்ள புரையோட்டத்தைக் காட்டும் முறையில் விளைந்த விடம்பனம் (ஐரணி) அவருடையது.»

«மரபான, லௌகீக நம்பிக்கைகளை வலுப்படுத்தும் நமது கடவுள் சொருபங்களை நிதர்சனத்தின் பரீட்சைக்கு உட்படுத்தி, இந்த நிதர்சனத்தின் முன் அவை எவ்வளவுக்கு வலுவிழந்தவை என்பதைக்காட்டுகிறார் புதுமைப்பித்தன். இந்திய உபகண்டத்திலேயே புதுமைப்பித்தன் மட்டும்தான் இவ்வளவு தீவிரமாய்ச் சிதறடித்து நிதர்சனத்தின் மெய் நிலையைக் காட்டியிருக்கிறார். » என்பார் பிரேமிள்.

வேலூர் வெ. கந்தசாமிப்பிள்ளையும் (பு.பி.) திருச்சிற்றம்பலக் கவிராயரும் (தொ.மு.சி..) இணைந்தெழுதிய 'மூனா அருணாச்சலமே' எனும் அதிதீவிர அதிரடித்தாக்குதல் கவிதையை 'பறை-1990' தொகைநூலில் பதிப்பித்தேன். அத்தோடு பு.பி. மீது திருட்டுப்பழி சுமத்திய இரட்டையர்களுக்குப் (சிட்டி, சிவபாதசுந்தரம்) பதிலடியாக எனது 'செப்பாட்டு' ஒன்றையும் உடன் வெளியிட்டேன். அப்போது செல்லப்பா,«நீங்கள் அதையெல்லாம் வெளியிட்டிருக்கக்கூடாது. அதனால் புதுமைப் பித்தனின் இமேஜ் பாதிக்கப்படுமே » என்கிற ரீதியில் என்னிடம் குறிப்பிட்டார்.

«புதுமைப்பித்தனோ பொதியவெற்பனோ இந்த இமேஜ் எழவுகளை ஒருபோதும் பொருட்படுத்துவதேயில்லை. மாறாக அதை எல்லாம் நிர்மூலப்படுத்துவதே அவர்கள் கைங்கரியம்» என்கிற ரீதியில் நான் பதிலிறுத்தேன்.

இதுபற்றி ஞானி என்னிடம் « இது எல்லாம் சும்மா... வெறும் தூசிப்புயல்தான். நேற்று பிரேமிள் கிளப்பினார் இன்று நீங்கள்» என்கிற ரீதியில் குறிப்பிட்டார். பிரேமிளை மதிப்பவர்கள் ஆயினும் இவர்களாலும் புறந்தள்ளப்படும் அதிரடிக் கவிதைகள்பற்றி பிரேமிளின் விமர்சனப் பக்கத்தை புறந்தள்ளி அவரது படைப்புப் பக்கத்தை மட்டும் பாராட்ட முயலும் பாவனை மேதாவிகள் சாதிப்பதும் மௌனமே. இங்கேதான் நமக்கு அந்தச் சிக்கல் முடிச்சுகளின் ரகசியமெல்லாம் அவிழ்ந்து போகின்றது.

«புரட்சிகரம் எதிர்ப்புணர்வின் வெளியீட்டியலை மேற்கொள்ளும்போது, கௌரவவாதிகள் அதைச் சகித்துக்கொள்ள இடமில்லை. க.நா.சு. வின் மேற்படி எதிர்ப்பியலை அவருக்கு முன்பே புதுமைப்பித்தனும், அவருக்கு முன்பு சித்தர்களும் காளமேகம் போன்றோரும் தமிழில் கையாண்டுள்ளனர். இது இவ்விதம் உணரப்பட்டே பாண்டித்ய மண்டலங்களால் ஏற்கவும்படுகின்றது. அன்று பிரசுரமாகாமல் காலங்கடந்தேனும் வே.மு.பொதியவெற்பன் இன்று தமது 'பிறை' பத்திரிகையில் வெளியிட்டுள்ள புதுமைப்பித்தனின் அதிதீவிர தாக்குதல் கவிதைகள் கூடப் போகப் போக எதிர்ப்பண்பியல்பின் இன்றியமையாத சூத்திரங்களாக ஏற்கப்பட்டே தீரும். இலக்கியத்தின் போர்முனையில் கௌரவவாதக் கவசங்களை உடைத்துச் சதைகளைக் கொய்து எடுக்கும் அதிரடிகளே இத்தகைய தாக்குதல்கள். இவற்றை நிராகரிப்பவர்களின் கட்சி சந்தேகத்திற்குரியது. »

«இதற்கு முந்தியே தமிழில் தனிப்பாடல் சரித்திரத்தில் இத்தகைய கவிதைகளிற்குத் தனி அத்தியாயமே உண்டு. இந்த 'எளிமை'க் கவிதைகளைப் படித்த சிலரால் இக்கவிதைகளின் பிரச்சனைப் பிராந்தியத்தைத் தாங்க முடியவில்லை. » என்பார் பிரேமிள். ஆக இந்த வகையில் அதிதீவிர அதிரடிக் கவிதைமரபு தமிழில் சித்தர்களில் உருவாகி, காளமேகம் போல்வாரின் தனிப் பாடல்களில் ஊடாடி, பித்தனிடம் விளையாடி, பிரேமிளிடம் கலையாகி, இந்த பொதிகைச்சித்தனிடமும் அலைமோதித் தொடர்வதொன்றே.

பிரேமிள் எழுத்தியக்கத்தின் உள்ளார்ந்த பண்புகளை இனங்காண உறுதுணையாக அவரது இதர பரிமாணங்கள் சிலவற்றைப்பற்றியும் இங்கே சற்றே கோடிட்டுக் காட்டிவிட்டு விடுகின்றேன். முதலாவதாக அந்த வகையில் அவதானிக்க வேண்டியவை அவரது வியாசங்கள்.

«பிரச்சாரம், தகவல் பரிவர்த்தனை என்ற தேவைகளை நிறைவேற்றுவது கட்டுரை (Article) சுயசிந்தனையும், மொழியின் கலைப்பண்பும், சொல்கிற விஷயத்தை அறிவார்த்தமாக நிறைவேற்றும் மனோதர்மமும் இல்லாவிட்டால் வியாசம் (Essay) நிறைவேறாது. வியாசம் பெருமளவுக்கு கலைப்பண்புள்ள சுயசிந்தனையின் விளைவு. இதுவே புரட்சிகள் எல்லாவற்றிற்கும் ஊற்றான தத்துவச்சுனை » என்பார் பிரேமிள்.

அவருக்குக் கைவரும் அனாயாசமான உரைநடையின் சாத்தியப்பாட்டால் சித்தியாகி அத்தகைய பண்புகளார்ந்த வியாச அமைதி அவருக்கு வாய்க்கிறது. இதற்கான வேர்களையும் என்னால் கு.அழகிரிசாமி, புதுமைப்பித்தன் non-fiction எழுத்துக்களுக்கு ஊடாக இனங்காண முடிகின்றது.

இரண்டாவதாக அவருடனான கால. சுப்ரமணியத்தின் பேட்டிகள் பொதுவாக இங்கு நேர்முகங்கள் என்ற பேரில் நிகழ்த்தப்படுபவை பெரும்பாலும் 'பெரியவாளைக் கண்டுக்ற' மாதிரி பவ்ய பயபக்தியாகவோ, கேள்வியும் நானே பதிலும் நானே எனும் பாவ்லாக் கேலிக்கூத்தாகவோ நீர்த்துப் போகக் காண்கிறோம்.

மாறாகப் பேட்டி எடுப்பவர் உரிய விவிய ஞானத்தோடு உள்ளார்ந்து விவாதிப்பவராகவும் பேட்டி கொடுப்பவர் அப்பேட்டிக்கு உண்மையாக முகங்கொடுத்து எதிர்கொள்பவராகவும் அமையும் பட்சத்தில் அத்தகைய பேட்டிகள் அபூர்வமானவையாக அமையும். எனக்கிந்த வகையில் உதாரணமாக உடனடியாக நினைவுக்கு வருபவை புதுமைப்பித்தன்பற்றி தொ.மு.சி. யுடன் சுந்தரராமசாமி மேற்கொண்ட பேட்டியும், புரவியாட்டக் கலைஞர்களுடன் தஞ்சை ப்ரகாஷ் நிகழ்த்திய பேட்டியும், எடிட்டிங் கலைஞர் லெனினுடனான ஒரு பேட்டியும் வித்தியாசமானவைகளாய் ஆனபோதிலும் எனை வெகுவாகப் பாதித்தது பிரேமிளுடனான கால. சுப்ரமணியத்தின் பேட்டிகளே.

ஏனைப்பிற இலக்கிய வடிவங்களைப் போலல்லாது பேட்டிக்கு ஊடாகத் தொடரும் உரையாடல் உயிர்ப்புடன் தொடரும் பட்சத்தில் வாசகனும் அச் 'செவ்வி தலைப் பட'நேர்கிறது. எனவே தான் பேட்டி என்பதற்கான ஈழப்பதப் பிரயோகம் 'செவ்வி' என்று ஆங்கே அருமையாகப் பாவிக்கப்படுகிறது.❷படைப்பு மனநிலையை வாசகனுக்குத் தொற்ற வைக்கும் வாசிப்பு என்கிற தொனியில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பிரேமிள் குறிப்பிடுவது போல.

மூன்றாவதாகக் குறிப்பிடப்படவேண்டியது பிரேமிளின் கடித இலக்கியம் (Lettrature). எனக்கும் பிரேமிளுக்கும் இடையிலான தொடர்பு அறிமுகமே அவரது மோதுதலான கடிதத் தொடர்பு மூலமே ஆரம்பமானது. இதுபற்றிப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் சந்திப்போமே. இறுதியாக பிரேமிள் என்னும் மகத்தான மனிதனுடனான தோழமை உறவுபற்றி அது மிகவும் அலாதியான, அதிசயமான அற்புதமான ஒன்று. நீண்டகாலமாய்ப் பழகியும் 'நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாத' ஆகாசத்தாமரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுக்கு மத்தியில் சில போழ்தே பழகினும் 'இருநிலம் போழ வேர் வீழ்க்கும் கேண்மை' என்பதை அர்த்தபூர்வமாக எனக்குணர்த்தியது பிரேமிளுடனான தோழமையே.

«சனாதனவாதிகளது லௌகீக மதிப்பீடுகளுடன் இடையறாது மோதுவதுதான் நெறியும் நேர்மையுமாகும். உலக சரித்திர சிகரங்களான புத்தர், யேசு, காந்தி ஆகியோர் இவ்வகையான மதிப்பீடுகளுடன் மோதியவர்கள்தாம். தமக்குத்தாமே தொந்தரவு தந்து, தமது உள்ளத்தைக் கடையவும் வக்ரமான சமூகப்பார்வைகளை உதறவும் முன்வராதவர்களுக்குத் தொந்தரவு தருவதே ஞானியின் கடமை. இது உன்னத நெறி. »

«நெறி என்பது இடையறாத ஒரு அதிவேக இயக்கமாகும். பிரச்சனைகளுள் இடையறாது ஈடுபடுவதே நெறியை நெறிபடும் திசையில் உன்னதப்படுத்திச் செல்லும். ஒதுங்கி இருப்பது இதற்கு மாறான கௌரவவாதத் தேக்கம்தான்.»

பிரேமிள் பேணிய மதிப்பீட்டியக்கம் இந்நெறி நின்ற நேர்மையே. அது காய்தல் உவத்தலற்ற ஆய்வுச் செந்நெறி. அவரது மோதல்களும் முரண்பாடுகளும் சமூகத்தைச் செல்லரிக்கும் புழு மதிப்பீடுகளுடனானவையேயன்றி ஒருபோதும் தனிமனித விருப்பு வெறுப்பின் பாற்பட்டதன்று. குரோதமனப்பான்மைகளுடனும் விரோத நடவடிக்கைகளுடனும் அவர் எதிர்கொள்ளப்பட்டாரேயன்றி அவரை அவை அண்டியதேயில்லை. 'மிகவும் தவறாகக் கருதப்படும் மனிதர்' என்ற ஓஷோ ரஜனீஷ் பற்றிக் குறிப்பிடப்படுவது போலவே இன்னோர் அர்த்தத்தில் 'மிகவும் தவறாகக் கருதப்படும் மனிதர்' ஆன பிரேமிளிடம் நாம் பார்க்கத் தவறிய பக்கங்கள் இவை. சனாதன லௌகீக மதிப்பீடுகளுடன் இடையறாது மோதுகிற நெறி நின்றே வெங்கட்சாமிநாதனுடனும் சுந்தரராமசாமியுடனும் க.நா.சு. உடனும் தம் விமர்சன அளவைகளை முன்னிறுத்திக் கடுமையாக விமர்சித்த போதிலும் அம்மதிப்பீடுகள் (சனாதன, லௌகீக) அண்டியிராத போதுகளில் 'எழுத்தின்' விமர்சனக்களங்களில் மூலபலசேனையாய்த் தன்னுடன் நின்ற வெங்கட் சாமிநாதனின் முந்தைய எழுத்தை, சுந்தரராமசாமியின் 'சவால்' கவிதையையும் 'மௌனி' யின் காலகட்டத்தில் எழுதியவர்களை விடச் சிறப்பாக சு.ரா. எழுதியதைக் குறிப்பிட்டும், க.நா.சு. கௌரவவாதிகளுக்கு எதிராகப் பேணிய எதிர்ப்பியலைச் சுட்டிக் காட்டியும் பிரேமிளே முன்வைக்கவில்லையா?

«இன்னொரு பக்கம் பிரேமிளைப் பாராட்டுமுகமாக முறையே ஜெயமோகனும் மாரப்பனும் எழுதிய போதிலும்கூட ஜெயமோகனை விமர்சித்தும் மாரப்பன் எழுத்தை மறுத்தெழுதியும் பிரேமிள் இயங்கவில்லையா? மௌனியை நான் ஒருவகையில் கௌரவிப்பதற்குக் காரணம், அவரது கலை மறைமுகமாகக்கூட சனாதனத்துக்கு விபச்சாரம் போனதில்லை என்பதற்காகவாகும். - மற்றையவர்களைவிட இவர் தீவிர சனாதனவாதியாக இருந்தும்கூட எப்போது இந்த சனாதனம் இவரது கலையுணர்வைவிட தீவிரமாகிற்றோ அப்போது இவரால் எழுதக்கூட முடியவில்லை.» என்று பிரேமிள் குறிப்பிடவில்லையா? அவருடன் கலந்துறவாட எனக்கு வாய்த்த கால அவகாசங்கள் மிகமிகச் சொற்பமானவையே. அக் கணப்பொழுதுகளுக்கு ஊடேயே அந்த மகத்தான மனிதனுக்குள் ஊடாடிக் கிடக்கும் தமிழ்ச் சமூகத்தின் மனச்சாட்சியை - விட்டுவிடுதலையாகி நின்ற ஞானியை - கள்ளங்கபடமற்ற வெள்ளந்திப் பிள்ளை உள்ளத்தை என்னால் இனங்காண முடிந்தது. "முன்னுற்றுவோனை பின்னுற்றினேனே" என்று என்னுள்ளே நானே மறுகிக் கிடக்கலானேன். அவரது அந்திம திசையில் அவரைச் சந்தித்து அளவளாவ இயலாமல் போன பேரவலம் என்னெஞ்சில் என்றென்றும் ஆறாத ரணகளமே.

«எது எப்படியாயினும் பிரேமிளின் இலக்கிய இயக்கம் புதுமைப்பித்தனுக்கு நேர் அடுத்தது என்பது நடந்து முடிந்த சரித்திரம். பித்தனிடம் தெரிந்தது எ்.கு இரும்பின் திரை உறுதித் தன்மையென்றால் பிரேமிளில் தேக்கின் வேலேறிய திரட்சித் தன்மையின் படிமங்களாய் இலகுவில் பிளக்கவோ பிரிக்கவோ முடியாதபடி உருண்டு கிடக்கின்றன.» என்பார் 'சதுக்கப்பூதம்' மாரப்பன். «புதுமைப்பித்தனை எதற்காக எவரெல்லாம் 'அபரிமிதமாய்'ப் பாராட்டினார்களோ அதே காரணத்துக்காகத்தான் பிரேமிளும் பாராட்டப்பட்டான். .» என்பார் பிரேமிள்.

ஆம் இவ்வாறு அவரது வாழ்நாளிலேயே அவரைக் கௌரவிக்கும் முகமாகத்தான் எமது சிலிக்குயிலின் 'புதுமைப்பித்தன் சாதனை வீறும்' 'விளக்கு' நிறுவனத்தின் 'புதுமைப்பித்தன் நினைவுப்பரிசு' ம் அவருக்கு வழங்கப்பட்டன என்பதொன்றே நமக்குச் சற்று ஆறுதலாகின்றது.

«தமிழில் நவீன இலக்கிய உணர்வுக்கு எனது மூதாதை புதுமைப்பித்தன் தான். தமிழின் சிந்தனைக் குணத்துக்கு மட்டுமல்ல, நவீனத்தன்மையின் பரிபூரணமான பரிமாணத்துக்கும், விமர்சனத்திற்கும் அத்தியாவசியமான சார்பற்ற மதிப்பீட்டுணர்வுக்கும் தந்தை புதுமைப்பித்தன்தான் . . . விமர்சனத்தின் ஜீவன் பித்தனிடம் ஆரம்பிக்கிறது . . . இந்த மரபைப் பித்தனது சுடரளவுக்கு ஜ்வாலை எழுப்பியவன் நான்தான். இதைச் சரித்திரம் கண்டுகொள்ளும். .» என்பார் பிரேமிள். இந்த உண்மையைச் சரித்திரம் கண்டுகொள்ள ஆரம்பித்திருப்பதன் அறிகுறியே பிரேமிளுக்குக் கிடைத்த புதுமைப்பித்தன் வீறும் விருதும் ஆகும்.

ஆக இப்படி நான் பிரேமிளை இனங்காணக்காண அது புதுமைப்பித்தனை இனங்காண்பதானது. பித்தனையும் பிரேமிளையும் ஒருசேர இனங்காணக்காண அது என்னையே எனக்கு இனங்காட்டுவதாகின்றது. இலக்கியத்தின் போர்முனையில் பித்தனும் பிரேமிளும் பேணி நின்ற மதிப்பீட்டியக்கத்தின் பதாகையினை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்தேந்தித் தொடரும் கடப்பாடொன்றே இன்றென்முன் நிற்கின்றது என்பதே என்றென்றும் தோன்றாத்துணையாய் என்னுள் தொடரும் புதுமைப்பித்தனும் எனைத் 'தடுத்தாட்கொண்ட' பிரேமிளும் எனக்குணர்த்திய பேருண்மையாகும்.

**<u>அடிக்குறிப்புகள்.</u>**

இக் கட்டுரையாக்கத்தில் எடுத்தாளப்பெற்றுள்ள பிரேமிள் கூற்றுக்களும் பிரேமிளைப்பற்றிய கூற்றுக்களும் இடம் பெற்றுள்ள இதழ்கள் மற்றும் பிரேமிள் நூல்கள் :

'லயம்', 'தீட்சண்யம்', 'சதுக்கப்பூதம்' மற்றும் 'மீறல் பிரேமிள் சிறப்பிதழ்' பிரேமிளின்' விமர்சன மீட்சிகள்' மற்றும் 'தமிழின் நவீனத்துவம்'

---

❶ மூலப்படிமத் தொன்ம அணுகுமுறை குறித்த மேலதிக விபரங்களுக்கு:

1. இலக்கியத்தில் தொல்படிவங்கள்-நார்த்ராப்.்ப்ரை - தமிழாக்கம்-பஞ்சு

2. இலக்கியத்தில் பழம்புதுமையும் புதுப்பழமையும் - (மூலப்படிவத்திறனாய்வு )- கா.செல்லப்பன்.

3. A handbook on Principles of Literary Criticism - (From Plato to Post-Modernism) - Dr.S.Ravindranathan

❷ ஈழத்தின் பல்துறைக் கவிஞர்களின் செவ்வித் தொகுப்பான நூல் 'தேன்பொழுது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரிகொள் இருள்

அ.இரவி

## 1

பாலனுக்கு பிறகு ஊகிக்க ஒன்று மில்லை. பேய்களுக்குப் பேய்களையே தெரியாத, கரிகரியாக இருட்டு அப்பிய அந்த ஆடி மாதத்தின் அமாவாசை இருள் பொழிகிற அன்றைய நாளில் பாலன் ஐயாவை எதிர்பார்த்திருந்தான். அவனுக்குத் தெரிந்த ஐயா அன்று அவ்விடம் வருவார்.

"ஐயாவை விட்டிட்டு வந்திருக்கக் கூடாது..." என்று பாலன் கலங்கிக் கலங்கி யோசித்தான். அவன் தன் சின்னவாய் கோணி விம்மினான். "ஐயா...ஐயா..." என்று மனம் அரற்றுகின்றது.

ஐயாவின் கண்களில் குளம் கட்டுகிறது. கையைத் தூக்கிக் கொஞ்சுகிறார். கையைத் தடவுகிறார். கையைத் தூக்கி நெஞ்சில் வைக்கிறார். அவரின் நெஞ்சு மயிரிற்குள் கை புதைகிறது. இப் பிஞ்சுக் கையைக் கொண்டு நெஞ்சைத் தடவுகிறார். ஐயாவின் வாய் புழுத்த நாத்தம் நாறுகிறது. படுக்கையாகி இருக்கிறார்.

ஐயாவின் வால் என்று பாலனை அம்மா கூறுவார். கடைசிப்பிள்ளை. அக்கா மலர். சின்னண்ணன் நாதன். பெரியண்ணன் ராசன். பாலன்தான் கடைசி. ஐயாவின் வால்.

ஐயா காலையில் மிருதுவாக எழும்புகிறார். "ராசா... எழும்புங்கோ..." பாலன் எழும்புகின்றான். தென்னம் பாத்திக்குள் மூத்திரம் பெய்கின்றான். கோடிப் புறத்துப் பத்தைக்குள் போய் இருக்கிறான். சுற்றிவர சாணிப்பச்சை நிறத்தில், சிவப்பும் கறுப்பும் கோடாக, தடித்த கறுப்பில் பெரிதாக, சின்னச் சின்ன குட்டிகளாக, விதம் விதமான அட்டைகள். கையில் தடி வைத்துத் தட்டி விட அவை சுருண்டு விழும். சிவப்பாக வரும் தம்பளப் பூச்சியை கையில் வைத்துப் பார்த்தபடி குந்தியிருப்பான். வந்து குண்டி கழுவி, ஐயா ஆட்டில் பால் கறக்க, அதன் கால்களைக் கெட்டியாகப் பிடித்தபடி . . . பிறகு ஆட்டுப்பால் தேத்தண்ணி!

ஐயா தோட்டத்தில் நிற்பார். பள்ளிக்கூடம் இல்லையென்றால் தோட்டத் துக்கு ஓடுவான். பள்ளிக்கூடமென்றால் மனமில்லைத்தான். சிணுங்கிச் சிணுங்கி மெல்ல அழுது . . .

"பென்சில் இல்லை . . ."

அம்மா கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் சிவமண்ணை கடையில் பென்சில் வாங்கித் தந்து . .

"கொப்பி இல்லை. வீட்டுக் கணக்குச் செய்யேல்லை . . ."

சிவமண்ணை கடையில் கொப்பி வாங்கலாம். வீட்டுக் கணக்கு வாங்க எந்தக் கடைக்குச் செல்வது?

"ஏன் ராத்திரிச் செய்யேல்லை?. . ."

அதற்கு இருக்கவே இருக்கிறது சாட்டு!

"ராத்திரி நீங்கள் தானே மண்ணெண்ணை முடியுதெண்டு விளக்கை நூர்க்கச் சொன்னீங்கள்"

"ராத்திரி முழுக்க மாட்டுக்கு ஓலை கிழிக்கச் சொல்றீங்கள்"

"இரவிரவாவெங்காயத்தைஅறுத்தால் என்னெண்டு வீட்டுக்கணக்குச்செய்யிறது?"

"ராத்திரியெல்லே புளியம்பழம் உடைக்கச்சொன்னீங்கள்"

"பனங்கிழங்கை இரவிரவா இருந்து அவிக்கிறீங்கள்"

"நீ இராத்திரி வீட்டுக் கணக்குச் செய்யப் போறன் எண்டு சொல்லியிருக்கலாம் தானே?" என்று ஒரு வசனத்துடன் முடியும்.

தோட்டத்திற்கு ஓடலாம். ஐயா தோட்டத்திலை நிற்பார். சிலவேளை பெரியண்ணன் வெங்காயத்திற்கு தண்ணி கட்டலாம். ஐயா சந்தைக்குப் போயிருப்பார். ஐயா இல்லாத தோட்டம் பாழ். இலந்தை மரத்திற்கு மூன்று கல்லெறிந்து பழம் பொறுக்கி வீட்டை ஓடி வர வேண்டியது.

ஐயா சந்தையால் மீன் வாங்கி வருவார். மலை நாட்டு மரக்கறி வாங்கி வருவார். விளாம் பழமும் அன்னாசிப் பழமும் வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்.

ஐயா சந்தையால் வரும் வரைக்கும் ரொமியும் பாலனும் காத்து நிற்பார்கள். றோட்டில் தெரியும் வெள்ளை நிறம் ஐயா போல இருக்கும். வேட்டியும், சால்வையும் கட்டி ஐயா சந்தைக்குப் போவார்.

"ஐயா வாறார் . . . "

ரொமி உடனே றோட்டிற்கு ஓடும். ஐயா அல்ல, அது வேறு யாரோ. ரொமி வால் ஆட்டி வாசலுக்குத் திரும்பி வரும். காலடியில் கிடக்கும். . .

ஐயா வரமாட்டாரா? அப்படியே கனவு மாதிரி மறைந்து போனாரா? "ஐயா... ஐயா..." குழறுது நாவு. திக்கித்துப் போய் விட்டது மனசு!

ஐயா வரச் சொல்கிறார்... அருகில் அழைக்கிறார்... படுத்த படுக்கையாகி நாட்களாகி விட்டன. துங்கப் பரியாரியார் காலமையும் பின்னேரமும் வாறார். கறுப்பாக, சின்ன உருண்டைகளாகக் குளிசைகளைத் தாறார். தேனிலை, முலைப்பாலிலை, வெந்தயத் தண்ணியிலை, கருந்துளசியிலையோடை, வெத்திலையோடை, எல்லாவற்றுடனும் குளிசைகளை உரைச்சுக் குடுத்தாச்சு. ஐயா எழும்புகிற பாடாய்க் காணவில்லை. ஐயா வாடிப்போய்க் கிடந்தார். பாலனைப் பார்க்கிறபோது மாத்திரம் சிரிக்கிறார். எண்ணெய் ஊறிக் கறுத்த தலைகணி. ஐயாவின் கண்ணில் உயிரில்லை, ஒளியில்லை ஐயா எழும்புகிற பாடாயும் காணவில்லை.

ஐயா எழும்பி தோட்டத்தில் கால் வைக்க வேண்டும். வெங்காயத்துக்குத் தண்ணி கட்டவேண்டும். ஆட்டுக்குப் புல்லுச் செதுக்க வேண்டும். மாட்டுக்குக் குழை ஒடிக்கவேண்டும். அம்மாளே என்று கையெடுத்துக் கும்பிடவேண்டும். பிரதட்டை பண்ணவேண்டும். ராசா என்று மிருதுவாக எழுப்பவேண்டும். வெள்ளை வேட்டி கட்டி சந்தையிலிருந்து திரும்பி வரவேண்டும்.

பாலனுக்கு அழுகை அடைக்கிறது.

ஐயா கூப்பிடுகிறார். பாலன் அருகில் போனான். ஐயாவின் முகத்தில் நரைத்த தாடி முளைத்திருந்தது. முகத்தில் வேதனை நிழலாகப் படர்கிறது. சிரிக்க முயல்கிறார். மஞ்சள் பல். கறுத்தச் சொண்டு. சிரிக்க முடியவில்லை. கையைப் பிடிக்கிறார். தடவுகிறார். தன் நெஞ்சில் கையை வைக்கிறார். பிஞ்சுக் கைகள் நெஞ்சைத் தடவுகின்றன. நெஞ்சு மயிரிற்குள் கை புதைகிறது. குழப்பமும் பயமும் இருளாகப் பரவுகிறது. அலையடித்து நெஞ்சின் ஓரத்தில் துயர் எழுகிறது.

"ராசா . . . அம்மாவைக் கவனமாகப் பார்க்க வேணும். . . "

"ஒண்டும் நடக்காது. பயப்படாதையுங்கோ..." அம்மா விசும்புகிறார் பாலன் பரிதவித்து நிற்கிறான்.

"நான் பயப்பிடேல்லை ... உங்களையிட்டுத்தான் யோசிக்கிறன் . . .இன்னும் கொஞ்ச நேரம் தான் . . . "

"பரியாரியைக் கூப்பிடுறன் . . . "

"ஒண்டும் வேண்டாம் . . . பரியாரியாலை என்னை மறிக்க ஏலாது . . . "

"ஐயா... ஐயா..."

"ராசா... அம்மாவைக் கவனமாகப் பார்"

ஐயாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது. வழிந்து ஓடி தலையணைக்குள் புதைகிறது.

ஐயாவின் பார்வை பாலனை விட்டு நகர்ந்து மேலே போனது. ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். ஐயாவிற்குத் தெரிகிறது, இது தனது கடைசி நேரம். கடைசிப் படியில் காலை வைக்கிறார் ஐயா. தன்னிடம் கடைசியாக விடை பெறுகிறார் என்று தெரிகிறது பாலனுக்கு.

பாலனை விட்டுக் கண்களை யெடுத்து மேலே பார்த்தவர்தான். பின் ஒருவரிடமும் திரும்பிப் பார்க்கவில்லை, ஓரிடமும் பார்க்க வில்லை, முணுமுணுத்த வாய் மூடியது. கண்களும் மூடின. மூடிய கண்களுள் எதைத் தேக்கி வைத்தாரோ?

பாலன் ஐயாவின் ஐயாவின் உயிர் பிரிந்து சென்று கொண்டிருப்பதையே பார்த்தபடி நின்றிருந்தான்.

அம்மா கல்லாக உறைந்தார். மனசு கரைந்து கேவி அழுதார். பிறகு பெருங்குரலெடுத்து கதறி அழுதார்.

பாலனுக்கு ஒன்றும் புரிகிறதாக இல்லை. ஐயாவை விட்டிட்டு வந்திருக்கக் கூடாது என்று திரும்ப யோசிக்கிறான். கன்னங் கரிய அமாவாசை இருளில் ஐயாவை அவன் திரும்பக் காண்பான்.

ஐயா அங்கு தனிய என்ன செய் வார்? கதைக்கக்கூட ஒருவரும் இல்லை. பொழுது கருகினால் யார் அங்கு விளக்கேற்றுவார்? இருண்டு போகிற வீடு. இருண்டு போகிற பொழுது. கறுத்துக் கறுத்துக் கட்டி கட்டியாக அடைபட்டுக் கிடக்கிற இருள். விளக்கேற்றுவார் அங்கு யார்? ஐயா இருட்டில் தானோ?

"இஞ் சேரும் ...இருண்டு போச் செல்லே ... விளக்குக் கொளுத் தேல்லையே?. . . "

"அதுதானப்பா நெருப்பெட்டியைத் தேடுறன் ... வைச்சஇடத்திலை காணேல்லை . . . நெருப்பெட்டி இருந்தால் விளக்கிருக்காது விளக்கி ருந்தால் நெருப் பெட்டி இருக்காது . . . "

"உதுகளைப் பொழுதுபட முன்னம் எடுத்து வைச்சால் என்ன?. . . "

"வைச்சால் வைச்ச இடத்தில கிடக்குதே?... உவன் குரங்கன் ஏதும் கொளுத்த எடுத்திருப்பான்"

"ஆர் பாலனோ?. . . "

"பாலனில்லை, உங்கன்ரை வாலன் . . "

ஐயாவின்ரை வால் அமசடக்கமாக நெருப்புப் பெட்டியை எடுத்த இடத்தில் வைத்தது.

ஐயா விளக்குக் கொளுத்துவாரோ? இருட்டோடு இருட்டாய்க் கிடக்கிறாரோ? . பேய்கள் உலாவுகிற இரவு. பேய்கள் உலாவுகிற வெளிஅது. ஐயாவும் பேய்தானே?. . .

இல்லை... நிச்சயமா இல்லை. ஐயா வாலை பேயாக இருக்கேலாது. செத்த வீடு முடிஞ்சு,சிலவு அண்டு இரவு நாகமணி அப்பு சொன்னார் :

"என்ன அருமையான மனிசன் . . . இப்பிடி அரை குறையிலை போவானெண்டு ஆர் நினைச்சது?" . . . ஐயாவாலை ஒருக்காலும் பேயாக இருக்கேலாது.

ஐயாவைப் பாடையில் ஏற்றித் தூக்குகிறார்கள். அம்மாவும் அக்காவும் குளறுகிறார்கள். மொந்தன் வாழை கட்டி, வாசல் ஐயாவை அனுப்பக் காத்திருந்தது. வேலி ஒரு பக்கம் பிரிந்திருந்தது. போகிற பொழுதுக்குக் காற்று வெடித்தது. சூரியன் உச்சியிலிருந்து கொஞ்சம் சரியத் தொடங்கினாலும் வெய்யில் காங்கைகளை அள்ளி விசிறியது. ரொமி ம் . . .ம் . . . என்று முனகி கோடிப்புறத்தில் சுற்றியது.

பெரியண்ணன் முட்டி காவுகிறான், சின்னண்ணன் பொரி காவுகிறான். பாலன் கத்தி எடுத்துக் கொடுக்க கமுகம் சிலாகை வெட்டிச் செய்த பாடையின் முன்னே இருவர் மனம் உருக, உடல் நைந்து போக குரல் கமறிக் கமறி ஏதோ பாடுகிறார்கள். பாலன் தாங்காமல், தாங்காமல் துக்கம் சுமக்கிறான். அழுகைதான் வரமாட்டேன் என்கிறது. கட்டிப் போட்டாற்போல அழுகை வாய்க்குள் அடங்கிக் கிடக்கிறது. மூக்கு விரிஞ்சுது. உதடு நெளிஞ்சுது. மூஞ்சி கோணலாச்சு. கொடுப்புகள் வீங்கி வீங்கி நோகத் தொடங்கின. அழுகைதான் இல்லை. அதற்கும் சேர்த்து அம்மாவும் அக்காவும் குழறுகிறார்கள்.

"பாரடா... ஐயாவைப் பாரடா... எங்களையெல்லாம் எப்பிடியடா விட்டிட்டுப் போக மனம் வந்தது? உன்னை விட்டிட்டுப் போனாரேடா . . . " அக்கா பாலனைக் கட்டிக் கட்டிக் குழறுகிறாள். அம்மா ஏலாமல் வேலியோரம் குந்தி அழுகிறா. மூக்கைச் சீறுகிறா . . .

ஒரே சாம்பிராணி நாத்தம் . . . அத்தர் மணம் . . . இரண்டு மூக்கிலும் பஞ்சு . . . கால் இரண்டையும் கட்டிக் கிடக்கு . . .

மூடிய கண் மூடினதான் . . . மூடிய வாய் மூடியதுதான் . . .

ஒருமுறை ஐயா கண்ணைத் திறந்து பார்த்தார் போல... வாயை அசைத்தார் போல... ராசா என்று மிருதுவாகக் கூப்பிட்டார் போல . . .

பாலன் காத்து நின்றான். இன்னொ ருக் கால் ஐயா கூப்பிடுவார் என்று எதிர்பார்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தான்.

இல்லை. மூடிய கண்கள் மூடின தான். மூடிய வாய் மூடியதுதான்!

மாரி வெங்காயத் தாழ்வை வரப் போகிறது. ஐயா வண்டில் கட்டிப் போகிறார். வெங்காய நடுகைக்கு முன்னம் குழை தாக்கவேண்டும். குழை வெட்ட பொன்னிப்புலம் பக்கம் போகிறார். பாலனும் வண்டிலில் தொத்துகிறான்.

"பள்ளிக்கூடம் போகேல்லையே ராசா. சோதனை வரப் போகுதெல்லோ?..."

"நாளைக்கும் போகலாம். வாற கிழமை தான் சோதனை..."

"பாஸ் பண்ணுவியே?..."

"இந்த முறை கலக்குவன் ஐயா..."

ஐயா மாட்டை உரப்பிக்கொண்டு இரகசியமாகச்சொன்னார், இல்லை, இரகசியம் மாதிரிச் சொன்னார்: "ராசா கவனமாகப் படிக்கவேணும்... தோட்டம் செய்து நான் நல்லாக் களைச்சுப் போனன்... அண்ணன் மாரைப் படிப்பிப்பம் எண்டால் அவங்கள் படிப்பை விட்டிட்டாங்கள்... நீயாவது... உன்னை என்ரை கையுக்கை பொத்திப் பொத்தி வைச்சு வளக்கிறன்..." இதை வாயைப் பொத்தி ஐயா சொன்னார்.

அந்தச் சவம் எரிகிற சுடலை தாண்டி பொன்னிப்புலப் பனங்கூடல். குகை போல இருண்டிருந்தது. கறுத்து, நெடுத்து அடர்த்தியான பனைகள் தோப்பாக வானைத் தொட்டு விட நீண்டு விரிந்த தலைகள்.

ஐயா வேலிகளில் மதர்த்து நின்ற குழைகளை எந்த இரக்கமுமின்றி தறித்து, முறித்து வீழ்த்துகிறார். பாலன் பொறுக்கி அடுக்கிக் கட்டுகிறான். கட்டிக் கட்டி வண்டிலில் ஏற்றுகிறான். வண்டில் சோலையாக அசைகிறது...

சுடலையில் அந்தச் சவம் எரிந்து முடியவில்லை. நெருப்புபடர்ந்து வெளியெங்கும் துளாவுகின்றது. சுவாலை பரவுகின்றது. கூரை ஓடுகள் உடைந்த சுடலை மடமும், துலா பாறி விழுந்த அதன் கிணற்றடியும், சோகப்பட்டுப் போய் இருந்தன. சுற்றி ஆவரசம் பத்தையும், பீ நாறிப்பத்தையும் நாகதாளி மரங்களும் தனித்துப் போய் தொங்கின. சோகத்தைப் பிழிந்து சாறு அங்கு பரவியது.

பெரியண்ணன் கேவி அழுகின்றான். சின்னண்ணன் விம்முகின்றான். இக்கிரிப் பத்தை தாண்டி பாலன் போகிறான். நெருஞ்சி முள்ளு மண்டையில் தாக்குகிற வலியுடன் குதிக்காலில் ஏறியது. பிடுங்கினான். ஒரு சொட்டு இரத்தம் கட்டி நின்றது. இரத்தத் தைத் துடைத்து, பாலன் எரியப் போகிற ஐயாவைப்பார்க்கிறான். விபூதிக்குறி தீட்டி, சந்தனப் பொட்டிட்டு, அதன் மேல் குங்குமம் அப்பிய ஐயாவின் முகம். கறுத்து நீண்ட கட்டை! ஐயாவின் மேல் விறகுகள் அடுக்கப்படுகின்றன. பெரியண்ணன் கொள்ளி வைக்கப் போகிறான்...

விபூதி சந்தனம் பூசி, செல்வரத்தினக் குருக்கள் கொடுத்த கறுப்புப் பொட்டும் வைத்து பிரதட்டை பண்ணிக் களைத்த உடம்புடன் ஐயா வாறார்பசிதான். அடுப்படிக்குள் சுற்றி இருந்தபடி வாழையிலையை அம்மா விரிக்கிறார். ஐயா தண்ணீர் தெளிக்கிறார். சோறு. பாலன் சோற்றில் குளம் கட்டுகிறான். அம்மா குழம்பு விடுகிறார். கறிகள் வைக்கிறார்.

அம்மா ஆட்டுக்குப் பனங்காய் சீவுகிறார். ஐயா தோட்டத்துக்குப் போகிறார்.

"களைச்ச உடம்பு கொஞ்ச நேரம் படுங்கோ"

"ராவைக்குப் படுக்கலாம்..."

"ராவைக்கும் திருவிழா எல்லே?.."

படுக்காத உடம்பு. பாய்ந்து பாய்ந்து வேலை செய்த உடம்பு. ஒரு நாள் படுத்து விட்டது. படுத்த படுக்கையாக எட்டு நாட்கள். எண்ணி எட்டே எட்டு நாட்கள்...

**2**

செத்தவீடு முடிந்தது. செலவு முடிந்தது. அந்திரட்டியும் முடிந்தது. சின்ன மாமா போய்விட்டார். இத்தினிச் சின்னையா போய் விட்டார். பெரியமாமி மிஞ்சிய பொயி லையையும் கட்டிக்கொண்டு "வாறன் தங்கச்சி" என்று புறப்பட்டார். வாத்தியா ரப்புவும் பிறகு வரவில்லை. சின்னம்மான் மாத்திரம் சில நாட்கள் நின்றார்.

எல்லோரும் போனபிறகு பெரியண்ணனும், சின்னண்ணனும் உலாத்தப் போய் விட்ட பிறகு, அக்காவும் குடும்பமாகத் தன் வீட்டிற்குப் போனபிறகு, பாலனும் அம்மாவும் ஐயாவின் நினைவும் சட்டம் போட்டு சந்தனம் அப்பின ஐயாவின் படமும் மிஞ்சின ஒரு பின்னேரத்தில் அம்மா ஐயாவின் படத்திற்கு விளக்கேற்றினார்.

பொழுது இருண்டு போயிற்று. காகம் கரைந்து பறந்து தன் இருக்கைக்குப் போயிற்று. செல்லத்துரை கள்ளிறக்கி நடந்து போனார். சின்னையன் ஆட்டுக்குக் குழைவெட்டி, கொக்கச் சத்தகத்துடன் போனார். நாகம்மா புல்லுப்பிடுங்கி கடகத்துடன் போனார். ஐயா செத்த பிறகு ரொமி சுருண்டே படுத்துக்கிடந்தது. காற்று குளிரெடுக்க அப்போது யோசித்தது. தட்டிவானும் தன் கடைசிப்பயணம் முடித்துப் போனது. அம்மா "வா... வா..." என்று அரிசிக் குறுணலை கோழிக்குப் போட்ட பின்னர் கோழிகளும் படுக்கைக்குப் போயின. போகிற யோசனைகள் ஒன்றோடொன்று பின்னிக் கிடந்தன...

இதுவென்ன மணம்?... பாலன் மூக்கை விரித்து முகர்ந்து பார்த்தான். எங்கேயோ அறிந்த மணம். துயரத்தை உசுப்பிற ஒரு மணம். துக்கத்தைப் பெருகச் செய்கிற அதே மணம். நெஞ்சை விறாண்டி அதன் உயிரைச் சட்டென எட்டிப்பிடித்து உலுப்புகிறது அந்த மணம். எங்கேயோ துன்பம் பொங்க, அறிந்துணர்ந்து அனுபவித்த அதே மணம்...

சட்டென அது புரிந்து விட்டது. புரிந்தே விட்டது. "விளங்கிச்சு..." தலையை ஆட்டினான் பாலன். அந்த மணம் தான். சாம்பி ராணி நாத்தம் கலந்தாற் போல அத்தர் மணம். எல்லாம் கலந்த ஒரு சவநாத்தம். அந்த மணம்தான்.

ஓடிச்சென்று ஐயாவின்படத்தைப்பார்த்தான். ஐயா பார்க்கிறார். ஐயா சிரிக்கிறார். முகம் கோணுகிறது. ஐயா அழுகிறார். ஐயா அழுகிறார்! நெற்றியில் இட்ட பொட்டு அப்படியே இருக்கிறது. கண்கள் சுருங்கி கன்னத்தில் கண்ணீர் கோடாகத் தெரிகிறது. ஐயா அழுகிறார். பாலன் கேவினான். ஐயா இறந்ததற்கு இப்போது தான் கேவிக் கேவி அழுகிறான். "ஐயா... ஐயா..." முணுமுணுக்கிறான்.

பிறகு சாம்பிராணியோ, அத்தரோ மணக்க வில்லை. கற்பூரவாசனை! அம்மாள் கோயிலில் செல்வரத்தினக் குருக்கள் பஞ்சாலாத்தி காட்டுகிறபோது வீசுகிற அதே கற்பூரவாசனை.

பாலனுக்குத் தெரிந்தே விட்டது. ஐயா வந்து விட்டார். திரும்பி வந்து விட் டார். அவருக்குப் போக ஏலாது. ஒருத்த ரையும் விட்டிட்டுப் போக ஏலாது. அதுவும் பாலனை விட் டிட்டுப் போக ஏலாது. அதுதான் சுடலைக்குள்ளை பனையோடை பனையா நின்று பார்த்திருக்கிறார். ஏலாமல் போச்சு. ஓடி வந்திருக்கிறார். இனி ஐயா வின்ர கையைப் பிடிக்கலாம். திருவிழா விற்குப் போகலாம் சவாரிப் போட்டி பார்க்கலாம்.

இப்போது பாலன் பரிதவித்து நின்றான்.

இவ்வளவு நாளும் ஐயா என்னவென்று சுடலையில் நின்றார்? சுற்றி வரும் பற்றைக் காட்டில், பாம்பும், கொடுக்கனும், மட்டத் தேளும் நீலகண்டனும் உலாத்துகிற அந்தத் தேசத்தில் ஐயா எப்படித் தனித்து நின்றார்?

பாலனைப் பொறுத்து அவன் ஐயா வீமன். ஒற்றைக் கையால் எதிரிகளைச் சுழட்டி அடிக்கிற விண்ணன். சடக்கென்று செட்டி நாகத்தின், தொண்ணூறு புள்ளிப் புடையனின் கழுத்தைப்பிடித்து, வால்பாகம் வளைந்து முறுகித் திமிற கழுத்தை அப்படியே நெரித்துப்போட்டுவிடுகிற வீமன். மகா விண்ணன். ஐயாவிற்கு பாம்பு ஒரு விசய மல்ல. மட்டத்தேளும் கொடுக்கனும் சின்னி விரல் நசிப்பில் சுருண்டு போகும்.

ஆனால் ஐயா தனித்து எப்படி அங்கு நின்றார்?

இப்போது ஐயா அழவில்லை. சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்ட படத்திலிருந்து சிரித்துக் கொண்டிருக்கிறார். திருப்பி அதே மணம். அத்தரும் சாம்பிராணியும் சேர்ந்த அதே சவநாத்தம்! ஐயா இங்குதான் எங்கேயோ நிற்கிறார்.

அம்மா லாம்பைக் கொளுத்துகிறார். தலை வாசலில் கொளுவுகிறார். அடுப்படிக்குள் ஒரு விளக்கு. இன்னொரு விளக்கைத் தருகிறார். "படிமோனை... சோதனையும் வரப் போகுது..."

பாலன் தமிழ்மலர் புத்தகத்தைத் திறக்கிறான். தனக்கு விருப்பமான பாடத்தைக் குரலெடுத்து வாசிக்கிறான். இப்பாடத்தை வாசிக்கிறபோது அவன் சில வேளைகளில் அழுதுமிருக்கிறான்...

"...சிறுவனசுழலும் இராட்டினத் தருகே வந்தான். இராட்டினம் மிக வேகமாகச் சுழன்றது. ஆண்களும் பெண்களும்பிள்ளைகளும்இராட்டினத்திலிருந்த கூச்சலிட்டுச் சிரித்தனர். சிறுவனது முகத்தில் புன்முறுவல் படர்ந்தது. தானும் சுழல்வதுபோல எண்ணினான். திறந்த வாயுடன் பார்த்துக்கொண்டு நின்றான். இராட்டினத்தின் வேகம் குறைந்தது. பெற்றோரின் ஓயாத மறுப்பு அவனது ஆவலைத் தணிக்குமுன்பே அவன் துணிவுடன் கேட்டான்: அப்பா, அம்மா தயவு செய்து நான் ராட்டினத்தில் ஏறவேண்டும். விடை எதுவுமே இல்லை. பெற்றோரைப் பார்க்கத் திரும்பினான் அவர்கள் அங்கேயில்லை."

திரும்ப அதே மணம். ஐயா இங்கேயே எங்கோ உலாவுகிறார். பாடத்தைக் கேட்கிறார். படிப்பதைக் கவனமாகப் பார்க்கிறார். ஐயாவிற்கு இப்போது சந்தோசமாக இருக்கலாம். பனையுடன் தேய்ந்தாற்போல காவோலை ஒன்று விழுகிற சத்தம் கேட்கிறது. பக்கங்கள் புரள்கின்றன கடைசிப் பந்தியை வாசிக்கிறான்.

"..மிட்டாய் கொடுத்துச் சிறுவனை ஆற்றலாம் என்றெண்ணி மிட்டாய்க் கடைக்குக் கூட்டிச் சென்றான் அம்மனிதன். "எந்த மிட்டாய் உனக்கு வேணும் குழந்தாய்? தோடம்பழ மிட்டாய் வேணுமா?" என்று கேட்டான். சிறுவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு "அம்மா வேணும், அப்பா வேணும்" என்று மட்டும் விம்மினான்..."

பாலன் வாசித்து முடிக்கிறான். அச்சிறுவனைத் தானாக உணர்கிறான். பாவம் அவன்! தாயையும் தந்தையையும் இழந்து நிற்கிறான். ஒவ்வொரு முறையும் இதனை வாசிக்கிற போது வருகிற சோகம் பாலன் மேல் ஏறி அமர்ந்து அவனை அசைய முடியாமல் அமுக்குகிறது.

விளக்கு கூடுபத்துகிறது.

பாலன் சுற்றி வரப் பார்க்கிறான். தலைவாசலில் லாம்பு முற்றமெங்கும் மஞ்சள் வெளிச்சத்தை அது பரப்புகிறது. முன்னே நின்ற வேப்பமரம் முற்றத்தில் இருந்து இந்த வெளிச்சத்தை வாங்கியும் தன் பேய்க் குணத்துடன் கறுத்து இருண்டு பாலனை உறுமிப் பார்க்கிறது. அடுப்படிக்குள் இருந்து பட்பட்டென விறகு எரிகிற வெளிச்சம் பரவுகிறது. மற்றும்படி வீடு முழுவதும், வெளி எங்கணும் இருள் பரவிக் கிடக்கிறது.

சுவரில் கொளுவியிருந்த ஐயாவின் படத்தைப் பார்த்தான் பாலன். படத்தைக் காணவில்லை அல்லது இருளில் தெரியவில்லை.

ஏதோ அசைகிறதுபோல. வெள்ளை வேட்டி படபடத்து எட்டிப் போனாற்போல... கண்ணை விரித்துப் பார்த்தால்... ஐயா! வெள்ளை வேட்டி ! நெஞ்சில் திரண்டு சுருண்ட கறுப்பு மயிர். விபூதிக் குறி தீட்டி, சந்தனப் பொட்டிட்டு, அதன்மேல் குங்குமம் அப்பிய முகம். சுடலையில் பார்த்த அதே கறுத்த முகம். இல்லைப்போல - அம்மாள் கோயில் திருவிழாவில் பிரதட்டை பண்ணிக் களைத்து வந்த அதே முகம் போல.

பாலனுக்கு கை நடுங்குகிறது. கால்கள் விறைத்துப் போயிற்று. விளக்கு கூடு பத்துகிறது.

ஐயா சிரிக்கிறார். விகாரமாக ஒன்றும் இல்லை. அதே கனிவான உயிரை மிருதுவாகத் தடவுகின்ற சிரிப்பு...

ஐயா இந்த இருட்டுக்கை வந்திருக்கக்கூடாது. வந்தே இருக்கக்கூடாது!

திடீரென விளக்கு பிரகாசமாக எரிகிறது. கற்பூர வாசனை. ஐயாவைக் காணவில்லை.

பாலன் எழுந்து மெதுவாக, காலடிச் சத்தம் சற்றும் கேட்காமல், போய் அடுப்படிக்குள் அம்மாவுடன் ஒட்டிக்கொண்டான்.

இராச் சாப்பாட்டின் பின் கையில் மீன் மணக்க, சுருண்டு படுக்க பாலன் ஆயத்தமான போது, "கொண்ணன்மாரையும் காணேல்லை. எத்தினை மணிக்கு வாறாங்களோ? போய் படலையைக் கட்டிப் போட்டு வாமோனை" என்று அம்மா சொன்னார்.

பாலன் எழுந்து முற்றத்தில் இறங்கினான். பூரணை வந்து ஆறோ, ஏழாம் நாள் பிறை. தேய்கிற காலத்தில் இருந்தது. துயரம் படர்ந்த மஞ்சள் ஒளியை நிலவு உமிழ்ந்தது. வானமும் சரியாயில்லை. குழம்பிப் போய் இருந்தது. பஞ்சுத் துண்டுகளை ஒட்டினாற்போல மேகம் பரவிக் காணப்பட்டது. நட்சத்திரமோ மின்னாமல், ஒளி பாய்ச்சாமல் ஒற்றைக் கண்ணைச் சிமிட்டியபடி இருந்தது. காற்றில்லை, எந்தப் பனையும் ஆடவில்லை. ஆடாமல் அசையாமல் உறங்கிக் கொண்டிருந்தது அது. பனிதான் தன் நீரைச் சிந்தி அழுது கொண்டிருந்தது.ஒரு மரமும் அசையவில்லை, மேகங்களும் ஊரவில்லை. யாவும் மௌனம் காத்த இரவு! யாவும் உறங்கிக் கொண்டிருந்த பொழுது!

"ராசா..." மிருதுவாக ஐயாவின் குரல் கேட்டது. சரவண முத்தண்ணரின் வீட்டிலிருந்து கூப்பிட்டது போல, மரவள்ளித் தோட்டத்திலிருந்து அழைத்தது போல, மாட்டுக்கொட்டில் பக்கமிருந்து வந்து காதைத் தடவியது. தூரத்தில் வெள்ளைப் புள்ளி. சவமணம் காற்றில்லா வெளியில் மிதந்து வந்தது. ரொமி காலடியில் முனகிக் கிடந்தது.

"ராசா..." படலையடியில் கேட்கிறது குரல். வளவினுள் சரசரப்பு. சாம்பிராணி மணம். பிறகு அத்தர் மணம். ஐயாதான்!

பாலன் கொடுகும் குளிரில் வேர்க்கத் தொடங்கினான். படலைக்குப் பக்கத்தில் கிளுவை மரத்தடியில் நிற்கிறார். "ராசா.." கூப்பிடுகிறார். பாலனின் கால்கள் நகருகின்றன. கிளுவையில் மெலிதான காற்றின் அசைவு.

ஐயா கையைப் பிடிக்கிறார். பிடித்த கை பிடித்த மாதிரி இல்லை. தடவிக் கொடுத்தாற் போல அமைகிறது. தன் நெஞ்சுடன் கையைச் சேர்த்து வைத்து வருடுகிறார். நெஞ்சு மயிர் நெருப்பில் கருகிய மயிராக இல்லை. பஞ்சாக, மிருதுவாக, குளிர்மையாக.

"ராசா - எப்பிடி - இருக்கிறாய்? - அம்மா - எப்பிடி - இருக்கிறா - அண்ணைமார் - அக்கா - எப்பிடி - இருக்கினம்?" சொல்லுக்குச் சொல், வரிக்கு வரி இடைவெளி விட்டு வருகிற வார்த்தை!

மேகம் மெதுவாக ஊர்ந்தது. நட்சத்திரம் இரு கண்களாய் எரிந்தன. பனை அசைந்தது. மரங்கள் அசைந்தன. ரொமி வாலாட்டி துள்ளாட்டம் போட்டது. ஊளையிட்டு வாலாட்டியது. ஒன்றும் நித்திரை கொள்ளவில்லை. இரகசியம் கேட்க அசைவற்று மௌனித்து நித்திரை கொள்வது போல பாசாங்கு செய்தன. அவ்வளவு தான்!

பாலனிற்கு இப்போ பயம் போய்விட்டது. ஐயாவிற்கு என்ன பயம்? யாருடைய ஐயா இவர்? சூரன்போர் நடக்க, தோளில் ஏற்றி சூரனைக் காட்டின ஐயாதானே இவர்! மடியில் இருத்தி கச்சான் உடைத்துத் தந்தவர்தானே அப்ப! சைக்கிளில் பின் கரியரில் இருந்து போக, கால் சில்லுக்குள் ஆப்பிட்டு, தோல் பிய்ந்து, எலும்பு தெரிந்து இரத்தம் கசிய, உடனே தன் சாரத்தை துண்டாகக் கிழித்துக் கட்டி பக்கத்திலையிருந்த கணபதிப்பிள்ளை பரியாரிட்டை கொண்டு போய் மருந்து கட்டினவர்தானே இந்த ஐயா!

அம்மா முற்றத்தில் நின்று குரல் கொடுத்தார். "பாலன் என்ன செய்யிறாய்?"

நீ போ... நான் பிறகு வருவன்.." ஐயா போகச் சொன்னார். கையைப் பிடித்துத் தடவிக் கொடுத்தார்.

பாலன் படலை கட்டினான். வந்தான். ரொமி ஐயா போன திக்கைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA JEWELLERS & TEXTILES

உங்கள் மனம் போல் எங்கள் சேவையில் .....
அதி நவீன வேலைப்பாடுடனான தங்கநகைகள்
நங்கையர் விரும்பும் நவநாகரிக உடைகள்
மங்கையர்-ஆடவர்-சிறுவர்-சிறுமியர் அனைவருக்குமான உடுப்பு வகைகள்
பலதரப்பட்ட பரிசுப் பொருட்கள்

அனைத்தும் கிடைக்கும் ஒரே விற்பனை ஸ்தாபனம்
மறவாதீர்கள்




TEL : 02381/162732
FAX : 02381/162714

**WILHELM STR.28**
**59067 HAMM**
**GERMANY**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊளையிட்டது. நத்தை குரலெடுத்தது. ஆந்தை அலறியது. ஆட்காட்டிக் குருவி, நிலவின் வெளிச்சத்தில் கத்திப் போவது தெரிந்தது.

பாலன் அம்மாவின் போர்வைக்குள் குடங்கினான். பனியின் குளிர் தன் துயர அலையால் தளம்பித் தவித்துக் கொண்டிருந்தது.

ஐயா ஏன் வந்தார்? ஐயாவிற்கு எங்களை விட்டிட்டு இருக்கேலாது. நான் அழுதாலும் தாங்க மாட்டார். சிரித்தாலும் கண் மூடிச் சந்தோசப்பட்டுச் சிரிப்பார். ஐயா நாளையும் . . .

பாலன் படலை கட்டப் போகிற சந்தர்ப்பங்களில் ஐயா வந்தார். அதே மாதிரி வேட்டி, விபூதி, சந்தனம், குங்குமம். இப்போது தான் சுடலையிலிருந்து எழுந்து வருவதுபோல... நடக்கவில்லை... அசைகிறார். கிளுவை மரத்தடியின் காற்றுப் போல வந்து நிற்கிறார்.

பாலன் ஒரேயொரு இரகசியத்தையே இதுவரை காத்து வந்தான் நாக்கின் அடிக்குக்கூட அவ்விரகசியம் ஒருபோதும் வந்ததில்லை. ஐயாவை அவன் அநேகமாக ஒவ்வொரு நாளும் சந்திக்கிறான். அதுவே அது!

அம்மாள் கோயில் இலட்சார்ச்சனை நடக்கிறது. ஐயா ஒரு குலை இளநீர் கோயிலுக்குக் கொண்டு போய்க் கொடுக்கிறார். சவாரி றோட்டில் அவர் பாதம் பதிகிறது. றோட்டை மேவி பற்றைகள் படர்ந்திருக்கின்றன. எல்லிப் போலையின் காணி, இக்கிரானை வளவு, நெடுங்கண்ணித் தோட்டம், தஞ்சிட்டி முந்தல் தாண்டி ஐயா போகிறார். பாலன் ஐயாவின் மறுகை பிடித்துப் போகிறான்.

இடையில் பற்றைகள் நிறைந்த ஒரு வளவை ஐயா காட்டுகிறார். வளவின் ஒரு மூலையில் கிணறு வெட்டப்படுகிறது.

இதுதான் எங்கன்ரை காணி. இதுக்குள்ளைதான் வீடு கட்டப் போறம்.

அட, எங்கன்ரை காணி. எங்கன்ரை வீடு. எங்கன்ரை வளவு. எங்கன்ரை வாழ்வு!

லட்சார்ச்சனை முடிந்து, விபூதி சந்தனம் அப்பி, காதில் பூவைத்து, ஐயா தாம்பூலம் வாங்கி, சுண்டல் சர்க்கரைப் புக்கை, வாழைப்பழம் சாப்பிட்டு, . . .

எங்கன்ரை கிணறு, எங்கன்ரை வீடு, எங்கன்ரை வளவு . . . சர்க்கரைப் புக்கை போல அந்நினைவு இனித்தது.

இறுகின காணி. கல்லுத் தறை. கிணறு வெட்டுகிறார்கள். நிலத்தின் அடியில் பாறை விளைந்து கிடந்தது. வெடிக்கு மேல் வெடி வைத்துப் பிளந்து, பதினெட்டு முழத்தில் அரைப்பானையளவு ஆழத்தில் - நீர் கண்டு . . .

நீர் ஊற்றெடுத்த அன்று ஐயா செம்பில் சேர்த்துக் கொண்டு வந்து தீர்த்தம் என்று தருகிறார். இன்னொரு பிள்ளை பெற்றது மாதிரி அம்மாவின் முகம் விரிகிறது. கையில் வாங்கி வாயில் பருகி தலையில் தெளித்து ... "அம்மாளே நீதான் துணை . ." என்று அம்மா கையெடுத்துக் கும்பிடுகிறார்.

கல்லுத்தறைதான் என்றாலும் கல்லைக் கிண்டி, அப்புறமாக விளைகிற காணி.

ஐயா கேட்பார் : "ராசா உனக்கு எத்தனை அம்மா?" கேட்டபோது ஐயா தோட்டத்தில் உழுது கொண்டு நின்றார். மண்கட்டிகள் சிவந்து, புரண்டு, புரண்டு கொடுத்தன. ஐயாவின் பின்னாலேயே காகங்கள் புழுப் பொறுக்கிக் கொண்டும், புழுப் பொறுக்கக் காத்தும் நின்றன. பாலன் தேத் தண்ணி கொண்டு வந்தான். ஐயா கேட்டது பாலனுக்கு விளங்கவில்லை. ஐயா திரும்பக் கேட்டார். "ராசா உனக்கு எத்தனை அம்மா?" ஐயாவின் கேள்வி, உனக்கு எத்தனை பிள்ளைகள் என்று கேட்பது போல இருந்தது.

"ஐயா, எல்லாருக்கும் ஒரு அம்மா தானே? . . . "

ஐயா சிரித்தார். மஞ்சளாயிருக்கவில்லைப் பல்லு.

"எனக்கு மூண்டு அம்மா"

"எப்பிடி?"

"என்னைப் பெத்தவா, அம்மாள், இந்தத் தோட்டம் . . . "

பாலனுக்கு நன்றாகப் புரிந்தது அது.

வேலுப்பிள்ளையண்ணை ஆவணி, புரட்டாதி மாதங்களில் மாடு சாய்ச்சுக் கொண்டு வருவார். தோட்டத்துக்குள்தான் பட்டி அடைப்பது. முப்பது, நாப்பது மாடுகள். பகலில் சுடலைப் பக்கம், பத்தை

நாம்பிரான் கோயில் பக்கம் மேய்த்துக் கொண்டு திரிவது. பொழுதுபட தோட்டத்திற்குள் பட்டி அடைப்பது. வழியில் அதுகள் போடுகிற சாணகத்தை கடகத்தில் சேர்த்துக்கொண்டு வந்து தோட்டத்திற்குள் கொட்டுவது. மழை பெய்தால் மாடு வாலால் விசிறும். சேத்துத் தண்ணியும், ஊத்தைத் தண்ணியும் வாய்க்குள் வழியும்.

வேலுப்பிள்ளையண்ணை மண்ணை இரண்டு கைகளாலும் அள்ளிக் கொண்டு ஒருநாள் சொன்னார்: "டேய் பொடியா, இதை மண்ணெண்டா நீ நினைக்கறாய்? மண் இல்லையெடா, பொன்னெடா!"

பொன்னாய் விளைகிற பூமி. ஒரு நாளில், ஒரேயொரு நாளில் ஒரு விசுக்கு! மூன்று நான்கு மாதங்களில் அள்ளியெடுத்த விளைச்சல்! இரண்டு மூன்று நாட்களாகத் தோட்டத்தில் அறுத்து, ஆய்ந்து வளவை நிறைக்கிற விளைச்சல்!

இந்த மண்ணை விட்டு எப்படிப் போக முடியும்? மண்ணை மாத்திரமா? வீடு, அம்மாள் கோயில், மேலாக ஐயா, ஐயாவின் வரவு . . .

## 3

பாலனுக்கு பிறகு ஊகிக்க ஒன்றுமில்லாமல் போய்விட்டது. ஊர் பேர் தெரியாக் குழப்பங்கள் ஒருநாள் கிராமம் எங்கணும் நிறைந்தன. தோட்டத்தில் வாழைகள் சருகு பத்திப்போய்க் கிடந்தன. உறுமி உறுமிப் பறக்கிறது பிளேன். படபடவென செட்டை அடித்துப் பறக்கிறது ஹெலி. சின்னத்தம்பியண்ணை வைக்கிற கிணத்து வெடியா அது? ஐயா பொங்கலுக்கு வாங்கித் தருகிற சீனவெடிகளா அவைகள்?

ஐயா செத்துச் சவமாகி, எரிந்த சுடலைப் பக்கமிருந்து . . . அதுவென்ன அது?

ஒரு நாளில் ஊர் மாய்ந்து போகிற சத்தங்கள் . . . கந்தியாத்தை கத்துகிறா "வாறாங்கள்...வாறாங்கள்... கலட்டிப் பக்கத்தாலை வாறாங்கள்... காலையில் வெய்யில் எறித்தது தான். ஆனால் இப்போது ஊர் மப்பாகி, மந்தாரம் போட்டு இருண்டு கொண்டு போகிறது. கலட்டிப் பக்கமிருந்து திடும், திடும் என வெடிகள். . .

அந்தக் கணத்தில் ஐயாவை யோசிக்க முடியாமல் போயிற்று. அன்றைக்குத்தான். எல்லாம் அன்றைக்குத்தான்.

எல்லோரும் ஓடுகிற திசையில் எல்லோரும் ஓட, பெரியண்ணன் ஓடி, ஓடி, ஆடுகளையும் மாடுகளையும் அவிழ்த்து விட, அவையும் ஒரு பக்கம் ஓடி, ரொமியும் எல்லாப் பக்கமும் ஓடிக் குரைத்து நிற்க, அம்மாவும் ஓடி, பாலனும் ஓடி, பெரியண்ணன் சைக்கிளில் சாமான்கள் ஏத்தி ஓடி, எல்லோரோடும் சேர்ந்து எல்லோரும் ஓடி . . .

சொல்லவோ ஓட்டமாக ஓடிய இன்னொரு கதை?

சின்னண்ணன் எப்போதோ ஓடியிருந்தான். ஒருவரிற்கும் தெரியாமல் ஒருநாள் இரவோடிரவாக ஓடிவிட்டான்.

குத்தூசியில் பிலாப் பழுத்தலும் ஆலம் பழுத்தலும் அரசம் பழுத்தலும் குத்தி வந்து ஊட்டி, ஆசையாக, அருமையாக வளர்த்த கிடாய்க்குக் கூடச் சொல்லாமல் ஒருநாள் பின்னேரத்தில் ஓடிவிட்டான்.

ஓடியது தெரிந்த அன்றுதான் பாலன் ஐயாவிற்குச் சொன்னான். "ஐயா உங்களுக்கு ஒரு இரகசியம் சொல்லட்டே?பாலனின் கை ஐயாவின் கைக்குள் மிருதுவாக, மென்மையாக.

சொல்லப் போகிற விசயம் மென்மை யானது அல்ல. நெஞ்சை நோகச்செய்து விடும் அது. ஐயா அதை எப்படித் தாங்கு வார்?

இரவு முழுக்க சின்னண்ணனைக் காணவில்லை. "ராசன் இவன் நாதனைக் காணேல்லை... என்னெண்டு தெரியேல்லை. பாத்துக்கொண்டு வாவன். . "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா வீட்டை போயிருப்பான். வருவான் தானே?..."

"இப்பிடி மினைக்கெடமாட்டான். எனக் கெண்டால் நெஞ்சிடிக்குது... ஒருக்காப் பாத்திட்டு வாவன் அப்பன்..."

பார்த்திட்டு வந்த பெரியண்ணன் "ஓரிடமும் காணேல்லை... அக்கா வீட்டிலையும் இல்லை..." என்றான்.

"எங்கை போயிருப்பான்?..."

பெரியண்ணனுக்குத் தெரியுமோ? அம்மாவிற்கு அதுதான் சந்தேகம். அப்படித்தானோ? ...

பொங்கி வர முன்னம் ஐயாவைப்போல இடையில் பரிதவிக்க விட்டுவிட்டு ஓடிப் போனானோ சின்னண்ணன்?

அம்மாவிற்கு இரவிரவாக நித்திரை யில்லை. படலையில் தட்டுப்படுகிற சைக்கிள் சத்தத்தை அம்மா எதிர் பார்த்திருந்தார். அம்மா வேலிச் சரசரப் பிற்கு காது கொடுத்திருந்தார். கிணற்றில் வாளி விழுகிற சத்தத்திற்கு துலா அடி படுகிற சத்தத்திற்கு அம்மா முழித்தி ருந்தார். "மத்தியானமும் வடிவாய்ச் சாப்பி டேல்லை" என்று ஒரு துண்டு மீன் பொரி யலை அம்மா பொத்தியிருந்தார்.

விடிந்த பொழுது அம்மாவிற்கு கருக லாச்சு. பழஞ்சோறு சாப்பிட பாலனை அம்மா கூப்பிட்டபோது படலை அடிபடும் சத்தம் கேட்டது. அம்மா ஓடிச் சென்றார். ஒருவன் சின்னண்ணனின் சைக்கிளுடன் வந்து கிளுவை மரத்தில் சைக்கிளைச் சாத்தினான். "நாதன் தந்தவர்" என்று ஒரு வாக்கியம் கூறி, காத்திருந்த சைக்கிளில் ஏறிப் போனான்.

பெரியண்ணனுக்குத் தெரிந்ததும் அம்மா சந்தேகப்பட்டதும் அதுதானோ? ஐயாவிற்குப் பாலன் இரகசியம் சொன்னான். "ஐயா சின்னண்ணை வீட்டை விட்டுப் போட்டான்..." ஐயா இன்னும் மிருது வாகக் கையைத் தடவினார்.

"தெரியும் ராசா..." முதுகையும் தடவி னார்.

"அம்மா நல்லா அழுதவா..." சொல்கிற போது பாலன் விம்மினான்.

"அம்மா பாவம். எல்லோரும் பாவம் தானே?..." ஐயா பிறகு கதைக்கவில்லை. ஐயாவும் அழுதாரோ? வளர்பிறைக் காலம் அப்போது. நிலவு விருப்பமில்லாமல் வெளிச்சம் தந்தது. இருட்டில் ஐயாவின் கண்ணீர் பளபளக்கவில்லை. ஐயா தளர் ந்து தளர்ந்து தான் போனார் போல.

சின்னண்ணன் அப்படிச் செய்திருக்கக் கூடாது. ஒரு சொல்லு சொல்லியிருக் கலாம். அம்மா அழுகிறா. பின்னேரம் வந்து அக்கா அழுகிறா. ஐயா தளர்ந்து தளர்ந்து போகிறார். ஐயா இனி வருவாரோ தெரியாது.

இல்லை வந்தார். முன்னர் வருவது போல பிறகும் வந்தார். சின்னண்ணன் சுக மாக இருக்கிறான் என்று ஒருநாள் சொன்னார்.

"சின்னண்ணணை நீங்கள் பாத்தீங்களா ஐயா?..."

"ஓம் ராசா, அவன் நல்லா இருக்கிறான். .."

அம்மாவிற்கு எப்படிச் சொல்லலாம் இதை? அம்மா ஒவ்வொரு நாளும் அழுகி றார். கன பொடியங்களோ செத்தவங்கள்? என்று றோட்டில் கேட்கிறார். முகம் கறுத்திருக்க எங்கேயோ போகிறார். திரும்பி வருகிறார்.

மடத்தடியிலை செத்தவர்களின் படங் கள் போட்டிருக்கு. தொப்பி, மீசை. தொப்பி யில்லாமல் மீசையில்லாமல் வளைத்துக் கட்டிய இரட்டைப்பின்னல். படங்களில் எல்லோரினதும் முகங்களும் இருண்டு தானிருந்தன. கறுத்துக் கிடந்தன. சிரித்த படி ஒன்றையுமே காணவில்லை.

சின்னண்ணன் படத்தில் எப்படி இருப் பான்? தொப்பியும் அரும்புகிற மீசையும், வலது கன்னத்தில் மச்சமும் ...

சின்னண்ணன் அப்ப இனி இல்லைத் தானோ? ஊர் முழுக்க, பற்றைகள் வழிய சாரத்தோடை மாத்திரம் திரிகிற சின்ன ண்ணன் ... காரைப்பழமும், புல்லாந்திப் பழமும், அணிஞ்சில் பழமும், சூரைப் பழமும் , இலந்தைப் பழமும் பிடுங்கித் தருகிற சின்னண்ணன் ... முயலுக்குக் குறி பார்த்துச் சின்னண்ணன் கல்லெறிந்தான். "ஐயோ" என்றான் பாலன். முயல் நொண்டி நொண்டிப் பற்றைக்குள் ஓடியது. "வேண்டாம் சின்னண்ணை விடு பாவம்..." ஏலும் சின்னண்ணனால் ஏலும் அடுத்த எறியிலை முயலை மடக்குவான். சவாரிப் போட்டிக்கு பாலனையும் இழுத்துக் கொண்டு சின்னண்ணன் போவான். கால்கள் துறுதுறுக்கப் பார்ப்பான். குத்தூசியால் மாட்டின் குண்டிப் பக்கம் குத்துவதும், வாலை முறுக்குவதும், மாடுகள் உயர எழும்பிப் பாய்ந்தோட, "ஐயோ!" என்றி ருக்கும் பாலனுக்கு. "கூய், கூய்" என்று உற்சாகக் கூச்சல் போடுவான் சின் னண்ணன்.

உற்சாகக் கூச்சல் போடுகிற சின்ன ண்ணனின்வாய் அடைத்துப் போய்விட்டது என்று ஒரு நாள் அந்த விசயத்தை ஐயா சொன்னார். சொல்கிற போது குரல டைத்தது. அப்போது பக்கத்துப் பற்றைக் குள்ளிருந்து வந்த வாசனை பாம்பினது என்பதைப் பாலன் அறிவான். ரொமியும் முனகியது. "ராசா, இனிச் சின்ன ண்ணை யைக் காண ஏலாது... அவன் போயிட்டான் ..."

அன்றைக்குப் பனைகள் ஆடாமல் அசையாமல், தம் சகோதரனின் துயர் மிகுந்த சாவு குறித்த செய்தியைக் கேட்டன. ஒரு பனைம் ... என்று பெருமூச்சு விட்டது. அம்மாதான் பாவம் ... இன்னும் அழப் போகிறா ... இப்படிச் சொல்கிற போது ஐயாவிற்கு நெஞ்சை அடைத் திருக்க வேண்டும்.

அப்ப அவ்வளவு தானா? சின்னண்ணன் இனி இல்லையா? கண்ணிமைக்கிற நேரத்தில் பாய்ந்தோடுகிற முயலுக்குக் குறி பார்க்கிறவனின் குறி தப்பிவிட்டதா? ராசையம்மானின் சவாரி மாட்டிலும் பார்க்க எவ்வளவு விரைவாக ஓடிவிட்டான் சின்னண்ணன் !

அம்மா மிகவும்தான் தளர்ந்து போனார். நினைத்து நினைத்து ஒப்பாரி வைத்து அழுதார். அம்மா காற்றுக்குள் தன் ஒப்பா ரியை மூக்குச்சளியுடன் வீசினார். தன் துக்கத்தையும் காற்றுக்குள் எறிந்தார். சோளகமாக வீசுகிற காற்றோ அம்மாவிற்கு ஆறுதல் சொல்ல முடியாமல் நின்றது.

வீட்டில் அம்மாவின் அழுகைக்குக் காது கொடுக்க காற்றுடனும். ரொமியுடனும் பாலன்மாத்திரம் நின்றான். பாக்குவெட்டிப் பழம் பிடுங்கி வாய்க்குள் போட்டு பாலன் தனித்த ஒருவனாய்த் திரிந்தான். ஐயா சட்டம் போட்ட படத்திலிருந்து அம்மா அழுவதைப் பார்த்தார்.

பாலனுக்கு இரவு கனவுகள் குழம்பி வந்தன. இருண்ட கனவுகள். வெளிச்சமே வெளித்தெரியாத கனவுகள். கனவில் வந்த ஐயா ஒன்றும் கதைக்கவில்லை. கோடியில் ஆடு கத்தியது. சின்னண்ணன் திரும்பத் திரும்ப வந்தான். பற்றைக்குள் போய் புல்லாந்திப் பழம் பிடுங்கினான். காரைப் பழம் பிடுங்கவில்லை. ஆனால் காரைமுள் குத்தியது. சிரித்துத்தான் முள்ளை எடுத்தான். எடுத்தபோது இரத்தம் சொட்டியது. சிரித்தபடிதான் அதையும் துடைத்தான்...

## 4

இப்போது பாலன் அந்தப் பள்ளிக்கூ டத்தின் தாழ்வாரத்தில் ஒதுங்கி இருக்கிறான். அம்மாவும் பெரியண் ணனும் பக்கத்தில் தான். அக்கா குடும்பத்தைக் காணவில்லை. அவர்கள் எங்கு போனார்கள் என்பது தெரியாது. எங் கேயாவது ஓடி இருக்கலாம். அல்லது அவர்களும் சிதைந் தார்களோ என்பதை அறியோம்.

மதியம் இன்னமும் சாப்பாடு ஆக வில்லை. இப்படியேபட்டினி நிரந்தரமானதா என்பதையும் சொல்லத் தெரியவில்லை.

அக்கா, பிள்ளைகள், அத்தானைக் காணவில்லையென்று அம்மா அங்கலா ய்க்கிறார். அக்காவின் மகள் ராசாத்தி நிரம்ப அழகானவள். குறுகுறுவெனத் திரிபவள். ஐயாவின் சாடை. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் சிவப்பி அவளாலும் சிதற முடியுமா? பாலனுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் எங்கேயாகிலும் உயிருக்குப் பழுதில்லாமல் இருப்பார்களென பாலன் நம்புகிறான்.

வெய்யில் கொளுத்தி எறிக்கிறது. காற்றிற்குப் பாடசாலையின் தகரக் கூரை சடசடவென அடிக்கிறது. பலர் மூட்டை முடிச்சுகளுடன் பாடசாலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் அக்காவின் குடும்பமும் ஒன்றாக ருக்கு மென்றால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்.!

அதுவோ சிறிய பாடசாலை நூற்றுக் கணக்கானவர்களை எப்படித் தாங்குமோ தெரியாது. ஆனால் தாங்கியே ஆக வேண்டும்.

பாலனால் பட்டினி இருக்கேலாது என்பது அவன் அம்மாவிற்குத் தெரியும். இப் போது அம்மா பாலனையிட்டும் கவலைப் படலானார்.

பாலனின் கவலை வேறுவிதமானது. அவன் ஐயாவையிட்டுத் துக்கித்தான். அவரை ஊரில் தனியே விட்டிட்டு வந்திருக்கக்கூடாது. எங்களை நம்பி சுடலை யிலிருந்து அதே மணத்துடன் எழுந்து வந்தவர் என்று பலவாறாக யோசிக்க லானான். கதிரை வைத்து ஏறி ஐயாவின் படத்தை எடுத்துக்கொண்டு வந்தது நல்லதாகிப் போய்விட்டது என்று உள்ளூர மகிழ்ந்தான். பாலன் நெடுநேரம் அயர்ந்து போனான்.

பிறகு ஆழ யோசித்தான். ஐயா இரவைக்கு வரவேண்டும். அக்கா குடும்பம் எப்பிடி இருக்கிறார்கள் என்று ஐயாவிற்குத் தெரிந்திருக்கும். ஒரு வார்த்தை கூறுவார். வரவேண்டும். வருவாரா?

இவ்வளவு சனத்துக்குள்ளும் எப்படி வருவார்? கஷ்டம்தான். என்றாலும் அந்த மணம்போதும். மூத்திரம் பெய்வது போல அப்படியே பள்ளிக்கூடத்தின் பின் பக்கம் போகலாம். ஐயாவுடன் கதைக்கலாம். ஐயாவிற்குச் சொல்ல ஏராளமான சேதிகள் பாலனிடம் உண்டு. ஓடிவரப்பட்ட பாட்டைச் சொல்வான். ஐயாவை விட்டிட்டு வர முடியாமல் ரொமி முனகி முனகி நின்ற கதை சொல்வான். ஐயாவின் படம் காட்டிய பிறகே ரொமி வந்ததென்றும் சொல்வான். மேலாக அக்கா குடும்பத்தைப் பற்றிக் கேட்டான்.

வீட்டை, கிணற்றடியை, வளவை, சவாரி றோட்டை, பற்றைக்காட்டை, நெடுங் கண்ணித் தோட்டத்தை, தஞ்சிட்டி முந் தலை, ஐயாவைச் சந்திக்கிற கிளுவை மரத்தின் அருகில் உள்ள படலையை எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவந்த அப் பெருந்துயரைச் சொல்லி ஆறுதலுக்கு மடி தேடி அழுவான். சின்னண்ணன் பற்றி வேறு ஏதும் செய்தி உண்டா என்று கேட்பான்?

ஐயா கைகளைப் பொத்தி முதுகை மிருதுவாகத் தடவுவார்.

பாலனுக்கு பிறகு ஊகிப்பதற்கு ஒன்று மில்லாமல் போய்விட்டது. பேய்களுக்குப் பேய்களையே தெரியாத, கரிகரியாக இருட்டு அப்பிய அந்த ஆடிமாதத்தின் அமாவாசை இருள் பொழிகிற இனி ஓய்ந்து போகவேண்டிய சோளகம் வீசுகிற அன றைய இரவில் பாலன் அந்த சாம்பிராணி மணத்தையும் கலந்தாற் போல அத்தர் நாத்தத்தையும், அவற்றுடன் ஐயாவையும் எதிர்பார்த்தான். பிறகு கற்பூர வாசனை யையும்தான். ●

# பூக்களும் BULLETSம்

1.
நான் பூத்திருக்கிறேன்
என் துர்ப்பாக்கியம்
என் பார்வைக் கெட்டியவரை முட்களே
துர்ப்பாக்கியத்திலும் துர்ப்பாக்கியம்
நாமே உருவாக்கிய முட்கள்.

நம்மையே காவு கொள்ள
எங்காவது எட்டத்தே
அல்லது கிட்டத்தேயும் இருக்கலாம்
முட்கள் சிரித்து சிரித்து
என்னை உறுத்திக்கொண்டே இருக்கின்றன
மிகவும் நம்பிக்கை உள்ளவனாய்

என் கண்கள் முட்களின் கூரிய முனைகளை
எந்நேர சித்தத்திலும்
தேக்கியபடி

காற்று பலமாக வீசுகிறது
அவர்கட்கு சாதகமாக
என் இதழ்கள் படபடக்கின்றன
எந்நேரமும் இந்த மண்ணில் உதிரலாம்
முட்கள் இறைச்சிக் கேங்கிய நரியாய்
நான் என் மகரந்தங்களை
காப்பாற்றியபடி.

2.
பூக்களில் வாழ்ந்த கவிதைகள்
புதருக்குள் பதுங்கியிருக்கின்றன
எதுகை மோனையேன்
சந்தம் சலனம் போதும்
குண்டுகள் புதரையே பெயர்த்துவிடும்

ஒருவேளை அவை வரலாம்
புரட்சி மலர்ந்ததும்
அல்லது வெடித்ததும்
ஆயினும் அவர்கள் சொல்கிறார்கள்
கவிதை புரட்சி செய்யுமென்று

3.
கை துப்பாக்கி யேந்திய போது
கவிதைகள் கசம் கண்டன போலும்
தலைகள் குண்டுகளைத் தாங்கியபோது
குழலுள் நுழைந்தன கவிதைகள்

ம்... அவர்கள் சொல்கிறார்கள்
கவிதைகள் துப்பாக்கிகளில்தான்
வாழ்வதாக
துப்பாக்கிகள் அடிக்கடி
ரத்தம் கக்குகின்றன.
துப்பாக்கியையும் கவிதையையும்
யார் காப்பாற்றுவார்கள்.

பொறுக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தொலைத்த இரவுகள்

தயாநிதி

இரும்பு வலைப்பின்னல்
இடறுகின்ற தெருக்களில்
இலக்கின்றி அலையும்
இலங்கைச் சருகுநான்.

முற்றத்து மணற்பரப்பும்
இரவல் தாலாட்டில்
இரவு கரைந்த
நாட்களும் இனி
எனக்கில்லை.

இரவில் - அருந்ததி
என்னை
ஆசீர்வதிக்கிறாள்
எனதினிய இரவுகளை
மீட்டுத்தர இயலாதவளாய்.

வானத்துப்பரப்பில்
வெள்ளி நிறைத்த
வேடிக்கை பார்த்து
தொலைதூரத்து
மகரந்தப்பொதி
சுமந்து வரும்
சுகந்தம் நுகரும்
சுகம் - இனி எனக்கில்லவேயில்லை.

நான் தவழ்ந்த
தாழ்வாரம்
தடமிழந்து போனதங்கே
என்னது என்று
எதுவுமேயில்லை.
தென்றலுக்கு
கையசைக்கும்
தென்னங்கீற்றுக்கூட
இனி எனக்குச் சொந்தமில்லை.

எல்லாம் இழந்து
எஞ்சியிருக்கும்
எனக்கு,
படைத்தற்கொள்கைமீது
பற்றற்றபோதும் ❑

# புதிய பார்வை

தாடகை

முகத்துக்கு மேலே
இழுத்துவிடப்பட்ட
சேலைத் தலைப்பு.
நாணி, ஒடுக்கமாய்,
நிற்கும்
அவள் தான்
அவனுடைய மணப்பெண்.

அவனுடைய மணப்பெண்
அவனுடைய மனைவி
அவனுடைய . . .
அவனுக்கானதாய். . .
வெட்டி, அழகுபடுத்தி, தைத்த
அவனுடைய மணப்பெண்.

அவள் கழுத்தைச் சுற்றி
அவனுடைய தாலி.
அவள் மணிக்கட்டுகளில்
அவனுடைய வளையல்கள்.
அவள் பெயரோடு
அவனுடைய குடும்பப் பெயர்.

அவள் பெயர் ஊர்மிளா
அவன் பெயர் ராமன்.
அவர்கள் கண்டுபிடித்தவுடன்
ஊர்மிளா சீதாவாய் சுருங்கியது.

ராமனுக்காக சீதா
ராமன் லட்சுமணனாகவில்லை.
அவர்களைப் பொறுத்தவரை
ஊர்மிளா என்பது
ஒரு பெயர் மட்டும்தானே!

அந்த மணப்பெண்ணின் முகத்தில்
தன் மகளின் சுவடுகளை -
அவள் தாய்,
வீணாகத் தேடிக்கொண்டிருந்தாள் ❑.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிடமும் புதிய நூற்றாண்டும்

தி. உமாகாந்தன்

யுத்தம் நம்மவரில் பல்லாயிரக் கணக்கானோரை புலம் பெயர வைத்தது. தேசத்துக்குள் மட்டுமல்ல தேசங்கள் தோறும் சிதறி வாழ வைத்தது. இந்தப் புலம்பெயர்தல், புலம்பெயர்ந்தோருக்கு வாழ்வைத் தந்ததா..? அல்லது வலியைத் தந்ததா என்ற கேள்விக்கான பதில் வாழ்வைத் தந்தது போலத் தோற்றமளித்தாலும் உண்மையிலேயே வலியைத்தான் தந்து கொண்டிருக்கிறது. புலம்பெயர்ந்த வாழ்வு தொடர்பான நமது பார்வைகள், அணுகுமுறைகள் மாறவில்லையென்றால் தொடர்ந்தும் வலியைத்தான் தரப்போகிறது.

ஈழத்தமிழ் மக்களின் புலம்பெயர் வாழ்வின் ஆரம்ப கட்டமல்ல இது. பல நாடுகளில் பல்லாயிரக் கணக்கான எம்மவர்கள் தமது காலடிகளை இறுக்கமாகவே ஊன்றிவிட்ட காலகட்டமிது. "நாட்டுப்பிரச்சனை கெதியிலை முடிஞ்சுவிடும். ஒரு ரெண்டு, மூண்டு வருஷத்துக்கு உழைக்கிறதை உழைச்சுக்கொண்டு ஊரிலை போய் ஏதாவது முயற்சியைச் செய்வோம்" என்ற நேற்றைய கதைகள் அடிபட்டுப்போய் "நாட்டுப்பிரச்சனை எங்கை முடியப் போகுது. அப்பிடித்தான் முடிஞ்சாலும் எங்கடை பிள்ளையள் இங்கே படிக்கத் தொடங்கிவிட்டுதுகள். இதுகளை அங்கே கொண்டுபோய் என்ன செய்யிறது. பிள்ளையள் அங்கே இந்தப் பாஷையிலை படிக்கமுடியுமா? அல்லது இங்கை பிறந்து வளர்ந்த இந்தப் பிள்ளையளுக்கு அங்கத்தே வெய்யில்தான் ஒத்துக்கொள்ளுமா" என்ற இன்றைய புதுக்கதை வந்து விட்டது.

நல்லது! அங்குமின்றி, இங்குமின்றி, ஆற்றிலொரு கால் சேற்றிலொரு கால் என இடை நிலையில் குழம்பும் வாழ்வு நிலையைவிட ஒரு நிலைக்கு வாழ்க்கையைக் கொண்டு வருவது நல்லது தான். ஆனால் எதிர்காலம் குறித்த, வாழும் புகலிடங்கள் குறித்த தெளிவில்லாத பார்வைதான் இன்று புகலிடத்தில் நம்மவரின் வாழ்க்கையை மேலும் மேலும் பிரச்சனைகளுக்குள்ளாக்குகிறது. இன்று புகலிடத்தில் தொடர் சங்கிலியாய் நம்மவரைச் சுற்றிப் பல பிரச்சனைகள். அவற்றில் இன்று முதன்மையானதாக எழுந்து நிற்பது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் சீர் குலைந்து வரும் குடும்ப உறவுகள் அல்லது இருதரப்பினரிடையேயும் அதிகரித்துவரும் உறவு இடைவெளியாகும். இன்று புகலிடத்தில் இருக்கும் பெரும்பாலான எமது பிள்ளைகள் இங்கு பிறந்து வளர்ந்து படித்து வருபவர்கள் அல்லது சிறுவயதிலேயே இங்கு வந்து வளர்ந்து படித்து வருபவர்களாகும். இவர்களில் பெரும்பாலானோருக்கு நமதுதேச வாழ்க்கைமுறை தெரியாது. இன்னுமொரு குறிப்பிட்ட பங்கினர்க்கு தமிழ்மொழியே சரியாகத் தெரியாது. ஆனால் இவர்கள்தான் நமது எதிர்கால சந்ததி. மண்ணை இழந்து மக்களை இழந்து நிற்கும் எம்மிடம் இன்று இருக்கும் ஒரேயொரு நிலையான சொத்துக்கள். இவர்களைப் புரிந்துகொள்ள முடியாமல் எமது முடிவுகளை இவர்களிடத்தில் திணிப்பதாலோ அல்லது இவர்களோடு முரண்படுவதனாலேயோ அல்லது "எல்லாமே முடிந்துவிட்டது எல்லாமே கைமீறிப் போய் விட்டது" என்று ஒப்பாரி வைப்பதிலோ அர்த்தமேயில்லை. பிரச்சனைக்கான காரணங்களை ஆராயவேண்டும்.

இந்தப் பிரச்சனைக்கு மாத்திரமல்ல. இன்று புகலிடத்தில் நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளுக்கும் நாமே காரணமாகவுள்ளோம். புகலிடத்தில் நாம் வாழுகின்ற நாடுகளின் மொழிகளோடு பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள முயலாமை. வாழுகின்ற நாடுகளின் மக்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளவோ அன்றி அவர்களுடன் நட்புறவு கொள்ளவோ முயலாமை. உலகில் நமது மொழிதான் உயர்ந்தது, நமது கலாச்சாரம்தான் சிறந்தது, நாம்தான் திறமையானவர்கள் என மற்றவர்களை மட்டம் தட்டும் வறட்டு மனப்பான்மை. அறிதலில் ஆர்வமற்ற அசமந்தப்போக்கு. பொருள்மட்டும் இருந்தால் போதும் எதிர்காலத்தை நாம்எப்படியும் வென்றுவிடலாம் என்ற மூடத்தனமான சிந்தனை. இப்படிக் காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

புகலிட மொழிகளோடு பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளாத தன் காரணமாக புகலிடத்தில் எமக்கு ஏற்படும் இழப்புக்கள் ஏராளம். உன்னதமான வேற்றுமொழி எழுத்துக்கள், நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் கலைவடிவங்கள் நமக்கருகே இருந்தும் அவற்றை ரசிக்கும் வாய்ப்புக்களை இழக்கிறோம். வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்பங்களை, நம்மைச் சுற்றி நடைபெறும் அரசியல் மாற்றங்களை அறியும் வாய்ப்புக்களை இழக்கிறோம். மொழியறிவு இல்லாததால் சுரண்டலுக்குப் பலியாகி தொடர்ந்து குறிப்பிட்ட வேலைகளுக்குள்ளேயே உழன்று மனவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகிறோம். பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள், அவர்களது எதிர்காலம் எப்படி வடிவமைக்கப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்பவை குறித்த அறிவிழந்தவர்களாகிறோம். சிறுவகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளுக்குக்கூட கல்வியில் உதவி செய்ய முடியாத கையாலாகாத நிலை நமக்கு. புகலிட மொழியறிவற்ற பெற்றோரை தமது ஆசிரியர்களுக்கோ நண்பர்களுக்கோ அறிமுகப்படுத்த முடியாத தவிப்புநிலை பிள்ளைகளுக்கு. இங்குதான் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையிலான இடைவெளி ஆரம்பிக்கிறது. நேற்றைய வாழ்வை ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்களுக்கு அப்பால் இன்று புகலிடத்தில் நிலைநாட்ட விரும்பும் பெற்றோருக்கும், இன்றைய வாழ்வை மட்டுமே அறிந்து நாளைய கனவில் மிதக்கும் அடுத்த சந்ததிக்குமிடையிலான முரண்பாடு வெடிக்கிறது. போர் நம்மை புகலிடத்திற்கு அனுப்பியது. ஆனால் புகலிடத்திலோ புரிந்துகொள்ளாமை ஒரு பெரும் மௌனப்போராக குளிர்யுத்தமாக வெடிக்கிறது.

"நாங்கள் அகதிகள். நாங்கள் இங்கு வந்து பட்ட கஷ்டங்கள் தெரியுமா? இந்தக் கஷ்டத்துக்குள்ள பாஷையை எங்க படிக்கிறது?" என்று பழங்கதை பேசிக்கொண்டிருப்பதில் பயன் எதுவுமேயில்லை.. "என்ன இருந்தாலும் எங்கடை மொழியைப் பண்பாட்டை விட்டுவிட முடியுமா?" என வீரவசனம் பேசுவதில் அர்த்தம் எதுவுமே இல்லை. இன்னுமொரு மொழியை அறிந்து கொள்வதால் நமது மொழி அழியப் போவதில்லை. இன்னுமொரு பண்பாட்டை, வாழ்வியல் முறையைத் தெரிந்து கொள்வதால் நாம் நமது பண்பாட்டைக் கைவிடப் போவதில்லை. நாம் புதிய நூற்றாண்டுக்குள் நுழையப்போகும் ஒரு உன்னதமான காலகட்டத்தில் இருக்கிறோம். தேடுதலும், அறிதலும், புரிதலும் இல்லையென்றால் விரைந்து ஓடும் இந்தப் புகலிடத்தில் நாம் ஒரு நூற்றாண்டு பின் தள்ளப்பட்டு விடுவோம்.

இன்று எதுவுமே அறிய முடியாததோ பரிச்சயம் செய்து கொள்ள முடியாததோ, அல்லது சாதிக்க முடியாததோ அல்ல. நாம் வாழும் புகலிடத்தில் அறிதலுக்கும், பரிச்சயம் செய்து கொள்வதற்கும் சாதிப்பதற்குமான சாதனங்கள் நிறைய உள்ளன. இந்த வசதிகள் எதுவுமில்லாமலே இலக்கியம் நேற்றைய தமிழ் அறிஞர்களின் கையில் இருந்து தேடுதல் செய்ய முற்பட்ட சாதாரண தமிழ் இளைஞர்களின் கைகளுக்கு மாற்றப்படவில்லையா? போராட்டம் பல இழப்புக்களைத் தந்தாலும் போராட்டத்திலும் மலரும் நினைவுகள் உள்ளன. அற்புதமான போர்க்கால இலக்கியங்கள் படைக்கப்பட்டன. துப்பாக்கி மாத்திரமன்றி பேனாவும் போராட்டத்தில் பாத்திரமேற்றது. இறுக்கமான இராணுவக் காலடிகளின் கீழும் கூட இளைஞர்கள் கூட்டம் இரகசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் சர்வதேச விடயங்களைத் தேடியது. அறிந்தது. விவாதித்தது. இதில் அரசியல் இருந்தது. இலக்கியம் இருந்தது. புரட்சி இருந்தது. யாழ்ப்பாணத்தின் வழமையான கல்வி எல்லைகளைக் கடந்து தேடுதல் விஸ்தீரணப்படுத்தப்பட்டது. தெரியாத தேசங்களும், தெரிந்திராத பிரச்சனைகளும் தேடல் புலன்களுக்குள் அகப்பட்டன. நமக்கும் இதற்கும் சம்பந்தமில்லையென்ற எண்ணப்பாடு தொலைந்து உலகம் முழுவதற்கும் எங்களிற்கும் சம்பந்தமிருக்கிறது என்ற உலகநேயம் வளர்ந்தது. பாலஸ்தீனத்தையும் தென்னாபிரிக்காவையும் நிக்கரகுவாவையும் புரிந்து கொண்டதால் அவர்களின் துயரங்களில் நாம் கலந்துகொண்டோம். அவர்களுடன் கையிணைத்தோம்.

ஆனால் இன்று புகலிடத்தில் என்ன நடக்கிறது? எத்தனை பேர் தேடுகின்றனர்? எத்தனை பேருக்கு அறிதலில் ஆர்வம்? நாம் வாழும் இந்த நூற்றாண்டு பல அதிசயங்களைப் பிரசவித்தது. எமக்கு முன்னைய தலைமுறையில் பேர்லின் சுவர் உடையும் என்று சொல்லியிருந்தால்..... ஜேர்மனி ஒன்றாகும் என்று சொல்லியிருந்தால்..... சோவியத் யூனியன் பல கூறுகளாகப் பிளவுபடும் என்று சொல்லியிருந்தால்.......பைத்தியம் எனப் பட்டம் சூட்டியிருப்பார்கள். கல்விக்கூடங்களிலோ கடற்கரைகளிலோ நகரங்களிலோ கறுப்பு இனத்தவரின் காலடி படக்கூடாது என நிறவாதம் ஆட்சி செய்த தென்னாபிரிக்காவில் ஒரு கறுப்பு மனிதன் நெல்சன் மண்டலா ஆட்சித் தலைவர் ஆவார் என்று நேற்று நாம் சொல்லியிருந்தால் நாம் பரிகசிக்கப்பட்டிருப்போம். ஹொங் ஹொங் கையளிப்பு. செவ்வாய்க் கிரகத்தில் சாதனை படைக்கும் PATH FINDER. இவையும் இந்த நூற்றாண்டின் அதிசயங்கள் தானே. இவை மட்டுமல்ல பொஸ்னியாவின் இனச் சுத்திகரிப்பு (Ethnic cleansing) புறூண்டி, ருவாண்டா, ஸெயிர் போன்ற நாடுகளில் நடந்த இரத்தத்தை உறைய வைக்கும் இனப்படுகொலை போன்றவையும் இந்த நூற்றாண்டில் தானே நடந்தவை. ஆனால் அதிசயங்களாக இல்லை அவலங்களாக. இத்தனை அரசியல் மாற்றங்களும், அதிசயங்களும், அவலங்களும் இந்த நூற்றாண்டில் நம்மைச் சுற்றி நடந்துள்ளன. அதுவும் இவை அனைத்துமே நமது அறிவுப் புலன்களுக்கு சர்வதேச செய்தித் தொடர்புச் சாதனங்களால் எடுத்துத் தரப்பட்டுள்ளன. ஆனால் புகலிடத்தில் இவற்றில் ஆர்வம் கொண்டோர் எத்தனை பேர். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டு புகலிடத்தில் தொடர்ந்தும் தென்னிந்திய பொழுதுபோக்குச் சாதனங்களிலேயே மயங்கிக் கிடப்பது எமது எதிர்காலத்தை இருட்டாக்கிவிடும். அடுத்த நூற்றாண்டினுள் நாம் நுழைவது என்பது அர்த்தமற்ற பொழுதுபோக்குகளுடன் அல்ல.

நாம் இறுகப்பூட்டி வைத்திருக்கும் கதவுகள் யன்னல்களைத் திறந்து வைத்து புதியகாற்றை வீட்டுக்குள் பரவ விடவேண்டும். கண்களைத் திறந்து கைகளை விரித்து உலகை அன்புடன் வரவேற்க வேண்டும். நம்மைச் சுற்றி புகலிடத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிய முயலவேண்டும். அறிந்தவற்றை குடும்பத்தினருடன் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டும். உலகில் ஏற்பட்டுவரும் புதிய அரசியல் மாற்றங்கள், மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைகள், வளர்ந்துவரும் கணனியியல் தொழில் நுட்பம், உலகத்தை ஒரு குடைக்குக்கீழ் கொண்டுவந்துவிட்ட Internet எனப்படும் சர்வதேச தகவல் வலைப்பின்னல், சோவியத்யூனியனின் உடைவுக்குப்பின்னர் உலகஅரங்கில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள், போர்மீதும் வன்முறைக் கலாச்சாரத்தின்மீதும் வெறுப்படையும் உலகமக்கள், சுற்றுப்புறச் சூழலைப் பேணுதல், நல்ல நாவல்கள், நல்ல திரைப்படங்கள், நல்ல இசை இப்படி அறிய விவாதிக்க ஏராளமான விஷயங்கள் உள்ளன. காலத்தின் கட்டாயம் இன்று கட்டுப்பெட்டிகளாயிருந்த தென்னிந்திய சஞ்சிகைகளைக்கூட Internet எனப்படும் சர்வதேச தொடர்வலைக்குள் கொண்டுவந்துவிட்டன. ஆனால் புகலிடத்தில் Internet உம் கணனியும் எத்தனை பேருக்குப் பரிச்சயம். இவை நேற்றைய அதிசயங்களாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய அன்றாட வாழ்க்கையின் அவசியங்கள். இவற்றை அறிதலின் மூலம் எமது அறிதலின் எல்லைகளை அதிகரிக்கலாம். தடுமாறும் பிள்ளைகளின் கவனங்களை நேர்செய்யலாம்.

அடுத்த நூற்றாண்டுக்குப் போகும்போது அடுத்த தலைமுறையையும் நாம் அணைத்துச் செல்லவேண்டும். இல்லையேல் அடுத்த தலைமுறை நம்மை இழுத்துச் செல்லும் நிலைதான் ஏற்படும். வெறுமனே குண்டுச்சட்டிக்குள் குதிரைஓட்டுவதிலும், பழங்கதை பேசிக்கொண்டிருப்பதிலும் பயன் எதுவுமேயில்லை. உலகம் குறித்த எதிர்காலம்குறித்த விழிப்புணர்வு புகலிடத்தில் நம்மவரிடையே ஏற்படவேண்டும் என்பதில் புகலிடத்து சங்கங்களோ சஞ்சிகைகளோ ஆர்வம் காட்டவில்லை. புகலிடத்து இலக்கியமும் கூட பெரும்பாலும் விரக்தியையும், சோகத்தையும் தான் சுமந்து வருகிறது. எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஊட்ட அடுத்த தலைமுறையை கைகோர்த்து அழைத்துச் செல்ல இங்கு யாருமே தயாராக இல்லை. புகலிடத்தில் எமது மக்கள் நேற்றைய வரட்டுத்தனம் நிறைந்த வாழ்வுநிலையில் இருந்தால்தான் இன்றைய எமது இருப்புக் காப்பாற்றப்படும் என்பதுதான் பல தரப்பினரது அபிலாசையாக இருக்கிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, கணனியியல்துறையின் விஸ்தரிப்பு, சர்வதேச கலை இலக்கியப் படைப்புக்கள் இவையெவையுமே வருத்தத்துக்குரியவகையில் புகலிடத்தில் நம்மில் பெரும்பாலானோரை அண்மிக்கவில்லை அல்லது நம்மவரில் பெரும்பாலானோர் இவற்றுடன் பரிச்சயம் செய்துகொள்ள விரும்பவில்லை. அற்புதமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தென்னிந்திய வீடியோக்கள் மூடிமறைத்து விடுகின்றன. உயர்ந்த வெளிநாட்டு இலக்கியங்கள் புகலிடத்தில் மலிந்த தென்னிந்திய இலக்கியங்களால் மறக்கடிக்கப்படுகின்றன. இங்கு Grinder கள் மூலைக்குப்போய் அம்மிகள்தான் அரசோச்சுகின்றன. புகலிடத்தில் நம்மைச்சுற்றி நடக்கும் ஊர்வலங்கள், போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், வேண்டுகோள்கள், அரசியல் மாற்றங்கள் அனைத்து குறித்தும் நாம் சம்பந்தமற்றவர்களாய், விழி-செவிப்புலன்கள் இல்லாதோராய்த்தான் நடந்து கொள்கிறோம். ஆனால் புகலிடத்தில் நாம் இப்படியே நெடுங்காலம் இருந்துவிடமுடியாது. நேற்று இப்படி இருந்ததால்தான் இன்று பிரச்சனைகள் வீட்டுக்கு வீடு வெவ்வேறு வடிவங்களில் விசுவரூபம் எடுத்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

புகலிடத்தில் பிறந்தோ அல்லது வளர்ந்தோ படித்துவரும் எமது எதிர்கால சந்ததியின் திறமைகள் தட்டிக் கொடுக்கப்படவேண்டும். அவர்களது ஆர்வங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அந்த திசையில் அவர்கள் முன்னேற வழிவகுக்கப்படவேண்டும். அவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர அரங்கங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும். நமது இலக்கியத்தில் வெளிநாட்டு இலக்கியங்கள் நிறைய மொழிபெயர்க்கப்படவேண்டும். அதுபோல நமது இலக்கியமும் புகலிடமொழிகளில் கொண்டு வரப்படவேண்டும். சோகமும், விரக்தியும் புரிந்துணர்வில்லாமையும், நட்பின்மையும், அடுத்த சந்ததியின் வாழ்வுப் பாதையை எப்போதுமே தடுமாற வைக்கும். நாளை குறித்த நம்பிக்கையை நாமும், நமது இலக்கியமும், கலைவடிவங்களும் அவர்களது மனங்களிலே இறுக்கமாகப் பதிக்கவேண்டும். உலகஅரசியல், சர்வதேச இலக்கியங்கள், விளையாட்டுலகம், சுற்றுப்புறச்சூழல் பேணுகை, மனிதநேயம், எதிர்காலம் குறித்த நம்பிக்கை போன்றவற்றை அவர்கள் பெறச் செய்யவேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் முன்னோடியாக நாம் எம்மை மாற்றிக் கொள்ளவேண்டும். தேடுதலையும், அறிதலையும், புரிதலையும், நேசித்தலையும் நாம் மறுப்பின், காலஓட்டத்தின் கடுமையான தண்டனையிலிருந்து நாம் தப்பமுடியாது. அடுத்த நூற்றாண்டு என்பது நமக்கு சோதனை அல்ல, நாம் சாதிக்கவே என்ற நம்பிக்கையுடன் முன்செல்வோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயசேனன்

# மரணித்த மனிதனின் மரணங்கள்

மானுடன் சிந்தனையை உயர்த்திப் பிடித்து வானத்தை மறைத்துக் கொள்கின்றான். நேற்றுப் பிறந்த குஞ்சுக்காக்கைகள் மட்டும் அவற்றை ஊடுருவிச்செல்கின்றன. தீயைக் குடித்தவர்களும் நூர்ந்து போனார்கள்.வான்எல்லைகள் மட்டும் நரைப்பதில்லை. மரணத்தைக் காதலித்து நூர்வதில்லை. மரணம்! வாழ்நிலை சுரந்த வடிவற்ற சன்னதம். கூடுவிட்டு விலகிப்போய் ஓர் வேம்பின் நிழலில் செத்திருந்து இளைப்பாற ஏவாத வாழ்க்கை.என்னுள் பிளக்காத செந்நீரை எண்ணி வதைக்கின்ற சிந்தனைகள்.

இமைக்காது கண்கள் நிலைத்திருக்க ஏக்கம்.

எண்ணி எண்ணி கணத்துக்குள் வானுயரும் வெறுப்பு.

எகிறிக் குதித்து விண்தொட்டு ஒட்டுமொத்த உலகை அளந்து ஆங்காங்கே புல்மேய்ந்து செமிக்காது சற்றுப் பனையோரம் பதுங்கி விக்கி குடல் விழுங்கிச் சிதைந்து என்னைக் காற்றுக்குள் தூவி மேலும் கனாக்களைக் கொண்டு வந்து போதையூட்டி ஒழுங்கு ஒழுங்கு என்று கட்டமைப்பைப் போதித்து என் கட்டுக்குள் வைக்க, விரிந்த வழியெங்கும் ஈட்டிகள் விழுந்தது. முயற்சித்த வாழ்க்கை ஒரு கணம் ஒன்றுமில்லாது நின்று பின் பிதற்றலோடு ஆரம்பித்த பின்தான் மரணம் மகத்துவமானது.

மரணம்!

அதுதான் என் ஆன்மீகம்.

உடலொட்டா செயற்கை உறவுகளை விட்ட சுத்த நிர்வாண சுகத்தைப் போதிக்கும் மதம்.

நின்றுகொண்டே படுக்கவும் இருந்துகொண்டே பறக்கவும் கல்வி ஞான பழைய மூளையைப் பாதித்து அழித்து ஒவ்வோர் அணுக்களின் அசைவைக் கண்டு ரசிக்கவும் மொழியற்ற மற்றும் பேதைக் கவிதைச் சொல்லற்ற சொர்க்கம்.

பிறந்தெழுந்து உயிர்ப்புடைய புறத்தை கண்ணுக்குத் தெரிந்த கைகளுக்கெல்லாம் பரிசளித்து வற்றிப்போய் ஒருநாள் நின்று மரணித்து மௌனமாகிப் போனோம்.

அறியாமை என் வீடென்றோதி என் ஞானச் சிறையுடைத்து பயன்பெற்ற நண்பர்களே, என் நாசி தொலைத்துவிட்டது முனகல்.

சிரிப்பு என் நெஞ்ச வேர் அறியாச் சாதகமாய்ப் போச்சு. பாசப்பிறப்பறுந்து போச்சு.

பட்டும் படாமலும் என்மேல் தொடாமலும் என்னை உறிஞ்சிய உற்றார் நீர்.

சிவப்பான நம் பூமிக்கு மாலை சூட்டி கல்லறை என்று பொறித்துச் சுடலை வாழ்ந்தோம்.

சுற்றி வர வீடுகள். வீடுகளில் மரணித்த மனிதர்கள். வந்து கதை பேசி உறவாடி என் உயிர்ப்பைப் பரிகசிக்கும் விடாக்கண்டர்கள். நான் ஒருபோது கூடிக்குதித்தேன் கும்மாளமிட்டு உயிர்ப்பைத் தெறித்து இப்போது அவர்களோடில்லை.

இந்த மரண மௌனத்தில் எந்தப் புதிய சங்கற்பங்களாயினும் எனக்கு சோகத்தையே தெரிவு செய்கின்றன. மறுதலித்து நான் மரணத்தைத் தெரிவு செய்கின்றேன். நான் மீண்டும் ஒரு யுத்தத்துக்குள் போயிருந்துகொண்டு பழையதைக் கண்ணிமைக்காமல் பார்த்தபடி சிறை செய்கிறேன்.

வருபவர்கள் வந்து எனை உற்றுக் கவனிக்க குனிந்தபடி நானும் புலன்களைத் திறந்து அவர்களை நிதானிக்கின்றேன் அவர்களுக்கும் மௌனம் கொடுத்து.

என் சுவர்களை அளந்து தண்டு தளபாடங்களை அளந்து நிலம் நோக்கி கால்களிற் பாயும் கண்களுடன் பலரும் வந்து வந்து ஒருவரை ஒருவர் பிரதிபலித்தனர்.

நான் போகப்போகிறேன் எல்லாரும் எனக்கு முன்னால் நின்று பற்கள் காட்டினர். சுற்றிவர எங்கும்மண். ஊரார் பிதற்றுவர் மண்டைக்குள். அவர்கள் கதைகளிற் கவனமெடுக்க முடியாது. "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்று இடைக்கிடை வந்து அம்மா காதில் ஓதிப் போவா. எதை எதை இணைக்குதென்று தெரியாது மரணம் என்ன செய்யும்? உயிர்விழுங்கி விம்மியவன் இவன் என் காதல் மரணமே தவித்திருக்கும் தேகத்தை ஆற்று.

○○○

அளவாக அழுது நாளைக்கும் அழச் சேமிக்கும் கஸ்தூரி ஒருநாள் என் கரத்தை இதயத்தில் அழுத்தி கண்களைக் குறுக்கி தன்னை நட்பிக்கச் சொன்னாள். அடிவயிறு கலங்க கைகளை உருவிக் கொண்டேன். நான் மரணித்தது புரிய கபாலம் சிதறிப்போய் கஸ்தூரி கைகளால் தலைவைத்தால், துடிப்பை ரசித்துவிட்டு நாளைக்கு வரவென்று வந்துவிட்டேன். சொச்சத்தை அவள் வெறுமனே சிந்தினாள்.

என் நேற்றுவரை வரலாறு களங்கமின்மை என்றும் சமூக அங்கத்துவம் இன்னும் வாய்களில் விழுந்து கேள்விகள் ஆகாததும் அவளது பழைய பதிவுகள்தான். இன்றைய தருணத்தில் அவளுக்கு வேறு கனவுகளும் இருக்கலாம் என நான் வார்த்தைகளையும் எதிர்பார்த்தேன்.

வாக்கியங்கள் அவளுக்குச் சொற்களை இணைத்துப் பிறந்தன. இந்தப் பேதமை இன்றோடு சரி.

மூக்கில் உயிர் வந்து முட்டும் ஒரு நாள் வரைக்கும் வேண்டாம்.

அவள் அனைத்திற்கும் அருகதையானவள் அவள் வாழ்ந்தால்தான் அகிலத்திருப்தி.

ஆனால் என்ன நோக நோக பெற்றெடுத்த அவளை ஊரில் ஓர் உதிரச் சடுதிக்கு மணமுடித்துக் கொன்றார்கள்

○○○

வெளிக்குள் நேரம் விதைப்பது தொடரும். மார்புக்குள் உக்கி உருகிவிட்ட எலும்புக்கள் மேலும் வெளிக்குத் தெரியாத ஒன்று பசித்திருக்கு இன்னமும்.

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் – கவனிக்கப்படாத கவிதைப் பாரம்பரியம்

செ. யோகராசா

ஈழத்துக் கவிதைப் பாரம்பரியம்பற்றிச் சிந்திக்கும் போது அத்தகைய பாரம்பரியத்திலே பேணப்பட்டிருக்கும் கவிதை நூல்களும் கணிசமானவை மத அல்லது அரச ஆதிக்க சக்திகளைச் சுமந்துள்ள படைப்புக்களாகவே உள்ளன. அவை கல்வியறிவு நிரம்பிய புலவர்களால் எழுதப்பட்டனவாக அமைவது இயல்பானதே. அதே வேளையில் பேணப்படாத அல்லது கவனிக்கப்படாத சில கவிதைப் பாரம்பரியங்கள் சில காணப்படுகின்றன. இத்தகைய கவிதைப் பாரம்பரியம் ஒன்றிற்கு உரித்தாளிகள் கல்வியறிவற்ற (அல்லது ஆரம்பக் கல்வியறிவு மட்டுமே பெற்றுள்ள) புலவர்களாவர். இத்தகைய புலவர்கள் பலருக்கு மட்டக்களப்பு கவிதைப் பாரம்பரியத்திலே முக்கிய இடமுள்ளது. இத்தகைய புலவர்களது கவிதைகளும் கவனத்திற்குள்ளாக்கப்படும் போதுதான் முழுமைபெற்ற இலக்கிய வளர்ச்சியை அறிந்து கொள்ளமுடியும். எனவே இத்தகைய மட்டக்களப்பு புலவர்கள் பற்றியும் அவர்களது படைப்புக்கள் பற்றியும் சுருக்கமாக கவனிப்பது வேண்டப்படுவதாகும்.

மேற்கூறியவாறான 'புலவர்' பரம்பரையினரில் இன்று அறியப்படுபவர்களுள் காலத்தினால் முற்பட்டவர் அக்கரைப்பற்று மொட்டை வேலாப் போடியார் (1804 - 1880). இவர், அவ்வப்போது ஊரில் நடக்கும் சம்பவங்கள் பற்றிய தனிப்பாடல்களும் மக்களை மகிழ்விக்கும் பொருட்டு ஊஞ்சற் பாடல்களும் இயற்றி உள்ளார். தனிப்பாடல்களுள் கணிசமானவை, வசைப்பாடல்களாகும். நிழலின் பொருட்டு வழமையாகப் புலவர் தங்கியிருக்கும் மருதமரமொன்றினை ஊரிலுள்ள பணக்காரர் ஒருவர் வெட்டச் செய்த வேளையில் புலவர் பாடிய வசைக்கவி, இதுவாகும்:

*முத்தர், பாண்டியர், மூவர் இருக்கின்ற*
*மத்தியான மருது நிழல்தனைக்*
*கத்திக் கொண்டதன் கந்தற வெட்டினான்*
*சத்தி வேலவன் தலையற வெட்டுவாய்*

புலவரியற்றிய ஊஞ்சல் பாடல்கள் பிரதேச வழக்குச் சொற்களைக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தம்பிலுவில் ஊரினில- இருந்த நீர்ப்பாசன அதிகாரி ஒருவரை முதன்மைப்படுத்தி ஒரு பிரபந்தமும் - தம்பிலுவிற்பள்ளு - இவரால் இயற்றப்பட்டுள்ளது.

மொட்டை வேலாப்போடியாரின் பேரப்பிள்ளை முறையினரான தாண்டவ வேலனும் (1854- 1934) பல தனிப்பாடல்களையும் சில கும்மிப் பிரபந்தங்களையும் (உ-ம் : பிச்சை வேலைக்கும்மி, பாணகை வழிநடைக்கும்மி) இயற்றியுள்ளார். கதிர் இவரியற்றிய கதிர்காமவிருத்தம் பக்தி பாடல்கள் கொண்டது. இதில் இடம்பெற்றுள்ள பாடல்கள் கல்வியறிவில்லாப் புலவர்களது பாடல்களில் காணப்படும் தனித்துவமான கவிதை பண்பொன்றினை உணர்த்தி நிற்கின்றன. எதுகைச் சிறப்பினை இத்தகைய பாடல்கள் கொண்டிருக்கின்றன என்பதே அப்பண்பாகும். புலவரின் மற்றொரு தனிப்பாடலும் விதந்துரைக்கப்பட வேண்டியதே, கோயில் விழாக்களில் இடம்பெறும் வீண்விரயம் பற்றிக் கண்டிப்பது பின்வரும் பாடல்:

*"கடவுளின் பெயர் சொல்லிக் களியாட்டந்தான்*
*புரியும் கனவான் பல்லோர்*
*வழிதவறி வரம்பேறி வம்புக்குள் வாழ்வுதனைத்*
*தள்ளிவிட்டார்.*
*பெரியார்கள் எனச் சொல்லிப் பேயாட்டம்*
*ஆடுகின்ற பித்தர் கூட்டம்*
*நெறிப்பட்ட நிலை கொண்டு நிம்மதியாய்*
*மக்கள் குலம் வாழச் செய்யார்"*

ஊரிலே நடக்கும் அநியாயங்களைச் சுட்டிக் காட்டி அதற்கெதிரான பொதுசன அபிப்பிராயமொன்றினை உருவாக்கும் முயற்சியில் கல்வியறிவில்லாப் புலவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதற்கான சான்றே மேற்கூறிய பாடலாகும்.

மேற்கூறிய புலவர் பரம்பரையினரைச் சார்ந்த ஓரளவு கல்வியறிவு பெற்றவரான பிறிதொரு புலவர் செட்டிப்பாளையம் சின்னவப்புலவர் (1877 - 1961) இவர் பாடிய இரு பிரபந்தங்கள் குறிப்பிடத்தக்கவை. 'அம்பாறைக் கொலணி', 'இலங்கைச் சுதந்திரம்' என்பனவே அவை. தமிழ்ச் சிங்களவர் ஒற்றுமை வற்புறுத்தப்படுவது அப்பிரபந்தங்களின் சிறப்பாகின்றது. அச்சுவசதிகள் ஏற்பட்ட பின்னர் கல்வியறிவற்ற இப்புலவர்கள் தமது படைப்புக்களைத் துண்டுப்பிரசுரங்களாக அச்சிடுவித்து மக்களிடையே பரப்பி வந்துள்ளனர் என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். தமது படைப்பின் முக்கியத்துவம் கருதிச் சின்னவப்புலவரும் 'இலங்கைச் சுதந்திரம்' என்ற பாடலை அச்சிடுவித்து மக்களிடையே விநியோகம் செய்துள்ளார்.

முஸ்லீம் புலவர் பரம்பரையினரிலும் கல்வியறிவு அற்ற புலவற் பெருமக்கள் இருந்து வந்துள்ளனர் என்பதற்கு அக்கரைப்பற்று புலவரான வ. சேகுமதார் (1853 - 1940) சிறந்த எடுத்துக் காட்டாவார். கிழக்கு மாகாணத்தில், வெள்ளப்பெருக்கு, சூறாவளி முதலான இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி இடம்பெறுவது வழக்கமாகும். இத்தகைய விடயங்கள் பற்றிய இப்புலவர்கள் பாடல்கள் இயற்றுவதும் மரபாகும் சேகுமதார் புலவர் இயற்றிய 'புயல் செய்த பேரழிவு' பாடல்களின் ஒரு பகுதி பின்வருமாறு:

*"சொல்லிடு கிறிஸ்தவர் கணக்கிலோர் தொள்ளாயிரத்*
*தேழினில்*
*தோன்றி வரும் பங்குனியில் ஒன்பதாம் திகதியிலே*
*துதிபெற ஞாயிரவில்*
*கல்லதிலே பெரிய புயலொன்றெழுந்தற் கணக்கிடற்*
*கரிதாகிய*
*காய் கொண்ட தென்னை பனை, மா, பலா, முந்திரிகை,*
*கதலி, எலுமிச்சை பனசம்.*
*பல்லோருக்கு நிழலுதவு ஆவரசு வம்மிபூ பகரறிய*
*இன்னுமுமனேக விளை மரமதனைப்*
*பதற, உதறப் பிடுங்கி..."*
*சுவரதிர்ந்து திடுதிடுவென விழவே*
*அலுமாரி பெட்டகம் தயிலா முடாப்பானை*
*அவைகள் மடமடவென உடைய*
*பொன் வெள்ளி வெங்கல முருப்படிகள் நெல்வைத்து*
*பொதி சாக்கு உமல்க ளடையப்*
*பொறுப்புக்கு நலதென் றெறுப்பாக்கி வைத்த*
*பல புதையலும் தாண்டதன்றோ."*

இயற்கை அனர்த்தங்கள் பற்றிப் பாடிய புலவர்கள் பலரும் மேற்கூறிய கவிதைப் பாணியையே பின்பற்றியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

ஊரிலே அவ்வப்போது நடைபெறும் முக்கிய சம்பவங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புலவர்களால் பதிவுசெய்யப்பட்டு வந்துள்ளன. இவ்விதத்தில் கன்னன்குடா புலவர் மாணிக்கம் சிதம்பரபிள்ளை (1927 - 1990) இயற்றிய கள்ளர் பிடிபட்ட காவியம் நினைவு கூறத்தக்கது.

மேற்கூறிய 'புலவர்' பரம்பரையினருள் சமூகத்தில் உள்ள அடிமட்டத்தினைச் சார்ந்த புலவர்களும் அடங்கியுள்ளனர். இவ்விதத்திலே மண்டுரைச் சேர்ந்தவரான மாணிக்கம் பொன்னன் (1914ல் பிறந்த இவர் சலவைத் தொழிலாளியாவார்) விதந்து ரைக்கப்பட்ட வேண்டியவர், மூன்றாம்வகுப்புவரையும் கற்றவரான இவர் பக்தி நிபந்தங்கள் பல இயற்றியுள்ளார். புலவரியற்றிய நாகதம்பிரான் அம்மானையின் ஒரு பாடல் பின்வருமாறு:

*"மருங்கை அடிப்பூவல் விங்க நகரத்திலே*
*சலவைத் தொழிலாளர் நட்டுவைத்த நாவல்மரம்*
*பாதை அருகிலே படர்ந்தே இருக்குது பார்.*
*ஆலமரமும் அமர்ந்தே இருக்குதங்கே*
*வைரம் வைடூரியம் புஸ்பராகம் தங்கியிருக்கும்*
*10ம் கட்டையில் இருந்ததே நாவல் மரம்*
*பரம் பொருளும் அங்கே தங்கியிருந்தாரே*
*விஷ்ணு அவதாரம் வந்ததே அம்மானை."*

மேலுள்ள பாடல் எதுகை, மோனை என்பனவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்காததும் அதேவேளை ஒருவித ஓசைநயம் பெற்று அமைந்திருப்பதும் புலவரது உணர்ச்சி இயல்பாக வெளிப்படுவதும் அவதானிக்கப்பட வேண்டியவை.

அண்மையிலே காலமான சின்ன ஊறணியைச் சேர்ந்த புலவர் பூபாலப்பிள்ளை பற்றிக்குறிப்பிடாதுவிடின் இவ்வாய்வு முழுமையடையாது. மட்டக்களப்பு பிரதேசதலங்கள் பலவற்றின் மீது பதிகங்கள் பாடிய புலவர் தேர்தல்கால மேடைகளிலும் ஏறியுள்ளார். இத்தகைய பாடல்களுள் சில சினிமா பாடல்மெட்டில் அமைந்தவை : எ-கு:-

*"மானமுள்ள தமிழா வாடா - மார்புதட்டி*
*முன்னே வாடா - மதியாதான் வாசல்தன்னில்*
*மிதியாய் முத்தம். தமிழாவாடா (மானமுள்ள)"*

அன்னார் இயற்றியவற்றில் 'வன்செயல் கும்மி' முக்கியமானதொரு ஆக்கமாகும். அது பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

*"முன்னிலையில் ஐந்து கரம் கூப்பிக் -கலை*
*வாணி அருளினைத் தான் வணங்கிப்*
*பண்பற்ற செயலைப் பக்குவமாய்ப் - பாடத்*
*தென்புற்று நாவினில் வந்திடுவாய்"*

மேலுள்ளவற்றினை தொடர்ந்து வரும்பாடல்களும் அந்தாதிப் பண்பினைப் பெற்றமைவது சிந்திக்கப்பட வேண்டியது. கவிதை யின் தங்குதடையற்ற ஓட்டத்திற்கும் இவ் அந்தாதிப்பண்பு உதவக்கூடும். (எமது செந்நெறி இலக்கிய பாரம்பரியத்திலே அந்தாதியின் தோற்றமும் இத்தொடர்பிலே சிந்திக்கத்தக்கது)

கல்வியறிவற்ற மேற்கூறிய புலவர்கள் பாடல்கள் இயற்றும் ஆற்றலை எவ்வாறு பெற்றுக் கொண்டனர் என்றொரு வினா எழுவது இயல்பே. காற்றிலே வரும் கீதங்கள் - நாட்டுப்பாடல்கள்- சமயச் சடங்குப்பாடல்கள், கூத்துப்பாடல்கள் என்பன அதற்குக் காரணமாயிருக்க வேண்டும். மேற்கூறிய புலவர்களுள் சிலர் அண்ணாவிமார்களாகவும் கூத்தாடுபவர்களாகவும் இருந்துள்ளமையும் கவனிக்கத்தக்கவை (இப்புலவர்களுள் சிலர் தாமே கூத்துப் பாடல்கள் இயற்றியிருக்கின்றனர்).

எவ்வாறாயினும், கல்வியறிவற்ற புலவர்களியற்றிய மேற்கூறிய வாறான பாடல்கள் பேணப்படுவது அவசியமானது. அவை அச்சுருப்பெறும்போது கற்றறி புலவர்களது குறுக்கீடுகள் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் (புலவர் பூபாலப்பிள்ளையின் பதிகங்களிலே ஒரு சில திருத்தங்கள்- உ-ம்: காட்பு வெண்பா - இடம்பெற்றிருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது).

இறுதியாக ஒன்று: கல்வியறிவற்ற புலவர்களது கவிதைகளை கவிதைப் பாரம்பரியங்களுள் ஒன்றாக ஏற்பதனை 'தமிழ்பேசும் நல்லுலகத்து' அறிஞர்களும், பண்டிதர்களும் நிச்சயமாக வரவேற்க போவதில்லை. ஆயினும், இத்தகைய கவிதைப் பாரம்பரியத்தினை ஏற்கும் போதுதான் முழுமைபெற்ற இலக்கிய வளர்ச்சி நிலையினை அறிந்தவர்களாவோம்.

இன்னுமொன்று: இன்று ஆசிய-ஆபிரிக்க இலக்கியப் பாரம்பரியம் பற்றி ஆய்வு செய்வோர் மேற்கூறிய கவிதைப் பாரம்பரிய மரபுக்கு முதன்மை கொடுத்து வருகின்றனர். இம்மரபினை ORATURE என்றழைக்கின்றனர். தமிழில் இவ் ORATURE மரபுபற்றி வெவ்வேறு தளங்களில் சுரேஷ் கனகராஜாவும் (பண்பாடு . 1993 - வைகாசி) சித்திரலேகா மௌனகுருவும் (தேனகம் - முத்தமிழ்விழா மலர் - 1997) ஜெயசங்கரும் (படி - 5 சித்திரை 97) சுருக்கமாக எடுத்துக்காட்டியுள்ளனர். இக்கட்டுரையையும் அவற்றோடு இணைத்து வாசிப்பது பயனுடையது. ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா. றஜீன்குமார்

## அர்த்த நாரீஸ்வரம்

கத்தரித்து எஞ்சிய நாபிக் கொடி
காய்வதற்கிடையில்
ஆண் பற்றிய புரிதல் மூர்ச்சையுற
பெண்ணாக நம்பப் பட்டாய் !

நூறுவீத ஆணாக்கமாகிய நானும்
நூறுவீத பெண்ணாக்கமாகிய நீயும்
குறை மனிதர்களாய் அலைவோமே !

கொடுத்துப் பெற்று
பெற்று கொடுத்து
இணைந்து பொருதி
தீப்பிழம்பு குளிர்ந்தோர்
மண்ணுருண்டை ஆனது வாய்
மானுடத்தை உருட்டிக் கொடு !

ஹோர்மோன்கள் சுரக்க சிந்தை உதிக்குமா ?
சிந்தை உதிக்க ஹோர்மோன்கள் சுரக்குமா ?

கடல் கொடுக்க முகில் உறிஞ்ச
முகில் சுரக்க கடல் கொள்ள
எனக்குள் இருந்திவள் எப்படி எழுகிறாள் ?
ஆதியோ
ஜோதியோ
அகிலத்து சக்தியோ

நிலவைப் பிடித்து நெற்றியில் இடுகிறாள்
நட்சத்திரங்களை அணியெனக் கொள்கிறாள்
சூரியக் கதிர்களை ஒவ்வொன்றாய்ப் பிடுங்கி
கூந்தல் நிறைய செருகிக் கொள்கிறாள்

வார்த்தை கொண்டு கவிதை வரைய
வாழ்க்கை கொண்டு வரையெனப் பணிக்கிறாள்

இவன்
அழத் தயங்கி.....
உள்ளிழுத்து
திமி திமியெனக் கோபத்தில்
குதிப்பதென்னே ஞானப்பெண்ணே!
இவள்
கோபத்தை
உள்ளிழுத்து
கண்ணீராய்ச் சொரிவதென்னே!
தாண்டவக் கோனே!

எனது பூவே பிழம்பு கொடு!
எனது எரிமலையே தென்றல் கொடு!
எனது பூகம்பமே என்னைத் தாலாட்டு!

வட்டம்!
உள்வட்டம், அற்று,
துகிலுரிந்து!
தோலுரிந்து!!
உளமுறிந்து!
அல்லி வட்டம், புல்லி வட்டம், காம்புகழன்று,
சருகாய்........
பூவின் இதழாய்..........
மகரந்த மணித்துகளாய்.........
அங்கிங்கெனாதபடி
எங்கும் ஆகர்வுத்து மிதக்கலாமே.

## அகதிகள் நத்தார் 91


"குற்றம் செய்யாதவன் எவரோ
அவர் முதற் கல்லை எறிக"
யுக யுகாந்திரத்துக்காய் உரைத்தவரே
ஒவ்வொரு முறையும்
நீரும் நானும்
உயிர்த்தெழும்போது சிலுவையில்
அறையப்படுவதாய்...........
சிலுவையில் அறையப்படுவதாய்...........
சொரி சிந்தி நீர் பெற்ற அப்பம்.

அனைத்து அப்பத்தையும் பங்குத் தந்தைகளே
உண்ண..
பசிக்கிறது பரமபிதாவே
எனது அப்பம்!
எமது அப்பம்!
தாம் திமிக்கிட தோம்
தத்தித் திமிக்கிட தோம்

திரை விரிய, ஏரோது மன்னன் சபை தெரியும்
"மக்களை மந்தைகள் என்று நீ
எண்...........ண...........வோ...........ஓ ஓ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட மூடனே......... ஏ......... ஏ.........."
ஆவேசமாய்............. முதலாவது அருளப்பர்

நாட்டுக் கூத்தின்
நயத்திலும் லயத்திலும்
பார்த்துக் கொண்டிருந்தோர்
மயங்கிப் போனவோர் சாதகச் சூழலில்
ஏரோதின் உத்தரவுப் பிரகாரம்
அருளப்பர் சிரச்சேதம் செய்யப்படுகிறார்.

இன்றோ நாளையோ
இன்னொரு மேடையில்
தாம் திமிக்கிட தோம் தத்தித் திமிக்கிடத்தோம்
திரை விரியும்
ஏரோது மன்னன் சபை தெரியும்
"மக்களை மந்தைகள் என்று நீ எண்ணவோ...........ஓ ஓ
அட மூடனே......... ஏ......... ஏ.........."
ஒரு அருளப்பர் ஆவேசமாய்..............
சிரச்சேதம் செய்யப்படும் வரை.

28.12.91

## கௌதம புத்தனுடன் நான்

கால காலத்தை நகர்த்தும்,
கடிகார முட்களின் பிரயத்தனம்.
பிரளயத்தின் தூதுவன் தூமகேது
இடைவெளிகள் காலக்கணக்கில்,
நூலளவு

மோனத் தவமிருந்த புத்தன்
தவம் கலைந்தெழுந்தான்
லங்கா தெருக்களிலே நடந்தான்
காற்றினிலே கலந்திருந்த
கந்தகத்தை சுவாசித்து
கொண்ட தவப்பயனால் பிழைத்து
தாகம் தலையெடுக்க மாவலியில் வாய் நனைத்து
குருதியென பதைபதைத்து உமிழ்ந்தான்
இன்று பௌர்ணமி நாள்
யாசித்தான்
சிலர்
தானமிட
இடுவது போல் சிலர் எடுக்க
தீப்பெட்டி,
பூவிசிறி,
மகாவம்சம்,
வெடிகுண்டு,
வாக்குச் சீட்டு........
பிச்சா பாத்திரம் எவ்வளவு பெரியது!
கொள்ளளவுள்ளது!

மாணிக்க தீபத்து கடவுச்சீட்டுப் பிரஜையின்
கடமையாய்
"யசோதரா" என்றொரு மந்திரமெழுதி
பிச்சா பாத்திரத்துள்ளே இட்டேன்
தீட்சணித்து எனைப் பார்த்தான்
"யசோதராவுக்கு எவ்வழி சொன்னாய்"
என நான் விழித்தேன்
அவனுக்குள்ளும் ஓர் இருப்பு இருந்தது
ஒரு முறை நீ எனை சித்தார்த்தாவென
அழையென இரந்தான். அழைத்தேன்.

நகரம் அசைந்தது
இவனது ஒரு பல் யானையின் மீது
வரிசையாய் யானைகள் அங்குச பாகர்கள்
இவற்றின் பின்னே இன்னும் சிலபேர்
விரைவாய் விரைவாய் அவ்விடம் நீங்கினோம்

கானகத்து நடுவில்
காவி களைந்த புத்தனும் நானும்
இலைகளைக் கொய்து இடுப்பில் கட்டி
அந்தகாரத்து இருளைப் போக்கவும்
யசோதராவைத் தேடிப் பிடிக்கவும்
ஆளுக்கு இவ்விரண்டு கல்லையெடுத்து
ஆதிமனிதராய் உரோசத் தொடங்கினோம்.


30.04.1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகிகளின் தாய்

தமிழில்: பிரணவி குணசீலன்



"இல்லை அம்மா!" அவன் தனது முடிவைப் பட்டென்று சொன்னான்.

"எனது மூத்த சகோதரன் தனது படிப்பை முடிக்கும் வரையும் நான் எனது படிப்பிற்காக காத்திருக்க முடியாது. எனது சிந்தனைகள் விழிப்பாக இருக்கின்ற இந்தக் காலத்தில் நான் எனக்குச் சிறந்தவற்றைச் செய்யவேண்டும்."

ஆதிம்! (ADIM) பாடசாலையிலும், வீட்டிலும் கடுமையாக உழைத்தான். அதேநேரம் தனது மூத்த சகோதரனின் நிலைப்பாடு சரியானது தானா என்பது பற்றியும் அடிக்கடி சிந்தித்தான். ஒரு உயர்ந்த பதவியை எதிர்பார்த்துத் தொடர்ந்து படிப்பதை விட மற்றைய சகோதரங்களுக்கு உதவும் வகையில் அவர் தனது படிப்பை முடித்துக் கொள்ளலாம் தானே என்பது தான் ஆதிமின் கருத்தாக இருந்தது.

தனது தாயின் வயிற்றின் சுற்றளவு அதிகரிப்பது அவனுக்குப் பெரும் தடுமாற்றத்தைக் கொடுத்தது. அதாவது அவள் மீண்டும் கர்ப்பமாக இருந்தாள். இந்தப் பெரியவர்களின் செயலை என்னால் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது. எப்படிப் பார்த்தாலும் இது பொருத்தமானதாக இல்லை. இவர்கள் எப்போதும் அதிக குழந்தைகளையே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வகையில் ஓசியா (OSHIA) சொல்வது சரிதான். ஓசியா விடுமுறைக்கு வீட்டுக்கு வந்த போது நுஎகோ (NNUEGO) ஆதிமின் விருப்பத்தைச் சொல்ல விரும்பினாள்.

"அம்மா! ஆதிம் கல்லூரிக்குச் சென்று படிக்க விரும்பினால் நான் அதற்கு தடையாக இருக்கவில்லை. நான் நினைக்கிறேன் தம்பி நினைப்பது சரிதான் என்று........?" கூறிய ஓசியா தொடர்ந்து எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்தான். ஏனெனில் அவன் சொல்லப்போகும் மற்ற விடயம் நுஎகோவுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுக்கும் என்பது அவனுக்குத் தெரியும். "நான் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டபின் பல்கலைக்கழகம் சென்று படிக்க விரும்புகிறேன்" என்றான் ஓசியா.

"என்ன அது? பல்கலைக்கழகமா....? அப்படி என்றால் என்ன.....? நீ இன்னும் போதுமான அளவுக்குப் படிக்கவில்லையா...?"

"இல்லை அம்மா! இன்னும் இல்லை. என்னால் ஆதிமுக்கு உதவி செய்யமுடியாது. என்னதான் நடந்தாலும் இப்போதைக்கு முடியாது. எனது சொந்தத் தேவைகளையே என்னால் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ள இந்த நிலையில்..."

"அம்மா என்னை அப்படிப் பயங்கரமாகப் பார்க்கவேண்டாம். எல்லாம் சரி வரும். ஆனால் அதற்கு நீண்ட காலம் எடுக்கும் அவ்வளவுதான். நைஜிரியாவில் இருந்தால் இங்கு கல்லூரிப் படிப்புத்தான் உயர்ந்ததாக இருக்கும். ஆனால் ஒரு வெளிநாட்டுப் படிப்பு - அதுதான் உண்மையில் உயர்ந்த நிலை. எனக்குத் தெரியும். கஷ்டங்கள் என்னைத் தொடர்கின்றன. எனினும் கல்லூரியை நான் வெற்றிகரமாக முடித்து விடவேண்டும். உண்மையில் இந்தச் சூழ்நிலையில் சரியான வகையில் எனது கல்வியைக் கட்டியெழுப்பவில்லை என்றால் அது பெரிய அநியாயமாகும். அப்படியென்றால் எனது அப்பாவைப் போன்றுதான் எனக்கும் விரைவில் நடக்கும்...!"

அதில் என்ன அப்படி மோசமானது உள்ளது சொந்த தகப்பனையே உதாரணம் காட்டுவதற்கு. அவர்தான் உனக்கு வாழ்வைக் கொடுத்தவர். பெற்ற மகன் தனது தாய்க்கு முன்னாலேயே தனது தகப்பனைப்பற்றி இப்படிப் பேசுவதை என்னால் தொடர்ந்தும் கேட்கமுடியாது. இந்தப் பாழாய்ப் போன யுத்தம் ஆரம்பித்த

"BUCHI EMECHETA" புச்சி எமேசெரா நைஜீரியாவின் தலை சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். அவரது தெரிவு செய்யப்பட்ட கதைகளை உள்ளடக்கிய சிறுகதைத் தொகுதியே "ZWANZIG SACKE MUSCHELGELD" "இருபது சாக்கு மட்டிக்காசு". 1991இல் சுவிற்சர்லாந்தில் வெளியிடப்பட்ட இச்சிறுகதைத்தொகுதியில் இருந்து பெறப்பட்டதே "EINE MUTTER VON KLUGEN KINDERN" என்ற இச்சிறுகதை. இங்கு "விவேகிகளின் தாய்" என மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காலத்தில் இருந்து அவர் தனது உறுதியை உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் இழந்துவிட்டார். அதனால் அவரால் தொடர்ந்தும் எல்லாவற்றையும் பூர்த்தி செய்யமுடியாமல் போய்விட்டது. ஆனால் அவரது நம்பிக்கையானது... ஓ... கடவுளே. நாங்கள் எல்லோரும் நம்பியிருந்தோம் இந்த சாத்திரிமாரும், பரிகாரியார்களும் (சோதிடர்களும், வைத்தியர்களும்) எங்களுக்கு உண்மையைச் சொல்கிறார்கள் என்று........!

"அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் அம்மா.....?"

"இது எங்களுக்குச் சோதனையான காலம். நீ ஒரு சிறந்தவனாக வளரவேண்டும். இபுஸாவில் (ஒரு ஊர்) ஆண்பிள்ளைகள் தங்கள் பெற்றோரை வயதான காலத்தில் பராமரிப்பது போன்று நீயும் எங்களைப் பராமரிக்கவேண்டும்."

ஓசியா சிரித்தான். எனினும் சத்தமில்லாமல் சிரிப்பதற்கு அவன் முயற்சிப்பது தெரிந்தது.

"அம்மா சாத்திரகாரர்களும், பரிகாரிகளும் உன்னையும், என்னையும் எப்போதும் எடுத்துக்கொண்டு போனது போலவா...? நாங்கள் ஒருநாள் பரிகாரியாரிடம் போன போது அவர் சொன்னார் அப்பாவின் பழைய கிற்றாருக்குள் பிசாசு மறைந்திருக்கிறது இதனால் தான் இந்தக் குழப்பம் என்று."



இதைக்கேட்டதும் நுஎகோ பழைய நினைவுகளை இரை மீட்டாள்.

"இந்த சாத்திரிமாரும், பரிகாரிகளும் எங்களுக்கு உதவி செய்த வர்கள், உன்னை பராமரிப்பதற்கு"

அதிகமான சாத்திரிகள் நாங்கள் எதைக்கேட்க விரும்புகிறோம் என்பதை முன்கூட்டியே அறிந்து சொல்கிறார்கள். நான் உண்மை யிலேயே ஒரு முக்கியமான மனிதன், மெல்லிய குரலில் ஓசியா சொன்னான். ஆனால் நான் எனது வகுப்பின் மற்றைய மாணவர் களை விடவும் முக்கியமானவன் அல்ல. இதைச் சத்தமாகச் சொன்னான் ஓசியா. ஓசியாவின் இந்த வார்த் தைகளின் அர்த்தமோ அல்லது அவன் ஏன் அப்படிச் சொல்கிறான் என்பதோ அவளுக்குப் பெரிய குழப்பமாக இருந்தது. தான் தவறாக விளங்கியிருக்கிறேனோ என நினைத்தவள் திடீரென மறுதலித்து அப்படி யிருக்காது, அவனது தந்தை அப்படித் தவறாக எதையும் சொல்லி இருக்க மாட்டார் எனவும் தன்னைத் தேற்றிக் கொண்டாள். இந்த இளம் பெடியன்தான் என்ன சொல்கிறேன் என்று தெரியாமல் சொல் கிறான் என்று எண்ணிக் கொண்டாள்.

நுஎகோவின் வயிறு வரவர பெருத்துக் கொண்டு வந்தது. அவளது வயிற்றுக்குள் துடிப்புகளும் அசைவுகளும் அழுத்தங்களும் அதிகரித்தன. அழுத்தங்கள் மனதிலும் தான். அவளது வாழ்க்கை நியதி அப்படியானதாக இருக்கவேண்டும். எப்போதும் தானும் தன்பாடும் என இருக்கும் நைபே (NNAIFE) இதை அவதானித்தவனாகக் கேட்டான்

"உனக்கு என்ன நடந்தது. அங்கும் இங்கும் வயிற்றைத் தூக்கிக் கொண்டு ஊர்ந்து திரிகிறாய். இதைத் தவிர உனது வாழ்க்கையில் வேறு எதுவும் இல்லையா?"

"எனக்குத் தெரியாது நைபே கர்ப்பம்தான் என்னைப் பாதித்துள்ளது என்று நினைக்கிறேன்."

"எப்போது இருந்து மகப்பேறு ஒரு நோயாக உனக்குப் படுகிறது. அதுவும் இது ஏழாவது பிரசவம்."

நுஎகோ பதிலளிக்கவில்லை.

புதியபெண் ஒக்போ (OKPO) பேராவல் உள்ளவளல்ல. இவள் நுஎகோவின் கணவனின் இரண்டாவது மனைவி. ஒரு மகளைப் போன்று அவளுக்கு அருகில் இருந்து கவனித்தாள். நுஎகோவின் விருப்பப்படியும் முழுமையாகச் செயற்பட்டாள். அவள் சிறுவயதில் இருந்தே பெற்றோர் இன்றி அனாதையாக வளர்ந்தவள் என்பதால் கஷ்டங்கள் அவளுக்குப் புதியவையல்ல. ஒக்போ நுஎகோவுக்காகவும் ஷாபோ சந்தைக்குப் போவாள்.

நுஎகோவுக்கு இப்போது வயது நாற்பது. ஒரு பெண் நடுத்தரவயதில். ஆனால் அவளோ தனக்கு நன்கு வயதாகி விட்டதாக உணர்ந்தாள். காலையில் எழுந்து எல்லோரும் புறப்படும்போது எல்லோரையும் அனுப்பி வைத்துவிட்டு அதை உணர்பவளாக இருந்தாள். குழந்தையின் பிரசவம் நெருங்கியிருந்தது. ஒரு வயதான பெண்ணினால் ஊரில் அங்கும் இங்கும் ஓடி உதவி கேட்பதற்கு எப்படி முடியும். அதுவும் ஒன்பதாவது பிள்ளையைப் பெறுவதற்காக. இது ஒரு சிரிப்புக்கிடமானதாக இருந்தது. அவளது மூத்த இரட்டை மகள்களும் விரைவில் நிட்சயதார்த்தம் செய்ய இருந்தனர். அவர்கள் ஒரு ஞாபகத்துடன் வாழவேண்டியிருந்தது. பிள்ளை பெறும் போது தனது தாய் கோழையாக இருந்தாள் என்பது தான் அந்த ஞாபகம்.

ஒக்போ, நாம்டியோவுடனும், சிறிய பிள்ளைகளுடனும் சந்தைக்குச் சென்றிருந்தாள். அப்போது அறையின் நடுவில் கட்டிலின் சட்டத்தைப் பிடித்துக்கொண்டு முழங்காலில்நின்றிருந்தாள் நுஎகோ. அவள் தனது கீழ் உதட்டைப் பற்களால் இறுகக் கடித்துக் கொண்டாள் அழ முடியாதவாறு. அவளுக்குப் பிறந்த அந்தக் குழந்தை ஒரு பூனைக்குட்டி போன்றுமிகவும் சிறியதாக இருந்தது. அவள் நினைத்தாள் அக்குழந்தை சுவாசம் வரும் வரையும் ஒரு சில நிமிடங்கள் தான் அப்படிக் கிடக்கிறது என்று. ஆனால் அவளுக்கு உணர்வு வர நீண்ட நேரம் எடுத்தது. உணர்வு வந்து கண்களைத் திறந்த போது அக் குழந்தை இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டாள். அது ஒரு பெண்குழந்தை. அசைவின்றிக் கிடந்தது. அது இறந்திருந்தது.

இது நுஎகோவைப் பொறுத்தமட்டில் ஒரு தாங்கமுடியாத துயராக இருந்தது. இந்த வேதனையின் கோரம் காரணமாக அவளது கண்கள் கண்ணீர் வடித்தன. அவள் அழ விரும்பாத போதும். "இந்தச் சிறிய குழந்தை இறந்தது உண்மையில் துரதிஷ்டவசமானது தான். எத்தனை தடவை வயிற்றுக்குள் அதனையும் தூக்கிக் கொண்டு ஷாபோ சந்தைக்கு ஏறி இறங்கியிருப்பேன்" என்று நினைத்துக் கொண்டாள்.

இந்தச் சின்னனுக்கு ஏதாவது நடந்திருக்க வேண்டும். எதனாலோ குத்துப்பட்டோ, நசுக்கப்பட்டோ இருக்க வேண்டும். மகன்மாருக்கு குனிந்து உடுப்புக் கழுவும்போது இது நடந்து இருக்கலாம் என்றும் தன்பாட்டுக்கு நினைத்துக் கொண்டாள். ஐயோ! குழந்தையே!! நீ ஒரு பாவமும் அறியாத குழந்தை. உன்னை என்னால் வளர்த்து எடுக்கமுடியாமல் போனதையிட்டு என்னை மன்னித்துக் கொள்ளும். என்றாலும் கடவுள் உன்னை அவரிடம் அழைத்திருப்பதையிட்டு எனக்கு மகிழ்ச்சி. இந்த வயதிலும் நான் எனது கணவனுக்கு குழந்தைகளை பரிசளிக்கக் கூடியதாக இருப்பதையிட்டும் மகிழ்ச்சி அடைகிறேன். அது எனக்கு நிறைவைத் தருகிறது. எங்கள் நண்பர்களின் மனைவிமார்கள் பலர் கடவுளிடம் நேர்த்தி வைத்து, மன்றாடி வரம் பெறுகின்ற இந்தக் காலத்தில் எனது நிலையை உலகிற்கு நான் பெருமையுடன் சொல்லமுடியும். அவர்களின் இயலாமைக்கு மத்தியில் எனது இயலுமை குறித்து நான் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

தொடர்ந்தும் அவள் தனது குற்ற உணர்வு தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கத் தொடங்கினாள். அந்தக் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை தான் அறிய முயற்சி செய்யாதது அவளுக்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியது. அது ஒரு பெண்குழந்தையாக இருந்தால் அந்த இழப்பை அவளால் தாங்கிக்கொள்ளமுடியும். அது அவளுக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. ஓ... கடவுளே! நீ கூட பெண் குழந்தையை வாழவிட விரும்பவில்லையா? இந்தக் குழந்தையின் கதி தொடர்பாக நீயும் சந்தேகப்பட்டு இருக்கின்றாய்? இந்த வேதனையில் இருந்து ஆண்டவனே நீதான் என்னை விடுவிக்கவேண்டும்.

கடவுளே! எனக்கு ஆறுதல் தாரும். எனது தவறினால் எனது குழந்தை இறக்கவில்லையென. அந்த குழப்பமான நிலை யில் தனது கண்டிப்பான தகப்பன் தன்னிடம் கேள்விகள் கேட்பது போன்ற உணர்வில் அவள் இருந்தாள். அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை.

"நுஎகோ நீ ஏன் யாரையும் உதவிக்கு அழைக்கவில்லை? நீ யார் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லையா? மற்றவர்கள் எல்லோரையும் நீ வெறுக்கின்றாயா...? நுஎகோ..."

இந்தக் கேள்விகள் மீண்டும் மீண்டும் ஆரம்பத்திலிருந்து ஒலிப்பது போன்ற உணர்வு அவளுக்கு இருந்தது. எனது மகன் விரும்பாத காரணத்தினால் தான் என் குழந்தை இறந்ததா என்றும் அவள் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

அவளுக்கு தான் மேலே... மேலே... பறந்து போவது போன்ற உணர்வு. எதையும் அவளால் சரியாக கிரகிக்கவோ அறியவோ முடியவில்லை. யாரோ தனக்கு தூக்க மாத்திரைகளைத் தந்து விட்டார்களோ என்று கூட நினைத்தாள். இவ்வாறு தன்னிடம் நாளாந்தம் வளர்ந்து வரும் ஒரு பயங்கரமான நிலையிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள நினைத்தாள். அவள் சிலவற்றை நினைத்த போதும் அவற்றைச் செய்ய முடியவில்லை. அவள் விருப்பத்தை விடவும் அது சக்தி வாய்ந்ததாய் அவளை அழுத்தியது.

எங்கிருந்தோ வந்த காலடிச் சத்தம் ஒன்று அவளது காதுகளில் மெதுவாக விழுந்தது. அது நீண்ட காலமாக அவளுக்குப் பழக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. அவள் மீண்டும் சுயநினைவுக்கு வந்த போது தன் கண்களைத் திறக்க முயற்சித்தாள். ஆனால் அவளது கண்ணிமைகள் எண்ணெய்த்தன்மை கொண்டனவாகவும், ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டனவாகவும் இருந்தன. அவளது காதுகளை சத்தம் குடைந்தது. அறைக்குள் வெப்பமாக இருந்தது. அவள் தானாக ஆனால் கவனமாக அசைந்தாள். அவளது ஒவ் வொரு அசைவும் அவளுக்கு வலியைக் கொடுத்தன. ஆனால் அவளது வாய் கட்டுப்பாடுகள் அற்ற வகையில் கடமையாற்றியது. அவள் இப்படிக் கேட்டாள் "என்ன நடந்தது என்று எனக்கு யாரா வது சொல்லமுடியுமா?"

யாரோ மந்திரம் உச்சரிப்பது அவளுக்குக் கேட்டது. அது பரிகாரியாரின் குரல் என்று மட்டிட்டுக் கொண்டாள். இப்போது ஆதிம் கூப்பிடுவதும் அவளுக்குக் கேட்டது. "அம்மா! நீங்கள் மீண்டும் இங்கு வந்துவிட்டீர்கள்..." அப்படியானால் நான் எங்கே போயிருந்தேன் என்று கேட்க அவள் விரும்பினாள். ஆனால் அவளது சக்தி முழுவதுமே முதலாவது வினாவுடன் முடிவடைந்திருந்தது. அவளது குளிர்மையான மூடப்பட்ட கண்களுடன் அவளைக் கிடத்தினர்.

மறுநாள் அவளுக்குச் சொன்னார்கள் அவள் கடுமையான சுகயீனமாய் இருந்ததாக. அவள் நோயுற்று இருந்தபோது ஒரு அழகான பெண்குழந்தை பிறந்தது எனவும், அதுவும் இடையில் இறந்து விட்டது எனவும் சொன்னார்கள். மரணச் சடங்கும் முடிந்துவிட்டது. நீங்கள் சுகயீனமாய் இருந்ததால் அதனைக் காண முடியவில்லை. இவர்கள் சொல்வது உண்மையா? அல்லது என்னைத் திருப்திப் படுத்துவதற்காக சொல்கிறார்களா? என்பதை அறிய முற்பட்டாள். அந்தக் குழந்தைக்காக தான் எப்போதும் கஷ்டப்பட்டதாகக் காட்ட முற்பட்டாள்.

அவள் இந்தத் துயரில் இருந்து நீங்குவதற்குக் குறிப்பிட்ட காலம் தேவைப்பட்டது. பரிகாரியார் அவளது உடல்நிலை தொடர்பாக பூரண உத்தரவாதம் கொடுத்திருந்த போதும். அவள் கடுமையான கவலையுடனும், தன்னிலை மறந்தவளாகவும் இருந்தாள். இப்போது அவளது மனம் மீண்டும் ஆரம்பத்திற்குச் சென்றது. தனது முதலாவது குழந்தை நித்திரையில் இருக்கும் போது இறந்ததையும், அதைத் தொடர்ந்து இரு பிரசவங்கள் இரட்டைக் குழந்தைகளாக அமைந்ததையும் அவள் நினைத்தாள். இந்த இழப்பைச் சமப் படுத்துவதற்குத் தான் கடவுள் இரட்டைக் குழந்தைகளைத் தருகிறான் என்று நினைத்தாள். இந்த உண்மைகளை மனம் விட்டுக் கதைப்பதற்கு அவளுக்கு யாரும் இருக்கவில்லை.

இந்தக் குழப்பமான மனநிலையிலும், ஒரு பிற்பகலில் தனது வீட்டுக்கு முன்னால் இருந்து அவள் தைத்துக் கொண்டிருந்தாள். திடீரென அவளுக்கு முன்னால் ஓடிவந்த ஆதிம் "அம்மா நான் என் நோக்கை அடைந்துவிட்டேன். நான் ST.GREGORY கல்லூரிக்கு (சென். கிரகரி) எடுபட்டுள்ளேன்" என்றான். ஒருகணம் அவளின் இதயத் துடிப்பு நின்றது போல் இருந்தது. தனக்கு உதவியாக இருந்த தன் மகனின் சாதனை அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவளது முகத்தில் மீண்டும் புன்னகை தவழ்ந்தது. ஓ... அப்படியா! அதுதான் நல்லது. மகனே! உண்மையாக நீ அங்கு போகத்தான் வேண்டும்... உண்மையாக நீ அங்கு போகத்தான் வேண்டும் என்று பாராட்டினாள்.

ஆதிம் தனது தாய்க்கு மிக நெருக்கமாக நின்று இருந்தான். அம்மா நீங்கள் இனி அமைதியாக ஆறுதலாக இருக்க முடியும். நான் ஏதாவது ஒரு வேலையைத் தேடும் போது இதன்மூலம் உங்கள் சுமைகள் குறைவடையும். என்னால் தொடர்ந்தும் படிக்க முடியாது போனால் நாலாவது வருடத்துடன் நான் இடைநிறுத்த முடியும். அப்போதும் கூட எனக்கு ஜுனியர் கேம்பிரிட்ஜ் (JUNIOR CAMBRIDGE) என்ற சான்றிதழ் கிடைக்கும்.

ஆ...! என் அன்பார்ந்த கணவனே! என்று ஒக்போ பெருமைப் பட்டாள். அதுவும் ஒரு அதிஷ்டம் தான். இந்தக் குடும்பத்தில் எல்லாக் குழந்தைகளும் விவேகிகளாக உள்ளனர். நாங்கள் பெண்கள் இது விடயமாகப் பெருமைப்பட வேண்டும். எனது வயிற்றில் இருக்கும் புதிய குழந்தையும் தான். அது தவறி விடமாட்டாது என்று நம்புகின்றேன். அதற்கு இரண்டு வளர்ந்த சகோதரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உயர்கல்வி கற்கிறார்கள். நான் பெருமைப் படுகிறேன், நீயும் தானே அம்மா! அப்படி இல்லையா...? நுஎகோவைப் பார்த்து ஒக்போ கேட்டாள். நுஎகோ அமைதியாக இருந்து சிந்தித்தாள். இந்தக் குழப்பமான சூழ்நிலையில் இன்னும் ஒரு பிள்ளையா...? அப்போது ஒக்போ கூறுவது அவளுக்குக் கேட்டது. அம்மா! உனக்கு நினைவிருக்கிறதா? நீ இழந்த அந்தக் குழந்தைக்குத் தயார் செய்த உடுப்புக்கள். அவற்றை நான் எனது குழந்தைகளுக்காக எடுத்துக் கொள்ளட்டுமா? நிச்சயமாக எனக்கு இம்முறை ஆண்தான். போனமுறை ஒரு பெண் கிடைத்தது.

அந்த அழகும் துடிப்பும் நிறைந்த பெண்குழந்தையின் நினைவுகள் நுஎகோவைத் தொட்டன. அந்தக் குழந்தையை நைபே ஒரு நாள் அவளது வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தான். அதனுடைய அன்பை அவளால் எப்படி மறந்துவிட முடியும்... அப்போதுதான் அவள் தனது குழந்தைக்கான உடுப்புக்களைத் தைத்துக் கொண்டிருந்தாள். ஓ... இப்படியொரு குழந்தை எனக்கு இருக்க வேண்டும். எனக்குப் பிறக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள். ஆனால் கடவுளோ மாறாக வேறொன்றை எண்ணியிருந்தார். அவளது இறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்றது. ஒரு முன் அறிகுறியும் இருக்கவில்லை. அப்படித்தான் அது நடந்தது. நீயும் ஒரு பிள்ளையை எதிர்பார்க்கிறாய். பெரிய திட்டத்துடன் இப்போதிருந்தே எல்லாவற்றையும் தயார் பண்ணுகிறாய். ஒக்போ அமைதியாகச் சிரித்தாள். ஆம்! நாங்கள் எல்லோரும் அக் குழந்தைக்காக வேலை செய்யத் தயாராய் இருக்கிறோம். ஆதிம் எனது சிறிய கணவன், அவர் கல்லூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்குச் செல்கின்ற ஒரு நேர்மையானவர், அவர் தனது படிப்பை முடித்து விட்டால் இளைய சகோதரனுக்காக எல்லாம் செய்யலாம். எனது மகன் தனது அண்ணன் ஆதிமுக்காகச் சமைத்துக் கொடுப்பான். எனது கணவனும் சிறிய கணவன் ஆதிமும் அவனது படிப்புக்காகச் செலவு செய்வார்கள். பின்னர் எனது பிள்ளை அவர்களது பிள்ளைகளுக்கு உதவி செய்யும். அப்படித் தானே அது அமைந்து இருக்கும். அப்படி இல்லையா அம்மா...? நீயும் எங்கள் கணவனும் இதே கருத்தைத்தானே கொண்டுள்ளீர்கள்.

நுஎகோ எதுவுமே பேசவில்லை. என்றாலும் தனக்குள் இப்படி நினைத்துக் கொண்டாள். "நைபே ஒரு சரியான விடயத்தைச் செய்து இருக்கிறார். அதுதான் அவர் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டது. இதன்மூலம் அவரின் வயதுபோன காலத்தில் அவள் அவரைப் பராமரிப்பாள்........."

தனது மகன் ஆதிமை எனது "சிறிய கணவன்" என ஒக்போ அழைப்பது நுஎகோவுக்கு மிகவும் பிடித்து இருந்தது. தனது மகனுக்குரிய கௌரவத்தைக் கொடுக்கிறாள் என்று பெருமைப்பட்டாள். அத்துடன் தனது மகனை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள் என்றும் கருதினாள். சிறிய (NNAMDIO) நம்டியோவை அவள் மிகவும் கவனமாக வளர்த்தாள். அவள் (ADAKU) ஆடகுவை விடவும் முற்றிலும் வேறுபட்டவளாக இருந்தாள்.


ஆஹா........! ஆஹா........! ஆதிம் சிரித்தான். "அப்போ நீ எனது அப்பாவைத் திருமணம் செய்தது விவேகமான பிள்ளைகளைப் பெறுவதற்குத்தான்" என்றான். ஒக்போ அமைதியாக அப்படியே அசையாமல் இருந்தாள். அவள் பெருமையுடனும், நிறைந்த எதிர்பார்ப்புக்களுடனும் காணப்பட்டாள். ஒக்போ 17 வயதாகவும், ஆதிம் 13 வயதாகவும் இருந்தபோதும் அவர்களுக்கிடையே ஆத்மார்த்தமான உண்மையான நட்பு நிலவியது. அவர்கள் திறந்த மனதுடனும், விட்டுக்கொடுப்புடனும் பழகினார்கள். இருவரும் நம்பிக்கையுடனும் சுறுசுறுப்புடனும் இருந்தார்கள். முன்னர் எங்கள் குடும்பங்களில் எல்லோரும் ஒன்றாக இருக்கும்போது எப்போதும் பல பிரச்சனைகள் தோன்றும். ஆனால் அதற்கு இங்கு இடமில்லை. ஏனெனில் ஆதிமும், ஒக்போவும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துள்ளனர். இதனால் ஒக்போவின் குழந்தைக்கு கெட்ட அனுபவங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. நைபேயின் இரண்டாவது கல்யாணத்தின்போதே இவற்றை நுஎகோ அவதானித்து இருந்தாள். நைபே இறந்தாலும் கூட ஒக்போ தனது வீட்டுக்குத் திரும்ப வேண்டியதில்லை. அவள் இன்று என்னிடம் கூறிய ஒருவர் இன்னொருவருக்கு உதவ வேண்டும் என்ற வார்த்தைகளின் மூலம் அதை நிருபித்துள்ளாள். சரியான நேரத்தில் ஒக்போவும் தனது குடும்பத்தில் ஒருவராகச் சேர்ந்திருப்பதையிட்டு அவள்

ஐயோ! குழந்தையே! நீ ஒரு பாவமும் அறியாத குழந்தை. உன்னை என்னால் வளர்த்து எடுக்க முடியாமல் போனதையிட்டு என்னை மன்னித்துக் கொள்ளும். என்றாலும் கடவுள் உன்னை அவரிடம் அழைத்திருப்பதையிட்டு எனக்கு மகிழ்ச்சி.

மகிழ்ச்சியடைந்தாள். இந்த மகிழ்ச்சியின் காரணங்களால் அவளது பழைய மனநிலை முற்றாக மாறியிருந்தது. முக்கியமாக தனது குழந்தை தனது தவறினால் இறக்கவில்லை என்பதை அவள் முற்று முழுதாக நம்பினாள்.

நுஎகோ அந்த இளம் சந்ததியினருடன் இணைந்த தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர விரும்பினாள். ஆதிமை கல்லூரிக்கு அனுப்பி அவனை சிறந்த ஒருவனாக உருவாக்குவதற்கு எல்லோரது கூட்டுமுயற்சியும் தேவை எனக் கருதினாள். நுஎகோ தனது கூன்முதுகுடன் ஆற்றில் இருந்து வீட்டுக்கு விறகு இழுக்கும் போது, அக்கிராமத்து மக்கள் அவளை விவேகமான பிள்ளைகளைப் பெற்றவள் என ஆச்சரியத்துடன் பார்த்தனர். ●

## இருட்டு வெளிச்சத்திலிருந்து



இறப்பதைப் போன்ற தோற்றத்தை அளித்துவிட்டு – தாங்கள்
இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஒருவருக்கொருவர்
கொடுக்கின்ற
இந்த மக்களிடம் அச்சமுறாதவர் யார்?

இறந்தபின் வேறு உருவங்களில் நடமாடும் இந்த மக்கள்
என்னைப் பயமுறுத்துகின்றனர்.

பசையற்ற, நருவல் நொருவலான, உப்புச்சப்பற்ற
மந்த குணம் கொண்ட இந்த மக்களதும்
அவரது நண்பர்கள், எதிரிகள், நேசிப்போர்
எல்லோரிடமிருந்தும் நான் பயந்து போயுள்ளேன்.

எவரும் எவராலும் எவ்விடத்திலும்
கொல்லப்படவில்லையென்கிற
எவரும் எவராலும் எவ்விடத்திலிருந்தும்
துரத்தப்படவில்லையென்கிற
எவரும் எவரது தாலியையும் அறுக்கவில்லையென்கிற
எவரும் எவரையும் எட்டுக்கு வைக்கவில்லையென்கிற
எவரும் எவரொருவரது கொலையையும்
ஏற்றுக்கொள்ளவில்லையென்கிற
எப்போதும் எல்லாவற்றிற்கும் காரணங்களை வைத்திருக்கிற
இந்த மக்கள் என்னை மிரட்டி வைத்துள்ளனர்

- சுகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் முன்னுரிமை மறுதலிக்கப்பட்ட தமிழ்ப் பெண்கள்

-சி. புஸ்பராஜா



1958ல் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி சுன்னாகம் காவல்நிலையத்தில்
திரு.தர்மலிங்கம், திருமதி வன்னியசிங்கம், திருமதி அமிர்தலிங்கம், செல்வி மங்களா கிறிஸ்தோபர்

இன்று உலகின் எந்த ஒரு இனத்தை எடுத்துக் கொண்டாலும் தந்தைவழி சமூக ஆணாதிக்கம் அமைந்த சூழ்நிலையே காணப்படுகிறது. இச் சூழ்நிலையானது குடும்ப அமைப்பு முறை என்ற கட்டுமானத்திற்குள் பெண்களிடமிருந்து அவர்களது சமூக அரசியல் சுதந்திரத்தைப் பறித்து வெறும் வேலைப்பளுக்களை மட்டும் சுமத்தி ஆண்களை சுகபோகமாக வாழ வழிவகுத்துக் கொள்கிறது. பெண்கள் வீட்டுவேலை செய்பவர்களாகவும், ஆணின் சுகத்தை தணிக்கும் பொருளாகவும், பிள்ளைகளை வாரிசாக தனது கணவனுக்கு பெற்றுக் கொடுக்கும் இயந்திரமாகவும், உழைத்து சம்பாதித்தாலும் அந்த சம்பாத்தியத்தின் பயனை நிர்ணயிக்கும் உரிமையை ஆணிடம் இழந்தவளாகவும் வாழக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளாள்.

பெண்ணியம் பற்றிய சிந்தனை இன்று பரவலாக எழுந்திருந்தாலும் ஆணாதிக்க விலங்கிலிருந்து பெண்களின் சமூக அரசியல் சுதந்திரத்தை பெற மிகவும் ஆக்கிரோசமாக போராடவேண்டிய நிலையே உள்ளது என்பதுதான் உண்மை. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இக்கொடுமையானது இனம், மதம், கலாச்சாரம், பிரதேசம் என்ற பல்வேறு வடிவங்களில் பெண்களின் குரல்வளையை நெருக்குகிறது.

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் இந்திய மக்களுடன் விகிதாசார அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கல்வியறிவில் முன்னணியில் நிற்பவர்களாகவும், மோசமான மதவெறியற்றவர்களாகவும், கூடுதலான சமூகநல சிந்தனையுள்ளவர்களாகவும் காணப்பட்டாலும் இவர்களிடையேயும் ஆணாதிக்க சமூக சூழ்நிலை அமைப்பானது ஒன்றுக்கும் குறைந்ததாக காணப்படவில்லை. இந்த அடிப்படைகளில் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் பெண்கள் அரசியலிலும் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் எப்படி முக்கியமற்றவர்களாக்கப்பட்டார்கள் என்பதை கடந்த கால நிகழ்வுகளின் ஊடாக பார்க்கலாம்.

இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பவர்களாக யாழ்ப்பாண உயர்குல கல்விமான்கள் எப்படி இருந்தார்களோ அதேபோல் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட இயக்கங்களின் தலைமையிலும் இதே யாழ்ப்பாணத்து இளைஞர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள். வரலாற்றுப் படிவங்களை உற்று நோக்கின் பொதுவான குணாம்சத்தில் இவர்களிடையே பாரிய வேறுபாட்டைக் காணமுடியாது. முக்கியமாக பெண்கள் சம்பந்தமான அணுகுமுறையை எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கையில் பொதுவாக 1920களில் வேகமடைந்த, பெண்களுக்கான வாக்குரிமைப் போராட்டத்தை எதிர்த்ததில் அன்றைய தமிழ்த் தலைவர்கள் முன்னின்றார்கள். தமது எதிர்ப்பை இத் தலைவர்கள் டொனமூர் ஆணைக்குழுமுன் சென்று வாதாடும்வரை காட்டினார்கள். இதில் பொன். இராமநாதன் முன்னிலை வகுத்தார். இந்துசாதனம், ஈழகேசரி போன்ற தமிழ்ப் பத்திரிகைகள் பெண்களுக்கான வாக்குரிமையை மிகவும் கண்டித்து செய்திகளும் கட்டுரைகளும் வெளியிட்டன.

1918ம் ஆண்டிலேயே நியூசிலாந்தில் பெண்கள் வாக்குரிமை பெற்ற நிலையில், 1931ம் ஆண்டுவரை இலங்கைப் பெண்கள் வாக்குரிமைக்காக போராடவேண்டிய நிலையிருந்தது. தமிழ்த் தலைமைகள் பெண்களின் வாக்குரிமைக்கு எதிராகவிருந்த வேளையில் திருமதி தம்பிமுத்து, நல்லம்மா போன்ற தமிழ்ப் பெண்கள் சிங்களப் பெண்களுடன் ஒன்றுசேர்ந்து பெண்களின் வாக்குரிமைக்காகப் போராடினார்கள் என்பது சற்று மகிழ்ச்சி தரும் செய்தி .

சர்வஜன வாக்குரிமைமூலம் வாக்குரிமையை மட்டும் பெற்றார்களே தவிர தமிழ்ப்பெண்கள் எவ்வளவு தூரத்திற்கு அந்த உரிமையை நிலைநாட்ட முடிந்தது என்றால் வெறும் பூச்சியமாகவே விடை உள்ளது. அன்று தொடக்கம் இன்றுவரை பாராளுமன்றத்தில் மூன்று தமிழ்ப்பெண்கள் மட்டுமே அங்கம் வகித்துள்ளார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தமிழ்ப் பெண்களுக்கு அரசியல்ரீதியில் இழைக்கப் பட்ட கொடுமையின் எடுத்துக்காட்டாகும். சரி அப்படியிருந்த அந்த மூன்று தமிழ்ப் பெண்களும் தமிழ்த் தலைவர்களால், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களா? அவர்கள் எப்படி அரசாளும் சபைக்கு வந்தார்கள் என்ற வரலாற்றை பார்ப்போம்.

1932ம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் கொழும்பு வடக்கு தொகுதியில் வெற்றி பெற்றவர் திருமதி நேசம் சரவணமுத்து. அதாவது இலங்கை அரசியல் வரலாற்றில் பொதுத்தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ்ப் பெண்மணி இவராகும். 1936ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திருமதி நேசம் சரவணமுத்து தெரிவு செய்யப்பட்டு சுகாதார அமைச்சரானார். அமைச்சரவையில் இடம்பெற்ற முதல் தமிழ்ப் பெண்மணியும் இவராவர். தமிழ் சிங்கள மக்களிடையே இனக்குரோதம் வளராத அன்றைய காலகட்டத்தில் இவர் கொழும்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டார் என்பதும் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்திலிருந்து இவர் தெரிவு செய்யப் படவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்த பெண்மணி திருமதி ரங்கநாயகி பத்மநாதன். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் கூட்டணி சார்பில் பொத்துவில் தொகுதியில் வெற்றிபெற்ற கனகரத்தினம் நாளடைவில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கொண்டார். 1980ம் ஆண்டு கனகரத்தினத்தின் மரணத்தைத் தொடர்ந்து அவரது சகோதரியான திருமதி ரங்கநாயகி பத்மநாதன் பொத்துவில் தொகுதியின் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக்கட்சியால் நியமிக்கப் பட்டார். 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்த இலங்கையின் பாராளுமன்றத்தின் முதல் தமிழ்ப் பெண் பாராளுமன்ற உறுப்பினர் இவராகும். ஆனால் இதை யாரும் பெருமையாக கொள்ளமுடியாது. இவர் ஐக்கிய தேசியக்கட்சியால் நியமிக்கப்பட்ட ஒருவரே தவிர தமிழ்த் தலைமையாலோ, தமிழ் மக்களாலோ தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பெண்ணல்ல. இதே பெண் 1989ம் ஆண்டு திகாமடுல்ல (அம்பாறை மாவட்டம்) தொகுதியில் பொதுத்தேர்தலில் நின்று போட்டியிட்ட போது தோல்விகண்டார்.

மூன்றாமவர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன். இவரது கணவர் புலேந்திரன் விடுதலைப் போராளிகளால் கொல்லப்பட்ட பின்பு இவர் தனது கணவரின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகி 1989ம் ஆண்டிலும் 1994ம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் வன்னித்தொகுதி பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். தமிழர்கள் சற்றுக் கூடுதலாக வாழும் வன்னிப் பிரதேசத்திலிருந்து தமிழ் மக்களால் (?) தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பெண்ணாக இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் இவரை மட்டுமே பார்க்க முடிந்தாலும், சிங்களத் தலைமையைக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சிதான் இவரை வேட்பாளராக நிறுத்தியதே தவிர, எந்தத் தமிழ்த் தலைமையுமல்ல என்பது கருத்தில் எடுக்கப்படவேண்டிய விடயமாகும்.

தமிழ்த் தலைமைகளும், தமிழ்க்கட்சிகளும் தங்கள் தேர்தல் கால கோசங்களுக்காகவும், தங்கள் கட்சியை அலங்கரிக்கும் மாதர் முன்னணிக்காகவும் மட்டுமே தமிழ்ப் பெண்களைப் பயன் படுத்தினார்களே தவிர பாராளுமன்றத்திலோ, உள்ளூராட்சி சபைகளிலோ தமிழ்ப் பெண்களுக்கு இடமளியாது ஆணாதிக்கத்தைக் கட்டிக் காத்தார்கள். இலங்கைத் தமிழர் கட்சிகளில் முக்கியமாகத் திகழ்ந்த தமிழரசுக்கட்சியை எடுத்துக் கொண்டால், அக்கட்சியில் தங்களை அர்ப்பணித்து வேலை செய்தவர்களான திருமதி பூபதி அருணாச்சலம் (சாவகச்சேரி), திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் (மூளாய்), திருமதி செல்வநாயகி அமரசிங்கம் (மட்டுநகர்), திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை (காரைநகர்), பத்மாவதி வேலுப்பிள்ளை (பருத்தித்துறை), திருமதி பொன்னம்மா அழகரட்ணம் (உரும்பிராய்), திருமதி அன்னலஷ்மி பொன்னுத்துரை (உரும்பிராய்-சிவகுமாரனின் தாய்), சங்கானை அம்மா (பெயர் தெரியவில்லை), திருமதி உலகசேகரம் (மட்டுநகர்), திருமதி கோமதி வன்னியசிங்கம்(யாழ்ப்பாணம்), திருமதி கலா தம்பிமுத்து (மட்டுநகர்), மங்களா கிறிஸ்தோபர் (சுன்னாகம்), திருமதி பிலோமினா லோறன்ஸ் (திருகோணமலை), திருமதி சின்னப்பு அழகம்மா (கட்டுவன்) போன்றவர்கள் வரலாற்றில் குறிப்பிடத் தக்கவர்கள். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திருமதி கோமதி வன்னியசிங்கம், மங்களா கிறிஸ்தோபர், திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை போன்ற பெண்கள் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராக நின்று போராடி சிறை சென்றவர்களாகும். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தனது கணவருடன் பனாகொட இராணுவமுகாம் வரை சிறை சென்றவராகும். இவர்கள் போல் பெயர் மறந்த, பெயர் தெரியாத பலநூறு பெண்கள் இருந்தார்கள். ஆனால் யாவரும் ஆணாதிக்கத்திற்கு உட்பட்டு கட்சிக்குள் குரலற்றிருந்தார்கள்.

1959ம் ஆண்டு டிசம்பர் மாதம் கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வன்னியசிங்கத்தின் மரணத்தைத் தொடர்ந்து இடைத் தேர்தலுக்காக திருமதி கோமதி வன்னியசிங்கத்தின் பெயர் தமிழரசுக் கட்சியில் முன்மொழியப்பட்டது. திரு. வன்னியசிங்கத்தின் மறைவினால் ஏற்பட்ட உணர்ச்சியால் எடுக்கப்பட்ட முடிவாகவே திருமதி வன்னியசிங்கத்தை இடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சி முன்மொழிய எடுத்த முடிவு அமைந்தது. காரணம் இடைத் தேர்தல் நடைபெறாமல்பின்பு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருமதி கோமதி வன்னியசிங்கத்தை தமிழரசுக்கட்சி மறந்து விட்டது.

தமிழரசுக்கட்சியிலும், பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இரவு, பகல் பாராது உழைத்தது மட்டுமல்லாது, பலமுறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு துன்பங்கள் அனுபவித்து இதனால் சமூகத்தில்பல வேதனைகளுக்கும் ஆளான மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தை கூட பாராளுமன்ற அரசியலிலோ அல்லது உள்ளூராட்சி அரசியலிலோ இந்தத் தமிழ்த்தலைமைகள் முன்னுக்குக் கொண்டுவர முயலவில்லை. இவரது கணவர் திரு. அமிர்தலிங்கம் அரசியல் படுகொலை செய்யப்பட்ட பின்னர் தீவிர அரசியலில் ஈடுபட விரும்பியும் திருமதி மங்கையற்கரசி எந்த ஒரு தொகுதியிலும் அபேட்சகராக நியமிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வரவில்லை.

தமிழரசுக்கட்சி, பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமல்ல தமிழ்ப் பிரதேசங்களில் இருந்த தமிழ்க் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி போன்ற எந்தவொரு கட்சிகளும் பெண்களுக்கு அரசியலில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதே உண்மை. அதுமட்டுமல்ல இக்கட்சிகளின் நிறைவேற்றுக் குழுக்களில் எந்தவொரு பெண்ணும் இடம்பெறவில்லை. ஆரம்பத்தில் தேசியக்கட்சி என்ற கட்டுக்குள் அடங்கக்கூடியதாக இருந்த இலங்கை தேசிய காங்கிரசின் அதிகார மட்டத்தில் மு.நல்லம்மா, கங்குலி, மகேஸ்வரி என்ற தமிழ்ப்பேசும் பெண்கள் இருந்தார்கள் என்பது மனதுக்கு நிம்மதி தரும் செய்தியானாலும் இவர்களும் அங்கே குரல் அற்றவர்களாகவும், எதுவும் செய்யமுடியாதவர்களாகவும் ஆண்களின் முடிவுகளுக்கு தலையாட்டுபவர்களாகவும் இருந்தார்கள் என்பதே உண்மை.

சிங்கள மக்களின் விகிதாசாரத்துடன் ஒப்பிடும்போது குறைவாக இருந்தாலும், சிங்களக்கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் நியமித்த பெண் அபேட்சகர்களின் அளவுக்கு தமிழ்க்கட்சிகள் ஒரு தமிழ்ப் பெண்ணையாவது நியமிக்கவில்லை என்பது தமிழ்த் தலைமைகளிடம் காணப்பட்ட ஆணாதிக்க குணாம்சத்தை தெளிவு படுத்துகிறது. 1952, 1956, 1965, 1977 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்ட சிங்களப் பெண்களின் பட்டியல் உதாரணத்துக்குக் கீழே தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ம் ஆண்டுத் தேர்தல்

திருமதி டொரின் விக்கிரமசிங்கா
திருமதி குசும்சிறி குணவர்த்தன
திருமதி விவியன் குணவர்த்தன
திருமதி கிளாடா ஜயசூரிய
திருமதி விமலா விஜயவர்த்தன
திருமதி எஸ்மி பெரேரா
திருமதி தமராகுமாரி இலங்கரட்ன
திருமதி சீதாகுமாரி வல்கம்பாய
திருமதி டோனா கெரோலின் ரூபசிங்க
திருமதி என்.எச். சீலவத்தி
திருமதி ஜயசிங்க
திருமதி புளொரன்ஸ் சேனநாயக்க

1956ம் ஆண்டுத் தேர்தல்

திருமதி குசும்சிறி குணவர்த்தன
திருமதி விவியன் குணவர்த்தன
திருமதி கிளாடா ஜயசூரிய
திருமதி விமலா விஜயவர்த்தன
திருமதி விமலா கன்னங்கரா

1965ம் ஆண்டுத் தேர்தல்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க
திருமதி சோமா விக்கிரமநாயக்க
திருமதி விமலா விஜயவர்த்தன
திருமதி தமராகுமாரி இலங்கரட்ன
திருமதி எம்.டி.பொன்சேகா
திருமதி விமலா கன்னங்கரா
திருமதி சீதா செனவிரத்தின
திருமதி விவியன் குணவர்த்தன
திருமதி குசாலா
திருமதி குசும்சிறி குணவர்த்தன
திருமதி குசுமா இராஜரட்ன
திருமதி ரணித்தா ரட்னாயக்க
திருமதி உக்கு மெனிக்கே

1965ம் ஆண்டுத் தேர்தல்

திருமதி சோமா செனநாயக்க
திருமதி நீனா விஜேசூரிய
திருமதி மல்லிகா ரத்வத்த
திருமதி ராணி விமலசேன
திருமதி விவியன் குணவர்த்தன
திருமதி நந்தா டி சில்வா
திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க
திருமதி எரின் செனநாயக்க
திருமதி மாலினி சந்திரசிறி
திருமதி தமராகுமாரி இலங்கரட்ன
திருமதி ரேணுகா ஹேரீத்
திருமதி பியசீலி ரத்னாயக்க
திருமதி விமலா கன்னங்கரா

(நன்றி - சரிநிகர்)

பாராளுமன்றத்தைப்போலவே இலங்கை அரசியல் இயந்திரத்தில் செனட் சபை என்ற ஒரு அமைப்பும் இருந்தது. இச்சபையானது அரசியல் கட்சிகளால் (முக்கியமாக ஆளும் கட்சியால்) நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சபையாகும். 1947ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டுவரை இருந்த இச்சபையில் எந்தவொரு தமிழ்ப்பெண்ணும் நியமிக்கப்படவில்லை. நடராஜா, மாணிக்கம், நல்லையா போன்ற ஆண்களை மட்டுமே தமிழரசுக்கட்சி இச் சபைக்கு தெரிவு செய்தது.

அரசியல் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் மனைவி 1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எங்காவது ஒரு தொகுதியில் தான் போட்டியிட விரும்புவதாக கேட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அக்கோரிக்கையை நிராகரித்து விட்டது. இதன் பலனாக திருமதி யோகேஸ்வரன் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை நாடினார். தானே கரையேற முடியாத காங்கிரஸ் தலைமை திருமதி யோகேஸ்வரனை தனது தேர்தல் பட்டியலில், முன்னுரிமை கொடுக்காது, இணைத்துக் கொண்டது. காங்கிரசின் இம் முடிவானது ஒரு பெண்ணை முக்கியப்படுத்துவது என்பதைவிட காங்கிரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையிலான அரசியல் கோபதாபங்கள் என்னும் கணக்கில் ஒரு கூட்டல் கழித்தலாக திருமதி யோகேஸ்வரனை பயன்படுத்தியது என்றே கருதலாம்.

1970-1975ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம் ஒன்றே வழியென இயங்கிய தமிழ் இளைஞர் இயக்கங்களில் தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழீழ விடுதலை இயக்கம் (TELO அல்ல) போன்றவை குறிப்பிடத்தக்க இயக்கங்களாகும். இந்த மூன்று இயக்கங்களிலும் பாடசாலை மாணவிகள் உட்பட பல வயதினரான பெண்களும் மிக தீவிரமாக ஈடுபட்டு வேலை செய்தார்கள். தமிழ் மாணவர் பேரவையில் வள்ளி, அற்புதம் என்ற பெண்கள் நாங்கள் அறியக் கூடியதாக வேலை செய்தவர்கள். தமிழ் இளைஞர் பேரவையில் புஸ்பராணி, கல்யாணி, திலகவதி, ஊர்மிளா, கனகராணி, அங்கயற்கண்ணி, யோகராணி, சங்கானை அம்மா, குலம் அக்கா போன்ற பெண்கள் வேலை செய்தார்கள். தமிழீழ விடுதலை இயக்கத்தில் வேலை செய்த பெண்களில் கல்யாணி, புஸ்பராணி, ஜீவரட்ணராணி போன்றவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர்களாவர். ஆனால் இந்தப் பெண்களில் யாருமே தமிழ் மாணவர் பேரவையின் தலைமையிலோ, அல்லது ஆறு பேர் கொண்ட தமிழ் இளைஞர் பேரவையின் தலைமையிலோ அல்லது ஐந்து பேர் கொண்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமையிலோ இடம் பெறவில்லை என்பது வரலாறு எமக்கு இடித்துரைக்கும் காரமான உண்மையாகும்.

1975ம் ஆண்டுக்குப்பின் இலங்கை தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராட புறப்பட்ட இயக்கங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என ஐந்து முக்கிய இயக்கங்களை எடுத்துக் கொள்ளலாம். இந்த ஐந்து இயக்கங்களிலும் பெண்களின் முக்கியம் பற்றிப் பார்த்தால் அங்கும் ஆணாதிக்கத்தின் தாக்கம் இருக்கத்தான் செய்தது. இந்த இயக்கங்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள தலைமையில் பெண்களுக்கு இடமே இருக்கவில்லை.

ஆரம்பத்தில் ஈழவிடுதலைப்போராட்டத்தில் பெண்களை இணைத்துக் கொண்டவர்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகும். ஆனால் இங்கும் வெறும் போராளி என்ற நிலையிலே தான் பெண்களின் பங்கு இருந்ததே தவிர தலைமைக்கு ஈடாக யாருக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. நன்கு திட்டமிடப்படாத காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலுக்கான போர்முனையில் சோபா என்ற பெண்பலி கொடுக்கப்பட்டாள். இதை இந்த இயக்கம் தனது பிரச்சாரத்துக்கு நன்கு பயன்படுத்திக் கொண்டது. அவ்வளவுடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திருப்திப்பட்டுக்கொண்டது. போராட்டத்துக்கென வந்த பெண்களில் சிலர் இயக்கத்தின் இரண்டாவது, மூன்றாவது தலைமையிலிருந்த ஆண்களுக்கு மனைவியானதுதான் மிச்சம். இந்த மனைவியாக்கும் படலம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னணியில் மட்டுமல்லாது பரவலாக எல்லா இயக்கங்களிலும் நடைபெற்றது. போர்க்குணாம்சத்துடன் சமுதாய வேலியை பிய்த் துக் கொண்டு வெளியே வந்த பெண்கள் இந்த மனைவியாக்கல் மூலம் மீண்டும் வேலிக்குள் அடைக்கப்பட்டு அடுப்படிக்குள் தள்ளப்பட்டார்கள், வெறும் பிள்ளைகள் பெறும் இயந்திரமானார்கள்.

ஈழப்புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியவற்றில் பெரிதாக சொல்லும் அளவுக்கு பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் ஆரம்ப காலத்தில் (பிரபாகரன், உமாமகேஸ்வரன் பிரிவுக்கு முன்பு) இந்த அமைப்பில் மிக தீவிரமாக ஈடுபட்ட ஊர்மிளாவை வரலாற்றில் நாம் மறைக்கவோ மறந்துவிடவோ முடியாது. ஈழப் போராட்டத்தின் பொருட்டு வேலை செய்வதற்காக கடல்மார்க்கமாக தமிழ்நாடு சென்ற முதலாவது தமிழ்ப்பெண் ஊர்மிளா எனக்கொள்ளலாம். பிரபாகரன், உமாமகேஸ்வரன் பிரிவுக்குப்பின் ஊர்மிளா உமாமகேஸ்வரன் தலைமை யில் வேலை செய்தார். இந்த ஊர்மிளாவுக்கு எங்கும் தலைமையில் முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை, அவர் மிகவும் கொச்சைப்படுத்தப்பட்டு இறுதியில் வவுனியா காட்டுக்குள் அநாதையைப்போல்இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டது வரலாறு அளித்த கொடுமையாகும். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சுமார் 17 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழுவில் சரோஜினிதேவி (உஷா) என்னும் பெண் இடம்பெற்றதாக அறியமுடிகிறது. ஆனால் அங்கு இவர் குரலற்று மற்றவர்களின் குரலுக்கு தலையாட்டு பவராக இருந்திருக்க முடியும். காரணம் அங்கே பெரும்பான்மை யினர் யார் என்பதில் மூலம் தெளிவாகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் கால தாமதமாகவே பெண்களைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார்கள். 1986ம் ஆண்டுதான் விடுதலைப்புலிகளால் பெண்கள் களத்தில் இறக்கப்பட்டார்கள். ஆண் போராளிகளுக்கு நிகராக மிகவும் வலிமை மிக்க பெண்போராளிகள் நாளடைவில் இந்த இயக்கத்தில் இருந்தாலும் இவர்கள் வெறும் பெண்கள் அணியாக மட்டுமே இருக்கமுடிந்தது. விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் அணியின் முதல் தலைவியான சோதியாவும், இவரின் இறப்புக்குப்பின் அத்தலைமைக்கு வந்த ஜெயந்தியும், இவரைத் தொடர்ந்து தலைமையேற்ற ஜெனாவும் இவர்களைப்போன்ற தீரமிக்க பெண்போராளிகளான அனுஜா, தாரணி யாரை எடுத்துக் கொண்டாலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெண்போராளிகள் அணி என்ற கட்டுக்குள் அடைக் கப்பட்டவர்களாகவே இருந்தார்கள். மற்றைய இயக்கங்களைப் போலவே இங்கும் குறைந்த பட்சம் இரண்டாம் கட்ட தலைமையில் கூட பெண்கள் இடம்பெற வில்லை என்பது மிகவும் வேதனை தரும் விடயமாகும்.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து இலங்கைத் தமிழ்ப் பெண்கள் பாராளுமன்ற அரசியலிலும் சரி, உள்ளூராட்சி அரசியலிலும் சரி, தேசியவிடுதலைப் போராட்டத்திலும் சரி அரசியல் கட்சிகளின், போராட்ட இயக்கங்களின் ஆண் தலைமைகளால் பயன்படுத்தப்பட்டார்களே தவிர, அவர்களை தங்களுக்கு நிகராக கொண்டு வர முயற்சிக்கவில்லை எனச் சொல்லலாம். இது அவர்களுடைய தவறா அல்லது வேண்டுமென்றே செய்தார்களா என்ற ஆய்வுக் கப்பால் வழிவழியாக வந்த ஆணாதிக்கத்தின் வெளிப்பாடென்றே கொள்ளல் வேண்டும். பெண்கள் விடாப்பிடியாக போர்க் குணாம் சத்துடன் தொடரும் போராட்டங்களின் ஊடாகவே இத்த கைய-இதற்கு மேலான போக்குகளை தகர்த்தெறிந்து கொள்ளலாம். ●

# இராப்பயணம்

ஆடலரசன்




இரவு நேரப் பயணிக்கு
இழப்புத்தான்
வானவில்லும் பச்சை வயலும்

மலர்கள் இருந்த கொடிகளில்
மின்மினிகள்

விரைகிறது தொடர்வண்டி
அசுர தாளத்திற்கும்
அசராமல் பாடுகின்றன
பூச்சிகளும்
பாம்பை மறந்த தவளைகளும்

துவாரம் வழி
தீவட்டிச் சுடரில் ஒளிர்கிறது
சாவி தரும் பெண்முகம்

விரிகின்றது மழை
சன்னல் கண்ணாடியில்
சிவசமுத்திரம், குற்றாலம்

விரையும் வண்டி
அதிர்வில் அரண்ட மாட்டை
விளிக்கிறது கழுத்துமணி

சப்ததிசை பார்த்தேன்
கழைக்கூத்தாடி
உலை அடுப்பை
அணைக்கிறது மழை
கொதிக்கத் தொடங்கும் மனசு ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷாலினி உணவகம்
# SHALINI RESTAURANT

தங்கள் அன்பான உபசரிப்பாலும், அறுசுவை உணவாலும்
மக்கள் மனங்களில் மங்காத இடத்தைப் பெற்றவர்கள்
பாரிஸ் லாச்சப்பலில்
பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

# ஷாலினி உணவகம்

இலங்கை இந்திய உணவு வகைகள் எதுவானாலும்

- ☐ தோசை வகைகள்
- ☐ புரியாணி வகைகள்
- ☐ ரொட்டி
- ☐ கொத்து ரொட்டி
- ☐ இடியப்பம்
- ☐ தந்தூரி வகைகள்
- ☐ வடை, றோல்ஸ், பற்றிஸ்
- ☐ ஷாலினி சர்பத்

இன்னும் பல.

உங்கள் வைபவங்களுக்கு தேவையான உணவு வகைகள் ஓடருக்கு செய்து தரப்படும்

# SHALINI
# RESTAURANT

**23, RUE CAIL, 75010 PARIS.**

**TEL : 01 40 34 20 72**

**M° : LA CHAPELLE ou GARE DU NORD**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில முன்னுரைகள்

## நீர்கொழும்பூர் முத்துலிங்கம்

ஒருகாலத்தில் முன்னுரை என்ற அம்சம் பெரும்பாலும் ஒரு சம்பிரதாய பூர்வமான சடங்காகத்தான் இருந்தது. ஒரு நூல் எனில் அதற்கு அதை எழுதியவரோ அல்லது வேறு யாராவதோ ஒரு முன்னுரை எழுதவேண்டும் என்பது ஒரு நியதி போலும் இருந்தது. பெரும்பாலும் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளவே அவைகள் எழுதப்பட்டன.

ஆனால் இப்போது முன்னுரை என்பது மிகவும் சுவாரஸ்யமான விஷயமாகவும், முக்கியமானதாகவும் கருதப்படுகிறது. ஒரு படைப்பாளி தன் படைப்பின் மூலம் அணுகமுடியாத பல விஷயங்களைத் தன் முன்னுரைகள் மூலம் தெரிவிக்கின்றான். முன்னுரை என்ற பக்கங்களை பிரச்னைக்குரிய கருத்துக்களுக்கு களமாக்கிக் கொண்டவர்களில் முக்கியமாக **ஜெயகாந்தன், எஸ்.பொன்னுத்துரை** போன்றோரைக் கூறலாம். ஜெயகாந்தனின் எல்லா நூல்களுக்கும் அவர் எழுதிய முன்னுரைகள் மிகவும் பிரசித்தமானவை. அவருடைய முன்னுரைகளின் தொகுப்பே ஒரு தனி நூலாக வெளிவந்துள்ளது. எனினும் சிலர் இவற்றிற்கு விதிவிலக்கு. 842 பக்கங்களைக் கொண்ட **"மோகமுள்"** என்ற நாவலுக்கு அதன் ஆசிரியர் **தி.ஜானகிராமன்** ஒருபக்கம் கூட முன்னுரை எழுதவில்லை.

சில முன்னுரைகளைப் புரட்டிப் பார்க்கலாம் என்ற கருத்தில் நூல்களை இவை இவையென்று தெரிவு செய்யாமல் புத்தக அலமாரியில் இருந்து கைக்குக் கிடைத்த சில புத்தகங்களை அள்ளிக் கொண்டு வந்து முன்னுரைகளைப் புரட்ட வாரம்பித்தேன். அதில் முதலாவது புத்தகம் **"மோகமுள்."** அதில் முன்னுரையே கிடையாது.

"வாழ்வதாகச் சொல்கிறோம் ஆனால் உண்மையில் வாழ்கிறோமா? என்று கேட்ட கலைஞனின் வாழமுடியாமற் போன வாழ்வு அவன் வாக்குமூலமாய் ஒலிக்கின்றது." - என்ற வரிகளுடன் **"கண்மணி கமலாவுக்கு; புதுமைப்பித்தன்"** - என்ற நூலின் முன்னுரையை ஆரம்பிக்கின்றார் அதன் தொகுப்பாளர் **இளைய பாரதி** . அவருடைய முன்னுரையின் மூலமாக புதுமைப்பித்தன் தன் மனைவிக்கு எழுதிய கடிதங்களைத் தேடி எடுத்த சரித்திரம் விரிகிறது. மேலும் இப்படிக் கூறுகிறார்.

"சமீபத்தில் ஒரு நாள் '**சிறுகதை கதிர்**' இணையாசிரியர் பெ. கருணாகரன் அவர்களும் நானும் புதுமைப்பித்தன் அவர்களின் மகள் திருமதி. தினகரி சொக்கலிங்கம் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது இந்தக் கடிதங்களைப் பற்றிச் சொன்னார்கள். என் மனசில் மூடிக்கிடந்த கோடிக்கதவுகளும் ஒரு தட்டலில் திறந்தன. ஆயிரம் சரவிளக்குகளும் ஒரே கணத்தில் பிரகாசித்தன. இத்தனை நாள் நான் எதைத் தேடி அலைந்தேனோ அந்த மூலப்பொருளைத் தரிசித்துவிட்டேன்."

மேற்கொண்ட வரிகளில் இருந்து இளையபாரதியின் வேகமும், வீச்சும் வெளிப்படுகிறது.

இதேபோல் எஸ்.பொவின் சமீபத்தில் எழுதப்பட்ட முன்னுரை ஒன்றில் கிண்டலும் நக்கலும் வெளிப்படுகிறது. (**வ.அ. இராசரத்தினம்** எழுதிய **ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது** என்ற சிறுகதைத்தொகுதி) அதைப் பார்ப்போம். எஸ்.பொ. பின்வருமாறு கூறுகிறார்.

1956ம் ஆண்டின் ஆட்சி மாற்றம் இலங்கை முற்போக்குக்காரருக்கு யோகமாய் வாய்த்தது. தனிச்சிங்கள பேரினவாதத்தினை வலியுறுத்தும் பணிகள் நடந்தபொழுது தமிழர்களுடைய பராக்குகள் முழுவதும் தார்ச்சட்டி ஏந்தி, வீர கோஷங்கள் எழுப்புவதிலே திரும்பியது. தமிழ் கலை - இலக்கிய முயற்சிகளை தமிழின் விமுக்திக்கான கருவியாக்கும் அக்கறை, ஆங்கில தாஸர்களான அக்காலத் தமிழர் தலைமைத்துவத்தின் பிடிமானத்திற்குள் சிக்கவில்லை. இதிலுள்ள வெற்றிடம் ஆக்கிரமிக்கப்படலாம் என்பதை கம்யூனிஸ்டுகள் சரியாகவே நிதானித்தனர். அதற்கு ஆவன செய்யும் அரசியல் சகாயம் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த பொன். கந்தையா மூலம் கிட்டியது. அதே சமயம் சோஷலிஸ நாடுகளின் தூதரகங்கள் கொழும்பிலே கடை திறந்தன. அக்கடைகளிலே சிற்றூழியர்களாகும் வாய்ப்பும் 'லோக்கல்' கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைத்தன. கலை - இலக்கிய விவகாரங்கள் மூலம் ஊடுருவல் செய்வது வசதியானது என்கிற வியூகம் பிறந்தது. விமர்சனம் என்று பெயர் பண்ணிக்கொண்டிருந்த இலக்கியத் தரகர்கள் படிப்பாளிகளாகவும் இருந்தார்கள். அவர்கள் தத்துவப் பேராசான்களாய் நிவேதிக்கப்பட்டார்கள்.

"கவிதைக்கு மூனாவே கம்பன் - நாவலுக்கு ஈனாவே கோர்க்கி, சிறுகதைக்கு டானாவும் டோனாவும் மன்னர்கள் என்று பிரதிஷ்டைகள் அவசர அவசரமாக நிகழ்ந்தன. பிரசுரகளங்கள் ஆக்ரமிக்கப்பட்டன. கைலாசபதி உபயம் மின்னாமல் முழங்காமல் முற்போக்கு தர்பார் ஈழத்து தமிழ்ப்படைப்பாளிகள் மீது திணிக்கப்பட்டது.

இப்படி முன்னுரையில் தன் கருத்துகளை எழுதிக்கொண்டு வரும் எஸ்.பொ. ஒரு இடத்தில் இப்படிக் கூறுகிறார்.

"டால்ஸ்டாய்,தாஸ்தாவேஸ்கி, மாக்ஸிம் கோர்க்கி ஆகியோர் ருஷ்ய மக்களுடைய வாழ்க்கைக் கோலங்களை வலுவாக நேசித்து எழுதினார்கள். அதை சுவைப்போம். ஆனால் அவர்களுடைய சிருஷ்டிகளிலே வரும் பாத்திரங்களுக்கு சிலோன் சொக்காய் மாட்டி கபில நிறக் கண்களிலே சொக்குதல் எத்தகைய வெகுளித்தனம்?"

மேற்கொண்ட முன்னுரை வரிகளின் மூலம் எஸ்.பொ.வை நாங்கள் சந்திக்கின்றோம். இதுவும் ஒரு இலக்கியச் சந்திப்புத்தான்.

இனி ஜெயகாந்தனை சந்திப்போம். அவர் தன்னுடைய நாவலுக்கு என்ன நடந்தது என்பதை தன் முன்னுரையில் எங்களிடம் கூறுகிறார்.

"இந்த ரிஷிமூலம் என்கிற கதையை நான் மூன்று வாரம் தினமணி கதிரில் எழுதினேன். அதன் பிறகு தினமணி கதிரில் வாசகர் கடிதம் ஒன்றைப் பிரசுரித்து "இனிமேல் இது போன்ற கதைகள் தினமணி கதிரில் பிரசுரிக்கப்படமாட்டாது"- என்ற ஆசிரியர் குறிப்பும் வந்தது. இந்தக் கதையை எழுதியதன் மூலம் ஒரு நல்ல கதை எழுதி இருக்கின்றேன் என்பதைத் தவிர நான் இந்தச் சமுதாயத்தை உயர்த்தி விட்டதாகவோ கெடுத்து விட்டதாகவோ நம்பவில்லை. அப்படிப்பட்ட நோக்கங்கள் எதுவும் கதை எழுதுகின்றவன் என்கின்ற முறையில் எனக்குக் கிடையாது."

மேலும் ஜெயகாந்தன் தன் முன்னுரையில் "என்னிடம் யாரும் சமுதாயப் பூச்சாண்டி காட்டவேண்டாம். இந்தச் சமுதாயத்தை என் எழுத்து கெடுத்துவிடும் என்ற குற்றஉணர்வு எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துவிடும் என்ற குற்றஉணர்வு எனக்கு இல்லை. எனது எழுத்துக்களை பாடப் புத்தகமாகப் போடச்சொல்லி நான் மனுப் போடவில்லை. எனது எழுத்துக்களுக்கு அந்தத் தகுதி இல்லை என்று சொல்ல வர வில்லை. உங்கள் பள்ளிகளுக்கு அந்தப் பக்குவம் வரவில்லை என்று சொல்லுகி றேன்."

"நான் நிர்வாண நிலைகளை வர்ணித் துவிட்டதாக சிலர் கண் கூசுகிறார்கள். எனது நிர்வாணத்திலும் தாய்மை உண்டு. இங்கே பலர் கதைகளில் பாத்திரங்களுக் குக் கட்டுகிற ஆடைகளே மிகவும் ஆபா சமானவை."

திரு.லா.ச.ராமாமிர்தம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு பரவலான கருத்து அவரது எழுத்துக்கள் புரிவ தில்லை. அவருடைய நினைவலை களான நூலின் பெயர் 'சிந்தா நதி' அவர் தன் முன்னுரைக்கு வைத்த பெயர் 'சல சல' அவரின் முன்னுரை புரிகிறதா என்று பார்ப்போம்.

"மனம் திறந்து வெளியிட்டுக் கொண் டபோது அது ஒன்றும் மார் தட்டிக் கொள் ளும் விஷயமாக இல்லை. ஏதோ வேளை க்கூரில், சொல்லின் மந்திரக்கோல்பட்டு இந்த அலைகள், வாசகனின் தருணத் திற்கு ஏற்றபடி ஆத்மாவின் திறவு கோலாக அமைந்திருக்கையில் ஒரு வித மான அச்சம் தான் காண்கிறது. தரிசன பயம். மானுடத்தின் மேல் மரியாதை. Reverence for life - இந்த நிலைகளின் தூய் மையை ஆய நான் தக்கோன் அல்லன். இதோ நிறுத்திவிட்டேன்.

புரிவதைக் காட்டிலும், வாசகன் உண ரக்கூடியது, உணரவேண்டியது விஷயத் தின் தாக்குதல். அந்த முதல் பாதிப்பு. Impression, Impact. அந்த மோதலில் ஏற்ப டும் உள்நசுங்கல். (Inner Dent) - இதுதான் ரத்தத்துடன் கலந்து உள்சத்தில் ரஸா யனம் நிகழ்வது.

*சின்னச் சின்ன அலைகள், படு படு*
*ஆழங்கள்*
*பிரயாணம் பகு பகு தூரம்*
*சிட்டச் சிட்ட ஸ்வரங்கள் கன கன*
*ராகங்கள்*
*எட்ட மேருக்களின், கிட்டக் கிட்ட*
*நிழல்கள்*
*உயர உயரத் தாருவின் இலைகள்*
*பூமிமேல் நெய்யும்*
*குட்டிக் குட்டி கோலங்கள்*
*மின்னா மினுக்கி, மின்மினிப் பூச்சிகள்*
*ஸக ஸக ஸரிஸா*
*கம கம கதஸா*
*தஸபகரிகா, கம தஸ கஸா*

சிந்தா நதி என் எஸ்டேட்டில் ஓடும் எனக்கே உரிய சொந்த நதி அல்ல. சிந்தா நதி உயிரின் பரம்பரை. லோகோ ஸ்ருதியின் மீட்டல் கங்கை இதன் கிளை'

என்னுடைய ஊரான நீர்கொழும்பில் இருந்து சுமார் 12 மைல் தூரத்தில் ஒரு கிராமம். அந்தக் கிராமத்துக்கு கல்லொ லுவை என்று பெயர். ஒரு சிறு முஸ்லீம் கிராமம். அங்கே மு. பஷீர் என்ற ஒரு இலக்கிய நண்பர். ஒரு சிறுகதைத் தொகுதி வெளியிடுவதற்காக எத்த னையோ வருடங்கள் தவங்கிடக்க வேண் டியதாயிற்று. கடைசியில் இப்போதுதான் நூலுருவில் வெளிவந்தது. டொமினிக் ஜீவாவின் மல்லிகைப் பந்தலின் வெளி யீடு. அதன் முன்னுரையில் மு. பஷீர் தன் துயரங்களை அலசுகிறார் இப்படி.

"நீண்ட கனவொன்று இன்று நனவா கிறது. கதை சொல்லும் நுட்பத்தை அடைய நான் பல தசாப்தங்களாக தேடல் சுமந்த நதியாய் நீண்ட யாத்திரை செய்திருக்கின்றேன். அகவயப்பட்ட வாழ் வின் தாக்கங்கள் என்னை வீழ்த்திட முனைந்தபோது இந்த எழுத்து ஒன்றுதான் என்னைத் தலை நிமிர்ந்து நிற்க வைத்தது.'

"ஒரு படைப்பாளி என்கிற பக்குவம் வருவதற்கு முன்பே என் ஆன்மாவை சமூகப் பிரக்ஞை தொட்டிழுத்திருக்கின் றது. பிரமுக அந்தஸ்துக்காகவன்றி மானிட நேசிப்புக்காக அரசியல், கலை, இலக்கியம், தொழிற்சங்கம் என்றெல்லாம் சுயலாபங்கள் இன்றி இயங்கி என்னைத் தாரை வார்த்திருக்கின்றேன்."

"அன்றாட வாழ்வில் பெற்ற அவஸ் தைகளே அனுபவவேர் பாய்ச்சி என்னுள் படைப்புக் கிளர்ச்சியைத் தருகின்றன."

"உள்மனதை உறுத்தும் நிகழ்வுகள், உயிரணுக்களை உலுப்பும் அவலங்கள் என்னுள் அணை உடைத்துப்பாய, நான் ஒரு வடிகாலைத் தேடியலைந்தேன்."

"எழுத்து எனக்கு வலுமிக்க கவசமா கியது."

"பரிமாணங்கள், பிரக்யாதிகள் அணிந்து காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ள என்னிடம் எதுவுமே இல்லாத சாதாரணீயன் நான். எனது பலமும் பல வீனமும் என் படைப்புகளிலும் இருக்கும் நான் வேறு என் படைப்பு வேறு என்று என்னால் பிரகடனப்படுத்த இயலாத வரை"

இதே முன்னுரையில் மு. பஷீர் அவர் கள் வேறு இருவரின் முன்னுரையில் குறிப் பிட்ட கருத்துக்களையும் குறிப்பிடுகிறார். இருவரும் மலையாள இலக்கிய கர்த்தாக் கள்.

*"விமர்சனங்களை திறந்த மனதுடன் வரவேற்பவன் நான். எந்த முரண்பாடு களிலும் கூட ஒரு சிறந்த படைப்பாளி அவ னது படைப்புகள் குறித்து எளிதில் திரு ப்தியடைந்து விட முடியாது."* - இது மலை யாள இலக்கிய ஜாம்பவான் **வைக்கம் முகம்மது பஷீர்**.

*"என்னுடைய அனுபவங்களை எல் லாம் எழுத்தில் வடிக்க எனது ஆயுள் போதவில்லை. என் சிறந்த படைப்பை இனிமேல் தான் நான் எழுதவேண்டும்."* - இது சிறந்த மலையாள சிருஷ்டிகர்த்தா **வாசுதேவன் நாயர்**.

**«துறைமுகம்»** என்ற நாவலை எழுதிய **தோப்பில் முகம்மது மீரான்** அவரின் முன்னுரையில் அவருடைய நாவலில் வரும் கதாமாந்தர்கள்-களம் இவைகளைப் பற்றிக் கூறுகிறார்.

"இதில் வரும் கதாபாத்திரங்கள் என்னுடைய முந்தைய தலைமுறையினர். அவர்களில் சிலர் இப்போதும் உயிர் வாழ்ந்து வருகிறார்கள். இதில் வரும் நிகழ்வுகளுக்கு அனுபவ சாட்சிகளாக அன்று செம்மண் தரையில் நான் நெஞ்சு கொடுத்து ஊர்ந்த பருவம் அப்போது நம்நாடு சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. நான் பிறந்தது 1944ல் . அன்றைய மக் களின் வாழ்க்கையை இன்று உங்கள் முன் திறந்து காட்டுகிறேன். என்முயற்சி வெற்றியோ தோல்வியோ நீங்கள் முடிவு செய்யுங்கள்."

"ஒரு நாவலுக்காக நான் தேடி அலைந்து தேர்வு செய்த கதாபாத திரங்கள் அல்ல இதில் வருபவர்கள். என்னை இரவு பகலாக வேட்டையாடித் திரிந்த கதாபாத்திரங்களைத்தான் உங் கள்முன் பின்வரும் பக்கங்களில் சிறைப் படுத்தி நிறுத்தியுள்ளேன். அவர்களில் பலர் வாழ்ந்து தொலைந்தவர்கள். சிலர் இறந்து வாழ்பவர்கள். அவர்களுடைய அந்திமங்களை என் கண்ணால் பார்த்தவன் நான். எலும்புருவில் கந்தலு டன் ஒட்டிப்போன வெற்று வயிற்றுடன் தெருவில் திரிந்து நாவரண்டு மடிந்த பரிதாபங்கள்."

ooo

கடைசியாக, **பஞ்சமர்** என்ற தனது நூலில் தன் முன்னுரையை **கே.டானியல்** இப்படித்தான் ஆரம்பிக்கின்றார். "முதலில் நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள் ளவேண்டும். மக்களிடம் படிப்பது, பிறகு அதையே மக்களிடம் திருப்பிக் கொடுப பது என்ற கொள்கையை முன்னிறுத்தி எழுதி வருபவன் நான். தனிமனித சுதந்தி ரத்தை அழித்தொழித்து, எல்லாம் எல்லோருக்குமான சுதந்திரத்தைப் பெறு தல் என்ற முனைப்புடன் நான் பார்ப்ப வைகளை, அனுபவிப்பவைகளை எனது அடிப்படைக் கொள்கைக்கிணங்க எழுதி வருகிறேன்."-என்று தன்னை தன் எழு த்தை, கொள்கையைப் பிரகடனப்படுத்தி யுள்ளார்.

இப்போதெல்லாம் இலக்கிய சர்ச்சை கள் - சண்டைகள் - தாக்குதல்கள் - கிண் டல்கள் - நையாண்டிகள் எல்லாம் பெரும் பாலும் முன்னுரைகளில் தான் முகம் காட் டுகின்றன. நூலை எடுத்தவுடன் முன்னு ரையைப் படிப்பதில் தான் ஆர்வம் ஏற்படு கிறது. இதுவும் ஒருவகை ஆரோக்கியம் தான்.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### லி – தை – போ கவிதைகள்:

# நிலவுப் பொட்டும் என் தாய்நிலமும்

ந.சுசீந்திரன்

கவிதை புனைதலே அரசதொழிலுக்கான திறமைப் பரீட்சையாக உலகில் எங்கோ ஒரு காலத்தில் இருந்திருக்கின்றது என்பதை அறியும் போது சந்தோசமாகத்தான் இருக்கின்றது. ஒரு உயர் கலாசாரமொன்றின் மனித இதயங்களுங்கூட உயர்வில் முற்றிப் பழுத்திருந்திருக்கின்றன. அன்றைய சீனாவில் தாங் (Thang) இலக்கியக் காலம் (கி.பி.618- கி.பி. 906) என்ற இலக்கியக் காலப் பகுப்பு உன்னத இலக்கியத்தின் அறுவடை சிறந்த காலம் என்று கொள்ளப்படுகிறது. அந்த ஆட்சிக் காலத்தில் தான் அரச சேவைக்குக் கவிதை உணர்வே சீனாவில் மனிதனின் திறமையாக கணிக்கப்பட்டதாம். இதனால் சுமார் இரண்டாயிரம் கவிஞர்களின் ஐம்பதினாயிரம் கவிதைகளும் கவனமாகத் தொகுக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கவிதைகள் எழுதிய புலவர்கள் பலர் உயர்பதவி வகித்தோராயும், மந்திரி பிரதானிகளாயும், மன்னர்களாகவும், அதிகாரிகளாகவுமே இருக்கின்றனர். ஆனாலும் அதிகார எதிர்ப்புக் குரலாகவும், இனிவரும் இலக்கியப் போக்கைச் சமைக்குங் குரலாகவும் தமிழ் இலக்கியத்தில் எம்மூர்க் கணியன் பூங்குன்றனைப் போலவும், மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி மருதனார் போலவும் இவர்களுக்குள் இரண்டு குரல்கள் உரத்து ஒலிக்கின்றன. அது லீ-தை-போ (Li -Tai-Po), துா-பு(Thu-Fu) என்ற இரண்டு கவிகளின் குரல்கள்.

லீ-தை-போ (Li -Tai-Po) எனும் (Li என்பது ஒளிருந் தாரகை என்று பொருள்) உலக மாமேதை கி.பி. 701 இல் பிறந்தவன். அவனது காலம் அறுபத்தியொரு ஆண்டுகள். வசதி படைத்த குடும்பத்தில் பிறந்து நாடோடுகாலியாய்ச் சஞ்சரித்துப் பின்னர் அரசன் வேண்டுகோளின் பேரில் தலைநகர் சங்கானில் (Chang¦an) அரசவைக் கலைஞனாய் வாழ்ந்திருக்கின்றான். அரண்மனை வாழ்வோடும் அதிகாரத்தோடும் முரண்பட்டு, லுசான் (Lushan) எனும் அதிதொலைவிலுள்ள நகருக்குச் சென்று நாடோடியாய் வாழும் போதும், அங்கும் புரட்சிக்காரரோடு தொடர்பு கொண்டிருந்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் இன்னும் தொலைவிற்கு நாடு கடத்தப்பட்டார். ஒரு சில வருடங்களில் கி.பி 758 ம் ஆண்டளவில், மன்னிப்பு வழங்கப்பட்ட மனிதனாய் தன் தாய் நாடு திரும்பும் வழியிலேயே அவன் வாழ்வு முடிந்து போகின்றது.

இவன்பற்றி, இவனது பிறப்புக்கு முன் தாய் கண்ட கனவு பற்றியெல்லாம் பல்வேறு கதைகள் நிலவுகின்றன.

இவன் மதுபோதையில் மகிழும் கவிஞனாக இருந்திருக்கின்றான். ஒருமுறை நிலவெறியும் இரவொன்றில் அந்த நிலவிலே சொக்கி, ஆனந்த வயப்பட்டவனாய் அவன் நின்றிருந்தபோது தேவதைகள் அவனை வானத்து வெள்ளிகளிடத்தே கூட்டிச் சென்றிருக்கின்றனர். மீண்டும் அவன் பூமியில் தோணியொன்றின் விளிம்பிலே இறக்கி வைக்கப்பட்டான். தோணியின் சமநிலை சரிந்து இவன் நீரினுள் மூழ்கித் திணறியபோது சிறிய திமிங்கிலங்களும் கடற்தேவதைகளும் இசை ஆர்ப்பரித்து ஆரவாரத் தோரணைகளுடன் இவனைக் குதூகல மனிதர்கள் மட்டும் வாழும் மலைக்கு எடுத்துச் சென்று விட்டதாகவும் ஒரு கதை இருக்கின்றது.

அந்தக் காலத்தில் இயற்கையும் மனிதனும் ஒன்றில் இருந்து ஒன்று பிய்ந்து சிதறாத - இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவை ஓர் ஆதி அமெரிக்கன் (செவ்விந்தியன்) இப்படிச் சொல்வான்: "...வாசம் மிக்க மலர்கள் எங்கள் சகோதரிகள். மானும் குதிரையும் பெருங்கழுகும் எங்கள் சகோதரர்கள். பாறை மலைமுகடுகள் புல்வெளிகளில் படிந்திருக்கும் பனித்துளிகள் குதிரைக் குட்டியின் உடல் வெப்பம், மனிதன் எல்லாமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை..." இயற்கையிலிருந்து வலிந்து தன்னை அறுத்துக் கொள்ளாத, அதனை ஆக்கிரமித்து ஆட்சிப்படுத்தாத, காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்று உலகை விளங்கிய, கீழைத்தேய இலக்கியம் உச்சத்தில் இருந்திருக்கின்றது.

கொன்பூசியஸ் தத்துவத்தினை அடுத்து புகழ்பெற்று ஆளுமை செலுத்திய தத்துவமான லாவோட்ச (Laotse) என்பவர் உருவாக்கிய டாவோயிசத் (Tao) தத்துவக் காரணிகளை லீ-தை-போவின் கவிதைகளில் காணமுடிகிறது.

கடற்பறவைகளுடன் விளையாடுவதற்காக இளைஞர்கள் ஒவ்வொரு நாளும் கடலிலே ஓடம் வலித்துச் சென்று வந்தனர். ஒரு நாள் இவர்களது தந்தை தனக்காகக் கடற்பறவை ஒன்றினைப் பிடித்து வீட்டுக்குக் கொண்டுவருமாறு அவர்களிடம் கேட்டுக் கொண்டார். மிகவும் இலகுவானது என்று வாக்களித்த இளைஞர்கள் அன்று கடலுக்குச் சென்றபோது எந்தக் கடற்பறவையும் இவர்களை அண்மிக்கவேயில்லை. இக்கதை "எந்த நோக்கமுமின்றி இயல்பாகச் சுத்தமாயிரு" என்ற டாவோயிசத் தத்துவமாகும்.

இக்கதையின் வரியொன்று இவரது கவிதையில் வந்துபோகும். இவ்வாறே அனேக டாவோயிசத் தத்துவத்தை உணர்த்தும் பல்வேறு அம்சங்கள் இவனது பாடல்களில் நிறைந்து இருக்கின்றன.

முற்காலத்தில் அரசர்களும் அதிகாரிகளும் கொன்பூசியத் தத்துவத்தினையே கடைப்பிடித்தனர். ஆனால் புலவர்களும் கலைஞர் களும் லாவோட்ச(Laotse)யையும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாவோயிசத்தையும் விரும்பினார்கள். புலவர்களே பின்னர் கவிதை பாடி அதிகாரிகளான போது கொன்பூசியஸ் தத்துவத்தினை விரும்புவதாக நடித்திருக்கிறார்கள். ஆனால் உள்ளூர லாவோட்ச (Lao-tse)யை விரும்பினார்கள். இவ்வாறாக லீ-தை-போவின் காலத்தில், அதாவது தாங் பேரரசுக் (Thang dynasty) காலத்தில் டாவோ(Tao) தத்துவம் பின்னர் அதே அரசர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

இலைவிழுங்காலத்திற்கு இன்னொருபெயர் வேண்டுமானால் "தாங் இலக்கியம்" என்று சொல்லி விடலாம். இலையுதிர்த்த நெடு மரத்தின் வெற்றுக் கொம்பரில் பொன் இழைத்துத் தொங்கும்பட்டுச்சரிகையாய் இக் காலக் கவிதைகள், வரப் போகும் முன்பனிக் காலத்தை எதிர் கொண்டு மின்னும்.

ஒருமுறை லீ-தை-போவும் அரசனின் மந்திரியாய் இருந்த கூ யுவான் என்பவரும் குற்றமெதுவும் இல்லாமலே நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டனர். நதிக்கரையொன்றில் அடுத்துச் செய்வதறியாது இருவரும் குழம்பி நின்றனர். இவர்களைக் கண்ட மீனவர் ஒருவர் "நீங்களல்லவா முதன் மந்திரி உங்களுக்கு ஏன் இக் கதி நேர்ந்தது?" என்றார். அதற்கு மந்திரி "உலகம் முழுவதும் இப்போது சாக்கடையில் வீழ்ந்து விட்டது. நானும் அவர்களுடன் வீழவிரும்பவில்லை. மக்கள் அனைவரும் குடிகாரர்களாய் போதையில்இருக்கிறார்கள். நானும் அவர்களுடன் வெறிகாரனாய் இருக்க விரும்பவில்லை. இதனால் தான் என்னை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள்" என்று சொன்னார். அதற்கு அந்த மீனவர் "ஒரு சுத்தமானவன் உலகத்தோடு ஒத்துப்போகிறான். உலகம் சாக்கடையில் வீழ்ந்துவிட்டால் நீங்களும் உங்கள் பகுதியைத்தேடவேண்டியது தானே! மனிதர் எல்லோரும் குடித்துக் கொண்டிருந்தால் நீங்களும் உங்கள் கள்ளுப் பிளாவைத் தூக்குவது தானே!" அதற்கு மந்திரி "புதிதாகத் தன்னைக் கழுவியவன் தன் தொப்பியைத் தூசு தட்டிப் போட்டுக்கொள்வான். குளித்தவனோ ஆடைகளை உதறி உடுத்திக்கொள்வான். தூயதாய் இருக்கும் என் சிந்தை இந்தப் பொல்லாத உலகத்தின் அழுக்கில் தோய்வதா, என்னால் முடியாதது. நான் மீன்களின் வயிற்றுக்குள் செரித்துப்போதல் எவ்வளவோ மேல்" என்று ரைத்தார். மீனவர் சிரித்தவாறேதுடுப்பினை எடுத்து தன் ஓடத்தை வலிக்கத் தொடங்கினார். கூ யுவான் உடனே ஆற்றில் குதித்து விட்டார். இக் கதையோடு தொடர்புடையது தான் "சுத்தப் படுத்துதல்" என்ற கீழுள்ள கவிதை.

லீ-தை-போவின் கவிதைகள் பெரும்பாலானவை சோகம் நிறைந்தவை. சுமார் தொள்ளாயிரம் கவிதைகள் மட்டில் கிடைக்கின்றன. இரண்டொரு கவிதைகள் தமிழில் இங்கே:

## பச்சை நிறப் பொய்கை

இலையுதிர் காலத்து ஒளி விழுந்து
இலங்கும் அப் பொய்கை
அமைதியில் கிடந்தன அன்னச் சருகுகள்
அவை ஆடி மிதக்கவும்
மோதி மீளவும் ஏன் அவன் தொட்டான்
சிரிக்கும் தாமரைப் பூக்கள்
அவனுடன் தானே பேச விளைந்தன
வேதனை தாளாது - அந்த
ஓடமிருந்தவன் நெஞ்சம் உடைந்தது

## இரவுக்கு

இருட்டு வேலியொன்றில்
நிறத்திருக்கும் பழம் போலும் -என்
படுக்கை முன் வீழ்ந்தது நிலவின் பொட்டு.
நான் தலைதூக்கும் போதெல்லாம்-அப்
பொட்டுக்குள் சிறைப்படுவேன்-என்
தலை தாழும் போதெல்லாம்-என்
தாய் நிலம் தலைக்குள் குடைகிறதே

## ஜிங்-டிங்-சான் மலைமீது

பறவைகள் வானில் -உயரப்
பறந்து திரிந்தன
தொலைவினை நோக்கித்
தனியொரு மேகம்
அமைதியில் ஓடும்
நாங்கள் இருவர்
தனியாய் இருந்தோம்.
ஒருவரை ஒருவர்
ஒன்றி நோக்கின்றோம்
சோர்விலா நோக்கு

சோர்விலா நோக்கில்
நானும் என் ஜிங்-டிங்- சானும்[3]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை வைன் முன்னாக

கிழக்கிருந்து தென்றல்
ஏனோதானாக எமை வருடிச் செல்கிறது
மதுக்கிண்ணப் பச்சை வைன் பரப்பில்
மெலிதாக அலை நெளியும்.

வளை காற்றின் வன்முறையில்
சிறுமலர்கள் மண் வீழும் - என்
அழகுப் பெண் விரைவில்
போதை கவிந்து
கன்னஞ் சிவந்திருப்பாள்.

நீலம் பரப்பிக் குடில் போடும்
பழமரம் தான்- இன்னும்
எத்தனை நாள் பூப்பூக்கும் ?
ஒர் ஆடும் வெளிச்சம்
கனவு அதுவாய்
மாயங்கள் காட்டி மட்டும்
மறைந்து தொலைகிறது.

கதிரவன் எரிகிறான்
ஓடி வா ஆடுவோம் !

இளமைக் கொலுவிருந்தும்
ஓடிச் செல் வாழ்விதனை
ஓடியே சந்திக்காதவன்
துக்கமும் துயர்மூச்சும்
நரைகண்ட பின்னே
காற்றில் கரைகிறது.

## சுத்தப்படுத்துதல்

பன்னீரில் நீ உன்னைக் கழுவிக் கொண்டபோது
தொப்பியைத் தூசி தட்டி அணிந்துவிடாதே
சுகந்தத்தில் நீ உன்னைக் குளித்தெழுந்தபோது
ஆடைகளை உதறிவிட்டு அணிந்துவிடாதே

வாழுங்கால் மட்டும்
வெகு பரிசுத்தமாய் இருந்திட வேண்டாம்
ஆதி மனிதனென்பவன்
மறைந்திருக்கும் ஒளிக்கு[4] முன்னால்
சிரந்தாழ்த்துவான்.



## கேள்விச் செவியன்

வானரங்களும்
வாழ்வினைத் தின்ற சாமரங்களும்
கேள்விகளாலே தம்பசி தீர்ப்பன.

கேள்விகளோவெனில்
தம்பசி தீர்த்திட
எனது கழுத்திலும் ஆயுதம் வைப்பன
நானோவெனில்
செட்டைகளற்ற சுரங்க ரயில்களில்
குடங்கித் திரிகிறேன்.

கேள்விகள் அதிகம் எழுகிற சமயம்
பதியப்படாத அகதியை விடவும்
பீதியடைகிறேன்.

சரியான விடையின் கீழ்
அடிக்கோடிடவும்
பொருத்தமானதற்குப்
புள்ளடியிடவும்
ஆம் அல்லது இல்லை
என்று ஒரே வார்த்தையில் பதில் கூறவும்
வாழ்க்கை இலகுவாய் இல்லை.

எனக்கும்-
கேள்விகள்
பொக்கற்றுகளை நிறைக்கின்றன.
வழிந்து கீழே விழுந்து
காலில் மிதிபட்ட கேள்விப் பாம்பு
இப்படிச் சீறியது-

போராட்டம் உனதும் பக்கமா
அல்லவா ...?

இளவாலை விஜயேந்திரன்
190896, ஒஸ்லோ

---

1 சிவப்பிந்தியத் தலைவர் சீயால்த் அவர்கள், சிவப்பிந்தியர்களின் நிலத்திற்கு விலைபேசிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஃப்ராங்க்லின் பியேர்ஸ் க்கு 1854 ல் எழுதிய கடிதத்தின் ஒருசில வரிகள். (இனி,ஜன.'87, 'புனிதபூமி' தமிழில்:புவியரசு)

2 இக் கவிதைகள் குந்தர் டெபோன் (Günther Debon) அவர்களின் ஜெர்மன் வடிவத்தில் இருந்து தமிழ்ப்படுத்தப்பட்டன. (Herbstlich helles Leuchtenüberm See,1959, R.Piper & Co., München)

3 Ging-ting-schan: ஜிங் -டிங் எனும் மலை. schan = மலை

4 மறைந்திருக்கும் ஒளி: டாவோயிசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடி

க. கலாமோகன்



நித்யமும் அநித்யமும்.

சங்கேத பாஷைகளுக்குள் அர்த்தம் தேடுதலும் அர்த்தமற்றதே எனும் ஞான விழிப்பால்பதைத் தெழுந்து...

இமைகளைத் திறந்தால்...

கோடையின் கரங்கள் என்னை நோக்கி...
ஜன்னல் திரைகளை இழுத்து இருளை வருவிக்கும் இவன்...

கனவுகள் ஜனிக்கும்...

மயானங்கள் வந்து வெருட்டும்...

சொர்க்கம் எங்கே ?

"பிடி!" பொத்திய கையை அவள் முன் நீட்டினேன்.

....... ...... ...... ....... ..........

....... ...... ...... ........

தூக்கம் வந்ததால் கதையை நாளை தொடருவோம் என நினைத்துத் தூங்கினேன். காலையில் விழித்து தொடர வெளிக்கிட்டபோது - கைக்குள் எதனைப் பொத்தி அவளிடம் கொடுத்தேன் என்பது எனக்குப் பிடிபடவில்லை. சில தினங்களாக முயற்சித்தேன். பொத்திக் கொடுத்தது பிடிபடவேயில்லை. எனவே இது ஓர் முற்றுப் பெறாத சிறுகதையாகி விடுதலே பொருத்தம் என முடிவெடுத்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலரசியல்

## அலைதலில் கிளைத்து கலையத் தவிக்கும் குறிப்புகள்

ஜமாலன்

( இதுவரையில் அங்கும் இங்குமாக நான் எழுதி வந்தவை, யோசித்தவை, யூகித்தவை, இனி எழுத இருப்பவை என்பதாக எனது திட்டங்களின வரைபடமாகவே, இதனை உனக்கு எழுத துவங்கினேன். அது எந்த அளவிற்கு சாத்தியமாகி உள்ளது என்பதை நீதான் கூறவேண்டும். ஒருவேளை, இதை நீ முற்றிலும் மறுத்து ஒதுக்கினாலும் மகிழ்ச்சியே. நிச்சயமாக என்னிடம் நீ உருவாக்க விரும்பும் உணர்வுகளிலிருந்து விலகி நிற்கவே முயல்கிறேன்)

## பகுதி 1

## மொழி எந்திரங்கள்

### குறிப்புரை ஒன்று

#### மௌனத்தின் அலைக்கசிவு

முக்கியமான பிரச்சனை பற்றி, நீ எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முயல்வதான இந்த எழுத்தை, எங்கோ ஒரு மூலையில் அமர்ந்து நீ படிப்பாய் என்பது இதம் தருமென்று சொல்லலாம். ஒரு வகையில் உன் நினைவை மீட்டு எழுதி, அதன் இதத்தில் வாழ்தலின் வலியை மறந்து போக முயலும் எனது செயல் வேட்கையின் அரசியல் என்றும் சொல்லலாம். உன்னுடன் ஒரு அனுக்கமான உரையாடலை நிகழ்த்துவதற்கான முயற்சி அல்லது, நாம் எதிர்படுவதில் உருவாகும் இடைவெளியை குறைத்து நம்மை நெருக்கிக் கொள்வதற் கானதாகவும் கொள்ளலாம். இது உன்னை மீண்டும் குழப்பத்தில் ஆழ்த்துமா? அல்லது தெளிவடைய வைக்குமா? தெரியவில்லை. ஆயினும், குறிகளால் அடையாளப்பட்ட உடல்களிலிருந்து விலகிய ஒரு பரப்பில்.... உன்னிடம் கூறுவேன், சுயத்தின் தற்கொலைத்தலிலிருந்து தப்பிச் செல்ல முனையும் ஒரு உடல் நிகழ்த்த முனையும் விளையாட்டு, இந்த ஆடுகளத்திற்கு இரு உடல்கள் மட்டுமே தேவை, இரு குறிகளல்ல. 'ஒரே மாதிரியான இரண்டு பொருள்கள், ஒரே அமைப்பிற்குள் நிலவ முடியாது' - என்கிறது நவீன விஞ்ஞானத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான ப.்.வ்லியின் ' Exclusion Principle' ( தவிர்த்தல் கோட்பாடு). ஆக, வித்தியாசமற்ற ஒரே வடிவத்தையும், விதிகளையும், தர்க்கங்களையும் கொண்ட உடல்களின் இருப்பு ஒரே அமைப்பிற்குள் சாத்தியமில்லை. எனவேதான் உயிர்த்தல் என்பது வித்தியாசங்களின் ஆடுகளமாகவும், வன்முறை என்பது வித்தியாசங்களை அழித்து ஓரமைப்பிற்குள் இருத்துவதாகவும் உள்ளது.

### குறிப்புரை இரண்டு

#### நடனமிடும் மொழியாடல்கள்

எனது புரிதல் சரியெனில், நீ மொழி என்பதை இரு உடல்களுக்கு இடையிலான கருத்துப் பரிமாற்றக் கருவியாகப் பார்க்கிறாய். அதனால்தான் மொழி குறித்துவரும் நவீன சிந்தனைகளை, அறிதல்களை உன்னால் அணுக இயலவில்லை. ஏதோ புதிதாய் "எல்லாம் மொழிதான்" - என்று கூறி பிரச்சனைகளை மொழியாக கரைத்து விடுவதாகவும், இது ஒரு அரசியலற்ற போக்கு என்பது போலவும் எங்கள் பிரச்சனைப்பாடுகளை எதிர்கொள்கிறாய். மொழிக்கும், உடலுக்கும் என்ன உறவு? மொழி எப்படி மனிதனை கட்டமைக்கும்? மொழி எப்படி உலகை உருவாக்கும்? என்பதாக, மொழியை ஒரு கருத்துருவமாகவும், எங்களை தத்துவக் குளறுபடி செய்யும், ஒருவகை கருத்தியலாளர்களாக பார்த்து அச்சப்படுகிறாய். உனக்குள் உருவமைக்கப்பட்டுள்ள "நீ" - என்பதாக உன்னை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பும் தன்னிலையை, திடீரென கலைத்து, அது ஒரு வரலாற்றுப் புனைவு அல்லது அது ஒரு கதைகூறலால் புனைவாக உனக்குள் இருத்தப்பட்டிருக்கும் மொழி என்பதை, மகிழ்வும்-துயரமும், வலியும்-இதமும், பதற்றமும்- அச்சமும் எல்லாம் ஒரு வகை உணர்வுப் படிமங்களாகவே மொழிவழியாக உன் நினைவுகளின் உள்தளத்தில் இறக்கப்பட்டிருப்பதை நம்பவோ, ஏற்கவோ முடியவில்லை உன்னால்.

உன் உடல் என்பதும் நீ கற்பித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கை (சிலவேளை நீ தேர்ந்திருக்கும் வாழ்க்கை) என்பதும் ஒரு புனைவுவெளிதான் என்பதெல்லாம் உன்னை மிகவும் சங்கடப்படுத்துகின்றது. வேறுவிதமாக கூறினால், உன்னால் இவற்றை புரிந்தேர்க்க இயலவில்லை. அதாவது, உனக்குள் புரிதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தக்கூடிய மூளையின் வேதிம வினைகள் இந்த வகைச்சமன்பாடுகளுக்கு பழகவில்லை. நீ இதுநாள் வரை நம்பி வந்த உண்மை என்கிற அற்புதம் வெறும் கனவுதான். அப்படி ஒன்று முழுமுதலானதாக இருக்க இயலாது, அது ஒரு இறையியல் புனைவு, உண்மை தேடி - தத்துவங்கள் எல்லாம், வெறுமனே அந்தந்த சமூக மொழித் தளத்திலான கதைகூறும் விளையாட்டுத்தான் என்பதையும், நன்மை - தீமை என்கிற நீதியியல் - நோக்கு சாத்தியமற்றது, அல்லது அப்படி ஒன்று எக்காலத்திற்குமாக இல்லை, இன்னும் சொல்லப்போனால், அது உடலின் மீது திணிக்கப்பட்டுவிட்ட அறவியல் வன்முறை (Ethical Violence) என்பதெல்லாம் உன்னை மிகவும் குழப்பி உள்ளன. இந்த குழப்பமே உன்னை தளநகர்த்திச் செல்லும். நாம் நம்பி இயங்கிய தத்துவங்கள் இதம் தரும், அல்லது நம்மை அடையாளப்படுத்தும் ஒரு மொழி அமைப்பாக இருந்தது. நம்மைச் சுற்றியுள்ள பிரச்சனைகளை, எதிர்கொண்ட பிரச்சனைகளை, இன்னும் சொல்லப்போனால், பிரச்சனை என்பதாக நாம் எண்ணியவற்றை எல்லாம் அத்தத்துவத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தோம். எல்லாவற்றையும் தனது அமைப்பிற்குள் மொழி பெயர்ப்பதற்குரிய ஒரு தர்க்கமுறையை அவை கொண்டிருந்ததாக நம்பினோம், அத்தத்துவ பரப்பிற்குள் வராதவற்றை இன்மையாக, இருத்தலற்றதாக பார்த்தோம். எதிரும், புதிருமான எல்லாவகை தத்துவங்களும் தங்களது அறிதல் முறையை அறிவுவாதத்துடனோ அல்லது உணர்வுகள் பற்றிய கதையாடலுடனோ தான் துவங்கின. மொழி குறித்து ஒரே வகை கண்ணோட்டங்களையே கொண்டிருந்தன. இச்சூழலில்தான், மொழியை மொழி பெயர்ப்பதில் சிக்கல்கள் துவங்கின. மொழியை பரிமாற்றுக்கருவி என்பதாக, ஒரு இயக்கம் அற்றதாக பார்த்த இந்த தத்துவங்கள் எல்லாம், ஒருவித இறையியலை தனது உள்தளத்தில் கொண்டிருப்பதான, அல்லது அடிப்படையில் ஒருவித அபௌதீகத்தை (Meta Physics) கொண்டிருப்பதான பார்வை தவிர்க்க இயலாமல் வந்தது.

நுட்பமாகப் பார்த்தால், இவ்வகைக் குழப்பங்களெல்லாம் மொழிகுறித்த பழகிய 'பரிமாற்றக்கருவி' என்கிற உருவகத்தில் இருந்துதான் துவங்குகின்றது. அதாவது, மொழியை ஒரு கருத்தை சுமந்து செல்லும் கருவி எனும்போதே, கருத்து என்கிற மொழிக்கு அப்பாற்பட்ட, அல்லது புலனறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு மெய்மைப்பற்றிய ஆழ்மன நம்பிக்கை வெளிப்பட்டுவிடுகிறது. இந்த இறையியல் அடிப்படையிலான நம்பிக்கையை மறுத்த போதிலும், ஒரு உடலுக்கும், அதன் மொழிக்கும் அப்பாற்பட்ட ஒரு கருத்து என்கிற மெய்மை இருந்து கொண்டிருந்தால், அல்லது உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தால் மட்டுமே, நீ நம்புகிற இரு உடலுக்கு இடையில் கருத்தை கடத்திச் செல்லும் வாகனமாகவோ, அல்லது கருவியாகவோ மொழி அமைந்திருப்பதான உருவகம் சாத்தியமாகும்.

அடுத்து ஒரு கருத்தை எந்தவித மாற்றமும் இன்றி இந்தக் கருவி அல்லது வாகனம் அப்படியே சுமந்துகொண்டு போய் பிறிதொரு உடலிடம் சேதப்படாமல் சேர்த்துவிடவேண்டும். ஆனால், அப்படியா நடைபெறுகிறது? அப்படி இருந்தால் சந்தோஷமான ஒன்றுதான். ஏனெனில் பிரச்சனை எளிமையாக தீர்ந்துவிடும். நான் கூற விரும்பியவற்றை அப்படியே இந்த மொழி சுமந்து வந்து உன்னிடம் சேர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் எளிமையாக நடைபெறவில்லை. அப்படியே சேர்ப்பதாகக் கொண்டாலும், நம்மிடம் இருப்பது கருத்து மட்டுமே, மொழி அல்ல. ஆனால் நமக்குள் மொழியற்றுப்போனால், திரும்ப இந்தக் கருத்தை எப்படி நினைவில் பதிவுறுத்திக் கொண்டிருப்போம். கருத்தானது, மொழி என்கிற வாகனத்தில் ஏற்றப்படுவதாகக் கொண்டால்; கருத்து எதில் உருவாக்கப்படுகிறது. இங்கு கருத்து என்பது காலங்காலமாக இருந்துவரும், மொழிக்கு அப்பாற்பட்ட, சம்பந்தமில்லாத ஏதோ ஒரு பொருள் அல்லது மெய்மை என்பதான பார்வை இருக்கிறது. ஆனால், கருத்து என்பதுவும் மொழியால்தான் உருவாக்கப்படுகிறது என்பதை மறுக்கமாட்டாய். அப்படியெனில், வாகனத்தை சுமந்து செல்லும் வாகனமாக மொழி இருக்கிறதா? அல்லது கருத்து என்கிற விசேஷமான பொருள் ஏதேனும் உலகில் கடவுளைப்போல் அமைந்திருக்கிறதா?

## குறிப்புரை மூன்று

### மொழியுடல்கள்

மொழியின் அடிப்படையான செயற்பாடுகளாக நான் புரிந்திருப்பவற்றை சொல்ல முயல்கிறேன். மொழி என்பது அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட சப்தம், அல்லது ஒரு உடலில் இருந்தோ பொருளில் இருந்தோ உருவாகும் ஒரு சப்த ஆற்றல் (ஒலி ஆற்றல் -Sound Energy) **(அ)** இந்த சப்தம் குறியீடுகள் வழியாக, அடையாளப்படுத்தும் வண்ணம் பெயரிடுதல் என்பதாக ஒழுங்கமைக்கப்படும்போது மொழி உருவாகுகிறது. **(ஆ)** இவ்வொழுங்கமைதல் என்பதுவே, மொழி ஒரு உடல்மீதோ அல்லது பொருள் மீதோ செயல்படும்போது, இயக்கமடைந்து அப்பொருளை அல்லது உடலை தனது விதியமைப்புகளிற்கேற்ப ஒழுங்கமைத்துக் கொள்கிறது. அல்லது மொழியை தனது இருத்தலுக்காக ஒழுங்கமைத்துக்கொண்ட ஒரு மொழி - உடலுக்கு உரியதாக மாற்றுகிறது. ஆக, ஒரு உடல் மொழியை ஏற்கிறது என்றால், அது அம்மொழியின் தர்க்க ஒழுங்கமைப்பை ஏற்று அம்மொழியின் குறித்தல் செயல்பாட்டில் உறைந்துள்ள மனஅமைப்பையும் ஏற்கிறது என்பதுதானே.

**(அ)**. ஆற்றல் மாறாக் கோட்பாட்டின்படி, மொழியின் முதல் வினையாக உடலின் இயக்க ஆற்றல், ஒலி ஆற்றலாக மாற்றப்படுகிறது. உழைப்பின் அடிப்படையில் மனிதஉடல் உருவாக்கிக் கொண்ட உடலியக்கமானது, ஒலி ஆற்றலாக மாறி அதன் வழி உருவாகும் சப்தம் ஒழுங்கமைக்கப்பட்டு ... அதனால், மனித உடலின் பேச்சுக்களன் பழக்கத்திற்கும், பரிணாமத்திற்கும் உட்பட்டு ஒழுங்கமைந்துள்ளது. குரல், பேச்சு ஆகியவற்றின் உடலியங்கியல் (Physiology) விதிகள் பாஃவ்லோவின் மறிவினைகள் (Reflexes), இச்சை மற்றும் அனிச்சை செயல்கள் ஆகியவை பேச்சுக்களன் (Speech Apparatus) எப்படி குரல்களை (Voices) உருவாக்குகிறது என்பதை நமக்கு விளக்குகின்றன. மொழி என்பது ஒழுங்கற்ற ஒரு பேச்சுக்களத்தை, சப்தத்தை எப்படி ஒழுங்க மைந்த குரல்களாக மாற்றுகிறது என்பது பிறிதொரு தளத்தில் பேசப்பட வேண்டியவை. ஆயினும், ஒலியை ஒழுங்க மைத்த மொழியானது இன்றைய மனிதஉடலின் பேச்சுக் களனை வடிவமைத்து, குரல்களை உருவாக்கியது என்பதுவே, இங்கு முக்கியமானது. இக்குரல்களே மொழியின் அடிப்படையாகும். மொழி என்பது இரு உடல்களை அவசியப்படுத்தும் ஒரு கூட்டுச்செயலாகும். அதிலும் குறிப்பாய், எழுத்து என்பது வாசிக்கும் ஒரு உடலின் குரலை அடிப்படையாகக் கொண்டே எழுதப்படுகிறது. ஆக, மொழி என்பது ஒருவகை மொழிதலாக (Dialogies) உள்ளது என்பதுவே முக்கியம். மொழிக்கு 'பரிமாற்று' என்பது முக்கியவினை என்றாலும், அதுமட்டுமே மொழியின் அடிப்படை செயலாகிவிடாது.

**(ஆ)**. உடல் அசைவினால், குறிப்பிட்ட சப்த ஒழுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் அறியப்படும் மொழி என்பது மனித உடலுக்கு மட்டுமேயுரிய ஒன்றல்ல. மிருகங்கள், பறவைகள், பூச்சியினங்கள்.... போன்ற எண்ணற்ற உயிரினங்களுக்கு இடையில் ஒருவகை மொழி நிலவுவதாக விளக்குகிறது Bionics என்கிற துறையின் ஆய் வுகள். குறிப்பாய் தேனீக்கள் (இவை இனவாழ்வை அடிப்படையாகக் கொண்டவை) எழுப்பும் ரீங்காரத்தின் அலைநீளக் கணக்கீட்டை, அதாவது அதிர்வை அடிப்படையாகக் கொண்டு அவற் றின் கூடுகளின் தூரங்களையும், அவை நிற்கும் முறை, பறத்த லில் உருவாக்கும் இயக்க வடிவம் - (சாய்ந்து தலைகீழாக இப்படி)- ஆகிய பாவனைகள் மூலம் எதிரிகளை, நண்பர்களை, இனத்தினரை பிரித்துணர்தல், ராணித்தேனீக்கு செய்திகளை தெரிவித்தல் ஆகியவற்றை செயல்படுத்தி தங்களது இன வாழ்வை நடத்துகின்றன. இதுவும்கூட ஒருவகை மொழிதான், இதில் மொழி அலகுகளான ஒலியம் (Phonic), நாடகீயம் (Theateric) ஆகியவற்றின் இயக்கம் இருப்பதை அறிய முடியும். ஆனால் இதனுடன் பழக்கப்படுத்தப்பட்ட பேச்சுக்களன் என்பதும், அவை குரல்களாக மாறிய குறியீட்டுத்தளக் கருத்தமைப்புகளும் ஆதிக்கம் வகிக்கும் நவீன வாழ்தல்தளம் என்பது இல்லை. அவற்றின் பேச்சுக்களன் அமைப்பு என்பது உடலியல் ரீதியாக வளர்ச்சியற்றது என்பது ஒரு காரணம்.

இந்த மொழியாலான மனஅமைப்பே ஒரு உயர்வகைத் தொழில் நுட்பமாக மாறி உடல்களின் மீதான தனது ஆதிக்கத்தை நிறுவுகிறது. அதன்மூலம் பல உண்மைகளின் தோற்றப்பாட்டை உருவாக்குகிறது. இந்த உண்மைகள் உறைந்த ஒற்றையமைப்புகளாக உடல்களை மாற்றியமைக்கிறது. இதன் நீட்சியே உடல்/ஆத்மா கருத்தியல்களாக மாறிய மன அமைப்புகளாகி, உடல் என்பது புறக்கணிக்கத்தக்கதான ஒன்றாக உருவாகுகிறது. உடல் தூய்மையற்றது-அழிவது, ஆத்மா தூய்மையானது-அழிவற்றது என்பதாக நிலையற்ற உடலாக, மாயையாக கற்பித்து புறக்கணிப்பதும், உடலை இல்லறம், துறவறம், ஆசனம், யோகம், தவம் **(ஊ)**. இன்னபிற பயிற்சிகள் மூலம் ஒடுக்கி உருவாக்குவதும், உடல்களை வருத்துவதுமான ஒரு மதவியல் வாழ்க்கையே இலட்சிய வாழ்க்கையாகவும், இத்தகைய இலட்சிய உடல்களுக்கு கருத்தியல் அந்தஸ்தை அளிக்கும் ஒரு துணைநிலை வாழ்க்கையாக பரந்துபட்ட வாழ்தல்தளமும் கட்டப்பட்டுள்ளது. **(இ)** அல்லது பாமர உடல்களின் ஆற்றல் பிழிந்தெடுக்கப்பட்டு, இந்தவகை லட்சிய வாழ்க்கையும், புருஷர்களும் உருவாக்கப்படுகிறார்கள்.

**(ஊ)** உடற்பயிற்சி கழகங்கள், உடலின் வலிமை பற்றிய கருத்தாடல்கள், உடல் அழகுபற்றிய கருத்துருவங்கள், அழகு பயிற்சி நிலையங்கள், உலகஅழகிகளுக்கான 'Miss & Mr.' வகையறாக்கள் அழகு சாதனப்பொருட்களின் உற்பத்திப்பெருக்கம், நுகர்பொருள் - கலாச்சாரம், பாலின்பம் பற்றி பெருக்கப் பட்ட- மர்மப்படுத்தப்பட்ட சொல்லாடல்கள், ஒலிம்பிக், கால் பந்து, கைப்பந்து இன்னபிற உலக விளையாட்டு நிகழ்வுகள், நடிகர்கள், நடிகைகள்... இப்படி, இப்படியாக எண்ணற்ற உடல் ஒழுங்கு முறைகள் அதற்கான அறிவாய்வு முறைகள், அறிவுத் துறைகள் ஆகியவை இன்றைய அறிவுவாதத்தின் உடல் ஒடுக்க தொழில் நுட்பமாகும்.

**(இ)** உடல்-ஆத்மா என்கிற மொழி விளையாட்டே தத்துவம், வேதம் ஆகிய பிரதிகளின் அடிப்படையாக இருப்பதை மேலதிகமாக விளக்கவேண்டியதில்லை. நாமும் கூட உடல் அழிவதில்லை, ஆத்மாதான் அழிகிறது என்பதாக ஒரு எதிர் விளையாட்டை, மரபணு பொறியியல் (Genetic Engineering) , நரம்பு உளவியல் (neuro-Psychology) ஆகியவற்றின் மூலம் ஆடமுடியும். அதாவது ஒரு உடலை உருவாக்கும் 'ஜீன்' எனப்படும் மரபணு (1) பரம்பரை பண்புகளுக்கு காரணமாக உடல்களிலிருந்து உடல்களுக்கு கடத்தப்படுகிறது. பெற்றெடுத்த உடலின் சிறுமாதிரி படிவமைப்பாக (Miniature) குழந்தைக்கு வருகிறது. ஆனால், ஆத்மா என்கிற மனமொழியானது (2) வளரும் சமூகச் சூழலிலேயே உருவாகிறது. ஆக, ஒரு உடல் என்பது தொடர்ச்சியாக வருவதால் அழிவதில்லை. ஆனால், ஆத்மா ஒவ்வொரு உடலிற்குள்ளும் உருவாகி அவ்வுடல் இருப்புடன் அழிந்தும் போகிறது. (3).ஆனால், ஒரு உடலானது பல வேதிமங்களாக சிதைந்து பிரபஞ்ச ஆற்றல் சுழற்சியில் (Energy Cycle) பங்கேற்று வடிவம் மாறிவருகிறது என்பதாக ஒரு மொழி விளையாட்டை அறிவுவாத அடிப்படையில் நாமும் நிகழ்த்த முடியும். ஆனால், அது தவிர்க்க இயலாமல் உடல்-ஆத்மா என்கிற முரணால் அமைந்த விதியியக்க (Paradigm) அமைப்பை அங்கீகரித்து, உடலின், உலகின் தொடர்ச்சி பற்றிய கருத்தாக்கங்களுக்குள் நம்மை இழுத்துச்சென்று ஆதிக்க அமைப்பின் ஆட்டத்திற்குள் பங்கேற்கச் செய்துவிடும் என்பதை கவனப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

**(இ-1)** ஒரு உடலின் வடிவம், உறுப்பமைவு ஆகியவற்றினை வடிவமைக்கக்கூடிய உடலியல் வினையை நடத்துவதற்கான செய்திகள் வேதிம சங்கேதங்களாக மரபணுக்களில் எழுதப் பட்டுள்ளது. இச்செய்திகளை கடத்திவந்து அதன்மூலம் குழந் தையின் உடலியல் வடிவங்கள் பரம்பரைப் பண்புகளின் அடிப்படையில் உருவமைக்கப்படுகின்றன.

**(இ-2)** மன-மொழி என்பதை நரப்பங்களின் இயக்கத்தில் (Neuranal Transmission) உருவாகும் உயிர்-வேதிம-வினைகளால் (Bio-Chemical Reactions) பதிவுறுத்தப்படும் வேதிம சங்கேத எழுதுதல் என்பதாகக் கூறமுடியும்.

**(இ-3)** ஆத்மாவை, மனம் என்பதாகக் கூறும் மதங்கள், மனச் சிதைவை ஒரு நோயாக அங்கீகரிக்கும்போது, ஆத்மா என்பதை இச்சமூக அமைப்பிலேயே சிதைக்க முடிவதால் அது நிலையற்றது என்பதை மட்டும் தங்களது கதையாடல்களில் ஏற் பதில்லை.

இன்னும் உன்னுள் நிலவும் உடலுக்கும் மொழிக்குமான உறவுபற்றிய புரிதலை ஆழப்படுத்த முனைவோம். எளிமையாகச் சொன்னால், மொழியானது ஒரு உயிர்-உறை-உடலை முதல் நிலையில் மொழியுடலாக மாற்றி அதாவது, இனக்குழு உடலாகவும்(ClanBody),பலகுழுக்களின் தொகுப்பமைவாகும் போது இனஉடலாகவும் (Ethnic-Body),வேறு இனத்தை எதிர்கொள்ளும்போது இனஆதிக்க உடலாகவும் (Racial-Body) கட்டமைக்கிறது. ஒரு குழுவிற்குள் நிலவும் அறிதல்முறையை, அர்த்தப்பாடுகளை, பொருள் விளக்கங்களை, சப்த-ஒழுங்கை, அதன் அடிப்படையில் அமைந்த புனைவுகளை, அழகியலை உருவாக்கி அக்குழுவிற்கான நினைவுகளை, எண்ணங்களை, உணர்வுகளை அக்குழுவின் மனஅமைப்பாக **(எ)** மாற்றி இருத்துகிறது. இவ்வாறு ஒழுங்கமைந்த மனஅமைப்புடன் இயங்கும் மொழியுடல்களையே நாம் ஆதிக்க உடல், அடிமை உடல் துவங்கி தேசிய உடல், சர்வதேசிய உடல்..... என்பதான இன்னபிற உடல்களாக அறிகிறோம்.

**(எ)** மனஅமைப்பு என்பது ஒரு மொழிச் செயல்பாடாகும். காரணம், மனம் என்கிற ஒன்றை நமக்குள் ஒலிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வீரட் விஷ்வகர்மகுல பரப்ரஹ்மனே நம



# GAJALUXMY S.A.R.L.

(NEW PARIS JEWELLERY)

**பாரிஸ் மாநகரில் 10 வருடங்களாக மக்களின் மனங்களில் நாங்கள்...**

நங்கையர் விரும்பும் நகைகளைக் குறித்த நேரத்தில் செய்து தரும்
நாணயமிக்க தங்கப்பட்டறை

பெண்கள்-ஆண்கள்-சிறுவர்களுக்கான அனைத்து நகைகளையும் மிக நாகரிக அலங்கார வடிவங்களில்
எமது தங்கப் பட்டறையில் செய்து கொள்ளலாம்.

ஓடர் தரப்பட்ட நகைகள் குறித்த நேரத்தில் தரப்படாத பட்சத்தில் 25ழ செய்கூலியில் தள்ளுபடி
செய்கிறோம்,நாடுங்கள்.

# கஜலஷ்மி

## நியூ பாரிஸ் ஜுவலரி

**87, RUE DE CLIGNANCOURT, 75018 PARIS**

**TEL : 01 42 54 83 13**

**M° : MARCADET POISSONNIERS**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் மூலமே அடையாளம் காண்கிறோம் என்பது மிகச் சாதாரண அனுபவம். இக்குரல் என்பது ஒரு உடலிற்குள் பதிவுறுத்தப் பட்ட மொழிவழியே மட்டுமே சாத்தியம். இங்கு பரிமாற்றுக்கருவி என்கிற மொழிகுறித்த பழைய தர்க்கம் அடிப்படையற்று சிதைந்து போய்விடுவதை உணரலாம். அதாவது, ஒரு உடலுக்குள் மொழியற்றுப் போனால், அவ்வுடல் இன்றைய உலக அமைப்புடன் தொடர்புற முடியாது. ஆக, மொழி என்பது ஒரு கருவி நிலையில் செயல்படவில்லை, அது, அதற்கும் மேலான ஒன்று.

## குறிப்புரை நான்கு

### நடமாடும் கடவுள்

மொழி என்பது ஒரு கருவி என்பதாகக் கொண்டால், அதனை கையாள்பவனின் திறமையைப் பொறுத்து மொழியானது பயன் படும், புதியனவற்றை உற்பத்தி செய்யும். இப்பார்வைதான் மொழியை கையாளும் ஆசிரியனை, இலக்கியவாதியை, தத்துவஞானியை எல்லாம் வணங்கி, வழிபடும் ஒரு கடவுள் கோட்பாட்டை உருவாக்கியது. யதார்த்தவாத இலக்கியங்கள் வழியாக இறக்கப்பட்ட இந்த இறையியலே, அறிவுவாதத்தின் நவீன இறையியலாகும். தத்துவவாதி, விஞ்ஞானி, வரலாற்றாளன் எல்லோருமே மொழிவழியாகத்தான் தங்களது கருத்துக்களை புனைவுகளை திட்டங்களை அறிவிக்கிறார்கள். ஆனால், இலக்கியவாதி மட்டுமே மொழியின் மீதான ஏகாதிபத் தியவாதியாக கருதப்படுகிறான். மற்றவர்களுக்கு மொழிவாகனமாகவும், ஒரு இலக்கியவாதிக்கு மூலப்பொருளாகவும் கருதப்படுகிறது. மொழியை பிறர் பயன்படுத்தும்போது, அவன் மட்டுமே கையாள்பவனாகக் கருதப்படுகிறான். மொழியை வளைக்கவும், நீட்டவும், நிமிர்த்தவும், கலைத்துப்போட்டு புதிதாய் அடுக்கவும் தெரிந்தவனாக காட்டப்படுவதால், மொழியின் மீது அனைத்து உரிமைகளைக் கொண்டவனாக வலம் வருகிறான் இந்த யதார்த்தவாத ஆசிரியன்.

அறிவுவாதத்தின் கடவுளாக வலம்வரும் இந்த ஆசிரியன், ஒரு அரசனைப்போல தனது ஆதிக்கத்தை மொழியின் மீது நிறுவுகிறான். ஒருவகையில் அறிவதிகாரமானது, இவனை இத்தகைய ஒரு பிம்ப வேட்கைக்குள் இருத்தி, ஒரு இடத்தை கருத்தியல்தளத்தில் கொடுப்பதன்மூலம் அவனது உடலை தனது கட்டமைப்பின் எல்லைக்குள் கொண்டுவந்து செயலற்றவனாக செய்துவிடுகிறது. அதாவது அவனது ஆற்றலை தனக்கு தக மாற்றிக்கொள்கிறது. இந்த மொழியாண்மை, அதிகாரத்துவ இறையாண்மையுடன் இணைத்தளத்தில் செயல்பட்டு, அதன் பிரச்சனைகளை கேள்வி எழுப்பி, கலைத்துப் போடாமல் அதற்குள் ஒரு தீர்வை உருவாக்கி, சமரசமாகி, சமூக கட்டமைப்பின் உள்ளே உருவாகிவரும் எதிர்இயக்கங்களை_தனது மொழி விளையாட்டிற்குள் கொண்டுவந்து அதிகாரத்திற்கு உரியதாக தகவமைத்துவிடுகிறது. இங்கு எழும் பிரச்சனை, மொழி எதையெல்லாம் உற்பத்தி செய்கிறதோ, அவை எல்லாமே மொழி வடிவில் மட்டுமே இருப்பவை என்பதுதான். அறிவுவாத ஆசிரியன் என்பவன் மொழியை கையாள்வதில்லை. மாறாக பொதுமைப்படுத்தப்பட்ட மொழித்தளத்தை உருவாக்கும் சமூக கதையாடலை நடத்திச் செல்பவனாக இருக்கிறான். மொழியை அதிகாரத்தின் முகவராக இருந்து கண்காணித்து ஒழுங்கமைத்து, அடையாள அட்டைகளை வழங்கும் அதிகாரியாக இருக்கிறான் ஆக, மொழியை ஒரு கருவியாகக் கொண்டால், கருவியை உற்பத்தி செய்யும் கருவியா? வெறும் கருவிகளை மட்டுமே உற்பத்தி செய்தால், மொழியின் வினைபொருள் என்கிற ஒன்று இல்லையா?

## குறிப்புரை ஐந்து

### கலைந்து பரவி, அமைவுறும் குறித்தல்

மொழியானது அகவெளியில் குறித்தலையும் (Signification), புறவெளியில் தொடர்புறுத்தலையும் (Communication) நிகழ்த்துகிறது. (அகவெளி-புறவெளி என்பதை ஒருடலிற்கும், பல உடல்களிற்கு இடையிலுமான வித்தியாசமான அமைப்பாகப் பிரித்தறிகிறோம்). ஒற்றை உடலிற்குள் மொழியின் வினையானது குறித்தலையும், பல உடல்களுக்கிடையில் தொடர்புறுத்தலையும், இவையே தனித்த உடல்கள் என்ற நிலையில் அதனுள் குறித்தலையும் நிகழ்த்துகிறது. அதாவது, ஒரு உடலிலிருந்து கிளைத்து பரவும் மொழியானது, அவ்வுடலிற்குள் நிகழ்த்தும் குறித்தலால், அவ்வுடலை மறுஉருவாக்கம் செய்வதுடன், அம்மொழி பிறிதொரு உடலை தொடர்பு கொளளும்போது, அவ்வுடலிற்குள்ளும் குறித்தலை நிகழ்த்தி அவ்வுடலையும் மறுஉருவாக்கம் செய்கிறது. ஆக, உடல் என்பது மொழியை வெளிப்படுத்துவதிலும் (Transmitting), ஏற்பதிலும் (Receiving) தொடர்ந்து தன்னை சிதைத்து மறுஆக்கம் செய்து கொண்டுள்ளது.

மொழிவழியாகவே புனைவுகளின் உருவாக்கமும், அப்புனைவுகள் வழி உலகத்தொடர்புகளும் (உ) உருவாகுகின்றன. உதாரணமாக, வேற்றுக்கிரகம் பற்றிய எத்தனை நுட்பமான விபரங்கள் அடிப்படையில் சித்திரங்களை உருவாக்கி விளக்கினாலும், மொழியின் சாத்தியப்பாடுகளைத் தாண்டி அதுபற்றிய புனைவுகளை, புரிதலை உருவாக்கிவிட முடியாது. இதையே, மொழி உலகை உருவாக்குவதாக அல்லது ஒரு உடலின் சாத்திய எல்லைக்குள், ஒரு உலகை இருத்துவதாக பார்க்கவேண்டியுள்ளது. மொழியின் புனைவாக்கமே முக்கியமான மொழி எந்திரமாக செயல்படுகிறது. ஆனால், இந்த மொழியே ஒரு புனைவாக இருப்பதால் மொத்த உலகமும், புனைவடிப்படைகளை கொண்டதாக அமைகிறது, அல்லது குறைந்த பட்சம் இந்த எந்திரம் ஒரு உடலின் புனைவுவெளியை கட்டமைப்பதாக உள்ளது. இப்படியாகத்தான் நீ நம்பி வந்துள்ள உனது தன்னிலை, வரலாறு, நினைவுகள், கனவுகள்.. இன்னபிற புனைவாக, அதிலும் கலைக்கப்பட வேண்டிய புனைவாக (ஏ) அமைந்துள்ளது.

(உ) தொடர்புறுத்தல் என்பது தொல்குடிகளின் மிகமுக்கிய செயல்பாடாகும். இத்தொடர்புறுத்தலில் மந்திரம் உள்ளிட்ட பல சடங்காச்சாரங்களை அவர்கள் பின்பற்றினர். அதாவது, மந்திரங்கள் மூலம் பிற உடல்களுடன் தொடர்புறுதல், ஒருவித மயக்க நிலையில் அப்பாலை உலகுடன் தொடர்பு கொள்வதாக புனித செய்திகளை அருளுதல் போன்றவை. எனவே, மொழியின் தர்க்கம் என்பதும், நவீன தகவல் கட்டுப்பாட்டியல் (Cybernatics) கூறும் உடல் என்பது செய்தித் தொகுப்பு என்கிற தொடர்புறு-மாதிரி கோட்பாடுகளும் (Communication Theory) - அடிப்படையில் நவீன மந்திரமாக செயல்படுவதை அறியலாம். குறிப்பாய், Para-Psycology பற்றிய ஆய்வுகள் "டெலிபதி" எனப்படும் ஒருவரது நினைவலைகளை குறுக்கீடு செய்தல், மூளையில் வெளிப்படும் அதிர்வலைகள் பற்றிய ஆய்வுகளும்- தொல்குடி மந்திரங் களைப் போன்றதொரு நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாடல்களாகப் பார்க்கத் தக்கவை.

**(ஏ)** Simulation -எனப்படும் நவீன கணிப்பொறி-மின்னணு வியல் மற்றும் Robotics தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஒரு உத் தியின் மூலம், ஒரு உடலிற்குள் பதிவுறுத்தப்பட்ட புனைவுகளை, நினைவுகளை மாற்றியமைத்து விட முடியும். அதாவது ஒரு மின் னணுவியல் பொய் உலகை படைத்து அதற்குள் ஒரு உடலை இயங்கச் செய்து, அவ்வுலகு பற்றிய புனைவுகளை, நினைவு களை பதியவைக்கமுடியும். ஒரு முக்கால் சுழல்வட்ட (நமது பார் வைப்புலன் விரியக்கூடிய பகுதிகள்வரை- சுமார் 270 டிகிரி) அமைப்பைக் கொண்ட மின்னணுத்திரைக்குள், முப்பரிமாண கண்ணாடிகள் கொண்ட மின்னணுவியல் தலையுறை '(ஹெல்மட்)' ஒன்றை ஒருவருக்கு பொருத்தி அமரவைத்து அவரது உடலை ஒரு இயக்கநிலைக் குரிய (டிரைவிங், ஸ்கேட் டிங், ரைடிங் என்பது போன்ற) அதிர்வலைகளை அதன் வழியே பாயச்செய்து, மின்னணுத்திரையில் ஒரு குறிப்பிட்ட விபரங்களை துல்லியமாக தொடர்ந்து 'புரஜக்டர்' மூலம் ஓடச் செய்து கொண்டிருந்தால் அது உருவாக்கும் முப்பரிமாண வெளியும், ஹெல்மட் வழியே பாயும் அதிர் வலைகளும், சப்தங்களும் இணைந்து மூளையில் ஒரு வித வெளிப்பாட்டை (இதனை Head Up Display-HUD என் பார்கள்) நிகழ்த்துகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட நம்பவைக்கும் உலகு (1) மூலம், ஒருவ ரது வரலாற்று நினைவுகளைக் கூட மாற்றிவிட முடியும்.

**(ஏ-1)** இம்முறையைப் பயன்படுத்தியே அமெரிக்க ராணுவத் தலைமையகமான பெண்டகன் பல நாடுகளின் துல்லிய வரை படங்களை உருவாக்கி அவற்றை அழித்தொழிக்கும் விமான குண்டுவீச்சு பயிற்சிகளைக் கொடுத்து வருகிறது. ஒரு நாட்டைப் பார்க்காமல் அந் நாடு பற்றிய துல்லியமான போர் அனுபவத்தையும், அதில் வெற்றியை உருவாக்குவது குறித்த பயிற் சிகளையும், நாளை நடக்க இருப்பதாக இன்றே வாழ்ந்து பெறும் அனுபவத்தை உருவாக்குகிறது. இதன் விளைவாக வெளிவந்திருப்பதுவே எண்ணற்ற கொலைவெறியும், வன்முறையும், வக்கிரங்களையும் தூண்டும் கணிப்பொறி விளையாட்டுக்கள் மற்றும் ஒளிப்பட (Video) விளையாட்டுக்கள் ஆகியவை, இது சமீபத்தில் அமெரிக்காவில் சிறுவர்களின் (ஒரு த்ரில்லிங் அனுபவத்திற்கென) பாலியல் கொலைகளை அதிகப்படுத்தியுள்ளது. எனவே, நவீன தொழில் நுட்பம் எந்த மந்திரங்களையும், கதை யாடல்களையும், வரலாற்றையும் உருவாக்கும் தயார் நிலையில் இருக்கிறது.

இரண்டு குறித்தல்களுக்கு இடையில் உருவாகி வரும் தொடர்புறும் சமன்பாடுகளே, மொழியின் பொதுமைப்படுத்தலை செய்து, பொதுமொழிக் குறித்தலை உருவாக்கும் கதையாடலை இயக்கி ஒற்றை அர்த்தமாக்கும் அமைப்பையும், ஒற்றை அறிதல்முறையையும் - அதன் அடிப்படையில் ஒற்றை மனஅமைப்பையும் அதன் விளைவுகளாக ஒரேவித உணர்வுப்படிமங்களையும், உணர்வு எதிர் அலைகளையும் உருவாக்கியுள்ளன. இவ்வகை பொதுமைப்படுத்தப்பட்ட குறித்தலைக் கொண்ட கதையாடலின் வழியாகவே உடல்கள் கட்டமைக்கப்படுகின்றன. நீ நம்பி வந்துள்ள பதற்றம், அச்சம், மகிழ்வு, துயரம் என்கிற பலவித உணர்வுகளும் இப்படியாகத்தான் உனக்குள் உருவமைக்கப்பட்டுள்ளன. இவையே உனது வேட்கைகளை உருவாக்கியுள்ள அரசியல் காரணிகள் ஆகும்.

## குறிப்புரை ஆறு

### உடல்வெளியில் கட்டமைவும் பிரபஞ்சம்

பரிமாற்றுக்கருவி என்கிற உருவகம் தரும் மற்றொரு பார்வை, மொழி என்பது தன்னளவில் செயலற்ற ஒன்று என்பது. தன்னளவில் செயலற்ற ஒன்றிற்கு இருப்பு சாத்தியமாகுமா? ஒரு பொருள் இருக்கிறது என்றால், அது செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதே பொருள். ஆக, மொழி என்பது செயல்படும் ஒன்று, அதிலும் பார்க்க, பிறவற்றைக் காட்டிலும் மிகமுக்கியமானது. வேறுவார்த்தைகளில் கூறினால், மொழிதான் மனிதவியல் பிரபஞ்சத்தை (Humanised Universe) உருவாக்கியுள்ளது. இதன் பொருள், மொழிதான் இந்த பிரபஞ்ச பொருட்களுக்கு மனிதம் சார்ந்த இருத்தலை, அர்த்தத்தை தரக்கூடிய பெயரிடுதலின் மூல அலகாக உள்ளது. இதன் மற்றொரு வடிவம், மொழிதான் உடல்களை மனிதர்களாக, அடிமைகளாக, அரசனாக இன்னபிறவாக... கட்டமைத்துள்ளது. இதுதான் உன்னை மிகவும் குழப்பி உள்ள செய்தி. எப்படி வெறும் சப்தம், கருத்துக் குறிப்பு அல்லது பெயரிடுதலுக்கான மூலஅலகாக, உள்ள மொழி என்கிற, உடல்கள் உருவாக்கிய ஒன்று. உடல்களையே கட்டமைத்திருக்கும்.

இங்கு கட்டமைவு (Construction) என்பதை நான் புரிந்து கொண்ட வகையில் உனக்கு விளக்க முயல்கிறேன். குறிப்பாய், நாம் பேசிய உடல் என்கிற உயிரியல் வகைத்திணையை (Bio-Catagory) எடுத்துக் கொள்வோம். ஒரு உடல் என்கிற முழுமையானது, பல புலன் உறுப்புகளின் தொகுதி என்பதை நீ மறுக்க மாட்டாய். அல்லது, ஒரு உடல் என்பது பல்வேறு புலன் செயல்களின் (பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகியவற்றின்) தொகுப்பு விளைவுகளால் ஆனது. ஒரு உடலானது தகவமைத்துக் கொள்வதற்காக, அதாவது தனது உயிரை நிலை நிறுத்திக் கொள்வதற்காக, உயிர்சார்ந்த வாழ்க்கைக்காக, இந்த பிரபஞ்ச அமைப்புடன் கொள்ளும் உறவு, அதன் புலன் உறுப்புகளின் மூலமே நிகழ்கிறது. ஆக, ஒரு உடல் என்பது புலன் தொகுதியாக அல்லது புலன் வெளியாக உள்ளது. இந்த புலன்வெளியானது, பிரபஞ்ச வெளியுடன் கொள்ளும் உறவே, உடலின் விஞ்ஞானமாக (Science of the Body) இருக்கிறது. இவ்வுறவை சாத்தியப்படுத்துவது, புலன் உறுப்புகள்தான். இதில் மொழிக்கு என்ன வேலை? என்பது நியாயமான கேள்விதான்.

ஒரு உடல் என்பது புலன்களின் தொகுதியாகவும், அதாவது புலன் வெளியாகவும் உள்ளது என்றால், ஒரு உடலின் புலன் உறுப்புகளை தொகுத்து, இணைக்கும் ஒரு முக்கிய காரணியாக இருந்து புலன்வெளிக்கும் பிரபஞ்சவெளிக்கும் இடையிலான உறவை உருவாக்குவது மொழிதான். பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல் உள்ளிட்ட அனைத்து புலன்பதிவுகளும் மூளையில் பதிவுறுத்தப்பட்டுள்ள மொழிப்புனைவுகளாக மாற்றப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு அனுபவமாக, அதுவே நினைவாக பதிகிறது. ஆக, ஒரு உடலின் புலப்பாடுகளை அர்த்தமாக்குவது மொழிதான். இதன் மறுதலை, ஒரு உடலின் மொழிக்கு ஏற்பவே, உலகின் பொருட்கள் புலப்படும் என்பதுதானே. இதன்பொருள் பார்வைப்புலன் என்பது எல்லா உடல்களிலும் ஒரே விஞ்ஞான விதியால் ஆளப்படலாம். ஆனால், பார்த்தலில் உருவாகும் காட்சிப்படிமம் மற்றும் அதன் அர்த்தங்கள், அவை தரும் உணர்வு, அதன் வழி உருவாகும் புனைவுகள், அவை பதிவதால் உறையும் நினைவுகள் ஆகியவை உடலுக்கு உடல் வித்தியாசமானவை என்பதை நீ மறுக்கமாட்டாய். ஆக, ஒரு உடலின் புலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புகள் எப்படி புலன் பதிவுகளை உருவாக்குகிறது என்பதை தீர்மானிப்பது அவ்வுடலுக்குள் பதிவுறுத்தப்பட்டுள்ள மொழியால்தானே நிகழ்கிறது. அதனால்தான் புலன்வெளியை கட்டமைத்து அதற்குள் இயங்கி, அதனை வெளியாக அமைத்திருப்பது மொழிதான் என்கிறோம். மொழி என்பது நீ கூறியது போல் கருவியோ, வாகனமோ அல்ல ஒரு மனிதவிசை அல்லது மனிதவினை. இவ்விசை அலைவுறும் அல்லது இவ்வினை நிகழும் ஒரு வெளியாக இருப்பதே மனித உடல்.

## குறிப்புரை ஏழு

### சிறைப்படும் வேட்கையுடல்கள்


மனித உடல் என்பது இயல் உடல் (Biological Body) என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும். பல இயல் உடல்களின் வித்தியாசத்தை அழித்து ஓர மைப்பிற்குரிய மனித உடலாக எழுதுவது தான் மொழியின் முக்கியவினையாக இருக்கிறது. இதையே மொழியின் மேலாதிக்க வன்முறையாக பார்க்கிறோம். **(ஈ)** ஆக, இயல் உடல் என்பது பல புலன்பதிவு எந்திரங்களால் இயக்கப்படுகிறது. இவ்வியக்கத்தை சாத்தியப்படுத்தும் விசையாக இருப்பது மொழி என்பதாக நமது உருவகத்தை எளிமைப்படுத்திக் கொள்ளலாம். இப்பொழுது ஒரு இயல் உடலின் புலன்பதிவுகளை, அல்லது புலனியக்கத்தை கட்டுப்படுத்திவிட்டால், அவ்வுடலையும் கூட கட்டுப்படுத்திவிடலாம் தானே. இதன் மறுதலையாக, நமக்கு தேவையான உடலாக ஒரு உடலை கட்டமைக்கவேண்டும் என்றால், அதன் புலன்பதிவு எந்திரங்களை கையகப்படுத்தினால் போதும். அல்லது புலன்பதிவு எந்திரங்களின் விசையை, அதாவது மொழியை கையகப்படுத்தினால் போதும், இதற்கு நல்ல உதாரணம் நம்மிடம் நிலவிவரும் அழகியல் குறித்த பார்வைகள், டி.வி. மற்றும் இதர தகவல் தொடர்புகள் வழி பெருகிவரும் ஒரேவிதமான புனைவுகள், அதனால் அமைந்துள்ள நுகர்வுப் பண்பாட்டுச் சூழல் ஆகியவை **(உ)** ஒரு மாற்றுக் கலாச்சார சூழலை ஏற்க முடியாத அறவியல் புனைவுகளால் இன்று வார்த்தெடுக்கப்பட்ட புலன்பதிவுகள் மட்டுமே இயக்கமடைவதை சொல்ல அதிகபட்ச விளக்கங்கள் தேவை இல்லை.

**(ஈ)** மொழியின் இந்த மேலாதிக்க வன்முறையை எதிர்கொண்டு அழித்தொழிப்பதற்கு, பிறிதொரு மொழியை உருவாக்கவேண்டி உள்ளது. இதனை ஒருவகையில் எதிர்மொழி (Anti-Language) என்று கூறலாம். மொழியின் மையநோக்கு தொகுப்பியக்கத்திற்கு எதிராக விளிம்பு நோக்கிய மையவிலக்க... நகர்ச்சியை சாத்தியப்படுத்தும் மொழியமைவாகும். இது உயிர்த்தலின் பன்முக வித்தியாசங்களைக் கொண்டதாக, ஒவ்வொன்றிற்குமான இடத்தை வரையறுத்து செல்வதாக அமைய வேண்டும். இன்றைய நிலையில் அழிக்கப்பட்ட உடல்களைத் தேடிய கலகமாக, புலன்பதிவு எந்திரங்களை மறுகட்டமைப் பிற்கு உட்படுத்துவதாக, மறுக்கப்பட்ட தன்னிலைகளை கைய கப்படுத்துவதாக அமையவேண்டியுள்ளது.

**(உ)** உடல்களின் புலன்பதிவு எந்திரங்களை, ஒரு ஆதிக்க பண்பாட்டால் கட்டமைக்கப்பட்ட உடல் கையகப்படுத்தி, அவ்வுடலின் இயல்பதிவுகளின் தன்மையை தனது புலன்பதிவுக ளாக மாற்றி அமைப்பதையே நாம் கலாச்சார அரசியல் (Cultural Politics) என்கிறோம். இதன் உச்சம் ஏகத்துவ, முழுமுதல் இலட்சிய பண்பாடாக ஆதிக்க பண்பாடு முன்வைக்கப்பட்டு, சிறு பண் பாடுகள், சிறு சமூகங்கள், தொல்குடிகள் உள்ளிட்ட அனைத்தையும் அழித்தும்-அமைப்பிற்குள் இருத்தியும், தூய கலாச்சாரம், தூய அழகியல் என்கிற பாசிசமாக நீட்சி அடையும். இதுவே இன்று கவனத்துடன் எதிர்க்கப்பட வேண்டிய அரசியல் நிலைப்பாடாக உள்ளது. ஆக இன்றைய மொழி இயக்கம் என்பது பாசிச உடல்களைக் கட்டமைப்பதற்கானதாகவே உள் ளது. இக்கட்டமைவு மேற்கத்தியம், நாகரீகம் என்கிற பெயராலும், இனவெறி, மத வெறி என்கிற வடிவங்களிலும் ஒரு மொழி விளையாட்டைத் துவக்கி அதற்கான சொல்லாடல் வெளியை கட்டமைக்கத் துவங்கி இருக்கிறது.

நீ நினைப்பதுபோல மொழி என்பது செயலற்று இல்லை, மிகவும் நுட்பமான கட்டமைப்பானாக இருந்து உடல்களை பலவிதமான மொழியுடல்களாக கட்டமைக்கிறது. இதுவே முக்கியம், அல்லது இந்த நூற்றாண்டின் மிக முக்கிய அறிதல்களில் ஒன்று என்று கூறலாம். இந்த மொழியுடல்களின் வேட்கைப் பெருவெளிகளாகவே இன்றைய வாழ்தலின் நுண்தளங்கள் கட்டமைந்துள்ளன.

(05/07/95 – 20/07/95)




By Thevathasan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓவியம் : தோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமிகள்

-மிருணாள் பாண்டே

தமிழில் : இரா. விசயகுமார்



நாங்கள் அம்மாவோடு, பாட்டி வீட்டிற்கு கிளம்பிய அன்று, அப்பா மண் கூஜாவைப் போட்டு உடைத்து விட்டார். அவர் வேணுமின்னே உடைச்சாரா இல்ல தெரியாம உடைச்சாரா அப்பிடின்னு தெரியல்லே. அறை முழுக்க எங்கை பார்த்தாலும் ஒரே தண்ணி. அம்மா புடவையை மேலே லேசாகத் தூக்கியபடி அடுத்த அறையிலிருந்த சாருவின் அம்மாவிடம் போனாள். "யாராவது வழுக்கி விழுந்து கையக் கால ஒடச்சிக்கப் போறாங்க. உடனே துடைச்சிடு" என்று சொன்னாள். அம்மாவுக்கு எல்லாமே பிரச்னைதான். நாங்க வீட்ல இருந்தா பிரச்னை, ஸ்கூலுக்குப் போனா பிரச்னை, எங்களுக்கு உடம்பு சரியில்லேன்னா பிரச்னை, உடம்பு நல்லாயிருந்து அங்கயும் இங்கயும் குதிச்சு ஓடிக்கிட்டு இருந்தோம்னா அதுவும் பிரச்னை.

தரையை தொடைக்கும்போது சாருவோட அம்மா, ஒரு பக்கமா தலையை சாய்ச்சுக்கிட்டு எங்க அம்மாகிட்ட கேட்டாள். "இந்தத் தடவை ஒரு மூணு மாசம் நீங்க வெளியூர்ல இருப்பீங்கில்ல." ஏதோ எடையை அளக்கிற மாதிரி கை ரெண்டையும் தொடை மேலை வச்சிக்கிட்டு என் அம்மா சொன்னாள், "ஆமா! அவங்க என்னை சீக்கிரத்துல விடமாட்டாங்க. ஏய்! வெளிய போய் விளையாடு." இந்தக் கடைசி உத்தரவு எனக்கானது. ஏதாவது முக்கியமா பேசிக்கிட்டிருக்கிற நேரத்திலை தலையை நுழைப்பது என் பழக்கம்.

உடைந்த கூஜாத் துண்டை எடுத்து வெளிய போடும்போது, சாரு அம்மாகிட்டயா இல்ல மேல தொங்கற ஒட்டடை கிட்டயான்னு தெரியல. அம்மா சொல்றது கேட்டுது. "இந்தத் தடவையாவது பையனா இருந்தா தேவலை. இந்தப் பிரச்னையிலிருந்து இதோடு விடுதலையாயிடுவேன்." வழக்கம் போலவே சாருவின் அம்மா தலையை ஆட்டியபடி சொன்னாள். "இருக்காதா பின்ன?"

ரயிலில் யன்னலோர சீட்டுக்கான சண்டையில் நான் வெற்றி பெற்ற சந்தோஷத்தில் மற்றவர்களைப் பார்த்து நாக்கை நீட்டி 'ஈ ஈ' காட்டினேன். அம்மா என்னை நோக்கித் திரும்புவது தெரிந்ததும் வேறு ஏதோ சொல்லிச் சமாளித்தேன். ஆனால் அம்மா என்னைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அவளுக்கு ஏகப்பட்ட பிரச்னைகள் - சிதறிக்கிடந்த சாமான்கள், தள்ளாடிக் கொண்டிருந்த மண் கூஜா, அவளுடைய அசதி, நாங்கள் மூன்று பேர் என்று பல பிரச்னைகள். ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றதும் மிளகாய் சமோசா வாங்கினோம். அந்த நேரம் பார்த்து ஒரு அம்மா தன் பிள்ளையை ஜன்னல் வழியா ஒண்ணுக்குப் போக வச்சுக்கிட்டிருந்தாங்க. எனக்கு ஒடம்பு சரியில்லாததால நான் சமோசா சாப்பிடல. அதை அம்மாவுக்கு கொடுத்திட்டேன். என் சீட்டு மேலே ஒரு வெந்த உருளைக்கிழங்கு கெடந்தது. அதை நசுக்கி ஒரு பூச்சி மாதிரி ஆக்கி என் தங்கையைப் பயமுறுத்தினேன். அவள் பயந்து அலறினாள். அம்மா "பளார்" என்று அறைந்தாள். நான் அழ ஆரம்பித்தேன். அக்கா எரிச்சலுடன் சொன்னாள், "சே! ஒரே தொல்லையாப் போச்சு." என்னை விரும்பறது என் அக்கா மட்டும்தான். மத்த எல்லாருக்கும் என் மேலை ஒரே வெறுப்பு.

எங்களை ரயில்வே ஸ்டேஷன்ல இருந்து கூட்டிட்டுப் போக மாமா வந்திருந்தார். நான் அத்தைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன். அத்தை 'பான்' மென்று கொண்டிருந்தாள். அவள் மெல்ல மெல்ல, அவள் வைரத்தோடு மேலும் கீழுமாக ஆடிக் கொண்டிருந்தது. ஜீப் டிரைவர், ஒவ்வொரு தடவை ஹாரனை அழுத்தும்போதும் நாங்க மூணுபேரும் ஒண்ணா சேர்ந்து "பூம் பூம்" என்று கத்தினோம். டிரைவர் சிரித்தார். வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும், அவர் என்னையும் என் தங்கச்சியையும் ஜீப்ல இருந்து இறக்கிவிட்டார். அவர்கிட்ட இருந்து பீடி வாடை அடிச்சுது. அவரு மீசை ரொம்பப் பெரிசா இருந்துது. அவரோடை கம்பிளி யூனிபார்ம் புசுபுசுன்னு இருந்துது. அவர் கண்ணெல்லாம் ஒரே தூக்கக் கலக்கம். கூஜாவை வெளில எடுக்கும்போது திரும்பவும் கவுந்து போச்சு. எல்லா இடமும் ஈரமாயிடுச்சு. எனக்கு அப்பா ஞாபகம் வந்தது. தங்கச்சியோடை செருப்பை நான் தெரியாம மிதிக்க, அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக விழுகிற அளவுக்குப் போயிட்டா. "சனியன்! நீதான் எல்லாத்துக்கும் காரணம்," என்று யாருக்கும் கேட்டுவிடாதபடி பல்லிடுக்கில் கிசுகிசுத்தாள் அம்மா. ஏதோ கீழ விழுந்துறாம இருக்கப் பிடிக்கிறமாதிரி என் கையைப் பிடிச்சு தோள் எல்லாம் வலிக்கிற மாதிரி ஒரே அழுத்தாய் அழுத்தினாள். எங்க கூட அப்பா வரல. நாங்க பாட்டி வீட்டுக்கு வரும்போதெல்லாம் இப்படித்தான் அப்பா எங்களோடு வருவதே இல்லை. அம்மாவும் இங்கு வந்தவுடன் அத்தைகள், சித்தி, பாட்டி, வயசான வேலைக்காரர்கள் இவர்களுடன் ஐக்கியமாகி விடுவாள். பகலில் எப்போதாவது நாங்கள் அவளிடம் போக முயன்றால் கூட யாராவது ஒருவர் - "அந்தப் 'பாவப்பட்ட ஜென்மம்' இங்கையாவது நிம்மதியா இருக்கட்டும்-" என்று சொல்லித் தடுத்து விடுவார்கள். நாங்கள் ஏதோ அம்மாவை விழுங்கி அழித்துவிடப்போவதைப்போல, அம்மாவும் 'பாவப்பட்ட ஜென்மம்' என்ற வார்த்தையை ஏற்றுக் கொள்வாள். பாட்டி வீட்டிற்குள் போவதென்றாலே எனக்கு ஒரே எரிச்சல். அதனால் நான் வெளியிலேயே புதர்கள் ஓரமா திரிஞ்சுக்கிட்டிருந்தேன். நாய் என்னை வந்து மோந்து பார்த்தது. உள்ள இருந்து யாரோ என் பேரைச் சொல்லிக் கூப்பிடறது கேட்டுது. "அவ திரும்பவும் எங்க காணா மப் போயிட்டா." நானும் நாயும் வீட்டுக்குள் நுழைந்தோம்.

மாமா பையனை மடியில் வைத்துக்கொண்டு பாட்டி உட்கார்ந்திருந்தாள். அவள் நாயை "சூ! சூ!" என்று விரட்டினாள். அவள் மிருகத்தைத் தொடறதே இல்லை. வாலைக் கீழே போட்டுக் கொண்டு நாய் வெளியே போனது. இதுமாதிரித் திட்டி அனுப்பறது அதுக்குப் பழக்கமாயிடுச்சு. - "பாட்டி காலைத் தொட்டுக் கும்பிடு" - நான் பணிக்கப்பட்டேன். -"அதுமாதிரி இல்ல.......... நல்லா........ அடியே! பொறவிப் பொண்ணு வாழ்க்கை பூரா வளைஞ்சு இருக்கணும். ஏன் இப்ப கத்துக்கக் கூடாது?"பாட்டி என் முதுகைத் தட்டிக் கொடுத்து விட்டுச் சொன்னாள் - "இவ இன்னும் உயரமா வளரவேயில்ல. இவ எட்டு வயசுப் பொண்ணுன்னா யாரு நம்புவா?"-

நான் மாமா பையனைக் கிள்ளினேன். ஆனா முட்டாள் மாதிரி என் பின்னாடியே சுத்திக்கிட்டிருந்தான். அவன் அழகா குண்டு குண்டுன்னு இருந்தான். அவன் வயசுக்கு அவன் ரொம்ப உயரம். அஞ்சு வயசுதான் ஆகுது. பார்த்தா ஏழு வயசுப் பையன்மாதிரி இருப்பான். அவன் கேட்டான் - "ராத்திரி எனக்கு ஒரு கதை சொல்லுவியா?" நான் "முடியாது" என்று சொல்லிவிட்டு பேப்பர் படிக்கிறமாதிரி பாவ்லா செய்ய ஆரம்பித்தேன்.

-"ஓ! என்ன பிரச்னை இது" பக்கத்து வீட்டுக்காரியிடம் சலித்துக் கொண்டாள் அம்மா. அவள் பாட்டியிடம் சொன்னாள் "உங்க மகளுக்குக் கண்டிப்பா இந்தத் தடவை ஆம்பிளைப் பிள்ளைதான் பொறக்கும். அவ மொகத்தைப் பாருங்க. எவ்வளவு மஞ்சளா இருக்கு. போன தடவை பொண்ணு பொறந்தப்ப எவ்வளவு ஊதா நிறமா இருந்தது ஞாபகமிருக்கா?" - யாரு கண்டா இந்தத் தடவையும்..........- என்று வார்த்தைகளை முடிக்காமலேயே ஒரு சோகத்துடன் நகங்களைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள் அம்மா. "உங்க வீட்டுக்காரருக்குச் சமைச்சுப் போட யாராவது இருக்காங்களா?" பக்கத்து வீட்டுப்பாட்டி கேட்டாள். அப்பா இல்லாதது எனக்கு எதையோ இழந்ததைப்போல இருந்தது. அப்பாகிட்டயிருந்து எப்படி வாசனை வரும், அவர் மடி எவ்வளவு மெதுவா இருக்கும் - நினைத்துக்கொண்டேன் நான். இங்க என்னை அம்மா மடியில உட்கார விடுறதே இல்ல. "சே! என் எலும்பெல்லாம் வலிக்குது. சேலையெல்லாம் கசக்கிட்ட! எழுந்திரு மேல. எனக்கு தலைக்கு மேல வேலையிருக்கு. அதுல நீ வேற, ஒரே தொல்லை. எழுந்திரு." அம்மா கத்துவாள். பாட்டி கைகளை கட்டிக்கொண்டு சொன்னாள், "கடவுளே என் மானத்தைக் காப்பாத்துப்பா. இந்தத் தடவையாவது அவ பொறந்த வீட்லயிருந்து ஆம்பிளைப் பிள்ளையோடு போகட்டும்." பாட்டி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நான் ஓரக்கண்ணால் பார்த்தேன். அக்காவும் தங்கையும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் தூங்கிய அறை மரத் தடுப்புகளால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. என் படுக்கைக்கு நேர் மேலே பெரிய கடிகாரம் தொங்கிக் கொண்டிருந்தது. அது தொடர்ந்து "டிக்கிக்" கொண்டிருந்தது. மணி அடிப்பதற்கு முன் "கிர்" என்ற ஒரு ஓசையையும் எழுப்பியது. எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டுவிட்டன. அறை முழுக்க நிலவொளி பரவிக் கிடந்தது. அம்மாவின் உள்ளங்கால்களில் எண்ணையைத் துடைத்தபடி துல்கா சொன்னாள் "இந்தத் தடவை ஆம்பிளைப்பிள்ளை பொறந்தா உனக்கு சரிகையோட பொடவை வாங்கித் தரேன்." நிலவு வெளிச்சத்தில் அம்மாவின்முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவளுடைய பானை போன்ற வயிற்றை மட்டுமே பார்க்க முடிந்தது. அம்மாவின் சேலை சரிந்து கிடந்தது. துல்கா ஏதோ வலியான இடத்தைத் தொட்டிருக்கவேண்டும். அம்மா வீடு திரும்பும்போது பசுமாடுகள் முனகுமே அதுமாதிரி மெதுவாக முனகினாள். "இந்தத் தடவை ஆம்பிளைப்பிள்ளையா இருந்தா நான் இதுலயிருந்து விடுதலையாயிடுவேன். சரி! நீ போய் படுத்துக்கோ. குழந்தைங்க உனக்காக காத்துக்கிட்டிருக்கும். படுக்கும்போது எண்ணெய்க் கிண்ணத்தை மறக்காம கட்டிலுக்கு அடியில தள்ளி வச்சிரு. இல்லாட்டி காலையில எழுந்தவுடனே குழந்தைங்க ஏதாவது தட்டி விட்டுடும். அப்புறம் அது அபசகுனமாகிடும்." அம்மா எந்த வாக்கியத்தையாவது முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டால், அது அறை முழுவதும் கொஞ்ச நேரத்துக்கு மிதந்து கொண்டிருந்தது. பெரியவர்கள் நல்ல விஷயங்களைத்தான் எப்போதும் முழுமையாகச் சொல்லி முடிக்கிறார்கள். மோசமான செய்திகளைப் பாதியிலேயே விட்டுவிடுகிறார்கள். "சே! பொம்பளையோட தலையெழுத்து....".. அமைதி. "சே! மூணு பொண்ணுங்க.....". அமைதி. ஏன் இப்படி ?

வெளியில் ஒரு நட்சத்திரம் பிரகாசமாக மின்னிக் கொண்டிருந்தது. அதுதான் துருவ நட்சத்திரமா? அப்பா என்னிடம் சொல்லியிருக்கிறார் "நீ கஷ்டப்பட்டுப் படிச்சேன்னா, துருவா, நட்சத்திரமா ஆகலை, அது மாதிரி நீயும் எது வேணும்னாலும் ஆகலாம்". "ஆனா நான் ஒரு ஆம்பிளைப் பையனா ஆகமுடியாது. இல்லப்பா" நான் உறுதியாகக் கேட்டேன். ஏன்னே தெரியல அப்பா என்னைத் திட்டினார். "பெரியவங்களை எதுத்துப் பேசாதே!"

பெரியவங்களைப் புரிஞ்சுக்கிறது முடியாத காரியம். அவங்கள நம்பவே கூடாது அப்பிடின்னு அக்கா சொல்லுவா. அவங்களுக்கு ஏதாவது தெரியணும்னாப் போதும், கெஞ்சியோ மிரட்டியோ, எதையாவது பண்ணி, விஷயத்தை வாங்கிடுவாங்க. ஆனா ஒரு விஷயத்தையும் உங்களுக்கு சொல்லமாட்டாங்க!

ஒருத்தரும் உங்களுக்கு எதுவும் சொல்லமாட்டாங்க. அதிலயும் ராத்திரியில நாங்க தூங்கப் போன உடன தான், ஏதோ மாயா ஜாலப்பெட்டி மாதிரி, அவங்க உலகமே திறக்க ஆரம்பிக்குது. முழிச்சிருந்து எல்லாத்தையும் கேக்கணும்னு எனக்கும் ஆசை தான். ஆனா ஏன்னே தெரியலே நான் பாதியிலய தூங்கிப் போயிறன்.

யாரு குரல் அது? மெதுவா அழற சத்தம் கேக்குதே அது யாரு சின்ன சித்தியா? "என்னை அந்த வீட்ல நாயைவிட கேவலமா நடத்துறாங்க" சித்தி அம்மாவிடம் சொன்னாள். எங்கே நாயைவிட கேவலமா நடத்துறாங்க? நான் கேக்கணும்னு நெனச்சேன். அம்மா பதிலளித்தாள். "எல்லோரும் அப்படித்தான் கஷ்டப்படறோம். ஆனா என்ன செய்ய, பொறுத்துக்க வேண்டியதுதான்." என் கண்கள் மூடின.

அடுத்த நாள் காலை எல்லோரும் டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது நான் அம்மாவிடம் கேட்டேன், "எதைப் பொறுத்துக்க வேண்டி இருக்கும்மா? அதான் - சின்ன சித்தி ராத்திரி சொன்னாங்களே" - என்று நினைவுபடுத்தினேன். பளார் என்று ஒரு அறை விழுந்தது. பின்பு மற்றொன்று. அத்தைதான் உதவிக்கு வந்தாள். "இருக்கட்டுமே அவ குழந்தைதானே". குழந்தையா அவ, பிசாசு! அம்மாவின் வயிறு கோபத்தில் தள்ளாடியது. பெரியவங்களப் பத்திப் பேசுறது அவ என்னதான் அவாளோ, அந்த ஆண்டவனுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தான் தெரியும்.

தான் சேகரித்து வைத்திருந்த பூக்களை கையில் வைத்துக் கொண்டு தோட்டத்தில்அக்கா கையசைத்தாள். "இந்த மாதிரி கேள்வியெல்லாம் கேக்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருப்பேன். இந்தமாதிரி நீகேள்வி கேட்டுக்கிட்டே இருந்தி யின்னா, இவங்க ஒரு நாள் உன்னை அடிச்சே கொன்னுடுவாங்க." என்றாள் அக்கா. நான் அழுதுகொண்டே சொன்னேன். " நான் கேள்வி கேப்பேன், ஆமா நான் கேப்பேன்." "அப்ப எப்பிடியோ செத்த ழிஞ்சு போ" என்றாள் அக்கா. எனக்குக் கேட்கவேண்டும் என்பதற் காகவே பாட்டி, அக்காவிடம், "நீதான் என் லட்சுமி" என்றாள். மதிய நேரத்தில், சின்னஞ் சிறுசுகளுக்கு, வாதாமரத்தில் இருக்கும் பேய் பிசாசுகளைப் பற்றிய பயங்கரமான கதைகளை எல்லாம் சொன் னேன். "நீங்க நடுராத்திரியில அங்க போனிங்க..... குழந்தைங்க ரத்தத்துல அதுங்க குளிக்கிறத நீங்க பார்க்கலாம். அதுங்க மூக்கு வழியாதான் பேசும். அதுங்க என்ன பேசுதுன்னே முதல்ல உங்க ளுக்குப் புரியாது". குழலூதுபவன் பின்னால் சுண்டெலிகள் மயங்கிப் போனது மாதிரி, குழந்தைகளும் என் பின்னாலேயே வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தன.

மதியம் குண்டு அத்தையும், அம்மாவும் எங்களுக்கு காசு கொடுத்து இனிப்பும் புளிப்பு மிட்டாயும் வாங்கச் சொல்லி வெளியில் அனுப்பி வைத்தார்கள். அறை இருட்டாக இருந்தது. கண்ணாடி ஜன்னல்களின் மேல்பச்சைக்காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அத்தை, அம்மா, சித்திகள், பாட்டி என்று அறை முழுக்கப் பெண்களாக உட்கார்ந்து இருந்தனர். இது அதுன்னு எப்பப் பார்த்தாலும் அவங்க எதையாவது தின்னுகிட்டே இருக்காங்க. மெத்துமெத்துன்னு இருக்கிற அவங்க கையும், கொழுகொழுன்னு பாதி வெளியில தெரியற அவங்க காலும், மடிப்பு விழுந்த வயிறும். சே! நாங்க பாதத்தை அகட்டி வைச்சு உட்கார்ந்தா மட்டும், காலு வெளிய தெரியும்னு திட்டறாங்களே ஏன்?

"உங்களைப் பார்த்தா பசுமாடு மாதிரி இருக்கு" என்றேன். ஆனால் யாருக்கும் கேட்கல போலயிருக்கு. தலைக்கு அடியில் தலையணையைக் கொடுத்து, தரையில் படுத்துக்கொண்டிருந்த சின்ன சித்தி, ஒரு புளிப்பு மிட்டாயை எடுத்து வாயில் போட்டு சப்புக் கொட்ட ஆரம்பித்தாள். " உண்மையில் அத்தான் தான் எல்லை (வரம்பு)!." என்று அவள் சொல்ல அறை முழுக்க வெடிச்சிரிப்பு கிளம்பியது. யார்? ஏன்? எப்படி? நான் பதிலுக்காகச் சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆனா யாரும் எங்களை கண்டுகொள்ளவேயில்லை. மீண்டும் அவர்கள் பாஷையில் அவர்கள் மும்முரமாக பேச ஆரம்பித்தார்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக கதவை ஓங்கி அறைந்து சாத்திவிட்டு நான் வெளியில் வந்தேன். கோபத்தோடு அம்மா வெளியில் வந்து சே! என்ன தொல்லை என்று சொல்லக்கூடும். ஆனால் என்னைத் திட்ட யாரும் வெளியில் வரவில்லை.

" தள்ளி நில்லு" ஹரியின் அம்மா என்னைப்பார்த்துத் தலையை அசைத்தாள். அவள் தட்டு நிறைய டீ டம்ளர்களை எடுத்துக் கொண்டு அறைக்குள் போய்க்கொண்டிருந்தாள். "இது உனக்கில்ல பெரியவங்களுக்கு தள்ளி நில்லு" என்றாள். ஹரி அம்மாவின் மூக்கு தவளை மாதிரி இருக்கும். அவள் புருவங்கள் இரண்டும் மூக்குக்கு மேல் சந்தித்துக் கொள்ளும். அவள் சிரிக்கிறபோது அவளுடைய கன்னங்கள் செத்த வவ்வால் மாதிரி தொளதொளப்பாகத் தொங்கும். "இப்ப தள்ளப் போறயா இல்லயா?" அவள் மறுபடியும் சொன்னாள். "முடியாது, முதல்ல பொண்ணுங்க எல்லாம் நல்லவங்கன்னு சொல்லுங்க" என்றேன். "சரி சரி நான் சொல் லிட்டேன் போதுமா? தள்ளு" என்றாள். "முடியாது ஒழுங்கா சொல் லுங்க" நான் வற்புறுத்தினேன்.

"ஹரி அம்மா! அங்க என்ன நடக்குது? அடுத்த வருஷமாவது டீ கொண்டு வருவியா இல்லையா?" சித்தி கோபத்தில் அறைக் குள்ளிருந்து கத்தினாள். ஹரியின் அம்மா புருவங்கள் இரண்டையும் நெருக்கிக்கொண்டு "இங்க பாருங்க இந்த நடுப்பொண்ணு என்னை விட மாட்டேங்கறா" அவள் சொல்லிவிட்டு சிரிக்க ஆரம்பித்தாள். அவளுடைய தவளை மூக்கு துடித்தது. அம்மா என் பேரைச் சொல்லி "அவ ரொம்ப தொந்தரவு கொடுப்பா என் உயிரை எடுக்க றதுக்குன்னே அவ பொறந்திருக்கா" என்று திட்டினாள். யாரோ அம்மாவிடம் சொன்னார்கள் "இந்த நிலையில் நீ கோபப்ப டக்கூடாது."

பறக்கும் பறவைகளைப் பார்த்துக்கொண்டு நான் வீட்டுக்கு வெளியிலேயே நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தேன் நான் ஏன் பறவையா பொறந்திருக்கக்கூடாது.? பெண் குஞ்சுன்னா அவ்வளவு நல்லதில்ல- அப்பிடித்தான் தாய்ப்பறவையும் நினைக்குமா?

"அவ எங்க போயிட்டா?" உள்ளேயிருந்து யாரோ தேடிக்கிட்டு வந்தாங்க. என்னை கண்டு பிடிக்கக்கூடாது என்பதற்காக நான் வேண்டுமென்றே சுவருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன். எப்போதுமே எங்கேயும் எப்படியும் என்னை யாரும் கண்டு பிடிக் கக்கூடாது. யாருமே பார்க்க முடியாதமாதிரி மாயமா மறைஞ்சு போக வைக்கிற மாயமிட்டாய் மட்டும் எனக்கு கிடைச்சா எவ்வளவு நல்லா யிருக்கும்!

இரவில் கதை சொல்லி முடித்த பாட்டி, " போங்க எல்லாரும் போய்த் தூங்குங்க" என்றாள். என் தங்கை ஏற்கனவே தூங்கி விட்டாள். அவளை ஹரியின் அம்மா எடுத்துக்கொண்டு போனாள். பாட்டியோட உடம்பு மெதுவா கதகதப்பா இருக்கும். மெத்தையி லிருந்து கிராம்பு, ஏலக்காய் வாசமெல்லாம் வரும். பாட்டி தலைய ணைக்கடியில் எப்போதும் டார்ச் வைத்திருப்பாள். வெளக்கெல்லாம் அணைச்சபிறகு பாத்ரூம் போகும்போது இத எடுத்துக்கிட்டுப்போனா நீ எங்கயும் முட்டிக்க மாட்டே என்றாள் பாட்டி. " பாட்டி, நான் உன் கூடவே படுத்துக்கவா" என்றேன். "இல்ல இல்ல இந்தப் பையன் என்னவிட்டு ஒரு நிமிஷம் கூட இருக்கமாட்டான். இங்க ரெண்டு பேர் படுக்க எடம் ஏது? நீ போய் அம்மா கிட்டப் படுத்துக்க நான் நாளை க்கு உனக்கு இன்னொரு கதை சொல்றேன், என்ன?" என்றாள் பாட்டி. பாட்டியோட குரல் தேன் தடவின மாதிரி இருந்தது. எதை யாவது நயமா பேசி உங்க கிட்ட சாதிக்கணும்கிறபோது பெரிய வங்க குரல் இப்படித்தான் மாறிடுது. அடுத்த அறையில் படுத்திருந்த அக்கா என்னிடம் திரும்பாமலேயே சொன்னாள். "அவங்க உன் னைப் பக்கத்தில படுக்க விட்டாங்களா" அவள் குரலில் கோபம் கொப்பளித்தது. கடிகாரம் 'டிக்கிக்' கொண்டிருந்தது. அம்மா குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். உன்னைப் படுக்க விட் டாங்களா? உன்னைப் படுக்க விட்டாங்களா? டிக்.... டிக்....கிர்..... கிர்.....

"பொண்ணுங்கல்லாம் எங்க போனீங்க?" பாட்டி அழைத்தாள். அவள் கையில் குங்குமம் இருந்தது. அவள் முன்னால் பெரிய பாத்திரத்தில் அல்வாவும் பூரியும் இருந்தது. அவள் முன்னால் பெரிய விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. "இன்னைக்கு அஷ்டமி, வாங்க, உங்களுக்கெல்லாம் பொட்டு வச்சுவிடறேன்." அவள் ஆரத்தி எடுப் பதற்காக கற்பூரம் கொழுத்தினாள். வாங்க, உங்களுக்கெல்லாம் ஆரத்தி எடுக்கறேன் என்றாள் பாட்டி. என் இரண்டு சகோதரிகளும், மாமாவின் அழகான பொண்ணுங்களும் பாட்டிக்கு முன்னால் சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தனர். பாட்டி அவர்களுக்கு பொட்டு வைத்துவிட்டு, ரயில்வே கார்டு மாதிரி மணியடித்தாள். பிறகு அவள் பூம்.... பூம்....என்று சங்கு ஊதினாள். நான் இஞ்சினாக மாறி முற்றத்தைச் சுற்றி வந்தேன். கற்பூரம், அல்வா, நெய், பூக்கள் என்று அறை முழுக்க ஒரே வாசனை. " டிக்கட் எடுங்க கல்கத்தாவுக்குக் கிளம்புங்க......பூ......பூ......" நான் இஞ்சின் ஆனேன். "கண்ணு இங்க வா. உனக்கு பொட்டு வச்சுவிடறேன். நீ என் கன்னியாகுமரி இல்ல.?" "இல்ல நான் இஞ்சின்" என்றேன் நான். "அவ இஞ்சின், அவ இஞ்சின்" மாமா பையன் கை தட்டிச் சிரித்தான். அம்மா என்னை நோக்கி ஆடி ஆடி வர ஆரம்பித்தாள். அவள் முகம் கோபத்தால் இறுகிப் போயிருந்தது. பயத்தால் திடீரென்று என் வயிறு இறுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தது. "நான் உன்னை இதோ ஒரு நிமிஷத்தில இஞ்சி னாக்கிறன் பாரு!" அம்மா கத்தினாள்.

"உனக்கு என்ன பைத்தியமா?" என்றபடி பக்கத்து வீட்டுப் பாட்டி வந்து அம்மாவின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு சொன்னதைச் செய்யுமாறு எனக்கு கண்ணால் சைகை காட்டினாள். "அவ கன்னியா குமரி, இன்னைக்கோ அஷ்டமி, அம்மனோட நாள், இன்னைக்கு ஒரு கன்னியாகுமரியை நீ அடிக்கலாமா? அது பாவம்" என்றாள் பக்கத்து வீட்டுப் பாட்டி. நான் விளிம்பிலிருந்து தொப் பென்று குதித்தேன். பாட்டி இறுக மூடிய உதடுகளோடு பெண் களுக்கு அல்வா, பூரி கொடுக்க ஆரம்பித்திருந்தாள்.

"நீ ஏன் போக மாட்டேங்கறே, உன் அம்மாவை இந்த நேரத்துல ஏன் அழ வைக்கற" கோபமடைந்த சித்தி திட்டினாள்.

"உங்களுக்கு பெண் குழந்தைங்களே பிடிக்காதபோது, அவ ங்கள கும்பிடற மாதிரி ஏன் நடிக்கிறீங்க?" அழுகையினால் என் குரல் வெடித்தது. எரியிற சூடத்தை விழுங்கி என் தொண்டையில் தழும்பு உண்டாவதைப்போல உணர்ந்தேன். அவ்வளவு கோபம் எனக்கு. "ஏன் நடிக்கிறீங்க" நான் மீண்டும் கேட்க நினைத்தேன். ஆனால் அழுகை வந்துவிடும் என்ற பயத்தில் அமைதியாக இருந்தேன். நான் அழ விரும்பவில்லை. அதுவும் இவர்களுக்கு முன்னால் நான் அழ விரும்பவில்லை. ஹரியின் அம்மா வாயில் கையை வைத்துக் கொண்டு ஆச்சர்யத்துடன் சொன்னாள். "அம்மாடியோவ்! அவளைப் பாருங்க! ஒரு பொண்ணு அவளுக்கு வர்ற கோபத்தப் பாரு." பாட்டி ஒவ்வொரு சிறுமிக்கும் ரூ1.25 வழங்கினாள். ஒரு ரூபாயில் மடிக்கப்பட்ட 25 காசுகளை என்னிடம் நீட்டியபடி "ஒண்ணேகால் ரூபாய்க்கு 20 புளிப்பு மிட்டாய் வாங்கலாம்." என்று சுவரைப் பார்த்துச் சொல்வதைப் போலச் சொன்னாள் பாட்டி. பாட்டியின் கட்டைவிரல் நுனியிலிருந்த குங்கும அடையாளம் எனக்கு ரத்தக் கறையாகத் தென்பட்டது. நான் சுவரை நோக்கி பின்புறமாக நகர்ந்தேன்.

அல்வா, பூரி, பொட்டு, பணம் - "இந்த பெண்களுக்கான பண்டங்களே எனக்கு வேண்டாம். நான் ஒண்ணும் கடவுளாக மாட்டேன்." நான் அலறிய அலறலில் முற்றத்தில் தானியம் கொத்திக் கொண்டிருந்த புறாக்களெல்லாம், ஏதோ துப்பாக்கிச் சத்தம் கேட்டதைப்போலப் பயந்து பறந்தோடின. ●

(நன்றி மனுஷி)

# இடம்மாறும் அசோக வனங்கள்

## நிலாவெளிக்கைலை

அசோகவனம் என்னவோ
எப்போதும் போல...
காலியாகவே ...
அவரவர் வீடுகளே...
அபலை சீதைகளின்
அசோகவனமானது

சீதைக்கு
தீக்குளிப்பு
வாழ்க்கையில்
ஒரு சம்பவம்
எங்கள் சீதைகளுக்கு
தீக்குளிப்புக்குள்ளே
வாழ்க்கை
இதுவே நிரந்தரம்

சீதைகளை...
சிறை மீட்கிறேன்
என புறப்பட்ட ... அநுமார்
(கல்யாண) புறோக்கர்களாலே
சீதைகளுக்கு
திரும்ப ...
சிறை வைப்பு
அசோகவனம் என்னவோ
எப்போதும் போல...
காலியாகவே ...

எங்கள் ...
மண்ணிலே நடப்பது
புதுமையான ...
ராமாயணம்
இத்தாலி, கனடா, பிரான்ஸ் என
இராமர்கள்தான்
இரவல் நாடுகளில்
சீதன யுத்தம் மாத்திரம்
சப்தமின்றி...
அங்கே மௌனமாய்

இங்கே ...
கல்யாண யுத்தகளத்தில்
சீதைகள்தான்
திருப்பியனுப்பப்படுகிறார்கள்
இராமர்களால...
இன்றுபோய் ...
நாளைவா ...!
இன்னும் நிறைய
கொண்டுவா என்று
அசோகவனம் என்னவோ
எப்போதும் போல...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமாவளவனின் இரண்டு கவிதைகள்

## ஆற்றுப்படுத்தல்


சுரணையிழந்து
ஓடிக்கொண்டிருக்கிறது
ஆறு
என் இன்றைய நாளைப்போல.

வேரறுந்து நீர்தொட்ட
உச்சாணிக் கொப்பிருந்து
கரைகிறது குருவி
கண்ணீர் உறைகிறது குரலில்.

சலசலத்து நீரோட
மரந்துளிர்த்துப் பூப்பூக்க
இணை தேடி
கலவி கொண்டு
கூடுகட்டி முட்டையிட்டு
காத்திருந்து
உணவூட்டி மகிழ்ந்திருந்த குருவி.

எங்கோ தொலைவில்
வானிடிந்து கொட்டிய கொடுமழையில்
கரையரித்து நீரோட
வேர் அறுத்து மரம் வீழ.

ஓடிக்கொண்டிருக்கிறது
ஆறு
நகரும் என் வாழ்வென.



## தேடுகை

புலரிப் பொழுதெழுந்து
புறப்பட்ட பறப்பு
கூடு திரும்பவில்லை.

வழிகாட்டிகளெல்லாம்
தறிகெட்டலைய
சூரியனைக் குறிவைத்து
நகர்த்திய தேடல்
தரிப்பின்றி நீளும்
படுவான் திசை பார்த்து.

காட்டில்
கடல்வெளியில்
கரிசல்பூமி அகதிமுகாம்களில்
முகமிழந்த கடவுச்சீட்டில்
சரக்குக்கப்பலின் அணியக்கிடங்கில்
பனியில்
பனிநிறை புலவில்
பன்மொழிக் கலப்பில்
துருவக் கொடுங்குளிரில்

இவையெல்லாம்
தரிப்புகள் அல்ல
தடையங்கள்.

எப்பொழுதில்
நான் கூடு திரும்ப
இப்போதும்
சூரியனைத் தேடியபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணா அச்சகம்

# KRISHNA

10 வது ஆண்டு....

மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்

பிரான்சில்
தமிழ் பதிப்பக முன்னோடிகள்.

**73, Rue Doudeauville, 75018 Paris**

**TEL : 01 42 51 29 92   FAX : 01 42 51 35 25**

**M° : MARCADET POISSONNIERS**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்கள் என்பன

## தேவா

"கெதியாய் வெளிக்கிடேனப்பா. நேரம் போகுதெல்லோ. எத்தினை முற சொல்லிப் போட்டன்" எழுத்தாளன் சிதம்பரம் வெகு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தான். இன்று அவனுக்கு மிக மிக விஷேசமான நாள். மூன்றாவது முறையாக அவனுடைய கதைத் தொகுதி ஒன்று வெளிவந்திருந்தது. பெண் உரிமை, ஆணாதிக்கத்தைப்பிட்டுப்பிட்டு வைத்த அவன் கதைகளை எழுத்துலகம் மெச்சிக் கொண்டிருந்த சமயம் அது. அதற்கான பாராட்டுவிழா இன்று. மகனைக் குளிக்க வைக்க பிரயத்தனம் செய்து கொண்டே இப்படி மனைவிக்கும் ஒரு குரல் கொடுத்தான். அவள் இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்தது மேலும் எரிச்சலைத் தந்தது. மகன் கையில் கிடைத்தான். இரண்டு அடிகள் முதுகில் விழுந்தன.

"அப்பா...வலிக்குது.... வலிக்குது...."

"உங்களையெல்லாம் அடிக்காமல் விட்டதுதான் என்ர பிழை. நல்லா அடிச்சு உதைச்சு வளத்திருந்தால் இப்படியெல்லாம் நான் கஷ்டப்படவேண்டியிருக்காது."

"நீங்கள் என்ன கஷ்டப்படுறியளாம் எண்டு அவனப் போட்டு இப்பிடி அடிக்கிறீங்க"

"ஓ இவ பெரிய வக்காலத்து வாங்க வந்திட்டா. இன்னும் தானும் வெளிக்கிடேல்ல பிள்ளையையும் வெளிக்கிடுத்தேல்ல. ம். பெரிய ராணிமாதிரி குந்திக்கொண்டு கத பேசிறா."

"நான்தான் வரமாட்டன் எண்டு எப்பவோ இருந்து சொல்லிறன். வரமாட்டன் எண்டால் வரமாட்டன் தான்."

"இஞ்ச இந்த பிடிவாதத்தையெல்லாம் விட்டிட்டு வெளிக்கிடு. உன்ர சீலய அயர்ன்பண்ணி வைச்சிருக்கிறன். அந்த சங்கிலியயும் வெளியில எடுத்து வச்சிருக்கிறன். சுணக்காமல் வெளிக்கிடு. நேரம் போகுதப்பா. தம்பி தலயத்துட. நான் உடுப்புகள எடுத்துக்கொண்டு ஓடியாறன்."

போகும் வழியில் மனைவி என்ன செய்கிறாள் என்று கவனிக்க வசதி வந்தது. அவள் முன்னர் உட்கார்ந்திருந்த சோபாவில் இல்லை. சிலவேளை வெளிக்கிடுகிறாளோ என்று அறைக்குள் எட்டிப்பார்த்தால் அங்கும் இல்லை. இவள் எங்குதான் போனாள்? வீட்டின் வசிப்பறையின் இடையிலுள்ள கதவைக் கடந்து பின்கொல்லைக்குப் போனான். அங்கு அவள் துணி காயப்போட்டுக் கொண்டிருந்தாள்.

"இதுக்கு உனக்கு இப்பயா நேரம் கிடைச்சுது. கொண்டா நான் காயப்போடுறன். நீ போய் வெளிக்கிடு." அவளிடமிருந்து துணிகளைப் பிடுங்கினான் அவன்.

"எனக்கு வர ஏலாது. நான் வரமாட்டன்."

"இஞ்ச பார். இந்த பிடிவாதம்தானே கூடாது. நான் என்ன வரக்கூடாத இடத்துக்கே உன்னைக் கூப்பிடுறன். போய் வெளிக்கிடம்மா. போ. என்னப் பழி வேண்டாத. நான் என்ன பாவம் செஞ்சன். உன்ன கெஞ்சிக் கேக்கிறன்."

"உங்கட தேவைக்கு காலிலையும் விழுவியள் கழுத்திலையும் விழுவியள். நான் அங்க வரமாட்டன் எண்டு எப்பயோ சொல்லியும் நீங்கள் அதக் காதால கேட்டாத்தானே."

"ஏன் வரமாட்டன் எண்டுறாய். உன்ர புருசனுக்கு கிடைக்கப் போற மதிப்பப் பாக்க உனக்கு ஆச இல்லயா? அது உனக்கும் கிடைச்ச மாதிரித்தானே."

"ஓம். அது ஒண்டுதான் எனக்கு குறையாயிருந்துது. அதயும் நீங்க இப்ப எனக்கு வேண்டித் தாறீங்க. சந்தோசம். மத்த ஆக்கள் உங்கள மேடயில வச்சு பெரிசா பேசிட்டுப் போவாங்கள். நானெல்லோ நாள் பூரா உங்களோட வாழ்றன். எனக்கெல்லோ தெரியும் உங்களப்பத்தி."

"என்ன தெரியும் உனக்கு என்ர எழுத்துக்களப்பத்தி. எண்டைக்காவது வாசிச்சுப் பாத்திருக்கிறியா. நீ என்ன கதைக்கிறது என்ர கதைகளப்பத்தி. என்ர திறமயப்பத்தி அங்க பேசுவாங்கள். வந்து கேட்டுப்பார்."

"உங்கட கெட்டித்தனத்தையெல்லாம் என்னட்ட காட்ட வராதையுங்கோ. நீங்க புகழுக்காக செய்யுறீங்க. அதுக்கு நான் ஏன் இழுபடவேணும்"

"ஒரு பெரிய எழுத்தாளரின் பெஞ்சாதி என்டிறதில பெருமையில்லையோ. உன்னைத்தான் எல்லாரும் புகழுவான்கள். புருசனுக்கு வலது கரமாய் இருந்து இத்தனை புகழ் பெற துணையாய் நின்றவள் எண்டு உன்னையும்தானே ஏத்தி வைப்பான்கள்."

"உது தெரிஞ்ச கத தான். மேடயில என்ன புகழ்ந்து பேசுவான்கள். வீட்டுக்கு வந்தால் என்ன செய்யிறீங்கள். வீட்டில சும்மா உட்கார்ந்துகொண்டு வீண்பொழுது போக்கிறியள். ஒரு வேலைக்குப் போனீங்கள் எண்டாலும் காசு கிடைக்கும் எண்டு வேற அட்வைஸ் பண்ணுவாங்கள்."

"அவங்களிட கதய விடு. நீ போய் வெளிக்கிடு."

"நான் மாட்டன். மாட்டன்."

"அப்பா. அப்பா.." மகன் கத்த சிதம்பரம் மகனிடம் ஓட "பொறடா வாறன். எல்லாத்துக்கும் இந்த வீட்டில் நான்தான் இழுபட வேண்டும்." போய்க்கொண்டே,

"நேரம் போகுது வெளிக்கிடு. நான் காருக்குள்ளையும் சில சாமான்கள் ஏத்த வேண்டிக்கிடக்கு." மகனிடம்போய் அவனுக்குரிய உடைகளை நீட்டி "தம்பி நீ வெளிக்கிட்டதும் எனக்கு சில உதவிகள் செய்து தா என்ன" என்றான் சிதம்பரம்.

"அப்பா எனக்கு இந்த உடுப்பு வேணாம். எனக்கு வேற உடுப்புகள் கொணந்து தாங்க."

"ஏய். சொல்றதைக் கேள். இந்த உடுப்பு நான் உனக்காக வடிவா அயர்ன்பண்ணிக் கொணந்தன். அங்க அப்பாவுக்கு எவ்வளவு பெரிய மதிப்புக் கிடைக்கும் தெரியுமா. அதுக்கு நீயும் இந்த உடுப்பில வந்தாத்தான் எனக்கும் சந்தோசமாய் இருக்கும்."

"அதென்னப்பா மதிப்பு."

ஆறு வயது மகன் ஆர்வமாய்க் கேட்க எழுத்தாளனுக்கு கரைகடந்த சந்தோசம் கிளம்பிற்று. மனைவிக்கும் நன்கு கேட்கவேண்டும் என்பதற்காகவே ஓங்கிய குரலில்.

"நான் புத்தகம் ஒண்டு எழுதியிருக்கிறன். அத நிறையப்பேர் பார்த்து புகழ்ந்திருக்கினம். இண்டைக்கு எனக்கு அதுக்காக என்ரை பிரண்ட்ஸ்மார் ஒரு பார்ட்டி போடினம். என்ர புத்தகத்தையும் விற்கப்போகிறார்கள்."

"அப்ப நீங்கள் ஏன் நேற்றே போய் ஹோலில் வேலை செய்தீகள். உங்கட பிரண்ட்ஸ்மார்தானே எல்லாம் செய்யவேணும்."

"நானும் சும்மாபோய் உதவி செய்தனான். சரி சரி நீ கெதியாய் சேட்டைப் போட்டுக்கொண்டு வா."

"புத்தகம் வித்தால் காசும் கிடைக்கும்தானே."

"ஓம். ஓம். நீ கதை பேசாம வெளிக்கிடு. நேரம் போய்க்கொண்டிருக்கு. தலைக்கு மேல வேல கிடக்கு. எங்க அம்மா போட்டா. அவவ கெதியாய் வெளிக்கிடச் சொல்லு. நான் போய்க் காரில சாமான்கள ஏத்திறன்."

சாமான்களைக் காரில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து மனைவி புறப்படுகிறாளா என்று பார்த்தால் அவள் ஏதோ மும்முரமாய்க் குசினிவேலையில் மூழ்கியிருந்தாள்.

"ஏய். உனக்கு எத்தனை முறை சொல்வது வெளிக்கிடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி. காதில ஏறவில்லையா?"

அவள் கையில் இருக்கும் வேலைகளைப் பறித்து வைத்து, "நான் செய்கிறன் நீபோய் வெளிக்கிடு."

"நானும் உங்களுக்கு எத்தனை தடவை சொல்லிப்போட்டன் வரஏலாதெண்டு. பிறகேன் என்ன வதைக்கிறியள்."

"உனக்கு என்ன வந்தது. வேறை பொம்பிளை எண்டால் எவ்வளவு சந்தோசப்படுவாள். பெருமையோட போவாள். உனக்கு நல்ல கொழுப்பு. எல்லாம் நான் கொடுத்த இடம். உன்ன வைக்கிற இடத்தில வச்சிருக்க வேணும். ஒருசத சீதனக்காசும் வேண்டாம உன்ன கலியாணம் முடிச்சு இவ்வளவு ஒரு நல்ல வசதியான இடத்தில இருக்கிறதுக்கு யார் காரணம். அது நான். இந்த நான் இல்லாமல் இருந்திருந்தால் தெரியும் உன்ர நிலம எப்பிடி இருக்குமெண்டு. உன்ர குடும்பத்த கவனிக்கிறது யார். யோசிச்சுப்பார். நீ எனக்கு இவ்வளவு ராங்கித்தனம் காட்டுறாய். குப்பையில கிடந்தத கோபுரத்தில தூக்கி வச்சன். இப்ப எனக்கே வாய்காட்டுது."

"நீங்க என்ன சீதனம் வேண்டாம கலியாணம் முடிச்சத ஊர் உலகத்துக்குக் காட்ட வேணுமெண்டுதானே அவதிப்படுறியள். ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டால் எல்லாருக்கும் தெரிஞ்சுபோம்."

"இந்த நக்கல்தானே கூடாதென்றது. நான் உனக்குச் செய்திருக்கிறதுகளை யோசிச்சுப்பார்."

"நீங்க மட்டும் ஏதும் கதைக்கலாம். நான் சொல்லக்கூடாதோ."

"நான் ஆம்பிளை இந்தக் குடும்பத்திற்காக நாள் பூரா உழைக்கிறன். வீடு வேண்டிப் போட்டிருக்கிறன். எல்லாம் உனக்காகவும் உன் பிள்ளைக்காகவும். எனக்காக எண்டு இந்த எழுத்துத்தான் ஆத்மபூர்வமாய் இருக்கு. அதுக்கு ஒரு மரியாத இண்டைக்கு கிடைக்குதெண்டா அது உனக்கும் சேர்த்துத்தான்."

"அது ஒண்டுதான் எனக்கு இந்த உலகத்தில கிடைக்காமல் இருந்துது. இப்ப அதுவும் உங்களால் கிடைக்குதெண்டு சொல்லு நீங்கள். அப்பிடியெண்டால் நான் உங்களுக்கு ஒரு சாமான். இந்த வீடுமாதிரி நானும் உங்களுக்கு ஒரு பொருள்."

"இஞ்ச இந்தத் தத்துவம் பேசுறதையெல்லாம் விட்டிட்டு வெளிக்கிடு நேரம் போகுது."

"நான் சொல்றத எண்டைக்குத்தான் நீங்கள் கேட்டிருக்கிறீங்கள். உங்கட கத தான் உங்களுக்குப் பெரிசு".

"அய்யோ! இந்தக் கதையெல்லாம் இன்னொரு நாளுக்குக் கதைக்கலாம். நீ எனக்கு இண்டைக்கு வேணுமெண்டு செய்யிறாய். நான் உன்ன கெஞ்சிக் கேக்கிறன். அங்க என்னப்பத்தி மற்றவங்கள் என்ன நினைப்பான்கள். என்ர மதிப்பு என்னாகும்."

"இந்த மதிப்புக்காகத்தானே என்னப்போட்டு இந்தப்பாடுபடுத்திறியள்."

"இப்ப என்னோட அங்க வாறதில உனக்கு என்ன நட்டம். உனக்கு எரிச்சல். என்ன எல்லாரும் புகழுவான்கள். அது உனக்கு பொறாமையா இருக்கும்போல."

இவளிடம் வாதிட்டுக்கொண்டே மகனை நோக்கிக் கத்தி "என்னப்பா வெளிக்கிட்டியா."

அங்கிருந்து பதில் குரல் வரமுன்னமே மகனை நோக்கி ஓடுகிறான் சிதம்பரம். தனது உடைகளை ஹங்கரில் இருந்து எடுக்கிறான். அவைகளை உடுத்துமுன் மீண்டும் மனைவியை நோக்கி வருகிறான். அவள் பழைய இடத்திலேயே நிற்கின்றாள்.

"இஞ்ச பார் இண்டைக்கு என்ர புத்தகங்கள ஒரு மதிப்பான விலைக்கு கொடுக்கலாம். இதில ரெண்டு நன்ம இருக்குது. புத்தகம் அடிச்ச காசு ஒருபக்கத்தாலயும் அதுக்கு மேலால லாபமும் வந்திடும். பிறகென்ன இந்தப் புத்தகங்கள் வித்தாலும் ஒண்டுதான் பிரசெண்டாக் குடுத்தாலும் ஒண்டுதான். போட்ட முதலும் எடுத்த மாதிரி. என்ர பேரும் எல்லா இடங்களிலயும் அடிபடும். இண்டைக்கு எழுத்தாளர் சிதம்பரம் எண்ட பேர் எழுத்துலகத்தில எவ்வளவு பிரபலமான பேர் தெரியுமோ."

அவள் ஏதோ சொல்ல வாய் திறக்குமுன்னரே சிதம்பரம் வேகமாக அறையை நோக்கி உடைமாற்ற ஓடினான். அவள் குசினியிலேயே நின்றாள். உடைகளை அணிந்த சிதம்பரம் மனைவியின் சாறியையும் ரவிக்கையையும் உள்பாவாடையையும் எடுத்துக்கொண்டு மீண்டும் அவளிடம் வந்தான். உடைகளை அவளிடம் நீட்டியபடி, "இண்டைக்கு புத்தகங்களில லாபம் கிடைத்தால் உனக்கு கட்டாயம் நல்லதொரு சங்கிலி வாங்கித் தருவன். எனக்கும் தெரியும் நீ பழசயே நெடுக ஆக்களுக்கு முன்னால போட்டுக்கொண்டு வர வெட்கப்படுகிறாயெண்டு. என்ன பாடுபட்டெண்டாலும் உனக்கு வேண்டித்தருவன்."

"எப்ப நான் உங்களிட்ட சங்கிலி வேண்டிக் கேட்டனான்."

அவளை இடைமறித்தவன், "நீ கேக்காட்டியும் எனக்கு அது விளங்கும். இந்தப் பொம்பிளையளுக்கு புதுப்புது நகையும் சாறியும் தானே வேணும்."

"நீங்க நினைக்கிற மாதிரித்தான் நான் நினைக்கிறன் எண்டால் இப்ப நான் ஏன் உங்களோட வரமாட்டன் எண்டத சொல்லுங்க பாப்பம்."

"இதயெல்லாம் கதைக்கிறத்துக்கு இப்பதானா உனக்கு நேரம் கிடைச்சுது. நான் ஹோலுக்குப் போகவேணும். இன்னும் சில வேலைகள் அங்க கிடக்கு. உன்னோட ஆர்கியூமென்ட் பண்றத்துக்கு இப்ப நேரமில்ல."

"உங்களுக்கு எப்பதான் என்னோட நேரம் இருந்திருக்கு"

அவளைப் பின்புறமாகக் கட்டியணைத்த அவன், "உனக்கு நான் நேரம் எடுக்கவில்லயே. உன்ர ஆசைக்கு எப்பிடியெல்லாம் வளைஞ்சு குடுக்கிறனான்."

அவள் பின்கழுத்தில் முத்தமிட முயன்றவனை மூர்க்கமாய் தள்ளினாள் அவள்.

"உங்களுக்கு மூட் வந்தாத்தானே எனக்கு முன்னாலயும் பின்னாலயும் திரிவீங்கள். மத்தப்படி நான் அந்த நேரத்திலயும் என்ன சொன்னாலும் அது உங்களுக்கு காதில ஏறியிருக்குதே."

எரிச்சலடைந்த சிதம்பரம் அவளை நீங்கி, "திருப்பித் திருப்பி ஒண்டையே சொல்லிக்கொண்டு நிக்கிறாய். நான் ஒருக்கா சிறீக்கு போன் பண்ணவேணும்." என்றபடி அவளைவிட்டு அருகிலிருந்த ரெலிபோனிடம் போனான். ரெலிபோன் இருந்த இடத்திலிருந்து மனைவியைக் கவனிக்கமுடியுமாயிருந்தது அவனுக்கு. அவள் ஏதோ சொல்ல ஆரம்பிக்க அவளைப் பேசவேண்டாமெனத் தடுத்து, தொடர்பு கிடைத்த மகிழ்வில் அவசரமாய்க் கதைக்க ஆரம்பித்தான். இடைநடுவில் மனைவியைப்பார்த்து சைகையால் புறப்படும்படி காட்டினான். அவள் கையிலிருந்த உடைகளை நிலத்தில் எறிந்துவிட்டு விரைவாய்ப் படுக்கையறை போய் படாரெனக் கதவுகளை அறைந்து சாத்தினாள். இந்தப் பூகம்பத்தினால் பயம் கொண்ட மகன் அப்பாவை அவசரமாகக் கூப்பிட்டான். தனக்கு அடி கிடைத்தமாதிரி அம்மாவுக்கும் அடிவிழுந்துவிடுமோ என்ற முன்னேற்பாட்டில், ஏதோ அவசர தேவைக்கு அப்பாவை அழைக்கிறமாதிரிக் கூப்பிட்டான். அவன் தேவையைக் கவனிக்க சிதம்பரம் ஓடி வந்தான்.

"என்னடா"

"அப்பா பசிக்குது"

"இப்ப தானடா சாப்பிட்டாய்."

"இன்னொருக்கா பசிக்குது. கெதியா செய்து தாங்கப்பா".

அவனுக்கு அப்பாவை நல்லாவே தெரியும். தன் தேவைகளை நிறைவேற்றுவதில் மிகவும் அக்கறையுள்ளவர் என்றும் தான் ஒரே ஒரு ஆம்பிளைப்பிள்ளையாய் இருப்பதை மற்றவர்களுக்குச் சொல்லிப் பெருமைப்படுபவர் என்றும். பசிக்குது என்றாலே அவர் எதுவும் செய்து தர முனைவார் என்று அவன் தந்தையைப்பற்றி சரியாகவே கணித்திருந்தான்.

"தம்பி நான் ஹோலுக்கு போற வழியில மக்டொனால்சில சாப்பாடு வேண்டித்தாறன்." இப்ப கொஞ்சம் பொறுத்துக் கொள்ளன்.

மக்டொனால்ஸ் அதிர்ஸ்டம் கிடைத்ததில் மகன் மௌனமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவே அவன் மகனுக்கு டி.வி.யைப் போட்டுவிட்டு மனைவியைத் தேடினான். படுக்கையில் கிடந்த அவளை வெளியே இழுக்க முயற்சித்தான். அவளும் படுக்கை விளிம்பை இறுக்கிப்பிடித்துக் கொண்டிருந்தாள். வெளிவராமலிருக்க முயற்சித்தாள். இழுபறி சிறிதுநேரம் தொடர்ந்தது. இவளை இப்படி அசைக்க முடியாதென்று புரிந்து கொண்ட சிதம்பரம் அவள் கால்களைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கினான்.

"நான் உனக்கு என்னம்மா அநியாயம் செய்தேன். நீ என்ன இந்தப்பாடு படுத்திறாய் நான் எவ்வளவு கஷ்டப்படுறன் எண்டு உனக்குத் தெரியும்தானே. நீயும் ஏன் என்ன வதைக்கிறாய்."

அவள் முகத்தைப்பார்த்து அவன் கெஞ்சினான். அவள் மனம் சிறிது கரைந்தது.

"அப்ப முதல் நாங்கள் சில விஷயங்கள கதச்சிப்போட்டு அதுக்குப் பிறகு போவம்."

ஏனெனில் முன்னரும் இப்படி பின்னர் கதைப்போம் என்று ஒத்திப் போட்டவைகள் போட்ட இடத்திலேயே கிடக்கின்றன என்பது இவளுக்குப் பழகின சங்கதி. தவிரவும் அவைகளை மீண்டும் உருப்போட முன்னால் சிதம்பரத்துக்கு களைப்பும் எழுத்துவேலைகளும் வேறு முக்கியமான சங்கதிகளும் சடுதியாக இடை புகுந்திருக்கின்றன. யாவும் நானே. நானே இயக்குபவன் என்ற பகவத் கீதை வழி சொல்பவன் நடப்பவன் என்பதால் அவள்,

"முதல்ல நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதையாவது நீங்கள் கேட்க ரெடியா" என்றாள்.

"ஒன்று செய்யேன். முதல்ல புறப்பட்டுக்கொண்டு வா. காரில போகக்குள கதைச்சுக்கொண்டே போகலாம்."

இந்த இப்போதைய சமாளிக்கும் முயற்சியை முறியடிக்க அவள் சொன்னாள்.

"காரில போகக்குள்ள உங்களுக்குத்தான் உங்களத்தவிர வேற யாரும் கதைக்கக்கூடாதே. நீ ஏதோ சொன்னத கேட்கப் போய்த்தான் எல்லாம் குழம்பிப்போச்சு. போக வேண்டிய றோட்டில திருப்பாம வேற எங்கயோ போட்டன் எண்டு உங்கட பிழைய மறைக்க என்னில பழிபோடுவீங்கள்."

"இண்டைக்கு எனக்கு ஒரே அப்செட். எனக்காக எவ்வளவு சனம் காத்திருக்கப் போகுது. இவ்வளவெல்லாம் விழாவுக்கு ரெடியாக்கினத்துக்குப் பிறகு இப்ப நீ வராட்டி சனம் என்ன நினைக்கும். நீ சும்மா வந்திருந்து போட்டு போறதுதானே. முந்தி எல்லாம் வந்தனிதானே. இப்ப என்ன குழப்புறாய்"

"அதத்தானே சொல்ல வாறன் ஏன் எண்டு"

சிதம்பரம் அறைக்கு வெளியில் போய்க்கொண்டே "அய்யோ இன்னும் அர மணித்தியாலத்துக்குள்ள ஹோலில நிக்கவேணும். அங்க நிறய ஆயத்தங்கள் செய்யவேணும். இவள் இப்பதான் என்னோட மல்லுக்கு நிக்கிறாள். நான் காரை ஸ்டார்ட் பண்ணப் போறன்."

சிதம்பரம் சப்பாத்துப் போடத்துவங்கினான். "தம்பி. நீ ரெடியா. நாங்க போவம்."

இவளுக்கு இண்டைக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேணும். மனதுக்குள் கறுவிக்கொண்டே, மீண்டும் படுக்கையறையை எட்டிப்பார்த்து, "நீ இண்டைக்கு அங்க வரயில்லையெண்டால் இனி இந்த வீட்டில நடக்கிறது வேற. பாத்துக்கொண்டிரு. நான் மிக மிகப் பொல்லாதவனாயிருப்பன். வெளிநாட்டுக்கு இந்தப் பெண்கள் வந்ததுக்குப் பிறகு என்னமாதிரி மாறிப் போயிட்டினம்."

அவள் படுக்கையைவிட்டு அசையவில்லை. அவளின் அசையா நிலை அவனுக்கு இன்னும் உக்கிரத்தைத் தந்தது. மகனை இழுத்துக்கொண்டு வீட்டை வெளிப்பக்கமாக பூட்டுப்போட்டுவிட்டு காரை வேகமாகச் சீற வைத்துப் போனான். அவனுக்கு கோபம் வரும் காலங்களில் இப்படி அவளை உள் வைத்துப் பூட்டுவது வழக்கமெனினும், இன்று அவள் அங்கிருந்து தப்புவதற்குரிய வழிகளை ஆராயத் தொடங்கினாள். ●








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதனி மஹால்
# VATHANY MAHAL

## மார்கடட் புவசுனியரில் அறுசுவை உணவகம்

திருமண வைபவங்களா?
பிறந்த நாள் விழாக்களா?
உங்களுக்கு வேண்டிய அனைத்து
உணவுவகைகளையும் மிக...மிக...மலிவான
விலையில் தயாரித்து வழங்குகிறோம்!

நீங்கள் விரும்பிய எந்த உணவு வகையையும்
தெரிவு செய்யலாம்!

மலிவு!
சுத்தம்!!
சுவை!!!

வதனி மஹால்
**17, RUE LABAT, 75018 PARIS**
(மாலா ஸ்தாபனம் முன்பாக)

M° : MARCADET POISSONNIERS

**TEL: 01 42 64 12 03**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களுமா....? நீங்களுமா...?

பொதிகைச்சித்தர்

களத்தூன்றிப் போராடிக்
காத்துநிற்கும் பேரரணும்
புலம்பெயர்ந்தசோதரன்மார்
புரிந்துவரும் ஆதரவும்
மரணத்துள் வாழுமந்த
மக்களுக்கே பக்கபலம்
வரலாற்றின் பக்கங்களில்
வசந்தத்தின் இடிமுழக்கம்
பகைமுகத்தின் பாதையெலாம்
கண்ணிவெடி பாவிவைத்துக்
களையெடுத்தே பயிர்காத்தே
கணக்குகளைத் தீர்க்கின்றீர்
அத்தனையும் சத்தியமே
ஆனாலும் ஒரு கேள்வி
இத்தனைக்கும் மத்தியிலே
என்னுள்ளே ஊடுருவி
சங்கத்துப் புலவனவன்
சந்துசெயப் பாடவந்த
சதுரப்பாட்டுடன் நான்
இங்கிருந்தே பாடுகின்றேன்
சீசருக்காய்ப் பேசவந்த
அந்தோனிப் பேருரைபோல்
கொந்தளிக்கும்என்னெஞ்சக்
குமுறல்களைப்பாடுகின்றேன்
புகலிடத்தின் விலையெனவே
சுதந்திரத்தைத் தர மறுத்தீர்
புகல்நீரே என்றவர்க்கும்
சுதந்திரத்தை மறுக்கலாமோ?

நரவேட்டைச் சுடுகாட்டில்
காடையரின் ராணுவமோ
துரோணர்களின்அடிச்சுவட்டில்
வித்தைவிரல் வாங்கியது
அறைபோன துரோகத்தை
அடையாளப் பறைசாற்றி
ஆட்காட்டி விரலெல்லாம்
தூக்கிலே தொங்கவிட்டீர்
களையெடுக்கும்அவசரத்தில்
களைக்கொல்லி ஆகிநின்ற
கலையூடு பயிர்களையும்
தளையிடப் போமோ?
சமூகமன சாட்சிகளாம்
மகத்தான கலைக்குரல்கள்
உமைநோக்கி விமர்சிக்கச்
சுட்டுவிரல் நீட்டியதால்
காராக்கிர கத்துழன்று
காணாமற் போவதுவோ?
தீராப்பழி சுமந்தீர்
தினந்தினமும் உங்களது
தியாகத்தின் குருதியிலும்
பகைரத்தக் களரியிலும்
தொடர்ந்தெழுதும்வரலாற்றில்
துரோகத்தின் கறையேறவோ?
ஹிட்லிஸ்டின் பட்டியலில்
சுட்டுவிரல் பட்டடங்கும்
ஹிட்லர்களின் பாதையிலே
நீங்களுமா....? நீங்களுமா...?

*சொல்லாதசேதி எல்லாம் சொல்லிச் சொல்லி*
*இல்லாமற் போன செல்விக்கும் சிவரமணிக்கும்*
*புதியதோர் உலகம் செய்யப்*
*புதையுண்ட கோவிந்தனுக்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருடைய கலைகள், யாருடைய கடவுள்கள்?

சி. சிவசேகரம்

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் மத்தியில் தமது அடையாளத்தைப் பேணும் தேவை மிகவும் உணரப்படுகின்றது. இந்த அடையாளம் எது என்பது பற்றிய தெளிவு குறைவாகவே உள்ளது. எனவே மொழி, கலைகள், பண்பாடு என்ற விதமாகத் தமிழ் அடையாளம் எனப்படும் ஒன்றைத் தமக்குச் சூட்டிக்கொள்ளப் பலர் கடுமையாக முயல்கின்றார்கள். இதற்கிடையே, சைவ சமய அடையாளம் ஒன்றும் தமிழ் அடையாளமாகத் தமிழ்ச் சமுதாயத்தின் மீது சுமத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துத் தமிழ்மேட்டுக்குடிச் சமுதாயத்தின் போட்டி மனோ பாவம் பிற தளங்களையும் பிரதேசங்களையும் கொஞ்சம் ஊடுருவியுள்ளது. மிகவும் அற்பத்தனமான மனப்பான்மையை வெளிப்படுத்தும் முறையில் பலவிதமான சமூகச்சடங்குகளும் சொந்த நாட்டில் நடப்பதைவிட ஆடம்பரமாக நடக்கின்றன. இவைபற்றிய கண்டனங்களும் கடுமையான விமர்சனங்களும் சமுதாய உணர்வுள்ளவர்களாற் பலவேறு கோணங்களிலிருந்தும் முன்வைக்கப்பட்டுள்ளன. இக் கட்டுரையில் அவற்றை மீண்டும் எழுத அவசியமில்லை.

தமிழ்மொழியை ஒரு சடங்கு சம்பிரதாயமாகவே கருதிப் பயன்படுத்துகிற வசதிபடைத்த, புலம்பெயர்ந்த தமிழர் தமது சுயஅடையாளமாக எதைக் கொள்கின்றார்களோ தெரியாது. ஆயினும் அவர்களைச் சூழவுள்ள சமுதாயத்திற்குத், தமிழ்க்கலைகள் என்ற பேரில், பரதநாட்டியமும் கர்நாடக இசையும் காண்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் அவற்றைக் கற்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். பெருஞ்செலவில் அரங்கேற்றங்கள் நடத்தப்படுகின்றன. இன்னொரு புறம் கோவில்களின் எண்ணிக்கை பெருகிவருகின்றது. இக்கோவில்களில் வியாபார நோக்கமுடையவர்கள் மிகவும் பொருளீட்ட முடிகின்றது. முன்பு ஈழத்துச் சைவக்கோயில்களில் இல்லாத தெய்வச்சிலைகளும், சித்திரங்களும் மேற்கின் பலகோயில்களில் குவிந்து வருகின்றன. இதுவும்




போதாமல் அவதாரங்களாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் காவியாடைக் கனவான்களை வழிபடும் வழக்கமும் அதிகரித்து வருகின்றது. எனவே தான், ஈழத்தமிழரது சுய அடையாளத்துக்கும் அவர்கள் தமது என்று பறைசாற்றும் கலைகட்கும் கடவுளர்க்கும் உள்ள தொடர்புபற்றி இங்கு கேள்வி எழுப்புவது தகும் என நினைக்கின்றேன்.

பரதமும் கர்நாடக இசையும், தமிழருக்கும் உரிய கலைகள். அவை தமிழருக்கே உரிய கலைகள் அல்ல. அதிற் தென்னிந்தியாவின் தமிழரல்லாத தேசிய இனங்கட்கும் பெரும் பங்குண்டு. இக்கலைகளின் சிறப்புப்பற்றி எவருக்கும் ஐயமில்லை. ஆயினும் அவை எவ்வளவு தூரத்துக்கு எமது இன்றைய தமிழ்ச்சமுதாயத்தின் இருப்புடன் தொடர்புடையவை? திரும்பத் திரும்ப புராண இதிகாசக் கதைகளையே இவை வழங்குகின்றன. அவற்றின் மூலம் புதிதாகவும் இன்றைய சமுதாயத்துக்கு தொடர்புடையதாகவும் எதையாவது தருகின்றனவா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும். தமிழிசை இயக்கம் வடமொழியிலும், தெலுங்கிலும் கூறப்பட்ட பழஞ்செய்திகளைத் தமிழிற் கூறுவது இயலும் என்று நிறுவியது. தமிழ் உணர்ச்சி பற்றிய பாடல்கள் சிலவும் வந்தன. பாரதி பாடல்களில் ஆன்மிகமும் காதலும் போன்ற அக உணர்வு சார்ந்தவை சிறிது ஊக்கத்துடன் கர்நாடக முறையில் இசைக்கப்படுகின்றன. இதற்கும் மேலாகச் சென்று நமது இன்றைய வாழ்க்கையை இக்கலைகளால் ஏன் சித்தரிக்க முடியவில்லை என்பது கவனிக்க வேண்டியது.

சைவமும் தமிழும் என்ற சூத்திரம், சைவ-வேளாள ஆதிக்கத்தின் மந்திரமாக இருந்து வருகின்றது. தமிழுக்குப்பெருமை சேர்க்கும் அற நூலான திருக்குறளும் தலைசிறந்த காப்பியமான சிலப்பதிகாரமும் சமணச்சார்புடையன. பெருமைக்குரிய மணிமேகலை புத்தசமயச் சார்பானது. தமிழின் மிகப்பழைய சங்க இலக்கியங்களிற் பெரும்பகுதி மதச்சார்பற்றது. சங்கநூல்கள் கூறுங் கடவுளர் நாம் இன்று வழிபடுங்கடவுளர் அல்லர். அவர்களில் முதன்மையான ஐவருள், கொற்றவை உட்பட, நால்வர் பேர் தெரியாதவாறு ஆரியக்கடவுளருள் சங்கமமாகி விட்டனர். பேரளவில் எஞ்சியுள்ள முருகனும் சங்கம் மருவிய காலத்திலேயே ஆரியப்பண்பு பெற்றாயிற்று. ஆறுமுகம், ஆறுபடைவீடு என்ற கோட்பாடுகளும் சேவற்கொடியும் மயில்வாகனமும் சங்ககால முருகனுக்கு உரியவையல்ல. சிவன் ஆதியில் ஆரியக்கடவுளல்ல. சிவன் முழுதாகவே தமிழ்க்கடவுள் எனக்கூறும் விதமாக அதற்குரிய ஆதாரங்கள் பழந்தமிழ் இலக்கியத்திற் குறைவு. ஆகமிஞ்சி, ஆரிய வேதங்களின் துணையுடனேயே சிவன் தமிழரது வழிபாட்டுக்குரிய தெய்வமாக மீண்டதாகக் கருதவேண்டியுள்ளது.

சைவசமயத்தினதும் அதன் அகச்சமயக் கிளைகட்கும் உரிய அடிப்படை தமிழரது மரபுசார்ந்த வழிபாட்டு முறைகளல்ல. ஆரியச்செல்வாக்கினாலும், குறிப்பாக, பிராமண (பார்ப்பன) மதத்தின் பெரும் பாதிப்பினாலும் உருவான மதச் சிந்தனைகளே இந்த மதத்தையும் அதன் கிளைகளையும், பிற இந்துமதங்களையும், இந்து மெய்யியலையும் தோற்றுவித்தன. இந்துமதங்களுக்கும் அவை கூறும் வருணாசிரம (சாதிய) மனுதரும முறைகட்கும் எதிராக இந்தியத்துணைக்கண்டத்தின் மேற்கில் சமணமும், கிழக்கில் பௌத்தமும் எழுந்தன. இவற்றில் மனித சமத்துவமும் அஹிம்சையும் முக்கியமான பங்கு வகித்தன. இம் மதங்கள் தமிழகத்திலும் வேர்கொண்டு வளர்ந்தன. இவற்றின் சரிவுக்கான அரசியற் காரணங்கள் பல. இவைபற்றிய ஆய்வுகள் பல உள்ளன. அவற்றை இங்கு விவரிக்க இடமில்லை.

பௌத்தத்தினதும் சமணத்தினதும் சரிவுடன் சேர்ந்தே எழுச்சி பெற்ற சைவ, வைணவச் சமய இலக்கியங்களில் ஒரு வெகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சனப்பண்பு இருந்தது. நாவுக்கரசர் தேவாரங்களும் திருத்தாண்டகங்களும் ஆண்டாளின் பாடல்களும் இவற்றுக்கு நல்ல உதாரணங்கள். ஆயினும் இந்த வெகுசனப்பண்பு நாளடைவில் ஆரிய மொழியினது ஆதிக்கத்திற்கு வழிவிட்டு ஒதுங்கியது. பிராமண-வேளாள ஆதிக்கம் தமிழில் வழிபடுவதை ஏற்கத் தவறியதற்கு அரசியல் அதிகாரம் தொடர்பான காரணங்கள் பல உண்டு.

சமஸ்கிருதத்தால்பூசிக்கப்பட்ட சைவத்தமிழ்க் கடவுளர்கட்கு அருகாக, சாதியத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட மூன்றிலொரு பங்கினளவான தமிழ்ச்சமூகத்தினர் சிறு தெய்வங்கள் என அழைக்கப்பட்ட பலவேறு கடவுளரைத் தமது அன்றாடமொழி மூலமே வழிபட்டு வந்தனர். இச்சிறு தெய்வங்கள் தமிழ்ச்சமூகத்திற்கே உரியவையும் ஆரியமயமாகிவிட்ட சைவக்கடவுளரை விடத் தமிழ்த் தன்மையுடையனவாகவுமே இருந்தன. சைவமும், தமிழும் என்ற பேரில் சாதியச்செருக்கை ஊட்டி வளர்த்த ஆறுமுகநாவலர் சிறுதெய்வவழிபாட்டை அழிப்பதில் மும்முரமாக நின்றதுடன் தாழ்த்தப்பட்ட தமிழருக்குச் சைவக்கோவில்களில் வழிபடவும் அனுமதியை மறுத்து வந்தார் என்பது கவனிக்க வேண்டியது. இந்த மனிதர் தான், தமிழ்மக்கள் மத்தியில் மதங்களிடையே சமரசத்தை வலியுறுத்திய இராமலிங்கனாரையும் எதிர்த்து வெள்ளைக்காரர்களது நீதிமன்றத்தில் வழக்காடியவருமாவார்.

எவ்வாறு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர்களது கடவுளரும் வழிபாடும் ஒதுக்கலுக்கு ஆளாயினவோ, அவ்வாறே அவர்களது கலை வடிவங்களும் புறக்கணிப்புக்கு ஆளாயின. ஒடுக்கப்பட்ட மக்களது உரிமைக்கான கிளர்ச்சிகளின் காலத்தையொட்டியே அவர்களாற் பேணிக்காக்கப்பட்ட நாட்டார் பாடல், நாட்டார் இசை, நாட்டுக்கூத்து போன்ற வடிவங்களும் புதிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கியத்தினதும் மக்கள் கலைகளதும் வளர்ச்சியில் இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களது பங்கும் நெடுங்காலமாகக் கவனிப்புக்குள்ளாகாது இருந்து வந்துள்ளது. அண்மையசில தசாப்தங்களில் இவை பற்றிய அக்கறை அதிகமாகி உள்ளது. ஆயினும் சைவமும், தமிழும் என்ற கோஷத்தால் சிலர் இவற்றை மூழ்கடிக்க முயல்வர் என்பது பற்றி நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

தமிழ்க் கலைகளென்று இன்று தமிழர் மார்தட்டிப் பெருமை பேசும் பரதம் இந்த நூற்றாண்டுவரை உயர்சாதியினரது போகத்திற்காகக் கீழ்மைப்படுத்தப்பட்ட தேவதாசிகளால் மட்டுமே ஆடப்பட்டுச்'சதிர்' என்று அழைக்கப்பட்டது. ஆட்டம், கூத்து என்ற சொற்கள் ஒழுக்கக்குறைவான நடத்தையைக் குறிக்கவே அண்மை வரை பயன்பட்டதையும் நாம் மறக்கலாகாது. இவ்வாறே பெருவாரியான தமிழ்க் கர்நாடக இசைஞர்கள் ஒடுக்கப்பட்ட ஒரு சாதிப்பிரிவினராகவே இருந்ததும் கவனிக்கத்தக்கது. இந்திய முதலாளிவர்க்க எழுச்சியும், சினிமாவின் வருகையும் கலைகளின் மீதான ஏகபோகத்தை உயர்சாதியினரிடம் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டன. சமுதாயத்தேவைகளை வலியுறுத்த இயலாத விதமாகப் 'புனிதப்படுத்தப்பட்டு' மக்களது அன்றாட வாழ்வினின்று அந்நியப்பட்டுப்போன இக்கலைகள் இன்னமும் அதே வித மாகவே பேணப்படுவது நமது கவனத்துக்குரியது.

ஒட்டுமொத்தமாகச் சொன்னால், தமிழர் வழிபடும் சைவக்கடவுள்கள் யாவுமே தமிழுக்கு அந்நியமான பண்புமிகுந்தன. தமிழ்ச் சமுதாயத்தினுள்ளிருந்து உருவான கடவுள்களிலும் அயற்பண்புகள் இருந்தாலும் அவை தமக்குரிய சமுதாயங்களது வாழ்க்கை துறையுடன் கூடிய தொடர்பு கொண்டவை. கிறிஸ்தவ, இஸ் லாமியக் கடவுட் கொள்கைகள் அயலிலிருந்து வந்தாலும், காலப் போக்கில் அம்மதங்களின் நடைமுறையில் தமிழ்த்தன்மை அதிகமாச்சேர்ந்தே உள்ளது. சமஸ்கிருதத்தில் தமிழ்க்கடவுளர் எனப்படுவோரை வழிபடுவதைவிடத் 'தமிழரல்லாத'கடவுளரைத் தமிழில் வழிபடுவதிற், கூடிய தமிழ்த்தன்மை உள்ளது என்றே தோன்றுகின்றது.

தமிழரது சமுதாயத்திலிருந்து தோன்றி வளர்ந்த மக்கள் கலைகளை நிராகரித்து, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட இசையையும், நடனத்தையும் தமிழரது கலைகள் என்று கொண்டாடுவதில் அர்த்தமில்லை. இந்தக்கலைகளின் மேன்மையாற் தமிழருக்கு மேன்மை இல்லை என்று இந்தக் கலைவடிவங்கள் நமது வாழ்வுபற்றியும், நமது வருங்காலம் பற்றியும் கூறத்தொடங்குகின்றனவோ அன்று தான் அவை நமது கலைகளாக முடியும். அல்லாதபட்சத்தில் தமிழ்ப்பெண்ணின் பரதநாட்டியமும், பலே நடனமும் ஓரேயளவு தமிழ்த்தன்மையுடையன தான். கர்நாடக இசை மக்கள்இசையாக விரிவடையாத அளவில் தமிழனுடைய இசை மட்டரகமான தமிழ் சினிமாப் பாட்டாகவே இருக்கும்.

தமிழருக்குரிய மரபின் செல்வங்கள் பல. அவற்றுள் 'நாகரிகமான' ஒருபகுதியை மட்டும் எடுத்து மினுக்கி இதுவே நமது சுயஅடையாளம் என்று இன்னும் எத்தனை காலம் நம்மைநாமே ஏமாற்றமுடியும்? சமகாலத் தமிழ்ச்சமூகத்தின் தேவைகட்கு முகங்கொடுக்க முயலும் நல்ல கலைவடிவங்கள் அனைத்துமே தமிழ்க்கலைகளாகக் கொண்டாடப்பட வேண்டியன. அவ்வாறு செய்யாத எவையுமே சமகாலத்தமிழருக்கு உரியன அல்ல.

அயலிலிருந்து வந்ததாலோ அயற்பண்புகளை உள்வாங்கிக் கொண்டதாலோ எதுவும் நிராகரிக்கப்பட வேண்டியதில்லை. கலையாயினும் கடவுளாயினும், நமது மக்களுடன் நேரடியாக உறவுபூணுமாறும், சமுதாய மேம்பாட்டுக்கு உதவாவிட்டாலும், தடையாகவாவது இல்லாதவாறும் உறுதிப்படுத்த நமக்கு முடியாதா? அயற்தன்மை என்பது ஒன்றன் தோற்றுவாயில் இல்லை, அதன் சமகாலச் செயற்பாட்டிலேயே உள்ளது என்பதை நாம் கருத்திற் கொள்வது நன்று. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள்

மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை
மாலா மளிகை


TEL : 01 42 62 01 23




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த ஆவி

ஏ.எம். ஜாபீர்



எப்படியோ லண்டனுக்கு வந்தாகி விட்டது என்று ஆசுவாசப்பட்டது இன்று ஆபத்தாகியது போல் தோன்றியது. காலையில் அந்த டெலிபோன் அலறாமல் இருந்தி ருந்தால், அல்லது "விடுதலையே என் மூச்சு" என்று நான் நாட்டை விட்டுக் கிளம்பும் போது என்னை அவமானப்படுத திய அந்த நண்பன் என் இன்னொரு நண்பனால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி எனக்கு தெரிவிக்கப் படாது இருந்திருந் தால், அல்லது கூடி நின்ற நண்பர்கள் என் சோகத்தைப் பார்த்து பரிக சிக்காது, (நக்கல் சிரிப்பை உதிர்க்காது) இருந்தி ருந்தால், இன்னும் "எப்படி இது நடந்தி ருக்கும்?" என்று என்னையே நான் கேட்டுக்கொண்டதற்கு அவர்கள் "நீங்கள் தானே தொடக்கி வைத்தீர்கள்" என்று என் மேல் வெறுப்பை உதிராமல் இருந்திரு ந்தால், அதுவும் ஏன், இந்த கொலையைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாதே, நான் எப்படிப் பொறுப்பாக முடியும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியமுதபோது சுட்டவனுக்கோ, சுடப் பட்டவனுக்கோ, உனக்கோ, எனக்கோ இந்த கொலையைப்பற்றி எதுவும் தெரியப் போவதில்லை என்றும் இதற்கு நாம் எல்லா ருமேதான் பொறுப்பு என்று அவர்கள் காட் டுக்கத்தல் போடாமல் இருந்திருந்தால் எல் லாம் நன்றாகத்தான் இருந்திருக்கும். இந்த லண்டன் வாழ்க்கை தேம்ஸ் நதியைப்போல் அமைதியாக ஓடியிருக்கும். நான் புதிதாக வேண்டிய வீடும், அண்மையில் தேடிய காத லியும், என் கென்ரக்கி சிக்கின் வேலையும் என் சிந்தையை நிறைத் திருக்கும்.

முடியவில்லை. எதற்குமே முடிய வில்லை. சமைக்க, சாப்பிட, நாள் தவறாமல் பார்த்து பேசும் காதலியைக் கூட காண முடியவில்லை. தனிமையாய், மேலும் மேலும் தனிமையாய், எனக்குள் நானே சுருங்கிப் போகவேண்டும் போல் இருந்தது.

ஆறுமணி வரை லண்டன் மறந்து துப்பாக்கியுடன் களத்தில் திரிந்து கொண்டிருந்தேன். தொட்டது முதல் விட்டது வரை எல்லோர் கண்களும் ஏதோ ஒரு வகையில் வெறுப்பை உமிழ்வது போல் என் மேல் பரவி சிறுக வைத்தது. நான் குஷ்டரோகியாய் என் நாற்றத்தை நானே தாங்க முடியாமல் போன போது முட்கள் ஒரு நேர்கோட்டுக்கு வந்து கென்ரக்கி சிக்கினை ஞாபகமூட்டியது. வேலைக்கு வெளிக்கிட்டேன்.

உடல்களைப்பாக சோர்வாக இருந்தது. என்ன வேலை? என்று நினைக்கும்போது அவலமாக பல கேள்விகள் முளைத்து என்னை அவமானப்படுத்தியது. என்ன அவமானம். ?

சீ . . . துப்பாக்கி ஏந்திய கைகள். . . கோழியறுத்து. . .

துப்பாக்கி எத்தகைய புனிதமானது.
புனிதமானது?

"துப்பாக்கி தூக்கக்கூடாதவை" என்பதெல்லாம் மாறி எப்போது புனித பாத்திரம் ஏற்றன என்பதெல்லாம் இப்போதைக்கு தேவைப்படாத சமாச்சாரம். ஒருவேளை தேவைப்பட்டால் விடுதலை கறைபட்டுப்போகும். எனினும் எல்லாம் விட்டு நான் இப்போ உயிர்கள் அறுத்து எரித்துப் பொசுக்கி இன்பத்தோடு உணவ ளிக்கும் கென்ரக்கி சிக்கின் ரெஸ்ரோ றன்றுக்குள். வெள்ளை யுனிபோம் போட்டுக் கொண்டு (போட்டுவிட்டால் இரத்தக்கறை படாதா என்ன) கோழிகளைத்தூக்கி மேசை யில் எறிந்தேன். ஆமி கடந்து போன வெளி க்குள் கிடந்த உடம்புகள் போல் சிதறிக் கிடந்தது.

அவர்களுக்கு சுட்டபின் வெட்ட வேண்டிய அவசியம் அவ்வளவாக வந்து விடுவதில்லை. எங்களுக்கு என்னவோ அதுவும் வந்து வாய்த்துவிடுகிறது.

நான் வெகு லாவகமாக கத்தியை தீட்டி யபடி அந்தக் கோழிகளைப் பார்த்தேன். மீண்டும் மீண்டும் அதே ஆமி கடந்து போன வெளியும் பிணக்குவியல்களும் கண்முன் வந்து போயின. இடக்கையால் தலையைப் பிடித்து வலக்கையால் ஒரு கொத்து. தலை தறித்த மறுகணம் குப்பைவாளிக்குள் எறிந்தேன். நிதானமற்று ஏதோ நினைத்தவனாக சடுதியாக குப்பை வாளியைப் பார்த்தேன். அங்கே கண்கள் பிதுங்கிய காண்டீபன். அவன் எப்படி அதற்குள் வந்தான்? யார் கண்டார் எவன் எவன் எப்படிப் போவான் என.

நீ எந்த இயக்கம் என்று கேட்டபோது ஏதோ ஒரு மனித இயக்கம் என்று சொல்லி மறைந்த அதே காண்டீபன். எங்களைவிட இன்னொரு மனித இயக்கமா? அவனுக்கு வேண்டியதுதான்.

கண்களை வெளியே இழுத்து கத்தியில் கவனம் செலுத்தினேன். மீண்டும் அல்பிரட்டின் தலை தேவையற்றது என அதே குப்பைவாளிக்குள் போட்டேன். என் கண்கள் குப்பைவாளியில் இருந்து மீளமறுத்தது. அவன் என் பெரியமாமாவின் மகன். அவனும் விடுதலைக்காக வெளிக் கிட்டவன்தான். என் பேச்சைக் கேட்க மறுத்தவன். தன் துப்பாக்கியும் சுடும் என்றவன். போனவை போனவைதான். பிழைக்கத் தெரியாதவர்கள்.

முள் தைத்தாற்போல் உள்ளுணர்வில் ஓர் உறுத்தல். உடல் சற்று அதிர்ந்தது. தலை சுற்றிக்கொண்டு வந்தது. கண்கள் பஞ்சடைந்தது போல் பனிமூட்டமாகிக் கொண்டு வந்தது. மீண்டும் கண்கள் குப்பை வாளியை கிளறியது. என் தலையும் அதே வாளிக்குள். எவன் செய்தான் இக் காரிய த்தை. அப்பட்டமான துரோகம்.

துரோகிகள். சமூகவிரோதிகள். நாச மாய்ப் போக..

என் இரு கைகளாலும் கன்னங்களைத் தொட்டுப்பார்த்தேன்.

ஒரு கணம் கொள்ளி எறும்புகள் கடித்துத் தடித்த கொழுக்கட்டை போல் இருந்தது. மறுகணம் செத்த பிணம்போல சூடற்ற உப்பிய சதை பிய்ந்து வருவதுபோல் இருந்தது. எங்கள் ரமணனைத் தேடிக் கண்டு பிடித்து தூக்கும்போதும் இப்படித் தான் எலும்புதான் தனியே கழன்று வந்தது.

நான் என் கைகளை கன்னங்களில் இருந்து மீட்டேன். கைகள் பிசுபிசுத்தன. நம்பமுடியாமல் திரும்பவும் திரும்பவும் பார்த்தேன். கை முழுவதும் பச்சை இரத்தம். இப்போதுதான் சுட்டதுபோல் இன்னும் இன்னும் சூடாக..

கைகளைத் தண்ணீர்க் கொட்டுக்குள் புதைத்தேன். கொட்டுத் தண்ணி எல்லாம் இரத்தமாக இருந்தது. அடி அடைப்பைத் திறந்து இரத்தத்தை வெளியேற்றினேன். பைப்பைத் திறந்தேன். தண்ணீரைக் காணோம். இரத்தம்தான் கொப்பளித்தது. எவன் குருதியோ?

என் உடம்பெல்லாம் சிவப்பேறி வருவதுபோல் தோன்றியதும் திரும்பினேன். குசினி களத்தின் புழுதியலைபோல் புகைமூட்டமாக. எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஏதாவது செய்தாக வேண்டும் போல் இருந்தது. என்ன செய்வது என்று ஒரு வழியும் தோன்றவில்லை. எது என்னவானாலும் இந்த கென்ரக்கி சிக் கனை விட்டு வெளியே ஓடவேண்டும் போல் ஒரு உத்வேகம் எடுத்தது. எவரிடமும் சொல் லிக் கொள்ளாமல் ஒரு பிசாசைப் போல் வெளியேறினேன்.

இனம் காத்த துப்பாக்கியும்
எதிர்த்த துப்பாக்கியும்
மதம் காத்த துப்பாக்கியும்
எதிர்த்த துப்பாக்கியும்
இனத்தையும் மதத்தையும்
துப்பாக்கியாக்கி மனிதனைச் சுட்டது.
இயக்கம் காத்த துப்பாக்கிகள்?

வீடு வந்து சேர்ந்தேன். உழைத்த களை ப்புப் போலும் எல்லோரும் பிணங்களைப் போல் பிரண்டு கிடந்தனர். நானும் உயிர் கழற்ற ஒரு அறைக்குள் நுழைந்தேன்.

உள்ளத்தின் கனம் உடலெல்லாம் வியாபித்துப் பரவ கண்கள் மயங்கின. பிணங்களுடன் பிணங்களாய் ஐக்கிய மானேன்.

பாழாய்ப்போய் இடிந்து விழுந்த பண்டைய நகருக்குள் நான் வீரவாளுடன் நெஞ்சை நிமிர்த்தி. எங்கும் இரத்தச்சகதி. பிண நாற்றம். நான் உடல்களில் கால் புதைய மேலும் மேலும் உரமாக கால் வைத்து முன்னேறுகிறேன். உயர உயரப் போகிறேன். சூறாவளியைப் போல்- எரிமலை நெருப்பை உமிழும் சத்தம். நிலமெல்லாம் வெடித்துப் புகைந்தது. மரங்களும் மாடி களும் இருந்த இடம் மறைந்துபோக அங்கே தலையற்ற முண்டங்கள், கால் அற்ற உடம் புகள் முளைத்தன. பேய்க் காற்றில் கைக ளும் கால்களும் தலைகளும்- சருகாய் மேலும் கீழும் பறந்தன. என் கால்கள் அந்த சருகுள் ஆழமாய்ப் புதைந்து புதைந்து. . . இப்போது கழுத்துவரை புதைந்துவிட்டேன். அசையவே முடியவில்லை. மேலும் மேலும் விடாப்பிடியாக முயற்சித்தேன். முடியவே இல்லை. அத்தருணம் வானத்தில் இருந்து கொட்டுவது போல் பிணங்கள் என்மீது விழுகின்றன.

நான். . . . ஐயோ. . . . .

பதறிக்கொண்டு எழுந்தேன். வீட்டில் இரு ந்த எல்லோரும் ஏற்கனவே எழுந்தி ருக்க வேண்டும். அவர்கள் வாசலில் நின்ற படியே என்னை ஒரு தினுசாக அர்த்தம் விளங்கிக் கொண்டவர்களைப்போல் பார்த்தார்கள். எனக்கே என்மீது அனுதாபமும் அவமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் கலந்த உணர்ச்சி தோன்றியது. அவர்களைப் பார்க்க மனது கஷ்டப்பட்டது. மீண்டும் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு குப்புறப் படுத்தேன்.

பெருமூச்சு ஒலிகளுடன் சரசரத்து அடங்கிய சத்தம் சிறிது நேரத்தில் குறட்டையாகத் தொடர்ந்தது. கரடியின் உறுமல் போல் வெருட்டும் குறட்டை. கரடிகள் அடைத்த கூட்டுக்குள் நான் தனியே இருப்பது போல் அச்சம் தோன்றியது. என்னால் சிறிது நேரமாவது செத்துப் போய் இருக்க முடியாதபடி மூளை துருதுருத்து கேள்வி மேல்கேள்விகள் கேட்டது.

என்னால் கொலை செய்யப்பட்ட, செய்விக்கப்பட்ட, யாரோ செய்வதையும், செய்விப்பதையும் கண்டும் காணாமல் போனபோது மாண்டுபோன ஒவ்வொருவரும் என் முன்னால் கூடினர். அவர்கள் மாநாடு நடத்தி திட்டம் தீட்டத் தேவையில்லை. ஒவ்வொருவர் கண்களும் தோட்டாக்களைத் துப்பும் குருதிக் குழல்கள்.

கனவு நித்திரையிலா, நித்திரைக்கு முன்னரா வருகிறது? நித்திரைக்கும் நித்திரையின்மைக்கும் இடையிலா தெரியவில்லை. ஆனால் எனக்கு விழித்தபடியே தான் கனவுகள் தொடர்கின்றன. சிதையில் கிடப்பது போல் கட்டில் தணலாக எரித்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. உயிருடன் நானும் எரிந்து போவேனோ என அச்சம் எழ போர்வையை இழுத்து விசிறிவிட்டு கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தேன்.

தெருவில் யாரோ ஓரிருவர் தான். நிம்மதியைத் தொலைத்துபிசாசாய் அலைவது போல்.

நானும் பிசாசாக ஆகக் கூடாது. நான் என்னைப்பற்றி ஒழுங்காகச் சிந்தித்து ஓர் சுமுகமான நிலைக்கு என்னைக் கொண்டு வரவேண்டும்.

நான் இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறேன். என்ன நடந்துவிட்டது.

இல்லை. இல்லை. என்னவோ நடந்துவிட்டதுதான். அது எப்போது நடந்தது என்பதுதான் இப்போது முக்கியமான கேள்வி. நான் எல்லாவற்றையும் நினைவுக்குக் கொண்டுவரவேண்டும்.

இது தேவைதானா? இது அவசியமே இல்லாத விடயம். நீ இப்போ 7000 மைல்கள் கடந்து லண்டன் வந்துவிட்டாய். இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே உன்னை ஒன்றும் பண்ணமுடியாது. நீ ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை.

பயம். அது எனக்கு இருக்காத, இருக்கக்கூடாத ஒன்று. ஆயினும் அது எனக்கு தேவையில்லை.

இப்போ பிரச்சனை எங்கே தொடங்கியது என்பதுதான். அதற்காக நான் எல்லாவற்றையும் நினைத்தாக வேண்டும்.

நான் எப்போது இயக்கத்திற்கு போனேன் ?

எப்போது இயக்கத்தை விட்டேன் ?

எப்போது லண்டனுக்கு வந்தேன் ? என்று ஒரு ஒழுங்காகச் சிந்திக்க வேண்டும்.

இல்லை. இல்லை. இது தேவையில்லாத விடயம். இது எல்லாம் நாள் கணக்குப் பார்த்து தேதிகள் பட்டியல் போடும் விடயம்.

எப்போது என்றதை ஏன் என்று மாற்ற வேண்டும்?

ஏன் இயக்கத்திற்கு போனேன் ?

ஏன் இயக்கத்தை விட்டேன் ?

ஏன் இங்கு வந்தேன் ?

ஏன் இப்போது நான் இயக்கமாக இல்லையா ?

இயக்கமே தெரியாதவர்கள் இயக்கமாக இல்லையா ?

ஆமாம் இது அப்பட்டமான பொய்க் கேள்வி. ஒரு இயக்கத்தை அமைப்புக்குள் அமுக்கும் சமாச்சாரம். பல்வேறுபட்ட காரணங்களையும் கொலை செய்து ஒரே ஒரு காரணத்திற்கு மட்டும் வாழ்வு கொடுக்கும் சமாச்சாரம்.

எல்லோரையும் குற்றத்தில் இருந்து விடுவித்து என்மீதே குற்றத்தைச் சுமத்தும் அப்பாவித்தனம். இல்லாவிடில் யார் மீதோ குற்றத்தைப் போட்டுவிட்டு நான் மட்டும் தப்பித்துக் கொள்ளும் - தப்பித்துக் கொண்டதாக எனக்கு நானே காட்டும் பாசாங்குத்தனம்.

மொத்தத்தில் இது ஒரு குருட்டுக் கேள்வி.? அப்படித்தானே.!

அப்படித்தானே? வாய்விட்டு சற்று உயர்த்திய குரலில் கேட்டேன். Sorry. யாரோ அருகில் முளைத்தவன் கேட்டான். குரல் வந்த திசையில் திரும்பினேன். ஒரு முதிர்ந்த...வடஇந்தியனாகவோ பாகிஸ்தானியாகவோ இருக்கலாம். நான் அவனைப் பார்த்தபடியே மன்னிப்புக் கோரினேன். அவன் என்னைக் கூர்ந்து அசாதாரணமாகப் பார்த்தான். அந்தப் பார்வை எனக்கு மிகவும் பழக்கப்பட்ட, நித்தமும் என்னை எழுப்பி என் கண்களில் கத்தியைச் சொருகும் அதே பார்வை. இறக்கும்போதும் என்னைச் சபித்துச்சென்ற அதே பார்வை.. என் கண்களுக்குள்ளே குடியிருந்து என் நெஞ்சக் கபாலங்களை உதைத்து உதைத்து ஆன்மாவை எரிக்கும் அதே பார்வை.

அது ஒரு நிலவு மிதந்த காதல் இரவுதான். எதையும் உய்ப்பிக்கும் பலம் வாய்ந்ததாக. ஆனால் அவனுக்கோ சூனிய இரவாக, வாழ்வின் இறுதி இரவாக இருந்தது. எனக்கும் அது அப்படித்தான் என்பது அப்போது தெரியவில்லை. தோழர்கள் சில நிமிடங்களில் வெட்டிய அந்தக் குழியில் அவனைக் குந்திவைத்த போது அவன் என்னை அப்படிப் பார்த்தான்.

நான் தான் இந்த பிரபஞ்சத்தைவிடப் பெரியவன் ! மனிதன் உருவாக்கிய ஆயிரமாயிரம் கடவுளர்களின் தலைவன்! கடவுளர்களால் உருவாக்க முடிந்த ஒரேயொரு மனிதன்!

முழங்கால்கள் நெஞ்சுடன் அழுத்த அதற்கிடையே அவன் நடுங்கும் இரு கைகளும் விரித்தபடி. அவனின் அனைத்துப் பகுதிகளும் அனைத்து இழைகளும் அசையாது என் கண்களில் நிலைகுத்திய அவன் கண்மணியில் கூட நடுக்கம். இறைஞ்சுகிறானா?

அந்த நடுக்கம் என்னில், நான் ஏறி நின்ற மண்சரிவில், மரங்களில், இருளில், நிலவில் அலைகளை எழுப்பிக்கொண்டே போயிற்று.

என்னில் ஓர் அச்சம் எழுந்து நான் நிலை குலைய முன்னர் ஏதோ சொல்ல முனைந்தேனோ என்னவோ. ஒரு கையை உயர்த்தினேன். என் சைகைக்காகவே காத்திருந்த, விசுவாசத்தைக்காட்ட இதைவிட வேறு மார்க்கமோ சந்தர்ப்பமோ இல்லை என்பதை நன்றாக உணர்ந்தவன் மண்வெட்டியின் பின்புறத்தால் அவன் பிடரியில்... மானிடத்தை உலுப்பிய தட்டு....அந்த நேரத்தில் அவனால் எதுவுமே செய்ய சக்தியற்ற, முடிவுக்கு வந்துவிட்ட மனிதனாக அவன் இருந்தான். உண்மையில் நாம் அதைவிட மோசமான நிலையில்தானே இருக்கிறோம். அந்த உயிரை வாழவிட்டால் நாம் அழிந்து விடுவோம் என்பதுதானே. எமது அனைத்து இயக்கங்களையும் அந்த உயிரின் வாழ்வு அழிக்கும் வல்லமை - இல்லை. இல்லை. எமக்கு எந்த சக்தியுமே இல்லை என்பது தான்.

அவன் என்னதான் குற்றம் செய்தான்.? அவன் எந்தக் குற்றமும் செய்யாவிட்டாலும் அவன் பிறந்த குற்றத்திற்காக, அவனைக் காப்பாற்ற இந்த உலகத்தில் யாரும் இல்லை என்பதே.

இல்லை. பிறந்தது பிரச்சனையே இல்லை.

எங்கே பிறந்தது?

எந்த இனத்தில்?

எந்த மதத்தில்?

எந்த இயக்கத்தில்?

சுய நினைவுக்கு வந்தவனாய், அவன் சென்ற திக்கை நோக்கினேன். அங்கு ஆயிரமாயிரம் இஸ்லாமியர்கள். அவன் அதற்குள் எங்கோ அல்லது அவனே எல்லாருமாக வியாபித்து.

நான் ஊரை அள்ளி வரும் வெள்ளத்தில் அகப்பட்டதுபோல், ஒவ்வொன்றும் என்னை உருட்டிச்செல்ல வந்து நழுவியது போல். என் மெல்லிய நடையின் வேகத்தில் எல்லோரும் அசைந்துகொண்டு என்னைக் கவனித்தபடியே அல்லது கவனிக்காதபடி பாசாங்குத் தனத்தோடா....

அவர்கள் என்னை உதைக்க வருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்களா? அல்லது எல்லாருமாக-எதுவுமே நிகழாததுபோல் என்னை நெருக்கி . . .

எதுவுமே நிகழவில்லை. இப்படி ஒரு மனிதனை காணவே இல்லை. இல்லை. இல்லை. இப்படி ஒரு மனிதன் பிறக்கவே இல்லையே என்று...ஆமாம் அவர்கள் ஜக் கட்டுகளுக்குள் வைத்திருக்கும் கைகள் றிவோல்வரின் வில்லைத் தொட்டபடிதான் இருக்கும். எல்லோரும் நெருங்கி வந்து உலகத்தின் கண்களை மறைத்துக்கொண்டு என்னைக் கொல்லப்போகிறார்கள்.

நான் என் நடையில் சற்று வேகத்தைக் காட்டினேன். அவர்களும் சற்று விரைந்தனர். நான் மெதுவாக ஓட முயன்றேன். அவர்களும் நடப்பது போல் ஓடினார்கள். நான் திரும்பிப் பார்க்காமல் என்முழு சக்தியையும் திரட்டிக்கொண்டு ஓடி என் வீட்டுக் கதவைத் திருகி உள்ளே பாயும் வரை என் முதுகில் குண்டு செருகுவது போல் கூசியது.

கதவை அறைந்து சாத்திய பின்னரும் தெருவில் ஆளரவம் கேட்டுக் கொண்டேயிருந்தது. கதவில் முதுகை முட்டுக் கொடுத்துக்கொண்டு நின்றேன். பின் அவர்களின் குண்டுகள் கதவைத்துளைத்துக் கொண்டு என் உடலை சல்லடை போடும் என்பதால் சட்டென விட்டு சுவரருகே மறைந்து நின்றேன். அவர்கள் ஒட்டியிருக்கக் கூடும். வாயு வடிவில் கூட அவர்கள் குண்டு நுளையக் கூடும்.

எந்தச்சத்தத்தையும் காணோம். காற்று ஊளையிட்டுக் கொண்டு வீசியது. கரடிகளின் குறட்டை ஒலிகள் விகாரமாகிக் கொண்டு வந்தன.

மெதுவாக மேல்மாடிக்குப் போய் யன்னலோரம் நின்றேன்.

நீ 7000 மைல்களுக்கப்பால் வந்து விட்டாய். இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே உன்னை ஒன்றும்பண்ண முடியாது.

இல்லை. அவர்களால் முடியும். எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விருப்பம்தான்.

இது என்ன? நாம் அவர்கள். அவர்கள் நாங்கள். நாம் அவர்களாகவும் அவர்கள் நாங்களாகவும். நான் குழம்பிப்போய் அவர்களாகிச் சிந்திக்கிறேனோ?

யன்னலுக்குள்ளால் வெளியே பார்த்தேன். எதிர்வீடுகளில் சில யன்னல்கள் ஒளி சிந்தின. ஒரு யன்னலில் டி.வி. வெளிச்சம் மின்னியது. இன்னொரு யன்னலில் ஒரு பெண் ஏதோ செய்துகொண்டிருந்தாள். நான் உளவு பார்க்க ஆரம்பித்தேன். மற்றொரு யன்னலில் என்னவள் தோன்றினாள்.

காதலும் போரும், வாழ்வும் போரும், சுதந்திரமும் போரும் ஒன்றுக்கொன்று எதிரென உதறித் தள்ளி விட்டுப்போன என்னவள். அக்கரையில் நின்று அனல் வெறிக்கப் பார்த்தாள்.

நான் என் நண்பன் AKயோடு இரகசியமாகத் தொடர்ந்த காதலை உளவு பார்க்கத் தொடர்ந்தேன்.

காதல்நங்கூரமறுந்த கட்டுமரம் போல் நாளெல்லாம் அலையோடு அலைந்து. . . அந்த வெப்பம் சுமந்து. . . அந்த வெப்பத்தின் கொள்ளிகளோடு நண்பனையும் அவன் காதலியையும்.

நண்பன் தொலைந்தான். போராளியும் தொலைந்தான். காதலும் தொலைந்து வாழ்வும் தொலைந்தது.

மக்களும் தொலைந்தனர்.

துப்பாக்கி தானே உயர்ந்தது. எதிரே அந்த யன்னல்களில் தோன்றிய பெண்களின் நிழல்களை நோக்கி.

துப்பாக்கி ஓயாமல் வெடித்து சடசடத்து செத்தது.

யன்னல்கள் எல்லாம் தேவதைகள் நிறைந்தனர். என் யன்னல் நேரே கைகளை நீட்டி ஓலமிட்டனர்.

என்னவர் எங்கே? என்னவர் எங்கே? நான் எதுவுமே செய்யச் சக்தியற்றவனாய்., எந்த ஆயுதமும் என்னிடம் இல்லாத நிர்வாணியாய்., உக்கிய இதயத்தோடு அவர்களைப் பார்த்தேன்.

அங்கே என்னவளும் இருக்கக்கூடும். தடித்த யன்னல் சீலையை இழுத்து மூடினேன். என் அறைக்குள் நுளைந்து பிணம் போல் சரிந்தேன்.

ஏதாவது ஒரு கரடி என்னை நோட்டம் விடவும் கூடும். கண்ணை மூடி நித்திரையை அழைக்க பயமாக இருந்தது. அவர்கள் அவதார புருஷர்கள். உலகமெல்லாம் வியாபித்திருக்கிறார்கள் இங்கே என்னருகேயும்.

நான் குறட்டை ஒலிகளைக் கணக்குப் பார்த்தேன். குறைந்தும் கூடியும் ஒரு சீரற்று. நான் முயற்சியைக் கைவிடவில்லை.

அடித்துப்போட்ட மாதிரி உடம்பு. கால்களையும் கைகளையும் விரித்துப் போட்டபடி நிமிர்ந்து கிடந்தேன். கட்டிலோடு உடம்பை ஒட்டியது போல் எதையுமே அசைக்க முடியாதபடி செத்துப் போய்க் கிடந்தது. மூளை மட்டுமே வேலை செய்வது போலவும் இதரபகுதிகள் எதுவுமே இயங்கவில்லைப் போலும்

திடீரென என் உடம்பு அப்படியே மேலே பறக்க ஆரம்பித்தது. கரடிகளைக் கடந்து, கதவை, மாடிகளை, லண்டனைக் கடந்து எங்கோ வானத்தின் பரப்புக்குப் போனது. எந்த திக்கும் பார்க்கச் சக்கியற்று, காற்றுவெளியில் படுத்தபடியே, மேலும் கீழுமாய்பறந்துகொண்டு திரிந்தேன்.

பின் ஒரு புதிய சூழலுக்குள் நிமிர்ந்தபடி மேலும் கீழுமாய்... அது என்னை மறைத்து வைக்கும் ஒரு இருட்டுக்குள் ஒரு நிழல் உருண்டை. கருப்பைக்குள் சிசுபோல். நீருக்குள் மேலும் கீழும் அசையும் துகள்கள் போல் மனிதர்கள். தானியங்கிகளாய் மனிதர்கள் ஏதோவெல்லாம் செய்து கொண்டிருந்தனர். அவர்களைக் கூர்ந்து பார்த்தேன். அவர்கள் கண்களை மூடியபடியே.

சிலர் ஞானக்கண் பெற்றவர்கள் போல் சுட்டுக்கொண்டிருந்தனர். குண்டுகள் அங்கும் இங்கும் கிழித்துக் கொண்டு போயிற்று. சிலர் குண்டடிபட்டு மாண்டு கொண்டிருந்தனர்.

நான் குண்டுகளுக்கு ஒளிக்கத் தொடங்கினேன். மாறி மாறி நீந்தி மனிதர்களின் பின்னால் ஒளிந்து கொண்டு திரிந்தேன். பின் கண்களைத் திறந்திருப்பது சந்தேகத்திற்குரிய அபாயமென்றும் எல்லோரும் என்ன செய்கிறார்களோ அதையே நானும் செய்வது நல்லதென்றும் தோன்றியதால் கண்களை மூடினேன். பின் சாதல் சாத்தியம் என்பதால் மூடுவதுபோல் பாசாங்கு காட்டி ஒரு கிழவனின் பின்னால் நின்று அவன் இடுப்பைக் கெட்டியாகப் பிடித்தேன்.

கிழவன் என் கைகளைச் சுழற்றித் திரும்பினான். "உங்களுக்காக நாங்கள் செத்தது போதும்" என்றான்.

அதே கிழவன். அதே கண்கள். என் ஆன்மாவை எரித்த அதே பார்வை.

என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை. அவன் என்னை என்னவும் செய்யலாம். அச்சம் பரவி உடலை இறுக்க சுழியோடி வேறிடம் போனேன். நண்பனா எதிரியா என்றறியா ஒவ்வொரு உடல்கள் பின்னும் மறையத் தொடங்கினேன்.

எம்மால் அழிக்கப்பட்ட ஒவ்வொரு ஜீவனும் இதற்குள் இருக்கக்கூடும்.

சீ. . . என் வெறிகொண்ட வாழும் ஆசை. . . நான் வாழவேண்டும். எல்லோரும் வாழ்வோம்.

பிடிவாதத்தோடு சும்மா இருந்த ஒரு மனிதனை உலுப்பினேன்.

சீ. அவனும் பாசாங்கோ என்னவோ கண்களை இறுக்கி மூடியிருந்தான்.

துப்பாக்கிகள்(?) இரக்கமற்றவை
நண்பனா எதிரியா என்றறியாதவை
மனிதர்கள் மடிந்து வீழ மானிடம் சாம்பலாகிறது.

கத்தினேன். உரத்துக் கத்தினேன்.

துப்பாக்கிகளின் சடசடப்பு. விமானங்களின் குண்டுவீச்சு. ஹெலிச்சத்தம். என் குரல் எனக்கே கேட்கவில்லை. கத்திக் கத்தி அழுது அந்த மனிதனை உலுப்பினேன். கொலை செய்வதை நிறுத்துவோம். மனிதர்கள் வாழவேண்டும்.

அவன் பாசாங்கு நித்திரையில் இருந்த கண்களை மெதுவாகத் திறந்தான். என்னை அலட்சியமாகப் புழுவைப்போல், எதற்கும் உதவாததைப் போல், ஊரோடு ஒத்து வாழத் தெரியாத.... துரோகியைப் போல் பார்த்தான்.

அவன் கையில் துப்பாக்கி முளைத்தது. அவன் என்னைக் குறிவைத்து. . . ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாட்டின் சோஷலிசம்

வ. அழகலிங்கம்

*உலகப்பாட்டாளிகளே ஐக்கியப்படுங்கள். பாட்டாளிவர்க்க சர்வதேசீயம். உலகப்புரட்சி* போன்ற தங்கம் நிகர் மார்க்சிய வாக்கியங்கள் வெறும் அருவமானவையல்ல. உலகளாவிய உழைப்புப் பிரிவினை, உலக ஏற்றுமதி இறக்குமதி, உலகச் சந்தை போன்ற பொருளாதாரவிதிகள் ஏற்படுத்தித் தந்த யதார்த்தம். உலகப் பொருளாதார இயக்கத்தின் ஒட்டுமொத்தத்தின், பலபக்கப் பார்வையின் கடைந்தெடுத்த எடுகோள்தான் பாட்டாளிவர்க்க சர்வதேசீயவாதம். பாட்டாளிவர்க்க சர்வதேசீயவாதம் என்ற கருதுகோளாற் தான் மார்க்சியத்தின் ஒவ்வொரு மூலக்கூறுகளும் பின்னப்பட்டிருக்கின்றது. இன்றைக்கல்ல என்றைக்கும் உலகத்தின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் சகட்டு மேனியிற் பார்க்கும்பொழுது அந்த இந்த அரசியற்சக்திகள் என்று தோன்றினாலும் சாராம்சத்தில் மிகக்குறைந்த எண்ணிக்கையிலுள்ள முதலாளித்துவச் சர்வதேசியவாதிகளும், பாட்டாளிவர்க்க சர்வதேசியவாதிகளும் தான். சமரசங்காணமுடியா இந்த இரண்டு அரசியற் துருவங்களுக்கும் இடைநடுவில் விகிதாசாரத்தில் கூடிக்குறைந்த கலப்பின அரசியல்போக்குகள் தற்காலிக அரசியல் அமைதிச் சூழ்நிலைகளிலும் பொருளாதாரச் செழுமைக் காலங்களிலும் நிலவுபவை. இந்தப் பின்னணியில் தான் சோவியத் யூனியனின் பிறப்பு, வாழ்வு, வீழ்ச்சி அத்தனையையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

கொமிசம் பேசிக்கொண்டு சாதிவெறியர்களாயும் கொமிசம் பேசிக்கொண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களாயும் சிங்கள விரோதிகளாயும் இருந்ததை இலங்கை அரசியல் கண்டிருக்கிறது. அதே நேரத்தில் படு பிற்போக்குக் கட்சிகளின் ஆதரவாளர்கள் மறந்தும் சாதிபாராதவர்களாக, ஏழை எளியவர்கட்குத் தங்களிடம் உள்ளதெல்லாம் கொடுத்து உதவுபவர்களாக இருந்ததைக் காண்பது கஷ்டமான காரியமல்ல. இதேபோன்ற தோற்றமறுப்புவாத (paradox) நிகழ்வுகளை மார்க்சியவரலாற்றின் ஒவ்வொரு அடியெடுப்புகளிலும் காணலாம். இந்தச் சகாப்தம் மாதிரித் தோற்றமறுப்புகள் செழித்த சகாப்தத்தை என்றும் காணமுடியாது. இதற்கான எத்தனையோ உதாரணங்களைச் சோவியத் யூனியனின் வரலாறு வழங்கும்.

சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பாவும் வீழ்ந்தவுடன் மார்க்சியம் மடிந்துவிட்டது என்று சங்கு ஊதுகிறார்கள் சவமெடுப்பதற்கு. சோவியத் யூனியனின் வீழ்ச்சி ஸ்டாலின்வாதிகளுக்கு அதிர்ச்சியாயும் மாவோவாதிகளுக்குப் புளகாங்கிதமாயும் இருந்ததுபோல் மார்க்சியவாதிகளுக்கு இருந்ததில்லை. மார்க்சியம் நன்றாக அறியும் இன்றைக்கு உலகில் உள்ள அதிசயிக்கத்தக்கதும் தீர்க்கமுடியாததுமான முரண்பாடு என்னவெனில் கட்டுங்கடங்காத மட்டத்திற்கு வளர்ந்துள்ள உற்பத்திச்சாதனங்களும் மைக்கிறோ, மியூ என்ற மட்டத்திற்குச் சுருங்கிக் கொண்டிருக்கும் உலகச்சந்தையும் தவிர்க்கமுடியாதபடி சோஷலிசத்திற்குக் கொண்டு செல்லுமென்று. இது தோற்றுவிக்கும் வர்க்கப்போராட்டங்கள் போல்சவிக் கட்சியிலும் சிறந்ததாயும் மூன்றாமகிலத்தின் வீழ்ச்சியின் படிப்பனவுகளைத் திரட்டி இனிமேல் அந்தப் பலவீனங்கள் இல்லாததாயுமான உலக சோஷலிசபுரட்சிக்கட்சியைத் தோற்றுவிக்கும். இந்தக் கைங்கரியத்தின் கடப்பாட்டின் பேரில் தனி ஒரு நாட்டு சோஷலிசக் கொள்கையையும் அது தேடித் தந்த தோல்விகளையும் வெற்றிகளையும்' அந்தக் கோஷத்தைத் தூக்கிப் பிடித்தவர்கள் எந்த வர்க்கத்தைப் பிரதிநித்துவப்படுத்தினார்கள் என்றும் ஐயந்திரிபற ஆராயவேண்டும். தனி ஒரு நாட்டில் சோஷலிசக் கொள்கையை 1924 டிசெம்பரில் ஸ்டாலின் முதன்முதலாகப் பிரேரித்தார். இதற்குமுன் எங்காவது ஓரிடத்திலாவது ஸ்டாலினின் எந்த எழுத்துக்களிலும் அப்படியொரு தத்துவத்தைக் காணமுடியாது. இதற்கு முற்காலம் முழுவதும் ஸ்டாலின் பாட்டாளிவர்க்க சர்வதேசியவாதியாகப் பேசிய, எழுதிய மேற்கோள்களைக் காட்டுவது கஷ்டமான காரியமல்ல.

தங்களது விவாதங்களுக்கு முண்டாக ஸ்டாலினும் ஸ்டாலின்வாதிகளும் மீண்டும் மீண்டும் காட்டும் லெனினது ஒரேயொரு மேற்கோளுண்டு. அந்த மேற்கோள் 1915 ஆகஸ்ட் 23 சோஷியல் டெமோக்ராட் இதழ் 44க்கு "ஐரோப்பிய ஐக்கியநாடுகள் எனும் முழக்கம்" என்ற தலைப்பில் எழுதியதாகும். இரண்டாம் அகிலத்தை ஜேர்மன் சமூக ஜனநாயகக்கட்சி காட்டிக்கொடுத்ததன்பின் "இரண்டாம் அகிலம் வீழ்க", "மூன்றாம் அகிலம் நீடு வாழ்க" என்ற முழக்கத்தோடு மூன்றாம் அகிலத்தைக் கட்டியெழுப்புவதற்கு பகீரதப்பிரயத்தனங்கள் எடுத்துக்கொண்டிருந்த காலம். முதலாம் உலகயுத்தம் வெடித்து ஐரோப்பிய நாகரீகத்தை இரத்தவெள்ளம் கழுவிக்கொண்டிருந்த காலமாகும். உலகக்கட்சி கலைக்கப்பட்டு இனிமேல் சோஷலிசம் வராதென்று இன்று கத்துவதுபோல சமூக தேசிய வெறியர்கள் கத்தித் திரிந்த காலத்தில் நிபந்தனைக்குரிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு லெனின் கூறுகின்றார்.

"உண்மையான ஜனநாயகத்தன்மை பெற்ற அரசியல் மாற்றங்கள், குறிப்பாக அரசியற் புரட்சிகள், எப்போதும் எந்த நிலைமைகளிலும் எவ்வழக்கிலும் சோஷலிசப்புரட்சி முழக்கத்தை மறைக்கவோ பலவீனப்படுத்தவோ முடியாது. மாறாக, அவை எப்போதும் அந்த சோஷலிசப்புரட்சியை மேலும் நெருங்கக் கொண்டுவரும், அதன் அடிப்படையை விரிவுபடுத்தும், சோஷலிசப் போராட்டத்தில் புதிது புதிதாக சிறுமுதலாளித்துவப் பகுதிகளையும் அரைப் பாட்டாளிவர்க்க மக்கள் திரள்களையும் இழுத்துவிடும். மறுபுறத்தில், சோஷலிசப்புரட்சியின் வழிப்போக்கிலே அரசியற் புரட்சிகள் தவிர்க்கமுடியாதவையாகும். சோஷலிசப்புரட்சியைத் தனியொரு செய்கையாகக் கருதக்கூடாது. கொந்தளிப்பான அரசியல், பொருளாதார அதிர்ச்சிகளும் மிகவும் தீவிரமான வர்க்கப் போராட்டமும் உள்நாட்டுப் போரும் புரட்சிகளும் எதிர்ப்புரட்சிகளும் கொண்ட காலப்பகுதியாகவே அதைக் கருதல் வேண்டும்.................

ஐரோப்பிய ஐக்கியநாடுகள் எனப்பட்டது முதலாளித்துவத்தின் கீழ் சாத்தியமற்றது அல்லது பிற்போக்கானது. முதலாளித்துவத்தின் கீழ் ஐரோப்பிய ஐக்கியநாடுகள் என்பது காலனிகளைப் பங்குபோடுவதற்குரிய உடன்பாடு என்பதற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமனாகும்........

போர் தனியுடைமையின் அடிப்படைகளுடன் முரண்பட வில்லை. மாறாக, அது அந்த அடிப்படைகளின் நேரடியான, தவிர்க்கமுடியாத விளைவாகும். முதலாளித்துவத்தின் கீழ், தனித்தனித் தொழிலமைப்புகளின், தனித்தனி அரசுகளின் சீரான பொருளாதார வளர்ச்சியென்பது சாத்தியமில்லை. முதலாளித்துவத்தின் கீழ், தொழில் நெருக்கடிகளும் அரசியற்போர்களும் அரசியலில் போர்களும் எனும் வழியில்லாமல் காலத்துக்குக் காலம் கலைக்கப்படும் சமநிலையை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு வேறுவழி கிடையாது.......

உலக ஐக்கியநாடுகள் (ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல) என்பதுதான்.- கம்யூனிசத்தின் முழுமையான வெற்றியானது ஜனநாயக வகைப்பட்டது உள்ளிட்ட அரசு அனைத்தும் முற்றாக மறைந்து விடச் செய்யும் காலம் வரும்வரை-நாம் சோஷலிசத்துடன் இணைத்துப்பேசும் தேசங்களின் ஒருமைப்பாட்டுக்கும் சுதந்திரத்துக்கும் வாய்த்த அரசு வடிவமாகும். இருந்தாலும் ஒரு தனி முழக்கம் என்கிற வகையில் உலக ஐக்கியநாடுகள் என்பது சரியாக இராது. முதற் காரணம் அது சோஷலிசத்துடன் ஒன்றாகக் கலந்துவிடுகிறது. இரண்டாவது காரணம், அம்முழக்கம் ஒரு தனிநாட்டில் சோஷலிசம் வெற்றிபெறுவது சாத்தியமில்லை எனும் தவறான கருத்தை உண்டாக்கிவிடலாம், மேலும் அப்படிப் பட்ட நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் இடையேயுள்ள உறவுக ளைப்பற்றித் தவறான கருத்துக்களையும் உண்டாக்கிவிடலாம்.

சீரற்ற பொருளாதார, அரசியல் வளர்ச்சி முதலாளித்துவத்தின் கட்டாய விதியாகும். எனவே, முதலில் சில முதலாளித்துவ நாடுகளிலோ ஒரு தனிநாட்டிலோ சோஷலிசம் வெற்றி பெறுவது சாத்தியமே. அந்த நாட்டின் வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் முதலாளிகளின் தனியுடைமையைப் பறித்துவிட்டுத் தங்களுடைய சொந்த சோஷலிச உற்பத்தியை ஒழுங்கமைத்தபின் பாக்கியிருக்கும் முதலாளித்துவ உலகத்திற்கு எதிரே எழுந்து நிற்கும் - மற்ற நாடுகளிலுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைத் தன்னுடைய இலட்சியத்தின்பால் ஈர்த்துவரும், அந்நாடுகளில் முதலாளிகளுக்கு எதிராகப் புரட்சிகளைக் கிளப்பிவிடும், தேவைப்பட்டால் சுரண்டும் வர்க்கங்களையும் அவர்களின் அரசுகளையும் எதிர்த்து ஆயுதபலத்தையும் பயன்படுத்தும். முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிவதில் பாட்டாளிவர்க்கம் வெற்றிபெற்றுள்ள சமுதாயத்தின் அரசியல் வடிவம் ஜனநாயகக் குடியரசாக இருக்கும், அது அந்த நாட்டின் அல்லது நாடுகளின் பாட்டாளிவர்க்கச் சக்திகளை இன்னும் சோஷலிசத்தின்பால் வராமலிருக்கும் அரசுகளுக்கு எதிராக மென்மேலும் ஒன்று குவித்து வரும், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின், பாட்டாளிவர்க்கத்தின் சர்வாதிகாரம் இல்லாமல் வர்க்கங்களை ஒழிப்பது சாத்தியமில்லை. பிற்பட்ட அரசுகளை எதிர்த்து சோஷலிசக் குடியரசுகள் ஏறக்குறைய நீண்ட, விடாப்பிடியான போராட்டம் நடத்தாமல் சோஷலிசத்தில் சுதந்திரமாக நாடுகள் ஒன்றுபடுவது சாத்தியமில்லை. - லெனின் நூற்திரட்டு தொகுதி 26, பக்கங்கள் 351-55

இதுதான் லெனினிசத்தின் அடிப்படைத்தத்துவமென்றால் இந்த முக்கியமான கூற்றை அதற்குப்பின்பு வந்த காலங்களில் நூற்றுக்கணக்கான தடவைகளில் ஏன் முரண்படுத்திக் கூறியிருக்கிறார். அதுவும் இதே போன்ற கூற்றை மீண்டுமொரு முறை கூற மறந்ததேன்? இதற்கான விடையை அதே ஆண்டான 1915ல் இதன்பின்னர் லெனினால் எழுதப்பட்ட வேலைத்திட்ட நகல் நேரடியாகத் தெளிவாக்குகிறது - அது பின்வருமாறு கூறுகிறது.

"றைசியப் பாட்டாளிவர்க்கத்தின் கடமை என்னவென்றால், ஐரோப்பாவிலே சோஷலிசப்புரட்சியைப் பற்றியெரியச் செய்வதற்காக, றைசியாவிலே முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைக் கடைசி அந்தலை மட்டும் செய்து முடிக்கவேண்டும். இரண்டாவது கடமை முதலாவது கடமையோடு ஆக நெருங்கி வருகிறது, இருந்தபோதும் அது ஓர் விசேட இரண்டாவது கடமையாகவே இருக்கிறது. ஏனெனில் இங்கே வித்தியாசமான வர்க்கங்கள் றைசியப் பாட்டாளிகளோடு கூட்டுச்சேர்கின்றன. முதலாவது கடமையில் றைசியப் பாட்டாளிக்குக் கூட்டுக்கு வருவது குட்டிமுதலாளித்துவ விவசாயிகள். இரண்டாவது கடமைக்குக் கூட்டாக வருவது மற்றைய நாட்டுப் பாட்டாளிவர்க்கம்."

இதிலிருந்து தெளிவாக விளங்கும் 1915ல் லெனின் றைசியாவிலே சோஷலிசப்புரட்சிபற்றி யோசிக்கவில்லை. தொழிற்துறை வளர்ச்சி கண்ட முதலாளித்துவ நாடுகளான இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி இதில் ஒன்றிலாவது சோஷலிசப்புரட்சி வந்திருந்தால் இன்று உலகம் முழுவதும் சோஷலிசமாக மாறியிருக்கும். லெனின் எத்தனையோ தடவை சொன்ன விஷயம் ஒன்று. அதாவது றைசியாவின் தொழிற்துறை வளர்ச்சியும், கலாச்சார வளர்ச்சியும் சோஷலிசத்திற்குப் போதுமானதல்லவென்று. அவர் மேலும் 1923ன் தொடக்கத்திற் சொல்லியிருக்கிறார். "சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான அரசியல் முன்நிபந்தனைகள் எமக்கு இருந்தாலும் அதற்குப் போதுமான கலாச்சாரவளம் எமக்குப் போதாது " என்கிறார்.

இனிமேல் லெனின் தனிநாட்டு சோஷலிசத்தை முரண்படுத்திய எத்தனையோ ஏறத்தாழ அத்தனையுமான சிலவற்றைக் கவனிப்போம்.

"சோஷலிசப்புரட்சியின் பூரணவெற்றியென்பது ஒரு தனிநாட்டினுள்ளே மாத்திரம் நினைத்துப் பார்க்கக்கூடிய ஒன்றல்ல. அது றைசியாவைத் தவிர்ந்த, குறைந்த பட்சம் சில வளர்ச்சியடைந்த நாடுகளின் துரிதமான ஒத்துழைப்பைக் கோரி நிற்கிறது. " - லெனின் நூற்திரட்டு தொகுதி 28, பக்கம் 151, நொவெம்பர் 8, 1918

"பூசுவாக்கள் கொக்கரிக்கிறார்கள் றைசியக் கொம்யூன்கள் தவிர்க்கமுடியாதபடி தோல்வி காணுமென்று . றைசியப் பாட்டாளிகள் ஆட்சியைக் கைப்பற்றிய வண்ணமே மேற்கில் ஏற்படும் புரட்சிகளினூடு அதைக் கெட்டியாகக் காப்பாற்றக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் விளங்குகின்றன. " - லெனின் செப்டெம்பர் 1917

"உலகத்தில் எந்த சக்தியாலும் போல்சவிக்குகளைத் தடுக்கமுடியாது. அவர்கள் தானாகவே பயத்தில் விட்டாலொழிய. அவர்கள் மேற்கிலே வெற்றிவாகை சூடும் சோஷலிசப்புரட்சி வரும்வரை அதைக் காப்பாற்றுவார்கள். " - லெனின், போல்சவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா என்ற கட்டுரையில்.

"வலது கன்னையினர் சொல்கிறார்கள் நாங்கள் தனியாக ஆட்சியைக் காப்பாற்ற மாட்டோமென்று. நாங்கள் தனியானவர்கள் அல்ல. எங்களுக்கு முன்னால் முழு ஐரோப்பாவும் இருக்கிறது. நாங்கள் புரட்சியைத் தொடங்க வேண்டியதுதான். " - லெனின், நொவெம்பர் 1, 1917

"ஜேர்மனியிற் புரட்சி வரவில்லையென்றால் நாம் அழிவது திண்ணம். நாங்கள் மொஸ்கோவிலோ, பீற்றர்ஸ் பேக்கிலோ மாத்திரமல்ல விளாடிவிஸ்ரோக்கிலும் மற்றைய தூரமூலைகளிலுமே அழிந்துபடுவோம். " - லெனின், மார்ச் 1918

"உலகளாவிய ஏகாதிபத்தியமும் வெற்றிவாகை சூடிய சோஷலிசமும் அக்கமும் பக்கமுமாக உயிர்வாழ முடியாது. "- லெனின், மார்ச் 1918

"எங்களது பிற்போக்குத்தனம் புரட்சிகரப் பயங்கரவாதத்தில் ஈடுபடும்படி எங்களை முன்னுக்குத் தள்ளியது. மற்றைய நாட்டுத் தொழிலாளர்கள் உதவிக்கு வரும்வரை இந்தப் புரட்சியை நாம் காப்பாற்றவேண்டும். அன்றேல் நாம் அழிந்து படுவோம்."

"எங்களது புரட்சி சர்வவியாபகப் புரட்சியாகத் தொடங்கியது. உலகளாவிய புரட்சி வெடித்து எம்மைப் பாதுகாக்க வரும் வரை, பாட்டாளிவர்க்க வெகுஜனங்கள் செக்கோஸ்லவாக்கிய ஆக்கிரமிப்பைத் தோற்கடித்து எமது புரட்சியைப் பாதுகாத்து வைத்திருப்பார்கள். " - லெனின், யூலை 1918

"மற்றைய சோஷலிசப்புரட்சியின் சர்வதேசப் பட்டாளம் எமக்கு உதவிக்கு வரும்வரை நாம் ஒரு வெற்றிவாகை சூடிய கோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைக்குள் இருக்கிறோம். "- 1918ல் லெனின் அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம்-

"உலக வரலாற்று உண்மைகள் நிரூபிக்கின்றன. றைசியப்புரட்சி சோஷலிசப்புரட்சியாகியது, வரலாற்று நிர்ப்பந்தத்தினாலேயொழியத் துணிச்சல் வாதத்தால் அல்ல. வேறு மாற்றுவழி இருக்கவில்லை. உலகளாவிய சோஷலிசப்புரட்சியாம் உலக போல்சவிசம் வெற்றிவாகை சூடவில்லையெனில் தவிர்க்கமுடியாதபடி ஆங்கில, பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் றைசியாவின் சுதந்திரத்துக்குத் தூக்கிட்டுவிடும். "- லெனின், நொவெம்பர் 1918

"நாம் ஓர் அரசில் அல்ல, ஒரு தொகை அரசுகளினிடையே வாழ்கிறோம். அக்கமும் பக்கமும் ஏகாதிபத்திய அரசுகள் நடுவிலே சோவியத் அரசாகக் கனகாலம் நீடிக்கலாம் என்பது முடியாத காரியம். முடிவில் ஒன்று மற்றொன்றை வெற்றி கொள்ளும்" லெனின் கட்சியின் எட்டாவது காங்கிரஸ் கூட்டத்தில் மார்ச் 1919-

"அந்த இரவில் ( அக்டோபர் புரட்சி நடந்த இரவு ) மூன்று வருடத்தினுள் நாம் வெற்றிவாகை சூடுவோம் என்று சொல்லியிருந்தால், எந்த நிதானம் தவறாத தீர்க்கதரிசியும் நம்பியிருக்கமாட்டான். அப்பொழுதே எங்களுக்குத் தெரிந்திருந்தது, உலக சோஷலிசத்தை வெற்றி கொண்டால் மாத்திரம்தான் எங்களது வெற்றி உண்மையில் வெற்றியாகுமென்று. நாம் எங்களது கடமையைத் தொடங்கி உலக சோஷலிச வெற்றியின் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறோம்." லெனின் அக்டோபர் புரட்சியின் மூன்றாவது வருடாந்தவிழாச் சொற்பொழிவில், 1919

"யுத்தம் நடைபெறாதிருந்தால் உலக முதலாளித்துவம் முழுவதும் கெட்டியாக ஒன்றுபட்டு எங்களுக்கெதிராகப் போராடியிருப்பார்கள். அக்டோபர் புரட்சியை அடுத்தடுத்த கிழமைகளிலும் மாதங்களிலும் நாம் வெற்றிக்கு மேல் வெற்றிவாகை சூடினோம். ஏனெனில் ஒரு விஷேட சர்வதேச சூழ்நிலை எம்மைக் காப்பாற்றியது. "- லெனின், ஜனவரி 1918

"மேற்கிலே இன்னும் யுத்தம் நடந்து கொண்டிருப்பதாலும், தூரகிழக்கு ஏகாதிபத்தியம் மேலும் மேலும் முன்னேறுவதாலும் எமக்கு மூச்சுவிட அவகாசம் கிடைத்தது. இது மாத்திரமே சோவியத் குடியரசின் உயிர்வாழ்வைப் பேணியது. " - லெனின், ஏப்ரல் 1918

"நாம் இப்பொழுது யுத்தகாலத்திலிருந்து சமாதான காலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். யுத்தம் திரும்பவும் வரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எவ்வளவு நாட்களிற்குச் சோஷலிசமும் முதலாளித்துவமும் அக்கமும் பக்கமுமாக வாழ்கிறதோ, அதுவரைக்கும் நாம் சமாதானமாக வாழமுடியாது. தூரநோக்கில் ஏதாவது ஒன்று வெற்றிவாகை சூடும். எப்போதாவது சோவியத் குடியரசுக்கு அல்லது உலக முதலாளித்துவத்திற்கு மரணச்சடங்கு நடைபெறும். இது யுத்தத்திலே பட்டகடன் கொடாமைப் பிரகடனமாகும்."- லெனின், ஏப்ரல் 1918, மத்தியகுழுக் கூட்டத்தில் -

ஜேர்மனியிலே நொவெம்பர் புரட்சி ஏற்பட்டதனால், உக்கிரேனையும் பால்டிக் அரசுகளையும் பின்லாந்தையும் விட்டு ஜேர்மன் துருப்புகள் ஓடவேண்டி ஏற்பட்டது. பிரெஞ்சு, ஆங்கில, அமெரிக்க இராணுவங்களிலே அடங்காமையும் கிளர்ச்சியும் நிலவியதால் றைசியாவின் தென்மேற்குக் கடலோரங்களை விட்டு அவர்கள் ஓடவேண்டி நேரிட்டது. இந்தச் சூழலில் லெனின் என்ன சொல்கிறார் :

"எங்களுக்குச் சிறிய சமநிலை கிடைத்துள்ளது. இந்தச் சமநிலை வெகு சீக்கிரத்தில் உடையக்கூடியது. அந்தச் சமநிலையின் காரணமாக சோவியத் அரசாங்கம் தப்பிப் பிழைத்திருக்கிறது. கட்டாயம் அது கனநாட்களுக்கல்ல. அதுவும் முதலாளித்துவச் சூழலிலே அது தப்பிப் பிழைக்கமுடியாது"- லெனின், யூலை 1921

"சோஷலிசத்தை அடைவதற்கு எத்தனை இடைமருவு மாற்றங்கள் அவசியம் என்று எமக்குத் தெரியாது. அது ஐரோப்பிய சோஷலிசப்புரட்சி நடந்து, உண்மையிலேயே அது தொடங்குவதில் மாத்திரமே தங்கியுள்ளது." - லெனின், ஏழாவது காங்கிரஸில்

"உலக பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் வருவது வரலாற்றுரீதியாகத் தவிர்க்கமுடியாதது. முழு உலகத்தினதும் தனித்தனி நாடுகளினதும் அபிவிருத்தியை இதுவே தீர்மானிக்கும். ஒவ்வொரு நாடுகளிலும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தினதோ சோவியத் மாதிரி அரசாங்கங்களினதோ பிரகடனம் நாடுகளிடையே மிக நெருக்கமான பொருளாதார உறவை ஏற்படுத்துவதற்கும், உற்பத்தியிலே சர்வதேச உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்துவதற்கும் கடைசியாக ஒரு சர்வதேச பொருளாதார நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும்" - லெனின், டிசெம்பர் 1918, மக்கள் பொருளாதாரக் காங்கிரஸில் ஆற்றிய உரை-

"அபிவிருத்தி வேலைகளைத் தொடங்குவதென்பது எவ்வளவு சீக்கிரத்தில் ஐரோப்பிய நாடுகளில் புரட்சி வருகின்றதோ அதிலேயே தங்கியுள்ளது. ஐரோப்பியப்புரட்சியின் பின்புதான் அபிவிருத்தி வேலைகளைக் கரிசனையாகச் செய்யமுடியும்" - லெனின், 1919

"உற்பத்தியிலே கம்யூனிசமுறை அடிப்படைகளை நாங்கள் உலகளாவிய கம்யூனிசத்தின் வெற்றி கிட்டும்வரை குலுங்காமற் பாதுகாப்போம் " - லெனின், 1919 ஜனவரி

"றைசியத் தொழிலாளிவர்க்கம் சோஷலிசப்புரட்சியின் முதலாவது பாத்திரத்தை வகிக்கவேண்டி வந்தது எமது தொழிற்துறை வளர்ச்சியினால் அல்ல. அதற்கு நேர் மாறுபட்ட நிலையால். றைசியாவின் பின்தங்கின நிலையால். றைசியத் தொழிலாளிவர்க்கத்திற்குத் தெளிவாகத் தெரியும் வெற்றிக்கு அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான நிபந்தனை என்னவெனில் உலகத் தொழிலாளர் அனைவரதும் ஐக்கியப்பட்ட செயற்பாடாகும். அல்லது முதலாளித்துவ வளர்ச்சியடைந்த பலநாட்டுத் தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட செயற்பாடாகும்." - லெனின், ஜுலை 23, 1923

"நாங்கள் ஒரு பெரிய உண்மைக்கு முன்னால் கண்களை மூடக்கூடாது. நாங்கள் தனியாக மாத்திரமே எங்களது சொந்த சக்தியால் ஒரு தனிநாட்டிலே சோஷலிசத்தைச் சாதிக்க முடியாது. றைசியாவிலும் பார்க்க வளர்ச்சியடைந்த நாட்டிலுங்கூட அது முடியாது." - லெனின், மே 26, 1918

"பூரணமான சோஷலிசத்தை ஒரு நாட்டிற் சாதிக்கலாம் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. அதைச் சாதிப்பதற்குப் பல வளர்ச்சியடைந்த நாடுகளின் பாரிய பங்களிப்புத் தேவை. இந்த நாடுகளில் ஒன்றாக றைசியாவைச் சேர்த்துக் கொள்ள முடியாது." - லெனின், நொவெம்பர் 8, 1918

இங்கே லெனின் றைசியாவின் சொந்த சோஷலிசத்தை நிராகரித்ததோடு நின்றுவிடவில்லை. சோஷலிசத்தைக் கட்டி வளர்க்கும் பணியில் மற்ற வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிடுமிடத்து இரண்டாந்தரப் பாத்திரமே வகிக்கும் என்கிறார்.

"பாட்டாளிவர்க்கத்திற்கும் விவசாயிகளுக்குமிடையே ஒரு விஷேட உறவு நிலவியதால் எங்களுக்கு முதலில் முதலாளித்துவத்தை நொருக்கிய நடைமுறை அநுபவம் மாத்திரம் உண்டு. அதனிலும் பார்க்க நாங்கள் பெரிதாக ஒன்றையும் செய்ய வில்லை. நாங்கள் மாரித்தவக்கை போல் கத்துவதும் தம்பட் டமடிப்பதும் உலகுக்குச் சிரிப்பூட்டும் விடயமாகும். அப்படிச் செய்தால் நாம் பெரிய தற்பெருமைக்காரராவோம்."- லெனின், மார்ச் 1919, கட்சிக் காங்கிரஸில் -

"கட்டாயம் சோஷலிசம் ஒரு தனி நாட்டிலே சாதிக்கக்கூடிய ஒன்றல்ல. ஒரு தனி நாட்டிலே வேறொன்றைச் செய்யலாம். ஓர் உயிர்த்துடிப்பான உதாரணமாக வேலை செய்யலாம். மற்றைய நாட்டிலுள்ள தொழிலாளர்களைத் தூண்டிவிடும் நெருப்பாக அமையலாம். "- லெனின், ஜனவரி 1918, சோவியத்துகளின் மூன்றாவது காங்கிரஸில்-

இப்படியே பாட்டாளிவர்க்க சர்வதேசியவாதத்தை அடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஸ்னி உணவகம்

# RESTAURANT DISHNY

தரம் சுவை மிக்க இந்திய இலங்கை உணவகம்,

- பிறைட் றைஸ்
- பிறைட் நூடில்ஸ்
- சாம்பார் வடை
- தயிர் வடை
- டிஸ்னி சர்பத்
- டிஸ்னி புருட் சலாட்
- டிஸ்னி பீடா

உங்கள் வீட்டு வைபவங்களுக்கு வேண்டிய
பலகாரங்கள், உணவு வகைகள் அனைத்தும்
சுடச் சுட விநியோகம் செய்யப்படும்.

**25, RUE CAIL**
**75010 PARIS**

**TEL : 01 42 05 44 04**

**M° : LA CHAPELLE ou GARE DU NORD**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கூறும் மேற்கோள்களை நூறு இருநூறென்று அடுக்கிக்கொண்டே போகலாம். லெனினிசத்தின் உள்ளும் புறமும் சர்வதேசியவாதமும் உலகப்புரட்சியும் தான். இப்படி லெனின் ஒவ்வொரு மத்திய கமிட்டிக் கூட்டங்களிலும் காங்கிரஸ்களிலும் பிளீனங்களிலும் மீண்டும் அறைந்து சொல்லும்பொழுது ஸ்டாலினாலும் ஸ்டாலினிசவாதிகளாலும் ஏன் லெனினுக்கு ஒரு சின்ன மறுப்பையும் தெரிவிக்க முடியாமற் போனது. ஏன் 1915ல் உதிரியாகச் சொன்ன ஒரு கூற்றில் அவர்கள் தூங்கவேண்டும். இப்படித் தொன் கணக்கில் உலகப்புரட்சிக்குச் சாதகமான கூற்றுக்களை லெனின் உட்பட்ட நூறல்ல ஆயிரக்கணக்கான போல்சுவிக்குகள் மீண்டும் மீண்டும் செப்பிய பொழுதும் ஸ்டாலினுக்கும் ஸ்டாலினிசவாதிகளுக்கும் விளங்காமற் போனது. அவர்களுக்கு மூளையோ, அதை விளங்குமளவிற்கு லாயக்கற்ற நிலையோ அல்ல. வர்க்கக் குணாம்சம். தாங்கள் பிரநிதித்துவப்படுத்தும் வர்க்கநலனுக்குச் சாதகமான கூற்றுக்கள் இலகுவில் மனதிற் பதிவதும் நீண்ட நாட்கள் மனத் திரையிலிருந்து அகலாதும் இருக்கும்.

லெனின் காலத்தில் ஒரு நாட்டுச் சோஷலிசப் பிரச்சனையைக் கிளப்பியிருந்தால் அவர் அன்றே அதற்குக் கணக்குத் தீர்த்துப் போயிருப்பார்.

ஸ்டாலின் எப்போதுமே இரண்டு நிலைப்பாடுகளை உடையவர். யுத்தம் சம்பந்தமான நிலைப்பாடென்றால் என்ன, இடைக்கால அரசாங்கம் பற்றிய நிலைப்பாடென்றால் என்ன, தேசிய இனப்பிரச்சனை சம்பந்தமான நிலைப்பாடென்றால் என்ன, புரட்சி சம்பந்தமான நிலைப்பாடென்றால் என்ன எப்பொழுதுமே இரட்டை நிலைப்பாட்டை உடையவர்.

ஒன்று உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து சுயாதீனமாக அரைவாசியோ முழுவதுமாகவோ வெளிப்படும் நிலைப்பாடு. மற்றையது எந்தவிதக் கொள்கைப் பற்றுறுதியுமற்று சில நிலவரங்களின்போது லெனினோடு சேர்ந்து பிற்பாட்டுப் பாடுவது அல்லது லெனினிடம் கடன் வாங்கிய வசனங்களை சந்தர்ப்பத்திற்குத் தகுந்தமாதிரி அசைவெட்டுவது.

ஜனவரி 11, 1918 ஜேர்மனுடனான சமாதான ஒப்பந்தம் செய்வதைத் தீர்மானிப்பதற்காகக் கூடிய கூட்டத்தில் லெனினுக்குப் பக்கபலமாக தோழர் சேர்கேய்(Sergeiv) பின்வருமாறு கூறினார். "எல்லாப் பேச்சாளர்களும் ஒத்துக் கொள்கிறார்கள் மேற்கிலே புரட்சி வராவிடில் எங்களது புரட்சி அழிந்துவிடுமென்று." அப்பொழுது ஸ்டாலின் குறுக்கிட்டு, "மேற்கிலே புரட்சிகர இயக்கங்கள் கிடையாது. அதற்கான ஆதாரங்கள் இல்லை. அதற்கான வெறும் சாத்தியக்கூறுகள் தான் உண்டு. சாத்தியக்கூறுகளில் நாம் தங்கி நிற்க முடியாது."

[தனிநாட்டு சோஷலிசத்தைப் பிரேரிப்பதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னரே சர்வதேச இயக்கம் மேலான சந்தேகத்தை ஸ்டாலின் இந்த வார்த்தைகளினூடு வெளிப்படுத்தினார். இது ஸ்டாலினின் அடிமனத்தில் கதகதத்துக் கொண்டிருந்த உண்மையாகும்.]

அப்பொழுது லெனின் குறுக்கிட்டு, "சில பகுதிகளில் புரட்சிகர இயக்கங்கள் இருக்கின்றன. மேற்கிலே இன்னும் புரட்சி தொடங்கவில்லை என்பது உண்மைதான். இருந்த போதும் இதன் அடிப்படையில் எமது தந்திரோபாயத்தை நாம் மாற்றினோமானால் சர்வதேசப் புரட்சியைக் காட்டிக் கொடுத்த துரோகிகள் ஆவோம். எங்களுக்கு முக்கியம் என்னவென்றால் பொதுவான சோஷலிசப்புரட்சி வரும்வரை எமது ஆட்சியைப் பறிக்க விடாமற் பாதுகாக்க வேண்டும். இந்தச் சமாதான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டாற்தான் நாங்கள் இதைச் சாதிக்கலாம்."

இந்த ஒரு காரணத்திற்காக மாத்திரம்தான் லெனின் ஜேர்மன் முதலாளித்துவத்திடம் மண்டியிட்டார். அந்தக் காலத்திலும் கூட போல்சுவிக்கட்சி சர்வதேசப்புரட்சி பற்றிய நிலைப்பாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை.

இனி 1924 இலையுதிர்காலத்திற்கு முன்னர் சர்வதேசப்புரட்சி பற்றி ஸ்டாலின் என்ன கூறினார் என்று பார்ப்போம்.

"அந்தத் தருணம் வரும்பொழுது தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து வறிய விவசாயிகளோடு ஐக்கியப்பட்டு தொழிலாளர் புரட்சியின் பதாகையை உயர்த்திப்பிடித்து மேற்கு ஐரோப்பாவுக்கு சோஷலிசப்புரட்சிச் சகாப்தத்தைத் திறந்து வைப்பார்கள்." - ஸ்டாலின் 1917 ஜூலை போல்சவிக் கட்சியின் ஆறாவது காங்கிரஸில் -

"தொழிலாளர்களுக்கும் இராணுவத்தினருக்கும் சொல்கிறோம், மேற்கிலேயுள்ள தொழிலாளரோடு சேர்ந்து மேற்கு முதலாளித்துவத்தின் அத்திவாரத்தைக் குலுக்கினால் மாத்திரம்தான் றைசியாவின் புரட்சியைப்பற்றி எண்ணிப் பார்க்கலாம்" ஸ்டாலின் ஆகஸ்ட் 25, 1917-

ஏப்ரல் 1924 இலும் கூட, லெனின் மரணமாகி மூன்று மாதங்களின் பின்பு ஸ்டாலின் போல்சவிக் கட்சியின் சம்பிரதாய நிலைப்பாட்டைப் பவ்யமாகப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

"முதலாளித்துவத்தைத் தோற்கடித்து ஒரு நாட்டிலே பாட்டாளிவர்க்க ஆட்சியை ஏற்படுத்துவது சோஷலிசத்தின் பூரணவெற்றிக்கு உத்தரவாதமாகாது. சோஷலிசத்தின் முக்கிய பணியான சோஷலிச உற்பத்தியை அணிவகுப்பது இன்னும் எவ்வளவோ தூரம் தள்ளி நிற்கும். இந்தக் கடமையை நிறைவேற்ற முடியுமா? வளர்ச்சியடைந்த பல நாடுகளின் பாட்டாளிகளின் கூட்டுமுயற்சி இல்லாமல் ஒரு தனி நாட்டிலே சோஷலிசத்தின் கடைசி வெற்றியைச் சாதிக்க முடியுமா? இல்லை முடியவே முடியாது. ஒரு நாட்டின் முயற்சி அந்த நாட்டு முதலாளித்துவத்தைத் தூக்கியெறிய மட்டும் போதும். இதைத்தான் எங்களது புரட்சியின் வரலாறு சொல்கிறது. சோஷலிசத்தின் கடைசி வெற்றிக்கு, சோஷலிச உற்பத்திமுறையை அணிவகுப்பதற்கு ஒரு தனி நாட்டின் முயற்சியானது, விஷேடமாக றைசியா போன்ற விவசாய நாட்டில் போதுமானதல்ல. இதைச் சாதிப்பதற்கு பல வளர்ச்சியடைந்த நாட்டுப் பாட்டாளிகளது முயற்சி அவசியமாகும். இப்படித்தான் பாட்டாளிவர்க்கப் புரட்சியை லெனினிச தத்துவம் குணாம்சப்படுத்துகிறது."- ஸ்டாலின், லெனினிசத்தின் அடிப்படைகள்

ஸ்டாலினது இந்த எழுத்துகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை. இருந்த போதும் இந்தப் புத்தகத்தின் முதலாவது பதிப்புங்கூட இலையுதிர்காலத்தில் ஒரு நாட்டில் சோஷலிசக் கொள்கைக்கு குந்தகம் விளைவித்து விடுமென்று விநியோகங்கள் திருப்பி வாங்கப்பட்டுத் திருப்பிப் பதிக்கப்பட்டது.

தனிநாட்டு சோஷலிசக் கொள்கை ஸ்டாலினது சொந்தக் கண்டுபிடிப்பல்ல. கூடிய சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருந்த ஒட்டுண்ணி அதிகாரிகளின் பொதுமைப்படுத்தப்பட்ட பிரதிபலிப்பு அது.

ஐரோப்பிய பாட்டாளிவர்க்கத்தின் அடுத்தடுத்த தோல்விகளும் சோவியத் யூனியனின் கணிசமான பொருளாதார வளர்ச்சியுமே ஸ்டாலினை ஒரு நாட்டுச் சோஷலிசத்திற்கு இட்டுச்சென்றது. அந்தத் தத்துவம் சோவியத் யூனியனின் பரந்த வேலை செய்யும் வெகுஜனங்களை பின்வருமாறு சிந்திக்கத் தூண்டியது :

புரட்சி பூரணம் அடைந்துவிட்டது. சமுதாய முரண்பாடுகள் தொடர்ந்து குறைந்து கொண்டே போகின்றன. குலாக்குகள் (பெரிய நிலச்சுவாந்தர்கள்) படிப்படியாகச் சோஷலிசத்திற்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியுலகத்தில் என்ன நடந்தாலென்ன உள்வளர்ச்சி திட்டமிட்டபடியே வளர்ச்சி அடைந்துகொண்டு போகிறது. அது எவ்வாறு சோவியத் பாட்டாளிகளை வழிநடாத்தியது. தொழிற்சாலைகளை அமைப்பதில் அவசரப்படக்கூடாது. குலாக்குகளோடு பிரச்சனைக்குப் போகக்கூடாது. உலகப்புரட்சியைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. அதற்கும் மேலாக ஆட்சி செய்கின்ற கட்சியின் உச்சியிலிருக்கின்ற அதிகாரிகளின்மேல் விமர்சனம் வரக்கூடாது. இந்த எல்லா விஷவித்துக்களும் விருட்சமாகி பாசாணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்களைப் பழுத்து மூலதன இராட்சச வௌவால்களை வாவென்று வருந்தி அழைத்தன. தீதும் நன்றும் பிறர்தர வாரா. சோவியத் யூனியன் ஒரு நாட்டு சோஷலிசக் கொள்கையால் காட்டிக்கொடுக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது. அதற்கும் மேலாக ஸ்டாலின் தனது யுத்தகால நேசர்களுக்கு, தனது சமாதான சகவாழ்வால் பாதகம் வராதென்பதை உத்தரவாதம் செய்வதற்காக லெனினாலும் போல்சுவிக் கட்சியாலும் மற்றைய உலக கம்யூனிஸ்டுகளின் எண்ணமுடியாத எடுத்தியம்ப முடியாத தியாகத்தாலும் அரும் பாடுபட்டுக் கட்டி, முதலாளித்துவ மூலதனக் கர்ப்பத்தைக் கலக்கிக் கொண்டிருந்த மூன்றாம் அகிலத்தை 1943ம் ஆண்டு உத்தியோகபூர்வமாகக் கலைத்துவிட்டார். சீனக்கம்யூனிஸ்ட் கட்சி அதில் அங்கம் வகிக்கமுடியாத துரதிஷ்டத்தாலும் அதற்கு சர்வதேச முன்னோக்கு இல்லாததாலும் மூன்றாம் அகிலத்தை ஸ்டாலினின் கலைப்பிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. ஆதலால் நான்காம் அகிலத்திற்கு வெளியில் கம்யூனிசமோ, கம்யூனிஸ்டுகளோ இல்லையென்பதை மார்க்சியம் விளங்கியவர்கள் புரிந்து கொள்வது கஷ்டமல்ல.

முடிவில் சோவியத் யூனியன் தோற்கடிக்கப்பட்டதன்பின் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லையா? ஒவ்வொரு தோல்வியின் பின்பும் லெனின் சொல்லித் தந்த பாடம் இதுதான். இதை போல்சுவிக் புரட்சி நிறைவேறி ஐந்தாவது வருட முடிவில் போல்சுவிக்குகளது தந்திரோபாயம் பற்றி விஸ்தரிக்கும்பொழுது கூறிப் போயினார்.

"நாங்கள் தொடங்கிய நேரமே உலகப்புரட்சியைத்தான் தொடங்கினோம். நாம் அதைத் தொடங்கியபோது இது இப்படித்தான் போகும் என்ற நம்பிக்கையோடு தொடங்கவில்லை. ஒரு தொகைப் புறநிலைக் காரணிகள் புரட்சியைத் தொடங்கும்படி எம்மை நிர்ப்பந்தித்தன. அப்பொழுது எங்களது சிந்தனை இப்படித்தான் இருந்தது: சர்வதேசப்புரட்சி வந்து எங்களுக்குக் கைகொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் எங்களது வெற்றி பூரண வெற்றியாகி விடும். அன்றேல் நாம் எமது புரட்சிகரத் தார்மீகக் கடமையைச் செய்தவராவோம். நாங்கள் தோல்வி கண்டாலும் எமது புரட்சிகரக் கடமையைச் செய்தவராவோம் என்ற உணர்மையோடே செயற்பட்டோம். எங்களது பரிசோதனை இனிமேல் வரும் புரட்சிகளுக்குப் பேருதவியாக விளங்கும். எங்களுக்குத் தெளிவாகவே தெரிந்திருந்தது சர்வதேசப்புரட்சியின் ஒத்துழைப்பின்றி பாட்டாளிவர்க்கத்தின் வெற்றியென்பது முடியாத காரியமாகும். புரட்சிக்கு முன்பும், புரட்சிக்குப் பின்பும் எங்களது சிந்தனை இப்படித்தான் இருந்தது. உடனடியாகவோ காலதாமதமின்றியோ முதலாளித்துவ வளர்ச்சியடைந்த நாடுகளில் புரட்சி தொடங்கும். அதற்கு எதிர்மாறாக விடயங்கள் நடந்தால் நாங்கள் அழிந்துபடுவோம். இந்த உணர்மையோடு சோவியத் அரசாங்கத்தைப் பாதுகாக்க, எந்தத் துர்லபமான சூழ்நிலையிலும் என்ன விலை கொடுத்தும் செய்யவேண்டிய அத்தனையையும் செய்தோம். ஏனெனில் எங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது, நாங்கள் செய்யும் கைங்கரியம் எங்களுக்காக மாத்திரமல்ல, முழுச் சர்வதேசப் புரட்சிக்காக. இது எங்களுக்கு மயக்கமின்றித் தெரியும். இந்த மனஇணக்கத்தை அக்டோபர் புரட்சிக்கு முன் அடிக்கடி பிரகடனப்படுத்தினோம். அக்டோபர் புரட்சி நிறைவேறினதுதான் தாமதம் இதையே கூறினோம். Brest Litorsk (ஜேர்மனுடனான) சமாதான உடன்பாட்டின்போதும் இதையே கூறினோம். பொதுவாகக் கூறுமிடத்து இவையெல்லாம் சரியானவை."

வெற்றி கிட்டுவது உத்தரவாதமானால் மாத்திரம் போராடத்தொடங்கும் சோஷலிஸ்டுகளை சர்வதேசப் புரட்சியின் செருப்பு நக்கிகளென்றும், முதலாளித்துவ நற்குணம் பேணுகின்ற வால்பிடிகள் என்றும் திட்டித் தீர்ப்பார் லெனின். மேலும் லெனின் :

"தோல்வி ஓர் ஆபத்தான காரணியல்ல. தோல்வியை ஒப்புக் கொள்ளப் பயப்படுவதும், அந்தத் தோல்வியிலிருந்து முடிவுகள் எடுக்கப் பயப்படுவதும் பெரிய ஆபத்தான விடயங்கள். நாங்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ளப் பயப்படக்கூடாது. நாங்கள் தோல்வியின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தோல்வியை ஒத்துக்கொள்வதன் மூலம் மனச்சோர்வை ஏற்படுத்தி, சரணாகதியைப்போல போராட்டத்தின் சக்தியைக் குறைக்கின்றோம் என்று எண்ணுபவர்களை ஒரு கவ்வைக்கும் உதவாத புரட்சியாளர்கள் என்றுதான் சொல்வோம். கடந்தகாலத்தில் எங்களுக்குப் பலமாக இருந்ததுவும் எதிர்காலத்தில் எங்களுக்குப் பலமாகப் போவதுவும் எதுவென்றால் பெரிய தோல்விகளை எந்தவித சலனமுமின்றிக் கருத்தில் எடுத்து அந்த அனுபவங்களிலிருந்து எங்களது எதிர்கால நடவடிக்கைகளை எப்படி மாற்றியமைத்துச் செயற்படுவதுதான். இதனாற்தான் கபடமின்றி வெளிப்படையாகப் பேசுவது அத்தியாவசியமாகிறது. இது தத்துவார்த்தத் தெளிவுக்கு மாத்திரம் முக்கியமானதல்ல. நடைமுறைக்கும் அவசியமானதாகும். நேற்றைய பிழையின் கசப்பான அனுபவங்கள் எங்களின் கண்களைத் திறக்கவில்லையானால், எங்கே எங்களது கடந்தகால நடைமுறையிற் தவறென்று காட்டவில்லையானால், இன்றைய புதுப் பிரச்சனைகளைத் தீர்க்க நாங்கள் கற்றுக்கொள்ளமாட்டோம்."- லெனின் நூற்தொகுதி 18, பக்கம் 396

*நேற்று உதிர்ந்த மலர்*
*அரியமலர் ஆனாலும்*
*அத்தனையும் மறந்துவிட்டு*
*நாளை நமக்காக*
*நன்றாக மலரவுள்ள*
*பூவுலகப் புரட்சியிலே*
*புதுப்பணியைச் சொரிவதிலே*
*பூரிப்பைக் காணிடுவோம்*
*புன்மைகளை ஓட்டிடுவோம்.*

"நாம் இப்பொழுது யுத்தகாலத்திலிருந்து சமாதான காலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். யுத்தம் திரும்பவும் வரும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எவ்வளவு நாட்களிற்குச் சோஷலிசமும் முதலாளித்துவமும் அக்கமும் பக்கமுமாக வாழ்கிறதோ, அதுவரைக்கும் நாம் சமாதானமாக வாழமுடியாது. தூரநோக்கில் ஏதாவது ஒன்று வெற்றிவாகை சூடும். எப்போதாவது சோவியத் குடியரசுக்கு அல்லது உலக முதலாளித்துவத்திற்கு மரணச்சடங்கு நடைபெறும். இது யுத்தத்திலே பட்டகடன் கொடாமைப் பிரகடனமாகும்."

–லெனின், ஏப்ரல் 1918, மத்தியகுழுக் கூட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் ஒரு சேதி

## மணிமாறன்

கொலை! கொலை!! கொலை !!!

செய்தி காட்டுத்தீயாய் ஊரெல்லாம் பரவியது. ஆளுக்கு ஆள் ஒவ்வொரு ஊகம் வந்தது யார், போனது யார் யாருக்குமே தெரியவில்லை.

"தடயமில்லையாம்."

"மனிசி பிள்ளையள் வெளியால போன நேரம் பார்த்து செய்து இருக்கி றாங்கள்."

ஆளுக்கு ஆள் ரெலிபோன் அடிக்கும் போது இதுபற்றிக் கதைத்தார்கள். சிலர் ரெலிபோன் அடித்து மற்றவர்களிற்கு விஷயம் சொன்னார்கள்.

"அப்படியா எங்களுக்குத் தெரியாதே" என்று எதிர் குரல் விழித்தபோதும்

"என்னவாயிருக்கும் பிரச்சனை?" சொன்னவரிடமே திருப்பிக் கேட்டார்கள்

"கொள்ளையோ?"

"சீ! அப்படியில்லை" என்று சொல்லுகினம்

"போய்ப் பார்த்தனீரே?"

"போய்ப்பார்த்தால் பிறகு எங்களையும் கேள்வி கேட்பாங்கள். ஏன் வம்பை? மலிஞ்சால் சந்தைக்கு வரும்தானே."

சனங்கள் விடுப்பும் வியாபாரமும் போல் தான் பிரச்சனையை அணுகினார்கள். எவருக்குமே தனது குடும்பமோ, உறவினனோ அல்லாதபோது பிரச்சனைகள் செய்திகளாகவும் புதினமாகவும் போய் விடும்.

"பொலிஸ் வந்திட்டுது இனி இந்தக் குட்டி நாட்டுக்கை பிடிக்காமல் விட்டுடு வாங்களே."

எங்கும் இதுபற்றி கேள்வியாய் பதிலாய் ஊகம் சொல்லுவதாய் எல்லார் வாயிலும் இதுதான் பேச்சு.

ஒரு கிழமைக்கு ஒருமாதத்துக்கு சனங்கள் இதைத்தான் கதைக்கும். கொலை செய்தவனைத் திட்டும்.

தனக்கும் நேருமோ என்று பயப்படும்.

காலம் போக மறந்து...உண்டு உறங்கும்.

முன்னால் ட்ராம் றோட். சவுக்காரப் பெட்டிகள் அடுக்கியதுபோல் கட்டிடங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவை. பல்லுக் கட்டியதுபோல் வரிசையாய் . . .

ஆங்காங்கே தங்கப்பல், பழுப்பு, வெள்ளை போல வீடுகளுக்கும் நிறம் தீட்டியும் தீட்டாமலும்.

பாதையை பாதி மறைத்துப் பொலிஸ் வான். அம்புலன்ஸ்.

பாலு செய்தி கேட்டு விபரம் அறிந்து வேலையை இடையே விட்டு ஓடி வந்தான்.

பொலிஸ், வேறு சில சுவிஸ்காரர், சில தமிழர்கள். பொலிஸில் ஒருவர் இருவரைத் தவிர மற்றவர்கள் சிவிலில் இருந்தார்கள்.

பாதுகாப்பு தடயங்கள் கருதி ஆட்களை உள்ளே விட மறுத்தனர்.

பத்திரிகைக்காரர், புலனாய்வுத் துறையினர் ஓடி ஓடி அங்கும் இங்கும் படம் எடுத்தனர்.

கதவு, வெளிக்கைபிடி, உள்க்கைபிடி என்று பவுடர் அடித்துப் பார்த்தனர்.

அறுபது வயது மதிக்கத்தக்க வழுக்கல் மண்டையுடைய ஒருவர் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். சிலர் ஏதோ கொண்டு வந்து காட்டி அவரிடம் அபிப்பிராயம் கேட்டனர்.

பாலுவுக்கு அவருடைய பார்வையும் நடையும் தொனியும் அவர்தான் தலையாடு என்பதைக் காட்டியது.

திரும்பி கோலில் இருந்த செவ்வந்தியைப் பார்த்தான். அழுது முகம் வீங்கி, தலை குலைந்து, சோர்ந்து போயிருந்தாள். எப்படி ஆறுதல் சொல்லுவது?

கணவனை இழந்தவளுக்கு உடனே ஆறுதல் சொல்லி தேற்றிவிடத்தான் முடியுமா?

பள்ளிநாள் முதல் இன்றுவரை அவள் பேச்சும் சிரிப்பும் ஒரே நாளில் காணாமல் போய்விட்டது கண்டு வருந்தினான்.

மற்ற ஒருவருக்கு சைகை காட்டிவிட்டு, தலையாடு கன்ஸ் செவ்வந்தியை நோக்கிப் போவதைப் பார்த்தான்.

தூரத்தில் இருந்த பாலுவுக்கு போய் உதவி செய்வமா? வேண்டாமா என்று சங்கடமாக இருந்தது. தான் போக, கன்ஸ் வேண்டாம் நானே பார்த்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டால் . . .

ஆறுதலாக தோள்தட்டி தேற்றுவதோடு, தனக்கு வேண்டிய கேள்விகளையும் கேட்பது செவ்வந்தியின் உதட்டசைவில் புரிந்தது. இருந்தால் போல் மயங்கி விழுந்தாள்.

கதிரையில் சாத்தி வளத்தி இரு பெண்கள் பராமரித்தனர். செவ்வந்திக்கு சுயநினைவு வர மீண்டும் வந்தார். கணவன் இறந்த கவலை செவ்வந்திக்கு. சூட்டோடு சூடாக விசாரித்துத் தடம் பிடிக்கவேண்டும் தவறினால் கொலையாளி அவகாசம் எடுத்துத் தப்பிவிடுவான் என்ற கவலை கன்ஸ் சுக்கு. நல்ல நண்பனை ஊர்த் தோழனை இழந்த கவலை பாலுவுக்கு.

வந்தவர்களைக்கூட "யார் நீ இறந்தவரை எப்படித் தெரியும்?. இந்தக் கொலைக்கு என்ன காரணம் இருக்கும்?"

கேள்வி கேட்டுத்துளைத்தார் கன்ஸ்.

இருபது வருட புலனாய்வுத்துறை அனுபவம் எல்லோரையும் எல்லாவற்றையும் சந்தேகத்தோடு பார்த்தது.

களவு, கற்பழிப்பு, பணத்திருட்டு எதுவுமே இல்லை. முதலில் காரணம் என்னவாக இருக்கும். அது தெரியவேண்டும். அந்த திசையில் தேடினால் தான் கொலையாளி பிடிபடுவான்.

திசையை அறியவே நிறைய நேரம் எடுத்தது கன்சுக்கு. கிறிமினல் கதைகளில் வருகிறமாதிரி, கைப்பை, கண்ணாடி, சிகரட் என்று எதுவுமே வந்தவர்கள் தவறவிட்டுச் செல்லவில்லை.

பாதி திறந்திருந்த கொலை நடந்த அறையை எட்டிப் பார்த்தார்.

ராக்கையில் பல புத்தகங்கள் வரிசையாய் அடுக்கியிருந்தது. தமிழ், டொச், ஆங்கிலம், சிங்களம் பல மொழிகளில் பல தரங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

பலகையில் சில குறிப்புக்கள், துண்டுப் பிரசுரங்கள் குத்தி வைக்கப் பட்டிருந்தது.

புத்தகங்களில் கண்ட படங்களும், விசாரணையில் கேட்ட சில விடயங்களும் ஒத்துப்போவது போல் பட்டது கன்சுக்கு.

கால்மாக்ஸ், லெனின், கொப்பசேவ் இருந்து கிளின்டன் வரையான தகவல்கள் உடைய புத்தகங்கள் கூட இருந்தன.

அம்புலன்ஸில் வந்தவர்கள் இன்று மதியம் வரை தாசன் என்று அழைக்கப் பட்டவரின் பிரேதம் ஏத்தினார்கள்.

அம்புலன்ஸ் மறைய சிறிது சனம் குறைந்தது. போலிசாரின் வான் போக, நின்ற தமிழர் தலைகளும் குறைந்தது. கன்சும் வேறு ஒருவரும் தவிர மற்றவர்களும் புறப்பட்டார்கள்.

பத்திரிகையாளன் வந்து கன்சிடம் நலம் விசாரித்தான். விசயம் கேட்டான். கன்ஸ் உசாரானார். என்னதான் விசயம் சொன்னாலும் பத்திரிகைக்காரன் சொல்லுவதை போடப்போவதில்லை வருகிற நியூஸ் தொழிலையே பாதித்ததை அறிவார்.

"ரிப்போட் வரட்டும் சொல்கிறேன்" ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் கழண்டு கொண்டார்.

பின்னால் சென்ற பத்திரிகைக் காரனுக் கும் மற்றவர்களுக்கும் கேட்கும் வண்ணம்.

"எனக்குச் சேதி சொல்வதல்ல தொழில். குற்றவாளியைக் கண்டுபிடிக்கவேண்டும். அதுவும் பட்டப்பகலில் கொலை."

"தடயங்கள் ஏதாவது?"

"ஒன்றுமே கிடைக்கவில்லை."

"என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள்?"

"ஒன்றுமேயில்லை அதுதான் இப்படி நிற்கிறன்."

கன்ஸ் எதுவுமே சொல்வதாக இல்லை என்பதை பத்திரிகைக்காரன் புரிந்து கொண்டான்.

"சரி போயிட்டு வருகிறேன் என்று புறப் பட்டாலும் பிறகு வந்து ஆறுதலாக விடயம் பிடுங்க அவனுக்குத் தெரியும்"

அங்கும் இங்குமாக நிற்பவர்களிடம் தெரியாதது போல் கேள்விகேட்டு, எல்லா வற்றையும் தொகுத்து சூடான தலைய ங்கத்தோடு வரும்.

கன்ஸ் சொல்வதை மட்டும் எழுதினால் பேப்பர் ஒன்று கூட விலைப்படாது என்பதும் எடிட்டர் என்னையா நியூஸ் இது என்று கேட்பார் என்பதும் பத்திரிகைக்காரனு க்குத் தெரியாததல்ல.

மக்களுக்கு வேண்டியது சூடான நியூஸ், கொலையாளிபற்றி எழுத வாசிப் பவர் மூக்கில் விரல் வைக்க வேணும்.

யார் செத்து யார் போனாலும் தலை யங்கம் பார்ப்பவன் பேப்பர் வேண்டோணும். தலையங்கத்திற்கும் உள்ளீட்டுக்கும் தொடர்பே தேவையில்லை.

உண்மை எதுவாக இருந்தாலும் மக்கள் எதிர்பார்ப்பதுபோல, அப்படித்தான் நடந்திருக்கவேணும் என்ற ஊகிக்கிற வழியிலையே செய்தி.

அப்பத்தான் சனம் நான் அப்பவே நினை ச்சனான் அது மாதிரித்தான் நடந்திருக்கு என்றும் ரிப்போட்டர் கெட்டிக்காரன் நியூஸ் பிடிச்சிட்டான் பாரும் என்றும் கதைத்தால் தான் வழமையிலும்விட சில பிரதிபோகும்.

நினைத்தபடி போன ரிப்போட்டருக்கு நெஞ்சில் ஒரு பொறி தட்டியது. அட இதில தானே முன்பு ஒரு தமிழனை தூள் விற்றதற்கு அள்ளினாங்கள். மறந்து போய் விட்டனே என்று ஞாபகமூட்டிக் கொண் டான்.

போய் வெளியே நின்று கைதொலை பேசியில் தூள் வியாபாரத் தகராறா என்று கேட்டான்.

"உன்னுடைய புத்தி உன்னை விட்டுப் போகாதே? நான் அந்த வழியிலையும் பாத்தனான் அதில்லை."

"அப்ப என்னெண்டு தெரியும் சொல்ல விரும்பேல்ல அப்படித்தானே."

"ஓம்" என்பதோடு தொலைபேசி துண்டிக்கப்பட்டது.

ஆட்கள் நகர நகர இன்னும் ஒரு சிலரும் பாலுவும்தான் எஞ்சி இருந்தனர். அவர்க ளுக்குள்ளும் முணுமுணுப்பு இருந்தது.

"இங்க ஒருவரும் நேரடியா எதிரியில் லையே தாசனுக்கு"

"அப்ப யார் செய்திருப்பாங்கள்?"

"பாவம் இரண்டு குழந்தையும் என்ன கஸ்டப்படப் போகுதுகளோ?"

"கனடாவில தமயன் இருக்கிறாராம் அங்க போனா ஏதாவது உதவி செய்வினம் தானே"

"அதுதானே இங்க இருந்து தனிய பிள்ளையளோட என்ன செய்ய ஏலும் கிராங் கன் காசு கட்டியே மனிசன் செத்துப் போவான், இனி வாடகை, சாப்பாட்டுச் செலவு?"

ஆளுக்காள் இழந்த இழப்புப் பற்றி யில்லாமல், இனி எப்படி ரொயிலட் பேப்பர் வாங்குவாள் என்பது போல கதைத் தார்கள்.

ஆம்பிளைத் துணை இல்லாட்டி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி இனிக் கதைப்பினம்.

கதையின் போக்கு மாறி வருவதையும் இப் பேச்சு எங்கே முடியும் என்பதையும் உணர்ந்த சிலர் மௌனமாக இருக்க, வாலறுந்த பட்டம் போல் சம்பாசணைகள் இடையில் நின்றது.

கன்ஸ் வந்து பக்கத்தில் நின்று டொச் சில் சிரித்தார்.

"என்ன விடயம் என்று புரிவதே கஸ்ட மாக இருக்கிறது. உங்களுக்கு ஏதும் தெரியுமா?"

பதிலைத்தேடி ஒவ்வொரு முகத்தையும் பார்த்தார்.

"அரசியல் கருத்து முரண்பாடு என்று தான் நாம் நினைக்கிறோம்" ஒட்டு மொத் தமாக எல்லோரும் சொன்னார்கள்.

"அதற்குக் கொலையா?" ஏதோ விக்கித் தக்கிக் கேட்டார்.

எங்கடை நாட்டில் உள்ளவர்களின் மனோநிலை வேறு இங்கு வேறு என்று யாருமே சொல்ல முன்வரவில்லை.

முகங் கொடுக்க முடியாத பிர்ச்சி னைக்கு எங்கள் நாட்டில் தீர்வு கொலை தான் என்று பாலு சொல்ல நினைத்தான். அவன் சொல்ல முயலவில்லை

"நீ எங்களை கேட்கிறாய், நாங்கள் யாரைக் கேட்பது?"

எமக்கு எம் உயிரின் பெறுமதி தெரியும் ஆகவே கேட்கப்போவதில்லை, எனக்குள் நானே கேட்டு பதிலும் சொல்லி இருந்து விடப்போகிறேன் அதுதான் நல்லது.

ஏனென்றால் உயிருக்கு ஒரு பெறுமதி இருக்கு என்று எனக்குத் தெரியும் கொலை செய்தவனுக்குத் தெரியேல்லை அவன் சில ஆயிரம் ரூபாவோ, மார்க்கோ, டொலரோ வாய்கியிருப்பான். அல்லது உண்மை புரியாமல் நாட்டுக்கு, விடுதலைக்கு என்று ஏதோ காரணம் கேட்டு முடிச்சுட்டான்.

நான் எதுவுமே உனக்குச் சொல்லப் போவதில்லை. நான் என்ன யாருமே உனக்கு யார் காரணமென்று சொல்லப் போவதில்லை. சும்மா நின்று நேரத்தை வீணாக்குவதுதான் மிச்சமென்று கூற நினைத்தானே ஒழிய யார் வாயிலிருந்தும் வார்த்தைகள் வெளியே வரவில்லை.

அரசியல் காரணம்தான் என்பதை கன்ஸ் ஊகித்துக் கொணடாலும் சுடப்பட்டு மரணம் என்று இறுதியில் ரிப்போட் கிடைத்தது.

தீர்மானமாக கொலையாளி வேலை செய்திருக்கிறான். ஆள் தப்பக்கூடாது என்பதில் கவனம் அதிகம் இருந்தி ருக்கிறது,

நெஞ்சுச்சூடு.

நினைவுபோய் மூளை சிதற தலையில் சூடு.

இவனை யாரோ தெரிந்தவன் அல்லது அண்மையில் உள்ளவன் யாராயிருக் கலாம்?

மறுநாள் கண்ணாடி என்னும் பத்திரி கையில் தலையங்கம் வந்தது.

"முன்பு தூள்விற்ற இடத்தில் தமிழன் கொலை."

5 வருடங்களுக்கு முன்னால், அதில் தூள் விற்பவர் அகப்பட்டனர். அதற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை யென்றோ அது தொடர்பான கொலை யென்றோ அந்தப் பத்திரிகையின் எந்தப் பந்தியிலும் ஒரு வாக்கியம் இருக்கவில்லை.

கடைகளில் தொங்கிய A4 விளம்ப ரங்களில் "தூள் விற்ற இடத்தில் தமிழர் கொலை" , என்பதுபோல் இருக்க சுவிஸ் இனவாதிகள் முறையாக மாட்டுப்பட்டனர் தமிழர் என நினைத்து விபரம் அறிய பேப்பர் வாங்கி ஏமாந்து போயினர்.

அப்பத்திரிகை வாசகங்கள் எதையுமே தமிழர்கள் பெரிதுபடுத்தவில்லை. தமிழ்ப் பத்திரிகைகள்கூட கண்ணை மூடின.

வெளியூர்வாசிகள், அதைவிட ஜெர்மன், லண்டன், பிரான்ஸ் என்று உறவினர்கள் நண்பர்கள் விசாரிப்பு என்ற TP எடுப்பதும் பதில் சொல்லுவதிலுமே பலர் மாய்ந்து போனார்கள்.

துக்கம் விசாரித்தவர்கள் தர்மசங்கடத் துக்குள்ளானார்கள்.

கேட்கவும் முடியாமல்...சொல்லவும் முடி யாமல்...

கொஞ்சம் கொஞ்சமாக உண்மையைக் கதைத்தார்கள் நான் சொல்லவில்லை அவன் சொன்னான் என்று உண்மையைத் தாங்களே சொல்லிக் கொண்டார்கள்.

பேப்பரைப் பார்த்தவன் "தேடுதலில் பொலிஸ் தீவிரமாம்" ஏளனமாய் சொன் னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள், நிறுவனங்கள், நண்பர்கள் என்று பத்துக்கு மேற்பட்ட அஞ்சலிப் பிரசுரங்கள்

பிறந்து, வளர்ந்து, கலாசாலை வரை அவனது வாழ்க்கை அவனது குணம், இயக்கத்தொடர்பு, கைது என்று வரிசையாய் பல செய்திகள்.

சில, எச்சரித்தன. சில, கொலையாளிகள் கொலைக்குக் காரணம் சொல்ல வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தன.

பாலு மலைத்துப்போனான். இவ்வளவும் இருக்குமா?

இவ்வளவும் உண்மையானால் இவன் ஒரு சுதந்திர விரும்பிதான்.

உயிருடன் இருக்கும்போது இவ்வளவும் தெரியவில்லையே

நேரில்பார்த்தால்... அளவோடு பேசி கேட்டு அமைதியாய் இருந்தவன் புயலா, பூகம்பமா?

இவனைக் கொன்றதால் உண்மை மறைந்திடுமா?

இப்போது இன்னும் தெளிவாய் எல்லோர் வாயிலும் இந்தப் படுகொலை பற்றிய கேள்வி இருந்தது

வெளியே கேட்காவிட்டாலும் ஒவ்வொருவரும் உள்ளூரக் கேட்டு என்ன செய்யப் போகிறார்கள்.?

இதற்காக இதற்கு எதிராய் ஒரு துரும்பாவது நகர்த்த முடியுமா?

என்ன இருந்தாலும் இவனிடம் ஒரு உண்மை இருந்திருக்கவேண்டும்

அது யாரை ஏன் உறுத்தியது?

இவனது இருப்பே ஆபத்தென்றால் இவன் இருந்தால் காலாகாலத்துக்கு நெருப்பாய் அவ்வப்போது எரித்திருப்பானோ?

எப்படியோ ஒரு உண்மையோடு ஒரு உயிரையும் நாங்கள் இழந்துவிட்டோம்.

இரண்டும் மீண்டும் வேறுவழியில் வரும். அது எப்போது யார் உருவில் எனி வரும் அல்லது யார் உருவில் இன்னுமொரு முறை போகும், என்பதுதான் இன்றைய காலக் கேள்வி.

பொலிசார் தீவிர தேடுதல் என்றும், சூத்திரதாரி ஒத்துக் கொள்ள வேணுமென்றும், கதைகளில் வேடிக்கை தெரிந்தது பாலுவுக்கு.

நண்பர்கள் சேர்ந்து, மௌனம் போய் பேசிக் கதைத்தார்கள். பாணோ பிஸ் கட்டோ உண்டு தேநீர் அருந்தினார்கள். நாளைய வேலை பற்றி இனிஎன்ன செய்வது என்பது பற்றி . . .

"இந்தப் பெரிய கொலைக்கே உரிமை கோரேல்லை. இதைப்போய் செய்வாங்களெண்டோ?"

"பாலு நீ என்ன ராஜீவ்உடைய கொலையைச் சொல்லுறீரே?"

"இல்லை"

"அப்ப பிரேமதாசா?"

"உங்களுக்கு அப்படியொரு அபிப்பிராயம் இருந்தா அதைச் சொல்லுங்கோ அதை விட்டுட்டு என்னை ஏன் இழுக்கிறீர், நான் சொல்லுறதாய்"

"அப்ப என்ன குத்தல் கதை. செய்ததையே ஒத்துக்கொள்ள இல்லை என்றால் வேறு என்னத்தைச் சொன்னனீர்?"

"நான் சொன்னது கென்னடி, மர்லின் போன்ற பெரிய கொலைகளிண்ட மர்மத்தை வச்சுத்தான்" பக்கத்தில் நின்ற ஒருவன்.

"நானும் அதைத்தான் நினைச்சுச் சொல்லுகிறாயென்று நினைச்சனான்" என கூட்டம் கொல் என்று சிரித்தது

கவலையே உருவாய் சற்று விலத்தி தோழி ஒருவளுடன் கதைத்துக் கொண்டிருந்த செவ்வந்தி கதையும் சிரிப்பும் கேட்டுத் திரும்பினாள்.

சிரிப்பு திடீரென நின்றது.

செவ்வந்தி சிரிக்க எல்லோரும் சேர்ந்து சிரித்தனர்.

முதல்முறையாக எல்லோர் முகத்திலும் ஒரு களை பிறந்தது. எனினும் யாரும் அது பற்றி தொடர்ந்து அபிப்பிராயப்படவில்லை.

செவ்வந்தி மூன்று வயதுக் குழந்தைக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்க, நாலரை வயதுடைய சீனு வந்து பெட்டி நகர்த்தி ஜன்னல் ஓரம் நின்ற வண்ணம், போய்வருகிற கார் எண்ணிக் கொண்டிருந்தான்.

அப்பா எங்கோ போய்விட்டார் வருவார் என நம்பினான்.

இரவு நேரங்களில், காலையில் அப்பா எங்கேயென்று கேட்டான்

செவ்வந்தி மறந்திருக்க சீனு ஞாபக மூட்டினான்.

செவ்வந்தியின் கண்களில் இருந்த கண்ணீர் திரண்டது.

"ஏனம்மா அழுகிறீங்கள்?"

"நான் அழேல்லையே"

"அப்ப தண்ணீர் வருகுது?" கண்ணீரை தண்ணீரென்றான்.

"பொய் சொல்லுறியள். அப்பா பேசினவரா?"

"அப்பா இல்லையே. பிறகு என்னெண்டு பேசுவார்?"

"எப்ப வருவார்"

"அவர் வரவே மாட்டார். கடவுளிட்டை போயிட்டார்"

"கடவுளே இவனுக்கு எப்போது நான் புரிய வைக்கப்போகிறேன்?"

அவர் இனி வரமாட்டார் என்று எத்தனை முறை சொல்லியிருப்பேன்? ஏன் திரும்பவும் திரும்பவும் கேட்கிறான்.

"இறத்தல் தெரியாதோ?"

"அப்பா கடவுளிட்டை போயிட்டார். இனி வரமாட்டார்"

"நாளைக்கு?"

நாலு அரை வயதுக் குழந்தைக்கு பதில் சொல்ல முடியாமல் நெஞ்சு கனத்தது.

எழுதுகிறேன் வாசிக்கிறேன் என்று காலம் கழித்தவனின் வாழ்வை ஆண்டவன் ஏன் அற்ப ஆயுளில் எழுதினான்? கேள்வியும் பதிலுமாய் மனது திண்டாடியது.

இது ஆண்டவனுடைய தீர்ப்பா.? மனிதனுடைய தீர்ப்பா.? ஆண்டவனுடைய தென்றால் ஏன் துவக்கோடு வந்தான்? நோய், நொடி, விபத்து என்று ஏதுமில்லாமல் கதிரையில் இருந்தவன், நாம் வெளியே போனபின் என்ன செய்து கொண்டிருந்தான். எழுதுகிறேன் பேர்வழி என்று முகட்டைப் பார்த்து யோசித்தானா, புத்தகம் எடுத்து வாசித்தானா?

நாம் வர என்ன சொல்ல இருந்தான்?

எங்கே போக இருந்தோம்? நினைவை தேடினாள்.

நெற்றியில் நெஞ்சின் மூலையில் குண்டு துளைக்கும்போது, துவக்கை எதிரே காணும்போது, என்ன நினைத்திருப்பான்?

"ஐயோ எனக்கு மனைவி பிள்ளைகள் இருக்கிறார்கள். என்னை விட்டுவிடு" காலில் விழுந்து வணங்கியிருப்பானோ?

"என்னை ஒன்றும் செய்யாதே என்ன வேண்டுமானாலும் எடுத்துப் போ" என்று கதறிக் கால் பிடித்துக் கெஞ்சி மன்றாடியிருப்பானோ?

வந்தவன் என்ன சொல்லியிருப்பான் என்ன கேட்டிருப்பான் அல்லது ஒன்றுமே கேட்காமல் கதைக்காமல் உள்ளே வந்து நெஞ்சில் துவக்கு வைத்து

1,2,3 எண்ணி . . .

"அம்மா" செவ்வந்தி கத்தினாள். சத்தம் வெளியே வரவில்லை தொண்டை கட்டியது. கண்கலங்க எழுந்து போய்கழுவி கண்ணாடி பார்த்தாள்.

முகம் கலைந்து களையிழந்து ... பிள்ளைகளுக்காய் - வாழ்வு

திரும்பி வந்து கதிரையில் அமர்ந்தாள்

பூக்கன்றுகள் கூட வாடி வதங்கி . . .

அவன் நட்டு இருநாளுக்கு ஒருமுறை தண்ணீர் ஊற்றி.

அவன் இல்லை என்ற வாட்டமோ? உணர்வு இருக்குமோ?

அதுதான் அவை இல்லாதது கண்டு இலை வாடி பூச்சோர்ந்து துக்கம் தெரிவிக்கிறதோ?

இவற்றுக்குத் தெரிந்திருக்கும் வந்தவன் என்ன கேட்டான்? தாசன் என்ன சொன்னார்?

உயிர் பிச்சை கேட்டாரா?

விட்டுவிடு எல்லாம் தருகிறேன் என்று அழுதாரா?

உங்களுக்குத் தெரியும் சொல்லுங்களேன்.

நீங்களும் அவற்றை நெஞ்சோடு சுமந்து மௌனமாய் இருந்து இறந்து போகப் போகிறீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனு முன் அறையின் ஜன்னல் திறந்து கை நீட்டி போகிற கார் எண்ணிக் கொண்டிருந்தான்.

இடது பக்கம் காரைக் கண்டதிலிருந்து வலது பக்கமாய் மறையும் வரை தலை திருப்பி "ஒன்று, மூன்று, எட்டு" பிழை பிழையாய் எண்ணினான். வெளிக் காற்று சீனுவை தாண்டி இலை, கொடிகளில் உரசின.

நாணப்பட்டனவா, பயப்பட்டனவா இலைகள் அசைந்தன.காற்றோடு கலந்து குலாவின என்ன கதைத்தார்கள் சொல்லுங்களேன்.

செவ்வந்தி மனத்தால் இலை கொடிகளுடன் உரையாடினாள்.

இலைகள் கொடியோடு ஆடி ஆடி சொல்லமாட்டோம் என்கின்றனவோ?

அந்தக் கொடுமையை நீயேன் அறிய விரும்புகிறாய் என்று மறுக்கின்றனவோ?

கண் திறந்து, கையெறிந்து, வாய் பிழந்து கிடந்தாயே தோழா!

என்ன சொன்னாய் காற்றுக்கு இந்த அறை முழுதும் இவை தாண்டி ஊர், நாடு, கடல் பரவ என்ன செய்தி சொன்னாய்?

பொலிஸ் ரிப்போட்டில் இருப்பதுபோல உன்னை தெரிந்தவன் தான் இதைச் செய்தானா?

அவன் கிடந்த கோலம் செவ்வந்தியின் கண்முன்னே விரிந்தது. எப்போ மறப்பேன் காலத்தால் இது முடியுமா?

அம்மா என்றாயா?

செவ்வந்தி, சீனு என்று கத்தினாயா?

அவன் இறந்த இடம் கறை படிந்து கிடந்தது. ஆம் அவை கறைதான்.

காலத்தால் அழிக்க முடியாத கறை.

மாற்றுக் கருத்துக்குக் கொலையா?

எனக்கும் தாசனுக்கும் எவ்வளவு முரண்பாடு. ஒருநாள், ஒருநாளாவது என்னை அடித்திருப்பானா. கத்தி தூக்கி துவக் கெடுத்துக் கொல்வானா. அல்லது அடிக்கத்தான் முயற்சித்தானா எப்போதும் வாதம், முரணான பேச்சு ஏனிந்த வாழ்வு என்று சலித்து, அழுது பின்பும் அவனுடன் கட்டி அணைத்து வாழவில்லையா?

அப்படி இயக்கங்களால் முடியாதது ஏன்?

தீர்வு என்று கொலை ஏன்?

தாசன் சொன்னது சரியோ, மனிதன் பிரச்சனையோடுதான் வாழ்கிறோம் என்றானே?

இப்போது அவன் இல்லை இழந்து விட்டேன். இனியும் நான் சந்தோசமாக இருக்கிறேன் என்று சொல்வது எந்த வகையில் நியாயம்?

தான் இல்லாமல் தன்னை இழந்து எனக்குப் பாடம் சொல்கிறானோ?

நீ சொன்னது உண்மை. அத்தனையும் உண்மை. இப்போதுதான் புரிகிறது.

உண்மையைத்தான் கண்திறந்து வாய் பிழந்து காற்றுக்கும் சொன்னாயா?

மரணத்தின் காரணத்தை நெஞ்சுடைந்து மனதுக்குள் முடுமுன்பு வந்தவனை நீயறிந்து என்ன நினைத்து என்ன சொன்னாய் வாய் திறந்து.

காற்றே உனக்குத் தெரியும் சொல்!

உனக்குத் தெரியும்.

இந்தக் காப்பெற்றை வேண்டிய அளவு கழுவியாச்சு

போகவில்லையே கறை.

இதை கழட்டி எறிந்து புதுசு போடலாம்.

எனது நெஞ்சக் கறை, இந்த நண்பர்களுடைய மனத்தில் உள்ள கறை.

உறவினர் - மக்கள் மனத்தில் படியும் கறை ! மாறாது.

காலாகாலத்துக்கும் மாறாது. இது கறைபடிந்த வரலாறு.

நீ வேண்டிய இடமெல்லாம் வீரவரலாறு எழுது.

கீழே இரத்தக்கறை படிந்து கிடக்கும்

காலாகாலத்துக்கும் கூடவரும். உறுத்தும். காற்று வந்து மூக்கில் நுழைந்து . . .

இதயத்தில் உன் பிராணத்தில் கலக்கும். மூளைக்கும் கொண்டு செல்லும். மனிதன் இதயத்தில் புகுந்து மூளைக்குக் கொண்டு செல்லும்

மூளை இருக்கிறதா?

காற்று வரும். அந்தச் செய்தி தரும். ❐

# நேற்றைய என் சிநேகைக்கு

குட்டியான்

நேற்றைய காலங்களின்
பிரிய சிநேகை;
ஞாபகம் உள்ளதா நினைதரும் நாட்கள்?
மணியண்ணன் முற்றத்து விவாதமும்
மர நிழல் இருக்கைச் சிநேகமும்
துன்புறும் தடங்களின் பதிவுகள்
"எங்கள் துப்பாக்கி நியாயம் கொண்டது"
அவர்கள் வெறித்த போது
எத்தனை கோபம் உன்னிடம்.
இன்று நீ
அவர்களில் ஒருத்தி
எப்படி சாத்தியமாயிற்று?
நீ படித்த
என்னிடம் கற்பித்த
மானுட நேசிப்பின் மகத்துவம்?
மானிடம் சமன் கொலை என
புது வியாக்கினம் கொண்டாயோ?

இன்று சின்னம்மா சொன்னாள்
"உன்ட அவள்தான் சரியான அட்டகாசம்"
இமயம் சரிந்த அதிர்வு
ஏன் இங்ஙனம் ஆனாய்? -என்னிடம்
அறிவு ஜீவித் தனத்தின் பிரகடனமாய்
முற்போக்கு முகம் கொண்டாயோ?

அன்றைய சிநேகை;
உன் கடிதம் என்னிடம் இன்னும்
"இங்கு மௌனமே மொழியாகி விட்டது
மரணமே வாழ்வு.
உன்னிடம் வரவே எண்ணம்"

ஒன்று மட்டும் புரியவே இல்லை .
உன் மானிட நெறிகள்
எங்கு தொலைந்தன?
எல்லோருமாய் புதை குழி அனுப்பிய
நம் தோழர்கள் அருகிலோ?
அதை கொஞ்சம் தயவாய் எழுது .-இனி
அவை வெறும் விஷயங்கள் உனக்கு.
நீ சுட்டுப் பொசுக்கும்
மனிதப் பிண்டங்கள் போல். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு (புகலிட) பக்கக் குறிப்பு -

# தலித்தியம் பரவும் புகலிடம்

## சுகன்

தமிழ்ச் சூழலை ஓர் உலுப்பு உலுப்பி எடுத்திருக்கும் தலித் இயக்கம் குறித்து புகலிடத்தில் அது குறித்த அறிதல் அவ்வளவு மோசமாக இருக்கிறதென்று சொல்லிவிட முடியாது.

1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியின் பின்னான மூன்று தசாப்தங்களிற்குப்பின் இலங்கையிலும் தலித்தியத்தை புதியதாக எதிர்கொள்ளும் சூழல் தற்போது தோன்றுகிறது. இலங்கையின் தலித்திய மார்க்ஸீயர்கள், தமிழகத்து தலித்தியக்க அலையில் புதிய உத்வேகம் பெற்றவர்களாய் மீண்டும் முன்னணிக்கு வருகிறார்கள்.

தலித்துகளை இனி இருக்கவிடப் போவதில்லையென்ற பின் தொனியோடு தலித் இயக்கம் குறித்து சிவசேகரமும் நுஹ்மானும் தமிழகப் பத்திரிகைகளில் ஆற்றுப்படுத்திவரும் சொல்லொணாத் துன்பங்களை புகலிடத்தில் அறிவதற்கு அப்பத்திரிகைகளும், தலித்துகளுக்காக தலித்துகளால் நடாத்தப்படும் சிறு பத்திரிகைகளும் பரவலான வாசிப்பிற்குக் கிடைக்காவிடினும் ஒன்றிரண்டாவது ஓர் உட்சுற்றுப் பரிமாற்ற அளவிலாயினும் கிடைக்கத்தான் செய்கிறது.

"இலங்கையில் தலித் கண்ணாடி, தமிழ் உணர்ச்சி வெறியேற்றல். தமிழ்த் தேசியம் என்ற ஒரு ஒழுங்கமைவிற்குள் தலித்தியத்தை உட்படுத்துகிற எந்தவொரு போக்கையும் நாம் அனுமதிக்கக் கூடாது என்பதை ஒரு ஜனநாயகக் குரலாக நீங்கள் பாருங்களென்று சொல்கிறேன்"

"இடதுசாரி அரசியலும், ஈழ வேளாள அரசியலும், சிங்களப் பேரினவாத அரசியலும் நிலவிய இலங்கைச் சூழலில் டானியலின் தலித் நாவல்கள் தோன்றின"

இவை நாம் கவனத்திற் குறிக்கவேண்டிய சமகால தலித்திய விவாதங்களின் குறியீடுகள் சில.

புகலிட வாழ்நிலையில் நமக்கு ஏற்பட்டுவரும் அகதி, கறுப்பன் போல் தலித்தாகவும் நம்மை உணர்ந்து கொள்வதற்கு இலங்கையில் பஞ்சம பிற்படுத்தப்பட்ட சாதிகளில் பிறந்திருந்தாலொழிய இந்த தலித் உணர்வு புகலிடத்தில் உணரப்படுவதற்கு இப்போது வாய்ப்பில்லை.

தமிழ்! தமிழ்! என்று உரக்கக் கூவிக்கொண்டு, இருமரபும் தூயவந்த உயர் இந்து வேளாள திருமணப் பொருத்தம் கேட்டு ஓரெழுத்தும் பிழையின்றி இலங்கையின் ஆகக்கூடிய விற்பனையுள்ள தினசரியில் ஏறத்தாழ முழுப்பக்கமுமே நிறைக்கும் புகலிட சூழலில் அடுத்த தலைமுறை சாதியற்றுப் போகும் என்பது மோசமான கனவாகும். அடுத்த தலைமுறைக்கான மோசமான சாதிமான்களை இப்போதிருந்தே புகலிடம் காப்பாற்றுகிறது.

வழக்கொழிக்கப்பட்ட பவுத்திரங்களை மீள்கண்டுபிடிப்புச் செய்து, புதியன சேர்த்து மேலும் வக்கிரமான சாதிக்குணாம்சம், புகலிட, ஏகாதிபத்தியத்திற்கு சவால் விடுகிறது.

சுவிஸ் நண்பர்களின் தலித்தியத்திற்கான பங்களிப்புகள், பிராங்பேட்டில் அ.மார்க்ஸ், நாகராஜ் போன்ற தலித்தியர்களுடனான கருத்தரங்குகள், பேர்லின் 21வது இலக்கியச் சந்திப்பின் தலித்திய அமர்வு, கனடாவில் டானியல் எழுத்துகள் குறித்த சுந்தரராமசாமியுடனான சர்ச்சைகள், கனடாவில் பெரியாரியச் சிந்தனை குறித்து தற்போது நிகழும் விவாதங்கள்போன்றவை புகலிடத்தில் தலித்தியக்கம் ஏற்படுத்திய தாக்கங்களில் சில.

இலங்கையில் எதிர்கால தலித் போக்குகள் குறித்து சில அனுமானங்கள் புகலிடத்தில் முன் வைக்கப்படுகின்றன.

1.நேற்று முஸ்லிம்களைப் போல் நாளை தலித்துகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்படுவர் - யாழ்ப்பாணத்தில் ஓர் உள்ளக கலாச்சார பண்பாட்டுத் தலித் கிளர்ச்சியில் எப்போதும் போல் யாழப்பாண சைவ வேளாள, கரையார அதிகார வர்க்கமே மீண்டும் வெற்றி கொள்ளும். இவ்வெளியேற்றத்தில், தென்னிலங்கை சிங்கள, பௌத்த சமூகமும், முஸ்லிம்களுக்கான கிழக்கு மாகாண பிராந்தியமும், புகலிடம் அளிக்கவும் தலித்துக்களுக்கான கிளர்ச்சியில் 66இல் நேசசக்திகளாக தொழிற்பட்டதைப் போல் மீளவும் தொழிற்படவும் இயலும்.

2. யாழ்ப்பாணத்திற்கு எப்போதுமே தலித்துகள் தேவை. என்ன விலை கொடுத்தும் தலித்துகளை வைத்திருக்கவே யாழ்ப்பாணம் விரும்பும்.

3. இந்திய தலித் சூழல், தலித்தியத்தின் கணிசமான வெற்றி இவை மட்டுமே. தலித்தியம் என்ற அளவில் இலங்கையில் சீர்திருத்தங்களை கொண்டு வரும். மற்றும்படி தனித்து தலித் எழுச்சிக்கு இனி இலங்கையில் வாய்ப்பில்லை.

எதிர்ப்புக் குரலுக்கும், கலகப் பண்பாட்டிற்கும், புதிய சிந்தனைகளிற்காகவும் எப்போதும் தன்னைத் தயார் நிலையில் வைத்திருக்கும் புகலிட சமூகம், தலித்தியத்தின் வரவால் புதிய உத்வேகமும் உற்சாகமும் கொள்கிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சார முக்கியமின்மையும் குறிப்பீடற்ற எழுத்து முறையும்
## Cultural Insignificance & Non Signified Writing

எஸ். சண்முகம்

### மொழி, அமைப்பு, தேசம்

தேசம் என்பது ஒரு பெரிய கருத்துருவமாக கட்டமைக்கப்பட்டு ள்ளமையை அறிந்து கொள்ள அதனை அமைப்பாக்கம் செய்வித்த சொல்லாடல்களை அளவு சார்ந்த ( மொழி சார்ந்த ) பிரதிகளைக் கண்டறிவதில் தொடங்கலாம். மொழியால் கட்டப்படும் தேசம் என்ற சொல்லாடல்களில் வலை பின்னல் (Grid) பல் வேறு மொழி விளையாட்டுத்தன்மை கொண்ட பகுதியினை ஒதுக்கிவிட்டு சரித்திர வயப்படுத்தலைச் செய்கிறது. அத்தகைய ஒதுக்கி வைக்கப்பட்ட மொழியினரை இன்று subaltern என்று சொல்லுகிறோம். இந்த ஒதுக்கி வைக்கப்பட்டோரின் மொழிக்குறி தேசம் என்ற சரித்திர பிரதியின் எழுத்துக்களினுள் மறைக்கப்பட்டு விட்டது. அத்தகைய அழிக்கப்பட்ட மொழியை (effeeted language) trace மறுபிரதியாக்கம் செய்து பிரதியெடுக்க இன்று பின்-அமைப் பியல், பின் நவீனத்துவம் என்ற கோட்பாடுகள் மிக முக்கியமான முறைமைகளை அளித்துள்ளது. இந்த அறிதல் முறைகள் முன்வைக்கும் கூறுகளில் தேசம் என்பதை (epiptemology) அறிவுத்தொகுப்பு அதில் ஒதுக்கி வைக்கப்பட்ட `வாய்மொழி `வரலாறு' (oral history) என்பதை subalterneity என்று கூறலாம். அதனையும் அதனோடு கூடிய விளிம்பு நிலை மொழியினர் என்பவற்றையும் சரித்திர வயப்படுத்தலிலிருந்து கட்டுடைத்துக் காணுமுன் தேசம் எவ்வாறு தொடர்ந்த கண்காணிப்பில் வைத்திருக்கிறது என்று பார்ப்போம்.




இவ்வாறு தேசம் என்ற கட்டமைப்பு (construct) ஒதுக்கிவைக் கப்பட்டோரின் / விளிம்பு நிலையினரின் மொழியையும் தொடர்ந்த கண்காணிப்பில் policing வைத்துக்கொண்டிருக்கிறது. கண்காணிப்பு என்பது முதலில் 'கலாச்சாரம்' என்ற சொல்லாடலைக் கைக் கொண்டு தேசம் என்ற அறிவுத் தொகுப்பினை சரித்திரம் எழுதுவ தில் புகுத்தி பல மொழி விளையாட்டுகளின் (sphere) பரப்பை அழித்துவிடுகிறது.

### சரித்திர வயப்படுத்தலும் சொல்லாடலும்

ஒரு சொல்லாடல் என்பது எப்பொழுதுமே ஒரு குறிப்பிட்ட உண்மையை நோக்கி மொழியைச் செலுத்துவதாகும். ஆகையால் சொல்லாடல்களின் தொகுப்பாக இயங்கக்கூடிய சரித்திரப்பிரதி என்பதும் தேசம் என்ற ஒற்றை உண்மையை முன்னிறுத்தியே அத னுள் பின்னப்பட்டுள்ள சொல்லாடல்களை வலையாக பின்னி யிருக்கிறது. அதன்மூலம் கலாச்சாரம் என்ற தேச அர்த்தம் தொனிக் கும் Grand Narrative அந்த மொழி இயங்குகிறது. இத்தகைய மொழி பின்னலின் அடிப்படையில் உருவாகக்கூடியதே. Historicism என்ற சொல் சமீப காலமாக அதிகம் சர்ச்சிக்கப்பட்டு வரும் இந்த சொல்லாடலை 'தேசம்' அல்லது 'நாடு' என்ற தத்துவச் சொல் லாடலோடு தொடர்புடையதாகிறது. Grand Narrative வின் 'தேசம்' குறித்து நடந்த விவாதங்களை முன்னிருத்தி ஹோமிபாபாவின் (Nation and Narration) தேசமும் சொல்லலும் என்ற நூலில் வரும் ஒரு கருத்தை இங்கு நோக்குவோம்.

"displace the historicism that has dominated discussion of the Nation as cultured force"

சரித்திரவயப்படுத்துதல் என்பதைப் பெயர்த்தெடுத்துவிட்டு இவைகளைக் காணுவதையே சொல்கிறார். அதையே கலாச் சாரமாகவும் உள்ளீடாக உருவகிக்கப்படுகிறது என்கிறார். அவ்வாறு செய்யும்போது 'தேசம்' போன்ற தத்துவச் சொல்லாடல்க ளில் இயங்கி வரும் கருத்தாக்கங்களை Grand Narration அமைப்பாக்கம் கொள்ளும்போது அதனைச் சுற்றி வலையாக பல சொல்லாடல்கள் பின்னப்பட்டிருக்கின்றன. அப்படிப் பின்னப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ள சொல்லாடல்களின் மத்தியில் சிறிய space/gap என்பதை மொழியானது ஏற்படுத்தி வைக்கிறது.

அதனைக் கண்டறிந்து கட்டுடைத்து சொல்லாடல்களை பிரித்தெடுக்கும் (Grid opening) போக்கிலேயே தத்துவச் சொல் லாடல் தனது சுய புனைவிலிருந்து விடுபடும். விடுபட்ட நிலையில் எஞ்சி நிற்பது வெறும் சொல்லாடல் கூட்டத்தை ஒருங்கிணைக்கும் ஒற்றை அர்த்த அழிப்பைக் கொண்ட (Nomanclature Sign) குறியாகும்.

## சொல்லாடல்களும் நுண்ணிய சொல்லல்களும் (Discourse & Micro narratives)

ஒற்றை உண்மையை நோக்கி செயல்படும் சொல்லாடல்களின் ஊடாட்டத்தின் வழியே அமைப்பாக்கம் கொள்ளும் தேசம் என்ற தத்துவச் சொல்லல் (Grand Narrative) பல்வேறு மொழி விளையாட்டுத் தன்மைகளை மொழியிலிருந்து அப்புறப்படுத்தி

1. ஒதுக்கிவைக்கப்பட்டோர்
2. விளிம்பு நிலையினர்

என்று பிரதித் தன்மையை நிறுவுகிறது. இத்தகைய சரித்திரவயப்படுத்தல் என்ற பிரதியியல் தன்மையிலிருந்து விடுவித்துக் கொள்ள சொல்லாடல் என்பதை எவ்வாறு கையாளவேண்டும் என்பதைப் பார்ப்போம்.

அ. சொல்லாடல் என்பது ஒரு குறிப்பிட்ட உண்மையை அல்லது குறிப்பீட்டை (Signified) நோக்கி மொழியை செலுத்துகிறது.

ஆ. சொல்லாடல்களுக்கு மாற்றான பின்நவீனத்துவ கோட்பாடான நுண்ணிய சொல்லல்கள் Micro narratives

இ. தேசம் என்பதை கட்டுடைத்து ஒதுக்கிவைக்கப் பட்டோரின் மொழி விளையாட்டை விடுவித்தல் Meaning Shift

ஈ. ஒதுக்கிவைக்கப்பட்டோர் (Subaltern), விளிம்பு நிலையினர் (Marginals) என்ற இரட்டைத்தன்மை

உ. கலாச்சார முக்கியத்துவமற்ற சொல்லுதல்

மேலே குறிப்பிட்டதை நோக்கினால் சொல்லாடலுக்கு எதிரான மொழி மாற்று நுண்ணிய சொல்லுதல் - அதனைக் கண்டெடுக்க "சொல்லாடல்களை உடைத்தெறிந்து நொருக் கப்பட்ட சொல்லாடல்களிலிருந்து நுண்ணிய சொல்லுதலை பிரதி செய்வது" என்ற மொழி வழிச் செயற்பாட்டைச் செய்வது. அதன் மூலம் 'தேசம்' என்ற கருத்தாக்கத்தினை சூழ்ந்துள்ள சொல்லா டல்களின் மொழிப் புனைவிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டோர், விளிம்பு நிலையினர் ஆகிய இருவகைமைகள் குறிப்பீடுகளைத் துறந்து குறிப்பீடற்ற மொழியில் இயங்கத் துவங்குகின்றன. அதன் வழியே தங்களின் எழுதுதல் முறையை வகுத்துக் கொள்ளலாம். இவர்களின் மொழியை நுண்ணிய சொல்லுதல்களினால் கட்ட மைத்துக் கொள்ள இயலும்.

ஒதுக்கிவைக்கப்பட்டோரின் விளிம்பு நிலையினர் இடையே ஓர் ஈர்ப்பு seduction ஐ 'தேசம்' என்ற கருத்தாக்கம் கட்டமைத்து வைத் துள்ளது. அந்த மயக்க நிலையை கலாச்சாரம் என்ற மொழி தொடர்மூலம் இனங்காண இயலாத வகையில் அமைந்துள்ளது. 'முக்கியத்துவம்' என்ற குறிப்பீட்டின் மூலமே தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த முக்கியத்துவத்தை தகர்க்க சொல்லாடல்களை வைத்து செய்யப்படும் கட்டுடைத்தலின் மூலம் விடுவிக்க இயலாது. ஆகையால்தான் சொல்லாடலை நொறுக்கி, நொறுங்கிய சொல்லாடலிலிருந்து trace செய்யப்பட்ட நுண்ணிய சொல்லுதலில் துவங்கி, 'தேசம்,' என்ற கலாச்சார முக்கியத்துவம் மிகுந்த தன்மையிலிருந்து விடுபட, எந்தவொரு உண்மையும் நோக்கி செலுத்தப்படாத கலாச்சார முக்கியமின்மையை அடித்த ளமாகக் கொண்ட சொல்லுதல் முறையைப் பயன்படுத்தமுடியும்.

சமீபத்தில் வெளிவந்த (Dictionary of the Khazors) Male Edition/ Female edition - Milorad pavic என்ற நாவல் கைக்கொள்ளும் பிரதியி யல் தன்மையை நாம் கண்டறிந்தால் (Micro narratives) நுண்ணிய சொல்லுதல்,(Cultural Insignificance)கலாச்சார முக்கியமின்மை, குறிப்பீடற்ற தன்மை ஆகியவை எவ்வாறுபிரதியாக்கம் கொள்கிறது என்று பார்க்கலாம். நாவலில் மிக முக்கியமான மூன்று பகுதிகள் வருகின்றன. இதில் 'கசார்கள்' என்ற மொழிக்கூட்டம் ஒரு கற்ப னையான மக்கள் கூட்டத்தினர். அவர்களுடைய நம்பிக்கைகள்- அவநம்பிக்கைகள் வரலாறு ஆகியவை மூன்று புத்தகங்களில் சித்தரிக்கப்படுகிறது.

இம்மூன்று புத்தகங்களிலும் கசார்களைக் குறித்த மொழிக் குறிப்புகளாக

1. கிறிஸ்துவத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட் டது : சிவப்பு நிறப் புத்தகமாகவும்,
2. இஸ்லாமியத்தின் அடிப்படையில் தொகுக்கப் பட்டது : பச்சை நிறப் புத்தகமாகவும்,
3. ஈபுருவின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது : மஞ்சள் நிறப் புத்தகமாக

ஒரே மக்கள் கூட்டத்தை மூன்று வேறு விதமாக மொழி யாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எந்தவொரு தனிமதத்தின் குறியீடும் கசார்களின் வரலாற்றின்மேல் பதிக்கப்படவில்லை. ஒரே மதமும் அதன் குறிப்பீடும் தகர்க்கப்படுகிறது. மூன்று வேறுவித கலாச்சார மொழியால் கசார்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்டவை மொழிக்குறிப்பில் பிரதியாக்கப்படுகிறது. இவர்களை ஒருவித நாடோடித்தன்மை கொண்டவர்களாக கொள்ளலாம். எந்தவொரு தேசமும் இவர்களின் வரலாற்றில் குறிக்கப்பெறவில்லை. இந்த கசார்கள் வாழ்வது "பிரதியாக்கம் கொள்கிற மொழி வெளி " தான். இந்த நாவலை நுண்ணிய சொல்லுதலைக் கொண்டதாகக் கொள்ளமுடியும். இதுபோல சரித்திரவயப்படுதலால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள், விளிம்பு நிலையினர் ஆகிய இருவரின் வர லாற்றையும் அதன் வாழ்வையும் கலாச்சாரத்தையும் முக்கி யப்படுத்தாத நுண்ணிய சொல்லுதல் முறையை கையாண்டு குறிப் பீடற்ற ஒரு சொல்லுதலை (மொழியை) உருவாக்குவது முக்கி யமாகும். ●

பிற்குறிப்புகள்:

1. Sub altern என்ற சொல்லுக்கு தமிழவனின் ஒதுக்கிவைக்கப்பட்டோர் என்ற மொழிபெயர்ப்பை பயன்படுத்தியுள்ளேன்.
2. Nation & Narration - Homik Baba
3. Subaltern studies 9 volumes
4. Dictionary of the Khazars - Milerad pavic - Male- Female Edition
5. The Lyotard Reader - Edited by Adrew Benjamin



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லா சப்பலில்தமிழ் சாரதிகள் பயிற்சி நிலையம்

தமிழில் கோட் வகுப்புக்கள்.
தமிழில் படித்து சித்தியடைவதற்கு உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!



# JAFFNA AUTO ECOLE

195, RUE DU FAUBOURG ST.DENIS
75010 PARIS

**TEL : 01 42 05 88 99**

M° : GARE DU NORD ou LA CHAPELLE

வீடுகள்
- வாங்க
- விற்க
- வாடகைக்கு பெற்றுக் கொள்ள

W
விம்லண்ட்
வீடுகள் ஏஜென்சி



விம்லண்ட்

# WIMLAND
## IMMOBILIER


195, RUE DU FAUBOURG ST.DENIS, 75010 PARIS
TEL : 01 42 05 79 19 FAX : 01 40 34 60 48
M° : LA CHAPELLE ou GARE DU NORD



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகாப்தம்

பரா



நோயும் முதுமையும் அவரின் துடிப்பைக் குறைத்திருந்தாலும் தன்னைச் சூழ நடக்கும் எல்லா விடயங்களிலும் அவர் அக்கறை காட்டிக் கொண்டு தான் இருந்தார். வழக்கமாக பிரதான வீதியை நோக்கியிருந்த தனது வீட்டின் வாசற்படியில், தன் தாடியை தடவிக்கொண்டே போவோர் வருவோரை நோட்டம் விட்டுக் கொண்டிருப்பார். இதுதான் அவர் உலகத்தைப் பார்க்கும் ஜன்னல் போலும். அதிலிருந்துகொண்டே சகல செய்திகளையும் சேகரிப்பார். தன்னிடம் வருபவர்களிடம் விளக்கங்களைப் பெறுவார். விவாதங்கள் நடத்துவார். எல்லாம் அந்தப் படியில் அல்லது அவரின் வீட்டின் விறாந்தையில் போட்டிருந்த அந்த வாங்கிலிருந்து கொண்டுதான்.

அவர் தாடியைத் தடவுவதிலும் ஒரு முறை. முதல் இடது கைவிரல்களை கீழ் உதட்டிற்குச் சமாந்தரமாக வைத்துக் கீழ் நோக்கித் தாடியை இருமுறை தடவுவார். பின்பு கழுத்திலிருந்து இடதுகை விரல்களினால் தாடியை பின்புறமிருந்து மூன்று முறை நீவிவிடுவார். மீண்டும் ஒருமுறை கீழ் உதட்டிலிருந்து... இப்படி இருக்கும்பொழுது அவர் ஏதோ ஒன்றைப்பற்றித் தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறார் என்பது தான் அர்த்தம்.

எழுபதுகளின் இறுதிப்பகுதி. அரச பயங்கரவாதம் தன் கொடூரப் பற்களைக் காட்டத் தொடங்கிய காலம். அரசின் மனித உரிமை மீறல்களைப் பட்டியல் போட்டுப் பதிவுசெய்து, எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுப்பதில் ஈடுபட்டிருந்த சக்திகளுடன் நானும்... எமது செயற்பாடுகளுக்கு ஏற்ற ஒரு வசதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது தான் அவரின் நினைவு எனக்கு வந்தது.

முன் ஒரு காலத்தில் சண்முகதாஸ் என்ற பெயருடன் இளமை முறுக்குடன் பவனி வந்த அவர் தாசர் என்ற பெயருடன் முதுமை பெற்று அந்தப் படிகளில் அமர்ந்திருந்தார். இடுப்பில் மீண்டும் மீண்டும் துவைத்துக் கட்டியதால் பழுப்பேறிய வேட்டி. மேலே துண்டோ சட்டையோ கிடையாது. வெயிலில் கறுத்த உடம்பு வியர்த்து இருந்தது. நெஞ்சை மறைக்கும் நரைத்த ரோமம்.

"வணக்கம்."

"வாரும். வாரும்... என்ன விசேசம் இந்தப் பக்கம்." என்று கூறியபடி தாசர் என்னை விறாந்தைக்கு அழைத்துச் சென்றார்.

நான் வந்த நோக்கத்தை விளக்கினேன். எங்கள் நடவடிக்கைகள் பற்றி ஏற்கனவே அவருக்கு ஓரளவு தெரிந்திருந்தது. அக்கறையோடு மேலும் விளக்கங்கள் கேட்டார். வந்த விசயம் வெற்றியளிக்கும் போல இருந்ததால் உற்சாகமாகவே நான் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"டக் டக்" என்று யாரோ வீட்டுக் கதவில் தட்டும் சத்தம் கேட்டது.

"யாரது செல்வராசாவே..." என்று கேட்டுக் கொண்டே வாசலை நோக்கி நடந்தார். செல்வராசா அவரின் தினசரி வாழ்வில் இன்றியமையாத ஒரு மனிதன். எதற்கும் செல்வராசாதான் உதவி. விறகு வாங்குவது, மீன் வாங்குவது, அரைப் போத்தல் சாராயம் வாங்குவது, அதை மாலை நேரங்களில் அவருடன் பகிர்ந்து கொண்டு நாட்டு நடப்புகளைப் பேசுவது... எல்லாம் செல்வராசா தான்.

கேற் ஓட்டைக்கால் பேப்பரில் சுத்திய நீளமான ஒன்றை செல்வராசாவிடமிருந்து வாங்கிக் கொண்டார். அது போத்தல் தான். பக்குவமாக அதை எடுத்துக் கொண்டு என்னையும் தாண்டி வீட்டறைக்குள் சென்றார்.

OOO

பள்ளி மாணவனாக இருந்த காலத்தில், நான் சண்முகதாசைக் கவனிக்க வைத்தது அவருடைய சோடனை போட்ட பைசிக்கிளும் அவருடைய பளிச்சிடும் வெள்ளை உடைகளும்தான். அவரின் றலி பைசிக்கிளில் முன் மட்காட்டில் ஒரு வெள்ளிக் காண்டாமிருகம். (இது காண்டாமிருகமா அல்லது குதிரையா என்ற பல விவாதங்களை நான் நண்பர்களுடன் நடத்தியதுண்டு!) குஞ்சங்களுடன் தன் முன் கால்களை உயர்த்திக் கொண்டு நிற்கும். வெள்ளை வேட்டி. வெள்ளை வெளீரென்று இஸ்திரிக்கை போட்ட நாஷனல் சேட். கம்பீரமாக மைனராக பவனி வந்தார். சொத்துப்பத்துள்ள குடும்பத்துச் செல்லப் பிள்ளை என்று ஊரில் பேசிக் கொள்ளுவார்கள். யாழ் நகரசபையில் ஏதோ வேலை பார்ப்பதாகவும் அறிந்தேன். அவர் மீது என்னை அதிக அக்கறை கொள்ள வைத்தது நல்லூரில் நடைபெற்ற அந்தப் பொதுக் கூட்டம்தான்.

எங்கள் வீட்டின் எதிரிலுள்ள சுவரில் சிகப்பு போஸ்டர் ஒன்று ஒருநாள் ஒட்டப்பட்டிருந்தது. அதில் இருந்த "சண்முகதாஸ் தலைமையில்..." என்ற வாசகம் எனக்குப் புதிராக இருந்தது. அந்தப் போஸ்டரை என்னுடன் வாசித்த என் பேரர் "கம்யூனிஸ்டுகள்" கூட்டம் போடுறாங்கள் என்று சொன்னார்.

"கம்யூனிஸ்டுகள்" என்றால் யார்? ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்பது தான் பெரியவர்கள் விளக்கம்.

சில மாதங்களுக்கு முன் எலக்சன் நடந்தது. கார்களில் கொடிகளைக் கட்டிக்கொண்டு ஜின்னாக்கு ஜே! பொன்னாக்கு ஜே!! என்று சனங்கள் கத்தித் திரிந்தார்கள். ஒருநாள் ஐந்தாறு பேர் எங்கள் வீட்டு கேட்டைத் திறந்துகொண்டு வந்தார்கள். பட்டுவேட்டி கட்டிய பணக்காரர்கள். அவர்களுக்கு நடுவே கருமையான மேனியுடன் பெரிய சந்தனப் பொட்டுடன் ஒருவர். அவரின் இரு கண் முழிகள் தான் எல்லாவற்றிற்கும் முன்னே தெரிந்தது. வரும்பொழுதே அவர் அருகில் வந்தவருடன் ஏதோ கிசுகிசுவென்று ஆங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்தில் பேசிவிட்டு எனது தகப்பனாரைப் பெயர் சொல்லி அழைத்து குசலம் விசாரித்தார். எல்லாரும் சந்தோசமாகப் பேசிக் கொண்டார்கள். இடையில் நின்ற என் தலையைத் தடவி

"எங்கே படிக்கிறீர்?" என்று முழித் தலைவர் கேட்டார்.

"யாழ் இந்துக்கல்லூரி"

"அங்குள்ள வாத்திமார் எல்லாரும் கம்யூனிஸ்டுகளாமே. நீர் எப்படி?"

நான் மௌனமாக இருந்தேன்.

"அப்படியொன்றுமில்லை" என்று சமாதானம் சொன்னார் என் தகப்பனார்.

போஸ்டரில் குறிப்பிட்ட கூட்டத்திற்கு எப்படியாவது போவது என்று தீர்மானித்திருந்தேன். நல்லூர் பின்வீதியில் கூட்டம். அதிகம் சனம் இல்லை. சண்முகதாஸ் ஒரு மேசையின் பின் கதிரையில் இருந்தார். மேசையின் மேல் சிவப்புத்துணி விரிக்கப்பட்டிருந்தது. முன் தொங்கிய சிவப்புத் துணியில் அரிவாளும் சுத்தியலும் வரையப்பட்டிருந்தது. சுத்தியலின் மேல் வெள்ளை நிறத்தில் நாலு கீறப்பட்டிருந்தது. குலசிங்கம் பேசிக் கொண்டிருந்தார். குலசிங்கத்தை எனக்குத் தெரியும்.

பருத்தித்துறை வீதியில் சிவன் கோவிலுக்குப் பக்கத்தில் கடைபோல ஒரு கட்டடம். ஆனால், அது கடையல்ல. அதற்கு வெளியே தூங்கிய கறுப்பு நிறப் பலகையில் வெள்ளை நிறத்தில் அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் என்று எழுதப்பட்டிருக்கும். உள்ளே இருக்கும் மேசையில் குலசிங்கம் ஏதாவது செய்து கொண்டிருப்பார். அங்குள்ள வாங்குகளில் சில சுருட்டுத் தொழிலாளர்கள் அமர்ந்திருப்பார்கள்... மீசைக்காரக் கனகர். கறுவல் கந்தையர் சோமு... இப்படிப் பலரை எனக்குத் தெரியும். சில சமயங்களில் சண்முகதாஸ் உரக்கப் பேப்பர் படித்துக் கொண்டிருப்பார். அது தெருவில் போவோருக்கும் கேட்கும்.


குலசிங்கம் பேசி முடிந்தவுடன் அடுத்து "தோழியர் ப்ளோரன்ஸ் சேனநாயக்கா பேசுவார்" என்று சண்முகதாஸ் அறிவித்தார். கண்ணாடியணிந்த உயர்ந்த பெண்ணொருவர் பேசுவதற்காக மேடைக்கு முன் வந்தார்.

"கம்ரேட் சேர்மன். கம்ரேட்ஸ்..."

"தோழர் தலைவர் அவர்களே, தோழர்களே..." ஒருவர் மொழிபெயர்த்தார்.

திடீரென்று அந்தப் பெண்ணை ஏதோ தாக்கியது போல் இருந்தது ... அவர் தன் கைக்குட்டையால் நெற்றியை அழுத்தினார். நெற்றியில் இருந்து இரத்தம் கசிந்தது.

"யாரடா கல்லெறியிறது..." மீசைக்காரக் கனகர் கோபாவேசத்தில் கூட்டத்தில் இருந்து கத்தினார்.



"தோழர்களே அது கல்லல்ல. அது வில்வம்பழம். குழப்பமடையாதீர்கள்..." சண்முகதாஸ் மேடையில் இருந்து குரல் கொடுத்தார்.

என் தோள்களை ஒரு கை அழுத்துவதை உணர்ந்தேன். என் தகப்பனாரின் கை.

"இங்கே என்ன செய்கிறாய். நட வீட்டுக்கு"

வீட்டை நோக்கி நடந்தேன்.

இதைத் தொடர்ந்த சில நாட்களின்பின் குலசிங்கத்தின் சங்கக் கட்டடத்தில் அதிக சனக்கூட்டம் இருப்பதை அவதானித்தேன். அவர்களில் அதிகமானோர் சுருட்டுத் தொழிலாளர்கள். தங்களின் கூலிகளை உயர்த்துமாறு வேலைநிறுத்தம் செய்கிறார்கள் என்று அறிந்தேன்.

நல்லூர் வீதிக்கு வெள்ளிக்கிழமைகளில் வரும் பெரியவர்கள், வை.சி.சி.கு. முதலாளியும் பண்டாரக்குள விஸ்வலிங்க முதலாளியும், பட்டினி கிடக்கிறவங்களுக்கு வேலை கொடுத்தால், சண்முகதாசும் குலசிங்கமும் சமசமாஜிகளுடன் சேர்ந்து கூலிக் குழப்பம் செய்கிறார்கள் என்று பேசிக் கொண்டார்கள். வேலை நிறுத்தம் வெற்றியில் முடிந்தது. முதலாளிகள் கூலியைக் கூட்டிக் கொடுக்க சம்மதித்தனர்.

தொழிலாளரின் வெற்றி ஊர்வலத்தில் சண்முகதாசும் குலசிங்கமும் கோஷமிட்டு முன்னே சென்று கொண்டிருந்தார்கள்...

நாளடைவில் சங்கக் கட்டடம் என்னுடைய மாலைப் பள்ளிக்கூடமாகி விட்டது. சண்முகதாஸ் அங்கு கூடியிருப்பவர்களுக்கு பல கதைகள் சொல்லுவார்... ருஷ்யப் புரட்சி, தென் இலங்கையில் தொழிலாளர்களின் போராட்டங்கள். . . இங்கிலிஷ் ஆட்சியில் தங்கள் தலைவர்கள் சிறை சென்றதும் பின்பு சிறையை உடைத்து வல்வெட்டித்துறையூடாக இந்தியா சென்றதையும் கதையாகச் சொல்லுவார். முல்லோயாக் கோவிந்தன், தியாகி கந்தசாமி... கனகர் மீசை துடிக்கப் பேசுவார்.

திடீரென்று ஒருநாள் சண்முகதாஸ் தான் மலைநாட்டிற்குப் போகப் போவதாக அறிவித்தார். நமது நாட்டின் பாட்டாளி வர்க்கம் மலையகத் தொழிலாளர்கள்தான் என்றும் அவர்கள் மத்தியில் வேலை செய்வது தான் தனது புரட்சிகரக் கடமை என்றும் உரை நிகழ்த்தினார். சண்முகதாஸ் மலையகம் போய்விட்டார். அவருடைய பணக்கார மனைவி அவரை விவாகரத்துச் செய்து கொண்ட செய்தி பின்பு கிடைத்தது.

படிப்பு, பரீட்சை, வேலை என்று பல இடங்கள் சுற்றிய எனக்கு சண்முகதாசின் தொடர்புகள் இல்லாமற் போய்விட்டது. தற்போது அவரைப் பீடித்துக்கொண்ட ஆஸ்த்மா நோயும் முதுமையும் அவரை ஒரு இடத்தில் இருத்தி வைத்திருந்தன.

OOO

அவர் வசிக்கும் அந்த வீட்டின் ஒரு பங்கு அவருக்குப்பின் அவருடைய மருமகளுக்குப் போகுமென்றும், தான் இருக்கும் வரைக்கும் எந்தவிதப் பிரச்சனையுமின்றி எங்களுடைய அமைப்பு தன்னுடைய வீட்டைப் பாவிக்கலாம் என்று சொன்னார். எமது வேலைகளுக்கு ஒரு இடத்தை எடுப்பது குதிரைக் கொம்பாக இருந்த அந்த நாட்களில் அவரின் வார்த்தைகள், பட்டினி வயிற்றிற்குப் பால் வார்த்தது போல் இருந்தது. அவரின் வீடு எமது காரியாலயமாகியது.

தாசர் தனது உணவைத் தானே சமைத்துக் கொள்ளுவார். மதிய உணவிற்குப் பின் நீண்ட சயனம். மாலை நேரங்களில் வாசலில் அவரைச் சந்திக்க வருவோருடன் அளவளாவிக் கொண்டிருப்பார். அரசியல் பொலிஸ் அட்டூழியங்கள், இயக்க நடவடிக்கைகள், பழைய கதைகள் எல்லாம் அவரின் பேச்சில் வரும். எமது நடவடிக்கைகளில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். தன்னாலான ஒத்தாசைகள் செய்தார். காலப் போக்கில் இயக்க இளைஞர்கள் எமது காரியாலயத்திற்கு வந்து போக ஆரம்பித்தார்கள். அவர்களுடன் அவர் உற்சாகமாக உரையாடினார். விவாதங்கள் செய்தார். அவரின் இளமை திரும்பி விட்டது போலத் தெரிந்தது.

ஒரு நாள் இளைஞர்கள் சில போஸ்டர்களை எமது காரியாலயத்தில் வைத்து வரைந்து கொண்டிருந்தார்கள். தாசர் அதைப் பெருமையுடன்பார்த்துக் கொண்டே தனது பழைய அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தார். அப்போது திடீரென்று சில பெண்களும் ஆண்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைச் சந்திக்க வந்தனர். அவர்கள் அவருடைய சகோதரியும் மற்றும் உறவினர்களும் எனப்பின்பு அறிந்தோம். வந்தவர்கள் அவருடைய அறைக்குச் சென்று சில மணிநேரம் பேசிவிட்டுச் சென்றார்கள். தாசர் அறையை விட்டு வெளியே வரவில்லை.

அன்றிரவு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த பொழுது எங்கோ தூரத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. யாழ் பெரிய கடைப் பக்கத்திலிருந்து வந்தது போல இருந்தது. சிறிது நேரத்தில் மீண்டும் தூங்கிவிட்டேன். பொழுது புலர்வதற்குள் யாரோ கதவைத் தட்டினார்கள். தாசர் வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"நேற்று இரா ஆஸ்பத்திரியடியிலை யாரையோ சுட்டுப் போட்டாங்களாம். நேற்றுப் போஸ்டர் எழுதின பொடியங்களும் அங்கை தானே போனவங்கள். வாரும் ஒருக்காப் போய்ப் பார்ப்பம்" என்றார் தாசர்.

"நீங்கள் நில்லுங்கோ. நான் போய்ப் பார்த்து வந்து சொல்லுறன்..."

"இல்லை. நானும் வாறன்..."

முதல் நாள் பொடியள் எங்களுடைய அறையில் வரைந்த போஸ்டர் ஆஸ்பத்திரிப் பின் சுவரில் பழுதில்லாமல் ஒட்டப்பட்டிருந்தது. வேறு ஒரு போஸ்டர் மணிக்கூட்டுக் கம்பத்திலும் ஒட்டப்பட்டிருந்தது.

பெடியள் போஸ்டர் ஒட்டும்போது வந்த ஆமிக்காரர் சுட்டபோது பொடியள் ஓடியிட்டாங்கள். பாவம். ஒரு கட்டடத்தில் வேலைபார்த்த வயோதிபக் காவலாளிதான் செத்துப் போனார். கூடிநின்ற சனத்தின் பேச்சிலிருந்து இதை அறிந்து கொண்டோம். சுடப்பட்ட காவலாளியின் உறவினர்கள் ஆசுப்பத்திரி வெளிநோயாளர் வாசலில் அழுது கொண்டு நின்றார்கள்.

வரும்வழியில் தாசர் மெதுவாக ஆரம்பித்தார்.

"உமக்குத் தெரியுமே... நேற்று வந்தது என்ரை சகோதரியும், மருமகளின்ரை புருசனாட்களும்..."

"அப்படித்தான் நான் யோசிச்சனான்..."

"என்ரைபாட்டிலை என்னை இருக்கவிட மாட்டினம் போலை இருக்குது."

"என்னவாம் ?"

"என்ரை மருமோன் வேலை மாறி இங்கை வாறாராம்... என்ரை வீடு அவைக்கு வேணுமாம்..."

"அப்ப நீங்கள்?"

"என்னை ஒரு அறையிலை இருக்கட்டுமாம்... தாங்கள் என்னை உள்ள நாள் வரைக்கும் வைச்சுப் பாப்பினமாம்..."

"அவைக்கு வேறை வீடு இல்லையே...?"

"ஏன் இல்லை. என்ரை சகோதரியின்ரை வீடு கப்பல் மாதிரி இருக்குது. வேறை வீடுகளும் இருக்குது. எல்லாம் என்ர மருமகளின் புரசன்ர வேலை போல தான் இருக்கு. அவர் கவுன்மென்ற் சேவன்றெல்லே... அவருக்கு எங்கடை வேலையள் பிடிக்கேல்லைப் போலயிருக்குது."

சில நாட்களுக்குப் பின் தாசர் என்னுடன் தனியாகப் பேச வேண்டும் என்று சொல்லிக் கொண்டு அறையினுள் வந்தார்.

"உம்முடைய இந்தப் புரஜெக்ட் வவுனியாவிலை காந்தீயம் நடத்திறவற்றை உதவியோடை தானே துவங்கினது என்று சொன்னனீர்... அவரை உமக்கு நல்லாத் தெரியும் தானே"

"ஓம்... தெரியும்...."

"உமக்குத் தெரியும் நான் ஒரு சுதந்திரமான மனிசனென்று... ஆரோடையும் ஒட்டியிருந்து தண்ணி குடிச்சுக் கொண்டிருக்க என்னாலை ஏலாது... அதுவும் என்ரை கொள்கைகளுக்கெதிரானவையோடை... சாகும்வரை சாப்பிட எனக்குக் கொஞ்ச வருமானம் இருக்கு... இந்த வீட்டுப் பங்கிற்கும் மருமோன் கொஞ்சக் காசு தருவாராம்..."

"அதுக்கு இப்ப என்ன செய்யப் போறியள்?"

"உந்தக் காந்தீயத்திலை என்னைச் சேர்த்து விடுமன். என்னட்டை மிஞ்சியிருக்கிற காசுகளையும் அவைக்கு டொனேற் பண்ணினால் எனக்கு நிம்மதி. அங்கையுள்ள ஆட்களோடை ஒரு கொட்டிலிலை எண்டாலும் நான் நிம்மதியாக இருப்பன்..."

"..."

என்னால் உடனடியாக அவருக்கு எந்தப் பதிலையும் கொடுக்க முடியவில்லை. எதற்கும் பார்க்கலாம் என்று சொல்லி வைத்தேன். எங்களுக்குப் புது அறை தேடும் தலையிடி என் மண்டைக்குள் இருந்தது. தாசர் தன் முடிவில் உறுதியாகவே இருந்தார்.

ஒரு நாள் அதிகாலை யாழ்தேவியில் வவுனியா புறப்பட்டோம். பகல் ஒரு மணியளவிலேயே காந்தியத்தில் டாக்டர் ராஜசுந்தரத்தைச் சந்திக்க முடிந்தது. தாசரை அவருக்கு அறிமுகப்படுத்தி அவரின் விருப்பத்தையும் சொன்னேன். டாக்டர் தங்களின் வேலைகளைப்பற்றி விளக்கினார். உடல் வலுவுள்ள இளைஞர்களுக்கே கஷ்டமான அந்த வாழ்க்கை அவருக்குப் பொருந்தாது என்று அறிவுரை கூறினார். தாசர் சிறுபிள்ளை போல் அடம் பிடித்தார். ஏதாவது ஒரு இடத்தில், ஒரு கொட்டிலில் தனக்கு எந்த ஒரு வேலையாவது தரச் சொல்லி வாதாடினார். வேறு ஏதாவது வழியிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்து சில வாரங்களில் எனக்குப் பதில் எழுதுவதாகச் சமாதானம் செய்து டாக்டர் எங்களை வழியனுப்பி வைத்தார்.

டாக்டரைத் தனக்கு நன்றாகப் பிடித்து விட்டதென்றும், அவருக்கு உதவியாளாகதான் எதுவும் செய்யத் தயார் என்றும் வழி நெடுகச் சொல்லிக் கொண்டு வந்தார். அவரது நம்பிக்கைகள் தளரவில்லை.

83 ஏப்ரல் மாதம் ஒரு கூட்டத்திற்கு நான் கொழும்பு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த பொழுது வவுனியாவில் அரச படையினரை யாரோ சுட்டுப் போட்டார்கள் என்றும் வவுனியாவில் பெரும் குழப்பம் என்றும் செய்திகள் வந்தன. பிரயாணத்தை ரத்துச் செய்துவிட்டு செய்திகளைக் கேட்டவாறு இருந்தேன். டாக்டர் ராஜசுந்தரம் கைது செய்யப்பட்டதும் காந்தியம் சுற்றி வளைக்கப்பட்டுச் சின்னா பின்னமாக்கப்பட்ட செய்திகளும் தொடர்ந்து வந்தன. செய்திகள் எங்களை வெகுவாகப் பாதித்தன. ஆபத்துகள் வாசல்வரை வந்து விட்டது போலத் தோன்றியது. எங்கும் பீதி நிலவியது.

நாடு எரிபற்று நிலைக்கு வந்து கொண்டிருந்தது. தாசர் இடிந்து போய் உட்கார்ந்து விட்டார். மாலைநேரங்களில் அதிகமாகக் குடித்தார். யாரிடமும் அதிகம் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டார். கொக்குவில் குண்டுவெடிப்பும் அதைத் தொடர்ந்த ஆடிக் கலவரமும் எம்மை ஆடவைத்துவிட்டது. கோரச்செய்தி. வெலிக்கடைச் சிறைச் சாலையில் நடந்த படுகொலை. கொலையுண்டவர்களில் டாக்டர் ராஜசுந்தரமும் ஒருவர்.

தாசர் கண்களிலிருந்து நீர் வடிந்தது. தாடியைத் தடவிக் கொண்டு எங்கோ சூனியத்தைப்பார்த்துக் கொண்டிருந்தார். "எல்லா ஆட்டமும் முடிஞ்சு போச்சு" அவர் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அதிகாலையில் செல்வராசாவின் அவலக்குரல் என்னைத் தட்டி எழுப்பியது.

"தாசர் போயிட்டார்."

"என்ன ? எங்கே...?"

"ராத்திரி என்னத்தையோ குடிச்சுப் போட்டார் போலக் கிடக்குது... வந்து பாருங்கோ..."

நான் போனபோது பலர் கூடிவிட்டனர். தாசர் படுக்கையில் அசையாது கிடந்தார். பக்கத்தில் ஒரு வெறும் அரைப்போத்தலும் கிளாசும் இருந்தது. கிளாசிலிருந்து ஏதோ கெட்ட நெடி வந்தது...

தாசரின் எல்லா ஆட்டமும் முடிஞ்சு போச்சு.

தாசரின் பிரேத ஊர்வலம் கொதிக்கும் வெயிலில் செம்மணிச் சுடலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. முத்திரைச் சந்தியைக் கடக்கும் பொழுது ஒரு இளைஞன் சைக்கிளில் எங்களை விலத்திக் கொண்டு போனான். சைக்கிள் கான்டிலில் ஒரு உரப்பை தொங்கிக் கொண்டிருந்தது.

கிரியைகள் முடிந்து சிதை எரியத் தொடங்கியது. எங்கோ தொலைவில் இரண்டு வெடிச் சத்தங்கள் கேட்டன. அருகில் நின்றவர் என்னைக் கேள்விக் குறியுடன் பார்த்தார்.

தாசரின் சகாப்தம் முடிந்து விட்டது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரமாதித்யன்

## விக்ரமாதித்யன் கவிதை

வருத்தத்தோடு சொன்னான்
வனங்களில் அலைந்து திரிவது அயர்வூட்டுகிறது
கவலைப்பட்டுக் கொண்டான்
கனவுகளும் நம்பிக்கைகளும் பொய்த்துப்
போய்விட்டன
சாப்பிடுவதும்
சலிப்பூட்டுகிறதாம்
முன்போல
தூக்கம் வருவதில்லையாம்
பல்விளக்குவதும் குளிப்பதும் கூட
எடுத்துக்கூட்டிச் செய்யவேண்டியதாகிவிட்டது
என்றான்
குடிப்பதில்
குதூகலமே இல்லையென்றான்
போகம்பண்ணுவது
குற்றவுணர்வு ஏற்படுத்துகிறதென்று புலம்பினான்
உடம்பே
ஒரு சுமையாகத் தெரிகிறதென்று நொந்துகொண்டான்
உயிரை விட்டுவிடலாம்
போல இருக்கிறதென்று அரற்றினான்
இதுபோல எல்லாம்
ஆகுமென்று கற்பனை செய்து பார்த்ததுகூடக்
கிடையாதாம்
ஏதாவது அற்புதம் நடந்தாற்கால்
நன்றாயிருக்குமென்று அழுதான்
நம்புவதற்கு
கடினமான ஒன்றுதான்
எனில் நடக்கக்கூடாததெல்லாம் சமயங்களில்
நடக்கிறதும் உண்டுதானே
நினைத்துப்பார்க்க
முடியவில்லைதான்
இராஷஸர்களுக்கு
உடம்புக்கு முடியாமல் போகும் என்பது
அதிசயம்தான்
அவர்களுக்கு ஆயாசமும் அச்சலாத்தியும் வருவது
தாயின் கருப்பைக்கே
திரும்பிப்போக முடியுமா என்று கையைப்
பிடித்துக்கொண்டு கேட்டான்
பழுதில்லை குற்றமில்லை
பயப்பட வேண்டியதும் இல்லை
இராஷஸர்களுக்கு இனி இங்கே இடமேயில்லை
இருப்பவன் பாடு அப்படிக்கப்படித்தான்
அவ்வப்போது தவம் செய்யவேண்டும்
அதில் பெறும் வரங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும்
வேண்டும்
இராஷஸமென்பது மனம், உடம்பு மட்டுமல்ல
இராஷஸனாயிருப்பவன் மனம் தளரலாகாது
எடுத்துச் சொல்லிவிட்டு இந்த ரகசியம் எனக்குப்
பிடிபட்டது
இதுபோலப் படுக்கையில் கிடந்து எழுந்து
வந்தபிறகுதான் என்றேன்
இராஷஸர்கள் மனநலம் குணநலம்
இராஷஸர்களுக்கே தெரியும் என்பதுதானே எதார்த்தம்

(கவிஞர் பிரம்மராஜன் நடத்திய
ஒகனேக்கல் கவிதைச் சந்திப்பில் படித்தது)

## தென்கரை

பாதக் கொலுசெங்கே
எங்கே எங்கே
மீனாட்சி எங்கே
மீனாட்சியின் கொலுசெங்கே
கோமதித்தாய் என்ன சொல்கிறாள்
காளி எங்கே எங்கே நடனமாடுகிறாள் காளி
ஒப்பனையம்மன் எங்கே
உலகம்மை எங்கே
சுடலைப்பொடி பூசிய காளி எங்கே எங்கே எங்கே
எங்கே காவேரி
எங்கே கங்கை
எங்கே அன்னபூரணி
எங்கே அறம் வளர்த்த நாயகி

சின்னஞ் சிறு சிறுமிகள்
குப்பைக் காகிதங்கள் பொறுக்குவதை
எப்படி சகித்துக் கொண்டிருக்கிறீர்கள்
எப்படி குடிக்கிறீர்கள்
எரிகிறது நெருப்பு
எரிகிறது தீ
இன்றும் இன்னும்
எரிகிறது அக்னி

தேவதை வருகிறாள்
திவ்யதரிசனம் தருகிறாள்
திரும்பப் போகிறாள்
அம்மாவுக்குப் பதில்
அடுத்தவளா
தீயெரிகிறது
மறுபடியும் தீ எரிகிறது
திரும்பத் திரும்ப தீயெரிகிறது

விடிவெள்ளி
எங்கே சுடர்விடுகிறது
எங்கே இருக்கிறது
பேரானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எங்கே பூத்திருக்கின்றன
தாமரைப்பூக்கள்
சிறிதா பெரிதா
சின்னஞ் சிறிதா
எங்கே
வாழ்கிறாள் அருந்ததி
சலங்கைகளில்
தெறிக்கிறது கவிதை
இராஜ நர்த்தகிகள்
எங்கே
ஜில் ஜில் ஜில்
ஜில்ஜில்ஜில்

பாப்பா பாப்பா பாப்பா
போய்த்தொலை சனியனே
என்னைவிட்டு என்தலைமுறை விட்டு
ஏழு தலைமுறை விட்டு
போய்
தொலை சண்டாளி
பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம்
வாட்டி வதைக்காதே சிறுக்கி
இன்னு
மென்ன மிச்சம்
யார் சொல்ல
எதுக்கு சொல்ல
விட்டுக் கொடுத்தால்
விட்டு விடுகிறீர்கள்
பேசிப்பேசி
எவ்வளவு பேச
சுட்டும் விழிச்சுடர்என்று
சொல்லமுடியுமா
பிள்ளை ஒரு தொல்லையென்று
பேசமுடியுமா
பேசினான் எழுதினான்
வாழ்கிறான் அமரனாய்
இராஜராஜேஸ்வரம்
அதுக்காகவே உடலும் உயிரும்

மகாராணியில்லாத
மகாராஜனா
மஹாராஜாவே மஹாராஜாவே
மாப்புக்கொடுத்து அருளுங்கள் மஹாராஜாவே
தெற்கேதானே
தென்றலும் தெம்மாங்கும் தெஷிணாமூர்த்தி
விழிப்பார்வையும்

கழுகுகள்
அலைகின்றன புலாலுக்காய்
குளங்களை
கண்டுகொள்ளும் நாரைகள்
அஸ்தமன சூரியனுக்குமட்டும்
அழகில்லையா என்ன

( ஸ்ரீமகராசன்க்கு)



## உச்ச புதன்

மண்துகள்கள்
இறுகியிறுகி
பாறையாகிறது
ஜீவநதிக்கு
அணைகட்ட
வேண்டியதில்லை

பூ பூப்பது எப்படி
காய் காய்ப்பதும்
பழம் பழுப்பதும் எப்படி எப்படி

எவ்விதம்
கூடுகிறது மேகம்
எவ்வண்ணம்
பெய்யும் மழை
எங்ஙனம்
பூமிதரும் போகம்

கவிஞனாகவும் இல்லை
காசு சம்பாதிக்கவும் இல்லை பாண்டித்துரை
பிரபஞ்ச ரகசியம் புரியவேயில்லை போங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிஸ் மாநகரில் பல்லாயிரக்கணக்கான
வாடிக்கையாளர்களின் இதயங்களில்

# சக்தி

# SAKTHY

அற்புதமான கலை நயமிக்க சிங்கப்பூர் தங்க நகைகள்
தரமான வீடியோ பிரதிகள், உயர் ரக ஓடியோ கசற்றுகள், சீடிக்கள்
ரெடிமேட் உடுப்புகள்
அன்பளிப்பு பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
உடனுக்குடனான கடல்கடந்த சேவைகள் ..... அனைத்திற்கும்

SAKTHI ENTERPRISE
15, Rue Labat
75018 PARIS
TEL : 01 42 52 53 01
01 42 54 09 56
**M° : MARCADET POISSONNIERS**


SAKTHI EMPORIUM
193, Rue du Fg. St. Denis
75010 PARIS
TEL : 01 42 09 76 14
FAX : 01 42 09 78 24
**M° : LA CHAPELLE ou GARE DU NORD**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதை சொன்ன கதை

ஷோபாசக்தி




"நாங்கள் தேவதைகளின் நகருக்குள் இறங்கிக் கொண்டிருக்கிறோம். இதோ தேவதைகளின் நகரம் பாங்கொக் உங்களை வரவேற்கிறது."

இவன் பிரான்ஸில் ஏறி பாங்கொக்கில் வந்து இறங்கும்போது விமானத்தில் பாங்கொக்கை இப்படித்தான் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். ஆனால் இந்த தேவதைகளைத் தேடி தான் பாங்கொக் நகர வீதிகளிலே திரிவேன் என்று அப்போது இவன் கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை.

இவன் கல்யாணம் முடிக்கத்தான் பாங்கொக் வந்தான். ஆனால் கல்யாணம் குழம்பிப்போனது. உடனே திரும்பி பிரான்சுக்குப் போக இவனுக்கு விருப்பம் இல்லை. அங்கே அறிந்தவர்கள் தெரிந்தவர்களிடமிருந்து ஆயிரம் கேள்விகள் வரும். ஆயிரம் கேள்விகளும் ஆயிரம் 'நாக்கிளி புழுக்களுக்கு' சமனாயிருக்கும். இவனை போக விட்டு முதுகுக்கு பின்னால் சிரிப்பார்கள். தாய்லாந்தில் மூன்றுமாத விசா கொடுத்திருந்தார்கள். ஒருமுறை தாய்லாந்தை சுற்றி வந்தான்.

தாய்லாந்தின் புராதன தலைநகரம் 'அயோத்தியா'வுக்கு போனான். மலைகளின் ராணி 'உடப்போ' னுக்கு போனான். தங்கக் கடற்கரை 'பத்தயா'வுக்கு போனான். ஆனால் அலைகளிலும் மலைகளிலும் ரசிப்பதற்கு எதுவும் இருப்பதாக இவனுக்குத் தெரியவில்லை. வழிகளில் சில தேவதைகள் இடறத்தான் செய்தார்கள். அவர்களை வேடிக்கை பார்த்தான். சாடையாக பரிதாபப் பட்டான். அவ்வளவும் தான்.

நாளைக்கு பிரான்சுக்கு திரும்பிப் போகவேண்டும். ஆனால் காலை தொடங்கி மனதில் ஒரு சின்னக் குழப்பம். ஒரு தேவதையைத் தொட்டுப் பார்த்தால் என்ன? என்று யோசித்தான். முப்பது வயசாப் போச்சுது வாழ்க்கையில 'என்னத்தைக் கண்டன்' என்று பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை சொல்லிக் கொண்டான். 'இல்ல இது ஒரு மனச்சாட்சி இல்லாத வேல' என்றும் ஒருமணி நேரத்துக்கு ஒரு தடவை மெதுவாக சொல்லிக் கொண்டான். இரவு எட்டு மணிக்கு தங்கியிருந்த அறையைவிட்டு வெளியே வந்து வீதியில் இறங்கினான். 'எங்கே போகிறேன்?' என்று கேட்டுக் கொண்டான். 'சும்மா இப்படியே காலாற நடந்து வரப் போகிறேனாக்கும்' என்று வாய்க்குள் முணுமுணுத்தான். ஏதோ இவனின் மூளை கட்டளையிடாமலே கால்கள் தாமாக 'சுத்திசான் வீதி'க்குள் நுழைவதாகவும், இது ஒரு மனோதத்துவப் பிரச்சனை என்றும் இதற்கு தான் கொஞ்சமும் பொறுப்பாளி ஆக முடியாதென்றும் நம்ப முயன்றான்.

பகல் முழுவதும் தூங்கும் 'சுத்திசான் வீதி' இருட்டிவிட்டால் முகம் கழுவி எழுந்துவிடும். வீதியின் இரு புறங்களிலும் நூற்றுக் கணக்கான விடுதிகளும், ஆயிரக்கணக்கான தேவதைகளும். விடுதிக்குள் கண்ணாடிகளால் சூழப்பட்ட காட்சியறைக்குள் தேவதைகள் கூட்டம் கூட்டமாக இருப்பார்கள். தேவதைகளின் இதழ்கள் முப்பது வினாடிகளுக்கு 'ஒருமுறை தானியங்கி' முறையில் புன்னகைக்காய் விரிந்து மூடும். தேவதைகளின் மார்புகளில் அவர்களது அடையாள இலக்கம் குறிக்கப்பட்டிருக்கும்.

இவன் விடுதிக்குள் உள்ளிட்டு ஒருமூலையாய் நின்று கொண்டான். தேகம் ஓர்முறை நடுங்கி நின்றது. விடுதி ஏற்கனவே `விழாக் கோலம்' கொண்டிருந்தது. நீலவிழிகள், பச்சைவிழிகள், பூனை விழிகள், கருமைவிழிகள் கண்ணாடி காட்சியறையை துளைத்துக்கொண்டிருந்தன. சில தேவதைகள் கைகளை உயர்த்தி அசைத்து "என்னை கூப்பிடுங்கள்...... என்னை கூப்பிடுங்கள்" என்று சைகை செய்தார்கள். இவன் மெதுவாக விழிகளை உயர்த்தி தேவதைகளை நோட்டம் விட்டான். இலக்கம் 80.... இலக்கம் 81.... இலக்கம் 82.... இலக்கம் 83ல் கொஞ்சம் நிதானித்தான். அந்தத் தேவதை கண்களை இடமாகவும் வலமாகவும் வெட்டியபடியே கைகளை மார்புக்கு குறுக்காக கட்டியவாறு உட்கார்ந்திருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் அவளுக்கு பொருத்தமில்லாமல் இருந்தன. இவள் மற்றைய தேவதைகளைப் போல பவுண் நிறமில்லை. நிறம் கொஞ்சம் குறைவாக இருந்தாள். கிட்டத்தட்ட ஒரு இந்தியன் சாயல் அவளில் இருந்தது. அந்த 'லுக்' இவனுக்கு பிடித்திருந்தது. இவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் என்பதை விடுதித்தலைவி ஊகித்துக் கொண்டிருக்க வேண்டும். இவனை நெருங்கி வந்தாள். இவன் கடைசியாய் கொஞ்சம் யோசித்துவிட்டு "நம்பர் எயிற்றி திறி" என்று மெதுவாக சொன்னான். விடுதித் தலைவி "பற்சிப் சாம்... பற்சிப் சாம்.." என்று அந்தத் தேவதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கத்தை ஒலிவாங்கியில் அழைத்தாள். தேவதை திடுக்கிட் டவளாய் எழுந்து நின்றாள். கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு 'டக்... டக்....' என்று குதிக்கால் செருப்புகள் ஒலி எழுப்ப இவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள். "சேர் காலையில் எட்டும ணிக்கு இவளை விட்டுவிடுங்கள்" என்று சொல்லி சிரித்த விடுதித் தலைவி இவனிடம் ஆயிரம் பாத்துக்கள் எண்ணி வாங்கிக் கொண்டாள்.

இவனும் தேவதையும் அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அறைக்குள் எந்தப் பக்கம் திரும்பினாலும் நிலைக்கண்ணாடி களாகவே இருந்தன. தேவதை நிலைக்கண்ணாடிகளில் தெறித்து நூறாக தெரிந்தாள். அறையின் நடுவே பெரிய கட்டில் இருந்தது. கட்டிலின் மேலே கூரையிலும் ஒரு பெரிய கண்ணாடி தொங்கிக் கொண்டு கட்டிலைப் பிரதி எடுத்தது. தேவதை ஒன்றும் பேசாமல் குளியலறைக்குள் நுழைந்து குளிக்கத் தொடங்கினாள்.

இவன் ஒரு சிகரட்டை பற்ற வைத்தான். 'இவள் கொஞ்சம் நல்ல ரைப் பெட்டையா தெரியிறாள்' என்று யோசித்தான். ஆனால் இவன் தேவதைகளைப் பற்றி கதை கதையாய் கேள்விப்பட்டிருந்தான். வரும்போது பூனை மாதிரி வருவார்கள் என்றும் பின் தொடப்போ கும்போது இன்னும் பணம் கேட்டு தொடவிடாமலே அழிச்சாட்டியம் செய்வார்கள் என்றும் கேள்விப்பட்டிருந்தான். பாங்கொக்குக்கு புதியவர்கள் என்று தெரிந்து கொண்டால் இடுப்பிலுள்ள அரை ஞாண் கொடியையும் உருவிக்கொண்டுதான் விடுவார்கள் என்று கூட கேள்விப்பட்டிருந்தான். எனவே தான் ஒன்றும் பாங்கொக் குக்கு புதியவன் இல்லையென்று அவளுக்குக் காட்டிக் கொள்ள விரும்பினான். தேவதை குளியலை முடித்துக்கொண்டு பாதங்கள் தரையில் படாமல் விரல்களால் நடந்து வந்து கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள். ஒரு சின்ன வெள்ளை த்துண்டை மட்டும் உடம்புக்கு குறுக்காக சுற்றியிருந்தாள். இவன் 'சேர்ட்'டை கழற்ற தேவதை அதை வாங்கி மடித்து வைத்தாள். இவன் "கப் குன் மா கப்" என்று தாய்லாந்து மொழியில் நன்றி சொல்லி தான் தாய்லாந் துக்கு புதியவனல்ல என்று நிருபிக்க இவனுக்கு கிடைத்த முத லாவது சந்தர்ப்பத்தை பயன்படுத் திக்கொண்டான்.

இப்பொழுது தேவதை இவனுக்கு மிக நெருக்கமாக வந்து உட் கார்ந்து கொண்டாள். இவன் தேவதையைப் பார்த்து மெதுவாக சிரித்தான். தேவதையின் முகத்தில் உணர்ச்சி ரேகைகளே இல்லை. இவன் குரலுக்கு கொஞ்சம் கம்பீரத்தைக் கொண்டு வந்து கேட்டான்.......

குன் சீ அலாய் கப்? (உன் பெயர் என்ன?)

தொங் ஸீ யூ.

ஆயூ தொளாய் கப்? (வயது என்ன?)

சிப் யெற் (பதினேழு)

இவன் இன்னும் சில தாய்லாந்து மொழிச்சொற்களை ஞாபகப்படுத்தி பேச முயற்சிக்கையில் தேவதை இவனின் கையைப் பிடித்து "புட் தாய் மிடாய் கா புட் இங்கிலிஸ்" (எனக்கு தாய்லாந்து பாஷை தெரியாது ஆங்கிலத்தில் பேசுங்கள்) என்றாள்.

இவன் கொஞ்சம் குழம்பிப்போனான். இவள் தன்னை ஏதோ புது 'ரூட்'டில் ஏமாற்ற முயற்சிக்கிறாளோ? என்று யோசித்தான். தேவதை அப்படியே கட்டிலில் சரிந்து ஆடாமல் அசையாமல் படுத் துக் கொண்டாள். மூச்சுக்காற்றை அடிவயிற்றுக்குள் நிறுத்தி வைத்துக் கொண்டவள் போல் பற்களை வேதனையுடன் கடித்து முகத்தை இறுக்கிக் கொண்டாள். தேவதையின் கண்கள் மூடிக் கொண்டன. உதடுகளைச் சுழித்து "கமோன் சேர்" என்றாள். இவன் போய்விட்டான்.

நடுச்சாமத்தில் இவனுக்கு நித்திரை முறிந்தது. அப்படியே கண் களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். பற்களைக் கடித்துக் கொண்டு மூச்சுவிட சிரமப்படுபவன் போல மூசினான். கையை பொத் திப்பிடித்து மெதுவாக கட்டிலில் குத்தினான். இவன் இப்படியான சேட்டைகள் செய்தால் ஆள் எதையோ நினைத்து வருத்தப்ப டுகிறான் என்று அர்த்தம். அரைக்கண்ணை விழித்து தேவதையை தேடினான்.

தேவதை அறையின் மூலையிலே அந்த வெள்ளைத்துண்டை இடுப்புக்கு மட்டும் கட்டிக்கொண்டு நிலத்தில் குந்தியிருந்தாள். இவன் விழித்ததை அவள் கண்டுகொண்டதாக தெரியவில்லை. மேலே கூரையில் தொங்கிய சரவிளக்கையே உற்றுப் பார்த் துக்கொண்டு சிகரட் புகைத்துக் கொண்டிருந்தாள். இவனுக்கு இப்போது தேவதையைப்பார்க்க உண்மையிலேயே பெரிய பாவமாக இருந்தது. நெஞ்சிலே சின்னதாக வலி கிளம்பியது.

பாரிசில் தான் உண்டு, தன் வேலையுண்டு, தங்கையின் லண் டன் மாப்பிள்ளைக்கு கொடுத்த சீதனத்துக்கு பட்ட கடனுக்கு வட்டியுண்டு என்று எட்டடிக்குப் பத்தடி அறையில் வாழ்ந்து கொண்டி ருந்தவனுக்கு லண்டன் தங்கைதான் முதல்வெடி வைத்தாள்.

"பரீஸ் அண்ணைக்கும் முப்பது வயசாப் போச்சுது. நான் லண்ட னில, பெரியண்ணை ஜேர்மனில, தம்பி சுவிஸில.... பரிஸ் அண்ணை தனியாளா கிடந்து கஸ்டப்படுறேர். தனிய இருக்கிற இளந்தா ரியளுக்கு கெட்டுப்போறதுக்கான 'சாண்ஸ்' வெளிநாடுகளில கூடு தலா இருக்கு, அதால பரிஸ் அண்ணைக்கு கெதியா ஒரு கலி யாணம் செய்து வைக்கவேணும்" என்று தங்கை தொலைபேசியில் ஜெர்மனிக்கு வெடிக்க ஜெர்மனி ஊடாக சுவிஸ், சுவிஸ் ஊடாக கொழும்பு என்று இவனது திருமணப் பிரச்சனை சர்வதேச அளவில் வெடித்தது.

இவன் முதலில் கல்யாணம் வேண்டாம் என்றான். உழைக்கின்ற சம்பளத்தில் ஒரு தனிமனிதனே அறைவாடகை, வட்டி வரி, திறை, கிஸ்தி கட்டி மாதமுடிவில் கையறுநிலையில் ரயிலுக்கு ரிக்கட் எடுக்க சில்லறை பிராங்குகள் கூட இல்லாமல் ரயில்நிலைய தடை க்கம்பிகளுக்கு மேலால் உயரம் பாய்ந்து கொண்டிருக்கிறான். இவன் ஆண்பிள்ளை பாய்வான். வரப்போகும் மனைவியையும் உயரம் பாயச் சொல்ல முடியுமா? எனவே "எனக்கு இப்போதைக்கு கலியாணம் வேண்டாம்" என்றான்.

இவனுக்கு மீண்டும் சர்வதேச மட்டத்தில் எதிர்ப்பு கிளம்பியது. அம்மா "இவன் மூலம் பேரன் பேத்திகளை காண்பதே, தான் இந்த பூலோகத்தில் அவதரித்ததன் நோக்கம்" என்று தொலைபேசி வழியே உள்ளத்தை உருக்கினாள். "காய்ச்சல், துன்பம் வரும் நேரங்களில் மனைவியென்று ஒருத்தி இருந்தால் தேநீர் வைத்து தருவாள்" என்று ஒரே வரியில் தாம்பத்திய தத்துவத்தையே ஜெர்மனி அண்ணன் சுருக்கி கூறினார். "இந்த கிழவன் கல்யாணம் செய்தால்தானே நான் கல்யாணம் செய்யலாம்" என்று சுவிஸ் தம்பி லண்டன் அக்காகாரியோடு புலம்பினான்.

இவன் அசைந்து கொடுக்கவில்லை. அந்த எட்டடிக்கு பத்தடி அறைக்குள் பெண்சாதி, கட்டில், பிள்ளை, தொட்டிலை கற்பனை பண்ணிப் பார்த்தான். 'சும்மா' ஒரு வரவு செலவுத் திட்டம் எழுதிப் போட்டுப் பார்த்தான். அரிசி, கறி, புளி, பால்மா, இனி எப்படியும் மனைவிக்கு இரண்டு மாதத்திற்கு ஓர் உடுப்பாவது வாங்கிக் கொடுப்பதுதானே ஆண்பிள்ளையாய் பிறந்தவனுக்கு அழகு, இப்படியே நீட்டுக்கு எழுதி கணக்கை கூட்டிப்பார்த்தவன் தலையை ஒருமுறை சிலிப்பிக்கொண்டு சிரித்தான். சித்தார்த்தன் புத்தனாக மாறும் போதும் ஏறக்குறைய இப்படித்தான் ஒரு சிரிப்பு சிரித் திருப்பான்.

ஆனால் கலைவாணியைத்தான் இவனுக்கு பேசி முற்றாக்கி வைத்திருக்கிறார்கள் என்று அறிந்தபோது இவன் கொஞ்சம் ஆடித்தான் போனான்.

கலைவாணி அடக்கம் என்றால் அடக்கம் அப்படியொரு அடக் கம். வெள்ளிக்கிழமைகளின் மாலைகளில் 'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க' தலையைக் குனிந்துகொண்டே 'இனிச்சபுளியடி முருகன்' கோவிலுக்கு வருவாள். ஐயன் "தேவாரமொழி பாடுக" என்று சொல்லி சொன்ன வாயை மூட முன்பே 'காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி' என்று உண்மையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் நீர் வழிந்தோட கலைவாணி கொஞ்சி கெஞ்சி பாடுவாள். கோவிலும் கூடவே அழும். இவனுக்கும் அழுகை வரும்.

காலையில் பள்ளிக்கூடத்துக்கு போகும்போதும் மாலையில் வரும்போதும் அல்லது வெள்ளிக்கிழமைகளின் மாலைகளில் மட்டுமே கலைவாணியை ஊரவர்கள் காணலாம். ஆனால் இவனுக்கு அப்படியல்ல. இவனின் வீட்டுக்கும் கலைவாணி வீட்டுக்கும் இடையில் உக்கிப்போன பனைஓலை வேலி ஒன்று மட்டும்தான் இருந்தது.

கலைவாணியின் வீட்டில் ஆடு குட்டி போட்டால் இளங்கொடி எடுத்து ஆலமரத்தில் கட்ட அல்லது கிணற்றுக்குள் தண்ணீர் அள்ளும் வாளி விழுந்தால் சுழியோடி எடுக்க கலைவாணியின் அம்மா இவனைத்தான் கூப்பிடுவாள். கலைவாணியின் வீடே ஒரு குட்டிக் கோயில் போலத்தான் இருக்கும். வீடு முழுவதும் சுவாமி படங்களாகவே இருக்கும். கலைவாணி இவனுக்கு சிலநேரங்களில் தேநீர் கொடுத்திருக்கிறாள். ஆனால் அவள் `பெரியபிள்ளை' ஆன நாளிலிருந்து இவனோடு ஒரு வார்த்தையாவது பேசியதாக இவனுக்கு ஞாபகம் இல்லை.

அந்த கலைவாணியை கல்யாணம் செய்துகொண்டு வந்து இந்த எட்டடிக்குப் பத்தடி அறைக்குள் குடிவைத்தால் அவளின் குனிந்த தலை நிமிராத குணத்துக்கும், தெய்வபக்திக்கும் கூடவே மகாலஷ்மியும் இந்த அறைக்குள் குடிவருவாள் என்று இவன் உறுதியாக நம்பினான்.

அவ்வளவும் தான். அடுத்தமாதமே கலைவாணியும் கலைவாணியின் ஐயாவும் கொழும்புக்கு வந்து ஏற்கனவே கொழும்பில் முகாமிட்டிருந்த இவனின் ஐயா, அம்மாவோடு சேர்ந்து கொண்டனர். கலைவாணி பாங்கொக் வருவதாகவும் இவனும் பாங்கொக் போய் கல்யாணத்தை எழுதுவதாகவும் இரகசிய திட்டம் தீட்டப்பட்டது.

இவன் பாங்கொக் வந்து `சீலோம் வீதி'யில் அறை எடுத்து தங்கினான். ஹோட்டலில் பெயர் பதியும்போது "மிஸ்டர் அன்ட் மிஸிஸ்" என்று சொல்லித்தான் பதிந்தான். "மிஸிஸ் நாளைக்கு வருவா" என்று ஹோட்டல்காரன் கேட்காமலேயே இவன் சொல்லி வைத்தான். அறைக்குள் போய் படுத்துக் கொண்டு "மிஸிஸ் நாளைக்கு வருவா" என்று தனக்குள்ளேயே சொல்லிப் பார்த்தான். சரியான சந்தோஷமாக இருந்தது.

காலையில் எழுந்து கொழும்புக்கு தொடர்பு கொள்ள முயன்றான். இணைப்பு கிடைக்கவில்லை. தாய்லாந்து தொலைத்தொடர்புத் துறையை ஒரு பாட்டம் திட்டிவிட்டு விமான நிலையத்துக்கு போனான். `ஏயார் லங்கா' இறங்கிக் கொண்டிருப்பதாக அறிவித்தார்கள். இவனுக்குள் இரத்தம் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. ஒரு சிகரட் பற்ற வைத்தால் பதட்டம் குறையும் என்று நினைத்தான். இவனை சிகரட்டும் கையுமாக கண்டால் கலைவாணி என்ன நினைப்பாளோ தெரியவில்லை. எனவே இரண்டு கைகளையும் இறுகக் கட்டிக்கொண்டு `அற்றேன்ஸ்'னில் நின்று கலைவாணியை வரவேற்க தயாரானான். ஆனால் கலைவாணி வரவில்லை.

இவன் துடித்துப் போனான். ஓடிப்போய் கொழும்புக்கு தொடர்பு கொண்டான். இவனின் சின்னத் தங்கைதான் தொலைபேசியை எடுத்தாள். இவனின் குரலைக் கேட்டவுடனே அவள் அழத்தொடங்கி விட்டாள்.

"ஐயோ சின்னண்ணை கலைவாணியெல்லோ உங்க வரமாட்டன் எண்டு சொல்லிப்போட்டா. இரவு முழுக்க இஞ்சை ஒரே சண்டை........."

"ஏனடி என்ன நடந்தது?"

"கலைவாணியை உன்னட்ட அனுப்ப முன்னம் சீதனக்காசு ரெண்டு லச்சம் ரூபாயையும் வைக்கவேணும் எண்டு எங்கிட ஐயா கலைவாணியின்ர ஐயாவோட சண்டை பிடிச்சவர்...."

"சீதனமோ? எடி நான் உங்களை சீதனம் வேண்டச் சொன்னனானோ?"

"அது எனக்கு தெரியாது சின்னண்ணை கலைவாணியின்ர அண்ணா கனடாவில இருந்து காசு அனுப்புவராம். ஆனால் சொன்ன டேற்றுக்க காசு வரயில்ல எண்டு ஐயா கெம்பத் துவங்கிற்றார்........."

"மெயார்து....... எளிய மூதேசியள் எல்லாம் உங்கிட எண்ணத்துக்கு செய்யிறது. நானொரு விசரன் வேலை மினக்கெட்டு பாங்கொக்கில வந்து நிக்கிறன் நீ கலைவாணியை கூப்பிடு. நான் கதைக்கிறன்."

"அவையள் காலம்பிறயே வவனியாவுக்கு வெளிக்கிட்டு போயிற்றினம். பாவம் கலைவாணி என்னோட சொல்லி சரியாக் கவலைப்பட்டவ. அவவுக்கு இந்த சீதனப் பிரச்சினையே ராத்திரித்தான் தெரியுமாம்......... இப்பிடி சீதனம் குடுத்துத்தான் கல்யாணம் கட்டுறது எண்டு முன்னமே தெரிஞ்சிருந்தா தான் கொழும்புக்கே வந்திருக்க மாட்டாவாம். சின்னண்ணை. உன்னை எண்டு இல்ல ஆரை எண்டாலும் அவ சீதனம் குடுத்துச் செய்யமாட்டாவாம். இஞ்ச எல்லாம் மாறிப்போச்சு....... ஆனா ஐயாவுக்கு விளங்குதில்ல. நான் எங்களுக்கு ஏன் பிறத்தியாற்ற காசு எண்டு கேட்டு ஐயாவோட சண்டை பிடிச்சன். ஒருநாளும் எனக்கு அடிக்காத ஐயா ராத்திரி எனக்கும் அடிச்சுப்போட்டேர்."

இவன் தொலைபேசியை அடித்து வைத்தான்.

மனுநீதிச்சோழன் செய்தது போல இவன் தனது மனதுக்குள் ஓர் தேர் செய்தான். அதன் உச்சியிலே கலைவாணியை கொண்டு போய் வைத்தான். ஐயாவை நடுச்சந்தியில் படுக்கவைத்து ஐயாவின் குரல்வளையை இரண்டு நெரி நெரித்தான்.

கலைவாணி வராமல் போனதும் நல்லதுக்கு தான். கலைவாணி போனால் இன்னொரு நடனவாணியோ அல்லது ஒரு நாட்டிய வாணியோ நமக்கு கிடைக்காமலா போய்விடுவாள். கலைவாணி ஒரு சீதனப் பழியிலிருந்து என்னைக் காப்பாற்றிவிட்டாள் என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டான்.

ஆனால் இதோ பார் நிலம் நோகாமல் நடந்த கலைவாணியை, கண்கள் இருப்பது பூமியை பார்ப்பதற்கே, கைகள் இருப்பது தேநீர் செய்வதற்கே, உதடுகள் இருப்பது முருகனைப் பாடவே என்று வாழ்ந்தவள் இன்று எங்களின் முகத்தில் அறைந்துவிட்டாளே......... சின்னத் தங்கை சொன்னது மண்டையில் அறைந்தது. "இஞ்ச எல்லாம் மாறிப்போச்சு" மெய்தான். அங்கே ஒவ்வொரு குண்டுகளும் இவ்விரண்டு விலங்குகளாய் உடைத்துக் கொண்டிருக்கின்றன. நுகத்திலே கொழுவியிருந்த கலைவாணிகள் ஆயிரம் கைகளும் சூலமும் வேலுமாய் தேர்களில் ஏறிவிட்டார்கள். தேர்களின் சக்கரங்கள் ஐயாக்களின் தலைகளை சுக்கு நூறாய் உடைக்கின்றன.

ஆனால் இங்கே ஒரு பெண் தேவதையாக்கப்பட்டு, அரைநிர்வாணியாய் விறைத்துப்போய் இருக்கிறாள். ஆண்குறிகளும் மாத்திரைகளும் தின்னும் இவளின் இருட்டு நிமிடங்களில் ஒரு சின்ன `கிரேனைட்' வெடித்துப் பற்றாதா? தேவதையும் ஆயிரம் கைகளும் சூலமும் வேலுமாய் தேர்களில் ஏறாளோ? - நல்ல உவமான உவமேயங்களோட தான் யோசிக்கிறன், ஆனால் செய்யிறது முழுக்க கிலிசுகெட்ட வேலை, என்று கையைப் பொத்திப்பிடித்து மறுபடியும் கட்டிலில் குத்தினான். இந்தமுறை பலமான குத்து.

தேவதை திடுக்கிட்டவளாய் இவனை நிமிர்ந்து பார்த்தாள். வெள்ளைத்துண்டை மார்பு வரை ஏற்றிக் கட்டிக்கொண்டே இவனுக்கு அருகில் வந்து படுத்தாள். இவன் தேவதையின் தலைமுடியை மெதுவாக வருடிவிட்டான். அப்பாடா......... தேவதை முதல் முறையாய் மெதுவாக சிரித்தாள். இவன் தனது `உடைந்த' ஆங்கிலத்தில் கேட்டான்,

"நீ தாய்லாந்துக்காரி இல்லையா?"

அவள் தனது `பொறுக்கி' ஆங்கிலத்தில் சொன்னாள். "இல்லை சேர்"

"எவ்வளவு நாளாய் இங்கிருக்கிறாய்?"

இருக்கும் நாட்களை எப்போதும் எண்ணிக்கொண்டே இருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைப்போலபடாரென்று சொன்னாள். "இருபத்தியொரு நாட்கள்."

"இதற்கு முன்பு எங்கிருந்தாய்?"

தேவதை கொஞ்சநேரம் கண்களை மூடிக்கொண்டாள். தேவதையின் முகம் கோணிப்போக மார்புகள் ஏறி இறங்கின. இரண்டு சொட்டுக் கண்ணீர் தலையணையில் விழுந்தது. இவள் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறாளோ என்று இவன் கொஞ்சம் சந்தேகப்பட்டுக் கொண்டுதானிருந்தான். ஆனால் அவள் சொல்லிக்கொண்டிருப்பது பொய்யாக இருக்கமுடியாது என்று இப்போது முடிவு செய்தான். தேவதை எழுந்து கட்டிலில் சம்மணம் கட்டி உட்கார்ந்தாள்.

"இதற்கு முன்பு நான் எனது கிராமத்தில் இருந்தேன். அது ஒரு ஆண்மையில்லாத கிராமம். கிராமத்தின் முக்கால்வாசி நிலமும் டெங் கிழவனிடம் வந்துவிட்டது. உங்களுக்கு தெரியுமா சேர் எனது பதின்நான்கு வயதில் நான் பாடசாலையிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டு டெங் கிழவனால் கெடுக்கப்பட்டேன். கிராமத்தில் எல்லோரிடமும் சொல்லிப் புலம்பினேன். அதுதான் ஆண்மையில்லாத கிராமம் ஆயிற்றே.

பொலிஸ், கிராமநீதிமன்றத்தினர், சாதுக்கள் எல்லோருமே அவனின் கால்களை நக்கிக் கிடந்தார்கள். இரண்டு பசுமாடுகளை எனது அம்மாவுக்கு கொடுத்து என்னை டெங் கிழவன் வாங்கிவிட முயன்றான். அம்மா என்ன செய்வாள் பாவம்..... என்னை கொண்டு போய் டெங் கிழவனின் தோட்ட வீட்டில் விட்டாள். இரண்டு வருடங்கள் `சேர்' முழுதாய் இரண்டு வருடங்கள் நான் அந்த தோட்ட வீட்டுக்குள்ளேயே செத்துக் கொண்டிருந்தேன். கடவுள் கூட என்னுடன் இருக்கவில்லை. ஒரு இரவில் தப்பிவிட்டேன். முதல் நாளே டெங் கிழவனிடம் இருந்து கொஞ்சப் பணம் திருடியி ருந்தேன்.

தப்பியோடி லாவோசுக்கு வந்துவிட்டேன். தாய்லாந்தின் உயர கோபுரங்களும் கட்டடங்களும் தெரிந்தன. இடையில் `நொங்காய்' ஆறு மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது. ஓர் இரவு அதையும் தாண்டிவிட்டேன். ஆனால் இந்த எந்த உயர்ந்த கட்டடங்களும் கோபுரங்களும் எனக்கு ஒரு வேலை போட்டுத் தரவில்லை. உங்களுக்கு தெரியுமா `சேர்'லும்பினி' பூங்காவில் ஒருகிழமை பிச்சைகூட எடுத்தேன். பிறகுதான் 'சுத்திசான் வீதி'க்கு வந்தேன்."

இவனுக்கு'உச்சு' கொட்டவேண்டும் போலயிருந்தது. ஆனால் இந்த 'உச்சு' தேவதைக்கு என்னத்தைச் செய்துவிடும் என்று யோசித்தான்.

"உனது கிராமம் எது?"

"ட்ராங் பாங் கிராமம். அது தென் வியட்நாமில் உள்ளது."

இவனுக்கு தனது தேர்க்கணக்கு எங்கேயோ சறுக்குவதாகப் பட்டது.

"உனது அம்மா ஒரு கேடுகெட்டவள். இரண்டு பசுமாடுகளுக்காகவா உன்னை விற்றாள்?"

"சேர் அம்மாவை ஏசாதீர்கள். அவள்பாவம். எங்கள் கிராமத்தில் எல்லா அம்மாக்களும் என் அம்மா போலவே ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எதுவும் எதிர்த்துப் பேசமுடியாது. தவிர அவளுக்கு முழங்கைகளுக்கு கீழே இரண்டு கைகளும் கிடையாது."

"நான் மிகவும் வருந்துகிறேன். அது எப்படி நடந்தது?"

"யுத்தகாலத்தில ட்ராங்பாங்கிராம எல்லையில் ஒரு அமெரிக்க இராணுவ வண்டித்தொடர் எங்கள் கெரில்லாக்களால் தாக்கி அழிக்கப்பட்டதாம். முதலில் வந்த வண்டிக்குள் இரண்டு கைகளிலும் வெடிகுண்டுகளோடு அம்மாதான் பாய்ந்தாளாம்."


ஏசியா என்ரபிறைஸ்

வாரந்தோறும் இலங்கையிலிருந்து தரப்படும்
மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
பத்திரிகைகள் (வார-மாத-சஞ்சிகைகள்)
குறுகிய காலத்தில்
தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

ASIA ENTERPRISE

230, RUE DU FAUBOURG ST.DENIS, 75010 PARIS

TEL : 01 40 34 87 46    Mº : LA CHAPELLE ou GARE DU NORD




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விடுதலைப் போராட்டம்

செ. கணேசலிங்கன்

"தேசியம் நவீன உலகில் மிகப்பலம் வாய்ந்த உந்துசக்தியில் ஒன்றாகும்." - டி.ஸ்மித்

"தேசிய உணர்வுடன் போராடிப் பிற இனத்தவரைக் கொல்வது மட்டுமல்ல, தானே கொல்லப்படவும் துணிவடைகிறான்" -பெனடிக்ற் அன்டர்சன்

அரசியல் விஞ்ஞானத்தில் இன்று உலகெங்கும் கற்பிக்கப்படும் நூல் இத்தாலிய அரசியல் வித்தகன் மக்கியாவலி 1469-1527 எழுதிய இளவரசன் (The Prince) என்ற நூலாகும். அதன்முன்னர் திருக்குறள், அர்த்த சாஸ்திரம் போன்ற இந்திய நூல்கள் அரசியல் பற்றிப் பேசியபோதும் அவையாவும் பெரும்பாலும் அறவழி நிலையில் நின்றே அரசியல் பேசின. மக்கியாவலி இளவரசன் ஒருவன் தன் அரசைக் காப்பாற்ற மறவழிகளையும் கையாளலாம் எனக் கூறினான். ஐரோப்பிய அரசுகள் பல மறவழிகளும் கையாண்டே தமது ஆட்சிகளைக் காப்பாற்றின என்பதை ஐரோப்பிய வரலாறுகளில் ஆதாரம் காட்டி மக்கியாவலி நிருபித்தான்.

மக்கியாவலி ஓர் அரசனின் சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டுதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கைகளையே வகுத்துக் கூறினான் என்பதில் ஐயமில்லை. அதேவேளை இத்தாலிய நாட்டுப் பற்றும் தேசிய உணர்வும் அவனது எழுத்தில் தொக்கி நின்றது என்பதையும் அனைவரும் நம்புவர். இத்தாலியின் வீழ்ச்சிக் காலத்திலேயே அவனது நூல் எழுதப்பட்டது. நூலின் கடைசி அத்தியாயம் இவ்வுண்மையையும் அவனது தேசிய எழுச்சி உணர்வையும் கூறிநிற்கும்.

மக்கியாவலியின் இளவரசன் நூலை நன்கு விமர்சித்து எழுதிய பெருமை கிராம்ஸி 1891-1937 என்ற மற்றொரு இத்தாலிய அரசியல் அறிஞர், மார்க்சிய சிந்தனையாளரைச் சாரும். அவர் தன் சிறைக்குறிப்பு நூலில் (Prison Note Book) இளவரசன் நூலை நன்கு திறனாய்வு செய்தபோதும் மக்கியாவலியின் தேசிய உணர்வையும் கற்பனை அரசியலையும் மறுக்கவில்லை.

கிராம்ஸி மக்கியாவலியின் இளவரசன் நூலை விமர்சிக்கும் வேளை இன்றைய உலக அரசியலையும் ஒப்பிட்டு சில குறிப்புகள் கூறினார். இன்றைய ஆட்சியிலுள்ள அரசியற் கட்சியையும் தலைவனையும் மக்கியாவலியின் இளவரசனுடன் ஒப்புமை கண்டு குறிப்பிட்டார். குறிப்பாக ஆளும்கட்சித் தலைவனின் சர்வாதிகாரப்போக்கையே கிராம்ஸி கருதினார். அதேவேளை அரசியற்கட்சிகள் என்பதை சமூகக்குழுக்கள் என்றார். அதன்படி ஒவ்வொரு சமூகக்குழுவும் அரசியற் கட்சியாக இயங்கும் என்பதே அவரின் கருத்தாகும்.

அவரின் கூற்றின்படி இன்றைய சமூக அமைப்புகளில் இனம், மொழி, மத அடிப்படையில் அரசியற்கட்சிகள் ஏற்படுவதும் அவை அரசியலாதிக்கம் பெற முனைவதும் தவிர்க்கமுடியாத நிகழ்வுகளாகும். மன்னர் ஆட்சிகளின் வீழ்ச்சியுடன் அரசியற்கட்சிகளின் ஆதிக்கத்தில் ஐரோப்பாவில் பல தேசங்கள் உருவாகின.

தேசங்களின் குணாம்சங்களை ஆராய்ந்து விளக்கும் வேளையில் ஸ்டாலின் பொதுநிலப்பரப்பு, பொதுமொழி, பொதுப் பொருளாதார உற்பத்தி, பொது உளவியல் பண்பாடு கொண்டது தேசம் எனக் கூறினார்.

பண்ட உற்பத்தி, விற்பனை, விநியோக எல்லைகளை முதலாளிவர்க்கம் வகுத்துக் காப்பாற்றவே தேசியம் என்ற குரலுடன் தேசங்களை உருவாக்கிக் கொள்கின்றன என்ற இலக்கணமும் தேசம் என்பதற்கு வகுக்கப்பட்டது. எல்லாத் தேசங்களிலும் ஆட்சியிலுள்ள அரசியற்கட்சிகள் அங்குள்ள பெரிய சமூகக்குழுவைச் சார்ந்ததாகவே இருக்கும். போட்டி அரசியலில் தேசத்தின் பிற சிறுபான்மை சமூகக்குழுக்களின் ஆதரவையும், சலுகைகள் வழங்குவதா கக் கூறிப் பெற்றுக்கொள்ளும். ஆயினும் நடைமுறையில் பெரிய சமூகக்குழுவின் சர்வாதிகார ஆட்சியே நிலவுவதைக் காணலாம். இந்த நிலைமையை எதிர்த்து சிறுபான்மை இனங்கள் தனி அரசியல் கட்சி அமைத்துப் போராடுவதையும் காண லாம்.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து காலனி நாடுகள் தேசிய எழுச்சியுடன் தேசிய விடுதலைப் போராட்டம் நடத்துவதை லெனின் ஆதரித்தார். அப்போராட்டம் வெறும் தேர்தல் வழியல்லாது ஆயுதப்போராட்டமாக நடத்துவதையும் அவர் வரவேற்றார். தேசியவிடுதலைப் போராட்டத்தில் முதலாளி தொழிலாளி உட்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக் கட்சிகளும் ஒருமுகப்பட்டுப் போராடுகின்றன.

இயந்திர உற்பத்தியின் வளர்ச்சி முதலாளித்துவ நாடுகளிடையே பண்ட விற்பனைச் சந்தையில் நெருக்கடியை ஏற்படுத்துகிறது. தேசங்களை ஆக்கிரமித்து அடிபணியச்செய்து பண்டங்களை விற்கவல்ல பாசிச யுத்தங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய யுத்தங்கள் இறுதியில் முதலாளித்துவ நாடுகளின் பாசிசப் போக்கை முறியடித்து அந்நாடுகளையே பலமிழக்கச் செய்கின்றன. இக்காலகட்டத்தில் உழைக்கும் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு போராடி சோஷலிசப் புரட்சியை ஏற்படுத்திவிட முடிகிறது. சோவியத் ரஷ்யாவில் லெனின் தலைமையில் முதலாளித்துவத்தை முறியடிக்கும் சோஷலிசப் புரட்சி 1917ல் நடைபெற்றது.

சந்தை பிடிக்கும் முரண்பாட்டுடன் எழுந்த இரண்டாவது உலகக் கெடுபிடி யுத்தம் 1939-1945 பாசிச ஆட்சியில் எழுந்த ஜேர்மனி, இத்தாலி, யப்பான் நாடுகளை வீழ்ச்சியுறச் செய்ததோடு ஏகாதிபத்தியங்களையும் பலவீனப்படுத்தியது. சீனப்புரட்சியுடன் காலனி ஆதிக்கம் நிலவிய நாடுகளும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டன. தொடர்ந்த போராட்டங்களினால் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் யாவும் விடுதலை பெற்றன.

ஆயினும் இந்நாடுகளிலெல்லாம் பெரிய இனம் சார்ந்த சமூகக்குழுக்களின் அரசியற்கட்சிகளே அரசியலாதிக்கம் பெற்றன. ஒடுக்கப்படும் சிறுபான்மை அரசியல் குழுக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன. சில நாடுகளில் சிறுபான்மையினத்துடன் சமரசம் பேசி சலுகைகள் வழங்கிய ஆட்சிகள் தொடர்ந்தன.

லெனினின் தலைமையில் நடைபெற்ற ரஷ்யப்புரட்சியின் தன்மைமட்டும் வேறுபட்டிருந்தது. முதலாளித்துவ வர்க்கப் புரட்சியை வீழ்த்தும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாக அது கொள்ளப்பட்டது. முதலாளித்துவப்புரட்சி என்பது நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தவரையும் பிற ஒடுக்கப்பட்ட வர்க்கங்களையும் இணைத்து முதலாளித்துவம் நடத்தும் புரட்சி எனவும் அதன்பின்னர் பாட்டாளிவர்க்கம் முதலாளித்துவத்தை வீழ்த்தும் புரட்சி சோஷலிசப் புரட்சி எனவும் விளக்கப்பட்டது.

வாழ்நிலை சிந்தனையைத் தீர்மானிக்கிறது. பொருள் உற்பத்தியே அடிப்படையானது. உழைப்பில் ஈடுபட்டு உபரி உழைப்பு அபகரிக்கப்படும் தொழிலாளர், வர்க்க உணர்வு பெற்று சமூகஅமைப்பை மாற்றியமைக்கும் புரட்சியில் ஈடுபட்டு அவர்களால் அமைக்கப்படும் சோஷலிச சமுதாயத்தில் இன, மொழி, நிற, மத பேதங்களிற்கு மேலாக வர்க்க உணர்வு தொக்கி நிற்கும். அனைவரும் ஜனநாயக உரிமை பெறுவர். தேசியஇனங்கள் விடுதலையை விரும்பின் அவர்கள் பிரிந்து செல்லும் உரிமையும் பெறுவர்.

இத்தகைய கோட்பாட்டுடன் லெனின் பல தேசியஇனங்களை ஒன்றிணைக்கும் ஐக்கிய சோஷலிச சோவியத் யூனியனை அமைத்தார். சோஷலிச அமைப்பிலேயே பல் தேசியஇனங்களும் ஒற்றுமையாக வாழமுடியும் என்பதை நிருபிக்கும் சமூக அமைப்பை ரஷ்யாவில் ஏற்படுத்தினார்.

தொழிலாளிவர்க்கத்தின் கோட்பாடு சோஷலிசம், முதலாளித்துவத்தின் கொள்கையே தேசியம் என மார்க்சியம் கூறும்.

முதலாளித்துவத்தின் உச்சக் கட்டமே ஏகாதிபத்தியம். ஏகாதிபத்தியம் ஒருபோதும் தேசிய இனங்கள் ஒன்றிணைந்து கூட்டாக ஒன்றியம் அமைப்பதை விரும்பமாட்டாது. ஏனெனில் அத்தகைய ஒன்றியம் சோஷலிசக் கோட்பாட்டுடனேயே ஒன்றுபட முடியும். அத்தகைய பலமான அமைப்பு ஏகாதிபத்திய அமைப்புக்கு என்றும் ஆபத்தாக முடியும் என்பதை ஏகாதிபத்தியங்கள் அறியும். உதாரணமாக இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பின்னர் சோவியத் யூனியனின் பலத்துக்கே அமெரிக்க ஏகாதிபத்தியம் அஞ்சியிருந்தது. உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து அவற்றிடை பனிப்போர் தொடர்ந்தது.

லெனின் பிரிந்து செல்லும் உரிமையை வழங்கியே பல தேசியஇனங்களையும் சோவியத் சோஷலிச ஒன்றியத்தின் கீழ் ஒன்றிணைத்தார். கூட்டாட்சியும் திட்டமிட்ட கூட்டுப் பொருளாதார அமைப்புமே சோவியத் யூனியனில் ஐக்கியத்தை ஏற்படுத்தி வந்தது. இரண்டாவது உலகப் போரின் பாதிப்பு, ஸ்டாலினின் வீழ்ச்சியுடன் சோவியத் பொருளாதார பலத்தில் சிறிது சிறிதாக பின்னடைவு ஏற்பட்டு வந்தது.

1962-1963 வரையில் சீனத்தலைவர் மாவோ சோவியத் யூனியனின் கோட்பாட்டை மறுமதிப்பீடு செய்தார். சோவியத் யூனியன் பேச்சளவில் சோஷலிசம் பேசிக்கொண்டு நடைமுறையில் பிற தேசங்களையும் தேசிய இனங்களையும் சுரண்டும் சமூக ஏகாதிபத்தியமாக மாறுவதாகக் கூறி சோவியத்துடனான உறவுகளை முறித்துக் கொண்டார்.

மாவோவின் மறைவின் பின்னர் சீனாவில் சோஷலிசக் கட்டுமானப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒருபுறம் இருக்க, 1989ல் கொபச்சேவின் தலைமையில் சோவியத் ஒன்றியத்தில் பின்னடைவு ஏற்பட்டது. பொருளாதார வீழ்ச்சியுடன் சோவியத் ஒன்றியம் சார்ந்த தேசிய இனங்கள் பிரியத் தொடங்கின. ரஷ்யாவைத் தனியாகப் பிரித்து தலைமை தாங்கிய யெல்ஸ்ரின் சந்தைப் பொருளாதாரத்தை ஏற்று, கடன் சுமையைத் தாங்க அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்தார்.

சோவியத் ரஷ்யாவிலும் பார்க்க யுகொசிலவாக்கியாவில் டிட்டோவின் தலைமையின் கீழ் ஒன்றிணைந்திருந்த தேசியஇனங்களிடை ஏற்பட்ட பகைமை உறவு முதலாளித்துவ நாடுகளையே உலுக்கின. அங்கு பொஸ்னிய, சேபிய இனங்களிடை உக்கிரமான ஆயுதப் போராட்டம் ஏற்பட்டது. குரொனிய சிறுபான்மையினரிலும் பார்க்க பொஸ்னிய மக்கள் மிகவும் பாதிப்படைந்தனர். இனக்கொலை, சூறையாடல், கற்பழிப்பு, தீ வைத்தல் போன்ற சம்பவங்களும் லட்சக்கணக்கானவர் இடம்பெயர்ந்து புதியவாழ்வு தேடும் நிலையும் ஏற்பட்டது. ஐ.நா.சபை, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தலையிட்டே தற்காலிக சமாதானத்தை ஏற்படுத்த முடிந்தது.

சோவியத் சோஷலிச யூனியனின் பிளவும் பின்னடைவும் யுகொசில வாக்கியாவில் ஏற்பட்ட இனப்போரும் தற்காலிக அமைதியும், இன்றைய வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் ஏற்படும் யதார்த்த நிலைமைகளைக் கூறி நிற்கின்றன.

சோஷலிசத்தின் பின்னடைவு பனிப் போரை நிறுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் சந்தைப் பொருளாதாரத்தையும் முதன்மைப்படுத்தியுள்ளது.

உலகெங்கும் தேசியஇனங்களின் விடுதலைப்போராட்டம் தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வாக நடைபெற்று வருகிறது.

ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள், தேசியஇனங்கள் தனித்தனி தேசங்களாக இயங்குவதையே விரும்புகின்றன. தேசியஇனங்கள் ஒன்றிணையும் தேசிய கட்டமைப்பை அவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ரஷ்யாவும் யுகொசிலவாக்கியாவும் இவற்றிற்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

இன்றைய தேசிய விழிப்புணர்வு பெற்ற உலகில் ஈழத்தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக தேசிய விடுதலை வேண்டுவது, அதற்காகப் போராடுவது தவிர்க்கமுடியாத வரலாற்று நிகழ்வாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்சித்த சூரியர்

ஜீவமுரளி



என் சினேகிதியும், காதலியுமான சாரதா பக்கத்தில் இல்லை. பேர்லின் நகரிலிருந்து ஐநூறு கிலோமீட்டர் தொலைவிலுள்ள தன் அம்மா வீட்டிற்குச் சென்று விட்டாள். பிரெஞ்சு வைன் சிறிதளவு அருந்திவிட்டு தனிமையின் அரவணைப்பில் இருந்தேன். சிறுவயதில் வானம் சொந்தமாகவும், அதேவேளை என்னுடையதாகவும் இருந்திருக்கின்றது. வினோதமும், மர்மமும், கேள்வியும் இருந்திருக்கின்றது. இன்றுள்ளது போன்ற வினோதமும், மர்மமும், கேள்வியும் அன்று இருக்கவில்லை. பனங்காட்டின் சலசலப்பையும், வெயிலின் அரவணைப்பையும் இழந்து இந்தப் பாழும் உலகிற்கு வந்த இதுநாள் வரையில் வானத்தைப்பார்த்து லயித்ததாகவோ, இரசித்ததாகவோ நினைவில்லை. வைனின் புத்துணர்வும், தனிமையின் வழமையும் ஒன்று சேர கவலையிலும், கனவுலகிலும், பரவசத்திலும் ஆழ்ந்திருந்தேன்.

சுற்றி மூன்று பக்கங்களும் ஒருபனை உயரத்திற்கு தொடர்மாடிக் கட்டிடங்கள், நான்காவது பக்கத்தில் எனதும் என் சாரதாவினதும் வாழ்விடம். நடுவில், சுற்றிச் சுவர்களால் அடைக்கப்பட்ட மைதானம் போன்ற இடத்தில் கார்கள் தரித்து நின்றன. சுற்றிவர ஒரு பனைஉயரத்திற்கு நான்கு பக்கங்களிலும் தொடர்மாடிக் கட்டிடங்கள். வண்ணங்களை ஞாபகத்திற்குக் கொண்டு வராத மின்னொளி. இது ஜெயிலை ஒத்திருந்தது. ஒரு ஐரோப்பிய தந்திரவாதியல்லாத அப்பாவிக் குடிமகனின் அறிவைப் போன்றிருந்தது. நானும் சாரதாவும் வசிப்பது மூன்றாவது மாடியில். ஏனோ இன்று வழமைக்கு மாறாக, எது வழமை என்ற கற்பிதங்களுடன் சச்சரவு செய்யும் எனக்கு, சுற்றி வரவுள்ள ஒருபனைமர உயரக் கட்டிடங்களின் கூரைக்கு மேலால் ஊடறுத்து, இந்த வரையறுக்கப்பட்ட வானம் கண்ணில் பட்டது. கூனல் விழுந்த மனிதமுதுகுபோல் வளைந்த, பிரகாசமற்ற, நெற்றியில் வில்போல் வளைத்துத் தரிக்கப்பட்ட, திருநீற்றுக் குறிபோல் பிறைநிலவு. அதன்மேல் விமானம் சென்றுவிட்டபின் விழுந்திருந்த புகைக்கோடு போல் மேகக்கோடு. எனக்குச் சொந்தமற்ற அந்நிய வானமும் பிறைநிலவும்.

மீண்டும் மீண்டும் சூனியத்தின் மையத்துக்குள் இறங்கும்படி கட்டளையிடப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றிக் கட்டளைகளே இடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தவிர்க்கவியலாதவாறு நிறை வேற்றியும், அடங்கியும், நசிந்தும் போக நிர்ப்பந்திக்கப்பட்டு வாழ்வு என்னை அழைத்துச் செல்கின்றது. சூனியத்தின் மையத்திலிருந்து அவமானமும், தனிமையின் இரண வேதனையையும் தாங்காமல் என் ஆன்மாவைத் தூக்கிக் கொண்டு வெளிவருகின்ற போதெல்லாம் இந்த வெண்பனியும், வெண்நிலவும், வெள்ளை உலகமும் பாதாளத்திற்கும் அருகிலில்லாத சூனியத்திற்கு விரட்டிக் கொண்டிருக்கின்றன.

இந்த ஒற்றைத் தனியறையில் நானும், சாரதாவும் கும்மாளம் போட்டுக்கொண்டும், அமைதியாகவிருந்து வாசித்துக் கொண்டும், இசையை ரசித்துக்கொண்டும், ஒருவர் கன்னத்தை ஒருவர் வருடிக் கொண்டும், தலைமுடிகளைக் கோதிக் கொண்டும், சண்டையிட்டுக் கொண்டுமிருப்போம். வாய்விட்டுச் சிரிப்பது, சத்தமிட்டுப்பேசுவது இந்த அறைக்குள்ளேயே ஒடுங்கிவிடும். இந்தக் கண்ணாடி யன்னலைத் தாண்டி செல்லும் ஊசிவிழும் சத்தத்தைக்கூட வெண்பனியும், வெண்நிலவும், வெள்ளை உலகமும் மறுதலித்தன. சகிப்பு. எங்களின் தலைமேல் இடப்பட்ட விதி. கட்டுப்படுத்தவும், கட்டளையிடவும் தண்டிக்கவும் அவர்களிடம் சட்டங்கள் இருக்கின்றன. நாங்கள் இந்த அறையைத் தாண்டி எடுத்து வைக்கும் முதல் அடியும், அதைத் தொடர்ந்த அடிகளும் பூனைக்குட்டியின் அடிகள் போன்று ஒலி எழுப்பாதவை. வீதியிலும், கடைகளிலும், பஸ்களிலும், ரயில்களிலும் நிற்க நேருகின்றபோது நான் கூனிக்குறுகி துவண்டு போகிறேன். சாரதா என்னுடன் மட்டுமல்ல கூடவரும் யாருடனும் குறைந்த ஒலியுடன்தான் பேசுகிறாள். வாய்விட்டுச் சிரிப்பதில்லை. இருமலும் தும்மலுமான இயற்கை நிகழ்வுகள் கூட நடப்பதில்லை. என் ஆன்மாவை எனக்கு முன்பே இழுத்து வைத்து இந்த வெள்ளைச் சாம்ராட்சியமே சாட்டைகளால் அடித்து நொருக்குகின்றன. இந்த அவலம் எப்படி நடந்ததென்று அன்று என்னால் முடிவுக்கு வரமுடியவில்லை. இது வியாதியா, விபத்தா என்பது கூட இதற்கு முன் நான் எப்போதும் அறிந்திருக்கவில்லை. இப்படி ஒரு நிர்க்கதி யாராவது ஒருவருக்கு முன்பின் நேர்ந்ததாக புனைகதைகளிற்கூட வாசித்திருந்ததில்லை. இது மனிதர்களுக்கு நடக்கக்கூடிய விபத்துத்தானா, விதிவிலக்காக எனக்கு மட்டும்தான் நேர்ந்து விட்டதா என்ற சந்தேகம் இன்றுவரைக்கும் எனக்கிருக்கின்றது.

நேற்றிரவு அசதியாலும், மனத்தாங்கலினாலும் கட்டிலில் தூங்காமல் கதிரையிலேயே தூங்கிவிட்டேன். காலை விழித்தெழுந்தபொழுது மணி ஒன்பது ஆகிவிட்டது. பசியால் வயிறு காந்திக்கொண்டிருந்தது. தேநீர் போடுவதற்காக அடுப்பில் தண்ணீரை வைத்துவிட்டு, பல் துலக்கி இரண்டு பாண்துண்டுகளுக்கு பட்டர் பூசிக் கொண்டிருந்தேன் பசியால் ஒரு ஆழமான கொட்டாவிதான் விட்டேன். என்ன நடந்துவிட்டது எனக்கு! நடந்ததை என்னால் நம்பவே முடியவில்லை. அதிர்ச்சியாலும் பயத்தாலும் அம்மாவையும் சாரதாவையும் நினைத்துக்கொண்டேன். என் கண்களில் நீர் முட்டிக்கொண்டது. இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. கைகால்கள் உதறலெடுத்தன. ஆழமான அந்தக் கொட்டாவி விட்டபின் என் வாயை மறுபடியும் மூடிக்கொள்ள முடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. வலதுபக்க கன்னம் விண் ணென்று வலியெடுத்தது. வாயை மூடுவ தற்காக கைகளால் தாடையை மெது வாக அசைத்துப்பார்த்தேன். முடிய வில்லை. மேற்றாடை எலும்பும் கீழ்த் தாடை எலும்பும் ஒன்றுடன் ஒன்று செரு கிக்கொண்டதை உணரமுடிந்தது. குளிய லறைக்கு முன்கதவில் பொருத்தப்பட்ட கண்ணாடி முன் ஓடினேன். எனது வாய் ஆவென்றிருந்தது. வலதுபக்கக் கன்னம் சிறிது வீங்கினாற்போல் ஒன்றுடன் ஒன்று செருகிக்கொண்ட எலும்புகள் கன்னத் தசைப்பகுதியை துருத்திக் கொண்டி ருப்பதைப் பார்த்தேன். நாக்கு சிறிது நீண்டுவிட்டதை உணர்ந்தேன். மேல்வா யையும் கீழ்வாயையும் இரு கைகளாலும் சிறிது பலமாக விரித்தும் அசைத்தும் பார்த்தேன். வலி அதிகரித்தது. மேலும் பலம் பிரயோகித்தால் எலும்புகள் நொரு ங்கிவிடலாம். பயம் என்னைப் பிடித்துத் தின்றது. சாரதா என் பக்கத்தில் இல் லையே என்று மீண்டும் நினைத்துக் கொண்டேன். இதற்கு மேலும் நான் முயல்வது முட்டாள்தனமென்ற முடிவுக்கு வந்தேன். நான் என்னை ஓரளவாவது சுதாகரித்துக்கொண்டேன். ஒரு கையால் ஆவென்ற வாயைப் பொத்திக்கொண்டு மறுகையால் காற்சட்டையையும் மேற்சட் டையையும் மாட்டினேன். சப்பாத்தைக் கொழுவிக்கொண்டு நூல்களைக் கட்டா மலேயே அறைக்கதவைச் சாத்திவிட்டு லிப்ட் பட்டனை அழுத்தினேன். அது என் அவசரத்திற்கு வரவில்லை. படிகளால் ஓடி இறங்கி பிஸ்மாக் வீதி நிலக்கீழ் ரயில் தரிப்பிடத்தை நோக்கி ஓடினேன்.

வாயை ஒருகையால் பொத்தி மறைத் தபடி படிகளில் ஓடி இறங்கவும் ரயில் வந்து நின்றது. என் அதிர்ஸ்டம் இருக்கைகள் சில காலியாக இருந்தன. இருக்கையில மர்ந்தபடி தலையை நன்றாகத் தாழ்த்தி வாயிலிருந்து கைகளை எடுத்து சப் பாத்து நூல்களைக் கட்டிவிட்டு மீண்டும் ஒருகையால் வாயைப் பொத்திக் கொண்டு நிமிர்ந்த பொழுது, என் அருகி லிருந்த பெண் பயணி கடைக்கண்ணால் பார்த்ததையும் சிரித்ததையும் கவனித் தேன். என் முன்னிருந்தவர்களைப் பார்க்க முயலவில்லை. தொண்டைக்கு ழியில் எச்சில் முட்டிக்கொண்டது. சற்று தலையை உயர்த்தி சிரமப்பட்டு எச்சிலை விழுங்கினேன். பிஸ்மாக் வீதியிலிருந்து இரண்டாவது தரிப்பிடத்தில் இறங்கிக் கொண்டேன். படிகளில் ஓடி ஏறி பஸ் தரிப்பிடத்தை அடைந்தேன். என் அவசர த்துக்கு பஸ் வரவில்லை. இங்கிருந்து ஒரு பஸ் தரிப்பிடம்தான். இருநூறு மீற்றர்கள் தான் வரும் என் குடும்பவைத்தியர் அனித்தாவின் மருத்துவமனை. கன்னம் மேலும் வலியால் விண்ணென்றிருந்தது. பஸ் வரவில்லை. ஓட்டமும் நடையுமாக வைத்தியர் அனித்தாவின் வாசலை அடைந்து அழைப்புமணியை அழுத்தி னேன்.

வரவேற்பறையில் தாதி சபினே இருந் தாள். டொக்டர் விடுமுறையில் போய்விட் டாரே. உனக்கு என்ன உதவி வேண்டும் என்று கேட்டாள். அப்பொழுதுதான் என் னால் பேசமுடியாததை உணர்ந்தேன். நாக்கைத்தவிர தாடைகளை அசைக்க முடியவில்லை. நாக்கை மேலும் அசை த்து அடித் தொண்டையால் பேசமுயன் றேன். தெளிவற்ற வார்த்தைகள் வெளியே வந்தன. காலையில் கொட் டாவி விடுவதற்காக வாயைத் திறந்தேன். மறுபடியும் மூடிக்கொள்ள முடியவில்லை என்றேன். அவள் மிகவிரைவாக என்னை விளங்கிக்கொண்டாள். மிகத்துரிதமாக செயற்பட்டாள். வரைபடம் ஒன்றையும் பல்வைத்தியரொருவரின் விலாசத்தை யும் தந்து தன்னால் உதவி செய்ய முடி யாததையிட்டு வருத்தப்படுகிறேன் என் றும் நூறு மீட்டர் தொலைவில்தான் பல் வைத்தியர் ஒருவர் இருக்கின்றார் என்றும், நான் அங்கு போவதற்குள் வைத்திய ருக்கு தொலைபேசியில் அறிவிப்பதா கவும் கூறினாள். என்னால் அவளுடன் உடன்படமுடியவில்லை. பிழையாக என்னை விளங்கிவிட்டாளோ என நினை த்தேன்.

எனக்கு பல்வலி இல்லையே என்றேன்.

இல்லையில்லை நீ இதற்கு பல் வைத் தியரிடம்தான் போகவேண்டும் என்றாள். நான் ஏன் பல்வைத்தியரிடம் போக வேண்டும் என்று புரியவில்லை. வலியாலும் புரிந்துகொள்ளமுடியாத அந்தரத்தாலும் விலாசத்தையும் வரைபடத்தையும் வாங் கிக் கொண்டு ஓடினேன். வரைபடத்தை பார்த்து புரிந்துகொள்ளும் நிலையில் நான் இருக்கவில்லை. விலாசத்தைப் பார்த்தேன். ஏற்கனவே எனக்குத் தெரி ந்த லைப்னிஸ் வீதிதான்.

வாசலில் மணியை அழுத்தவும் எனக் காகக் காத்திருந்த தாதியொருத்தி நேரே வைத்தியரிடம் அழைத்துச் சென் றாள். அவர் என் தாடைகளைப் பரிசோ தித்தார். என்ன நடந்ததென்று கேட்டார். நான் பேசுவதற்கு சிரமப்படுவதை புரிந்து கொண்டார். அவர் எனக்காக இரங்கு வதை கவனித்தேன். வாயை பலவந்த மாக மூட முயற்சிக்காதே. மிகவும் இலகு வாக வைத்துக்கொள். விசேட பயிற்சி பெற்றபல்வைத்தியர் ஒருவரினால்தான் இதைச் சரி செய்துகொள்ள முடியும். விலாசம் தருகிறேன் என்றார். தாதியை அழைத்து விலாசத்தைப் பெற்றுத் தந் தார். வரைபடத்தைக் காட்டி போகுமிடத் தைக் குறித்துக் காட்டினார். என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வைத்திய ருக்கு தொலைபேசி மூலம் நான் வருவது பற்றி தெரிவிப்பதாகவும் சொன்னார். என் விதி குறித்து என்மேல் எனக்கே பரிதாபம் ஏற்பட்டது. என் நிலை பற்றி இரக்கம் கொண்ட வைத்தியருக்கு அடித்தொண் டையால் நன்றி தெரிவித்துவிட்டு வீதிக்கு ஓடிவந்தேன்.

பேர்லின் மத்திய ரயில்நிலையத்திற் குச் செல்லும் பிரதான வீதியான கூபிருஸ் டன்டாம் வீதியில் பெரியதொரு நாற் சந்தியில் சிக்னலைக் கடப்பதற்காக வாயை ஒருகையால் பொத்தியபடி நின்று கொண்டிருந்தேன். தொடர்ச்சியாக வாக னங்கள் சென்ற வண்ணமே இருந்தன. சிவப்பு விளக்கிலேயே வீதியை ஓடிக் கடந்தேன். விலாசத்தினையும் வரைபடத் தினையும் மாறிமாறி பார்த்தேன். வலது புறமா இடதுபுறமா வைத்தியரின் இருப்பி டம் என்பதில் குழப்பமடைந்தேன். இடது புறம் சென்று பார்த்தேன். வீட்டு இலக் கங்கள் நாற்பதிலிருந்து முப்பத்தொன்ப தாகக் குறைந்துகொண்டு சென்றன. நான் போக வேண்டிய இலக்கம் தொண் ணூற்றொன்று. வலதுபக்கம் போகவேண் டும். மீண்டும் ஒருமுறை சிக்னலை சிவப் பிலேயே ஓடிக்கடக்க வேண்டி வந்தது. சில நிமிடங்களுக்குள்ளேயே விஷேச பல் வைத்திய நிபுணரின் வாசலில் அழைப்பு மணியை அழுத்தி உள்ளே சென்றேன்.

நான் உள்ளே நுழையும்பொழுது வர வேற்பறையில் கொம்பியூட்டரின் முன்னி ருந்த தாதி என்னைக் கவனித்தாளா என் பது தெரியவில்லை. அவளின் முன்னால் நின்றேன். நிமிர்ந்தே என்னைப் பார்க்க வில்லை. மருத்துவ அட்டையை எடுத்து முன்னால் வைத்தேன். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டாள். அவளின் முன் நின்ற நான். அருவருக்கத்தக்க பூச்சி அல்லது புழு என்று உணர்கிறாள் என அவளின் முகம் கோணியதைக் கொண்டு தெரிந்து கொண்டேன். சில நிமிடங்க ளுக்கு முன் என் நிலைமைபற்றி டொக் டரின் தொலைபேசி வரவில்லையா? அது நான்தான் என்றேன். அப்படியா என்றபடி ஒரு விண்ணப்பத்தைத் தந்து நிரப்பும்படி சொன்னாள். நான் அவ்விடத்திலேயே நிரப்ப முயன்றேன். காத்திருப்பு அறைக் குப் போய் நிரப்பிக்கொள் என்று சிநே கமற்ற முறையில் சொன்னாள். உள்ளே சென்றேன். எனக்குமுன் நான்கைந்து பேர் காத்திருந்தனர். அவர்களின்முன் வாயிலி ருந்து கையை எடுக்க கூச்சப்பட்டேன். இருப்பினும் எடுத்தேன். தலையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்தபடி தொண்டைக்குழியில் இருக்கும் எச்சில் வெளியே சிந்திவிடாதபடி விண்ணப்பத்தை நிரப்பத் தொடங்கினேன். அதில் பதினாறு கேள்விகளுக்குமேல் கேட்கப்பட்டிருந்தன. அப்பாவின் பெயர், என் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை எழுதிக்கொண்டேன். இன்னும் மஞ்சள்க்காமாலையால் பாதிக்கப்பட்டீரா? இரத்தம் மாற்றி ஏற்றப்பட்டதா? மருந்துகளினால் அலர்ச்சி உள்ளதா? என்றும் கேட்கப்பட்டிருந்தது. சில கேள்விகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. மஞ்சள்க்காமாலை வந்ததா? என்பதன் கீழ் ஆம் என்றும் இரத்தம் ஏற்றப்பட்டதா? என்பதன் கீழ் இல்லை என்றும் எழுதிவிட்டு அடியில் கையெழுத்திட்டு தாதியிடம் கொடுத்துவிட்டு இருக்கையில் போய் அமர்ந்தேன். அவள் என்னைக் கூப்பிட்டாள். இதில் எல்லாம் சரியாக நிரப்பியுள்ளாயா? இவ்வளவுந்தானா என்ற வண்ணம் பேனாவை எடுத்து மீதிக் கேள்விகளுக்கு தானே பதில் நிரப்பும் நிமித்தம் என்னிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். என்னால் சரிவரப் பேசமுடியாதென்றும் வலியால் துடிக்கின்றேன் என்று தெரிந்தும் இந்தப் பாதகியின் கேள்வி எனக்கு எரிச்சலையும் கோபத்தையுமூட்டியது. என்னால் பேசமுடியவில்லை. இப்போது முடியாது என்று ஆத்திரம் மீற அடித்தொண்டையால் கத்தினேன். அந்தப் பாதகியின் தலையில் இடிவிழ. அவளின் முகம் இருண்டதைக் கண்டேன். அவள் உருவம் மேலும் எனக்கு ஆத்திர மூட்டியது. தனக்கு நெருக்கமானவ ருக்கோ காதலனுக்கோ பிள்ளைக்கோ இப்படி நேர்ந்திருந்தால் நிற்கவைத்து குறுக்கு விசாரணை செய்திருப்பாளா. இது என்ன விசாரணை.? இதற்கு அர்த்தம் தான் என்ன.? இரக்கமற்ற ஐரோப்பிய ஒழுங்குமுறையா, பச்சைத்திமிரா? அவள் முன்னிலையிலிருந்து வெடுக்கென்று மீண்டும் இருக்கையிலமர்ந்தேன்.

பத்து நிமிடங்கள் கழித்து இன்னொரு தாதி என் பெயர் சொல்லி அழைத்து தன் பின்னே வரும்படி கூறினாள். அவளின் பின்னே வைத்தியரின் அறையை அடைந்தேன். ஆனால் அவர் அங்கு இருக்கவில்லை. பக்கத்து அறையிலிருந்து கிறீச் சென்ற பற்களைக்கூச வைக்கும் ஒலி வந்தது. யாரோ ஒருவரின் பற்களைத் துப்பரவு செய்து கொண்டிருக்கின்றார். வைத்தியம் பார்ப்பதற்கான சாய்வுக் கதிரையில் என்னை அமர்த்திவிட்டு வெள்ளைத் துணி போலான பேப்பர் துணி ஒன்றை என் நெஞ்சில்படர கழுத்துடன் சேர்த்துக் கட்டிவிட்டுச் சென்றுவிட்டாள். வாசற்கதவு திறந்தே இருந்தது. இருக்கையிலிருந்து சற்றுத் திரும்பி வாசலையே பார்த்துக் கொண்டிருந்தேன். இருபது நிமிடங்களாயிருக்கும் வைத்தியர் இன்னும் வரவில்லை. என்னை அந்தப் பாவி பழி தீர்க்கிறாளா என்ற பயம் கவ்விக்கொண்டது. வாசலிலிருந்த கண்களை நகர்த்தி அறையை இப்பொழுதுதான் முழுமையாகப் பார்க்கிறேன். வாசல் சுவரைத் தவிர என் முன்னே மூன்று பக்கங்களும் கண்ணாடிச் சுவர்கள். நான் மிகவும் உயர



மான இடத்தில் இருப்பதை உணர்கிறேன். இங்கிருந்து பேர்லின் மாநகரையும் வெள்ளைச் சாம்ராட்சியத்தையும் மிகவும் தெளிவாகப் பார்க்க முடிகிறது. வலது கன்னம் இன்னும் வலியால் அதிகரிக்கின்றது. ஆவென்றிருந்த வாயை மேலும் கொஞ்சம் விரித்தும் இடது கைவிரல்களை வாய்க்குள் நுழைத்து வலது கையால் கன்னத்தை அழுத்தி இடதாலும் வலதாலும் அழுத்தி அழுத்தி செருகிக் கொண்ட எலும்புகளை விடுவிக்கப் பார்க்கிறேன். வலி மேலும் அதிகரிக்க முனகத் தொடங்கி விட்டேன். என்னையுமறியாமல் அழுகிறேன். சூடான வெயில் கண்ணாடி வழியே என்மீது படர்கிறது. வணக்கம் கூறியபடி வைத்தியர் உள்ளே நுழைகிறார். எனது இரட்சகர் மிகவும் தாமதமாகவே வந்திருக்கின்றார். மூலையிலிருந்த தொட்டியில் கைகழுவியபடியே எனக்கு என்ன செய்யவேண்டும் எனக் கேட்கின்றார். சூரியனின் ஒளிச்சூடு என் கன்னத்தை இதமாக வருடித் தருகிறது. அவரின் கேள்விக்குப் பதில் சொல்ல முனைகிறேன். வைத்தியரின் உதவியின்றி கணப்பொழுதில் நடந்துவிட்ட அதிசயத்தை என்னால் நம்பவே முடியவில்லை. வலி நின்றுவிட்டது. மேல்வாயும் கீழ்வாயும் ஒன்றுடன் ஒன்று தானாகவே ஒட்டிக்கொண்டுவிட்டன. என்னால் சரியாகப் பேசமுடிந்தது. அவரின் கேள்விக்கு நான் கொட்டாவி விடப்போய் நடந்த கதையைச் சொன்னேன். உங்களின் கேள்விக்குப் பதில் சொல்லும்போதுதான் இப்பொழுதுதான் என் வாய் பழைய நிலைமைக்குத் திரும்பியது என்றேன். ஒரு புன்சிரிப்புடன் என்னருகே வந்து கன்னத்திலும் தாடையிலும் கைவைத்து அழுத்தி இங்கு வலிக்கிறதா அங்கு வலிக்கிறதா என்று கேட்டார். இப்பொழுது வலியே இல்லை என்றேன். பற்களை எண்ணிப் பார்த்தார். இன்று வெள்ளிக்கிழமை. மறுபடியும் திங்கட்கிழமை வாருங்கள். மீண்டும் ஒருமுறை உங்களைப் பரிசோதிக்கவேண்டும். ஞானப்பல்லொன்று உங்களின் முரசைத் துருத்திக்கொண்டு நிற்கிறது. அதைக்கூட பிடுங்கவேண்டும். இரண்டு நாட்களுக்கு வாயை அகலத் திறக்காதீர்கள். சாப்பிடும்பொழுது சிறிது சிறிதாக உதாரணமாக பாணை அப்படியே கடித்துச் சாப்பிடாமல் சிறிய துண்டுகளாக்கிச் சாப்பிடுங்கள். அவர் என் கையைக் குலுக்கினார். புன்னகை சிந்தினார். மீண்டும் சந்திப்போமென்றபடி என்னை விட்டகன்றார். மூடிய வாயைத் திறந்துகொள்ள முடியாத மனிதனும் திறந்த வாயை மூடிக்கொள்ள முடியாத நானும் மறுபடியும் மூடியவாயைத் திறக்க முடியாதபடி என்வாயும் என்னால் சிரிக்கவே முடியவில்லை. இருக்கையை விட்டெழுந்து வரவேற்பறைக்கு வந்தேன். எனது மருத்துவ அட்டையைத் திரும்பத் தரும்படி தாதியிடம் கேட்டேன். என்னைப் பார்க்காமலேயே என்னைத்தாண்டி பின்னால் உள்ள ஒருவரிடம் சிரித்தபடி பேசிக்கொண்டு அட்டையை நீட்டினாள். அட்டையை வாங்கிக்கொண்டு வெளியேறும் வாசலுக்கு வந்தேன். திரும்பிச் சென்று அவளைக் கெட்ட வார்த்தைகளினால் திட்டவேண்டுமென்று நினைத்தேன். ஏனோ நான் அப்படிச் செய்யவில்லை. வீதிக்கு வந்தேன். சிக்னலை இம்முறை நிதானமுள்ளபோதும் பச்சைவிழுமுன்னே கடந்தேன். சூரியனின் ஒளியும் சூடும் உடலிலும் முகத்திலும் ஆழமாக இறங்கியது.■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தினி கலை அரங்கு

குளிரூட்டப்பட்ட 350 ஆசனங்கள் கொண்ட மண்டபம்

**81, RUE MARCADET**
**75018 PARIS**

**M° : MARCADET POISSONNIERS**

உங்கள் பிறந்த நாள், பூப்புனித,
மற்றும் திருமண வைபவங்களா!

சாப்பாடு
வீடியோ
மணவறை
கேக் வகைகள்
அழைப்பிதழ்கள்
அனைத்தையும்
ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்!

# சாந்தினி உணவகம்

**TEL : 01 42 58 71 19**

**10, RUE LABAT, 75018 PARIS**


**M° : MARCADET POISSONNIERS**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்காசோவும் கெஸ்டாபோவும்

ந.சுசீந்திரன்



ஜெர்மனியின் மனித விரோத நாசிப்படைகள் பாரீசுக்குள் நுழைந்துவிட்டன. நாசி எதிர்ப்பாளர்கள், யூதமக்கள், ஜெர்மன் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து நாசிகளுக்குத் தப்பி பிரான்சுக்கு புகலிடந்தேடி வந்தவர்கள் எல்லோரும் இப்போது புதிய தேசத்தை நோக்கி ஓடுவதைத் தவிர வேறுவழியில்லை. எல்லோரும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். பாரிசில் தமக்கு வேண்டத் தகாதவர் களையும் விரும்பத் தகாதவர்களையும் நாசிகளின் "கெஸ்டாப்போ" (Gestapo) என்ற கொலைஞர் படை தேடி அழிக்கின்றது. அங்கே ஓர் அதிசயமும் நடக்கிறது. ஓவிய மேதை பிக்காசோவை நல்ல வேளையாக அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. அக்காலம் பிக்கா சோவின் புகழ் எங்கும் ஓங்கியிருந்த காலம். அவரது நண்பர்களை அதிர்ச்சியடைய வைப்பதற்கும், எப்படியாவது தமது சர்வதேசப் பொய்ப் பிரசாரத்திற்கு பங்கம் விளையாமல் இருப்பதைக் கருத்திற்கொண்டும் நாசிகள் எப்படியோ சர்வதேச ஓவியக் காட்சியறையையும் பிக்காசோவையும் விட்டு வைத்தனர்.

சர்வதேசச் சித்திரக் கூடத்தில் "சித்திர விரோதச் சித்தி ரங்கள்" என்ற கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பார்வையாளர்கள் நிறையவே வந்து போய்க் கொண்டிருக் கின்றனர். ஏனோ ஒரு வகை மௌனமே குடிகொண்டிருந்தது. மயா னத்திற்குப் போய் வருபவர்களாகத்தான் பார்க்க வந்தவர்களுக்கு அங்கே மௌன வழிகாட்டலும் மௌனந்தோய்ந்த வழியனுப்பி வைத்தலும். மௌனத்தில் ஓவியங்கள் மனதைக் குடைந்தன. கூடத்தின் வாயிலில் பிக்காசோ வீற்றிருந்து தன் புகழ் பெற்ற ஓவியமான "கேர்ணிக்கா 1937" வின் நகல் ஒன்றினை "உங்கள் ஞாபகத்திற்கு" என்று மட்டும் உச்சரித்தபடியே கையளித்துக் கொண்டிருந்தார்.

கேர்ணிகா என்பது ஸ்பானிய பாஸ்கன் பூமியின் புனித நகரமாகும். நாசிகள் அந்த நகரத்தை விமானத்தாக்குதல் மூலம் சின்னா பின்னமாக்கியதோடு ஸ்பானிய யுத்தத்தில் பிராங்கோ விற்கு எதிராகப் போரிட்டு அங்கிருந்து திரும்பிய சிவப்பு ராணு வத்தினரே வருகிற வழியில் இந்தக் கொடுங் கோரச் செயலைச் செய்த தாகவும் பிரசாரமும் செய்து கொண்டிருந்தனர். ஆனால் அப் பிரசாரம் உலகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிக்கா சோவின் தூரிகையில் உண்மை உலகை உருக்கும் ஓவியமானது.

நாசிப்படையைச் சேர்ந்த கீழ்மட்டப் போர்மனிதர்கள், மேல் மட்ட அதிகாரிகள் என்று பலருங்கூட இச் சர்வதேசக் கண்காட் சிக்கு வந்து போய்க்கொண்டிருந்தனர். ஒரு நாள் கெஸ்டாப்போ வின் உயர் அதிகாரி ஒருவன் வந்து பார்வையிட்டபின் பிக்காசோ விடம் ஓவியத்தின் பிரதியொன்றினைப் பெற்றுக் கொள்ளும் போது

"நீங்கள் தானே இந்த ஓவியத்தைக் கீறியது ?" என்று கேட்டான். பிக்காசோவும் தலையை பலமாக ஆட்டியவாறே "இல்லை"

"அது நீங்கள் தான் கீறியது" என்றார் பிக்காசோ.

இந்தப் பதிலை எப்படி அந்த அதிகாரி விளங்கிக் கொண் டானோ, அல்லது இந்த ஆளுக்குப் பைத்தியம் என்று தான் நினை த்துக் கொண்டானோ எதுவுமே தெரியவரவில்லை. அவனை பிக்காசோ மீண்டும் ஒரு போதும் கண்டதேயில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு + பம்மாத்து = தேசப்பற்று

எண்பதுகளில்,
இயக்கங்களைக் கண்டதும்
கல்லூரியில் படித்த என்னை
கவனமாய் யோசித்து
கனடாவுக்கு அனுப்பிவைத்த
என் அப்பா.


தொண்ணூறுகளில்,
சுதந்திரமாய் வாழவெண்டு
சுவிசுக்கு என் தம்பியை
சுணங்காமல் அனுப்பி வைத்த
என் அம்மா.

இருவரையும் நானிப்போ
எதற்கும் நல்லதென்று
இந்தியாவுக்கு எடுத்துவிட்டேன்

இருந்தாலும்,
எனக்கு இன்னுமொன்று தேவை.

தென்தமிழீழத்து சிறார்களைக் கொன்றாவது
தமிழீழம்...

ஏனெனில்
நான் தேசப்பற்று மிக்க,
தமிழன்.



## மீண்டும் வருவேன்

கடற்கரைகள் காதுக்கினிய
கானமிசைக்க,
மணற்பரப்புகள்
மஞ்சட் கம்பளங்களாக...
முட்களும் செடிகளும்
முந்தானை விரிப்புகளாய்
அந்த நாட்கள்...

இலைகள் வீழ்ந்துவிட்டாலும்
குழைகள்கூட கோபித்து
கொண்டாலும்
சிதறும் பனியிலும்
சிலையாய் நின்றுகொண்டு
கரியகம்புகளாய் காட்சிதரும்
வேளையிலும்

வளரும் தளிரையும்
வசந்தத்தின் வரவையுமெண்ணி
காத்திருப்பதிங்கே
மரங்கள் மட்டுமல்ல - என்
மனமும்கூடத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியும் செம்மண்கால்களும்

## மணிவண்ணன்

பழுத்த விழியும்
வெயில் சுட்டுத்தின்ற மேனியும்
சேலை முடிச்சில்
நாள் முழுதும் உழைத்த
கொஞ்சக் காசுகளும்
நெல் அரிவாளும்
செம்மண்கால்களும்
முடிகூந்தல் முகமுமாய்
முந்தையர் நடந்த வீதியில் நீயும்
எட்டி நடை கட்டி
வீடுபோகும் கால்களில்
வீதிக்கல் அடிபட்டு
இரத்தம் கசிந்தாலும்
நீ படும் ஆறாவேதனை
யார் நெஞ்சைத் தொடும்
உன்னைத் தொடாத பகல்
மெல்ல மெல்ல இருளைத் தொட்டு.

○○○

சூரியக்கிழவி சுத்திவைத்த
ஆற்றுப் பந்திப்பாயை
மழைக்கூத்தன் விரித்துவிட்டான்
பச்சைப்பசேலென வார்ந்து
புவி இழைத்த புல்லிறகிலும்
ஒவ்வோர்
காலத்தின் தொடக்கங்கள்
நிலைத்தன
மொழி தூக்கும் தென்றலோடும்
அவை
குல்லுதிகுத்தி மகிழ்கிறதே
கொட்டைப்பெட்டி வெற்றிலையாய் நாங்கள்
மடிந்து மடிந்து மடிந்தும் மடிந்து

○○○

பழக்கிண்ணம்
திறப்புக் கோர்வைகளால்
நேற்றிலிருந்து ஓர் திருமண அழைப்பிதழால்
அவ்வப்போது வரும் காகிதங்களால்
இரண்டொரு பேனாக்களால்
நிரம்பி இருக்கும்
பழங்கள் ஏதும் இல்லை

நண்பனொருவன் அல்சர் வியாதியினால்
வேதனைப்படுவான்
துண்டுப் பாண்களும்
குவளைத் தேனிரும்
எங்களின் நாள் உணவு

இந்த அறையின் சொந்தக்காரன்
உண்பதற்கு முன் மதுவால்
தொண்டையை நனைத்துக் கொள்வான்
நேற்றைய தினம் நித்திரைப் பாயிலும்
வாடகை பணத்திற்கு
வாயையும் கையையும் நீட்டி
எழுப்பிவிட்டான்

அடையான் கடையும் பூட்டப்பட்ட இரவின்பின்
உண்பவர்களின் கோப்பைகளை கழுவி எறிந்துவிட்டு
றெஸ்ரோரண்டில் இருந்து
இன்னுமொருவன் வந்துவிடுவான்
இன்னுமோர் திறப்புக்கோர்வை
பழக்கிண்ணத்தை நிரப்பிவிடும்

துள்ளித் திரியும் பருவம் முறிந்த
சின்னஞ் சிறுமி
தன்தாய் நிலத்தில்
முத்தாய் விழைந்த
ஓர் பாடலை
காதுச் சிப்பிக்குள் அள்ளித்தந்து
குருத்துக் கைகளை நீட்டினாள்
சுரங்கரெயிலில் இன்று
வேலையின்றி உணவின்றி ஒருவன்
சில்லறைக் காசுகள் கேட்டு
றெஸ்ரோரண்டின் உணவு ரிக்கற் கேட்டு
கடிகாரப் பயணிகளிடம்
வாய்விட்டு இரப்பிரந்தான்

வயிற்று முட்டியில் வயினை ஊற்றும்
அந்த மனிதர்கள்
இந்த நூற்றாண்டின்
காட்சிப் பொருளாய்

அவர்கள்
கடலின் அடி தளத்தில்
பாலைவன வெளி பரப்பில்
அணுகுண்டுகளை உரிக்கிறார்கள்
மலர்களை படைப்பதற்கு ?

○○○

தசை விழுங்கும்
இரு முதலைகளின்
தடித்த வாய்களின் கீழ்
ஓர் தையல்கடை இயங்குகிறது
ஆபிரிக்க இளைஞன் ஒருவன்
ஆடை தைக்கத் தொடங்கினான்
உடுப்புக் கட்டொன்றை எடுத்தான்
வெட்டிய பக்கங்களை மூட்டினான்
மூட்டிய பக்கங்கள்
மடித்தும்
பிளந்தும்
ஓர் துர்க்கிய இளைஞனால்
அயன் பிடிக்கப்பட்டன
பொக்கெற் போடும் இயந்திரத்தால்
அரபு பெண்
பொக்கெற்றுக்களை போட்டுக் கொடுத்தாள்
எஞ்சிய பக்கங்களை தைத்தான்
இரு கைப்பக்கங்களை மூட்டினான்
பொலத் தைக்கும் இயந்திரத்தால்
இருபக்க தோள்மூட்டிலும்
பொலத்துக்களை தைத்தான்
மொறக் நாட்டு இளைஞன்
துபிளியூர் தைக்கப்பட்டு
பிறவளம் திருப்பப்பட்டது
தெறி விளிம்புகள்
பாகிஸ்தான் இளைஞனால்
அயன் பிடிக்கப்பட்டன
ஓர் சீனுவா இளைஞனால்
தெறி ஓட்டைகளும்
தெறிகளும்
அடிக்கப்பட்டன
சிறீலங்கனால்
ஆடை அயன் பிடிக்கப்பட்டு
துர்க்கிய பெண்ணால்
நூல்கள் வெட்டப்பட்டு
உறையிடப்படுகிறது
ஆடை
53% Polyester
43% Laine
4% Lycra
Made in France.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா நான் விளையாட மாட்டேன்

"நீ யானை பார்த்தியா?"

"ஓ... பெரிய யானை"

"எனக்கு டொல்பின் விளையாட்டுத் தான் பிடித்தது"

"குரங்கு தான் நல்லாயிருந்தது"

தாம் பார்த்தவற்றை மிகவும் சுவாரசியமாக வர்ணித்தார்கள். அவர்கள் கண்களை உருட்டி, கைகளை அசைத்து மிருகக்காட்சிச்சாலையையே பஸ்ஸுக்குள் கொண்டு வந்திருந்தார்கள்.

"பிள்ளைகள்...கவனம்.... இடமிருந்தால் இருங்கோ... கவனமாகப் பிடியுங்கோ..."

இரண்டு ஆசிரியைமார்களின் கண்களும் பிள்ளைகளையே சுற்றி வலம் வந்து கொண்டிருந்தன.

அவர்களின் முகங்களில் களைப்பிருந்தது.

அந்தக் கோடையின் வெப்பம் பஸ்ஸினுள் புழுக்கத்தை அதிகரித்திருந்தது. சிலர் வெப்பம் தாங்க முடியாமல்

"உஸ் . . . உஸ்"என யன்னல்களைத் திறந்தனர்.

சிறுவர்களை வெப்பம் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாக்கவில்லை. பஸ் ஒவ்வொரு தரிப்பில் நிற்கும்போதும் "ஓ..." என்று கத்தினார்கள்.

பின் ஆசனத்தைப் பற்றிக்கொண்டு நின்ற சிறுவர் கூட்டத்தில் மஞ்சுவும் நின்றாள். மஞ்சு இலங்கையைச் சேர்ந்தவள். அந்த வகுப்பில்படிக்கும் வெளிநாடுகளைச் சேர்ந்த பிள்ளைகளில் அவளும் ஒருத்தி. இலங்கையரின் கண்களுக்கு அவள் பொதுநிறம். கொஞ்சம் சதைப்பிடிப்புள்ள தேகம். வட்ட முகம். இரண்டு பக்கமும் துருத்திக் கொண்டிருந்த சொக்குகள் நன்கு பழுத்த செம்பாட்டான் மாம்பழங்களை நினையூட்டின. அவளது அகன்ற பெரிய கண்களை அகல விரித்து... முழிகள் பிரட்டி... பின் சிமிட்டி கதை சொல்லும்போது பார்க்க அழகாகவிருக்கும். அவளைத் தெரிந்த தமிழர்கள் அவளைக் "கண்ணழகி" என்றுதான் செல்லமாக அழைத்தார்கள்.


முன் இரண்டு பற்களும் விழுந்து... தற்போதுதான் மீண்டும் முளைக்கத் தொடங்கியிருந்தன. வேறு சில பற்களும் விழுந்திருந்தன. அதனால் அவள் கதைக்கும்போது சொற்களை விடக் காற்றுத் தான் அதிகம் வந்தது.

தலைமயிரை மேலுயர்த்திச் சிவப்புத் துணியால் கட்டி, பின் ஒற்றைப் பின்னலிட்டு பலநிற குஞ்சங்கள் கொண்ட றப்பர் வளையம் போட்டிருந்தாள். முன்னால் விழும் தலைமயிரை வாரி இழுத்து இரு பக்கமும் முயலின் உருவைக் கொண்ட கிளிப்புகள் குத்தியிருந்தாள். அவளுக்கு மிகவும் பிடித்த சிறுவர் படமொன்றின் காட்சியொன்றமைந்த மஞ்சள் டீசேற்றும், சிவப்பும் பச்சையும் கட்டம் போட்ட சுருக்கு வைத்த கட்டைப்பாவாடையும் அணிந்திருந்தாள்.

அவள் அருகில் துருக்கியைச் சேர்ந்த சக்கியேவும், ஆபிரிக்காவைச் சேர்ந்த அனாவும், ஜேர்மன் சிறுமியான மெலானியும் நின்றனர். அவர்கள், தாம் பார்த்த பாம்புகளைப் பற்றி பயத்துடனும், அருவருப்புடனும் விபரித்துக் கொண்டிருந்தார்கள். தாம் கண்ட பாம்புகளின் அளவுகளைக் கைகளால் காட்டி வியந்து கொண்டார்கள்.

அனா பெங்குயின்களின் நடையைப் போல நடந்து காட்ட முயற்சித்து, பஸ்ஸில் விழப் பார்க்க, எல்லோரும் சிரித்தார்கள்.

அவர்கள் குதூகலமே உருவாக இருந்தார்கள்.




மஞ்சு தான் இலங்கைக்குப் போயிருந்தபோது மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்ற அனுபவத்தைக் கண்களைச் சிமிட்டிக் கொண்டு விபரித்தாள். தான் யானை மீது சவாரி செய்தது, யானை நடனம் பார்த்தது பற்றிப் பெருமிதத்துடன் கூற . . . அவளது நண்பிகள் ஆவலாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

முன் இருக்கையில் இரு இடங்கள் காலியாக, அனாவும் மஞ்சுவும் போய் அமர்ந்தார்கள். சக்கியேவும் மெலானியும் இவர்களின் இருக்கைகளைப் பிடித்துக் கொண்டு நின்றனர். அவர்களுக்கு முன்பாக இருந்த இருக்கையில் நடுத்தர வயதைச் சேர்ந்த இரு ஜேர்மானியர்கள் அமர்ந்திருந்தனர். பஸ்ஸில் இப்போது சனநெரிசல் சற்று தளர்ந்திருந்தது.

அனா தனக்கு புதிதாகக் கிடைத்த ஸ்டிக்கர்களை மஞ்சுவுக்கும், சக்கியேவுக்கும், மெலானிக்கும் காட்டிக் கொண்டிருந்தாள். முன்னாசனத்தில் அமர்ந்திருந்தவர்களில் ஒருவர் இவர்கள் இருவரையும் சிறிது நேரம் முறைத்துப் பார்த்துவிட்டு "இப்ப இங்கு வெளிநாட்டு ஆக்களின்ரை தொல்லை கூடிட்டுது... நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள்... உங்களின்ரை நாட்டுக்குப் போங்கோ..." என்று கத்தினான்.

மஞ்சுவிற்கும் அனாவிற்கும் அவர் சொன்னவற்றின் அர்த்தம் முழுமையாகப் புரியாவிட்டாலும், அவர் தம்மைப் பேசுகிறார் என்பது மட்டும் புரிந்தது. ஆனால் காரணம் புரியவில்லை.

அவர்கள் மூவருமே ஜேர்மனியில் பிறந்தவர்கள். சொந்த நாடு என்னும் பதம் புரியும் வயதல்ல அவர்களுக்கு. அனா பயத்தினால் ஸ்டிக்கர்களை மறுபடியும் தனது பைக்குள் எடுத்து வைத்தாள். அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். ஏனைய பயணிகள் இவர்களையேபார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பார்வைகள் இவர்கள் மாபெரும் தவறொன்றை இழைத்து விட்டார்கள் எனச் சொல்வது போல் இருந்தது.

அவர்களுக்கு வெட்கமாகவும் அழுகையாகவும் இருந்தது.

ஏன் தமது சகபயணிகள் பேசாதிருக்கிறார்கள் எனக் கோபமாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிருக்கை மனிதர் "உங்களை இங்கு எமக்கு வேண்டாம்... திரும்பிப் போங்கள்" எனத் தொடர்ந்து தனது இனவாதத்தை எந்தவித எதிர்ப்புமின்றிச் சுதந்திரமாக வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவர் எதுவும் கேட்காதவர்போல்தான் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையில் மூழ்கி இருந்தார்.

மஞ்சுவும் அனாவும் தமது ஆசிரியைகள் இருக்குமிடத்தை ஏக்கத்தோடு பார்த்தனர். அவர்களிடம் எழும்பிச் செல்லும் பயத்தில், ஒருவரையொருவர் பார்த்து முழித்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிதுநேர மௌனத்தின் பின் மீண்டும் ஏனையோரின் மிருகக்காட்சிச்சாலை பற்றிய பேச்சுக்கள் தொடர்ந்தன.

"அடுத்த தரிப்பிடத்தில் இறங்க வேண்டும்" என்ற ஆசிரியைகளின் கட்டளையைக் கேட்டு எல்லோரும் எழுந்து தமது கைகளை இணைத்து இறங்குவதற்கு ஆயத்தமானார்கள்.


மஞ்சு எழுந்து அனாவின் கையைப் பிடித்துக்கொண்டு, முன்னிருக்கை மனிதரைக் கடைக்கண்ணால் பார்த்து விட்டு இறங்குவதற்கு ஆயத்தமாகையில் அவளது தோற்பை அம்மனிதரின் முகத்தில் தவறுதலாகப் பட்டது. இவள் மன்னிப்புக் கோருவதற்கிடையில் "கறுப்பு நேகரின்..." என்று கத்தியபடி இவளைத் தள்ளிவிட்டார். முகங் குப்புற விழப்போனவளை, எழுந்து நின்று பயணம் செய்த ஓர் வயோதிப மாது இவளைப் பிடித்து நிமிர்த்தினார்.

பஸ்ஸை விட்டுக் கீழிறங்கிய பின்பும் மஞ்சு அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. சக்கியேவும் மெலானியும் நடந்தவற்றை ஆசிரியைகளுக்கு விளக்கினார்கள்.

"நீங்கள் கவலைப்படாதையுங்கோ... இப்படிச் சில மோசமான மனிதர்கள் இங்கிருக்கிறார்கள். நல்லவர்களும் இருக்கிறார்கள்" என ஆசிரியைகள் இவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

ஆனால் மஞ்சுவிற்கு அழுகையழுகையாக வந்தது. அவளுக்கு இதற்கு முன்பும் இதுபோன்று 'கருப்பி','நேகர்' என்ற பதங்களைக் கேட்டிருக்கிறாள். தன்னை ஏன் எல்லோரும் பேசுகிறார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை. அவளது சின்ன மூளையைக் கேள்விகள் துளைத்துக் காயப்படுத்தின. ஆனால் அவளால் எந்தவொரு விடையையும் காணமுடியவில்லை.

அன்றொரு நாள் அவள் வீதிக்குக் குறுக்கே ஓடுகையில் ஒரு வயோதிபப் பெண் இவளை "து கினேசின்" (நீ சீனாக் காரி) என்று சொன்னபோது "நான் சிலோன் தானே பிறகேன் என்னை இவ சீனாக்காரி எனச் சொல்கிறா" என யோசித்தாள். பின்பு அவள் அதை மறந்துவிட்டாள்.



வழமைபோலவே தனது வீட்டை அடைவதற்கு அவள் கடைகள் நிறைந்த அந்த வீதியினூடாகவே நடந்து வந்தாள். கடைகளில் விலை குறைக்கப்பட்ட பொருட்களைச் சுற்றி நிற்கும் மனிதர், ஐஸ்கிறீம் கடைக்காரன், தெருப்பாடகர்கள், சிற்றுண்டிக்கடைகள் இவை எதிலும் அவள் இன்று கவனம் செலுத்தவில்லை. மற்றைய நாட்களில் ஐஸ்கிறீம் களைப் பார்த்து வாயூறி, ஏனையவற்றையும் பார்த்தபடி ஒரு அரை மணி நேரமாவது அந்தத் தெருவில் செலவழிப்பாள். ஆனால் இன்று அவள் தலை கவிழ்ந்திருந்தது. யோசித்தபடியே நடந்து கொண்டிருந்தாள். அவள் முதுகில் தொங்கிய டினோசவுரியர் உருவங்களைக்கொண்ட பை இன்று வழமையை விடக் கனத்தது.

இவள் பாடசாலையில் சேர்ந்த ஆரம்பத்தில், உயர்வகுப்பொன்றில் படிக்கும் மாணவனான கெவின் இவளையும் அனாவையும் இப்படிப் பேசியிருக்கிறான். இவர்கள் இடைவேளை நேரத்தில் விளையாடும்போது "நீங்கள் ஊத்தை... குளிக்கிறதில்லையா?நேகரினன்... கறுப்பர்" என நக்கலடித்திருக்கிறான்.

பல சமயங்களில் மஞ்சு இவற்றை உடனுக்குடன் மறந்து போய்விடுவாள். ஆனால் கெவின் இவளை ஏதாவது சொல்லி தொடர்ந்தும் பேசிக் கொண்டேயிருந்தான்.

ஒருநாள் அவள் தனது தாய் மாலதியிடம் போய் முறையிட்டபோது "அவனுக்கு விசர்... என்ரை குஞ்சு கறுப்பில்லை... ஆபிரிக்காவில் இருப்பவர்கள் தான் நேகர்" என மாலதி இவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு, அடுத்து நிகழ்ந்த பெற்றோர் கூட்டத்தில் இவள் ஆசிரியையுடன் கதைத்திருந்தாள்.

அதன்பின்பு மஞ்சு தமது நண்பிகளுடன் கெவின் இல்லாத இடமாகப் பார்த்து விளையாடினாள். சற்றுக் காலத்திற்குப் பின் அவன் வேறு பாடசாலைக்கு மாற்றலாகிப் போனதன் பின், மஞ்சு மறுபடியும் பாடசாலையெங்கும் உல்லாசமாக விளையாடினாள்.

அவள் கெவினை மறந்திருந்தாள். இன்றையச் சம்பவம் நீண்ட நாட்களுக்குப் பின் கெவினை அவள் நினைவிற்குக் கொண்டு வந்தது.

இதுபற்றி அவள் வீட்டிலும் வந்து சொன்னாள். மாலதியும் தங்கராசாவும் பயந்திருந்தாலும் இவளுக்குக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

▼▼▼

சிறிது நாட்களிற்குப் பின் மஞ்சு மீண்டும் கலகலப்பானாள். தனக்கொன்றும் நிகழாததுபோல் எங்கும் திரிந்தாள். தனது நண்பிகளுடனும் தனது தம்பியுடனும் சிறுவர் விளையாட்டுத் திடலுக்குப் போய் விளையாடி வந்தாள். மஞ்சுவிற்கு அங்கு செல்வதென்றால் கொள்ளை ஆசை. அவள் தம்பிக்கும் அப்படித்தான்.

இரண்டு பேரும் மதியச் சாப்பாட்டிற்குப் பின் எப்படியும் சாக்குப் போக்குச் சொல்லித் தாயைச் சமாதானப்படுத்திவிட்டு, பக்கத்து வீட்டுச் சிறுமி காரினுடன் அங்கு சென்று விடுவார்கள். அவர்கள் அங்கு விளையாடத் தொடங்கினார்கள் என்றால் மாலதி போய்க் கூட்டிக்கொண்டு வரமட்டும் விளையாட்டுத்தான். ஊஞ்சலாடி, மரக்குதிரையிலேறி, சறுக்கியில் விளையாடி, கயிற்றினால் செய்யப்பட்ட கட்டில் போன்ற ஊஞ்சலில் ஏறி விளையாடி தம் குழந்தை உலகத்தை முழுமையாக அனுபவித்து விட்டுத்தான் மாலதியுடன் வீட்டிற்கு வர மனமில்லாமல் அழுதழுது வருவார்கள்.

▼▼▼

அன்று அவர்கள் குடும்ப நண்பர்களான மகேந்திரன் - ராஜி குடும்பத்தினர் மதிய உணவிற்கு வருவதாகவிருந்தது. மாலதி மும்முரமாக சமையலில் ஈடுபட்டிருந்தாள். ஆட்டிறைச்சியை வெட்டிக் கொடுத்துவிட்டு தங்கராஜா வரவேற்பறையிலிருந்து குழந்தைகளுடன் சிறுவர் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டிருந்தார்.

வழமையாக நிகழ்ச்சிகளை ரசித்துப் பார்க்கும் மஞ்சுவும் அஜந்தும் அன்று வரப் போகும் தமது நண்பர்களான அனிதாவினதும் சதீஸினதும் வருகைக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி தந்தையை விசாரிப்பதும் யன்னலினூடாக எட்டிப்பார்ப்பதும், மணியோசை கேட்பதுபோல கற்பனை செய்து கதவருகே ஓடுவதுமாய் இருந்தார்கள்.

அவர்களின் ஆவல் எல்லையைக் கடப்பதற்கிடையில் அவர்கள் வந்து விட்டார்கள்.

ஒருவரையொருவர் ஆரத்தழுவிக்குதுகலித்துத் துள்ளினார்கள். மஞ்சுவும் அஜந்தும் தமக்கு இலங்கையில் கிடைத்த பரிசுப் பொருட்களைத் தமது நண்பர்களுக்குப் பெருமிதத்துடன் காட்டினார்கள்.

சிறிதுநேர விளையாட்டிற்குப் பின் உணவருந்துவதற்காக வரவேற்பறைக்கு அழைக்கப்பட்டார்கள்.

அன்று மஞ்சுவிற்கு நடந்தது பற்றி நண்பர்களுக்கிடையில் அலசப்பட்டது. ராஜி தனது மகளுக்கும் பாடசாலையில் ஆரம்பத்தில் இதுபோன்ற பிரச்சனைகள் நடந்ததென்றும் அவை இப்போதில்லை என்றும் கூறினாள்.

எல்லோருக்கும் உணவு பரிமாறப் பட்டிருந்தது.

"இவங்கள் திருப்பியும் தொடங்குவாங்கள் போல கிடக்கு. இவ்வளவு கஸ்டப் பட்டும் பாடம் படிக்கவில்லைப் போல கிடக்கு" தங்கராசா கவலையுடன் தெரிவித்தார்.

தாய்மார்கள் மிகவும் சிரமப்பட்டுப் பிள்ளைகளுக்கு உணவூட்டிக் கொண்டிருந்தார்கள். மஞ்சு மிகவும் உன்னிப்பாக அவர்களின் உரையாடலை அவதானித்துக் கொண்டிருந்தாள்.

தமக்கு ஜேர்மன்பாஸ்போர்ட் என்பதால் தம்மை இலகுவாக ஒன்றும் செய்யமுடியாதென மகேந்திரன் பெருமையுடன் தெரிவித்தார்.

"அவங்களுக்கு எல்லோரும் ஒன்றுதான்..." என கொடுப்புக்குள் சிரித்த படி கூறிக் கொண்டு தங்கராசா தனது கோப்பையை நிரப்பினார். மாலதி விருந்தினருக்கு கறிகளை இடைக்கிடை பரிமாறி அவர் களை நன்கு கவனித்துக் கொண்டி ருந்தாள்.

மஞ்சுவும் ஏனைய பிள்ளைகளும் உணவருந்தி கிடைக்கப்போகும் ஐஸ்கிறீமிற்காக பொறுமையிழந்து காத்திருந்தார்கள்.

தொடர்ந்து நாஸிக்காலத்தில் ஜேர்மனியில் நடந்த கொடுமைகளைப்பற்றி அளவளாவிக் கொண்டிருந்தனர்.

இப்போது எல்லோரும் ஐஸ்கிறீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"நான் கேட்க மறந்திட்டன்... வீடு பார்க்க போனீங்கள்... என்ன முடிவெடுத்தியள்" மாலதி ராஜியைப்பார்த்துக் கேட்டாள்.

"வீடு நல்லம்... அது துருக்கி ஆக்களின்ரை ஏரியா... அதுக்குள்ளை போனால் வீண் பிரச்சனை... சொந்த வீட்டிலை நிம்மதியாக இருக்கவேணும்" ராஜி சலிப்புடன் பதிலளித்துவிட்டு சாப்பிட்ட கோப்பைகளை ஒன்றாக அடுக்கினாள். மாலதியும் அவளது கருத்தை ஏற்றுக்கொள்வதுபோல் தலையாட்டிவிட்டு "நாங்களும் வீடு தேடுறம். கீழ் வீட்டுக்காரர் எங்கடை பிள்ளையள் சத்தம் எண்டு ஒரே பிரச்சனை" கவலையுடன் கூறிவிட்டு பாத்திரங்களை எடுத்துக்கொண்டு சமையலறைக்குச் சென்றாள். ராஜியும் பின்தொடர்ந்தாள்.

வரவேற்பறையில் மகேந்திரன் தான் விரைவில் ஜேர்மன் பாஸ்போர்ட் எடுத்துவிட்ட கெட்டித்தனத்தை தங்கராசாவுக்கு பறைசாற்றி அவரையும் விண்ணப்பிக்கும்படி ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தார்.

பிள்ளைகள் தமக்கு சம்பந்தமற்ற பெரியோர்களின் உலகத்தைவிட்டு தமக்கு பரிச்சயமான டினோசவுரியாக்களுடனும் பாபிக்களுடனும் தமதறையில் ஐக்கியமாகியிருந்தார்கள்.

▼▼▼

மஞ்சு தனதறையிலிருந்து தனது பாபிக்கு புதுச்சட்டை அணிவித்து தலைக்கு ஒற்றைப்பின்னலிட்டுக் கொண்டிருந்தாள்.

"மஞ்சு... மஞ்சு... இங்க வா பிள்ளை..."

தாயின் அழைப்பை உதாசீனம் செய்துவிட்டு, பாபியை ஸ்கூட்டரில்வைத்து அறையைச் சுற்றி வலம் வந்தாள்.

பலமுறை அழைத்தும் மஞ்சு செல்லாதபடியால் மாலதி அறைக்குள் வந்தாள். அஜந்தும் சிணுங்கிக்கொண்டு பின்னால் வந்தான்.

"மஞ்சு... தம்பி அழுகிறான்... ஸ்பீல் பிளட்ஸுக்குப் (சிறுவர் விளையாட்டுத் திடல்) போகவேணுமாம்."

"நான் அங்க போகயில்லை..."

மாலதிக்கு ஆச்சரியமாகவிருந்தது. வழமையாக சொல்வதற்கு முதல் ஆயத்தமாகிவிடுவாள். சில நாட்களாக அவள் தனதறையிலேயே விளையாடுவதை மாலதி அவதானித்திருந்தாள். அதற்கு அவளுக்கு புதிதாகக் கிடைத்த ஸ்கூட்டரில் அமர்ந்த பாபிப்பொம்மை தான் காரணமென்று அவள் நினைத்திருந்தாள்..

"ஏன் போகயில்லை... நல்ல குஞ்செல்லே... அம்மாவிற்கு இங்க கையில வேலையிருக்கு... தம்பி அழுகிறான் போய் விளையாடிற்று வாங்கோவன்... சயிக்கிள்களையும் கொண்டு போங்கோ... எடுத்துத் தாறன்."

மாலதி கடைசி உத்தியையும் பாவித்தாள். மஞ்சு அதற்கும் மசியவில்லை. தலையை சற்று உயர்த்தி... கடுமையாக முகத்தை பாவம் செய்து "எனக்கு பயம்... நான் போகயில்லை" என்ற அவளின் குரலில் பயமும் கெஞ்சலும் தெரிந்தது.

"ஏன் பயம்... என்ன நடந்தது...?" அவள் குரலில் பதற்றம் தெரிந்தது.

"அன்றைக்கு ரெண்டு டொச்சுக்காரர் எங்களைப் பேசினவை.. அங்க விளையாட வேண்டாம்... நேகர்... என்று எங்களைக் கலைச்சவை..."

"இது எப்ப நடந்தது... ஏன் என்னட்ட சொல்ல இல்லை..." ஆச்சரியத்துடன் கேட்ட மாலதிக்கு, போனகிழமை மஞ்சுவும் சக்கியேவும் விளையாடப்போய்... வழமைக்கு மாறாகச் சீக்கிரம் பயத்துடன் திரும்பி வந்தது நினைவிற்கு வந்தது. ஏனென அவள் கேட்டதற்கு, தாங்கள் இங்கு விளையாடப் போவதாகக் கூறினார்கள். அவளும் விட்டுவிட்டாள்.

அஜந்தை ஒருவாறு சமாதானப் படுத்தி... சிறுவர் படமொன்றைப் பார்க்கச் சம்மதிக்க வைத்தாள் மாலதி சிறிது நேரத்தில் அவன் ஸ்பீல்பிளட்ஸை மறந்து போனான்.

மறுநாள் கடையிலிருந்து வரும்போது சிறுவர் விளையாட்டுத் திடலைக் கடக்கையில் தற்செயலாக மாலதி அதைக் கவனித்தாள்.

குழந்தைகள் ஏறி விளையாடும் வீடு போன்ற மரக்கட்டிடத்தில் 'நாசிச்சின்னம்' வரையப்பட்டிருந்தது.

அவள் ஒரு கணம் அதிர்ந்து போனாள். அதில் தரித்து நிற்க விரும்பாமல் தனது நடையைத் துரிதப்படுத்தினாள்.

மஞ்சு சொன்னவை அவள் நினைவிற்கு வந்தது.

மஞ்சுவின் குணாதிசயங்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை அவள் அவதானித்திருந்தாள். முன்பு மிகவும் துணிச்சலாக இருந்தவள் இப்போது மிகவும் பயந்த சுபாவம் கொண்டவளாக மாறியிருப்பதை நினைத்துப் பார்த்தாள். அவளுக்கு அழுகை வந்தது.

அதற்குப்பின் அவள் மஞ்சுவை விளையாடச் செல்லும்படி வற்புறுத்தவில்லை. அவள் தனதறையில் தனது பாபியுடன் விளையாடினாள்.

அஜந்த் அடிக்கடி வெளியில் சென்று விளையாட அனுமதி தரும்படி கேட்டழுதான். தமக்கையுடன் அடிக்கடி சண்டை பிடித்தான். எல்லாவற்றிலும் முரண்டு பிடித்தான். அவனுக்கும் வீட்டில் வைத்து விளையாடுவதற்கான புதிதாக பொலிஸ்காரொன்று வாங்கிக் கொடுக்கப் பட்டிருந்தது. ❏



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத்துவத்திலிருந்து பின்நவீனம் வரை

கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன்

1 பின்நவீனத்துவம் இப்பொழுதெல்லாம் ஒரு முக்கி யமான பேசும் பொருளாக பரிணமித்து வருகிறது. இருப்பினும் பின்நவீனத்துவம் இன்னமும் கருத்துருவாக்க நிலையிலேயே இருந்து வருகிறது. இந்த பதம் பற்றிய சர்ச்சைகள் இன்னமும் முடியவில்லை. இது வரையறுக்கப்பட்ட ஒருமுகப்பட்ட செல் நெறியல்ல. உண்மையில் பின்நவீனத்துவம் என்பது ஒரு வாழ் நிலையின் தன்மையினையே சுட்டி நிற்கிறது.

பின்நவீனத்துவம் நவீனத்துவத்தைப் போன்ற ஒரு செல்நெறி யல்ல. அதாவது அது ஒரு போக்கினையோ அல்லது இயக்க நிலைத் தன்மையினையோ குறிக்கவில்லை. மாறாக எமது வாழ் நிலைச்சூழல், அறிவுநிலைச் சூழலின் தன்மை போன்றவற்றைத் தான் குறிக்கிறது. விஞ்ஞான அறிவின் பெருக்கம், முதலா ளித்துவத்தின் அதீத வளர்ச்சி, பரிவர்த்தனை தொழில்நுட்ப வளர்ச்சி எல்லாம் இணைந்து ஏற்படுத்தும் ஒருவகை வாழ் நிலைச் சூழலைத்தான் பின்நவீனத்துவம் குறிப்பதாக நாம் கருதவேண்டும்.

இவ்வகையான வாழ்நிலைச்சூழல் பன்முகப்பட்ட பின்நவீனத் துவ வடிவங்களை (பின்நவீனத்துவங்களை) உருவாக்கி விட்டுள்ளது. இவையனைத்தையும் உள்ளடக்கி நிற்கும் ஒரு பதமாகவே பின்நவீனத்துவம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. பின்நவீனத்தின் முக்கிய பிதாமகர்களாகக் கருதப்படும் இயப் ஹசன் (Ihab Hassan), லியோதாட் ( Lyotard) போன்றவர்கள்கூட பின்நவீனத்துவம் என்ற பதத்தின் பொருத்தப்பாடு பற்றிய சந்தேகங்களை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கட்டுரை பின்நவீனத்துவம் பற்றிய சில அடிப்ப டையான அம்சங்களைப்பற்றி ஆராய்வதுடன் அது எப்படி ஓவி யக் கலையில் வெளிப்படத் தொடங்கியது என்பது பற்றியும் ஆராய்கிறது.

பின்நவீனத்துவம் பற்றி அடிப்படையான சிந்தனைகளை முன்வைத்து கருத்தாக்க உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்களாக நாம் சில சிந்தனையாளரை இனம் காணலாம். இவர்களில் முக்கியமானவர் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த லியோதாட் (Jean François Lyotard)ஆவார். இவரது முக்கியமான சிந்தனைகளை நாம்,

The post modern condition:- A report on knowledge, Answering the Questions: What is post modrenism? ஆகிய கட்டுரைகளில் காணலாம்.

லியோதாடினது முக்கியமான ஒரு கருத்து 'பொதுமைப் பாடெய்திய பிரதான கருத்தியல்' களின் (Grand Narrative) தோல்வி பற்றியது. பின்நவீனக் காலகட்டத்தை பன்முகத் தன்மையின் (plurality) ஒரு வடிவாக இவர் கருதுகிறார். இதனால் மனித குலத்தில் செல்வாக்குடன் நிலவி வந்த பொது மைப்பாடெய்திய தத்துவங்கள் கருத்தியல்கள் எல்லாம் வலு விழந்து விட்டதாக இவர் கூறுகிறார். இவை பின்நவீனத்து வத்தில் சிறு கருத்தாடல்களால் (little narratives) மாற்றீடு செய்யப்பட்டுள்ளன. அறிவியல்வாதத்தின் போக்கு அடிப்படை களில் ஒரு பூரணத்துவமான ஒருமைப்பாட்டுடன் கூடிய மனித வரலாற்றை (Enlightenment is totalitarian) காண்பதே என இவர் கூறுகிறார்.

லியோதாடினது பார்வைக்கு சற்று மாறுபாடான கோணத்தில் பார்ப்பவர் ஜேர்மன் தேசத்து சிந்தனையாளரான கெபமாஸ் (Jürgen Habermas). இவர் பின்நவீனத்துவத்தை அறிவியல் வாதத்தின் தொடர்ச்சியாகவும் நவீனத்துவத்தின் முற்றுப் பெறாத பகுதியாகவுமே காண்கிறார்.

கெபமாஸின் கருத்துப்படி 19ம் நூற்றாண்டின் நடுப் பகுதிக ளில் அழகியல் நவீனத்துவம் (Aesthetic modernism) கலாச்சார சமூக நவீனத்துவத்திலிருந்து பிரிந்து வேறு திசையில் செல்லத் தொடங்கியது. இந்தப்போக்கு கலைஞரை கலைக்காக கலைப்படைப்புகளை படைக்கத்தூண்டி தனித்துவமான ஒரு பாதையில் செல்ல வகையேற்படுத்தியது. இதுவே இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கான அடிப்படையான காரணமாகக் கருதுகிறார் கெபமாஸ்.

கெபமாஸ் நவீனத்துவம் செயலிழந்து விட்டதாகக் கருத வில்லை. மாறாக சில தவறுகளால் அது நெறி பிறழ்ந்து விட்ட தாகக் கூறுகிறார். கலைத்துவ பரிசோதனைகள், ஒருமைப்பாடு, தன்னடையாளம், ஸ்திரப்பாடு போன்றவை கைவிடப்பட்டு அறி வியல்வாதம் ஆரம்பித்துவைத்த மாற்றங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் என கெபமாஸ் கருதுகிறார். இவரது இந்தக் கருத்துகளை நாம் முக்கியமாக Modernity - An incomplete project என்ற இவரது கட்டுரையில் காணலாம்.

பின்நவீனத்துவ சிந்தனைகளை முன்வைத்த இன்னொரு முக்கிய பிரஞ்சு சிந்தனையாளர் போட்ரியார்ட் (Jean Baudrillard) ஆவார். சுருக்கமாகக் கூறுவதாயின் இவரது சிந்தனை யதார்த் தத்தின் இழப்பைப் பற்றியது. இவரது முக்கியமான சிந்தனைகள் Simulations என்ற நூலில் வெளிப்பட்டுள்ளது. குறிப்பாக The Precision of Simulacra என்ற கட்டுரை முக்கியமானது.

இன்று விம்பங்கள் (images) எம்மை ஆக்கிரமித் துள்ளன. விம்பங்கள், சினிமா, தொலைக்காட்சி தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினால் நாளுக்கு நாள் துலக்கமடைந்து புதிய புதிய பரிமாணங்களை எட்டுகிறது. விம்பங்கள் ஒரு வகையான தூண் டல் காரணிகளாக தொழிற்பட வல்லன.

இவை கற்பனைக்கும் யதார்த்தத்திற்கும் இடைப்பட்ட ஒரு வடிவம்.சில சந்தர்ப்பங்களில் இவை கற்பனையையும் யதார் தத்தையும் மேவி ஒரு புதிய இருப்பினை உணர்த்த வல்லன.

உதாரணமாக இன்று Music Television (MTV) இல் நாம் காணும் புதுக்கி அமைக்கப்பட்ட பழைய பாடல்கள் குறிப்பாக இந் திப்பாடல்கள் புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் பழைய தைவிட (மூலத்தை விட) துலக்கம் பெற்றதாகவும் கவர்ச்சி கரமானதாகவும் வெளிப்படுகிறது. அதேவேளை இவை எமக்கு பழைய மூலத்தை நினைவு படுத்தவும் செய்கிறது. இந் தப் பழையதை நினைவுபடுத்தல் ஒருவகையான இழப்பின் சோக மாக (melancholic) இல்லாது அதற்கு எதிரிடையான ஒரு நினைவு கொள்ளலாகவே (ironic) அமைகிறது. இந்த வகையில் இந்த விம்பம் எமக்கு மூலத்தைவிட பூர்த்தியானதாக முழுமை யான தாக ஒருவகை மிகையதார்த்தத் தன்மையினதாக (hyperreal) அமைகிறது.

இங்கு விம்பம் ஒருவகையில் யதார்த்தத்தை மாற்றீடு செய் வதனை நாம் காண்கிறோம். யதார்த்தத்தை பொய்மையாக்கி விடுகிறது. கற்சிலை தெய்வமாகிவிடுவதைப் போல. இங்கே விம்பம் மூலத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அது மூலத் தின் ஒரு மாற்றீடாகவே செயற்படுகிறது. இப்படியாக விம்பமா னது பல படிகளினூடாக யதார்த்தத்தின் மாற்றீடாக பரிண மித்துள்ளதாக போட்ரியார்ட் கருதுகிறார். இந்த செயற்பாட்டை அவர் நான்கு படிநிலைகளில் காண்கிறார்.

முதலாவது நிலையில் விம்பமானது யதார்த்தத்தை முழு மையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இங்கு யதார்த்தத்தின் தன்மைகள் பெருமளவில் விம்பத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது. இங்கு விம்பம் ஒரு பிரதிநிதித்துவ நிலையில் தொழிற்படுகிறது. இரண்டாவது நிலையில் விம்பமானது யதார்த் தத்தை குழைத்து மெருகூட்ட 'விகார நிலைப்படுத்தி' வழங்கு கிறது. மூன்றாவது நிலையில் இல்லாத ஒரு புற யதார்த்தத்தின் சார்பாக விம்பம் ஒரு 'மாய நிலையில்' தொழிற்படுகிறது. நான காவது நிலையில் விம்பம் யதார்த்தத்துடன் தொடர்புபடாத ஒரு சுயாதீனமான ஒரு மாற்றீடாக (pure simulacrum) தொழிற்படு கிறது.

லியோதாட், கெபமாஸ், போட்ரியார்ட் ஆகியோர் முக்கி யமான பின்நவீனத்துவ சிந்தனைகளை முன்வைத்திருந்தாலும், இவர்களைவிட பலரும் இத்தளத்தில் செயற்பட்டு வருகிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

பின்நவீனத்துவ சிந்தனைகள் இன்று பல்கிப்பெருகி பல துறைகளையும் ஊடுருவியுள்ளது. தத்துவம், கலை இலக்கியம் தொடங்கி விஞ்ஞானம், மருத்துவம் ஈறாக பின்நவீனத்துவத்தின் செல்வாக்கு கால் பதித்துள்ளதை நாம் காணலாம்.

பின்நவீனத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு துறைகளிலும் ஆய்வுகளும் விமர்சனங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமாக பின்நவீனத்துவ செயற்பாடுகள் எவ்வெவ் வகைகளிலே வெளிப்படுகிறது, அது எப்படியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பவையே பிரதா னமாக ஆராயப்படுகின்றன. இந்தக் கருத்துரைப்புத் தளத்திலே பல முக்கியஸ்தர்கள் செயற்படுகிறார்கள். இவர்கள் வாயி லாகவே நாம் பின்நவீனத்துவம் பற்றியும் அதன் செயற்பாட்டு வடிவம் பற்றியும் நாம் அறிந்து கொள்கிறோம். இலக்கியத்திலே இயப் ஹசன் ( Ihab Hassan), ஓவியத்திலே ஆதர் டன்டே (Arthur Dante), கட்டிடக்கலையில் சார்ள்ஸ் ஜெனக் (Charles Jencks), பெண்ணியத்திலே சபீனா லொவிபொன்ட் (Sabina Lovibond) போன்றோர் இத்தளத்திற்கு உரியவர்கள்.

கலையில் பின்நவீனத்துவத்தின் தாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கு கலை இலக்கியம் கடந்து வந்த பாதையினை சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது முக்கியமானது. ஆரம்பத்தில் கலை இலக்கியங்கள் புறத்தில் இருக்கும் உண்மையினைத் தேடின. அவை புறத்தில் தென்பட்ட உண்மையினை பிரதிநிதித் துவப்படுத்தின. அக்காலத்தில் புறத்தே எங்கோ இருக்கும் (out there) உண்மையினை பிரதிநிதித்துவப்படுத்துவதே கலை இலக்கியவாதிகளின் பணியாய் இருந்தது. இந்தக் காலத்தி லேயே நாம் தத்ரூப (realism) படைப்புகளைக் காண்கிறோம்.

இதைத் தொடர்ந்து வந்த அறிவியல் வளர்ச்சிக் காலத்தில் (Enlightenment) தர்க்க ரீதியான விஞ்ஞான ரீதியான அணுகு முறைகளினால் புறத்தில் காண்பவை உண்மைக் காட்சியல்ல. உண்மை அகத்தில்மறைந்து கிடக்கிறது என்ற கருத்து முக்கி யத்துவம் பெறத் தொடங்கியது. இதனால் கலை இலக்கி யத்திலும் அகத்தில் இருக்கும் (inhere) உண்மையை புறத் தோற்றத்தின் மறைவிற்குள் தேடும் போக்கு முதன்மைபெறத் தொடங்கியது. இதன் வெளிப்பாட்டைதான் நாம் நவீனத்து வத்தில் காண்கிறோம்.

இதைத் தொடர்ந்து வந்துள்ள பின்நவீனத்துவத்திலோ புறத்திலும் அகத்திலும் உண்மையில்லை. அப்படி உண்மை என்ற ஒன்று இல்லை அது ஒரு கற்பனை என்ற ஒருவகை ஐயுற வின் உச்சத்திற்கே (Nihilistic) சென்றுள்ளது.

2 இது வரையில் பின்நவீனத்துவம் பற்றிய கருத்துரு வாக்கத்தில் எழுந்துள்ள விளக்கங்களின் அடிப்படையில் பின்நவீனத்துவம் பின்வரும் இயல்புகளை வெளிப்படுத்துவதாக கருதலாம்.

1. விளக்கங்களைக் கோராத நேரடியான, புத்தி ஜீவிதத் திற்கு எதிரான வெளிப்பாடுகள்

2.அர்த்தத்தையும், உள்ளடக்கத்தையும் விட 'நிகழ்வுப் பண்புக்கு' (performance) முக்கியத்துவம் அளித்தல்.

3. கலைஇலக்கியத் தளத்தில் புதிய உணர்வுள்வாங்கல் (new sensibility) பரிமாணத்தை வெளிப்படுத்தல்.

4. உயர்கலை ஜனரஞ்சகக்கலை பழையது புதியது என்ற பாகுபாடுகளைக் கடந்து அவற்றை இணைத்து ஒரு பிணை ப்புருவத்தை (hybride) வழங்குதல்.

5. பல்வேறு கலைவடிவங்கள் இலக்கிய வடிவங்கள் கலைச்சாதனங்கள் எனபவற்றைக் கலந்து பாவித்தல்.

ஓவியக்கலையில் பின்நவீனத்துவத்தின் வெளிப்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கு நவீனத்துவத்தின் பிரதான ஓட்டங் களைப் பற்றிக் கருதுவது பயனுள்ளது. நவீன ஓவியக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது 19ம் நூற்றாண்டின் கடைக்கூற்றிலிருந்து 50களின் முடிவு வரை அல்லது 60களின் தொடக்கம்வரை வியாபிப்பதாகக் கொள்ளலாம். நவீன ஓவியத்தில் இரண்டு பிரதான செயற் பாடுகள் காணப்பட்டன. ஒன்று காட்சியை அல்லது படைப்பை அருபநிலைப்படுத்தல் (Abstraction) அதாவது முக்கியமான சாராம்சத்தை மட்டும் பிரதிபலித்தல். இதன் வெளிப்பாட்டினை நாம் கியூபிசம்(Cubism), அருபவாதம்(Abstractionism) போன்ற வற்றில் காணலாம். கியூபிசத்திலே பொருட்கள் எளிய கேத்திர கணித உருக்களாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும். அருப ஓவி யத்திலோ உருவங்கள் இல்லாது நிறங்களும் ரேகை களுமே காணப்படும்.

நவீன ஓவியத்தில் காணப்பட்ட இரண்டாவது செயற்பாடு உணர்வுத்தளத்தின் வெளிப்பாடாகும். இது உருவ விகாரத் தினாலும் வர்ண விகாரத்தினாலும் ஓவியனின் உணர்வு நிலை யினை பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டது. இந்த இரண்டு தள செயற்பாடுகளின் இணைவாகவும் நவீனத்தின் உச்சமாகவும் அமைந்து நிற்பதுதான் அருப வெளிப்பாட்டு வாதம் (Abstract expressionism) . இந்நிலை 50களில் எய்தப் பட்டது. இதன் பின்னர் நவீன ஓவியம் நெருக்கடிக்கு உள்ளானது.

இந்த நெருக்கடிக்கு இரண்டு காரணங்களை நாம் கூறலாம். ஒன்று நவீன ஓவியம் ஓவியனின் தன்னடையாளத்தை அதீத மாக முதன்மைப்படுத்தியமை. அதாவது ஓவியனுக்கென ஒரு தனித்துவமான பாணி, தனித்துவமான ஓவியமொழி போன் றவற்றை நவீன ஓவியம் போற்றியது. இது காலப்போக்கில் ஓவியத்தைவிட ஓவியனை முன்னிலைப்படுத்தியது. இரண்டா வதாக நவீன ஓவியம் ஓவியச்சந்தையை மையப்படுத்தி ஓவியச் சந்தைக்காக ஓவியம் படைக்கும் ஒரு போக்கினையும் தோற்று வித்திருந்தது. இதனால் ஓவியம் ஒரு சந்தைப்பொருளாக மாறுவதைத் தவிர்த்து அதன் கலைத்தன்மையையும் கருத்துக் களையும் மீட்டெடுக்க வேண்டிய ஒரு தேவை உணரப்படத் தொடங்கியது.

நவீன ஓவியரான வில்லியம் த கூனிங் (William de Kooning) தனது புகழ் பெற்ற பெண (Woman) என்ற தொடரை வரைந்து கொண்டிருந்த அதே காலகட்டத்தில் (1953 அளவில்) லரி ரிவர்ஸ் (Larry Rivers) என்ற ஓவியர் நவீன ஓவியத்தின் கருப்பொ ருட்களில் சில மாற்றங்களைச் செய்யத் தொடங்கி யிருந்தார். 'வாஷிங்டன் டெலவயரைக் கடத்தல்' (Washington crossing Delaware) என்ற 19ம் நூற்றாண்டு ஓவியத்தை பகுதி அருபப்பா ணியில் இவர் மீள் உருவாக்கம் செய்தார். இதன் முக்கியத்துவம் என்னவெனில் நவீன ஓவியத்தில் இப்படியான கருப்பொருட்கள் ஒவ்வாத, ஏற்றுக் கொள்ளப்படாத வகை யினதாக இருந்தது. இதனால் இது நவீன ஓவியத்தின் ஓவிய கருப்பொருள் பற்றிய நிலையில் ஒரு நகர்வைக் குறிக்கும் சந்தர்ப்பமாகக் கருதப்படு கிறது. இதனைத் தொடர்ந்து அலன் காப்ரோவ் (Allen Kaprow) போன்றோர் ஓவியத்திலே நேரடி அனுபவத்தை முதன்மை யானதாகக் கருதினர். அவர்கள் ஓவியனின் தனித்துவத்தை வலியுறுத்துவதை விடுத்து நிலையில்லாத நாளாந்தம் நாம் சந்திக்கும் தகரம், இரும்புச் சாமான்கள், காகிதம், புல், பூண்டு போன்றவற்றை ஓவியத்தில் பாவிப்பதைத் தூண் டினார்கள். 59, 60களில் இப்படியான சமூக விமர்சனத்துடன் கூடிய கழிவுப் பொரு ட்கள் ஓவியத்தில் முதன்மை பெறத் தொடங்கியது. இதனை Junk Art என்றும் அழைப்பர்.

இவ்வகை ஓவியங்களைப் படைப்பதில் ஜெஸ்பர் ஜோன்ஸ் (Jasper Jones), ரொபர்ட் ரொஷன்பேர்க ( Robert Rauschenberg) ஆகி யோர் முன்னணியில் திகழ்ந்தனர். ரொபர்ட் ரொஷன்பேர்க்கின் 'கட்டில்' (Bed) என்ற ஓவியம் அவரது படைப்புக்களில் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. இதனை அவர் காட்சிப்படுத்தியபோது அது வரன்முறையான ரசனையை மீறியதனால் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. இந்த ஓவியத்தை உருவாக்குகிறபொழுது தன் னிடம் போதியளவு கான்வஸ் (canvas) இல்லாததால் அந்த இடை வெளியை நிரப்புவதற்கு தனது சொந்தப் படுக்கை விரிப்பின் (Bed sheet) ஒரு பகுதியைப் பாவித்தார். இதிலே முக்கியமாக அவரது நாளாந்த வாழ்க்கை எந்த மறைவுகளுமின்றி நேரடியாகவே வெளிப்பட்டது.

இதேபோல தொகுப்பு முறைச்சிற்பமும் (Assemblage Sculpture) சாதாரண இரும்புக் கழிவுகள், மோட்டார் வாகன பாகங்கள் போன்ற பொருட்களின் தொகுப்பால் உருவாக்கப்படும் சிற்பங்க ளாகும். இந்த சிற்பங்களின் பாகங்கள் தனித்து வெவ்வேறான செயற்பாடுகளைக் கொண்டிருந்தாலும் இவை தொகுக் கப்படும்பொழுது அதன் செயற்பாட்டுத் தளம் மாற்றமடைகிறது.

கழிவுப்பொருட்களின் பாவனை கலையிலே அவ்வப்போது வந்து போயிருந்தாலும் இதனை முதன்மைப்படுத்தியவர் மார்செல் டுஷாம் (Marcel Duchamp) ஆவார். இவர் சாதாரண வீட்டுக் கழிவுப்பொருட்களை ஓவியத்திலும் சிற்பங்களிலும் பயன்படுத்தினார். இவர் ஒருதடவை சிறுநீர் கழிப்பானையும் (Urinal) இரும்பு புத்தகத்தட்டையும் கண்காட்சியில் வைத்துப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தினார். இவ்வகையான அணுகு முறை 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கையாளப்பட்டி ருந்தாலும் இவரது அணுகுமுறைதான் இவ்வகை ஓவியங்க ளுக்கு முக்கியமான உந்துசக்தியாக இருந்தது.

60களில் 'கலைத்துவ கவர்ச்சியற்ற' நாம் நாளாந்தம் எதிர் கொள்ளும் விளம்பரப் பொருட்களும் ஓவியத்திலே பாவிக்கப் பட்டன. இந்த வகை ஓவியத்தை அன்டி வோல் (Andy Warhol) போன்றவர்கள் முன்னெடுத்தார்கள். இது லோரன்ஸ் இனால் (Lawrance Allowme) 'வெகுசன ஓவியம்' என்ற பெயரில் 1958ல் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாட்டின் அமெரிக்க வடிவமாக அமைந்தது. இந்த வகை ஓவியத்திற்கு அன்டி வோலின் 'பிரிலோ பொக்ஸ்'(Brillo Boxes) என்ற ஓவியத்தை உதாரணமாகக் கருதலாம். இந்த வெகுஜன ஓவியர்கள் (Pop artist) 1962ம் ஆண்டில் 'புதிய தத்ருபம்' என்ற தலைப்பில் நியூயோர்க்கில் ஒரு கண்காட்சியை நடாத்தினார்கள். 1962ம் ஆண்டு இவர்களது செயற்பாட்டின் முக்கிய காலமாகும்.

நவீன ஓவியத்திலே ஓவியம் சிக்கலானதாக எளிதில் விளங்க முடியாததாக அமைக்கப்பட்டிருக்கும். நவீன ஓவியத் தின் சிக்கற்தன்மை, அதன் மறைபொருள்தன்மை என்பவை சிக்கலடைகையில் ஓவியத்தின் தரம் உயர்வதாகக் கருதப் பட்டது. இவ்வகையான சிக்கற்தன்மையும் வலிந்து கொடுக் கப்பட்ட விளக்கங்களும் 60களிலே முக்கியத்துவம் இழக்கத் தொடங்கின. இதனால் ஓவிய உள்ளடக்கத்தை விட ஓவியம் பற் றிய கருத்து முக்கியத்துவமடையத் தொடங்கியது.

இந்தவகையான சிந்தனையின் வழிவந்ததுதான் 'எளிய ஓவியம்' (minimal art). இந்தவகை ஓவியங்களை பிரான் ஸ்டெலா (Frans Stella) ஆரம்பித்திருந்தாலும் பின்னர் அக்னஸ் மார்டின், ரொபர்ட் ரைமன், பிரைஸ் மார்டன் போன்றோராலேயே முன்னெ டுத்துச் செல்லப்பட்டது. இவர்களது ஓவியங்கள் உண்மையில் நவீனத்தின் அந்தமாகக் கொள்ளப்பட வேண்டும். இவர்கள் 1966ம் ஆண்டு தமது 'முதன்மையான அமைப்புகள்' (primary structures) என்ற கண்காட்சி மூலம் பொதுவான அங்கீகாரம் பெற்றார்கள். ஜட் (Judd) இனது கருத்துப்படி ஐரோப்பிய ஓவியம் மாயையான வெளியை ஏற்படுத்துவதை முதன்மையாகக் கொண்டிருந்ததாகவும் இந்த மாயையை விடுத்து உண்மையான வெளியை அதன் தன்மையை நேரடி யாகக் காட்டக்கூடியது எளியஓவியங்களும் சிற்பங்களும் ஆகும். இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக டோனி ஸ்மித்தின் (Tony Smith) Moses என்ற உலோக அமைப்பைக் கூறலாம். இவர்கள் ஓவியம் சிற்பம் என பவை பார்த்த உடனேயே அவற்றின் அமைப்பு பற்றிய முழுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தையும் பார்வையாளன் உள் வாங்கும் வகையில் அமையவேண்டும் எனக் கருதினர். மறை பொருளற்ற நேரடித் தன்மையை இவர்கள் முன்வைத்தனர்.

'முதன்மையான அமைப்புகள்' என்ற கண்காட்சியில் பங்குபற்றிய «சொல் லெவிட்» என்ற ஓவியர் 60களின் கடைக் கூற்றில் 'கருத்துநிலை ஓவியம்' (Conceptual art) என்ற ஒருவகை ஓவிய வகையினை முன்வைத்தார். ஓவியத்தை விட ஓவியனின் கருத்தே முக்கியமானது என இவர் கருதினார். ஓவியனின் கருத்து, ஓவியத்தை உருவாக்கும் முறை பற்றிய கருத்து ஓவியத்தை விட பெறுமதி மிக்கது என்ற கருத்தை, 'கருத்துநிலை ஓவியம்' பிரபல்யப்படுத்தியது.

60களின் கடைசியிலும் 70களின் ஆரம்பங்களிலும் கருத்துநிலை ஓவியம் பலரையும் கவர்ந்தது. கருத்துநிலை ஓவியம் மிக சிக்கலான முறையில் கைக்கொள்ளப்பட வேண்டியது என சிலர் கருதினர். இருதள பரிமாணத்தில் வெளிப்படுத்தப்படக்கூடிய கருப்பொருட்களுக்கு முத்தளபரிமாணம் பாவிக்கப்படக்கூடாது, கருத்துகள் எண்ணிக்கைகளாகவோ, புகைப்படங்களாகவோ, வசனங்களாகவோ முன்வைக்கப்படலாம். வடிவம் முக்கியமானதல்ல என இவர்கள் கருதினர். இவர்கள் ஓவியத்தில் மொழியியலின் தாக்கத்தைப்பற்றி அதிக ஈடுபாட்டைக் காட்டினர்.

ரொபர்ட் பரி என்ற கருத்துநிலை ஓவியர் வசனத் தொகுப்பை பெருமளவில் ஓவியத்தில் கையாண்டார். இவர் தகவல் (Information) என்ற கண்காட்சியில் பின்வரும் வசனத்தொடரைக் காட்சிப்படுத்தினார்.

கலைப்படைப்பு 1970

*அது எப்பொழுதும் மாற்றமடைந்து கொண்டிருக்கும்*
*அதிலே ஒழுங்கு இருக்கும்*
*அதற்கு குறித்த ஒரு இடம் இல்லை*
*அதன் எல்லைகள் வரையறுக்கப்படாதவை*
*அது பிற பொருட்களையும் பாதிக்கும்*
*அது அணுகப்படக் கூடியதாக இருந்தாலும்*
*கவனிக்கப்படாது போகும்*
*அதன் பகுதி வேறொன்றின் பகுதியாகக்கூட இருக்கலாம்*
*அதன் ஏதோ ஒரு பகுதி பரிச்சயமானது*
*அதன் ஒரு பகுதி விநோதமானது*
*அதைப்பற்றி அறிவது அதை மாற்றக்கூடியது*

நவீனத்துவத்தின் முடிவுடன் பழையபாணிகளும் புதுப்பொழிவுடன் ஓவியத்தில் நுழைய ஆரம்பித்தன. அவை முற்றிலும் பழமையாக இல்லாது புதிய பரிமாணத்தில் வெளிப்பட்டன. இதில் முக்கியமானது மிகை யதார்த்தம் (Super realism) என்ற ஒரு வகைப் பிரிவாகும். இது அடிப்படையில் தத்ரூபப் பாணியைப் போன்றது. இதிலே பிலிப் பேர்ன்ஸ்டைன். அல் லெஸ்லி, ரிச்சார்ட் எஸ்தி போன்றோர் முக்கியமான ஓவியர்களாயிருந்தார்கள்.

இந்த மிகையதார்த்தக் குழுவினர் 1972ம் ஆண்டு கூர்மையான மைய யதார்த்தம் (Sharp focus realism) என்ற தமது கண்காட்சியின் மூலம் பொதுவான அங்கீகாரம் பெற்றனர். சில வேளைகளில் இது புகைப்பட யதார்த்தம் (Photo realism) என வும் அழைக்கப்படுகிறது. இந்தவகை ஓவியங்கள் முக்கியமாக தெருக்காட்சிகள் நகர்ப்புறக் காட்சிகள் என்பவற்றின் புகைப் படப் பிரதிகளை அடிப்படையாக வைத்துப் படைக்கப்படுகிறது.

இவ்வகை ஓவியங்கள் உண்மையான ஒரு நகர்ப்புறக் கலாச்சார ஓவியங்கள். இந்த இயக்கம் சிற்பக்கலையில் ஆள் உருவ சிற்பங்களை யதார்த்தபூர்வமாகப் படைத்தது. இவர்களுடைய நகலுக்கும் அசலுக்குமிடையில் வித்தியாசமிருக்காது. சிலவேளைகளில் நகல் அசலைவிட யதார்த்தமானதாகவும் தரமானதாகவும் இருக்கும். இவர்களது படைப்புகளில் சமூகத்தினது பாதிப்பு இருக்கும். விமர்சனம் இருக்கும். இவர்களது படைப்புகளில் மறைபொருள் இல்லை. நேரடியானது. வெளிப்படையானது. மிகவும் நுணுக்கமான முறையில் வரையப்படுபவை இவர்களது ஓவியங்கள். இவர்கள் யதார்த்தத்தைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. யதார்த்தத்தின் பிரதிகளைத் தான் தமது மூலமாகக் கொண்டார்கள். அத்துடன் தமது ஓவியங்களை பிரதிகளைவிட துலக்கமானதாக பூரணமானதாக மாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். முன்னணி ஓவிய விமர்சகர்களில் ஒருவரான ஹரல்ட் ரொசன்பேர்க்( Herold Rosenberg) மிகையதார்த்தத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது 'மிகையதார்த்தமானது' யதார்த்தம் பற்றிய எமது எண்ணத்தைத் தகர்க்க வல்லது எனக் கூறியுள்ளார். அவரது கருத்துப்படி எப்பொழுது கலைப்படைப்பு யதார்த்தம் எனவும் யதார்த்தம் கலைப்படைப்பு எனவும் மாறி (தவறுதலாக) விளங்கிக் கொள்ளப்படுகிறதோ அத்தருணம்தான் மிகையதார்த்தத்தின் வெற்றியைக் குறிக்கிறது. அத்தருணத்தில்தான் கலைஞன் இயற்கைக்குச் சமமானவனாக அல்லது மேலானவனாக எமக்குப் படுகின்றான். மிகையதார்த்தவாதமானது பார்வையாளனின் அல்லது ஓவியனின் பார்வையுடன் சம்பந்தப்பட்ட அகவய தாக்கத்தையும் புகைப்படக்கருவியின் புறவயபாதிப்பையும் தவிர்க்கின்றது.

இந்தவகை ஓவியங்களை முதன்முதலில் படைத்தவர் ரிச்சார்ட் எஸ்தி (Richard Estes) ஆவார். இது முற்றிலும் தற்செயலான ஒரு நிகழ்வுதான். 50களின் பிற்கூற்றில் இவர் தீவிரமாக ஓவியத்துறையில் இறங்கிய காலத்தில் இவருக்கு மாதிரி(models)களைப் பயன்படுத்தி ஓவியம் வரையக்கூடிய பணவசதி இருக்கவில்லை. இதனால் இவர் புகைப்படத்தை மூலமாகக் கையாண்டார். நாளடைவில் இதில் ஒரு புதிய பரிமாணம் இருப்பதை உணர்ந்து அதை ஒரு வலிமை மிக்க அணுகுமுறையாக முன்வைத்தார். நகர்ப்புற கட்டடங்கள், தெருக்கள் என்பவை இவரது முக்கியமான கருப்பொருட்கள். இவற்றை இவர் மிகவும் துப்பரவான துலக்கமான முறையில் வெளிப்படுத்தினார்.

இவரது படைப்புகளுக்கு இவரது 'இயந்திரப் படிக்கட்டு' (Escalator) ஒரு சிறந்த உதாரணம்.

மிகையதார்த்தவாதத்தில் ஆரம்பித்து பின்னர் தனது பாதையை மாற்றியவர் மல்கம் மோலே (Malcolm Morley). அறுபதுகளின் கடைக்கூற்றில் இவர் பல சாதாரண தபால் அட்டைகளைப் பெருப்பித்து ஓவியமாக்கினார். இவற்றை இவர் மூலத்திலிருந்து வரையப்பட்டதைப் போலல்லாது பிரதியிலிருந்து (புகைப்படப்பிரதி)வரையப்பட்டதைப்போல வரைந்தார். பெருப்பிக்கப்பட்ட இந்த தபால்அட்டை ஓவியம் நவீன ஓவியத்தின் அளவினைக் கொண்டிருந்தாலும் அவற்றின் உள்ளடக்கம் நவீன ஓவியத்திற்கு உகந்ததாக அல்லாமல் ஒருவித ஜனரஞ்சக ஓவியத்தன்மையினதாக இருந்தது.

மோலேயின் கருத்துப்படி பிரதியில் இருந்து ஓவியம் படைக்கப்படுவதால் ஓவியமானது மேலும் பிரதிசெய்யப்பட முடியாத ஒன்றாகி அதுவே மூலமாகி விடுகின்றது. எழுபதுகளின் நடுப்பகுதியில் மோலேயின் பாணி சிறிது மாற்றத்திற்கு உள்ளாகத் தொடங்கியது. தனது மிகையதார்த்தபாணியிலிருந்து விடுபட்டு தூரிகையடையாளங்கள் கொண்ட ஓவியங்களை அவர் படைக்கத் தொடங்கினார்.

இவரது இந்தப் புதிய வளர்ச்சி «புதிய வெளிப்பாட்டுவாதத்திற்கு» (Neo-Expressionism) இட்டுச் சென்றது. மோலே யின் தொடர்ந்த வளர்ச்சியில் அவர் ஓவியத்தில் பல்வேறு வகைப்பட்ட கூறுகளையும் இணைக்கத் தொடங்கினார். ஒரு பகுதி மிகையதார்த்தபாணியாகவும் அத்துடன் சில சமூக விமர்சனமுடைய பகுதிகளாகவும். ஒரு பகுதி தூரிகை அடையாளங்களைக் கொண்டதாகவும் ஒரு பகுதி சூரியலிச (surrealism) தன்மையினதாகவும் இப்படி பல்வேறு பாணி களையும் பல்வேறு குறியீடுகளையும் ஒரே ஓவியத்தில் இணைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பட்டார். இவரது ஓவியங்கள் சமூக விமர்சனங்களாகவும் அமைந்தன.

**3.** நவீன ஓவிய காலத்தின் முடிவு ஓவியத்தில் உருவங்களின் மீள்வருகையுடன் தொடங்குகிறது எனலாம். ஹரல்ட் ரொசன் பேர்க் தனது 'நவீனத்துவத்தின் முதிர்பருவம்' -1969 என்ற கட்டுரையில் நவீன ஓவியப்பாணி கடந்த காலத்திற்குரியது. இப் பொழுது அது வரலாற்று ஆசிரியர்களுக்கும் நூதனக் காட்சிச்சாலைகளுக்கும் உரிய ஒரு காலமாகிவிட்டது எனக் கூறியுள்ளார். 50 களின் முடிவிலும் 60 களின் ஆரம்பத்திலும் நாம் காண்பதெல்லாம் நவீனத்தின் நிச்சயமான முடிவினையும் பின் நவீனத்துவத்தின் துலக்கமற்ற ஆரம்பத்தையும்தான்.

கருத்துரீதியாக அணுகும்போது நவீனத்துவத்தின் முடிவை நாம் மிக எளிதாக வரையறுக்கலாம். அதாவது புறக்காட்சி கலைஞனில் ஏற்படுத்தும் அகநிலைப்பாதிப்பின் வெளிப்பாடாக உருவானது நவீனத்துவம். புறத்திலும் அகத்திலும் உண்மை யில்லை. உண்மையென்பது ஒரு கட்டமைப்பு என்பதைப் பிரதி பலிப்பது பின்நவீனம். ஆயினும் செயற்பாட்டுத்தளத்தில் எப் பொழுது பின்நவீனம் தொடங்குகிறது என்பதை வரையறுப்பது கடினம். நவீனத்தையும் பின்நவீனத்தையும் ஒரு தொடரியின் (continum) அந்தங்களாகக் கருதுவது பொருத்தமானது.

நவீனத்துவமும், பின்நவீனத்துவமும் இரண்டு வேறுபட்ட தளங்களில் இயங்குபவை. நவீனத்துவம் கலைத்துவத்தின் வெளிப்பாடாக அமைகிறது. பின்நவீனத்துவமானது கலைஞ னின் வாழ்நிலை யதார்த்தத்தின் பிரதிபலிப்பாக அமைகிறது. நவீனத்துவம் முன்னறிவை வேண்டி நிற்கிறது. பார்வையாளன் கலைஞனின் கருத்தை அறியும், தேடிக் கண்டடையும் கடப்பாடு உள்ளவனாகக் கருதப்படுகிறான். பின்நவீனத்துவமானது நேரடி யாக கலையின் தன்மையினையும் கலைரசனையின் தன்மையி னையும் கேள்விக்குள்ளாக்குகிறது. கட்டவிழ்ப்பு செய்கிறது. பின்நவீனத்துவத்தில் கலைப்படைப்பு வாழ்நிலையின் தரிசன மாய் பார்வையாளன் முன் கட்டவிழ்கிறது.

அறுபதுகளில் நவீனஓவியம் பற்றிய மூன்று முக்கிய பிரச்சி னைகள் முதன்மை பெறத் தொடங்கியது.

1. கலைஞனின் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்டமை.
2. படைப்பில் 'அகக் கருத்து' சம்பந்தமான ஒரு வரட்சி.
3. கலைப்படைப்பின் தரம் ஓவியச்சந்தையில் நிர்ணயிக கப்படுவது.

இந்த மூன்று பிரச்சினைகளுக்கும் எதிராக எழுந்த போக்கு கள்தான் நாம் முன்னர் பார்த்த ஓவியப்பாணிகள். இந்த ஓவியப் பாணிகளில் குறிப்பாக 60 களின் கடைக்கூற்றிற்குப் பின் வந்த வற்றில் பின்நவீனத்துவ சாயல் தலைகாட்டத் தொடங்குகிறது. இந்த பின்நவீனத்துவ சாயல் மோலேயின் எழுபதுகளின் நடுப் பகுதிகளுக்குப் பின்னான படைப்புகளின் வீரியமாக வெளிப் படுகிறது. அத்துடன் எண்பதுகளின் நடுப்பகுதிகளில்தான் ஓவியத்தில் பின்நவீனத்துவம் பற்றிய பேச்சும் வலுப்பெறத் தொடங்குகிறது.

இனிவரும் காலங்களில் 50 களுக்குப் பின்னான படைப்புகள் மீண்டும் மீண்டும் புதிய புதிய கோணங்களில் விமர்சகர்களால் மீள்வாசிப்புக்கு உள்ளாக்கப்படப் போவது நிச்சயம். அப்படியான மீள்வாசிப்புகள் எமக்கு பல புதிய தரிசனப் பரப்புகளை உருவாக் கித் தரலாம். ஆகவே ஓவியத்தில் பின்நவீனத்துவம் பற்றிய கருத்துக்களை நாம் சற்று நெகிழ்வு மனப்பான்மையுடன் அணுகு வது அவசியம்.

60 களில் ஏற்படத் தொடங்கிய மாற்றங்களை நாம் நான்கு அடிப்படைகளினூடாக அணுகலாம்.

1. நாளாந்தமாக நாம் எதிர்கொள்ளும் முக்கியமற்ற பொருட்களையும் கழிவுப் பொருட்களையும் கலைப்பொருளாகக் கையாண்டமை.

இதில் Junk art, ஜனரஞ்சக ஓவியம், தொகுப்புமுறை சிற்பம் என்பவை அடங்கும்.

2. ஓவிய உள்ளடக்கத்தையும் ஓவியத்தின் அர்த்தத் தையும் விட ஓவியம் பற்றிய கருத்துநிலையை முதன்மைப்படுத்திய போக்குகள்.

இதில் எளிய ஓவியம், கருத்துநிலை ஓவியம் போன் றவை அடங்கும்.

3. பழைய ஓவிய வடிவங்களை மீள் அறிமுகம் செய்தலும் வெவ்வேறு பாணிகளின் கலப்புகளை அறிமுகப்படுத்தலும்.

இதில் மிகையதார்த்தவாதம், புதிய வெளிப்பாட்டுவாதம் என்பன அடங்கும்.

4. வெவ்வேறு கலைவடிவங்களைக் கலந்து பாவித்தல்.

இதில் நிகழ்வுகள் (Happenings) போன்றவை அடங்கும்.

இவை எல்லாம் ஏதோ ஒரு வகையில் கலைரசனையின் தன்மை பற்றியும் கலைப்படைப்பு சம்பந்தமான சமூக நியமங்கள் பற்றியும் சில அடிப்படையான கேள்விகளை எழுப்புகிறது. அதாவது கலைரசனை முறைமையைக் கட்டவிழ்ப்பு செய்கிறது.

இதனை எளிதாக விளங்கிக்கொள்ள நாம் மாசல் டூசத்தின் உதாரணத்தை எடுக்கலாம். டூசம் ஒரு டாடா(DADA)யிசக் கலைஞர். முதலாம் உலகயுத்தம் ஏற்படுத்திய விரக்தியினால் மனிதகுலத்திற்கு ஒரு நாகரீகம், கலை என்பவை தேவைதானா? என்ற அங்கலாய்ப்பின் வெளிப்பாடுதான் டாடாயிசம்.

இந்த டாடாயிசத்தின் அடிப்படைகளைத்தான் ஒருவகையில் சனரஞ்சக ஓவியர்களும் தொகுப்புமுறை சிற்பிகளும் எடுத் தாண்டார்கள். 60 களில் மாசல் டூசத்தின் கண்காட்சிகள் மீண்டும் பல இடங்களிலும் நடாத்தப்பட்டது. காரணம் அத்தகைய படைப்புகளின் பொருத்தப்பாடு அக்காலத்தில் உணரப்படத் தொடங்கியது. ஆனாலும் இம் முறை அது டாடாயிச தளத்தில் அல்லாது வேறு ஒரு தளத்தில் அணுகப்படுகிறது. உதாரண மாக டூசம் சிறுநீர்கழிப்பானை தன் கருப்பொருளாகக் கொண்டு அதனைக் காட்சிப்படுத்தினார். இது சாதாரணமான ஒரு பொருள். யாரும் தொடக்கூட அருவருக்கும் பொருள். ஆனால் ஓவியக் கூடத்திலே கலைப்பொருளாகக் காட்சிப்படுத்தப் பட்டது.

இந்த இடத்தில் நாம் ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டும். இந்த சீறுநீர்கழிப்பானானது வேறு ஒன்றையும் (வழக்கமான ஓவியம் சிற்பம் போல)பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அது தானாகவே ஒரு சுயமான பொருளாக உள்ளது. அது பிரதிநிதித்துவ நிலையில் (Representation) அல்லாது தானே சுயமான பொருளாக காட்சிப் படுத்தப்படுகிறது (Presentation). அதே வேளை அது தனது உண்மையான செயற்பாட்டையும் இழந்துவிட்டது. அது சீறுநீர் கழிக்க உபயோகப்படும்பொழுது தான் அது ஒரு சீறுநீர் கழிப்பான். இங்கு அது ஒரு முதன்மைப் பொருளாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலை எமக்கு பௌடிலார்டின் விம்பத்தினது நான்காவது படிநிலையினை ஞாபகப்படுத்துகிறது. அதாவது விம்பமானது புறத்திலிருக்கும் ஒன்றையும் பிரதிநிதித்துவப்படுத் தாமல் தானே ஒரு மாற்றீடாகத் (Simulcrum) தொழிற்படும் நிலை.

இங்கே இந்த சீறுநீர் கழிப்பான் எமக்கு எதனைச் சொல் லுகிறது? எந்தவித முக்கியத்துவமும் இல்லாத இந்த சீறுநீர் கழிப்பான் எப்படி கலைப்பொருளானது.? இது அடிப்படையில் இந்த சீறுநீர்கழிப்பான் எம்மிடம் கேட்கும் கேள்வி. ஏன் அல்லது எப்படி இது ஒரு கலைப்பொருளானது.? கலைப்படைப்பு பற்றிய எமது கருத்துத்தான் என்ன?

சாதாரணமாக மலசலகூடத்திலோ அல்லது வைத்திய சாலையிலோ இந்த சீறுநீர்கழிப்பானைக் கண்டிருந்தால் முகம் சுழித்துக்கொண்டு மறுபுறம் திரும்பியிருப்போம். ஆனால் இப் போது அதனை ரசித்துப் பார்க்கிறோம். 1962ல் டூசம் கூறினாராம் «நான் அவர்களின் முகத்தில் சீறுநீர்கழிப்பானை வீசி எறிந்தேன் அதனையும் அவர்கள் ரசித்துப் பார்க்கிறார்கள்» என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே கலைப்பொருளானது கலைரசனையினை கட்ட விழ்ப்பு செய்கிறது. இந்தப் பொருள் கண்காட்சிக்கூடம் (Gallery) என்ற பின்புலத்தில் (Context) கலைப்பொருள் என்ற ஸ்தானத் துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஆகவே விம்பமானது (இலக்கிய த்திலே நாம் பிரதிக்கு (text) சமமானதாக கருதலாம்) பின்புலத் துடன் ஏற்படுத்தும் தாக்கத்தினாலேயே எமது கலைரசனை கட்ட மைக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவப்படுத்தல் (Representation) என்ற பங்கு மறைந்து மாற்றீடு சுயமான ஒரு கலைப்பொருளாக (Presentation) அமை வது பின்நவீனத்தின் ஒரு முக்கிய பண்பு. இது பின் நவீனத்தின் இயல்புகளை (முன்னர் கூறியது) வெளிப்ப டுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாற்றீடுக்கும் பின்புலத்திற்கும் இடையிலான உறவு பார்வையாளனையும் கலைஞனையும் இணைப்பதற்கு உதவுகிறது. பிரதிநிதித்துவப் படுத்தப்படும் விம்பத்தின் ரசனைக்கும் (நவீன, தத்ரூப ஓவிய ங்கள் போல) மாற்றீடின் ரசனைக்கும் (பின்நவீன கலைப்பொருள்) இடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு.

இந்த ரசனை வேறுபாட்டினை விளங்குவதற்கு நாம் பின்நவீ னத்துவத்தில் ரசனை செயற்பாட்டின் தன்மைகளை ஆராய்வது அவசியமாகும். பின்நவீனத்துவ ரசனை செயற்பாடு நிகழ்வுப் பண்பினது. (Performance). இது அடிப்படையில் இரண்டு தளங்களில் செயற்படுகிறது. ஒன்று கலைப்பொருள் தளத்தில் (Product). இரண்டாவது அதனை உள்வாங்கும் அல்லது அணுகும் தளத்தில் (Process).

கலைப்பொருள் தளத்தில் கலைஞனும் உள்வாங்கல் தளத்தில் பார்வையாளனும் முக்கியத்துவம் பெறுகின்றனர். கலைஞன், படைப்பு, பார்வையாளன் மூன்றினது சங்கமத்தில் தான் பின்நவீனப்படைப்பு பூரணமடைகிறது. ஆக பின்நவீனத் தில் பார்வையாளன் படைப்பை பூரணப்படுத்துவதற்குத் தேவைப்படுகிறான். கலையாக்க செயற்பாடு என்பது பின்நவீன த்தில் பார்வையாளனையும் உள்ளடக்கிய ஒரு செயற்பாடு.

கலைப்பொருளை (Product) எடுத்துக்கொண்டால் அது சிறுநீர்கழிப்பானைப்போல ஒரு இடைத்தாக்கத்தை ஆரம்பிக் கிறது. இது கட்டவிழ்ப்பின் தொடக்கப் பொருளாக செயற் படுகிறது. இது கலைப்பொருளுக்கான ஒருவகை நிகழ்வுப பண்பினைச் சுட்டுகிறது. மறுபுறத்தில் மல்கம் மோலேயின் பிற்கால படைப்புகளில் பலவகையான- (சூரியலிச, மிகையதார் த்தவாத போன்ற) பாணிகளின் கலப்பும், ரொபர்ட் ரொஷன் பேர்க்கினது 'கட்டில்' என்ற ஓவியத்தில் பல்வேறுபட்ட ஓவியச்சாதனங்களும், நிகழ்வுகள் (Happenings) போன்ற கலை வடிவங்களில் பல கலைகளின் கலப்பும் இருப்பதனை நாம் காண்கிறோம். ஒரு படைப்பில் காணப்படும் இப்பல்வேறு கூறுக ளும் தம்மிடையே இடைத்தாக்கம் புரிகின்றன. இதை நாம் இலக் கியத்தில் காணும் Intertextual ற்கு ஒப்பான ஒரு இடைத்தாக்கமாகக் கருதலாம். இதுவும் கலைப்படைப்பின் ஒரு நிகழ்வுப்பண்புக்குரிய தன்மையைத்தான் குறிக்கின்றது.

இந்த நிகழ்வுப்பண்புகளுக்கூடாக பார்வையாளனுடன் படைப்பு தொடர்புறும்பொழுது அதனை பார்வையாளன் உள்வாங்கும்பொழுது கலைப்படைப்பு பூரணமடைகிறது. இந்த ரசனை தளப் பெயர்ச்சி பின்நவீனத்துவத்தின் ஒரு முக்கிய அம்சம். இந்த ரசனைத்தளம் பிரதிநிதித்துவப்படுத்தலை அண்டி நிற்கவில்லை. இது சுயாதீனமானது. நேரடியானது.

இந்த வகையான ரசனை செயற்பாடு ஓவியத்தின் இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட «நியாயவாத ஊடாட்ட» பங்கினை (Legitimising discourse) கேள்விக்குட்படுத்தியுள்ளது. இன்னொரு விதத்தில் கூறுவதாயின் பின்நவீனத்துவமானது கலையின் தன்மையையும் ரசனை முறையையும் கேள்விக்குள்ளாக்கி அவற்றின் போதாமையை அம்பலப்படுத்தியுள்ளது எனலாம்●



# காயம்பட்டு

தேவிகணேசன்

மௌனம்
அழுகை
இரண்டாலும் நிறைந்து போயிருக்கிறது
என் வாழ்க்கை.
சில நேரங்களில்,
அழுகையை அடக்கி வைத்து விட்டு
கெக்கெட்டம் விட்டு சிரிக்கிறேன்.
வெக்கம் கெட்ட உலகம்.
நடிக்க வேண்டியுள்ளது.

என்னால் என்ன செய்ய முடியும் ?

கவிதை எழுதலாம்
ஆனால். . .

நேற்று வரைக்கும் எதையோ நினைத்து
என்னமாவோ முடிந்து போன
பயந்த எழுத்துக்களை
என்னால்
எழுத முடியவில்லை.

வந்து போகும் ஒவ்வொரு நாட்களும்
காறித்துப்பி என்னை அசிங்கப் படுத்திவிட்டு
நகர்கிறது.

கோபம் தலைக்கேற
எழுத்திற்கும் கருத்துக்குமாய்
காணாமல் போனவர்களின்
வரிசையில் என்னையும் சேர்த்துவிட்டு

எவனுக்கோ பயந்து
எழுத முடியாமல் போன
தலைப்புக்களைத்
தேடிக் கொண்டிருக்கிறேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரிசிப்பு

ப.வி. ஸ்ரீரங்கன்

அந்த, ஸ்டேசனில் இரயில் நின்று வெளிக்கிட்டபோது தான் ரவிக்கு, தனிமை யென்பதின் வெறுமை புரியத் தொடங்கியது. ஈழத்திலிருந்து ஜேர்மனி வந்ததிலிருந்து தனிமையையும் வெறுமையையும் சுவாசித்தாலும், அவனை, ஸ்டேசனில் நிகழ்ந்த விடயமே அவன் இருப்பை உறுதி செய்தது.

"........." இவன் சின்னராசாவும் ஏதேதோ சொன்னான்... ஆனால்... எதுவுமே மூளையில பதியிறதாயில்லை. அநுபவப் பட்ட வாழ்விற்கூடாகத்தாம் நான் என்னை வகுத்துக் கொள்ள முடியும். எனக்கு, முன்பின் அநுபவப்படாத கருத்துக்களிலிருந்து, நடைமுறைகளிலிருந்து நான் என்னை வகுக்கமுடியாது...

எனது நடவடிக்கைகளுக்கும், எனக்கும் - நானே பொறுப்பாளி ஆகுவமென்றால் எனக்குள், வந்து சேர்ந்த வாழ்வும், நடைமுறைகளும் என்னைப் புறந்தள்ளித் தம்மை, நானாகக் காட்டிக் கொள்கின்றன.

எல்லாரும் வாழ்கிறார்கள்...

பலருக்கு அத்திவாரத்திலிருந்து சுவரெழுப்பிக் கூரை போட்டளவுக்கு வாழ்வுண்டு.

ஆனால், எனக்கு ?...

அத்திவாரமே எனக்கில்லை.

என்னைப் பெற்றவர்களுக்கு கூட வாழ்விலிருந்தும், இவ்வுலகிலிருந்தும் தூக்கியெறியப்பட்ட என்னைத் தெரியப் போறதில்லை.

"உழைப்பாளிகளிடமிருந்து உழைப்பைத் தூக்கியெறிந்து ஒரு சிலரின் கல்லாப் பெட்டிக்குள் போட்டதுபோல உம்மையும்,உறவிலிருந்து தூக்கி யெறிந்து தனிமைப் புதருக்குள் போட்டு விட்டது இன்றைய சமூகம்" இதைச் சாதாரணமாகச் சொன்னான் சின்னராசா.

ஆனால்... எனக்கென்னவோ இதில் உடன்பாடு கொள்ள முடியாமலுள்ளது. என்னால் குறைந்த பட்ச ஐக்கியம் கூட காண முடியாமலிருக்கு இந்த, இவனது கூற்றில்.

வேதனை... வேதனை. இதைத்தானே நான், பல் முனைகளிலிருந்தும் அநுபவிக்கிறேன். வேதனையும் சோதனையும் விருப்பங்களையெல்லாம் மறுதலிக்கையில் நான், யாருக்காகவோ அலைவதாகப் படுகிறது. .. இந்த வாழ்வுக்குள் நான், அலைகிறேன் எனக்காக அல்ல.

ஆ... அப்படியானால் சின்னராசா சொன்னது சரியாக இருக்குமோ? பெற்றவர்களிடமிருந்து நான், அந்நியப்பட்டதற்கு "ஏரிக்புரோம்" பாணியில் அவன் விளக்கம் சொல்கின்றான். எனக்கெதுவும் புரியவில்லையென்பது மட்டும் தாம் புரியுது... மற்றும்படி அவனது கருத்தை மறுதலிக்கும் படி விவேகமில்லை என்னிடம்.

சிலவேளை மற்றவர்கள் சொல்வது போல சின்னராசா அலட்டுகிறானோ?

பிராங்பேர்ட்டுக்குச் செல்லும் ரவி, இரயிலுக்குள் அமர்ந்தவண்ணம் தனக்குள் ஒரு முழுமையைக் காண முனைகையில் மீண்டும் தொடர்ந்து தேடுகிறான். ஆனால் உண்மை அவனைவிட்டு வெகுதூரம் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஊம்... இந்த இரயிலால் இறங்கிற சின்னப் பெட்டையை அந்தக் கிழவி கட்டித் தழுவி உச்சி முகருதே. என் தனிமையை ஆழப்படுத்தும் இந்தச் செயல், எனக்குக் கிடைக்கவில்லையே. இந்த அன்பு எங்கிருந்து வந்தது?... இவ்வுறவு ஏனென்னை அரவணைக்கவில்லை?...

"மன்னிக்கவேண்டும். இந்த இருக்கையில் ஆட்களில்லையா?"

மூதாட்டியொருத்தி அழகாக உடுத்து, தன் அந்தஸ்தைப்பறைசாற்றியவண்ணம் - ரவியின் அருகாமையில் உள்ள இருக்கையில் அமர்ந்து கொள்ள ரவியிடம், அது பற்றி விசாரிக்க - அவன், சிந்தனை வயப்பட்டு பதில் கூற முடியாதிருக்க மூதாட்டி, அவனை மேவி விலக - இன்னொரு ஆபிரிக்க மனிதர் அவ்விருக்கையை தனதாக்க ரவி, தொடர்ந்தும் சலனமற்று சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

... என்னைப் பார்த்து இவன்... கணேஸ் -றாஸ்கோல் "அப்பன் பேர் தெரியா தவன்" எண்டுட்டான்.

டேய். உனக்கு நான் என்னடா வெறும் ஜடப் பொருளாடா? எனக்கு உணர்வுகளுண்டடா. நீ சொன்னதிலிருந்து நான் வெறுமையை உணர்கிறேனடா. அநாதையென்பதின் விசித்திரக் குறைபாட்டையுணர்கிறேன். உன்னைப்போல நான், ஆதாயம் கருதி யாருடனும் பழகுவதில்லை, உறவாடுவதில்லை.

ரவியின் விழிகளிலிருந்து நீர் சுரந்து மூக்குவழியாக மீசையை நனைக்க அவன் படிமத்தில் சின்னராசா உலா வந்தான்.

"ஐ சே. நீர் ஏன், சும்மா எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசமாகிறீர்? அவன் கணேஸ், அப்படி ஏசிப்போட்டால் நீர், குறைந்தா போய்விட்டீர்? அவன் தான் படிக்காதவன். ஆனால்... நீருமா?... அப்பன் பேர் அம்மா காட்டித்தான் எனக்கும் தெரிய வந்தது.."

"எனக்கடா சின்னராசா அம்மாவையும் தெரியாது அப்பனையும் தெரியாது.."

"இங்கே பாரும் ரவி. அவன் கணேசின் வார்த்தை இந்தச் சமூகத்தின் இயலாமையை ஓட்டாண்டித்தனத்தைத் தாம் கேலி செய்யுது, உன்னையில்லை"

"என்னடா விசரன் மாதிரி அலம்புறாய்? என்ன - என்னயில்லை? சும்மா, சமூகம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காய் எண்டு ... நான் எவ்வளவு வேதனையோடு இருக்கிறன் தெரியுமா?"

"ரவி உணர்ச்சிவசப்பட்டால் சரியான தெளிவில்லாமல் தவிப்பாய். எதையும், உணர்ச்சியைப் பின்தள்ளிவிட்டு அறிவின் உதவியுடன் பகுப்பாய்வு செய்ய வேணுமடா. இப்ப பார் நீ, அம்மா-அப்பா, இவர்களை விட்டுப் பிரியக் காரணம் என்ன முன்பு உன் குடும்பத்தில் பெற்றோர்களுக்கு குடும்பத்தில் நிகழ்ந்த வறுமை அல்லது வேறுமாதிரியான சமூக அச்சம்தானே காரணமாக இருக்கமுடியும்? இப்போது, உன்னை வளர்த்த அம்மா இறந்து போனாலும் வளர்த்த அப்பா உயிருடன் இருக்கிறார். அவரையாவது எண்ணி புத்திசாலித்தனத்துடன் வாழப்பாரடா.."

வளர்த்த... வளர்த்த... ஐயோ ஆடு மாடுகளை வளர்க்கிற கதை போல என்னையும் ... போடா சின்னராசா போடா ... எனக்கு வளர்த்த ... வளர்த்த எண்ட வார்த்தை யையே கேட்கப் புடிக்கவில்லை. நீ எப்படியடா என் சிந்தனைக்குள் வந்து துலைகிறாய்?

அய்யோ...கண் எரியுது. தலையெல் லாம் வலிக்குது. சமூகம் ... மண்ணாங்கட்டி ... வளர்த்த ... பிளடி வார்த்தைகள்.

எனக்குப் பைத்தியம். யேஸ் ... ஐ காவ் மென்டல் டிப் பிறசர், எனக்கு அது தாம். இல்லை யெண்டால் நான் ... இப்படி ஏன் .. டேய் ...றாஸ்கோல் கணேஸ். உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் பார். கிட்ட வராதே ... வந்தால் கடிச்சுக் குதறுவன். போ ... தூரப் போ ... பிளடி இடியட். ஐ நோ யுவ பெமிலி பேக்றவுண்ட் ...

ரவி மிகவும் மோசமான மனவுளைச்ச லுக்கு ஆளாகிய வண்ணம் பிராங்பேர்ட்டை நெருங்கிக் கொண்டிருக்க அவன் சிந்தனை மட்டும் நூரன் பேர்க்கில் மிதந்தது.

◆◆◆

எனக்கென்னாச்சு ?

நூரன்பேர்க்கிலிருந்து நான் ஏன் பிராங் பேர்ட் வந்தேன்? செக்ஸ், பிளடி செக்ஸ். இது மனிதனைக் கொல்லுதே. எங்கெ ங்கோ அலைக்குதே. நான் எதில் போய் முட்டிக் கொள்ள?... மிருகங்க ளுக்குக்கூட - ஏன் பூச்சி புழுக்களுக்குக் கூட இவ் வுணர்வு இருக்கே. நான் மனிதன். என்னை இப்படி ஆடு, மாடுகளைப் போல அடைச்சு வைத்தால்?... பெட்டியறைக்குள் நாலு ஐஞ்சு மனிதத்தை அடைத்து வாட்டு றாங்களே ஜேர்மன்காரங்கள். தங்கட பால் குடி குழந்தைகளுக்குத் தனியறை. படிக் கத் தனியறை, விளையாடத் தனியறை.

ஆனால் எங்களுக்கு ...ஏன் ... ஏன் இப்படி ...நாயாய் ... பேயாய் ... ஏன் தாம் இப்படி வாழவேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்? ...

"நீ ஒரு அகதி. அதுவும் மூன்றாமுலகின் பொருளாதார அகதி. இப்படித்தான் வாழ வேண்டும். இல்லையேல் நாட்டை விட்டு வெளியேறு"

டேய்பிளடி "சோசல்"காரா. எனக்கு என் நாட்டில் இருக்கமுடியாது. அதுதாம் இங்கு வந்தனான் மற்றும்படி உன் நாட்டில ஒரு நிமிசமும் வாழவிருப்பமில்லை.

ச் சீ இந்த ஊத்தையளின் தயவில் வாழுவதை விட நான் என் தாய்நாட்டிற்கே போய்விடலாம். ஆ... எனக்குத் தாயே இல் லையே எப்படி தாய்நாடு... நான் இலங்கை க்குப் போகப்போறன். கட்டாயம் போக வேண்டும். இங்கே ஒரு நிமிசமும் வாழ முடியாது. நாளைக்கு அகதி விண்ணப் பத்தை ரத்து செய்யவேண்டும். செய்யப் போறேன் ... கண்ட கண்ட ஆட்களின் நா வால் ஏச்சு வேண்டி ... வாழ்ந்து ..ச் சீ நாய் வாழ்வு...

"மிஸ்டர் ரவிச்சந்திரன் நான் ஒரு சமூக உதவி உத்தியோகத்தர் என்ற முறையில் சொல்கிறேன். உமக்கு இது கடைசி முறையாக இருக்கட்டும். போனமுறை ரிக்கற் ஓகே செய்த பின்பும் கூட நீ நாட்டுக்குப் போகமாட்டேன் என்றாய். ஏதோ ஒரு உணர்வில் அரசியல் தஞ்ச விண் ணப்பத்தை ரத்து செய்கிறாய். பின்பு உமது நாட்டில் நிகழும் பிரச்சனைகளை யெண் ணிப் போக முடியாமல் தத்தளிக்கிறீர். இப் போது ... மீண்டும் அரசியல் தஞ்சத்தை ரத்து செய்து விட்டு வந்து அழுகிறீரே..."

போனமுறை எவ்வளவோ ... கெஞ்சி மன்றாடித்தாம் மீண்டும் உம்மை அகதியாக ஏற்கும்படி செய்தேன். இப்போது நான் என்ன செய்ய?

ஏன் இப்படியெல்லாம் செய்கிறீர் என்று மட்டும் நான் கேட்கமாட்டேன். ஆனால் ஒன்றுமட்டும் சொல்வேன். எதையும் பெரி தாக எடுத்து உணர்ச்சி வசப்படாதே. அவ்வளவு தாம் நீ போகலாம். இனி மேல் இப்படிச் செய்து மூன்றாந் தடவையும் என் முன் வந்து நிற்க மாட்டீர் என்ற பலமாக நம்புகிறேன். ரவியை வெண் தாடிக்குள் மறைந்திருந்த அந்தச் சிவப்புமுகம் எச்சரி க்கை செய்து விலகியது.

மிகேல் நான் உன்னை மதிக்கிறேன். ஆனால் என் நிலைமையைப்பார். நான் மூன்றாம் முறையும் உன் முன் வந்துநிற்க மாட்டேன். நேராக இலங்கைக்கே போய் விடுவேன். இது நிச்சயம். என் நிலைமை படு மோசம். இனிமேல் எந்தவொரு அன்னிய நாட்டிலும் என்னால் வாழமுடியாது.

நான்பாலியல் நோயாளியாகிவிட்டேன். அடிக்கொரு தடவை பிராங்பேர்ட் வந்து உழைக்கிற பணத்தையெல்லாம் நாசம் செய்கிறேன். பணம் போகுதேயொழிய மனம் திருப்தியில்லை. ஒவ்வொருத்தியும் கள்ளப்பேர்வழிகள்....எனக்கிது வேண் டாம். ஜேர்மன் என்னை பாலியல் வக்கிர நோயாளியாக்கிப் போட்டுது.

என் பிறப்பைப்பற்றியெண்ணும் போதெ ல்லாம் பிராங்பேர்ட்டுக்கு வந்து ஒவ்வொரு முறையும் அதை அநுபவிக்க வேண்டும் போலை கிடக்கு. என்னால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருத்திக்கும் "அப்பன் பெயர் தெரியாத பிள்ளை" பிறக்கச் செய் வதாக எண்ணுகிறேன்...

இது வெறும் பழி வாங்கல்தான் .. ஆனால் ...அவளவைகள் ... எல்லோரும் விபச்சாரிகள் ...விபச்சாரிகள் ...

அப்போ ... நான் ... நானும் ?...

"கலோ, இங்கே வா.."

"ஏய் .கலோ இங்கே வா ..."

ரவி தனக்குள் தன் செயல்கள் குறித்து நன்று தேடிக் கொண்டு பிராங்பேர்ட் இரயில் ஸ்டேசனுக்கு நடந்து வர ஸ்டேசனின் முன்பகுதி வீதியில் நின்ற இரு பொலிசார் அழைத்தார்கள் ரவியை. ரவிக்கு அவர்களின் சத்தம் கேட்காது போக மீண்டும் ...

"ஏய் மனிதா இங்கே வா.."

ரவிக்கு உணர்வு வந்து விட்டது.

... ஓ, இந்த நாய்கள் வேற பின்னால வந்திட்டான்கள் இப்ப விசாப் பார்க்கப் போறாங்கள்... என்னைப் பரிகாசிக்கும்படி செய்யப் போறாங்கள்... ஐயோ கருப்புத் தோல் எண்டபடியால் தானே எங்களிடம் விசாக்கேட்டு ஒவ்வொரு நிமிசமும் நச்சரிக்கிறாங்கள்?

இப்ப போற வாற ஜேர்மன்காரர்கள் எல்லாம் என்னைப் பார்க்கப் போறார்கள். ச் சீ ... எளிய ராஸ்கல்கள்.

"ஏய் கலோ, உனக்குக் காதில்லையா? உன்னிடம் விசா இருக்கா இல்லையா? உடனடியாய் பாஸ்போட்டை எடு" இரு பொலிஸ்காரர்களும் ஒரே தொனியில் பாடினார்கள்.

ரவி கால்சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு துண்டுப் பேப்பரை எடுத்து முகத்தைச் சுழித்தவண்ணம் கொடுக்க, பொலிஸ்காரர்கள் இருவரும் அதை மாறி மாறிப் புரட்டிப் பார்த்து விட்டு தமது காரடி நோக்கி நகர, ரவியும் அவர்கள் பின் தொடர்ந்தான்.

◆◆◆

காலை மணி ஆறு.

ரவி ஆங்கில அகராதியுடன் போராடி விட்டுச் சோர்வாக இருந்தான். அவனது அறையின் சாளரத்துக்கூடாக மெல்லிய குளிர்காற்று வந்து அவனைத் தீண்டிக் கொண்டிருந்தது. மெல்ல எழுந்து சாளரத் தருகே சென்று வெளியில் பார்வையைச் செலுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் சிறிது சிறிதாக இருளைக் கரைக்க கதிரவன் தூக்கம் கலைத்துச் சுறுசுறுப்பாகி மேலெழ ஆரம்பித்திருந்தான்.

தொழிற்சாலையின் நினைவால் பலரைப் புயல்போல் நடக்க வைத்திருந்த அந்த அதிகாலைப் பொழுது கனதியான உணர்வை ரவிக்கு வழங்கியது.

நண்பர்களைத் தனதாக்கி அவர்களுடன் சிரித்துக் கும்மாளம் போட விரும்பாத ரவி தன் சுமைகளையெல்லாம் தனக்குள்ளயே போட்டு மனத்துடன் மல்லுக் கட்டுவான். அவனுக்கு ஏகாந்தம் பிடிக்கும்.

அதிகாலை கனதியான உணர்வை ரவிக்கு வழங்க அவன் தன் அகவுலகுக்குள் நுழைந்தான்.

இந்த நிமிடத்திலிருந்து ... ஏன் - இந்த நொடியிலிருந்து நான் வெறுமையை உணர்கிறேன்.

இந்த வெறுமையை உணர்வுசூர்வமாக உணர்கிற நான், இதைச் சிந்தனைக்குள் அடக்கி, அறிவு பூர்வமாகக் குறித்துக் கொள்ள முடியாமலிருக்குதே...

தனிமையிலிருக்கும்போது ... பலவித உணர்வுகள் கிளை, கிளையாக முளைக்கின்றன. இவ்வளவு அல்லோலப்பட்டு நகருமிந்த வாழ்வில் நிரந்தரமானவொரு வெறுமையை உணர்கிறேனே .. இது உலகுக்குக் கிடைத்த சாபமா?

நாலுபேருடன் சேர்ந்திருக்கும்போது புலப்படாத இவ்வுண்மை தனிமைக்குத் தாலாட்டுப் பாடவா புலப்படுகுது.

"......................"

இல்லையே. போதாக்குறைக்கு வேதனையையும், தனிமையையுமல்லவா ஆழுப்படுத்துகிறது. பிரபஞ்சத்தை ஊடறுத்துச் செல்லுமிந்த வெறுமைதாம் மிச்சம்.

வேறொன்றுமே இல்லைப்போல் தாம் கிடக்கு

இதென்ன வாழ்வு?...

இவ்வளவு சலசலப்பையும் உதறி விட்டுக் கூத்துப் பார்ப்பது யார்?

மனிதனா?

இல்லை, கடவுளா?...

புரியவில்லை.

டேய் சின்னராசா, எங்கேடா இருக்கிறாய்? வாடா வா, வந்து இதற்குப் பதில் சொல்லடா பாப்பம். நான் உணரும் இந் நிலையை உன்னால் உணரமுடியுமா?

அது உன்னால் முடியாது.

நீ வரட்டுவாதி. உனக்கு - உன் தத்துவத்திற்குள் தாம் ஒழியத் தெரியும். வெளியில் வாடா. வந்து இந்த வெறுமையைப்பருகி அதில்கலந்து வெறுமையோடு வெறுமையை உணரடா தத்துவமில்லாத வாழ்வு நரகம். வாழ்வு இல்லாத தத்துவம் உணர்வற்ற ஜடம் என்பாய். இப்போது எங்கு ஒழிந்தாய் ?...

"......................"

"போலி, போலி. ரவி, போலியானவன் நீ.." சின்னராசா விகாரமாகச் சிரித்த வண்ணம் அவன் மனக்கண்முன் தோன்றினான். ரவி பிரமை பிடித்தவன் போல சாளரத்துக்கூடாக வானவெளியை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க சின்னராசாவின் பேச்சொலி அவனது செவிகளில் தொடர்ந்து பட்டு விலகின.

"என் அருமை நண்பா, என்னால் நீ கூறும் வெறுமையை உணரமுடியாது. நீ மனப் பிரமை கொள்கிறாய். காலங் காலமாய்த் தொடரும் கதையில் தாம் நீயும் நீந்துகிறாய். நீரில் மிதக்கும் மிதப்புக் கட்டையும் நீயும் ஒன்றுதாம் எனக்கு. நீ வாழும் இந்தவுலகுக்குள் உன்னைக் கண்டுகொள்ள முடியாத கோழை தாம் நீ. வெறும் சருகு போல அங்குமிங்கும் அலையப் போகிறாய்"

"நீ மனிதனாக மாறமுடியும். ஆனால் அது உன் கையில் இல்லை... அது உன் கையில் இல்லை..."

பரதேசி போடா, ஏன் கையிலில்லை? சரிதாம் போடா. அது சரி நீ, ஏனோய் என்னைத் தொந்தரவு செய்கிறாய்? கேட்டுக் கேள்வியில்லாமல் எனக்குள் நீ எப்படி வருகிறாய்?...

இல்லை ... நான் உன்னை நெருங்கி விட்டேனா?

அல்லது ... இது வெறும் பிரமையா? புரியுதில்லை, புரியுதில்லை

வாய் வரண்டு ... தொண்டை காய்ந்த ரவி, சாளரத்தை விட்டு விலகி சமையலறையை நோக்கிச் சென்று தேனீர் போட ஆயத்தமாகிச் சட்டி கழுவி, குளிர் நீர் பிடித்து அடுப்பில் வைத்தான். சமையலறையில் பல இளைஞர்கள் மிகவும் வேகமாக கருமங்கள் செய்த வண்ணம் இருக்க வழமையாக -பிரான்ஸ் என்றழைக்கப்படுகிற முருகன் பியரைக் குடித்துவிட்டு விழி பிதுங்க காவலிருந்தான், யாராவது உணவு தருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன்.

சமையலறை மேசைக்கு மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு ரவி தேனீர் கொதிக்கும் வரை காவலிருந்தான். அப்போதும் அவன் தன் வாழ்வைப் பற்றியே யோசிக்கலானான்.

உறவிழந்து... வாழ்விழந்து... எவ்வளவு காலத்துக்கு தாம் இப்படி அன்னிய நாட்டில் வாழ்வது ?...

இனிமேலும் வாழ்வது முட்டாள்தனம். நான் இவ்வளவு நாளும் இங்கு வாழவில்லை. நோக்கம் எதுவுமே என்னிடமில்லை.

அப்போ...சின்னராசா சொன்னது சரிதானா? "நீரில் மிதக்கும் மிதப்புக் கட்டையும் நீயும் ஒன்றுதான் எனக்கு" காதோரம் இந்த வார்த்தை ஒலிப்பது போலக் கிடக்கே.

டேய் சின்னராசா,எனக்கு அநுபவப்படாத கருத்துக்களிலிருந்து நான் எப்படியடா என்னை உருவாக்குவது?

ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் சுமைதாங்கிகளாகத் தாம் வாழ்கிறோம். எனக்கு முன் வாழ்ந்தவர்களினது, கருத்துக்கள் நடவடிக்கைகளி லிருந்து நாமும் அளவுக்கு அதிகமாக மென்றுவிட்டு திமிராகக் கத்துகிறோம்.

யாருமே புதிதாகக் கோடு கீறி அதிலிருந்து ஒரு புதுவழியை அமைக்க முடியுமா? இது சாத்தியமேயில்லை. இது தெரிந்திருந்தும் மார்க்ஸைப் படிக்கும் சின்னராசா என்னைக் கேலி பண்ணுகிறான் ... நானொன்றும் கற்றுக் குட்டியல்ல.

எனக்கும் பிளேட்டோவை, அரிஸ்டோட்டலை, சோக்கிரட்டீசை, ஆடம் சிமித்தைத் தெரியும்... எனக்குப்பசிக்குது ... தலைவலிக்குது ... நான் மனுசனாக வாழனும். என்னால் எதையுமே எனக்கான சுயத்துடன் செய்ய முடியாமல் இருக்குது. இந்தவுலகில் வாழும் ஒரு சில வலிமை மிக்க மனிதர்கள்... ஆளுமை மிக்க மனிதர்கள்... நீட்சே தரிசித்த அந்த மனிதர்கள் எப்படி உருவாகினர். என்னால் அப்படி ஏன் வரமுடியாமலிருக்கு? வலியது வாழுமானால் நான் வலிமையை கண்டடைய வேண்டும்.

இப்போது நான் படுக்கப்போறேன். என்னால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை. உறக்கம் வராட்டியும் கண்களை மூடியவண்ணம் குப்புறக் கிடக்கும் போதாவது சிந்திக்கிறது தடைப்படும். அதுதாம் எனக்கிப்போது வேணும்...

"டேய் ரவி, உன்ர தேத்தண்ணிச்சட்டி காஞ்சு கருவாடாய்ப் போச்சு. நீ இந்த உலகத்திலையா இருக்கிறாய்?" மோகன் ரவியின் தேனிர்சட்டி நீரையெல்லாம் வாயுவாக்கிவிட்டு தன்னைக் கருக்கிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்று ரவியை அதட்டினான்.

ரவி தேனீர்ச் சட்டியைத் தூக்கி மூலையில் போட்டு விட்டு மௌனமாக தனது அறைநோக்கி நகர அவனது அறை நண்பனின் ரீவியில் செய்தி போய்க் கொண்டிருந்தது. இரண்டாவது ருஸ்யப் புரட்சியின் கதாநாயகன் பொறிஸ் ஜெல்சின் என்றுவர்ணித்தார் செய்தியாளர். பொறிஸ் ஜெல்சின் "ஆமட்" ட்றக்குக்கு மேல் ஏறி நின்று, ஏதோ கூறிக் கொண்டிருந்தார். ரவி அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாது கட்டிலில் குப்பற விழுந்தான். அவனது அறை நண்பன் ரவியை ஓரக் கண்ணால் பார்த்து வீட்டு மணிக்கூட்டைப் பார்த்தான். நேரம் பகல் பதினொன்றைக் கடந்து சென்று கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆◆◆

"சின்னராசா, டேய் மச்சான் சின்னராசா, என்னடா இப்படிப் பண்ணிப் போட்டியேடா" ரவி அழுத்தமாகக் குரல் கொடுக்க சின்ன ராசா, அவனை ஆச்சரியப்ப டுத்தினான்.

"ஆங் ... நீர் யாரு? உம்மையெனக்குத் தெரியாதே..., என் பேர் எப்படி உங்களுக்கு ...."கூறி முடிப்பதற்குள் ரவி முந்தினான்.

"பல்லுடைப்பன் ராஸ்கோல், என்னையா பேக்காட்டுறாய்? அந்த நாலுபேருக்கும் பேக்காட்டி நடித்தது போல எனக்குமா?... ஏண்டா இப்படிச் செய்திட்டாய்? நாலு நாளா இரயும்பகலுமாய் வந்து பார்த்தன். உனக்கு அறிவு வரவில்லை. இப்ப நித்தி, மோகன், கிருபா, மணியம் நாலு பேரும் உன்னைப் பார்க்க வந்து உன் நடிப்பால் ஏமாந்து மனம் நோக போறாங்கள். உனக்குப் புத்தி பேதலிச்சுப் போச்சென்று எண்ணிக் கொண்டுதாம் போறாங்கள்.."

"டேய் ஏன்டா இப்படிச் செய்தனி? உன் வாழ்வு இப்படியாடா போகவேணும்? நான் பாட்டுக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறன் என்னடா உம்மாண்டி மாதிரி இருக்கிறாய்?."

"ஆ ... அம்மா உடம்பெல்லாம் அசைக்க முடியுதில்லை... ஒரே நரக வேதனையாய் இருக்கு... மூத்திரம் வேறு வருகுது. உங்களை என்ர ஒத்தக் கண்ணால பார்க்க வடிவாகத் தெரியுதில்லை. திரும்பவும் கேட்கிறேன் ... நீங்கள் யாரு?."

டேய் ராஸ்கல், உனக்கு உன் பெயர் சொல்லிக் கூப்பிட அதை மறுக்கத் தெரி யாது ஆமோதித்துக் கேள்வி கேட்கிறாய். .. பிறகு ஏனடா ஞாபக சக்தி இழந்தவன் போல நடித்து மொக்கேனப் படுகிறாய்?... ரவி தனக்குள் யோசித்த வண்ணம் மீண்டும் சின்னராசாவிடம் பேச்சுக்கொடுத்தான்.

"டேய் மடையா, எட்டாவது மாடியி லிருந்து குதித்து உன் கால் கைகளுடன் உடம்பும் ஒரு கண்ணும் போட்டுது. இனி நானும் உன்ர மற்றக்கண்ணை பேர்க்கலா மெண்டு யோசிக்கிறன் ... அதுக்குள்ள ஏதாவது ஒரு முடிவுக்கு வா" ஆத்திரப்பட்ட ரவி அலறினான்.

சின்னராசாவின் ஒற்றைக் கண்ணை ஆப்பிரேசன் மூலம் அகற்றியபடியினால் அவன் ஒரு விழியால் நீர் சிந்த ஆரம்பித்து ரவியைக் கட்டியணைக்க முனைகையில் தாம் அது தன்னால் முடியாதெனவு ணர்ந்தான். உடல் எலும்புகள்பல நொரு ங்கிய நிலையில் அவன் கட்டிலுடன் ஒட்டிய பொருளாகக் கிடந்தான். பொருளுக்கும் அவனுக்கும் வித்தியாசத்தை சிந்திக்கக் கூடிய அவனது செயல்பாடே நிரூபித்தது.

சின்னராசாவின் கையைப் பற்றிக் கொண்ட ரவி, அவனது அருகாமையில் அமர்ந்த வண்ணம் அவன் சிந்தும் கண்ணீரைத் துடைத்துவிட்டு, "டேய் சின்னராசா ஏண்டா நீ, இப்படிச்சாகத் துணிந்தாய்? உனக்குக் காதல், கீதலில் தோல்வியாடா? உனக்குத்தாம் காதலி க்கத் தெரியாதே, வேறேதாவது வீட்டுக் கஷ்டமா? அடேய் எதெண்டாலும் நீ இப்படிச் செய்யக்கூடிய நிலையை எப்படியடா பெற்றாய்? மற்றவர்களைப் போல நீ, சாதாரணச் சராசரி மனிதனில்லை என்ர கணிப்பில். பதில் சொல்லடா" என்று கேட்டுக் கொண்டான்.

சின்னராசாவிடம் ரவியின் பரிவும் பாசமும் வலுவான பாதிப்பை ஏற்படுத்த அவன் விம்மி விம்மியழுது தீர்க்க ரவிக்கும் அழுகை வரும் போலிருந்தது அவன் விழிகளும் சிறிதாகச் சிந்தின உப்புநீரை.

சின்னராசா ரவியின் முகத்தின் மைய த்தில் தன் பார்வையைக் குவித்துக் கொண்டு "ரவி என்ர வாழ்க்கை இத்துடன் இறுதிக் கட்டத்தைத் தாண்டிட்டுது. இனிமேல் நான் எழும்பி நடப்பேனோ தெரியாது. ஆனால் இப்பவும் கூட ... கவிஞர் சிவத்தின் கவிதை வரிகள் என் காதோரம் ஒலித்த வண்ணமுள்ளது "என்று கூறிய சின்னராசா அவ்வரிகளை உச்ச ரிக்க ஆரம்பித்தான்.

"ஆலமர
விழுகறந்து
அணில் விழுந்து
கால் முறிந்து ..."

இக்கவிதையை நீயும் வாசிக்க முடிந்திருக்காது. அது அவரின் வசமிருந்து சஞ்சிகைகளுக்கு அனுப்பப்படவில்லை. அவரிடம் நான் சென்றபோது வாசித்து விமர்சிக்க முடிந்தது.

"இக் கவிதைகளில் எவ்வளவோ பொரு ளுண்டு. ஆனால் அது எனக்கு ரொம்பவும் பொருந்தி வருகிறதடா ரவி. என் நடவ டிக்கைகளையும், செயல்களில் எழும் முட்டுக்கட்டைகளையும் ஒழுங்குபடுத்தி, முன்னோக்கிச் செலுத்திய அந்த வலுவான ஆலமரம், பேய்க்காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ... காற்றுக்கு இசைந்து கொடுக்க என் நம்பிக்கையென்ற விழுக றந்து ... அணிலென்ற நான் விழுந்து கால் முறிந்து ... கை ... கண் ... எல்லாம் போச்சு" என்று கூறி விக்கி விக்கி அழுத வண்ணம் சின்னராசா ரவியிடம் சிறுநீர் கழிக்க உதவி கேட்க, அவன் அதற்கான பாத்திரத்தை எடுத்துக் கொடுத்துதவ சின்னராசா நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

"ரவி டேய், உனக்கு நான் முன்பு சொல்லுவேனே அடிக்கடி உன்னோடு விவாதிக்கும்போது கூறுவேனே நீரில் மிதக்கும் மிதப்புக் கட்டைபோல... அது தாண்டா என்ர நம்பிக்கைகளை யெல்லாம் பொய்யாக்கிய எனது கூட்டமும் நாம் சந்திச்ச சந்திப்புகளும் வழிமாற நான், இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானேன்.."

"எனக்கு அப்பவே தெரியும் உன் அதிதீவிரமும் உன் முதிர்ச்சியற்ற கற்பனா வாழ்வும் உன்னை நன்றாகப் பாதிக்கப் போகுதெண்டு நான் அப்பவே யோசிச் சனான். அடேய் சின்னராசாநான் சுயநல மாகச் சிந்தித்தாலும் எனக்குள்ளேயும் ஒரு பொதுநலவாதி வாழ்கிறானடா. அவன் பலமுறை என்னைத் தற்கொலைக்கு விரட்டியுள்ளான். எமக்கு முன்னால் கிடக்கும் சீரழிவுக்காக எதிர்க்கும்படி அந்தப் பொதுநலவாதி நிர்ப்பந்திக்க, நான் முரண்டுபிடிக்க - தற்கொலைக்குத் தூண்டப்படுவேன். ஆனால் நான் சாகப் பயந்தவன். சாக எடுக்கும் துணிவுடன் வாழ முற்படுகிறேனடா" ரவி கூறிமுடிக்க மதியநேர கோப்பி கொண்டு வந்து வைத்துவிட்டு ஒரு மருத்துவ தாதிப்பெண் விலகிச் சென்றாள்.

சின்னராசா ரவியைப் பார்த்து கோப்பி யைக் குடிக்கும்படி கூற ரவி பாதியை சின்னராசாவுக்கும் மீதியை தனக்குமாக இரு கோப்பைகளில் வாற்றான்.

"டேய் ரவி நான் உன்னோடு இப்படி ஒன்றாகக் கோப்பி குடிக்கும்படி நேர்ந்து விட்டதே ...."

"என்னடா சொல்லுகிறாய்?" ஆச்சரியத்துடன் கேள்வி கேட்டான் ரவி.

"இல்லையடா. எட்டு மாடியிலிருந்து விழுந்தும் எனக்கு மரணம் வராதது தாண்டா வேதனையாய் இருக்கு. இனிக்கிடந்து அழுந்தும் படியாப் போச்சேடா. நான் இந்தச் சமூகத்திற்கு பிரயோசனமாய் இருக்கவேண்டும், பாரமா அல்ல.."

எவ்வளவோ விசயங்களை நான் அனுபவித்திருக்கிறேன். ஆனால் இப்படி யொருவனை ஜெர்மனி வந்த பின்பு தாம் பழகி இப்படியானவொருவனின் உள்ளடக் கத்தை அனுபவிக்க முடிந்தது ... இப்படியும் மனிதர்கள் பொது நலனுக்காக? இந்தவுலகில் எல்லோரும் சுயமேம்பாட்டைப் பற்றிச் சிந்திக்கிறபோது ... இவன் சின்னராசா?...

ச் சீ ... நான் எவ்வளவு சுயநலவாதி. என் சிந்தனை எல்லாம் என்னைப்பற்றியும், என் சுதந்திரம்பற்றியும் தானே சுற்றின?... ரவி சிந்தனை வயப்பட்டு மௌனமாக இருக்க சின்னராசா அவனது மௌன த்தைக் கலைக்க விரும்பாமல் கண்களை யல்ல கண்ணை மூடிக்கொள்ள ரவி மெல்ல எழும்பி சாளரத்தின் ஊடாக பார்வையைச் செலுத்தினான் வானத்தை நோக்கி.

வெளியில் - வானவெளியில் பலமாக பேய்க்காற்று வீச அதை எதிர்த்து நான்கு பறவைகள் சிறகடித்துப் பறக்க ரவியின் மனதில் சின்னராசா தேய்ந்து நீட்சே தரிசித்த அந்த மனிதன் தனக்குள் உட்புகுவதையுணர்ந்தான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11வது வருட சேவையை நோக்கி...

# சசி வீடியோ விஷன்

# SHASSI VIDEO VISION

இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்,

பாடல்கள்

விளையாட்டுக்கள், முக்கியமாக cricket.

AUDIO RECORDING & BOOKS...

பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## சசி வீடியோ விஷன்

21, BLD. DE LA CHAPELLE
75010 PARIS

TEL : 01 42 09 18 88
FAX : 01 42 09 68 88

Mº: LACHAPELLE / STALINGRAD / GARE DU NORD



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.விச்வநாதன்



# பேரனுக்கு

மழை என்றால்
என்னவென
பேரன் கேட்கலாம்_

ஒளிப்படம் எடுத்து
வைத்துக் கொள்ளவேணும்
இப்போதே _

வனங்கள் தெரியாது
அதற்குள் வாழ்ந்த
சிங்கங்களையும்
முயல்களையும் குருவிகளையும்
வர்ணக் கிளிகளையும் கூடத்
தெரியாது_

ஆகாயத்தை அண்ணாந்து
பார்த்தால் புகைமூட்டம்_
நட்சத்திரக் குவியல்
தெரியாது ஓரிரண்டு
தெரிந்தாலும் அவற்றின்
பாஷை புரியாது_

நகரத்துக் கழிவுகள்
செத்து மிதக்கும் மீன்கள்
ஒருவர் முகம் ஒருவர்க்குத்
தெரியாமல் ஓடுகின்ற
ஓட்டம் சகஜமாகும்.

சிரிப்பு மறந்து போகுமோ?
அதை ஒரு கணிப்பொறி
சொல்லித் தராமலா போய்விடும்_

பால்க்காரனை விழித்திருந்து
பார்ப்பது போல்
ஆக்சிஜன் வியாபாரியை
நோக்கிக் கொண்டிருக்க
வேண்டும் வாசற்படியில்_

எல்லாவற்றையும் பெற்றதாக
இப்போதே சொல்கிறான்
பேரன் மழலையில்_
எவற்றை இழந்தோம்
என்பதைச் சொல்ல
முடியாமல்
இருமல் தடுக்கிறது
தினம் தினம்_

# பயன்

வார்த்தைகளைப் பிடுங்கிக்
கொள்ள
ஒருவன் வந்தான்_

கைகளைத் திருகி
எடுத்துச் செல்ல
இன்னொருவன் வந்தான்_

எங்கிருந்தோ ஒளிந்திருந்தவன்
கண்களைப் பிடுங்கிக்
கொண்டு போனான்_

செவிப்புலனைத் திருடிச் செல்ல
இரண்டுபேர் வந்தனர்
எங்கோ பார்த்த முகங்கள்
போலத்தான் தெரிந்தது_

நினைவுகள் பத்திரமாய்
என நினைத்த போது
அதையும் களவாட
மூன்று நான்கு பேர்
வந்தனர்_

கால்களைப் பிடுங்கிக்
கொள்ள வந்தவன்
கறுப்பாய் இருந்தான்_

எல்லாவற்றையும் மீறி
எழுதி வைத்த என்
கவிதைகளைப்
பிடுங்கிக் கொண்டு
போனவன் ஒல்லியாய்
இருந்தான்_

ஆச்சரியம்தான்
எதற்காகஇம்முயற்சியென
கேலிசெய்ய
வாயில்லையெனினும்
பரிதாபம் பொங்கியது.

# மலிவு

தோள்கள் வேண்டுமென்றார்
இரவலாக_
பத்து வருடங்களாக ஏற்றிய
வலிமையைக் கேட்கவும்
துணிவு வேண்டும்தான்_

பாதங்களைச் சிலர் கேட்டனர்
எட்டி உதைத்தால்
இமயம் தகர்ந்துவிடும்
பக்குவம் பெற்ற பிறகு
பலரும் கேட்டுப் போனதில்
புதிதாக ஏதுமில்லை_

கண்களைக் கேட்டவர்க்கு
பொருத்திக் கொண்டால்
புத்தரின் கருணை
தவமின்றியே கிடைத்து
விடுமாம்_

மூளையைக்கூட சிலர்
முனைந்து கேட்டனர்
ஒரே நொடியில் உலகை வென்று
விடலாமாம்_

யாரும் கேட்டிலர்_
நிரப்பிக் கொண்ட
மனசை தரத் தயாராய்
இருந்து கூவிப்பார்த்த பின்னும்
கேட்டிலர்_
மனித நேயம் நிரம்பிய
என் மனப் பைக்கு
மவுசு மலினமானது தான்_



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு கேள்வியாக...?


தலை தூக்க முடியாமல் அம்மலாக விருந்தது. சாதுவாக தலையிடிப்பது போலவும் இருந்தது. கண்ணைக்கசக்கிக் கொண்டு நேரத்தைப்பார்த்தேன். காலை ஆறுமணி. எட்டுமணிக்கு வேலைக்குப் போக வேண்டும். முடிந்ததோ முடியவில்லையோ, தலையிடியோ, மார்புக்குத்தோ வேலைக்குப் போயே ஆகவேண்டும் என்பது இந்த 15 வருட அகதிவாழ்வின் தலைவிதியாக்கப்பட்டுவிட்டது. வந்தநாட்டின் சூழ்நிலையும், சொந்த நாட்டின் சூழ்நிலையும் எனது அனுமதியின்றி என்தலையில் விதித்த கட்டளையாக்கப்பட்டுவிட்டது.

பிரான்ஸ் வாழ்க்கையில் ஞாயிற்றுக் கிழமைகள் திருமணவிழா, பிறந்தநாள் விழா என இப்படிப்பல விழாக்களில் கழிந்துவிடும். இந்த விழாக்கள் மற்றவர்களின் வாழ்க்கையில் என்ன பாதிப்பை ஏற்படுத்துகின்றதோ தெரியாது, ஆனால் எனக்கு அவைகள் பிடித்தமான நாட்கள். அந்த நாட்களில் மட்டும்தான் எனது சொந்தப்பிரச்சனைகள் பறண் ஏற, என் மீது விஸ்கியேற நான் கொஞ்சம் நண்பர் களுடன் கதைத்து வயிறார சாப்பிட்டு சந்தோசமாக கழிக்கும் நாள். உண்மையை சொன்னால் தனிக்கட்டையான எனக்கு ஒரு தனிச்சமையல் சமைத்து சாப்பிடுவது என்பது என்னால் முடியாதவிடயம். நண்பர்களுடன்

சி. புஸ்பராஜா

சேர்ந்து சமைத்து வேண்டுமானால் சாப்பிடுவேன். இறைச்சி, மீன், பச்சை மிளகாய், வெண்காயம் என வெட்டி மினக்கட்டு ஒரு வயித்துக்கு - ஒரு சமையல் என்ன வேண்டிக் கிடக்கிறது. ஆனால் அருளர் என்று ஊரிலே எனக்கு ஒரு நண்பர் இருந்தார். நல்ல சந்தோஷப் பேர்வழி. ஆள் தனியாகத்தான் வாழ்ந்தவர். கோழிபிடித்து வந்து, தானே அதைஅறுத்து சமைத்து கொஞ்சம் சாராயமும் அடித்து எல்லா வற்றையும் நன்றாக ருசித்து சாப்பிட்டு தன்ரை உலகில் தானே சந்தோஷம் கொள்வார். எனக்கு உது ஒத்துவராததால்தான் திருமணம், பிறந்தநாள் என வருகிறவிசேட நாட்களில் கொஞ்சம் நல்லாச்சாப்பிடுவேன் என்பதன் அர்த்தம்.

இதேபோல்தான் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நண்பர் ஒருவரின் 47வது பிறந்தநாள் எண்டு வீட்டோடை கொண்டாடினார்கள். என்னையும் அழைத்தார்கள், என்னடா இந்தவயசில பிறந்தநாள் கொண்டாடுகின்றாய் எனக்கேட்டேன். அதெல்லாம் என்ரை மனிசியின் ஏற்பாடு என்ற நண்பர் கண்டிப்பா வா என்றார். எனக்கேன் தேவையில்லாத கிரந்தமெனப்போய் நல்லாத் தண்ணியடிச்சு, நல்ல ருசியாயிருந்த காப்புக்கை சாப்பாட்டையும் சாப்பிட்டு வந்தேன். அதுதான் இப்போ அம்மலும், தலையிடியுமாக இருக்கின்றது.




மெதுவாக எழுந்து சின்னதொரு காக்காய்க் குளிப்பு குளிக்கப்போனேன். பல்லைத்தீட்டும் பொழுது இரண்டு கன்னத்து நெற்றியிலும் நரையல் கூடிக்கொண்டு போவது தெரிந்தது. பரவலாக நரைத்தால் பரவாயில்லை, இதென்னடா இந்திராகாந்தி நரையல் போல் இரண்டு பக்கமும் முழுவெள்ளையாகத் தெரிகிறது. இது தினமும் கண்ணாடி பார்க்கும்பொழுது ஏற்படுகின்ற பெரியபிரச்சனை. இப்படி தினமும் பார்க்கும்பொழுது அட எனக்கு நாற்பது வயதாகிவிட்டதே நரைக்கத்தானே செய்யும் என்னும் எண்ணம் என்னை தீயாக வாடடவே செய்கின்றது. நாற்பது வயது! என்னமாய் ஓடிவிட்டது வருடங்கள். இருபத்தி ஐந்து வயதில் சின்னதொரு மெல்லிய பொடியனாய் அழுதுகொண்டிருந்த அண்ணனை கொஞ்சிவிட்டு மனப்பாரத்துடன் போகுமிடத்தின் தன்மை தெரியாது விமானம் ஏறியது என்மனதில் பசுமையாக இன்றும் உள்ளது.

முந்தநாள் விடியவந்த நிமிடக்கணக்கில் புக் பண்ணிய தொலைபேசி அழைப்பில் சுகம் - துக்கம்கூட விசாரிக்காமல் 'தம்பி உடனடியாக கொஞ்சப்பணம் வேண்டும். குறைஞ்சது ஒரு ஐம்பதாயிரம் என்டாலும் அனுப்பிவை, அம்மாவுக்கு சுகமில்லை செலவுக்குத்தேவை' என மீண்டும் மீண்டும் பணம் அனுப்ப மறந்திடாதை என அப்பர் பணத்தைப்பற்றியே ஞாபகமாப் பேசியது நினைவில் வர, அட வேலைக்குப் போக வேண்டும் என்ற அவசரம் என்னை உந்தத்தொடங்கியது. அரக்கப் பரக்கப் புறப்பட்டு புகையிரத நிலையம் சென்றேன். எத்தனையோ பிரச்சனைகளைத் தாங்கிக்கொண்டு ஈசல்கள் போல் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருக்கும் சனக் கூட்டத்துக்குள் நானும் ஒரு புள்ளியானேன்.

நான் இறங்கவேண்டிய இடம்வந்ததும் இறங்கிக்கொண்டேன். வெளியேறுவதற்கான மின்னியக்கப்படி (Elevator) பழுதடைந்திருந்தது. பாதாளத்திலிருந்து மேலே படிகளில் ஏறிப்போவது இப்போதெல்லாம் முடியாமலிருக்கின்றது. புதிதாக இந் நாட்டுக்கு வந்த நாட்களில் படிகளில் ஓடி ஓடி ஏறிப்போவதுதான் எனக்குப் பிடிக்கும். ஆனால் இப்போ நாற்பது வயதாகிய உடலும், பல பிரச்சனைகளைத்தாங்கிய மனமும் மின்னியக்கப் படியையே கேட்கின்றது. படிகளில் ஏறிமனதில் ஒருவிதமான சோர்வுடன் குதூகலமின்றி நான் வேலை செய்யும் கடைக்குப்போகின்றேன். உடை மாற்றுமிடத்தில் பெண்களும், ஆண்களுமாக சிகரட் புகைத்துக்கொண்டு பல விடயங்களுடன், வார இறுதி எப்படி கழிந்தது என கதைத்துக் கொண்டிருந் தார்கள். ஆண்களுக்கு கைகொடுத்தும், பெண்களின் கன்னத்தில் முத்தமிட்டும் காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டேன். காலையில் வணக்கம், மாலையில் சென்று வருகின்றேன் என்பதும் வேலை சம்மந்தமான ஏதாவது விடயங்கள் கதைப் பதையும் தவிர இவர்கள் யாருடனும் எனக்கு ஒட்டிக் கொள்வதில்லை. ஒட்டிக் கொள்ள வும் முடியாது. இது இங்கு வாழும் எமது இனத்தின் ஒரு குறைபாடு என்பது எனக்கு நன்றாகத்தெரியும். வேறு நாடுகளி லிருந்து இங்குவந்து வாழும் ஏனைய இனமக்கள் இங்குள்ளவர்களுடன் கலந்து வெகு விரைவில் மொழியறிவும், நிர்வாக அறிவும் பெற்று சந்தோஷசமாக வாழ்கின் றார்கள். நாங்கள் மட்டும் எந்தநேரமும் எண்ணை வடியும் முகத்துடன் துக்கமும், துயரமுமாய் யாருடனும் ஒட்டி உறவாடாமல் அரைகுறை மொழியறிவுடனும், ஒன்றும் தெரியாத நிர்வாக அறிவுடனும் அந்நியத்தெருக் களில் முருங்கைக்காயையும், விளைமீனை யும், வல்லாரைக் கீரையையும் தேடி அலை கின்றோம். இது வந்தநாட்டின் சூழ்நிலை யால் அல்ல சொந்த நாட்டின் அவலமும், சொந்த மண்ணின் குணாம்சமும் எம்மீது ஒட்டிக் கொண்டிருப்பதன் எதிர்வினை வாகும்.

எங்கடை பாஷையில் சொன்னால் நான் வேலைசெய்வது ஒரு பலசரக்குக் கடை யாகும் (Grocery). பாரிஸ் எங்கும் இதன் கிளைகள் உண்டு. Franprix என அழைக்கப்படும் இக்கடைகளின் சொந்தக் காரர்கள் அநேகமாக யூத இனத்தவர்கள் ஆகும். இக்கடையில் நான் தொடர்ச்சியாக 12 வருடங்களுக்கு மேல் வேலை செய்வ தால் வேலை அனுபவ முதிர்ச்சி காரண மாக, எனக்கு சிறிய மொழியறிவுப் பிரச்ச னையிருந்தும் நான் செவ் (chef) தரத்தில் எனது முதலாளியால் கணிக்கப் படுகின் றேன். அதற்காக நான் சும்மாயிருக்க முடியாது. மாடுமாதிரிவேலை செய்வதால் தான் மதிக்கப்படுகின்றேன். என்னுடன் வேலை செய்யும் ஒரு வெள்ளைநிறத்தவன் செய்யும் வேலையைவிட நான் மூன்று மடங்கு கூடுதலாக வேலை செய்கின்றேன். நாரி நோ, உடல்நோ பார்த்து ஒரு இடத்தில் இருக்கமுடியாது. அப்படி நான் வேலை செய்வதால்தான் நாட்டில் இருக்கும் என்குடும்பம் என்னை காசுமரமாக்கி சந்தோஷமாக வாழ்கின்றார்கள்.

எனது குடும்பம் பெரியது. ஆறு சகோ தரிகளும், ஒரு அண்ணனும், அண்ணன் மூத்தவன் கொழும்பில் உத்தியோகம். சீதனம் என்னும் பெயரில் அவனை அப்பர் விற்று விட்டதால், விலைப்பட்ட இடத்தில் கூனிக் குறுகி எங்கள் குடும்பத்துக்கு பெரி தாக ஒன்றும் பொருளாதார உதவி பண்ண முடியாமல் எங்கள் குடும்பத்திலிருந்து அந்நியப்பட்டான். அடுத்த இலக்காக நான் வெளிநாட்டுக்கு பொதிகட்டப்பட்டேன். எனது ஆசைகளை அடக்கியும், கொன்றும் நான் கொட்டிய பணத்தில் மூன்று சகோதரி களை கோலாகலமாக திருமணம் செய்து வைத்தார் அப்பர். நாலாவது சகோதரி யையும் அவள் திருமணம் செய்யப்போகும் பையனையும், அப்பர் மேலும் எனது உட லைப் பிழிந்து கனடாவுக்கு அனுப்பி வைத் தார். மூன்று நாலு சீட்டுக்கட்டி அனுப்பிய காசில் அழகிய குளியல் அறை, வசதியான சமையலறை என வீடு புதுப்பிக்கப்பட்டது. வளவைச் சுற்றி திடமான மதில் கட்டப்பட்டது. கிணற்றுக்கு மோட்டார்பூட்டி பைப்புக்கள் போடப்பட்டு வீடு பூராவும் தண்ணி வசதி செய்யப்பட்டது. பாதுகாப்புக் கென அல்சேசியன் நாயும் விலைக்கு வாங்கி விடப் பட்டிருந்தது. ஆனால் ஊருக் குள் ஆமி புகுந்ததும் அனைத்தும் அம்போ என விடப்பட்டு கொழும்பில் குடியேறியது எனது குடும்பம். காசுமரமாக நான் இருக்க அவர்களுக்கென்ன குறை?

மரமாக நான் வாழவேண்டும் என்பது எனது குடும்பம் மீது நான் கொண்ட அதீத அக்கறையால் எனது குடும்பம் என்மீது நிர்ப்பந்தமாக சுமத்திய வாழ்க்கை. ஊரில் இருந்த போது சாதாரணமாக இளைஞர் களுக்கு ஏற்படுவது போல் எனக்கும் காதல் ஏற்பட்டது.. எனது பக்கத்து ஊர் பெண் மிகவும் நல்லவள். சொல்லிக்கொள்ளும் அளவுக்கு வசதியான குடும்பமல்ல. என் மனதுக்கினியவள். பிரான்ஸ் வரும் பொழுது இங்கு கூப்பிட்டுவதாக சொல்லிவிட்டு வந்தேன். எல்லோரையும்போல் இங்கு வந்த பின்புதான் அது ஒன்றும் சுலபமான காரியமல்ல என்பதையும் புரிந்து கொண் டேன். ஆனாலும் அடிக்கடி கடிதம் எழுதி மனம் தளராது பார்த்துக் கொண்டேன். பிரான்ஸ் வந்து எட்டு வருடங்களான பின்பு, எனது குடும்பம் என்னால் நிமிர்ந்து நிற்கும் நிலையில் நான் அவளைப்பற்றி எனது பெற் றோருக்குத் தெரிவித்தேன். திருமணமான பின்பும் எனது குடும்பத்துக்கு தொடர்ந்து உதவுவேன். அப்படி உதவ உகந்தபெண் அவள்தான் எனவும் அவளை நான் திரு மணம் செய்யமிகவும் விருப்பமாக இருக்கின் றேன் எனவும் என் உள்ளக் கிடக்கையை வெட்கமின்றி கடிதமாக்கினேன்.

கொஞ்சம் தாமதமாக வந்த பதில் கடிதம் எனது பெற்றோரின் உள்ளக் கிடக்கை வெட்டிக்காட்டியது. அப்பர்தான் கடிதம் போட்டிருந்தார். "உனக்கு எந்த வகையிலும் அந்தப்பெண் பொருத்த மில்லை. கறுப்பாக இருக்கின்றாள். இதைவிட நல்லதொரு பெண்ணாக உனக்குப் பிடிக்கிறாப்போல நான் பார்த்து அனுப்பி வைக்கின்றேன்" என அவரின் பதிலின் சுருக்கத்தைப்புரிந்து கொண்டேன். எனக்கு விரும்பிய பெண்ணை நான் தெரிவி த்தேன். இதைவிட அழகான நீ விரும்பக் கூடிய பெண்ணாக நான்பார்க்கின்றேன் என எந்த அளவீட்டில் எனது அப்பர் எழுதினார், பெண் எனக்குப்பிடிக்க வேண்டுமா எனது அப்பருக்குப்பிடிக்க வேண்டுமா என நான் குழம்பினேன். எனது விருப்பத்தையும் அப்ப ரின் மோசமான முடிவையும் விளங்கப் படுத்தி, நீதான் எனக்குள்ள ஒரேபிடி, நீ எப்படியாவது அப்பரிடம் சொல்லி எனது ஆசையை நிறைவேற்றென எனது அண்ணனுக்கு நீண்டதொரு பிரார்த்தனைக் கடிதம் எழுதி அனுப்பிவிட்டு தினமும் தபால் காரனுக்கு வணக்கம் சொல்லி என் அண் ணனின் பதிலை எதிர்பார்த்து நின்றேன்.

உறையை கைவந்தபடி கிழித்து அண்ணனின் பதிலைப்படித்தேன். "அப்பர் சொல்வதில் நியாயம் இருக்கும், பேசிச்செய் யும் கல்யாணத்தில் சொந்த பந்தங்களின் உதவிகள் இருக்கும், அவசரப்பட வேண் டாம்" அவனின் கடிதம் எனக்கு உபதேசம் சொல்லியது. அப்பரால் சீதனத்துக்கு விற்கப்பட்டவன் மனது எனது காதல் திருமணத்தை ஏற்கவில்லையா? அல்லது உத்தியோக சம்பளம் பத்தாது என நான் மாதா மாதம் உதவியாக அவனுக்கு அனுப் பும் 500 பிராங்குகள் எங்கே நான் திருமணம் செய்தபின்பு தனக்கு கிடைக்காமல் போய் விடும் என நினைக்கிறானா தெரியவில்லை. மொத்தத்தில் முப்பத்திமூன்று வயதில் நான் கொண்ட ஆசை அவனுக்கு அவசர மாகப்பட்டது தான் எனக்கு வேதனையைத் தந்தது. எனது காதல் இதயம் சிதறு தேங்காயானது.

இது நடந்து சுமார் மூன்று வருடங் களாகியிருந்தது. இந்த மூன்று வருடங் களாக நான் தேவதாசாக தாடியும் தலை முடியுமென சோகமான காதல் பாட்டுக் களை இரசித்துக்கொண்டு திரிந்தேன். இந்த நேரத்தில் என்னவளுக்கு திருமணம் ஆகிவிட்ட செய்தி என்னை மன ரீதியாக மேலும் ஊனமாக்கியது. அவள் தரப்பிலி ருந்து விளக்கமில்லை, என் தரப்பில் எதிர்ப்பும் இல்லை. அவள் ஒன்றும் ஆண்டா ளாகவோ, மீராவாகவோ இல்லாமல் போன தில் எனக்கு சந்தோஷம்தான்.

இவைகள் நடந்தும் எனது குடும்பத் துக்கு நான் தடையின்றி தொடர்ந்தும் காசு மரமாக பயன்பட்டேன். எப்போ ஒருமுறை சனி, ஞாயிறு என இருந்த குடிப்பழக்கம் இப்போ தினமும் என்றாகிவிட்டது. இதைக் கண்ட, இங்குவாழும் எனது தூரத்து உறவு அண்ணனின் மனைவி எனக்கு ஒரு பெண் பார்க்கும்படியும், வெகுவிரைவில் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வைக்கும்படியும், எனது தாயாருக்கு எனது அனுமதியுடன் தான் ஒரு கடிதம் அனுப்பிவைத்தார். அறைவதுபோல் அம்மா விடமிருந்து அவருக்கு வந்தது பதில். "உனது சொந்தக்காரர்கள் யாரும் இங்கு எங்கடை சனத்தோட உறவாடவில்லை. நீ மட்டும் சொந்தம் எண்டு சொல்லிக்கொண்டு இப்பவர என்ன காரணம் என்று தெரிய வில்லை" என்று கதையை வேறு பக்கம் திருப்பி அம்மா போட்டபதிலில் எனது திரும ணம்பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. எனக் காக கடிதம் போட்டவரின் முகத்தில் பரிதாபமும், இயலாமையும் வெளிப்பட்டது.

எனக்கு இப்போ எல்லாம் வெளிச்ச மானது. எனது குடும்பம் எனது காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள், நான் விரும் பிய பெண்ணை அவர்களுக்குப் பிடிக்க வில்லை என நான் போட்ட கணக்கு தப்பு. அவர்கள் நான் திருமணம் செய்வ தையே விரும்பவில்லை. திருமணம் செய் தால் நான் எங்கே தங்களுக்கு உதவாமல் போய்விடு வேனோ என்றபயம். எனது எரிவில் அவர்கள் வெளிச்சத்தைக்கண்டு கொண்டேயிருக்க விரும்புகின்றார்கள். அவர்களுக்கு வேண் டியதெல்லாம் எனது உழைப்பால் கிடைக் கும் பணம். பணத்தைப்பற்றி அவர்கள் அதிகம் சிந்திப்பதால் என்னைப்பற்றி சிந்திக்க அவர்களால் முடியவில்லை.

கொழும்பிலிருந்து கொண்டு அப்பர் அடிக்கடி பணம்அனுப்பும்படி தொலைபேசி எடுத்துக்கொண்டிருப்பார். இதற்கிடையில் தங்கைகளும் தனியாக தொலைபேசி எடுத்து தங்கள் பங்குக்கு அடிக்கடி தொகையாக பணம்கேட்டு பெற்றுக் கொள் வார்கள். குடும்பத்தை விட இனம், சனம் பக்கத்துவீடு, முன்வீடு, நண்பர்கள் எனப் பலர் உதவி கேட்டு கடிதம் எழுதியபடி. என் னால் இயன்றளவு அவர்களுக்கும் பணம் அனுப்பிக் கொண்டுதான் இருக்கின்றேன். சின்னராசா என்று ஒருத்தர் கடிதம் எழுதி யிருந்தார். "தம்பி என்னைத் தெரியுதோடா. நான்தான் உங்கள் கல்லூரியிலை பரிசோதனைக் கூட உதவியாளராக (Lab assistant) இருந்தனான்" எனத்தொடங்கி, தான் கொழும்பில் பிள்ளைகுட்டிகளோடு அவஸ்தைப்படுவதாக உதவி கேட்டிருந் தார். இப்படியான சந்தர்ப்பங்களில் கலி யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருப்ப துவும் ஒரு வசதியாகவே இருப்பதாக எண் ணுவதுண்டு.


இப்போ எனக்கு நாற்பது வயதாகி விட்டது. நான் தொடர்ந்தும் வேலை செய்து கொண்டுதான் இருக்கின்றேன். எனக்கும் ஆசைகள், வேகங்கள் இருக்கத்தான் செய் யும். என்னுடன் வேலைசெய்த, செய்து கொண்டிருக்கும் எத்தனையோ பெண்களில் ஒருத்தியாவது என்னை விரும்பமாட்டாளா என நான் ஏங்கியதுண்டு. இவைகள் எல் லாம் எனது வெறும் கனவுகள். எனக்குத் தெரியும் ஒரு பெண்ணிடம் போய் Je t'aime (I love you) என்று சொல்லும் துணிச்சலும் என க்கு கிடையாது. எனக்கு எத்தனையோ வருடங்களுக்குப்பின் வேலைக்குவந்த எரிக் என்பவன் எங்களுடன் வேலைசெய்த மேரியை கலியாணம் செய்து பிள்ளையும் பெற்றுவிட்டான். நாங்கள் அவர்கள் போல் விலையான உடைகளோ, ஆடம்பரமான செலவுகளோ செய்வதில்லை. சீட்டு போடு வம், வீடு வாங்குவோம், ஊருக்குத் தொகை யாக பணம் அனுப்புவம், சீதனம் கொடுப் போம். இதற்காக தொடர்ந்து உழைப்போம். இப்படியேபரம்பரைபரம்பரையாக எண்ணை வடியும் முகமும், எந் நேரமும் சோகம் படிந்த மூஞ்சியுமாக திரியவே தெரிந்த எங்களை எந்த அடைச்சிதான் (அரபு பெண்) பார்க்கப் போகின்றாள்.

ஒரு பெண்ணின் உறவுக்காக என்னை யறியாமலேயே நான் ஏங்குவது எனக்கே தெளிவானது, கல்யாணம் என்பது வெறும் செக்ஸ் அல்ல, அந்த உறவில் எத்த னையோ அர்த்தங்கள் உண்டு என்பதையும், நான் புரிந்து கொண்டு இயலாமையால் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு இங்கே யார் இருக்கின்றார்கள். எனது இன்ப துன்பங்களை நான் யாருடன் பகிர்ந்து கொள்வது. எனக்கு சம்பளஉயர்வு கிடை த்திருக்கின்றது, எனக்கு இரண்டு மடங்கு சம்பளம் கிடைத்திருக்கின்றது. இப்படி விட யங்களை யாருக்குச் சொல்லி சந்தோஷப படுவது. மனம் நொந்துபோயிருக்கும் வேளையில் யார் மடியில் தலைவைத்து தூங்க முடியும். என்னுடைய அந்தரங் கங்களை யாரிடம் பகிர்ந்து கொள்ள முடியும். இப்படி பலதையும் பத்தையும் நானே யோசித்து நானே அழுது என்னை நானே தேற்றிக்கொண்டு ஒரு உறவுக்காக அலையும் நிலையை எனக்கு யார் ஏற்படுத் தினார்கள் என அவர்கள் இவர்கள் என யோசித்து இறுதியில் நான் தஞ்சமடைவது எனது விஸ்கிப்போத்தலில்தான்.

எனக்கு இப்போதெல்லாம் திருமணம் நடக்கும் என்ற ஆசையே இல்லாமல் போய் விட்டது. எனது காதலினால் ஏற்பட்ட சோக ங்களும், துயரங்களும் மறைந்து போய் விட்டது. எவ்வளவுதான் இயந்திரமாக உழைத்தாலும், வாழ்ந்தாலும் ஒரு ஆணுக் குரிய வேகங்கள் என்னையும் தாண்டி வேக மாக எரிமலையாக வெடிக்கும் பொழு தெல்லாம் அதை அடக்கி, இன்று என்னைப் பார்த்து நானே பரிகசிக்கும் நிலைக்கு நான் ஆளாகித் தவிக்கின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக நான் உழைக்கவேண்டும். என் குடும்பத்துக்காக நான் உழைத்தேயாக வேண்டும். பல்லா யிரம் பிரச்சனைகளுக்கிடையே வாழ்வி யக்கம் மீது நம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்துக்குள் நான் ஒரு புள்ளியாகின்றேன். ●

## இருப்பு..




எனது இயக்கம்
எனது ஆற்றல்
எனது சிந்தனை
எனது திறமை
அனைத்தும் எனக்கே
இருக்கக் கூடியவை.
யாரிடமாவது இருந்து
இவற்றைப் பெற்றிருந்தால்
நான் பெண்ணாக
இருக்க முடியாது.
நீங்கள் உருவாக்கிய
பெண்மை
எனது அடையாளமல்ல,
நான் பெண்
பிறக்கும் போதே.

ரஞ்சினி (Frankfurt)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தார்!
# மக்களே உருவாக்கிய மாக்கலைஞன்!!

**சின்னமருது**

ஆந்திரப்பிரதேசம் மேடக் மாவட்டத்தில் கத்தார் தாழ்த்தப்பட்ட மக்கள்பிரிவில் முகிழ்த்தார். பஞ்சாகுளம் போராட்டம் உச்சகட்டமாக இருந்த எழுபதுகளில் பொறியியல் இரண்டாம் ஆண்டு கல்வியை விட்டுவிட்டு களத்தில் குதித்தார். கத்தாரை இயக்கத்திற்குக் கொண்டு வந்தது 'கலை ஆர்வலர் சங்கம்'. இது இயக்குனர் பி.நரசிம்மராவால் நடாத்தப்பட்டு வந்தது. இனி கத்தாரே பேசுகிறார் கேட்போம்.

"ஆந்திரமாநிலத்தில் மரபுவழி வழக்கிலிருந்து புர்ரகதா, ஜமுகலகதா போன்ற கலை வடிவங்களில் புரட்சிகர உள்ளடக்கங்கள் கொண்ட கலைப் படைப்புகளை உருவாக்கி அவற்றை மக்களிடம் கொண்டு செல்வதன் மூலம் புரட்சிகரக் கருத்துகளை மக்களிடையே பிரச்சாரம் செய்வதற்காகவே இவ்வமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது.


தெலுங்கானாப் பிரதேசத்தில், தொழிலாளர்கள் மத்தியில், விவசாயிகளிடையில், மலைவாழ் மக்களிடத்தில், கடலோரப்பகுதிகளில் உள்ள மிகவும் சிறப்பான வடிவங்களை நாங்கள் ஆய்வு செய்து எடுத்துக்கொள்கிறோம். அவற்றைப் புரட்சிகர உள்ளடக்கங்கள் கொண்டதாக மாற்றியமைக்கிறோம். இப்போது அது உயிர்ப்புப் பெறுகிறது. அவற்றை மீண்டும் மக்களிடம் எடுத்துச் செல்கிறோம். ஆம்! எங்களின் புரட்சிகர கலை இயக்கங்களுக்கான ஊற்றுக்கண் மக்களே!

நாங்கள் நகர்ப்புறங்களில் உள்ள தொழிலாளர்கள், கிராமப்புற விவசாயிகள், பூர்வகுடி மக்கள் ஆகியோரிடையே இருந்து புரட்சிகர உணர்வும் ஆர்வமும் திறனும் உள்ள இளைஞர்களைத் தேர்வு செய்து பயிற்சி கொடுத்து அவர்களைப் புரட்சிகரக் கலைஞர்களாக உருவாக்குகிறோம்.

எங்கும் தங்கு தடையின்றி புரட்சிகர கலைப்பிரசாரம் நடைபெறுகிறது. உதாரணத்திற்கு 'ரகல் ஜண்டா' என்ற இசை நாடகம் 'ரகல் ஜண்டா' என்ற சொல் கோன்டு பூர்வகுடி மக்களின் மரபு வழிபட்ட கொடியைக் குறிக்கும் சொல்லாகும். ஒககதா பாங்கில் அமைந்த இந்த 'ரகல் ஜண்டா' என்ற இசை நிகழ்ச்சிக்கு பூர்வகுடி மக்களிடையே ஆரவார வரவேற்பிருக்கிறது. கொரில்லாக்குழுவில் உறுப்பினரான கங்காஜம் என்ற தோழர் காட்டுப்பகுதிகளில் பூர்வகுடி மக்களிடையே கலைக்குழுக்களை உருவாக்கி கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். இப்போது அவர்களே கூட பாடல்களை எழுதுகின்றனர்.

வாழ்க்கைக்கான போராட்டத்தில் தங்கள் வாழ்க்கையையே போராட்டத்திற்கான ஆயுதமாக மக்கள் கருதத் தொடங்கிவிட்டனர். ஆரம்பத்தில் 1970 இல் நான் பாடும்போது எனது குழுவினர் மட்டுமே எனக்கு கோரஸ் கொடுப்பார்கள்.

இப்போது நான் போகுமிடமெல்லாம் முன்னே குழுமியுள்ள ஆயிரக் கணக்கான மக்கள் கோரஸ் கொடுக்கின்றனர். அண்மையில் அனந்தப்பூரில் முற்போக்கு இளைஞர் அணியின் மாநில மாநாடு நடந்தபோது எதிரே குழுமியிருந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கோரஸ் கொடுத்தனர். ஏற்பட்டுவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுச்சி எத்தகையது என்பதற்கு இவையெல்லாம் உதாரணமல்லவா"

பத்தாண்டுகளுக்கு முன் எனக்கு கத்தார் கொடுத்த பேட்டியைத்தான் மேலே நீங்கள் படித்தது. கத்தாரின் சிலிர்ப்பான ஆட்டமும் பாட்டும் குமரி முதல் இமயம் வரை படித்தவர், பாமரர் என்கிற பேதமின்றி மொழி, மதம், இனம் கடந்து எல்லோரையும் பிணைத்தது.

1983-ம் ஆண்டு தெலுங்கு புரட்சிகர கவிஞர் செரபண்டராஜு இறந்தபோது கத்தார்தான் கொள்ளி வைத்தார். அன்றே அவர் பாணிக்கிரஹி, செரபண்டராஜுவின் முழு வாரிசாகி விட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் ( மக்கள் யுத்தம்) பிரிவின் கலைக் கப்பலாக இந்தியா முழுவதும் உலா வந்தார். பாட்டாளி மக்களின் இன்ப துன்பங்களையும், உழைக்கும் வர்க்கத்தின் இசை பிறந்த வரலாற்றை இவர் சொல்லும்போது அதன் உயிர்ப்புத் தன்மையை நேரே காண முடியும். இவருடைய பாடல்கள் மட்டும் ஆண்டுக்கு 70 ஆயிரம் புத்தகங்கள் விற்பனையானது. ஒலி, ஒளி நாடாக்கள் இருபதுக்கு மேல் வெளியாகி இருக்கிறது. உட்புற கிராமங்கள், மலையின மக்களுக்கான கல்வியாக இரவு முழுவதும் இவரது நிகழ்ச்சி நடக்காத கிராமங்களே கிடையாது. பொறுக்குமா ஆளும் வர்க்கம். ஒவ்வொரு மாநிலத்திலும் ஆறு வழக்குகள் இவர் மேல் இன்று இருந்து வருகிறது. இதெல்லாம் போதாது என்று பிடிவாரண்ட் போட்டது. 1986 முதல் 1990 வரை தலைமறைவாக இயங்கி வந்தார். 18.02.1990 அன்று வெளிப்படையாக மேடைக்கு வந்தார். பன்னிரண்டு இலட்சம் பேர் இதில் மட்டுமே கலந்து கொண்டனர்.

இந்தாண்டு ஏப்ரல் முதல் வாரம் "வேட்டைநாய்கள் அல்லது பச்சைப்புலிகள் " என்று அறிவித்துக் கொள்ளும் போலிசின் தீவிரப்பிரிவு கத்தாரின் வீட்டினுள் புகுந்து "சமரசம் செய்து வையுங்கள்" என்று சொல்லி பேசிக் கொண்டிருக்கும்போதே சுட்டுவிட்டு ஓடிவிட்டனர். இவர்களை முன்பே கத்தார் மனைவியும் குழந்தைகளும் பார்த்திருக்கின்றனர். கத்தார் சுடப்பட்டதை அறிந்த மக்கள் இருபதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நிஜாமயாத் மருத்துவமனை முன்பு கூடி விட்டனர். இரவு 12 மணிக்கே தனது செய்தியை முடித்துவிடும் 'இந்து' பத்திரிகைகூட அதிகாலை 4 மணி வரை காத்திருந்து கத்தார் உயிர் பிழைத்த செய்தியை வெளியிட்டனர். அதற்குள் தீவிரவாத இயக்கத்தில் இருந்து (மக்கள் யுத்தம் கட்சி) முரண்பாடுகளால் ஓராண்டுக்கு முன்பு வெளியேற்றப்பட்ட புரட்சிப்பாடகர் கத்தார் சொந்தக் கட்சியாலேயே சுடப்பட்டார் என்று தினத்தந்தி முதல் தினமணி வரை பொய்யைப் பரப்பியது.

உயிர் பிழைத்த கத்தார், தான் செய்த முதல் வேலை, போலிசை எதிர்த்து அறிக்கை விட்டதுதான். பொய்யர்களின் முகம் அம்பலப்பட்டது. 09.04.97 அன்று ஆந்திரா முழுவதும் 70 அமைப்புகள் இணைந்து அழைப்பு விட்டதற்கு இணங்க பந்த் வெற்றியடைந்தது.

உண்மை இவ்வாறிருக்க அவசர அவசரமாக இரவிக்குமார் போலிசின் செய்தியை அப்படியே வாந்தி எடுத்து தனது இதழில் 'கட்சியே கத்தாரை சுட்டதாக' எழுதி தனது ஆளும் வர்க்க விசுவாசத்தை கட்டுடைத்துக் காண்பித்திருக்கிறார். பழைய நிறப்பிரிகை கம்பெனியிலிருந்து பிரிந்து தற்போது தனிக் கம்பெனி (தலித்) ஆரம்பித்தவுடன் தன்னை இதன் மூலம் வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்.

இந்திய ஆளும் வர்க்கத்தின் நேரடி எதிரியாக இருப்பது கம்யூனிஸ்ட்டுகளே! இவர்களை எவ்வாறு பிரித்து ஆளலாம் என்பதே ஆளும் வர்கத்தினரின் பொதுக்கணக்கு. ஆங்கிலேயன் மொழி, இனம் வாயிலாகப் பிரித்துக் கட்சிகளை உண்டாக்கினான் என்றால், கருப்புத்துரைமார்கள் தற்போது சாதிவாயிலாக கம்யூனிஸ்ட் கட்சியை உடைத்துவிடலாம் என்று கனவு காண்கிறார்கள். இந்தியா முழுவதுமே தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் கட்சியாக உணர்வது கம்யூனிஸ்ட் கட்சியையே."காட்"இந்தியாவில் நுழைந்து ஆதிக்கம் பெற்றுவரும் இந்நேரத்தில்"காட்" செயற்பட்டாற்தான் தலித்துகளுக்கு வேலை கிடைக்குமென்று, நிறப்பிரிகை மார்க்ஸ், அமெரிக்கத் தன்னார்வ தொண்டு முனையான கெயில் ஓம்வெத் கட்டுரையை மொழிபெயர்த்து தனது விசுவாசத்தை முன்பே காட்டிக் கொண்டார். தலித் ஆய்வு மையம் - மதுரை, தலித் கல்வி அறக்கட்டளை - சென்னை போன்றவை முன்பு இரகசியமாக இயங்கி வந்தவை, தற்போது நேரடியாக கம்யூனிஸ்ட் எதிர்ப்பு வேலையை வாடகைவாயர்கள் மூலமாகவும் 'கோடாங்கி' போன்ற பத்திரிகைகளை அடித்துக்கொடுப்பதன் மூலமும் தொடங்கி இருக்கின்றன. ஆந்திராவில் ஜலையா போன்ற நபர்கள் இந்த வேலையைச் செய்து வருகின்றனர். உ.பி.யில் கூட்டு சேர்ந்திருக்கும் கன்சிராம் - மாயாவதி ( பகுஜன் சமாஜ்) பாரதீய ஜனதா கூட்டை தேர்தல் கூட்டு என்பதா அல்லது ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான கூட்டு என்பதா என்பதை தாழ்த்தப்பட்ட தோழர்கள் புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். 25 ஆண்டு காலம் உழைக்கும் வர்க்கத்திற்காக உழைத்த கத்தாரை சாதிக் கூண்டில் அடைக்க வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றனர்.

கத்தார் உடல்நலம் தேறியவுடன் மீண்டும் தனது பணியைத் தொடங்கியது சாதிசங்கங்களின் முகத்தில் கரி பூசியது போலாகி விட்டது! கத்தார் எப்போதும் பாடுவது போல,

*மலைகளையே பிளந்திட்டோம்*
*பாறைகளை உடைத்திட்டோம்*
*ரத்தத்தையே பிழிந்து அணைகளையே கட்டினோம்*
*உழைப்பு யாருது ?*
*செல்வம் யாருது ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோகினிப் பேய்

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

வேலை செய்யத் தொடங்கிய நாளிலி ருந்து சம்பளத்துடன் ஒரு நீண்ட விடுமுறை எடுத்துத்தான் நினைக்கும் சில விடயங்களைச் செய்ய வேண்டும் என்று ஆசைப் பட்டவன் சம்பந்தன்.

இருபத்திஓராம் வயதில் யூனிவர் சிட்டிப் படிப்பை முடித்துவிட்டு கொழும்பில் ஒரு தனியார் அலுவலகத்தில் ஒரு நல்ல வேலையில் அமர்ந்தபோதுதான் தெரிந்தது கல்லூரி நாட்களிலும் சர்வகலாசாலை நாட்களிலும் கிடைத்த சுதந்திரம் இனிக் கிடைப்பதனால் காசைப் பற்றியும் சிந்திக்க வேண்டுமென்று.

அந்த ஆசை பத்து வருடங்களிற்குப் பின் கிடைக்கிறது. சம்பளத்துடன் மூன்றுமாத விடுமுறை.! அவன் வேலை செய்த கொம்பனி லண்டனை விட்டு இடம் பெயர்கிறது. லண்டனிலிருந்து நியூ கார்ஸல் என்ற இடத்திற்குப் போக விரும்பாதவர்கள் விலகிக் கொள்ளலாம் என்றும் அதற்குப் பரிகாரமாக அவர்கள் சேவையைப் பொறுத்து நிவாரணப்பணம் வழங்குவதாகவும் சொன்னபோது சம்பந்தன் மிகவும் சந்தோசப்பட்டான்.

லண்டனை விட்டு வேறிடம் போக அவன் விரும்பவில்லை. ஒரு காரணம் லண்டனில் நிறையச் சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அடுத்த காரணம் லண்டனில் இருந்தால் இன்னொரு வேலை தேடுவதும் சுகம். கிடைத்த காசை எடுத்துக் கொண்டு தாய் தகப்பனைப் பார்க்க இந்தியாவுக்கு ஒருதரம் போய் வரலாம். அவர்கள் சிங்கள ராணுவத்தின் கொடுமை தாங்காமல் சென்னையில் போய்த் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அம்மா இவனைக் கண்டால் கல்யாணக் கதை தொடங்கி விடுவாள். தம்பி குடும்பத்தைப் போய்க் கனடாவில் சந்திக்கலாம். அகதியாய்ப் போனவன், சம்பந்தனைவிட நன்றாக வாழ்கிறான் என்று கேள்வி. தம்பி குமரன் ஏ லெவலும் படிக்காதவன் ஆனாலும் நன்றாக இருக்கிறான். இவனைக் கண்டால் இவனின் பணம் சேர்க்காத இயலாமையைச் சொல்லாமற் சொல்வான். அக்காவும் தங்கச்சியும் அவுஸ்திரேலியாவில் இருக்கிறார்கள். போன வருடம் லண்டன் வந்திருந்தார்கள்.

நெருங்கிய சிநேகிதன் ஒருத்தன் பாரிஸில் இருக்கிறான். போனால் அவனுடன் சேர்ந்து ஒரு வாரம் கும்மாளமடிக்கலாம். ஆனால் அவன் இப்போது, தான் இறக்குமதி செய்யப்போகும் எதிர்கால மனைவியைத் தவிர வேறெதுவும் சொல்லாத மாதிரியாகி விட்டான்.

சம்பந்தன் தன் வாழ்க்கையில் ஒரு குறுகிய காலத்தைத் தான் நினைத்தபடி செலவழிக்கத் திட்டம் போட்டான். வேலை போவதால் இப்போது இருக்கும் நல்ல வசதியான வீட்டில் வாடகை கொடுக்கக் கட்டாது.

நல்ல வசதியான வீட்டில் வசிப்பதற்காக அவசரப்பட்டு ஏதோ ஒரு வேலையை எடுக்கவும் விருப்பமில்லை. அத்துடன் அவன் அடி மனத்தில் எப்போதோ நினைத்து வைத்திருந்த ஆசையை நிறைவேற்ற இந்த மூன்றுமாத காலத்தையும் செலவிடுவதாகத் தீர்மானித்துவிட்டான். சம்பந்தனின் இலட்சிய வேட்கை நிறைவேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் வீடு தேடும் படலம் தொடங்கியது.

வசதியும், நாகரிகமும், கலைக்கூடங்களும், நாடகக் கொட்டகைகளும், சினிமாத் தியேட்டர்களும், நவீன கடைகளும், பழைய பொருட்களும் நிறைந்த இஸ்லிங்டன் என்ற சுறுசுறுப்பான கவர்ச்சியான இடத்தைவிட்டுப் போக மனமில்லைத் தான்., ஆனாலும் அமைதியான இடமாகவும் மலிவான இடமாகவும் பார்த்தால் தான் தன் வாழ்க்கையின் ஆசையைப் பூர்த்தி செய்யலாம் என்று திடமாக எண்ணினான்.

கிளப்ரன் என்ற இடத்தில் ஒரு மலிவான அறை வாடகைக்கு வருகிறது என்று பத்திரிகையில் கண்டதும் மனம் துள்ளியது. ஹக்னி என்ற வறுமையான பகுதியில் கிளப்ரன் என்ற பகுதியுண்டு. இஸ்லிங்டனை விட கிளப்ரன் கிட்டத்தட்ட நான்கு மைல்களுக்கப்பாலிருந்தாலும் நானூறு வருடங்களைத் தாண்டிய வாழ்க்கை மாதிரி ஏழ்மையின் சின்னங்களை எங்கெல்லாமோ கிளப்ரனிற் பார்க்கலாம்.

ஆரவாரமும் அவசரமும் படிந்த இஸ்லிங்டன் எங்கே தூங்கி வழியும் பார்க்கஸ் தெரு எங்கே?

கிளப்ரன் என்ற இடத்தில் பார்க்கஸ் வீதியில் பதின்மூன்றாம் எண்ணிலுள்ள வீட்டிலுள்ள இரண்டாவது மாடியில் ஒரு அறையை எடுத்துக்கொண்டு தன் சாமான்களைக் கொண்டு போய்ச் சேர்த்தவுடன் தன் வாழ்நாளின் ஆசையை நடைமுறைப் படுத்த ஆசைப்பட்டான்.

முதலாவதாகச் செய்த வேலை மிகவும் நெருங்கிய நண்பர்களைத்தவிர யாருக்கும் அவனின் டெலிபோன் நம்பரைக் கொடுக்காதது. அடுத்தது நல்ல மேசையும் கதிரையும் W.H. Smith என்ற கடையில் போய் நிறையப் பேப்பர்களும் வாங்கியதாகும். மூன்று படுக்கையறைகளையும் கீழ் மாடியில் ஒரு ஹோலையும் பெரிய குசினியையும் கொண்டது அந்த வீடு.

முதலாவது மாடியில் இரண்டு அறைகள். ஒரு அறையைத்தான் பாவிப்பதாக வீட்டுக்கார முதலாளி ரமேஷ்சிங் சொன்னார். பெரிய தலைப்பாகையும் உருவிவிட்ட மீசை தாடியுடன் அந்த மிகவும் உயரமான மனிதன் இந்த வீடு தன்னுடைய மூன்றாவது வீடென்றும் சில வேளைகளில் தனியே வாழ வேண்டும் போலிருந்தால் எப்போதாவது தனது அறையைப் பாவிப்பதாகவும் சொன்னார். அடுத்த அறையில் இரண்டு ஆபிரிக்க மாணவர்கள் இருந்தார்கள்.

கல்லூரிப் படிப்பற்ற நேரத்தில் வேலை செய்கிறார்கள் போலும். அவர்களைக் காண்பதே அரிது. அல்லது வார விடுமுறையில் சொந்தக்காரர் வீடு போகிறார்களோ தெரியாது.

இரண்டு வாரங்களாக சம்பந்தன் தனது சக வாடகையாளரை அதிகம் சந்திக்கவில்லை.

அவன் குடிபுகுந்த நேரம் ஒக்டோபர் கடைசிப்பகுதி. நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதம் மூன்றும் தான் தனிமையில் வாழவேண்டும் என்று திட்டம் போட்டிருந்தான் சம்பந்தன்.

ஒக்டோபர் மாதக் கடைசியில் உலகம் அழுது வழியத் தொடங்கிவிட்டது. பேய்க் காற்றடித்து ஓய்ந்து போய் இலையிழந்த மரங்கள் நிர்வாணமாய்த் தோன்றின. வானம் எப்போதும் கறுப்புச் சேலை போர்த்திய பெண்ணாய் சோகம் காட்டியது.

சம்பந்தனின் புதிய வீட்டைச் சுற்றிக் கிட்டத்தட்ட எல்லாமே பழைய வீடுகள். அகதிகள், வேலையற்றோர், வசதியற்ற மாணவர்கள், போதையருந்தும் காவாலிக் கூட்டம் என்பனவற்றின் நடமாட்டம் சாதாரணம்.

நீண்ட அந்தத் தெருவில் பெரிய விலையுயர்ந்த கார்களோ அல்லது பெரிய உத்தியோகஸ்தர்களோ கிடையாது.

இஸ்லிங்டனுக்கும் சம்பந்தனின் புதிய இடத்துக்கும் நிறைய வித்தியாசம்.

சம்பந்தனின் மூன்றாம் கிழமை அந்த வீட்டில் யாருமேயில்லை. எப்போதாவது இருந்துவிட்டுத் தலை காட்டும் ஆபிரிக்க மாணவர்களின் நடமாட்டத்தையும் காணவில்லை.

வெளியில் இரண்டு மூன்று நாட்களாகச் சரியான குளிர். உடலை ஊசிகள் போல் குத்தித் துளைத்தது. மிஸ்டர் ரமேஷ் சிங் சொன்னபடி வீடு ஒன்றும் எப்போதும் சூடாக இல்லை. ஹீட்டரைப் போட்டால் ஏதோ சூடு தெரியும். ஹீட்டரை ஓவ் பண்ணி அடுத்த நிமிடம் பல் கிடுகிடுவென்று அடிக்கும்.

தனது அபிலாசை அதாவது ஒரு நாவல் ஒன்று எழுத வேண்டுமென்ற அபிலாசையை நடைமுறைப்படுத்த சம்பந்தன் எடுத்த பிரயோசனங்கள் விழலுக்கு இறைத்த நீராயின. எழுத்து என்பது நினைத்து முடித்தவுடன் வந்து கொட்டாத விடயமென்று அவனுக்குத் தெரியவில்லை. தனிமையில் வாழ்ந்து பழக்கமில்லாததால் இந்தப் புதிய அனுபவம் தொல்லை தந்தது.

வசதியான வீட்டிலிருந்து வாழ்ந்த அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த "ஏழ்மை" யான வீடு அவனுக்கு எந்த விதமான உற்சாகத்தையும் தரவில்லை. கதை எழுதுவதற்கு. ஒரு "கற்பனை" பிறப்பதற்குச் சரியான சந்தர்ப்ப சூழ்நிலையில்லாவிட்டால் ஒன்றும் கைகூடி வராது என்பதை மெல்லமெல்லமாக உணரலானான்.

ஆனாலும் முதல் மூன்று கிழமை அனுபவத்தையும் வைத்துக்கொண்டு தன் இலட்சியத்தை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை.

அன்று அவன் தனியாக இருந்த போது குளிருக்குப் பயந்து நிறையக் கம்பளிச் சுவெட்டர்களை அணிந்து கொண்டான். ஒன்றிரண்டு பியர் கான்களைக் காலிசெய்தும் கற்பனை பிறக்கவில்லை. வீணையிசையும் சுவையான சாப்பாடும் காதையும் வயிற்றையும் நிரப்பியது. கதைதான் எழுத முடியவில்லை. எத்தனையோ கதைகள் எழுத வேண்டுமென்று மனதில் போட்டிருந்த திட்டமெல்லாம் கையில் பேனையை எடுத்தவுடன் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடியது.

காதல்கதை சரித்திரக்கதை என்றெல்லாம் யோசித்துப் பார்த்தான். எங்கிருந்து ஆரம்பிப்பது? தனக்கு அடிக்கடி வந்த காதல்களை சிந்தித்துப் பார்த்தான். அந்தக் காதல் சம்பவங்களில் வந்துபோன எவரையும் கதாநாயகியாக்க முழுமனம் வரவில்லை.

முதல் முதல் தன் நினைவில் நிறைந்து நித்திரையைக் குழப்பிய பக்கத்து வீட்டு வேலைக்காரியின் கட்டான உடம்பும் கருத்து நிறைந்த பார்வையும் கற்பனையில் வந்து போனதுண்டு, ஆனாலும் முழுமையாகக் கதை படைக்க ஏதும் மூலப் பொருட்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

சர்வகலாசாலையில் "சகசமாகப்" பழகிய சில சிநேகிதிகளைக் கதைகளில் கொண்டு வரப் பயம். அவர்கள் எல்லோரும் கல்யாணம் செய்து குழந்தை குட்டிகளுடன் உலகத்தின் நாலா பக்கங்களிலும் வாழ்கின்றார்கள். யாரும் கண்டு பிடித்து விட்டால் கரைச்சல்.

வேலையிடத்தில் பழகிய சில "நெருக்கங்களை" விரித்து எழுத கருத்துகள் அகப்படவில்லை.

எழுத நினைத்து எத்தனையோ பேப்பர்களை அநியாயமாக்கி சில பியர்க் கான்களைக் காலியாக்கி, குளிரில் தவித்ததை விட வேறொன்றும் பிரயோசனமாகப் படவில்லை.

உலகம் உறங்கியபோது இவனும் உறங்கப் படுக்கையில் விழுந்தபோது இரவு எத்தனை மணியோ தெரியாது.

கம்பளிச்சுவெட்டர்களைக் கழட்ட மனம் வரவில்லை. சரத்துக்குள் கால்களைப் புதைத்துக்கொண்டு (இரண்டு சோடி சொக்ஸ் போட்ட கால்கள்) படுக்கையில் துவண்டபோது பியர்க்கானின் உதவியால் கண்கள் சோர்ந்து போயின.

"என்ன நான் தூங்கிவிட்டேனா கனவு காண்கிறேனா?" சம்பந்தன் கண்களைத் திறக்க முயன்றான் திறக்க முடியவில்லை.

மாடிப்படிகளில் மெல்லிய சப்தம். யாரோ நடந்து வருவது போன்ற சப்தம்.

மிஸ்டர் சிங் ஒரு நாளும் நடுச்சாமம் வரமாட்டார். ஆபிரிக்கப் பையன்கள் வருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானால் மிகவும் சத்தமாகச் சிரித்துக் கொண்டும் அல்லது பாடிக்கொண்டும் நாலு படிகளை ஒரு தாவலில் கடந்து கொண்டும் மிகவும் ஆரவாரமாக வருவார்கள். இளமையின் துள்ளல் அவர்களின் நடையிற் தெரியும். யார் இந்த நேரத்தில் இந்த மாடிப்படிகளில் நடந்து வருகிறார்கள்? ஏழைகள் நிறைய இருப்பதால் கள்வர்கள் அந்தப் பக்கத்தில் ஏராளம். ஏழ்மையின் எதிரொலியது. அவன் கண்களைத் திறக்க முயன்றான் முடியவில்லை.

பக்கத்துத் தெருக்களில் போதை மருந்து விற்பவர்கள் அல்லது பாவிப்பவர்கள் யாரையும் தேடி வருகிறார்களோ? என்னிடம் போதை மருந்து விற்க எந்தத் தடிப்பயல் வருகிறான்.

அவனுக்கு உடல் சிலிர்த்தது. அந்த நேரத்தில் யாரையும் சந்திக்க விரும்பவில்லை. போதை மருந்தெடுப்பவர்கள் சுயமாகச் சிந்திக்க மாட்டார்கள். போதை வஸ்துவின் ஆக்கிரமிப்பிலிருக்கும்போது எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

"மலிவான இடம் தேடி வந்ததற்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்." அவன் தன்னைத்தானே திட்டிக் கொண்டான். எதற்கும் ஒரு விலையுண்டு. இந்தப் பகுதிக்கு வாழ வந்ததற்கு இதுதானோ விலை ?

றோட்டில் எந்தக்காரோ லொறியோ போகும் சப்தமில்லை. வெளியில் உஸ் உஸ் என்று குளிர்காற்று பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது.

அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. சப்தம் இரண்டாவது மாடியில் கேட்டது. அவன் அறையை நோக்கி நடந்து வருவது கேட்டது. கண்களைத் திறக்க முயன்றான் திறக்க முடியவில்லை.

அவனின் கதவு மெல்லத் திறந்து கொண்ட சத்தம் இருதயத்தை கிறீச்சிடப் பண்ணியது. அவனுக்குப்பக்கத்தில் யாரோ வந்து நிற்கிறார்கள். அவனால் கண்களைத் திறக்க முடியவில்லை. மெல்லிய செண்ட் வாசம் மூக்கைத் தடவியது. நா வரண்டது. மேலண்ணம் ஒட்டிக் கொண்டது. இருதயம் நிமிடத்துக்கு இருநூற்றுக்கும் மேலடித்துக் கொண்டது. மூச்சு வாங்கியது. சரத்தை நனைத்துவிடும் அளவிற்குப் பயம். இருதயத்தை யாரோ அமுத்துவது போல் ஒரு கனம்.

"என்ன பைத்தியம் நான் ?"

யாராயிருந்தாலும் எழும்பி நின்று உனக்கு இங்கே என்ன வேணும் என்று கேட்கத் தைரியமில்லையா எனக்கு ?

அவன் தைரியத்தை வரவழைக்க எத்தனையோ பாடுபடவேண்டியிருந்தது. ஒருமாதிரியாக எழும்பி லைட்டைப் போட்டான். பக்கத்து மேசையிலிருந்த லைட்டைப் போட்ட கைகள் வெடவெடவென நடுங்கியது.

உலர்ந்த வாயைத் தடவிக் கொண்டு கண்களை மெல்லத் திறந்தான். கையில் கத்தியுடன் நிற்கும் ஒரு கள்வனை மனம் கற்பனை செய்துகொண்டது.

யாருமே அறையிலில்லை.!

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு படுக்கையை விட்டெழுந்தான். அவனுடைய கதவு ஆவென்று திறந்திருந்தது.

நடுங்கும் கால்களை இழுத்துத் தள்ளாடிக்கொண்டு வெளியில் வந்தான்.

முன் அறை எப்போதும் பூட்டியிருக்கும் அந்த இருண்ட அறை மெல்லமாகத் திறந்திருந்தது. அது ஒரு ஸ்டோர் என்று ஆபிரிக்க வாலிபர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த அறை ஏன் பூட்டியிருக்கிறது என்று அவன் இதுவரையும் பெரிதாக யோசிக்கவில்லை. ஏனென்றால் அது ஒரு படுக்கையறையல்ல. ஒரு ஸ்டோர் ரூமாகத்தான் இருக்கவேண்டும்.

மிஸ்டர் சிங் தன் தலைப்பா போன்ற சாமான்களை வைக்கும் இடமாக இருக்கலாம் என்று எப்போதோ யோசித்தது உண்டு. அந்த அறையை முழுதாகத் திறந்து பார்க்க மனம் தூண்டியது ஆனாலும் அவனால் முடியவில்லை. யார் அந்த அறையை இந்த நேரத்தில் திறந்தார்கள்.?

தன் அறைக்குப் போய் படுக்கையில் விழுந்ததும் நித்திரை எப்போதோ குட்பை சொல்லிவிட்டது தெரிந்தது.

இந்த நேரத்தில் இஸ்லிங்டனில் இவன் இருந்த வீட்டுக்கு அருகிலிருக்கும் நாடகக் கொட்டகை மூடப்படும் அதைச் சார்ந்திருக்கும் கிளப்பில் ஏதோ ஒரு சங்கீதம் கேட்கும். இவன் இருந்த வீட்டின் மேல் அறைகளில் இருந்த இளம் தம்பதிகளின் மெல்லிய சிணுங்கல்கள் கேட்கும். நடுச் சாமத்தில் குடிகாரத் தடியர்களைத் துரத்தி ஓடும் பொலிஸ்காரர்களின் சைரன் ஒலி காதைப் பிளக்கும். பக்கத்து வீட்டு தென்னமெரிக்கனின் ஜாஸ் இசைக்கு நேரகாலம் தெரியாது. முழங்கிக் கொண்டிருப்பான். சனிக்கிழமை என்றால் இஸ்லிங்டன் தூங்காது.

கொட்டக் கொட்ட விழித்திருந்து விட்டு கண்களை மூடியபோது காலை ஏழு மணியாகியிருந்தது.

அன்று பின்னேரம் யாரும் வீட்டுக்கு வரவில்லை. வார விடுமுறையில் வாடகைக்கு வரும் மிஸ்டர் சிங் வரவில்லை. ஆபிரிக்கப் பையன்கள் எங்கே போய் விட்டார்கள்?

அன்று பின்னேரம் ஒரு நெருங்கிய நண்பன் போன் பண்ணினான். இருவரும் இஸ்லிங்டன் பார் ஒன்றில் சந்தித்தார்கள். நண்பன் ஆங்கிலேயன். வசதியானவன். இசையை ரசிப்பவன். எக்கச்சக்கமாக குடிப்பவன். சம்பந்தனை இழுத்துக் கொண்டு ஜாஸ் கிளப்புக்குப் போனான். சம்பந்தனுக்கு ஜாஸ் என்றால் மிகவும் பிடிக்கும். சம்பந்தனை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டபோது காலை நான்கு மணியிருக்கும். நண்பனின் காரால் இறங்கியதும் தன் வீட்டைப் பார்த்த விதத்தை நண்பன் கேலி செய்தான்.

"என்ன அப்படிப் பேய் வீட்டைப் பார்ப்பது போற் பார்க்கிறாய்?" நண்பன் சைமன் விளையாட்டாகத்தான் கேட்டான். ஆனாலும் சம்பந்தனுக்கு அந்த சம்பாசணை தர்மசங்கடமாக இருந்தது. சம்பந்தனுக்குத் திக் என்றது.

அவன் நினைக்கத் தயங்கிய விடயமது!

அவன் தர்மசங்கடத்துடன் சிரித்து விட்டு வீட்டைத் திறந்தான்.

மேல்மாடியில் லைட் தெரிந்தது. "அப்பாடா அந்த ஆபிரிக்கப் பையன்கள் வீட்டிலிருக்கிறார்கள்" ஸ்டோர் பூட்டியிருந்தது. ஆபிரிக்க இளைஞர்கள் பாடல் ஒலியில் அன்றும் அடுத்த நாளும் வட்டியும் முதலுமாக நித்திரை செய்து முடித்தான் சம்பந்தன்.

வாரத்தின் கடைசிப் பகுதியில் மிஸ்டர் சிங் இரண்டு கிழமை வாடகை கேட்டு வந்திருந்தார்.

முதல் சனிக்கிழமை இரவு நடந்த விடயத்தை இவரிடம் எப்படிச் சொல்வது.?

போதை மருந்தெடுப்பவர்களின் நடமாட்டம் பற்றிக் கேட்கலாமா? அன்று வந்த உருவம் ஆணா?பெண்ணா?மெல்லிய செண்ட்டின் மணத்தைப்பற்றி யோசித்தால் பெண்ணாகத்தான் இருக்கும் போலிருக்கிறது.

மிஸ்டர் சிங் நன்றாகக் குடிப்பார். இவனையும் இழுத்துக்கொண்டு பக்கத்து பாருக்குப் போனார். அவர் விஸ்கியும் இவன் பியரும் முட்ட முட்டக் குடித்தார்கள்.

இவனையறியாமலே போதை மருந்தெடுக்கும் பெண்களைப் பற்றி வாய் திறந்தான். அவர் இவன் தோள்களைத் தட்டியபடி சொன்னார்.

"உனக்கு கல்யாணம் பண்ணுகிற வயது வந்துவிட்டது. கட்டாயம் ஒரு நல்ல பெண்ணைப் பார்க்க வேணும். இல்லாவிட்டால் தேவையில்லாத கற்பனைகளும் கனவுகளும் காணத் தொடங்கி விடுவாய்"

வீட்டிலிருக்கும் ஆபிரிக்க வாலிபர்களைக் குசினியில் சந்தித்தபோது அவர்கள் எவ்வளவு காலமாக அந்த வீட்டில் வசிப்பதாகக் கேட்டான். அவர்கள் இவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு தங்கள் பாஷையில் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். பின்னர் சொன்னார்கள் "நாங்கள் நீண்ட காலமாக இந்த வீட்டிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கவில்லை, இருக்கும் யோசனை யுமில்லை"

அவர்கள் அப்படிச் சொல்லி ஒன்று இரண்டு நாட்களில் வீட்டைக் காலி செய்து விட்டார்கள். மிஸ்டர் சிங் வந்து அவர்களைத் தாறுமாறாகத் திட்டினார். கிழமைக் கணக்காக வாடகை கொடுக்கவில்லை என்றும், மாணவர்கள் என்று பாவம் பார்த்ததற்கு இப்படியா பரிகாரம் செய்வது என்று இவனைக் கேட்டார்.

"அவர்கள் போனாற் போகிறார்கள் நீயே முழு வீட்டையும் வைத்துக்கொள். அவர்களிடம் கேட்ட வாடகையை உன்னிடம் கேட்கவில்லை. உனது வசதிப்படி தந்தாற் போதும்"

அவனுக்கு வயிற்றை என்னவோ செய்தது.

"எனக்கு இந்த வீட்டில் தனியாக இருக்கப் பிடிக்கவில்லை" என்பதைச் சொன்னால் இந்த மனிதன் கிண்டல் செய்யத் தொடங்கி விடும் அவன் எரிச்சலுடன் சிந்தித்தான்.

வெள்ளிக்கிழமையிரவு நல்ல மழை. இவன் நன்றாகச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு எழுதத் தொடங்கியதும் மழையும் காற்றும் ஜன்னலை அடித்து ஆரவாரப் படுத்தின. குளிர் வேறு. டெலிவிஷனைப் போட்டவன் அப்படியே தூங்கிப் போய் விட்டான்.

தன்னை யாரோ உற்றுப் பார்ப்பது போல் உணர்ந்ததும் சட்டென விழித்தான்.

யாருமில்லை. டெலிவிஷன் எப்போதோ முடிந்து விட்டது. உடம்பு வியர்த்துக் கொட்டியது. எழும்பி லைட்டைப் போட்டான். யாடிப்படிகளில் யாரோ இறங்கிப் போவது போன்றபிரமை. கனவா? கற்பனையா?பியர் மயக்கமா?

அன்றிரவு நித்திரையில்லை.கதை எழுதக் கற்பனை தேடியதாற் தான் இந்தப் பிரச்சனைகளோ? தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். எத்தனையோ வருடங்களாக அகிலனையும், சுஜாதாவையும், சாண்டில்யனையும், கல்கியையும் படித்து வளர்த்துக் கொண்ட ஆசை இப்போது இந்த மலிவான வீட்டில் நடக்கும் சில அசம்பாவிதங்களால் அர்த்தமற்றுப் போவதா?

கல்கி தன் நாவலொன்றில் வானதியின் கண்களை வர்ணித்ததைப்போல தானும் தன் கதாநாயகியை வர்ணிக்க சம்பந்தனுக்கு எவ்வளவு ஆசை?

இரவில் நடமாடும் இந்த மாய உருவத்தால் அவனாற் தன் மனத்தை ஒழுங்கு படுத்த முடியாமலிருக்கிறதே!

அடுத்த இரவு கதையும் வேண்டாம் கற்பனையும் வேண்டாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு நண்பன் மூர்த்தியின் ரெலிபோன் ஆச்சரியத்தைக் கொடுத்தது. யாரிடமோ விசாரித்து மூர்த்தி இவனின் டெலிபோன் நம்பரை வாங்கிவிட்டது மல்லாமல் இவனை வந்து பார்க்க வேண்டுமாம்!

சம்பந்தன் சம்மதம் தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. மூர்த்தி வந்து முளைத்து விடுவான்.

"உனக்கென்ன மச்சான் விசரா? இந்த வீட்டிலை தனிய இருக்கமாட்டன் எண்டு சொல்ல. நல்ல மலிவாக் கிடைச்சால் ஓமெண்டு சொல்லு. நாங்க தரவளி வந்து நிண்டிட்டுப் போகலாம்" மூர்த்தி முழுங்கினான்.

இரவில் வரும் மாய உருவத்தைப் பற்றிச் சொல்லாமல் இரவில் நடமாடும் போதை எடுக்கும் ஆண் பெண்கள் பற்றிப் பேசினான் சம்பந்தன்.

அன்றிரவு மூர்த்தியைத் தன் அறையில் படுக்கச் சொல்லிவிட்டு இப்போது வெறுமையாகக் கிடக்கும் ஆபிரிக்க வாலிபர்களின் அறைக்குப் போய்ப் படுத்தான் சம்பந்தன்.

இரவு இரண்டு மணியிருக்கும் மூர்த்தியின் சத்தம் கேட்டது.

"என்ன சம்பந்தன் ஏன் என்னை எழுப்பினீர்?"

சம்பந்தன் மறுமொழி சொல்லவில்லை. அவனுக்குத் தெரியும் தன்னுடன் சேட்டைவிடும் உருவம் ஆள் தெரியாமல் மூர்த்தியைத் தடவியிருக்கும் என்று புரிந்துகொண்டான்.

காலையில் சாப்பிடும்போது "என்ன மச்சான் எனக்கு ஒரு துளியும் நித்திரை வரேல்லை" மூர்த்தி நித்திரை வராத எரிச்சலில் முணுமுணுத்தான்.

"நீ தான் நான் தனியா இருந்தால் அடிக்கடி வரலாம் எண்டு சொன்னாயே இப்போது என்ன மனத்தை மாத்திப் போட்டாய்" மூர்த்தி தர்மசங்கடத்துடன் சிரித்தான்.

அதன்பின் இரண்டொரு நாட்களாக ஒரு டெலிபோனுமில்லை.

போனாற் போகிறான் என்று சம்பந்தன் நினைத்திருந்தபோது மூர்த்தி திடீரென்று ஒரு இரவு பிளாஸ்டிக் பை நிறைய பியர்க்கான்களைத் தூக்கிக்கொண்டு வந்தான்.

"உன்ரை வீட்டில பேயிருக்கு மச்சான்" மூர்த்தி அவன் வயிற்றில் நான்காவது பியர்கான் போய் இரத்த மெல்லாம் மதுவில் நிறைந்த மயக்கத்தில் பிதற்றினான்.

"சும்மா பேய்க் கதை கதையாதை" சம்பந்தன் வீரத்துடன் சிரித்தான்.

"இல்ல மச்சான். ஏதோ ஒரு மூலையில இருந்து கொண்டு யாரோ என்னைப் பார்க்கிற மாதிரி இருக்கு மச்சான்" மூர்த்தி அழுது விடுவான் போலிருந்தது.

"உனக்கு நல்லா தலையில தட்டிப்போச்சு" சம்பந்தன் கிண்டல் செய்தான்.

"மச்சான் அண்டைக்கு எனக்கு நித்திரை வரல்ல மச்சான்"

"ஏனெண்டா இந்த வீடு சரியான குளிர்" சம்பந்தன் சமாதானம் சொன்னான். மூர்த்தி அதன்பின் அங்கு இரவுகளில் தங்குவதில்லை.

சம்பந்தனின் வாழ்நாள் இலட்சியத்தின் ஒரு பக்கப் பேப்பரிலும் நாலு வரிகள் ஏறவில்லை. மாதம் இரண்டு முடிந்து விட்டது. கையில் கிடைத்த காசு முடியமுதல் வேலை ஒன்றும் தேட வேண்டும். அவன் எழுதுவதை விட்டுவிட்டு வேலை தேடுவதில் மும்முரமாக இருந்தான்.

மிஸ்டர் சிங் இன்னும் யாரையும் வீட்டுக்கு வைக்கவில்லை. கிறிஸ்மஸ் நெருங்கிக்கொண்டு வந்தது. ஒரு இரவு சம்பந்தனின் அறைக்கு அந்த உருவம் வருவது கேட்டது. சம்பந்தன் அரைத்தூக்கத்திலிருந்தான். அதன்பின் என்ன நடந்தது என்று தெரியாது.

உணர்வு வந்தபோது உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. சரம் நனைந்திருந்தது. காரணத்தை அறிந்தபோது உடம்பை என்னவோ செய்தது. உள்ளம் கூசியது. தேனிலவு காலத்தில் இரண்டு மூன்று நாள் விடாமற் கலவி செய்த களைப்பு. அதன் பின் கிட்டத்தட்ட ஒவ்வொரு இரவும் சம்பந்தன் அந்த அனுபவத்திற்கு ஆளானான்.

தனிமை அனுபவத்தில் அவனுக்குப் பைத்தியம் பிடிக்கும் போலிருந்தது. மூர்த்தியை வரச் சொல்லி போன் பண்ணினான். முதலிற் தயங்கியவன் நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு ஒரு விசிட் வருவதாகச் சொன்னான் மூர்த்தி.

இருவருக்கும் நல்ல வெறி.

சம்பந்தன் தன் அனுபவத்தை அரைகுறையாகச் சொன்னான். பேய் பற்றியில்லாமல் போதை எடுப்பவர்களைப் பற்றிக்கதை. நண்பனை உற்றுப் பார்த்த மூர்த்தி "உன்னைப் பார்த்தால் ஒருமாதம் நெருப்புக் காய்ச்சலில் கிடந்தவன் போலிருக்கு. டொக்டரைப் பார்" என்றான்.

சம்பந்தனுக்கு இப்போதெல்லாம் பசியெடுப்பதில்லை. உடம்பு எப்போதும் களைப்பாக இருந்தது. நித்திரை கொள்ளப் பயம். தாங்க முடியாத தலைவலிக்கு எத்தனையோ மருந்துகளை எடுத்து விட்டுக் கடைசியாக டொக்டரிடம் போனான் சம்பந்தன்.

"உனக்கு ஏன் தலையிடிக்கிறது"

"அதன் காரணத்தைக் கேட்கத்தான் உங்களிடம் வந்தேன்"

"யோசிக்கத் தக்கதாக வாழ்க்கையில் ஏதும் நடக்கிறதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரிதாக ஒன்றுமில்லை...... வேலை தேடிக் கொண்டிருக்கிறேன்"

"கல்யாணமாகி விட்டதா?"

"இல்லை"

"காதலிகள்........ காதலி யாரும் இருக்கிறாளா?"

"இருந்தாள்......... இப்போதில்லை."

"உனக்கு எத்தனை வயது?"

அவனுக்கு எரிச்சல் வந்தது. அம்மாவும் இவன் வயதைச் சொல்லிச் சொல்லித்தான் கல்யாணம் பேசுகிறாள்.

"கெதியாக வேலை ஒன்று எடுக்கப் பார்." டொக்டர் ஏதோ எழுதிக் கொடுத்தார். "தனிமை நிறையப் பிரச்சனைகளைத் தரும்.......... நிறைய யோசித்தால் நான் சொல்வது புரியும்" டொக்டர் சொன்னார். பகலில் வேலை தேடி அலைச்சல். நத்தார்ப் பண்டிகை காலம் என்றபடியால் நிறைய வேலைகள் விளம்பரத்துக்கு வரவில்லை. தை மாதம் பிறந்தாற்தான் வழி பிறக்கும். அவன் முணுமுணுத்துக்கொண்டான்.

கையிலுள்ள காசு கரைந்துகொண்டு வந்தது.

அம்மா இவனின் குழந்தைத் தனத்திற்குப் புத்தி சொல்லி எழுதியிருந்தாள். தை பிறந்தால் இவனுக்கு நல்ல திசைபிறக்கவிருப்பதாக எழுதியிருந்தாள். விரைவில் ஒரு பெண்ணின் பரிச்சயம் கிடைக்கவிருப்பதாகவும் எழுதியிருந்தாள்.

தமக்கை ஒருத்தி தனக்குத் தெரிந்த சிநேகியின் குறிப்பு அனுப்பியிருந்தாள்.

நத்தார் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆபிரிக்க வாலிபர்களில் ஒருத்தனை ஷொப்பிங் சென்டரில் சந்தித்தான்.

"நீ இன்னும் அந்த வீட்டில் இருக்கிறாயா?" அவன் ஆச்சரியத்துடன் சம்பந்தனைக் கேட்டான். "ஆமாம் தனியாகத்தான் இருக்கிறேன் . . . கெதியில் யாரும் வரலாம்" ஆபிரிக்க மாணவன் அவனை மேலும் கீழும் பார்த்தான்.

"உனக்குப் பைத்தியம் பிடிக்க முதல் அந்த வீட்டை விட்டுப் போய்விடு" ஆபிரிக்க வாலிபன் அன்புடன் புத்தி சொன்னான்.

அதே மெல்லிய நடைச் சப்தம். அதே சென்ட்டின் வாசனை. சம்பந்தன் வழக்கம் போல உணர்விழந்தான். எழுந்த போது தன் நிலை நினைத்து அழுது விட்டான்.

"எனக்கு நேர்வஸ் பிரேக் டவுன் வந்துவிட்டதென்று நினைக்கிறேன்" சம்பந்தன் புலம்பினான். நீண்ட நாள் நித்திரையின்மையால் மனம் பேதலித்துப் போயிருந்தான். டொக்டர் தன் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்தபடி அவனை ஏறிட்டுப் பார்த்தார். ஏன் இந்த ஆசியன் புலம்புகிறான் என்பதை யோசிக்கிறாரா?

"பைத்தியங்கள் தங்களுக்குப் பைத்தியம் பிடித்ததாகச் சொல்வதில்லை" டொக்டர் கிண்டலடித்தார்.

"என்னால் தூங்க முடியவில்லை" அவன் வெதும்பினான்.

"உனக்கு வேலையில்லை என்ற துக்கம் அதன் எதிரொலிதான் நித்திரையின்மை, தலையிடி, எரிச்சல், மனக்குழப்பமெல்லாம்"

"வேலையில்லாவிட்டாலும் இன்னும் சில மாதங்கள் சமாளிப்பேன்" அவன் குரலில் அவசரம், அவன் ஒன்றும் ஏழையில்லை. ஒன்றிரண்டு மாதங்கள் சமாளிக்கலாம்.

"பின்னர் என்ன பிரச்சனை......... காதலி இல்லை என்ற துக்கமா?" டொக்டரின் குரலில் கிண்டல்.

"அப்படியொன்றுமில்லை"

டொக்டர் உற்றுப் பார்த்தார்.

"காதலன் யாரும் இருக்கிறார்களா?"

சம்பந்தன் டொக்டரை முறைத்துப் பார்த்தான்.

டொக்டர் பதிலுக்கு பெண் உறவுமில்லாமல் ஆண் உறவுமில்லாமல் (லண்டனில் சர்வசாதாரணம்) இருக்கிறாயே அப்படி என்றால் உன்னுடன் நீயே விளையாடிக் கொள்கிறாயா என்பது போலப் பார்த்தார்.

அவனுக்கு அவர் பார்வையின் கருத்து அப்பட்டமாகத் தெரிந்தது. குனுகி விட்டான். அவர் சைக்கியாட்றிஸ்ட். ஆங்கிலேய நண்பன் சிபாரிசு செய்திருந்த டொக்டர்.

"எனக்குப் பயங்கரக் கனவு வருகிறது" சம்பந்தன் முணுமுணுத்தான்.

"எப்படிக் கனவு?"

"என்னவென்று சொல்வது?"

"கல்யாணப்பெண் போல் உடை உடுத்த ஒருத்தி என் கற்பனையில் வந்து ....." அவன் முடிக்கவில்லை.

"உன்னை ஒழுகப் பண்ணுகிறாளா?"

ஒளிவு மறைவு இல்லாத கேள்வி! ஒடுங்கிப் போனான் அவன்.

"மோகங்களின் எதிரொலியின் பிரதிபிம்பம் கனவாகத் தோன்றும். பெண்களுடன் உனக்குச் சுமுகமான உறவு இருந்ததா?"

அவனுக்கு ஏதும் மறைக்க இருப்பதாகத் தெரியவில்லை. பதினேழு பதினெட்டு வயதில் பார்த்து வாயூறிய பக்கத்துவீட்டு வேலைக்காரியைப் பற்றிச் சொன்னான்.

பார்க்கவும் சிரிக்கவும் சிங்காரம் செய்யவும் தடவவும் சிலவேளை தடம்புரளப்பண்ணவும் செய்த சர்வ கலாசாலைச் சிநேகிதிகளைப் பற்றிச் சொன்னான்.

கல்யாணம் வரைக்கும் போய் தடைப்பட்டுப்போன தன் நீண்ட காலக் காதலியைப் பற்றிச் சொன்னான். நினைக்க விரும்பாத சோகக் கதையது. சொல்லி வெதும்பினான். சினிமாவில் பார்த்து ரசிக்கும் டெமிமோர் பற்றி கண்கள் மினுமினுக்க ரசித்துச் சொன்னான். டொக்டர் அவனை ஆழமாகப் பார்த்தார்.

"உன் கற்பனையில் வரும் யாரோ ஒரு பெண்ணைக் கல்யாணக் கோலத்தில் ரசிக்க உன் உள்மனம் யோசிக்கிறது என்று நம்புகிறாயா?"

"எனக்குத் தெரியாது" அவன் அழுது விட்டான்.

"வேலை தேடிக்கொள், வீட்டை மாற்றிக் கொள். கற்பனையையும் கதை எழுதுவதையும் ஒத்திப்போடு. காதலி ஒன்றைத் தேடிக்கொள். உன் வயதுக்குத் தேவையது" டொக்டர் ஆலோசனை செய்தார்.

நத்தாருக்கு முதல்நாள் மூர்த்தி வந்திருந்தான். இருவரும் நன்றாகக் குடித்துவிட்டு என்னவெல்லாமோ பேசிக் கொண்டார்கள்.

"இந்த வீட்டில் பேய் இருப்பதாகவும் ஏதோ ஒரு மூலையில் நின்று உன்னை உற்றுப் பார்ப்பதாகவும் சொன்னாயே அது எப்படி?" சம்பந்தன் உளறினான்.

"மச்சான் பேய் என்கிறது எங்களின்ர மனப்பயம். அதன்ர பிரமை தான் பேய். பேய்களைப்பற்றி எத்தனையோ கதைகள் இருக்கு. ஆனாலும் என்னைப் பொறுத்த வரையில நாங்கள் அடிமனத்தில வைத்திருக்கின்ற அபிலாசைகளின்ரை எதிரொலிப்புத்தான் பேயும் பிசாசுகளும். எனக்கு இந்த வீட்டைப் பார்த்தால் சோகமாகத் தெரியுது. செத்தவீடு போலத் தெரியுது. யாரோ அநியாயமாகச் செத்தது போலத் தெரியுது. அதெல்லாம் என்ன. வெளி மனத்தில வாற விழல் கற்பனைகள் எண்டு வைச்சுக் கொள்ளன். தற்கொலை செய்தவை பேயாய் அலையிறதென்றதும் கொலை செய்யப்பட்டவை பழி தீர்க்க பிசாசாய்த் திரியினம் என்பதும் விபத்திலை செத்தவை அந்தரத்திலை அலையினம் என்பதும் மூடநம்பிக்கைகள். உடம்பிலையிருந்து உயிர் பிரிஞ்சா உடம்பு வெறும் கட்டை. உயிர் வெளியில் போய் ஆதி அந்தமுமில்லாத ஒரு உலகத்தில சேர்ந்து கொள்ளுது என்கிறது என் அபிப்பிராயம்"

"பேய், பிசாசுகளாய்த் திரிந்து பழி வாங்கிறதெண்டால் செத்த தமிழற்ர ஆவிகள் சிங்கள ஆமிகளை ஏன் விட்டு வைச்சிருக்கு?"

மூர்த்தி பிதற்றியபடி நித்திரையாகி விட்டான். மூர்த்தி சம்பந்தனின் அறையில் படுத்து உறங்கினான். அடுத்த நாள் மூர்த்தியின் முகம் வெளுத்துக் கிடந்தது. முதலிரவு முடிந்த ஆணுக்கு முட்டை அடித்துக் கொடுக்கலாமா? சம்பந்தன் அதிகம் ஒன்றும் கேட்காமல் பாண் வாட்டி பட்டர் பூசிக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் மச்சான் இரவு ஒரு புதினமான கனவு கண்டேனடா" சம்பந்தன் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

"மச்சான் அழகான பொம்புள ஒருத்தி கல்யாண உடுப்போட வந்து கட்டிலில் இருந்தாளடா"

சம்பந்தன் சிநேகிதனை வெறித்துப் பார்த்தான். இருவரும் மிகவும் ஆழமாகப் பார்த்தார்கள். ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டார்கள். நத்தார் முடிந்துவிட்டது.

சம்பந்தனுக்கு புது வேலை கிடைத்து விட்டது.

வேலை கிடைத்த இடத்திற்குப் பக்கத்தில் வீடு தேடியலைந்தான். மிஸ்டர் சிங் இன்னும் இரண்டு மாணவர்களை வாடகைக்கு அமர்த்தினார். அவர்கள் ஆபிரிக்க வாலிபர்கள் இருந்த அறையில் இருந்தார்கள். மிகவும் துடிதுடிப்பான மாணவர்கள் ஒருத்தன் கலப்புச்சாதி. மற்றவன் சைனீஸ். ஒரே சர்வகலாசாலையில் படிக்கிறார்கள். அடிக்கடி சிநேகிதிகளை உபசரிப்பார்கள். வந்து ஒன்றிரண்டு தினங்களில் அவர்களின் அறையிலிருந்து ஒரு இளம் பெண் அரைகுறையுடுப்புடன் தூங்கி வழிந்து கொண்டு "ஹலோ குட்மோர்னிங்" என்று சம்பந்தனைப் பார்த்து முணுமுணுத்தாள்.

அவர்களின் அறையில் பியானோ ஜாஸ் ஒலியுடன் கஞ்சா மணமும் வெளியில் வரும். பியர்க்கான்கள் பிளாஸ்டிக் பைகளில் நிறையும்.

சம்பந்தன் சைக்கியாட்றிஸ்டைக் கண்டு தனக்கு வேலை கிடைத்திருப்பதாகவும் கதை கவிதை என்று ஒன்றும் எழுதவில்லை என்றும் வீண் கற்பனைகளுக்கு இடம் கொடுக்கவில்லை என்றும் மகிழ்ச்சியுடன் சொன்னான்.

"கல்யாண உடுப்புடன் உன் கனவுகளில் வரும் பெண்ணுக்கு என்ன நடந்தது" டொக்டர் சிரித்தபடி கேட்டார். அவன் நழுவி விட்டான். உண்மைகளைச் சொல்லி அவரின் விளக்கத்தைக் கேட்க மனம் தயங்கியது. சம்பந்தன் மூட்டை முடிச்சுகள் கட்டிக் கொண்டிருந்தான். மிஸ்டர் சிங் இவன் போவதை துக்கத்துடன் ஏற்றுக் கொண்டார்.

"உனது அறைக்கு வருபவர்கள் அதிகம் தங்குவதில்லை" அவர் தனக்குத் தானே முணுமுணுத்தார்.

அவன் மறுமொழி சொல்லாமல் அடுக்கிக் கொண்டிருந்தான்.

"உனக்கு முன் ஒரு இளம்பெண் இருந்தாள். காதலனுடன் மிகவும் சந்தோசமாக இருந்தாள். அவன் அடிக்கடி வருவான். கல்யாண உடுப்பெல்லாம் தைத்தாள். பாவம் அந்தப் பெண்........" மிஸ்டர் சிங் பெருமூச்சுவிட்டார்.

"அந்தப் பெண்ணுக்கு என்ன நடந்தது" தன் படபடப்பைக் காட்டாமல் கேட்டான் சம்பந்தன். அவன் அடுக்கிய சாமான்களுக்கு இன்னும் சில பெட்டிகள் தேவைப்பட்டன. சிங் மறுமொழி சொல்லாமல் எங்கேயோ பார்த்தார். "ஏதும் பழைய பெட்டிகள் இருக்கின்றனவா" சம்பந்தன் அங்கும் இங்கும் பார்த்தான்.

"ஸ்டோர் ரூமிற் கிடக்கும் வா பார்க்கலாம்" மிஸ்டர் சிங் நடந்தார். சம்பந்தன் பின் தொடர்ந்தான்.

எப்போதும் மூடிக்கிடக்கும் ஸ்டோர் ரூமை தன் திறப்பால் திறந்து கொண்டிருந்தார் மிஸ்டர் சிங்.

"அந்தப் பெண்ணுக்கு என்ன நடந்தது" சம்பந்தன் அவரைப் பின் தொடர்ந்தான்.

"வெறியில் காரோட்டிய பாவி ஒருத்தன் அவள் வாழ்க்கையை முடித்துவிட்டான்" மிஸ்டர் சிங் ஸ்டோர் ரூமைத் திறந்தார். அங்கே சம்பந்தன் கண்ட காட்சி.! அவன் வாயடைத்துப் போய் நின்றான். அவன் கனவில் (நனவில்) அடிக்கடி வந்து அவனுடன் புணர்வு செய்யும் பெண் அணிந்து வந்த கல்யாணச்சட்டை அந்த ஸ்டோர் ரூம் நடுவில் மிக அழகாகத் தொங்க விடப்பட்டிருந்தது.

சம்பந்தன் வெறித்துப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய், ஓ அந்த அழகான கல்யாணச் சட்டையா? அதுதான் அவள் தன் கல்யாணத்துக்குத் தைத்த சட்டை. அவளின் காதலன் தனக்கு அந்தச் சட்டை வேண்டாமென்று விட்டான். அவளுக்குச் சொந்தம் யாரென்று தெரியாது. அத்தோடு இந்தச் சட்டையைக் காணும் போதெல்லாம் எனக்கு ஏதோ அவளைப் பார்க்கும் ஞாபகம். அவள் இந்த வீட்டிலேயே இருக்கிறாள் என்ற பிரமை. உனக்கு அது புரியுமோ தெரியாது" ●

---

# காதல்

வங்காள மூலம் : முராரி முகோபாத்யாயா

தமிழ் மொழிபெயர்ப்பு:
**சே. கோச்சடை** (ஆங்கிலத்திலிருந்து)

என்பால் கொண்ட காதலின் பொருட்டு
நிலவாக இராதே!
முடிந்தால் சூரியனாகி விடு.
உனது வெம்மைச் சேமிப்பிலிருந்து
நான் வெப்பத்தைப் பெற்று
இருண்ட பாலையை எரியூட்டிடுவேன்.

என்பால் கொண்ட காதலின் பொருட்டு
ஓடையாக இருக்காதே!
முடிந்தால் வெள்ளமாகிவிடு.
உனது வலிய ஓட்டத்திலிருந்து
நான் உள்ளம் தூண்டப் பெற்று
துன்பக் கரையை உடைத்து விடுவேன்.

என்பால் கொண்ட காதலின் பொருட்டு
மலராக இருக்காதே!
முடிந்தால் இடியாகிவிடு.
அதன் முழக்கத்தை நெஞ்சில் தேக்கி
எல்லாத் திசைகளிலும்
போர்க்கள ஆர்ப்பாய் (ஆர்ப்பரிப்பு)
அனுப்பிவிடுவேன்.

என்பால் கொண்ட காதலின் பொருட்டு
பறவையாக இருக்காதே!
முடிந்தால் பெரும்புயலாகிவிடு.
அதன் வீரியத்தை நெஞ்சில் செலுத்தி
சுரண்டலின் மேலே கட்டப்பட்ட
வெற்றிச் சின்னத்தை நொறுக்கிவிடுவேன்.

நிலவும் ஓடையும்
மலரும் பறவையும்
விண்மீனும் கூட
கொஞ்ச காலம் காத்திருக்கட்டும்.
இந்தத் துயர்மிகு இருளில்
இறுதிச் சண்டையைப்
போட்டாக வேண்டும்.
இப்போது நமது எளிய குடில்களில்
நமக்கு வேண்டியதெல்லாம்
நெருப்பு! நெருப்பு! நெருப்பு! ❐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கூத்துகளும் சமூக வரலாற்றுப் பின்புலங்களும் – ஓர் பார்வை



ச. தில்லைநடேசன்

ஈழத்தில் கூத்துக்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், புத்தளம், சிலாபம், மலையகம் என பல இடங்களில் ஆடப்படுகின்றன. இவற்றில் மட்டக்களப்பு கூத்துகள் பற்றி ஓரளவு நல்ல ஆய்வுகள் வந்துள்ளன. மற்றைய இடங்களில் ஆய்வுகள் விரணங்களாகவே உள்ளன. இதற்கு சமூக பின்புலக் காரணங்களுண்டு. இக்கட்டுரையில் யாழ்ப்பாணக் கூத்துகள் பற்றி சில பதிவுகளையும் முன்பு இருக்கும் தவறான பதிவுகளை கேள்விக்குள்ளாக்குவதற்கும் முயற்சிக்கிறேன்.

ஈழக்கூத்தின் ஆரம்பம் எக்காலமென துல்லியமாக சொல்ல முடியாது. எனினும் பூநகரி தொல்லியல் ஆய்வின் போது கிடைத்த "காற்சலங்கைகள்" கி.மு. காலத்திலேயே ஈழத்தில் கூத்து இருந்திருக்கலாமென ஊகிக்க வைக்கின்றது. இது மேலும் ஆய்வுக்குரியது. ஆதாரபூர்வமாக 13ம்-14ம் நூற்றாண்டுகளில் கூத்து ஆடப்பட்டது என்று தெரிய வருகின்றது. போர்த்துக்கேயர் வரும்போது எல்லா இடங்களிலும் கூத்து ஆடப்பட்டது. தமது கத்தோலிக்க மத பரப்புகைக்காக கிறிஸ்துவ மதகுருமார்கள் கூத்தைக் கைக்கொண்டு போர்த்துக்கேய நாடக மரபுடன் இணைத்து புதிய நாடகவகை ஒன்றை உருவாக்கினார்கள். இதன்போது கூத்தின் ஜீவநாடியான ஆட்டம் இழக்கப்பட்டது. இதற்கு நல்ல உதாரணங்கள் மன்னார், யாழ்ப்பாண கிறிஸ்துவ நாடகங்கள். இப்போது இவை இசை நாடகங்களே.

போர்த்துக்கேயர் காலத்தில் இந்துக்கோயில்கள் இடிக்கப்பட்டு வழிபாடுகள் தடை செய்யப்பட்டன. கோயிலை அண்டியிருந்த கலைகள் தவிர்க்கமுடியாமல் அழிந்தன. மீண்டும் 1750களில் ஒல்லாந்தர் அனுமதி பெற்று கோயில்கள் கட்டப்பட்டன. கலைகள் புத்துருவாக்கம் அடைந்தது. கிட்டத்தட்ட 130 வருட இடைவெளியில் மக்கள் இழந்திருந்த கலைகள் எப்படி மீண்டும் உயிர்ப்புற்றன? தமிழகத்திலிருந்துதான் முழுக்கலைகளும் கற்று வரப்பட்டனவா இல்லையேல் போர்த்துக்கேய ஒல்லாந்தர் கைகளில் விழாத வன்னிப்பிரதேசம் இக்கலைகளை பேணிக்கையளித்ததா இல்லையேல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் குக்கிராமங்கள் வேறு சடங்குகளின்போது இவைகளை பேணித் தந்தனவா? ஆய்வுக்குரிய விரிந்த தளமிது. (எனக்குத் தெரிந்த தகவல் ஒன்றை இங்கு பதிவு செய்கின்றேன். 1750களில் கூத்துகளின் புத்துயிர்ப்பின்போது கூத்து எழுதுவதற்கான மாதிரியான பழைய ஏட்டுச் சுவடி ஒன்று ஊர்காவற்றுறையிலிருந்த ஒருவரிடம் இருந்து கிடைத்ததாம். இது உண்மையா என மேலும் தேட வேண்டும்.)

ஈழக்கூத்துகளை வடமோடி, தென்மொடி என இருவகையாகப் பிரிப்பர். இவைகளை எப்படி வேறுபடுத்தலாம்? உண்மையில் இவ்விரண்டுக்குமான அடிப்படை வித்தியாசம் ஆட்டமாதிரியே.

வடமோடி ஆட்டம் எளிமையானவை. தென்மோடி நுண்ணிய தாளக்கட்டு அமைந்தவை, விறுவிறுப்பானவை.

இந்த அடிப்படைப்பண்பு இசை, உடை, கதையமைப்பு ஆகிய பண்புகளையும் வேறுபட்டதாக்கும். துள்ளி எழுந்து விறுவிறுப்பாக ஆடப்படும் ஆட்டம் எளிமையான பாரமில்லா உடையையும் விறுவிறுப்பான இசையையும் வீர போர்க்கட்டங்களையும் கொண்டிருப்பதில் வியப்பில்லை. சிலர் இந்த பண்புகளையே வடமோடி தென்மோடியை வேறுபடுத்த பிரயோகிப்பர். ஒரே கதையை வடமோடியிலும் தென்மோடியிலும் ஆட முடியும். தென்மோடி வட்டக் களரியில் ஆடப்படும். நுனிப்பாதம், குதிக்கால் போன்றவை துல்லியமாக பயன்படுத்தப்படும். வடமோடியில் இவைகள் அந்த அளவிற்கு பயன்படுத்தப்படுவதில்லை.

யாழ்ப்பாணக் கூத்துகளை மட்டக்களப்பு கூத்துகளோடு ஒப்பீடு செய்பவர்களின் முக்கியமான கருத்துக்களைப் பார்ப்போம்.

1. யாழ்ப்பாணத்தில் கூத்துகள் எல்லா இடமும் ஆடப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. யாழ்ப்பாணக்கூத்தில் வடமோடி, தென்மோடி பிரிவு துல்லிய மானது அல்ல.

3. யாழ்ப்பாணம் கந்தபுராண கலாச்சாரபூமி. அங்கு மகாபாரத, இராமாயண கூத்துக்கள் இல்லை.

4. பேராசிரியர் வித்தியானந்தன் மட்டக்களப்பு கூத்தையே, அதில் ஆடற்பண்பு கூடுதலாக இருந்ததால், "நவீனத்துவத்திற்கு" பயன்படுத்தினார்.

முதலில் இந்த நான்கு விடயங்களையும் பார்ப்போம். யாழ்ப்பாணத்தில் கூத்துகள் மட்டக்களப்பைப்போல் எல்லா இடமும் ஆடப்படுவதில்லை. இது உண்மை, ஆனால் எக் காலத் திற்கும் இது பொருந்துமா என்றால் இல்லை. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை யாழ்ப்பாணத்தில் எல்லா இடமும் பரவலாகக் கூத்து ஆடப்பட்டது. பின்பு ஏன் இப்போது இல்லை. இதற்கு விடைகாண 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்குப் போகவேண்டும்.

1820இல் முழு இலங்கையும் ஆங்கிலேயர் கைகளுக்குள் வந்தது. கல்வி, உத்தியோகம், சாதித்துவ ஒடுக்குமுறையிலிருந்து தப்ப என பல காரணங்களுக்காக மக்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மாறினர். இதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய தேவை மேட்டுக்குடிகளுக்கு ஏற்பட்டது. ஏனெனில் இது தொடர்ந்தால் அவர்கள் சாதித்துவ ஆளுமைகள் அடிபட்டுப்போய்விடும். ஏற்கனவே போர்த்துக்கேய ஒல்லாந்தர் ஆட்சிகளில் சாதித்துவ இறுக்கம் தளர்ந்திருந்தது. அதனை திரும்பவும் இறுக்கநிலைக்கு கொண்டுபோகவேண்டிய அவசியம் மேட்டுக்குடிகளுக்கு. அதற்கு சைவசித்தாந்தமும், ஆகமவிதிகளும் தத்துவார்த்த ரீதியில் உதவின. எனவே அவைகளைத் தூக்கிப் பிடித்தனர். சைவசித்தாந்தம் வர்ணாச்சிரமத்தையும், சாதியையும் ஏற்றுக் கொண்டது என்பது தெரிந்தவிடயம்தானே. இதனை பிரதிநிதி த்துவப்படுத்திய ஆறுமுகநாவலர் (1822-1879) யாழ்ப்பாண சமூக த்தை சற்சூத்திரர், அசற்சூத்திரர், பஞ்சமர் எனக் கட்டமைத்தார். பஞ்சமர் கோயில் வீதிக்கும் வெளியே நிறுத்தப்பட்டனர். சற்சூத்தி ரரை அசற்சூத்திரர் எதிர்த்து பல இடங்களில் மோதலில் ஈடுபட்டா லும் பின்பு தங்களுக்கென்று கோயில்களை உருவாக்கிக்கொண்டு ஒதுங்கிவிட்டனர். ஆகமவிதிகளின் பெயரால் மக்கள் கலைகள் கோயில்களிலிருந்து விரட்டப்பட்டன. மேட்டுக்குடிகள் அதன் பார்வையாளர்களாகக்கூட இல்லை. அக்கலைகளை தொடர்ந்து பேணியவர்கள் அசற்சூத்திரரும் பஞ்சமர்களுமே. இதுவே யாழ்ப்பாண பெரிய ஊர் கோயில்கள் மக்கள் கலைகளை இழந்த கதை. யாழ்ப்பாணம் கலை, கலாச்சார பாலைவனமான கதையும் இதுதான். ஆனால் மட்டக்களப்பு இந்த பாதிப்புக்களைச் சந்திக்க வில்லை. ஆகவே அந்தக் கலைமண் தனது பூர்வீக கலைகளை தொடர்ந்து பேணியது.

இனி இரண்டாவது கருத்தைப் பார்ப்போம். யாழ்ப்பாணத்தில் வடமோடி தென்மோடி பிரிவு துல்லியமானதல்ல. இந்த குழப்பம் ஏற்பட மூலகாரணம் கரையோர கிறிஸ்துவ நாடகங்கள் தம்மை தென்மோடி நாட்டுக்கூத்து என அழைத்துக்கொண்டதே. உண்மை யில் அது இசைநாடகமே. அது எப்படி ஆட்டப்பண்பை இழந்தது என்பதை முன்பே கூறியுள்ளேன். ஆனால் ஆட்டத்தை இழந்தபோதும் அவர்கள் தென்மோடி நாட்டுக்கூத்து என்ற பெயரை இழக்க விரும்பவில்லை. எனக்கு தெரிந்தவரை யாழ்ப்பாணத்தில் மூன்று இடத்தில் தென்மோடி நாட்டுக்கூத்து உண்டு.

I. வட்டுக்கோட்டை

II. தம்பாட்டி

III. சுழிபுரத்தில் உள்ள நெல்லியான்

மூன்றாவது யாழ்ப்பாணம் கந்தபுராண கலாச்சார பூமி... இது ஜனநாயகவிரோதமான கருத்துத்தான். இதனை இந்த நிலைக்கு பேச வைத்தவரும் ஆறுமுகநாவலர்தான். குடாநாட்டு வேளாள சமூகத்தின் சனத்தொகை 40% மிகுதி மக்கள் 60% சனத்தொகை யினர். இதற்குள் ஆறுமுகநாவலர் வார்த்தையில் சொன்னால் அசற்சூத்திரர், பஞ்சமர்கள் அடங்குவர். இவர்கள் அடிப்படை உழைக்கும் மக்கள். மக்கள் கலாச்சாரமே இவர்களுடையது. கந்தபுராணக் கலாச்சாரத்தை இவர்களிடம் புகுத்த நடந்த முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்திருக்கிறது. சமூக ஆளுமை உள்ளவர்களின் கலாச்சாரத்தை பொதுக்கலாச்சாரம் எனக்காட்டும் பொய்மைகள் இன்று கிழித்தெறியப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் மகாபாரத, இராமாயணக் கூத்துக்கள் உண்டு.

நான்காவது, பேராசிரியர் சு.வித்தியானந்தன் மட்டக்களப்பு கூத்தையே, அதில் ஆடற்பண்பு கூடுதலாக இருப்பதால், "நவீனத்துவத்திற்கு" பயன்படுத்தினார்.

இதனை பொய்யென நிருபிக்க அவர் சமூக பின்புலத்துக்கு செல்வோம். 1956ம் ஆண்டு ஈழத் தமிழர் வாழ்வில் முக்கியமான ஆண்டு. தனிச் சிங்களச்சட்டம் வந்த ஆண்டு. தமிழர்கள் தமது தனித்துவத்தை அடையாளத்தை தேடத் தொடங்கிய ஆண்டு. மேட்டுக்குடியினர் தமது பூர்வீகக்கலை, மற்றும் அடையாளத்தை முற்றுமுழுதாக என்று சொல்லும் வகையில் இழந்திருந்தனர். மக்கள் கலைகளின் பார்வையாளர்களாக்கூட அவர்கள் இல்லை. அந்த உண்மை உறைத்தது அந்த பூர்வீகக்கலைகளை எடுத்து நடுத்தர, அறிவுஜீவி வர்க்கத்துக்கு ஏற்றமாதிரி கொடுக்கவேண்டிய தேவையிருந்தது. அதனை திறம்பட செய்தவரே சு.வித்தியா னந்தன். மக்கள் கலைகள் 60% மான உழைக்கும் மக்களிடம் இருந்தது. அதனை மேல்தட்டு அரங்குக்கு ஏற்றவிதத்தில் சுருக்கி அளித்த வேலையை அவர் செய்தாரேயன்றி அவர் நவீனத்துவ வாதியல்ல. அவரும் மரபுவாதியே. அவர் எதையுமே மீள்உரு வாக்கம் செய்யவில்லை.

இதற்குகூட கூத்தை யாரிடம் கற்பது என்ற கேள்வி அவருள் எழுந்தது. அவர் தேடினார். தேடியதை யாழ்ப்பாணக்குடா நாட்டி லேயே கண்டார். வட்டுக்கோட்டை கடற்தொழிலாள மக்களிடம் கற்க அவர் தயங்கினார். அங்கு வந்து கூத்து பார்த்து சந்தோ சமடைந்து அந்த உணர்ச்சிப் பெருக்கில் ஆற்றிய உரைக்கும் அவர் பின்பு நடந்ததும் நேர் எதிரானவை. தன் எழுத்து களில்கூட வட்டுக்கோட்டைக் கூத்தைப் பற்றி பதிவு செய்ய வில்லை. நைசாக நழுவி மட்டக்களப்புக்கு ஓடினார். 1960களில் யாழ்ப்பாண சமூக த்தை புரிந்தவர்களுக்கு இதனை விளங்கிக் கொள்வது பெரிதல்ல. மட்டக்களப்பு சமூகமும் அதே சமூக மக்களாயினும் அவர்கள் முற்றுமுழுதாக விவசாயிகளாகி விட்டிருந்தனர்.

இன்றும் வித்தியானந்தனின் எழுத்துகளின் அடிப்படையிலேயே யாழ்ப்பாண, ஏன் ஈழக்கூத்தே பார்க்கப்படுகின்றது. இதனை மாற்றி அவர் விட்ட தவறுகளைக் களைந்து உண்மையை பதிவு செய்ய வரலாற்று ஆய்வாளர்கள் எவரையும் காணவில்லை. ஆனால் வருவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. மட்டக்களப்பு கூத்தை தொடர்ந்து பேண, யாழ்ப்பாணக்கூத்து மேலும் அருக, இன்னுமொரு காரணமும் உண்டு. அதுதான் கல்வி. அதுவும் எம்மக்கள் கலைகளை கேலி செய்யும் கல்வி. சமஸ்கிருதமயப்படுத்தலும், ஆங்கில மயப்படுத்தலும் தானே எங்கள் கல்வி செய்து வந்தது. வருகின்றது. அந்த கல்வி 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடுத்தர கீழ்மட்ட மக்களிடம் பலத்த போராட்டத்தின் பின் வந்தடைந்தது. சமூக அடித்தளமும் மாறத் தொடங்கியது. சிந்தனை வட்டமும் மாறியது. 1945க்குப் பின்பு பல கிராமங்கள் கூத்தை கைவிட இதுதான் காரணம். பல கிராமங்கள் இப்படிக் கலைகளை இழந்தது. இன்னும் பழம் கிழவர்கள் அந்த நினைவுகளை அசைபோட்டவாறு கிராமங்களில் வாழ்கின்றார்கள். எங்கள் மக்கள் கலைகள் பேணப்படவேண்டும். புதிய உள்ளடக்கங்களை மக்கள் கலைகள் உட்கொள்ளவேண்டும். அவைகள் மரபாக பேணப்பட வேண்டும். அவைபற்றிய உண்மையான திறந்த ஆய்வுகள் வரவேண்டும். இதுதான் நான் இங்கு அழுத்திச் சொல்ல விரும்புவது. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளிக்கு வந்த தேக்கு

கௌரி மனோகரன்

"நீ அரசியலை இழுக்கிறாய்"

"அரசியலோ என்னவோ உண்மை தானே?"

"உண்மைதானென்றாலும் தேவல்லாத கதை"

"அப்ப நீ சொல்லுறது மட்டும் தேவையான கதையோ?"

டோயிலட்டுக்குள்ள இருந்துகொண்ட பேசாமல் சீலனதும் கேசவனதும் உப்புச்சப்பில்லாத கதைகளை கேட்டுக் கொண்டிருந்தேன்.

எனக்கென்னவோ பெரிதாக அரசியலில் விருப்பமென்றோ விருப்பமில்லையென்றோ ஒரு நிலைப்பாடு கிடையாது. ஏதோ சிலவேளை சீலனும் கேசவனும் கதைக்கக்க பேசாம இப்படித்தான் கேட்டுக் கொண்டிருப்பேன். சிலவேளைகளில் அரசியல் அது இது என்று கதை முத்திடும். அப்பத்தான் எனக்கு விசர் வரும். கண்டபடி பேசி சீலனையும் வீட்டால வெளிக்கிடுத்திப் போடுவன். அவனுக்கு இதெல்லாம் பெரிய பிரச்சனை எண்டில்லை. ஒரு மானம், மரியாதை,சூடு, சொரணை. எக்ஸட்ரா... எக்ஸட்ரா... அதில் ஒரு மண்ணாங்கட்டியுமில்லை. அடுத்த கிழமை ஞாயிறு வாசலில் வந்து கதவைத் தட்டுவான். வேறு யார்தான் இவனை கணக்கிலெடுக்கிறது. நம்மளும் விட்டால் என்று எண்ணிக் கொண்டு கதவ திறந்துபோட்டு பேசாமலிருப்பது தான். ஒவ்வொரு ஞாயிறும் கேசவனோட ஒரே அறுவ. என்ர வீடுதான் இவனுக்கு வாய்ச்சது. வீடு என்னும்போது ஒன்றும் "அப்படியொரு வீடு" இல்ல அப்பிடி இப்பிடியான வீடுதான். எழுப்பமாய் சொன்னால் திறீ இன் வன். டொயிலற், குசினி, பெட்ரூம் எல்லாமே அடங்கக் கூடியதாக ஓர் ஸ்ரூடியோ.

கேசவனும் நானும் தான் உண்மையாக குடியிருந்தாலும் கிட்டத்தட்ட ஒரு டசின் பேர் குடியுரிமை பெற்றுள்ளார்கள் என்ர வீட்டில் அதுதான் பிரெஞ்சில் சொல்லுவாங்களே டொமசில் (domicile) அது. அதில சீலனும் ஒருவன். அது மட்டுமல்ல மிச்சம் பேர் எல்லாருக்கும் சிபாரிசு பண்ணியவனும் சீலன்தான். ஏனென்டா அவனுக்கு அப்படியொரு நம்பிக்க சீலன் கூட்டிக் கொண்டு வரும் ஆட்களுக்கெல்லாம் எப்பிடியும் நான் டொமசில் கொடுப்பேனெண்டு.

அந்த தொல்லையெல்லாம் போதாதென்று இப்படி ஒவ்வொரு கிழமையும் போல இந்த ஞாயிறும்.

எதற்கும் வெளில போய் ரெண்டு உறுக்கு உறுக்க வேண்டும். டொயிலட்டை விட்டு வெளியே வந்தேன்.

"கேசவன் டேய்! எழும்புடா முதல்ல எழும்பி கட்டில மடிச்சு வைச்சுப் போட்டு கதையள"

"அதில்ல மச்சான் இவன் சீலன் வந்ததும் வராததுமா சந்தனப்போடியாரின் மகன் வந்திருக்கிறானாம் எண்டு தொடங்கினா மனிசனுக்கு ஏறாம என்ன செய்யும். சும்மா இயக்கம் தொடங்குற காலத்திலயே நாட்ட விட்டு ஓடி வாறது. பிறகு இங்கிருந்து கொண்டு பெரிய புழுகு அவன் இப்படி இவன் இப்படி எண்டு."

கேசவன் றூட்டை மாத்தினான்.

"நானொண்டும் சும்மா சொல்லல்ல. அவன் வச்சிருந்த படங்கள பார்த்துப் போட்டுத்தான் சொன்னனான்" சீலன் விளக்கமாய் கூறினான்.



"படமோ? என்ன படம் வைச்சிருக்கான். தான் சுட்ட ஆக்களின்ர படமெல்லாம் அல்பமாக்கி வச்சிருக்கானோ?"

"சும்மா இந்த கதையெல்லாம் கதைக்க நான் வரல்ல"

"அப்ப"

"அப்பவெல்லாம் 'தோளுல துவக்க வைச்சு கொண்டு நடக்கக்க' எடுத்திருந்தாண்டா ஒரு படம். அவன் கண்களில் என்ன நம்பிக்கை! என்ன உறுதி! ஆனா... இப்ப?".

"டேய் டேய் பொறு என்னடா பெரிய நம்பிக்கை எதில நம்பிக்கை. எதில உறுதி? கொலை செய்யுறத்திலையோ?"

"நான் அதைச் சொல்ல வரல்ல. அவன்ர உடம்பச் சொன்னனான். எப்படி இருந்தவன் இப்படிக் காய்ந்து கருவாடாய்ப் போனான்."

"எப்படியோ இருந்தவங்களெல்லாம் இப்ப சாம்பலாகிப் போனதை விடவா? கேள்விப்பட்டியே இந்தா! தங்கத்துரையரையும் சுட்டுப்போட்டாங்களாம்."

"ஐயோ! ரெண்டு பேரும் கதையை நிறுத்துங்கடா. இவன் இஞ்ச வந்தானென்டா ஒரே கொழுவல்தான்." நடுநிலைப் பொறுப்பை நானாக எடுத்துக்கொண்டேன்.

சீலன் விடுவதாயில்லை. மெதுவாய்த் தொடர்ந்தான்.

"நான் சொல்ல வந்தது மச்சான் அவன்ர உடம்பின்ர சேப்பை. தேக்குமரம் மாதிரி இருப்பான். அந்தக்காலத்தில அதுதான் பத்துப் பன்னிரண்டு வருசங்களுக்கு முந்தி எடுத்த படங்களில பார்க்கோணும் அவன. இன்றோ வரலாறு எப்படிக் கொண்டு வந்து விட்டிருக்கு அவன."

"ஐயோ! உங்களுக்கு ஒண்டுமே விளங்காது. ஒண்டு சொல்லுறன் இரண்டு பேருக்கும். வரலாறு யாரையும் எங்கயும் கொண்டு போய்விடல்ல. நாங்கள் தான் வரலாற்றைக் கொண்டுபோய் எங்கயோ விட்டிருக்கிறம்."

"இந்த தத்துவமெல்லாம் எனக்கு தேவல்ல."

"என்னடா இது உள்ளத சொன்னா தத்துவம். பச்சயா சொன்னா அரசியல். கொஞ்சமிரு விளக்கமா சொல்லுறன்."

"சீலா! ஆ . . . நீ எத்தனையாமாண்டடா நாட்ட விட்டு கிளம்பின நீ?"

"83 கலவரத்தோட ஏன்?"

"ஓம் அப்ப அதுக்குப்பிறகு நடந்த தொண்டும் உனக்குத் தெரியாது."

ஓ அதுக்கிப்ப என்ன?

அப்பவெல்லாம் எங்கட அண்ணர் அதுதான் தில்லையண்ணர் உனக்குந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுந்தானே? அவர் எப்படி இருந்தவர். என்ன சொன்னனி சீலா? தேக்குமரமோ அப்படித்தாண்டா அண்ணரையும் எங்கட 'கொம்புச்சந்தியடி மாமி' அடிக்கடி சொல்லுவா. பொடியனுக்கு என்ன 'தேக்குமரம் மாதிரி' உடம்பெண்டு. அவவுக்கும் தன்ர மகளுக்குக் கட்டி வைக்கலாம் எண்ட நினைப்பு இருந்ததும் கடைசியில் அது கைகூடாமற் போனதும் வேற கதை. அண்ணன் ரவுணில படிக்கத் தொடங்கேக்க தில்லைப்பொடியனுக்கு தில்லைப்பொடியனுக்கெண்டு புதிர் சோறக்கூட கட்டிக்கொண்டு குடுக்காட்டி மாமிக்கு அடுத்த புதிர் தின்னும் வரைக்கும் ஒண்டுஞ் செமியாது. நானெல்லாம் அப்ப ஆறாம் வகுப்புப் படிச்ச ஞாபகம். அண்ணன் ஏதோ பெரிய படிப்புப் படிக்கிறானாம். அதுல பாஸ் பண்ணினா வாசிட்டிக்குத்தான் போறதாமெண்டு எங்கட வீட்ட விட மாமி விட்டுக்காரர்தான் ஒரே புழுகு. சோதனை வருது சோதனை வருதெண்டு கொஞ்ச நாளா ஊருக்கு வராமலே அண்ணர் ரவுணில நிண்டு ஒரே படிப்பு.

முதலெண்டா மாதத்துக்கு ஒருக்கா எண்டாலும் வீட்ட வந்து போறவர். இப்ப அதுவும் இல்லாமல் போக மாமி பஸ் ஏறத் தொடங்கிட்டா. கடைசியாப் போயிற்று வந்தவ வீட்ட வந்து சொன்னா தான் "இனி பஸ் ஏறத் தேவையில்லை" இன்னும் ஒரு கிழமையில சோதனை முடிஞ்சா அண்ணர் வீட்ட வந்துடுவாராம். மாமி சொன்னமாதிரி ஒரு கிழமையும் முடிஞ்சு ஒருநாள் இரண்டு நாளாகி மூன்றாம் நாளும் இருட்டிற்று. அண்ணன் வரவேயில்லை. அடுத்தநாள் விடிய மாமி மண்முனைத் துறையைத் தாண்டி மட்டக்களப்புக்கு பஸ் எடுத்திட்டா. போனவ திரும்பிவர முதல் ஆமிக்காரன் விட்ட வந்துட்டான். அப்பதான் விஷயம் தெரிஞ்சுது. பிறகென்ன மூன்று நாலு வருசம் அம்மாவும் மாமியும் வைக்காத நேர்த்தி யில்லை.

பட்டியில கறந்த பாலில பாதிக்கு மேல 'கொக்கட்டிச்சோலை கல்' லுக்கு வந்தது தான் மிச்சம். 'தான்தோன்றீஸ்வரர் தானாக் கொண்டுவந்து விடுவாராம்' அண்ணனை என அப்பாவித்தனமாக அம்மா நம்பிக் கொண்டேயிருந்தா. அதற்கேற்றாற்போல் இடையிடையே பரவும் வதந்திகள் ஓய்ந்த பாடில்லை. யாழ்ப்பாணத்தில் படிக்கிற பக்கத்துவீட்டுப் பிள்ளை ஒண்டு 'வாசிட்டிப் பக்கம் கண்டதாம்' எண்டு ஒரு கதை. இடையிலை ஒருக்கால் திருக்கோவில்ல தோணில வந்து 'சாமான்'களோடு இறங்கினதாம் எண்டு மற்றொரு கதை கொஞ்சக் காலம் பரவிச்சு. இதுக்கிடையில் 'சாவகச்சேரி பொலிஸ்ரேசன் கொப்பி' யில அண்ணனும் நிண்டவராம் எண்டு ஊரெல்லாம் ஒரே கதை. இதெல்லாம் ஒருபக்கம் இருக்க கிழமையில வெள்ளி ஒரு விரதம் செவ்வாய் மறு விரதம் எண்டு அம்மா தொடக்கம் மாமி, மாமி மகள் தேவமணி மச்சாள் வரை பட்டினி கிடந்து பார்க்கமுடியாத பரிதாபக் கோலமாய்ப் போனார்கள். அப்பருந் தான். மகன் இயக்கமாம் எண்டதாலோ என்னவோ இயக்கமெல்லாம் தன்ரது எண்டது மாதிரி அவிச்சுக் கொட்டினதுல தொடங்கி ஆலயடி வட்டைக்க கிடந்த உழவு மிசின் வரைக்கும் தானம் தொடர்ந்தது. அந்த வேளையிலதான் ஒருநாள் வடமுனைப் பக்கம் அண்ணர் வந்து நிற்கிறாராம் எண்டு புதுக்கதை ஒண்டு பரவிச்சு. அப்பரும் சைக்கிள் எடுத்துக்கொண்டு ஓடி ஓடி விசாரிச்சதுல 'மெய்யாத்தான் கிடக்குதுபோல' நிம்மதியாய்ச் சொன்னார் அம்மாவிடம். எனக்கும் ஒரே சந்தோசம். அம்மாவுக்கும் மாமிக்கும் ஒரே குதூகலந்தான். ஆளுக்கொரு வட்டையாய் வெத்திலை வைக்காதது தான் குறை.

எனக்கும் நாலஞ்சு நாளாக நித்திரையில்லை. எங்கால திரும்பிப் படுத்தாலும் தாடி வைத்துக்கொண்டு அண்ணர் வந்து கொண்டேயிருந்தார். துவக்கு ஒரு தோளிலும் புத்தகப்பை மறுதோளிலுமாய் கடப்படிக்கால அண்ணர் வாறமாதிரி இருக்கும். விடிய எழும்பிப்பார்த்தா எல்லாம் கனவு தான். அண்டைக்கு ஒருநாள் பொழுதுபட்ட நேரம் ஓட்டமாய் வந்த தேவமணி மச்சாள் அம்மாகிட்ட ஓடிப்போய் காதுக்குள் ஏதோ குசுகுசுத்தது அண்ணரைப்பற்றித்தான் எண்டு எனக்கு விளங்கிற்றுது. மறுகா என்ன வீட்டில ஒரே பரபரப்பு. அம்மா வாசல் எல்லாம் கூட்டத்தொடங்கினா. பத்து நிமிசத்துக்குள்ள மாமியோட வந்த தேவமணி மச்சாள் ஒருநாளும் இல்லாததுமாதிரி வீடெல்லாம் தண்ணி ஊத்திக் கழுவி சாமி படத்திற்கு எல்லாம் சாம்பிராணி பிடிச்சு வீடு ஒரே அல்லோலகல்லோலப்பட்டது.. அடுப்படிக்குள்ள புகுந்த மாமி என்னைக் கூப்பிட்டு 'பொடியா ரெண்டு இளந் தேங்காய் ஆய்ஞ்சு வா' எண்டாப்போலத்தான் எனக்கு விளங்கிச்சு இடியப்பம் அவிக்கிற விஷயம். வட்டைக்க போன அப்பரும் வந்து இறங்கிற்றார். சைக்கிளக்கொண்டு தாவாரத்தில சாத்த முதலே அம்மா ஓடிப்போய் காதுக்குள் ஏதோ சொன்னா. வட்டுக்குள்ள இருந்து வடிவா எல்லாத்தையும் பார்த்துப்போட்டு ரெண்டுக்கு மூண்டு தேங்காயும் கையோடு எனக்கொரு இளநீயும் ஆய்ஞ்சு போட்டு இறங்கினேன்.

மாமிட்ட போய் மெதுவாகக் கேட்டேன் "என்ன மாமி அண்ணர் வாறாராமா?"

"உஸ்ஸ்..... ஓமடா பொடியா சத்தம் போடாத. கவனம் அங்கால சந்தனப் போடியார் வீட்டுப்பக்கம் போயிடாதை."

மாமி சொன்னதைப் பார்த்தா அண்ணர் வாறது ஏதோ பிரச்சனையான விஷயம் போலை கிடக்கு. அண்ணர் வாறதுல என்ன பிரச்சனை. ஆமிக்காரன் இங்காலப்பக்கம் வாறதுமில்ல. மறுகான்ன பிரச்சனை. எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்ல. 9மணிச்செய்தி முடிய மரணஅறிவித்தல் தொடங்க ரேடியோவை நிற்பாட்டிய அப்பர் பெட்ரோல் மாக்ஸையும் நூத்துப்போட்டு கடலாம்பைக் கொழுத்திவிட்டார். பகல்போல இருந்த வாசல் இருட்டாகியது. அடுப்படிக்குள் இருந்து வந்த மாமி பஞ்சாங்கத்தை எடுத்துக்கொண்டு திண்ணைக்குள்ளிருந்த கடலாம்படியில் குந்தி ஏதோ ஆராயத் தொடங்கினா. மாமியைத் தொடர்ந்து அம்மா, அப்பா, தேவமணிமச்சாள் என எல்லாரும் கடலாம்பை வளைத்து குந்திக்கொண்டார்கள். எனக்கு பசி ஒருபக்கம் நித்திரை ஒருபக்கம் ஒரே அலுப்பாக இருந்தது.

"அம்மோ பசிக்குதுகா" சிணுங்கினேன்.

"மறுகா சாப்பிடலாம் சத்தம் போடாமல் படு" அப்பா உறுக்கிவிட்டார். அப்படியே அடங்கி அடக்கிக் கொண்டு அம்மாவின் மடியில் தலையை வைத்துக்கொண்டு படுத்ததுதான் தெரியும். ஒரேயடியாகக் கிடந்துட்டன். பிறகென்ன வழமையான கனவு. அதே தாடிதான். துவக்கும் புத்தகப் பையும் ஒவ்வொரு தோளில். வழமைபோலத் தான். அண்ணர் கடப்படிக்கால வளவுக்க பூர வெடிச்சத்தம். அம்மா! வீறிட்டு எழுந்தேன். மடியில் கிடந்த என்னை உதறித் தள்ளி விட்டு எழுந்து ஓடினாவு அம்மா. எல்லாரும் கடப்படிப்பக்கம் ஓடினார்கள்.

என்னைக் கையில் பிடித்துக்கொண்ட அப்பா "ஆரது தில்லையா... தில்லை" சத்தமாய்க் கேட்டார்.

அண்ணரின் அனுங்கல் மெதுவாய்க் கேட்டது. "அம்மா நான்தானம்மா... தில்லை சுட்டுப்போட்டான்கள்... சுட்டுப்..." மிச்சம் யாருக்குக் கேட்டது.

மயங்கி விழுந்த தேவமணி மச்சாள் ஒரு புறம். சந்தனப்போடியாரின் வீட்டை நோக்கி மண்ணை அள்ளி வாரியிறைத்து சாபம் போட்டுக் கொண்டிருந்த மாமி மறுபுறம். அண்ணனை மடியில் வைத்துக்கொண்டு ஒப்பாரியிட்ட அம்மாவுக்கு ஆறுதல் சொல்லத் தெரியாம அப்பா சால்வையால் தனது வாயைப் பொத்திக்கொண்டு விம்மினார்.

எழுவான்கரை மெதுவாகச் சிவந்து கொண்டிருந்தது. அண்ணர் விழுந்து கிடந்த அந்த கடப்படி மண்ணைப்போல.

எட்டு நாளும் சத்தம்போட்டு பேசாமல் இருந்த அப்பர் சத்தமாய்ச் சொன்னார். "டேய் தம்பி செல்வராசா விதானை யாரிட்டைப் போய் உடன உனக்கு ஒரு பாஸ்போட் எடுக்கச் சொல்லு. சிறிலங்கா ஆமிக்காரன் சுட்டாலும் பரவாயில்ல இவங்கட கையால மடுவுக்க போறதுக்கு இங்க இருக்க வேணாம்." ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுறைகளின் முரண்பாடுகள்!

## ஆத்மன்

இங்கு கலை - இலக்கிய நிகழ்வுகளை முன்னின்று நடாத்திவரும் எனது குடும்ப நண்பரின் மனைவி எமது தொலைபேசியில் அவசரமாக எனது அழைப்பை வேண்டி பதிவு செய்திருந்தார். இவ்வழைப்பு வழமை போன்று தான் (நீண்ட வாரமுடிவு நாட்களில்), எனது குடும்பத்தை மதிய விருந்துக்கு அழைக்கின்றார்கள் எனக்கருதி தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுது, தமது ஒரேயொரு மகன் 'ஞானி' வீட்டை விட்டு ஓடிச் 'சிறுவர்களுக்கான விடுதி' ஒன்றிற்குச் சென்றுவிட்டார் எனவும், எனது உதவியை எதிர்பார்ப்பதாகவும் (ஞானி என்னுடன் கூடுதலாகப் பழகுவதன் காரணமாக) அவரின் இந்நடவடிக்கைக்கான காரணங்கள் ஏதாவது எனக்குத் தெரியுமா என வினாவினார்கள்? அவரைத் தாம் தண்டிக்கப் போவதில்லையெனக் கூறி, மீண்டும் வீட்டுக்கு அழைத்து வரமுடியுமா என என்னை வேண்டிநின்றனர். சிறுவர்களைப் பராமரிக்கும் விடுதிக்குச் சென்று விடுதியின் பொறுப்பாளரிடம் என்னை அறிமுகப்படுத்தி, ஞானி பற்றிக்கூறி அவரைச் சந்திப்பதற்கு விடுதிப் பொறுப்பாளரிடம் அனுமதியைக் கேட்டேன். என்னை அருகிலிருந்த விருந்தினர் வரவேற்பறையில் அமரும்படி கூறி அவரை அழைத்து வந்தார். ஞானியின் எதிரிலிருந்த கதிரையில் அமர்ந்து அவனுடன் உரையாடிய பொழுது, வீட்டில் தனக்கும் தந்தையாருக்கும் இடையேயான பிரச்சனைகள் வீட்டிற்கு வருபவர்களால் தான் என்று கூறி சம்பவங்களை விபரித்தான். அதாவது தம் தாய்நாட்டுப் பிரச்சனை குறித்து என்னைக் கிண்டலாக கேள்விகளைத் தொடுப்பார்கள். இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நானும் கிண்டலாகவே பதிலளிப்பேன். இதனால் வீட்டிற்கு வருபவர்களுடன் வாய்ச் சண்டை ஏற்படுவதுண்டு. இவ்விடயங்கள் தனக்கு மானக்கேடாக கருதி அவர்கள் முன் அடித்து, அவமானப்படுத்துவார் எனது தந்தையார். ஆனால் என் மனநிலைகள் பற்றி எதுவித வெளிப்பாடுகளையும் அவர்கள் அவதானித்தது கிடையாதென்றான்.

இவற்றை நான் விளக்கமாக கூறும்படி கேட்டபொழுது 'எம் நாட்டு நிலமை குறித்து என்ன நினைக்கின்றீர்கள்' எனக் கேட்பார்கள், நானும் 'எந்த நாட்டைப்பற்றிக் கேட்கின்றீர்கள்' என்பேன். "உமது தாய்நாடு தமிழீழத்தைப் பற்றித்தான்" என்பார்கள். வீட்டுக்கு வருபவர்கள் அனைவரும் இதே கேள்விகளைத் தான் திரும்பத் திரும்பக் கேட்டுத் தொல்லை தருவார்கள். "நான் பிறந் ததோ Italie (இத்தாலி) யில், வளர்ந்ததோ Allemagne (ஜேர்மனி) யில், தற்பொழுது படித்துக்கொண்டிருப்பதோ France இல், நாளை மேற்படிப்புக்கு Angleterre (இங்கிலாந்து) க்குச் செல்ல வேண்டுமென்பதே எனது பெற்றோரின் விருப்பம்" என்று கூறி பெருமூச்சுடன் தோள்மூட்டுக்களை அசைத்துக்கொண்டான்.

தற்பொழுது France இல் நம்மவர்களின் பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியேறி விடுதிகளில் வசிப்பதை நான் கேள்விப்பட்டிருந்தும், முதன்முறையாக நேரடியாக எனது வட்டத்தில் நடந்ததினால் நான் பார்க்காத ஒருபகுதியின் முரண்பாடுகளை அறியக் கிடைத்தது. எனது கேள்விகளுக்கு ஞானியிடமிருந்து எதிர்பாராத பதில்கள் எனது வெறுமையை உணர்த்தியது மட்டுமல்லாது. அவனின் எண்ணப்பாடுகளை பக்குவத்துடன் கிரகித்துக் கொள்ளவும் செய்தது. இரு சமூகத்துள் வாழ்ந்து கொண்டிருக்கும் தனது அவலநிலையை ஞானி எடுத்துரைத்தான். "நான் வாழும் சமூகத்தில் எனக்கு ஏற்படும் சிக்கல்கள் குறித்து எவரும் விசாரிப்பர் கிடையாது. எனக்குத் தெரியாத 'தமிழீழப்பிரச்சனை' குறித்து நான் எப்படிப் பதில் கூறுவேன்" என்ற வினாவுடன் தொடர்ந்தான். Allemagne (ஜேர்மனி) யில் நாமிருந்தவேளை குருவிக்கூட்டத்தினர் 'பாக்கி', 'Gitan', (குறவர்) என்று எம்மைப் பார்த்து காறியுமிழ்ந்ததும், அங்கு வாழ்ந்த அண்ணைமாருக்கு அடித்ததையும், நாம் அங்கு வாழப் பயந்து எனது ஏழுவயதில் Franceக்கு வந்து, இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகளைக் கூறுவதா? இந்நிலையில் நீங்கள் எனக்கு கூறும் 'எனக்குத் தெரியாத தமிழீழம் சார்ந்த மொழி, மத, கலை, கலாச்சாரப் பிரச்சனைகள்' எனக்கு அவசியமற்றதாகவே தோன்றுகின்றது.

எங்களது வீட்டுக்கு வருபவர்களுடன் என்னத்தைக் கதைக்கமுடியும். அவர்கள் வந்திருப்பார்கள், வீடியோப்பிரதி ஓடிக்கொண்டிருக்கும். அம்மா வந்திருக்கும் அன்ரிமாருடன் நகைக் கதையோ அல்லது வீட்டுக்கதையோ அல்லது எந்தக்கடையில் புதிய டிசைன் சேலை மலிவாகவிருக்கின்றது பற்றி விசாரிப்பார்கள். அதுவுமில்லை என்றால் Paris இல் உள்ள தமிழ்க்குடும்பங்கள் பற்றி அதாவது அவர்களுடைய பெண்பிள்ளைகள் பற்றி கதைத்துக் கொண்டிருப்பார்கள். அப்பாவோ வந்திருக்கும் நண்பர்களுடன் சேர்ந்து விஸ்கி குடித்துக்கொண்டு, (இவர்களில் சிலர் குடிப்பதற்காகவே சந்திப்பவர்கள்) தான் வேலை செய்கிற இடத்து Chef, Patron பற்றியோ (தலைமைத்தொழிலாளி, முதலாளி) அல்லது தாங்கள் ஊரில் செய்த அரசியல், யாரோ ஒருவருடைய பிரச்சனைகள் பற்றியே கதைச்சுக்கொண்டிருப்பார். தனது நண்பர்களுடன் மது அருந்துகையில் அவர்களுக்கு ஏற்படும் அவர்களின் தாய்நாட்டு உணர்வினால் பாதிப்புற்று ஏதேதோ அரசியலென்று கதைப்பார்கள். ஆனால் அரசியல் கதைப்பதற்கு தகுதிவேண்டுமென்று நான் கூறவில்லை. அதைக் கதைப்பதற்கு ஓர் பண்பு, பொது அறிவு, பொறுப்புணர்வு இவையற்று தமக்குள் சண்டையிடுவதை பலமுறை கண்டுள்ளேன். இவற்றைப் பார்க்கும் பொழுது இவர்கள் இங்கு வந்தும்கூட அரசியல் பண்பாடுகளை கற்றுக் கொள்ளமுடியவில்லை. இதற்கு ஒரு காரணம் மொழியெனக் கூறினாலும், குறைந்தளவாவது மொழி தேர்ந்தவர்களை தமது வட்டங்களில் இணைத்து தமதறிவை ஏன் இவர்கள் (வெளியுலகப்பார்வையை) வளர்க்க முயலவில்லை. விதண்டாவாதப் போக்கில் நடந்துகொள்வதைத் தவிர்த்து, எனது தலைமுறை இங்கு தலைநிமிர்ந்து மரியாதையுடன் வாழ்வதற்கு (அப்பா கூறுவது போன்று, 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்பது போன்று) இவர்கள் வழிவகுப்பார்களா? இதுவே எனது அவா.

இதைத்தவிர என் பெற்றோரின் ஊருக்குப்போய், இங்கிருப்பது போன்று Supermarché (பலசரக்கு வியாபார நிலையம்), Nettoyage Entreprise (துப்பரவு செய்யும் நிறுவனம்), Métro (பாதாள புகையிரதம், நிலையம்), Mc Donald's Restaurant போடுவது பற்றியோ நான் சிந்திக்க முடியாது. நான் இதைக் கூறுவது உங்களுக்குக்கூட சீண்டலாக இருக்கலாம். ஆனால் எனது பிரச்சனையோ, நான் இந்நாட்டு மக்களின் கலை - கலாச்சாரத்தை அனுசரித்து, அதற்குரிய மரியாதையைக் கொடுத்து வாழவே விரும்புகின்றேன். இதனால் எனது பெற்றோரின் கலை - கலாச்சாரங்களை இழிவாகவோ அல்லது பிழையாகவோ நினைக்கவில்லை. அப்பாவைப் பார்த்து வேண்டுவதெல்லாம் நாம் வாழும் நாட்டின் நற்பண்புகளைக் கற்று இவ்வாழ்முறையுடன் ஒத்துப்போவதையே! இதை நான் கூற அப்பாவின் நண்பர்கள் தமது கலை - கலாச்சாரம் மற்றைய கலை - கலாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரங்களையும் விட மேன்மையானதாகக் கூறி என்னை மட்டம் தட்டுவார்கள். ஆனால் இவர்கள் இங்கு வாழும் சந்தர்ப்பம் கிடைத்தும்கூட, இந்நாட்டு மக்களின் கலை - கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ளமுடியாத நிலையில், இவர்கள் எப்படி ஒப்பீட்டளவில் மறு கலை - கலாச்சாரம் பற்றிக் கதைக்க முடியும்? இங்கு வரும் அப்பாவின் நண்பர்கள் எல்லோரும் ஊரில் அரசியலில் ஈடுபட்டதனால் தம்வாழ்வு பாதிப்புற்று இங்கு வந்ததாகக் கூறுகின்றார்கள். இவர்களுடன் நான் என்னத்தைக் கதைக்கமுடியும்!

இது போன்றே ஒரு கொண்டாட்டத்துக்குப் போனால் ஒரு நாள் முழுக்க அநியாயமாகப் போகின்றது. எந்த நிகழ்ச்சியும் ஒழுங்காக நேரத்துக்கு ஆரம்பமாகுவதில்லை. அங்கும் என்ன நடக்கின்றன, ஒரு பக்கத்தில் பலமாகப் பாடல்கள் போடப்பட்டிருக்கும் அல்லது மேளச்சத்தம். மற்றப்பக்கத்தில் பெண்கள் ஒவ்வொருதரும் தாங்கள் அணிந்திருப்பவை பற்றி பெருமையாக மற்றவர்களுக்கு காட்டியபடி, ஊர்க்கதைகள் கதைத்துக் கொண்டிருப்பார்கள். ஓர் மூலையில் தண்ணியடிக்கிற ஆண்கள், அவர்களின் கதைகள் சிலவேளை கைகலப்பில் நடந்து முடியும் அசிங்கங்களும் நடக்கும்! இதற்குள் நான் போயிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதைவிட என்னத்தைச் செய்யமுடியும்?

□□□

தமிழ்பேசும் மக்களின் எதிர்காலச் சுபீட்சத்தைக்கருதி தெரிந்தோ - தெரியாமலோ போராட்டத்துள் இணைந்துகொண்ட நான், அங்கு எனக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட சமவுடமைக் கருத்துக்களைத் தான் தோன்றித்தனமாக ஏற்றுக்கொண்டு செயற்பட்டும், தவிர்க்கமுடியாத வர்க்கக் குணாம்சத்தின் நெருக்கடிகளின் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல், அங்கு போதிக்கப்பட்ட எச்சசொச்ச கருத்துக்களுடன் (குணாம்சங்களுடன்) புகலிடம்தேடி (அழையாவிருந்தாளியாக) இந்நாட்டினுள் புகுந்தும் கொண்டேன்.

புகலிடம்தேடி வந்த எம்மவர்களுடன் இணைந்து மேலெழுந்தவாரியாக எமது மக்களின் விமோசனம் எமது கையில் தான் உண்டென்ற பக்குவமற்ற தன்மையுடன், எமது மக்களின் கலை - கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாப்போமெனச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், இங்கு நடைபெற்ற கலைநிகழ்வுகள் அனைத்தும், எம்தேசத்தின் போராட்ட விழிப்புணர்வுகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளாகவும், அதேநேரத்தில் தளத்தில் போராடும் மக்களுக்கு 'உதவி' நோக்கமாகவே கருதப்பட்டது. ஆனால் கடந்த காலங்களில் தமிழ்பேசும் மக்களின் கலை - கலாச்சாரங்களை புகலிடநாடுகளில் தான் காப்பாற்ற வேண்டுமென்று கொடுக்குக் கட்டிக்கொண்டு செயற்படும் நம்மவர்களிடையில், தற்பொழுது உண்மையான நோக்கிலிருந்து விலகி தமது சுய மூலதன மேம்பாட்டுக்காக இந்நிகழ்வுகள் நடாத்தப்படுவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்னுமொரு பக்கத்தில் கடந்த காலங்களில் விடுதலை அமைப்புக்களில் பங்காற்றியவர்களில் ஒரு பகுதியினர் தாம் வாழும் சமூகத்தில் தம் 'அந்தஸ்து கருதி' கலை - இலக்கியம் என்று தத்தமக்குள் ஓர் வட்டத்தை உருவாக்கி அதற்குள் அமிழ்ந்து விடும் கவலைக்குரிய விடயங்களும் இல்லாமலில்லை. தமிழ்பேசும் மக்களின் பிரச்சனையானது எமது, எவரினதும் தனிப்பட்ட பிரச்சனைகள் அல்லவென சமவுடமைக் கொள்கைகள் பற்றிப் பேசிய நாம், இன்று போராட்டம் பற்றிய கண்ணோட்டம் எல்லோருக்கும் ஒரு தன்மையாகவிருத்தல் வேண்டுமெனவும், குறிப்பாக எல்லா மனிதர்களும் தத்தமக்கான பகுத்தறிவுத் தன்மையைக் கொண்டவர்கள் என்பதை நம்மவர்கள் மறந்து செயற்படுவதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. குறிப்பாக ஒரு பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகள் கூட ஓரே குணாம்சங்களைக் கொண்டவர்களாக இருப்பதில்லை. அப்படியெல்லோரும் இருக்க வேண்டுமெனக் கருதின் கூர்ப்பியலின் மரபுக்கெதிராக [Transgénique - செயற்கைமுறையில்] மாற்றங்களை ஏற்படுத்தும் பொழுது (Clonage) பிரதிப் (copies) பிள்ளைகளை (ஒரே குணாம்சத்தைக் கொண்ட) உருவாக்கி, அடுத்த நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தான்? நாம் கருதும், எம்மிடையே எவ்வித வேறுபாடின்றி ஒரே குடையின்கீழ் அமர முடியுமெனக் கருதுகின்றேன். இது நடைமுறைக்கு சாத்தியமாகுமோ? எம்மிடையேயுள்ள சமவுடமைக் கொள்கையின் விண்ணர்களெனக் கருதும் நாம், ஏன் இதனொரு பகுதியான மனோவியல் - பகுத்தறிவுத் தன்மைகளைக் கவனத்தில் கொள்ளாது விடுகின்றோம் போல் தென்படுகின்றது. மேலும் மேற்குறிப்பிட்ட காரணங்களையும் சாட்டாக வைத்து இயக்கங்களிலிருந்து ஒதுங்கிக் கொண்டதுமல்ல, இயக்கங்களினூடாக அறிமுகமான பொது நண்பர்களையும், ஆதரித்த மக்களையும் தமது புதிய நண்பர்களாக்கி, தமது குறுகிய நோக்கங்களுக்காகவும், வியாபார நோக்கங்களுக்காகவும் அவர்களைப் பாவித்து விடுவது மட்டுமல்ல, தாமே புனிதமான தமிழ்பேசும் மக்களின் இன்றைய பிரதிநிதிகளென்று நாக்கூசாது பறைசாற்றவும் செய்கின்றனர்.

இதுமட்டுமா, இங்கு வருகை தரும் தமிழறிஞர்களும், இலங்கை, இந்தியா, பிரான்சுக்கு வெளியில் வெளியாகும் நல்ல நூல்கள் கூட நோக்கத்தை அடையாது எமக்குள்ளிருக்கும் பிரிவினைகளை அறிந்து கொள்ளாது, தத்தமக்குள் தொடர்பான வட்டங்களை சந்திப்பதாலும், எம்மவர்கள் இச்சந்திப்புக்களை தாம் வாழும் சமூகத்தில் தம் 'சமூக அந்தஸ்து கருதி' பயன்படுத்தலும், இச்சந்திப்புக்களில் எமது உள்விவகாரங்களை அவர்கள் முன் காறியுமிழ்ந்து கூறுவது மட்டுமல்ல, அவர்களையும் குழப்பத்திற்கு உள்ளாக்கி எம்மை நாமே எள்ளி நகையாட வைத்து விடுகின்றோம். இதைக் கூறுவதன் மூலம் மற்றையவர்களைச் சாடுவது எனது நோக்கமுமல்ல, இதைக் கூறுவதனால் நான் போதகனுமல்ல. மேற்கூறப்பட்ட அபிப்பிராயங்கள் அனைத்தும் எனது அனுபவங்களும் கூட. இன்று எம்மிடையே ஏற்படும் மனிதப்பண்புக்கே உரியதான பல முரண்பாடுகளை உணர்ந்து எமக்கிடையே இருக்கும் வேறுபாடுகளை குறைந்தளவேனும் சுயநோக்குகளை களைந்து (ஒத்தி வைத்தாவது) அல்லல்படும் தமிழ்பேசும் மக்களின் எதிர்கால விடிவுக்கு ஆக்கபூர்வமான பொருளாதார ரீதியான விடயங்களிலாவது செயற்படுவோமாகின், அம்மக்களின் எதிர்காலத்துக்கு தார்மீக ரீதியாக ஏதோ செய்தோம் என்று மனத்தை ஆற்றிக்கொள்ள முடியுமெனக் கருதுகின்றேன். இதுமட்டுமல்ல இன்றைய நிலையில் எமக்கு எட்டாத இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுவதாகக் கூறி எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாது, புகலிடங்களில் வாழும் எமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து, குறிப்பாக 'இன்று நம்மவர்களின் விற்பனை நிலையங்களிருக்கும் Paris வீதிகளில் அலைந்து திரியும் தற்போதைய நவீன தமிழ் இளைஞர்களின் நடையுடைபாவனைகள், செயற்பாடுகள் யாருடைய பண்பாடுகள்? தமிழினத்தவருடையதோ, இந்நாட்டினத்தவரதோ அல்லவே! இவை எங்கிருந்து வந்தன? நேற்று மாலையும் La Chappelle métro (பாதாள புகையிரத நிலையம்) வுக்கு அருகில் Police என்னைப் பிடித்து papier (visa) கேட்டு தொந்தரவு செய்தார்கள். ஏன் எம்மவர்கள் ஆங்காங்கே திரிந்து கதைத்துக்கொண்டு கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர். பொழுது போக்குவதென்றால் Bibliothèque (நூலகங்கள்), இலவசமாக Français (பிரஞ்சுமொழி) கற்பதற்கு பலவிடங்கள் இருக்கின்றன. ஏதாவது Stage (தொழிற்பயிற்சி) செய்யலாம். ஏன் விளையாடுவதற்கும் ஒவ்வொரு Quartier (அவர்கள் வாழும் நகரின் ஒரு பகுதிகளில்) யிலும் பல விளையாட்டரங்குகள் உண்டு. இப்படியாக நேரத்தை பிரயோசனமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தலாமே. Gare du nord - La Chappelle métro (பாதாள புகையிரத நிலையங்கள்) வீதிகளில் எம்மினத்தவர்கள் செய்யும் அட்டகாசத்தினால் தானே. அவ்வீதிகளில் வசிக்கும் மற்றைய இனத்தவரின் கோபத்திற்கும், எரிச்சலுக்கும் ஆளாகின்றார்கள். அப்பகுதியில் எம்மவர்களுக்கு எதிராக ஊர்வலம் செய்யும் நிலையும் ஏற்பட்டது. (மேற்கூறப்பட்டவை நீண்ட பிரச்சனைக ளுள் ஒரு சிலவே) இத்தகைய பிரச்சனைகளைக் களைந்து, ஆரோக்கியமான வேலைகள் தான் என்ன செய்தோம்? புகலிடத்தின் பிரச்சனைகள் யாருடையவை......?வழமையான சம்பிரதாய எழுத்து முறைகளிலிருந்து விடுபட்டு எனது மனதிலிருக்கும் விடயங்களை (விரைந்துவந்த பாதையைச் சற்று திரும்பிப் பார்க்கும் பொழுது) எனது மிகச்சிறிய அறிவுக்கு எட்டியதைக் கூற முயற்சி செய்துள்ளேன். இதைக் கூறும் பொழுது சிலமுரண்பாடுகள் தோன்றத்தான் செய்கின்றன. அவற்றிற்கு மன்னிப்பீர்களாக.

□□□

கடந்தகால பாடசாலை அனுபவத்தில், எனது Origine (சுய அடையாளம்) Tamoul (தமிழ்) எனும் பொழுது அவர்கள் என்மே லான ஏளனப்பார்வையும், உனது பெற்றோர் 'Economique Refugié' (பொருளாதார அகதிகள்) ஆகவும், 'Tourist' (உல்லா சப்பிரயாணிகளாக) ஆகவும் இங்கு வந்தவர்கள் என்று என் னைப் பார்த்துக் கேட்கும் பொழுதும், பெற்றோரின் தொழிலைக் கேட்கும் பொழுதும் [Nettoyage - Bureau cleaning] நான்படும் வேதனையைக் கூறுவதா? விளையாடும் பொழுது 'நீ ஊத் தையன்', 'Gitan' (குறவன்) என்று சகமாணவர்களால் அழைக் கப்பட்டு ஒதுக்கப்படுகையில், புரியாது வெதும்பிய வேளையில்....

எனது பெற்றோரிடம் இதுபற்றி விளக்கம் கேட்டபொழுது அவர்களுக்கும் விளக்கம் தெரியாது 'அதெல்லாம் வளரவளரச் சரியாகிவிடுமெனக்' கூறினார்கள். ஒவ்வொரு வருடமும் புதியவ குப்புக்கள் ஆரம்பிக்கும் பொழுது ஆசிரியர்களுக்கும் மாண வர்களுக்குமிடையே 'அறிமுகம் செய்தல்' நடைபெறும். சென்றமுறை எனது ஆசிரியை ஒருவர் எமது Origine (சுய அடை யாளம்), Langue (மொழி), Religion (மதம்) பற்றிக் கேட்ட பொழுது, எனது Religion 'சைவம்' என்று கூற, ஆசிரியை அத ற்கு விளக்கம் கேட்க எனக்குத் தெரியாதென தெரிவித்தபொ ழுது ஆசிரியைக்கு வந்த கோபத்தில் என்னைப்பேசி நீயொரு 'Hindu' (இந்து) எனச்சொல்ல நான் மறுக்க, எனது பெற்றோரிடம் சைவம் பற்றி, விளக்கம் கேட்டுவரும்படி சொல்லிவிட்டார். மறு நாள் பெற்றோரைக் கட்டாயப்படுத்தி முதலாவது தடவையாக Conseil du classe க்கு (Conseil du classe என்பது ஒவ்வொரு மாண வரினது கல்விமுன்னேற்றம், ஒழுக்கம் பற்றி அவர்களுக்கு கற்பிக்கும்ஆசிரியர்களும்,பெற்றோர் - மாணவர்களுக்குமி டையே நடைபெறும் ஆலோசனை - கலந்துரையாடல் ஆகும். இது மாணவனின் ஆரோக்கிய கல்வி முன்னேற்றத்துக்கு உந்து சக்தியாக அமையும்) அழைத்துச் சென்ற பொழுது, எனது ஆசி ரியை அவர்களிடம் சைவம் பற்றி விளக்கம் கேட்டபொழுது, அவர்கள் அனைத்து பெற்றோர்கள் - மாணவர்களின் முன் முழித் தமை, எனக்கு இன்னமும் எனது பெற்றோரின் மொழியறியாமை குறித்து வேதனைப்படுவதைக் கூறுவதா?" எனக்கூறி ஒரு சில வினாக்களுக்கு விளக்கத்தையும் தர எத்தனித்தான்.

'குறிப்பாக அம்மா, உனது தாய்மொழியை, மதத்தை மறக் காதே! என்பது மட்டுமல்ல மற்றைய தமிழ்க் குடும்பங்களுடன் ஒப்பிட்டு எமது குடும்ப மரியாதையைக் காப்பாற்றும்படி மன்றா டிக் கேட்டுக்கொள்வார். ஆனால் எனக்கு தமிழ்பற்றிய போதிய அறிவு பெறுவதற்கு எதுவித அவசியமும் ஏற்படாத நிலையிலும், அம்மா கூறும் தாய்நாடு பற்றியும், மதம் பற்றியும் எனது கல்வி மொழியில் பெரிதாக கற்றறிந்து கொள்ளமுடியாத நிலையிலும், என்னிடம் கேள்வி கேட்பவர்களிடமிருந்தும் கூட இதற்கான விளக்கம் கிடையாத நிலையில் நான் என் செய்வேன்!

எமது பாடசாலையில் நான் கற்றுக்கொள்வது பிரஞ்சுக்குடியரசுக் கொடியின் கீழ், எவ்வினத்தவராகவிருப் பினும் நாம் ஓர் இனத்தவரென்றும், மதரீதியாக எதுவித முக்கி யத்துவமின்றியும் (Laïcité), ஒரு கலாச்சாரப்பண்பு உடையவராக விருத்தல் வேண்டும் என்பதே. இந்நிலையில் எனது பெற்றோரின் குறுகிய எண்ணங்களுடனான மொழி, மத, கலாச்சாரப்பாது காப்பு எவ்வகையில் இம்மக்களுடன் ஒத்து வாழ்வதற்குத் துணைபுரியும்? எனக்குப் புரியவில்லை. குறிப்பாக எனது பார்வை யில், இங்கு வாழும் ஒருசில இனக்குழுக்கள் தமது பாரம்பரியத் தைக் காப்பாற்றவிழைகையில், அவர் ஓர் இனக்கூட்டங்களாக (Ghetto) ஒதுங்கிக் கொள்கின்றார்கள். ஆனால்பிரஞ்சு நாடோ பல்லினப்பிரிவுகளால் உருவாக்கப்பட்ட நாடுகளான அமெ ரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடல்ல. இந்நாடுக ளில் பல்லினக்குழுக்கள் தத்தமது தனித்தன்மைகளைப் பேண லாம். அதற்கமைய அந்நாடுகளின் அரசியல்யாப்பும் அமைந் துள்ளது. ஆனால் பிரான்சில் அந்நிலை நிராகரிக்கப்பட்ட நிலை யில், பல்லினக் கலை - கலாச்சார வாழ்வுமுறை அங்கீகரிக் கப்படாத நிலையில், எம்மவர்கள் தமது கலை - கலாச்சாரம் என்று கருதுவதை இங்கு புகுத்த எத்தனிப்பதை எனது பாட சாலை ஆசிரியர்கள் மறு இனக்கூட்டங்கள் புறம்பாக வாழ எத்தனிக்கும் முறைகள் பற்றி அவர்கள் விளக்கம் கொடுக்கை யில் நான் எனக்குள் வெட்கமும், அவமானமும் அடைகின்றேன். இங்கு எம்மவர்கள் கூறுவது போன்று நிற, இன வேறுபாடுகள் பெரிதாக இருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில் லையே! இங்கு வந்து வாழும் இம்மக்கள் இனக்கூட்டங்களாக தமது வேறுபாடுகளை (Culture, Religion, Langue) அதிதீவிர மாக வெளிப்படுத்தி வாழ எத்தனிக்கும் பொழுது ஏற்படும் புரிந்து கொள்ளாத நிகழ்வுகளாக இவற்றைப் பார்க்கலாம் என நினைக் கின்றேன்.

நம்மவரும், வேற்றினக்கூட்டங்களின் பிழையான வாழ்வுமு றையை பிரதிபண்ணி விளக்கமற்று வாழ எத்தனிக்கும் முறை எவ்வித பாதிப்புக்களை இன்னும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகின்றதோ என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடிய வில்லை. ஆனால் பிரஞ்சு நாட்டுக்குரிய பாரம்பரிய நற்பண் புகளை எம்மவர்கள் அறியச்சந்தர்ப்பம் கிடைக்கவில்லைப் போல் எனக்குத் தென்படுகின்றது. உதாரணமாக, எவ்விட யத்தை எடுத்துக் கொண்டாலும், பிரான்சில் சுதந்திரம், சமத் துவம், சகோதரத்துவம் உண்டென்றும், எனக்கு ஒன்றும் விளங் காதென்று கிண்டல் செய்துகொள்வார்கள். இவர்கள் நினைக் கும் சுதந்திரம் என்பது மற்றவர்கள் எக்கேடு கெட்டுப்போனாலும், அதாவது எனது சுதந்திரம் மற்றவனின் சுதந்திர உணர்வுகளை எவ்வகையில் பாதிப்புக்குள்ளாக்கின்றது என்பதை எள்ளளவும் புரிந்துகொள்ளாத நிலையில் வாழ எத்தனிக்கும் பொழுது பூர் வீக மக்களின் எதிர்ப்பை நம்மவர்கள் சம்பாதிக்கின்றார்கள். இந்நிலையில் நான் எனது எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்க முடியும்? எனது பெற்றோர் இலங்கையில் வாழ முடியாது இங்கு வந்த நிலையிலும், இங்கு நம்மவர்கள் நடந்துகொள்ளும் போக்குகளைப் பார்க்கும் பொழுது, ஏன் அங்கிருந்து வந்தார் கள் என்பதை என்னால் ஊகித்துக்கொள்ள முடிகின்றது. இதே பாணியில் எம்மவர்கள் (அழையாவிருந்தாளியாக வந்தவர்கள்) நடந்துகொள்ளும் பட்சத்தில், அடுத்து எந்தநாடு நோக்கி நகருவோமென்பது எனக்குத் தெரியவில்லை. இதுதான் என்னவோ அன்று என்னைப் பார்த்து சகமாணவர்கள் கூறிய 'Gitan' (குறவர்கள்) என்பது எனதறிவுக்கு சரி போல் தோன்று கின்றது" என்றான் ஞானி.

நான் மௌனமாகவே அவனது விளக்கத்தைக் கேட்டுக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதைத்தவிர என்னால் அவனது கேள்விகளுக்கு பதில ளிக்க முடியவில்லை.

ஞானி தொடர்ந்து, 'எனது பெற்றோரிடம் எனக்கொரு Ordinateur (கணணி) வாங்கித்தரும்படி கேட்டு அலுத்து விட்டேன். Ordinateur என்னுடைய கல்விக்கு எவ்வளவு தூரம் உதவும் என்பதில் இவர்களுக்கு ஒரு சொட்டுக்கூட அக்கறை யில்லை. எனது ஆசிரியர்களும், சகமாணவர்களும் Ordinateur (கணணி), Internet (இணை வலையூடு), Nouvelle Technologie - communication (நவீன தொழில்நுட்பம் - தொடர்புசாதனங்கள்) பற்றியும், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் என்னுடைய கல்வியின் முன்னேற்றத்திற்கு அவற்றின் பங்களிப்புகள் குறித்துக் கூறும் பொழுது நான் கனவில் தான் Ordinateur, Internet ஐப் பார்க்க முடிகின்றது. எனது பெற்றோருடன் பிரச்சனைப்படுவதில் இதுவொரு சிறிய பகுதியாகும். எனது அப்பா 'ஊரில் சாப்பாடுகள் இல்லாமல் சனங்கள் அலையுதுகள். இவருக்கு Ordinateur தான் பெரிய பிரச்சனை' என்பார். என்னத்தைக் கேட்டாலும் ஊர்ப்பிரச்சனையைப் பேசிக்கொண்டிருப்பது தான் இவர்களின் வேலை. நல்லவேளை நான் பெண்ணாகப் பிறக்கவில்லை. அப்பா உனது கலியாணத்துக்கு நகை, சீதனம் சேர்க்க வேண்டும். வாயை மூடிக்கொண்டு வீட்டுக்குள் இருக்கும்படி கூறியிருப்பார்! ஊரில் பிரச்சனை என்பதற்காக இவர்கள் தமது ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டிருக்கின்றார்களா? அடிக்கடி கொண்டாட்டங்கள் வைக்கவில்லையா? நான் Ordinateur கேட்டால் மாத்திரம் ஊர்ப்பிரச்சனை முன்னுக்கு வந்துவிடும். அது மட்டுமல்ல மாறிமாறி Rendez-vous (அலுவலகச் சந்திப்புக்களுக்கு) அவை, இவையைக் கூட்டிச் செல்லுமாறு கட்டாயமாக அனுப்புவார்கள். போகிற இடங்களில் கூட்டிச் செல்பவர்கள் என்னைப் பொய், சொல்லும்படி கூறுவார்கள். 'நான் எப்படிப் பொய் சொல்ல முடியும்' என்றான்.

இக்கூற்றுக்களை அவதானிக்கும் பொழுது ***'நமது கலை - கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற வெளிப்பாடான செயற்பாடுகள் திணிப்புக்களாகக் கருதப்படுவது மட்டுமல்ல இவை எமக்கெதிராகவும் கிளர்ந்தெழுகின்றன'***. இது யாரின் தவறு? சிந்திக்கவேண்டியது! ஞானியின் இந்த முடிவுக்கான காரணங்களை அவரது பெற்றோருக்கு எடுத்துக்கூறி, அவரின் நிலையை புரிந்து கொள்ளும்படி வேண்டலாமென்ற எதிர்பார்ப்புக்களுடன் ஞானியிடமிருந்து விடைபெற்று, அவ்விடுதியின் படிகளில் இறங்கும் பொழுது, ஒரு புதிய, மிகக்கனமான கவலையுடன், எனது பத்துவயது மகளின் எதிர்காலம் பற்றிய புதிய சுமைகளைச் சுமந்துகொண்டு வீடுநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றேன்.

□□□




By
Thevathasan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நா.கண்ணன்

குட்டிச்சுவர் ஓரமாக ஒரு கழுதை நின்றிருந்தது. சுள்ளென்று உறைக்கும் வெய்யில் அதன்மேல் பால் நிலவு பொழிவதுபோல் அது நின்றிருந்தது. எதுவும் தின்னாமல், எந்த நோக்கும் இல்லாமல், குட்டிச்சுவரையே பார்த்துக் கொண்டு வெகுநேரமாக நின்றிருந் தது. அதன் வயிற்றுக்கு அடியில் மட்டும் நீள்வதும், சுருங்குவதும் நடந்து கொண்டு இருந்தது. சின்னச்சாமிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இம்மாத்தண்டம் நெசமாகவே இருக்குதா என பெருத்த ஆவலில் லயித் துப்போயிருந்தான்.

"கிளுக்" என்ற சிரிப்பு அவன் லயிப்பை குலைத்தது. பெண்ணின் சிரிப்பு அது என்று உணர்ந்தவுடன் ஒருவித வெட்கம் கலந்த கோணல் அவனுள் எழுந்தது. பக்கத்து வீட்டுதிண்ணையைப் பிரிக்கும் தட்டியின் ஊடாக மீனாட்சி சிரித்தாள்.

"என்னத்த, அப்படி வச்ச கண்ணு விடாம பாக்கற?" எனக்கேட்டாள்.

மீனாட்சி இவனைவிட பெரியவள். எஸ்.எஸ்.எல்.சி தேறிவிட்டு வீட்டில் சும்மா இருக்கும் சமஞ்ச பெண் அவள். அவள் அப்படிக் கேட்டது சின்னச்சாமியின் கூச்சத்தை இன்னும் அதிகமாக்கியது. இவனும் கெக்க, பிக்கவென சிரித்தான்.

அவள் ஒன்றும்தெரியாதவள் போல் மீண்டும் கேடடாள், "அந்தக் கழுதையில் அப்படி என்னதான் சுவாரசியமா இருக்கு, சாமி?"

சாமிக்கு உண்மையைச் சொல்ல வெட்கம். அவளைப் பார்க்காம கத்தினான், "என்ன இருக்குதா? நீயே ஓங் கண்ணால பாத்துக்கோ, எனக்கு வேல கிடக்கு" என்று சொல்லிவிட்டு தெருவில் ஓடிவிட்டான்.

மீனாட்சி கழுதையை பார்த்துக் கொண்டு இருந்தாள்.



அதற்குள் பாண்டி, நாகன், துரைச்சாமி, குட்டைமணி சூழ சின்னச்சாமி தெருவில் சத்தமாக பேசிக் கொண்டு வந்து கொண்டு இருந்தான். பசங்கள் தான் கழுதையைப் பார்ப்பதை பார்த்து விடுவார்களோ என்ற பயத்தில் மீனாட்சி கதவின் இடுக்கில் நழுவினாள்.

"டேய் மடப்புரம் போய் கொடுக்காப் புளி பறிப்போண்டா" என்றான் நாகன்.

"இல்லடா, ஆத்து மணல்ல போய் கபடி விளையாடுவோம்டா" என்றான் பாண்டி.

"கபடி விளையாடற நேரத்தைப்பாரு, உச்சிவெய்யிலே சுடுமணல் குண்டியைக் காய்ச்சிடும்டி" என்றான் துரைச்சாமி.

கபடி விளையாடும் ஆசையைவிட்டு கோஷ்டி மடப்புரம் நோக்கு நகர்ந்தது.

"ஏலெ, சின்னச்சாமி, எண்ணை தேய்ச்சு முழுகணும் டோய், எங்கே ஊர் சுத்தக் கிளம்பிட்டே?" என்று காலையிலிருந்து பாடும்பாட்டை ஆத்தா பாடும் போது கோஷ்டி தெரு முனையைக் கடந்து இருந்தது.

"மடப்புரம் தென்னந்தோப்புக்கு பக்கத்துலே நிறைய கொடுக்காப்புளி மரம் இருக்குடா, பழம்னா அது பழம்! இந்த புதூர்காரப் பசங்கெல்லாம் அங்கே பொறக்கிட்டு வந்துதான் ஸ்கூலு வாசல்ல விக்கறாங்க. நம்ம கதியாப்போனா அவைஞ்ஞ வரதுக்கு முன்னாடி பொறக்கிடலாம்" என்று சொன்னான் நாகன். அவன் பேச்சு அவன் சப்புக்கொட்டும் எச்சியில் ஊறிச்சிதறியது.

எல்லோரும் வேகமாக நடையைக் கட்டினர். ஆத்தைக் கடப்பதற்குமுன் முனியாண்டி கோவில் ஆலமரத்தைக் கடக்க வேண்டும். வெய்யில் நேரத்தில் முனிகள் உலவுவதாய் அப்பத்தாயி சொல்லியிருக்கிறாள். எல்லோருக்கும் உள்ளுக்குள் பயம் தான். காட்டிக் கொள்ளாமல் நடந்தனர். பயத்தை மறைக்க இன்னும் சத்தமாக உரையாடினர்.

கோவில் மண்டபத்தில் அரைகுறை தூக்கத்தில் இருந்த பூசாரி, "பொசங் கெட்ட பசங்களா! ஏண்டா காட்டுக் கத்தல் கத்தறீக" என்று சொன்னதுதான் தாமதம் பசங்கள் ஓடத்தொடங்கி விட்டனர்.

***

காலையில் தவறிய எண்ணெய் முழுகல் மாலையில்தான் வாய்த்தது சின்னச்சாமிக்கு. எண்ணெய்ப்பிசுக்கேறிய கோமணம் முழுவதையும் மறைக்க கஷ்டப்பட்டது. ஆத்தா தலையில் சீகக்காய் பொடியை வைத்து கர, கரவென தேய்த்தாள். காரம் கண்ணில் இறங்கியது. குய்யோ, முறையோ எனக் கூச்சல் போட்டான் சாமிக்கண்ணு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளசி சலூன்

முடி வெட்ட **40Frs** மட்டுமே

சிகை அலங்காரத்துக்கு
பாரிசில்
சிறந்ததோர் ஸ்தாபனம்

**அகத்தின்
அழகு
முகத்தில்!**

**உங்கள்
முகங்களை
மேலும் மேலும்
அழகூட்ட
இன்றே நாடுங்கள்
பாரிசிலுள்ள**

# THULASI SALOON

**65, PASSAGE BRADY
75010 PARIS**

**M° : CHATEAU D'EAU**

# சாட் சலூன்

# CHART SALOON

சிகை அலங்காரத்துக்கு **40Frs** மட்டுமே!

**28, RUE LABAT, 75018 PARIS**

**TEL: 01 42 64 12 03**

M° : MARCADET POISSONNIERS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏண்டா, அடிபட்ட நாயி மாதிரிக் கத்தற, கண்ண இறுக்க மூடுன்னு மூணுதரம் சொன்னேனே?" என்றாள் ஆத்தா.

"சீக்கிரம் தண்ணியை ஊத்து ஆத்தா,கண்ணுஎரியுது"என்று துரிதப்படுத்தினான் சாமிக்கண்ணு.

"என்னத்த, தண்ணிய ஊத்தறது? எண் ணெய் போக வேண்டாமா?" என கூவிக்கொண்டே தலையில் செம்பு, செம்பாக தண்ணியை ஊத்தினாள். "காலேலே வந்திருந்தா, நின்னு, நிதானமா முழுகலாம், இப்ப எனக்கு கஞ்சி காச்சர அவசரம், சரி, சரி எந்திரி முடிஞ்சாச்சு" என்று ஒருவழியாய் குளியலை முடித்து வைத்தாள் ஆத்தா.

அவள் கையில் துண்டை எடுக்கவும், மீனாட்சி கொல்லைக்கு வரவும் சரியாக இருந்தது.

"என்னத்துக்கு, இந்த சத்தம் போடறான். ரெண்டு ஊரைக் கூட்டிடுவான் போலருக்கு!" என்று ஆச்சரியப்பட்டாள் மீனாட்சி.

"வாடியம்மா, என் கண்ணாட்டி! நீயே இந்த சாமிக்கு கொஞ்சம் தலையைத் தோட்டி விடு. வேலை தலைக்கு மேலே இருக்கு" என்று நழுவினாள் ஆத்தா.

"ஓய் ஆத்தா, நீயே தோட்டிவிடு, மீனாட்சி எதுக்கு?" என்றான் சாமிக் கண்ணு.

"அடேங்கப்பா, வெக்கத்தப்பாரு, மாப்பிள்ளைக்கு" என கேலி பேசினாள் மீனாட்சி.

"அட சும்மா கிடடோய், மீனா தோட்டினா என்ன? ஒனக்கு மீசை மொளச்சிடுச்சோ?" எனக்கேட்டவாறு அடுப்படுக்குள் போய்விட்டாள் ஆத்தா.

சின்னச்சாமி, சின்னச்சாமி என்று எல்லோரும் கூப்பிட்டாலும் சாமிக்கண்ணு அடுத்தவருடம் எஸ்.எஸ்.எல்.சி எழுதப் போகின்றான்.

ஆனாலும் அவனது நண்பர்கள் எல்லாம் சின்னகிளாஸ் படிப்பவர்கள் தான். ஐந்து வயதுவரை அரை டிராயர் கூட போட மறுத்துவிட்டான். இப்போதுகூட இவனது அரை டிராயரில் குண்டிப்பாகம் முழுவதும் ஓட்டையாய்தான் இருக்கும். எப்படித்தான் அங்கு ஓட்டை பண்ணுகிறான் என அறியமாட்டாமல் முழிக்கிறாள் ஆத்தா. இவனுக்கு வயது ஏறுவதை வீட்டில் யாருமே பொருட்படுத்துவது போல் தெரியவில்லை.

மீனா தோட்டிவிட்டுக் கொண்டே அவனது கொடுக்காப்புளி மகாத்மியத்தைக் கேட்டாள். ஏதோ புலிவேட்டை ஆடிவந்தது போல் அவனும் விலாவாரியாக சொல்லிக்கொண்டு வந்தான். அவளும் எல்லா இடமும் தோட்டிவிட்டு கோவணத்தை அவுத்து விட்டாள். அப்போதுதான் அவனுக்கு தான் ஒரு ஆண் என்ற ஞாபகம் வந்தது. கோவணத்தை அவளிடமே விட்டுவிட்டு வீட்டுக்குள் ஓடிவிட்டான் சாமிக்கண்ணு.

"டேய், முழுசா இன்னும் தோட்டலேடா" என்று கத்தினாள் மீனா.

"ஏய்! அங்க என்ன பண்ணிகிட்டு இருக்க. சவுக்காரம்போட்ட துணியெல்லாம் அப்படியே கல்லிலே கிடக்குது. அங்கென்ன குதியாட்டம்?" ஆச்சியின் குரல் அடுத்த வீட்டிலிருந்து வந்தது.

" டீ மீனா, வீட்டுக்கு ஓடுடி! ஆச்சி! கோவிச்சுக்கப்போகுது! அதுக்கு மூக்கு முனிலே கோவம் நிக்கும். போகாட்டா எல்லாரையும் ஏசும், ஓடு, ஓடு" என்று அவசரப்படுத்தினாள் ஆத்தா.

"ஆனா, அவனுக்கு இன்னும் தோட்ட வேண்டிய இடம்பாக்கி இருக்கு" என்று இழுத்தாள் மீனா.

"சரி, சரி கிடக்கட்டும். நீ ஓடுத்தா. ஆச்சி திட்டும்!" என்று மீனாவை அனுப்பிவைத்தாள் ஆத்தா.

***

கோடைவிடுமுறை வந்துவிட்டது. சின்னபசங்களையும், நாய்களையும் தவிர தெருவில் நடமாட்டம் இல்லை. சாமிக்கண்ணு நூலகத்திலிருந்து கொண்டுவந்த புத்தகமும் கையுமாக வாசலில் உட்கார்ந்து இருந்தான்.

கருப்பி என்கின்ற பெட்டை நாயைச் சுற்றி ஒரே கூட்டம். ஆண் நாய்கள் தினவெடுத்து ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக்கொண்டு கருப்பியை வசியம் செய்து கொண்டு இருந்தன. கருப்பியோ யாருக்கும் இடம்கொடுக்காமல் எல்லோரையும் பல்லைக்காட்டி முறைத்தாள். நாய்கள் அதைக்கண்டு கொள்ளுவதாய் இல்லை. கந்தன் புத்தி கவுட்டுலே என ஆத்தா சொல்லுவதுபோல் அவை கருப்பியின் பின்பாகத்தையே குறிவைத்தன. இவ் அமர்க்களத்தில் சாமிக்கண்ணுவால் மேற்கொண்டு படிக்க முடியவில்லை. இந்த நாடகத்தின் முடிவுதான் என்ன? என பார்த்துவிடும் தீர்மானத்தில் நாய்களில் கவனமானான். ஓரே நேரத்தில் இரண்டு, மூன்று நாய்கள் புணர்ச்சியில் ஈடுபட்டு இருந்தன. கடி, சத்தம், உறுமல் இவைகளுக்கு நடுவே ஒரு நாய் வென்றது. கொஞ்ச நேரத்தில் ஒன்றுடன், ஒன்று கோர்த்துக்கொண்டு இருவேறு திசைகளில் நின்றன கருப்பியும் அவன் தற்காலிகத்துணைவனும்.

அப்போதுதான் அங்கு கொஞ்சம் அமைதி திரும்பியது. நாய்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில் எங்கிருந்தோ வந்தது எறிகல் ஒன்று. கருப்பியின் மார்பில் பாய்ந்தது. அவ்வளவுதான் அது ஒருபுறம் இழுக்க, அதன் துணைவன் ஒருபுறம் இழுக்க, அவை துன்பத்தில் தவித்தன. இன்னொரு கல் விழுந்தது.

"டேய், சாமி கல்லு எறியறவனை நிறுத்தச்சொல்லுடா. பாவம்டா, நாய். நாளைக்கு குட்டிபோட்டா எல்லாரும் தான் கொஞ்சுவாங்க அதுகளை" என்ற குரல் பக்கத்து தடுப்பின் வழியாக வந்தது.

"இந்த அசிங்கத்தையெல்லாம், இம்மா நேரம் பாத்துக்கிட்டு இருந்தியோ" என்றான் சாமி கூச்சமுடன்.

"ஏன்? நீ பாக்கறச்சே, நான் பாக்கக் கூடாதோ?" என்றாள் மீனா. அத்தோடு நிற்காமல்,ஆத்துலே தண்ணி எடுக் கறப்போ கோவில் காளை பாயற தைக்கூட பாத்து இருக்கேன். எம்மாம் பெரிய உடம்பு. பாவம், பசு மாடு! என்றாள் மீனா.

"நான் வீட்டுலே செனை எடுக்க விடும் போது பாத்து இருக்கேன். கோனாரு தோதா பசுமாட்டை புடிச்சிப்பாரு. இல்லாட்டா, கட்டுத்தறியை விட்டு ஓடிப்பூடும், ஆமாம்" என்றான் சாமிக்கண்ணு.

"மாட்டுக்கு எப்படி இருக்கும்?"

"எந்த மாட்டுக்கு?"

சரி, முதல்ல இந்த நாயைக்கவனி! அடிபட்டே செத்துடும் போலருக்கு" என்று சொல்லிவிட்டு மீனா வீட்டுக்குள் போய் விட்டாள். தெரு முனையில் கந்தசாமி பிள்ளையின் குரல் கேட்டது. "எழவு எடுத்த பசங்களா? இந்த நாய்களுக்கும் சொரணை இல்ல, இந்த பசங்களுக்கும் சொரணை இல்லை கல்லடியாதீங்கடா" என்று சொல்லிக்கொண்டே பக்கத்து வீட்டில் நுழைந்தார்.

***

நவநீத சுந்தரி சமைஞ்ச சேதியை சொல்லிவிட்டு, பூப்புனித நீராட்டுவிழா பத்திரிகையை வைத்துவிட்டு போயிருந்தாள் செங்கமலம்.

மீனா, முத்து, சாந்தா எல்லோரும் வாசலில் பேசியபடி நின்றிருந்தனர். சாமிக்கண்ணு, அப்போதுதான் வீட்டினுள் நுழைந்தான்.

"சாமிக்கு ஏத்த பொண்ணு யாருன்னு சொல்லு பாப்போம்!" என வம்பை ஆரம்பித்தாள் முத்து.

"நவநீத சுந்தரி தான்! இவன் ஒரு சுந்தரன், அவள் ஒரு சுந்தரி!" என சினிமா ஸ்டைலில் பேசினாள் சாந்தா.

"யாரா இருந்தாலும் அதிர்ஷ்டக்காரி தான்!" என சாமியை வைத்தகண் வாங்காமல் பேசியபடியே சொன்னாள் மீனா.

"உங்களுக்கு வேற வேலையே இல்ல" என அலுத்துக்கொண்டு கருவாடுவாசனை உள்ளே இழுக்க சாமிக்கண்ணு அடுப்படியில் நுழைந்தான்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிக்கண்ணு பேனா ரிப்பேர் என்று இறங்கி விட்டால் நேரம்போவதே தெரியாது. முதலில் நிப்பைக் கழட்ட வேண்டும். நிப்பையும், அதைத்தாங்கும் கட்டையையும் தண்ணீரில் ஊறப்போட வேண்டும். பிறகு பேனா கழுத்தை கழட்ட வேண்டும். மீதமிருக்கும் மசியை, மசிக்கூண்டினுள் விடவேண்டும். பின் எல்லாவற்றையும் அரைமணி நேரமாவது ஊற வைக்க வேண்டும். விடுமுறைநாட்களில் ஒரு நாலைந்து பேனாவாவது ரிப்பேர் செய்வான். அப்பா, அக்கா, அடுத்த வீட்டு அண்ணா, நண்பர்கள் இப்படி யார் கொடுத்தாலும் கழுவி, சுத்தம் பண்ணிக் கொடுப்பான் சாமிக்கண்ணு. அன்றும் காரியமே கண்ணாக இருந்தான். சாப்பாட்டுக்கு பின் வரும் உறக்கத்தில் கிராமமே உறங்கிக் கொண்டு இருந்தது.

"உஸ்... உஸ்... சாமி இங்க கொஞ்சம் வரியா?" மீனா மெதுவாய் கூப்பிட்டாள். யாரையும் எழுப்பிவிடும் நோக்கம் அதில் எள்ளளவும் இல்லை.

"என்ன விசயம்?" என்றான் சாமி.

"கிட்டவாயேன் சொல்லறேன்!"

"என்ன விசயம்" என்று வாசலுக்கு வந்தான் சாமி.

"சாமி நிறைய புத்தகம் சேந்தியிலே கிடக்கு. எடுத்தா படிக்கலாம். வீட்டுலே யாரும் இல்ல. இந்த ஏணியை எடுத்து, சேந்திக் கதவை திறந்து கொடுப்பியா? உனக்கு பிடிச்ச விக்கிரமாதித்தன் கதை கூட இருக்கு" என்று ஆசை காட்டினாள் மீனா.

"சரி, சரி, வா! பேனா ஊறட்டும்" என்று அவள் வீட்டுக்குள் நுழைந்தான் சாமி.

ஏணியை மெதுவாய் மாடியிலிருந்து இறக்கி ரேழிக்குக்கொண்டு வந்தான். சேந்திக்கதவுக்கு கீழே வைத்து மெதுவாய் ஏறினான். கதவைத்திறந்தான் சேந்தி வாசனை மூக்கை அடித்தது. தும்மினான். "சரி மேலே வா!" என்றான் சாமி.

"இல்ல, நீ கீழே வந்து நில்லு. நான் ஏறறேன். தடுக்கி விழுந்தா நீ புடிச்சிக்கிலாம் பாரு" என்றாள் "பயந்தாங்கொளி" என்று சொல்லியவாறே கீழே இறங்கினான்.

மெது, மெதுவாய் ஏறினாள் மீனா. அவள் பாவாடையும், தாவணியும் ஏணியில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க பிரயத்தனப்பட்டாள். "சாமி, பின்னாலேயே வாடா, கீழே பாத்துக்கிட்டே நிக்காதே" என்றாள்.

அவள் பாவாடையைத் தூக்கியபோது வாழைத்தண்டு போல் கால்கள் தெரிந்தன. பார்த்துக் கொண்டே பின் தொடர்ந்தான் சாமி. எவ்வளவுதான் கவனமாய் இருந்தாலும் ஏணியின் வழு, வழுப்பில் கால் நழுவினாள் மீனா. இவன் முகத்தை தேய்த்துக்கொண்டு அவள் பின்பாகம் இவன்நெஞ்சில் வந்து நின்றது. தலையாணியில் முகத்தை பதிப்பது போன்றதொரு மென்மையை உணர்ந்தான் சாமிக்கண்ணு. "பயப்படாதே, நல்லவேளை புடிச்சிட்டேன் அப்படியே மேலே போ!" என்றான் சாமி.

இருவரும் சேந்தியில் இருந்த புத்தகங்களை தூசிதட்டி எடுத்து வெளிச்சமுள்ள மூலையை தேர்ந்தெடுத்தனர் வாசிக்க, மீனா இருவருமே சேர்ந்து விக்கிரமாதித்தன் கதை வாசிக்கலாம் எனச்சொல்லி நெருங்கினாள். மீண்டும் அவன் தோள்களில் ஒரு மென்மை. பஞ்சு மெத்தை மென்மை. சுகமாக இருந்தது.

"சாமி, அந்த நாயி ஏன் பின்புறம் திரும்பிக்குது?" என்று சொல்லி நெருங்கினாள் மீனா.

கபக்கென்று தொண்டைக்குள் ஒரு உருண்டை இறங்கியது சாமிக்கு. ம்.. ம்.. என்றுதான் சொல்ல முடிந்ததே தவிர பதில் சொல்ல முடியவில்லை.

"நாய் விளையாட்டு விளையாடுவோமா" என்றொரு கேள்வி நின்றது அங்கு.

***

சாமிக்கண்ணு மாலையில் ஆத்தங்கரையில் நிற்கும்போது தென்றல் பல சேதிகளைச் சொன்னது அவனுள். மலர்ந்த மலர்களின் கதைகள் வந்து சேர்ந்தன அவனிடம். பட்டுப்பூச்சிகள் வானில் சேர்ந்துகூடும் விந்தை புரிந்தது அவனுக்கு.

"டேய் சின்னச்சாமி... டோய்..." என்று கூவிக்கொண்டே வந்து சேர்ந்தான் நாகன்.

"இன்னிக்கி சொல்லறேன் கேட்டுக்கோ! இனிமே என்னை சின்னச்சாமின்னு கூப்பிட்டா பல்லைத் தட்டிடுவேன்."

"ஏனாம்?"

"நான் சின்னப்பயல் இல்ல. பெரிய ஆள் தெரிஞ்சுக்கோ" என்றான் சாமி. ■

---

ந. முருகேச பாண்டியன்

## விழிப்பு

புழுதியான மாலை
மக்கிய இலைக் குப்பையில்
வண்ணத்துப் பூச்சியின் பிணம்
இறக்கை நொறுங்கிக் கிடக்கிறது
செம்மஞ்சள் சூர்ய தகிப்பு
குன்றுக்கு அப்பால்
என் சுட்டுவிரல் உயர
குரல்வளை நெரிபடக் கிடக்கிறேன்.

## வெற்றி

ஆயிரமாண்டு குகையிலிருந்து
வெளியேறி வந்தேன்.
எதிரே பரந்த நெருஞ்சிக் காடு
வறண்ட கருவேலம் புதர்
விரைத்து மறித்து நின்றது
விலகிப் போதல்
உயிரின் இயல்பல்லவே!
குத்துக்காலிட்டு
மூளையை உரைக்கத் தொடங்கினேன்
ஏதும் அற்புதம் நிகழவில்லை
திரும்பினேன்
குகை மரித்துக் கிடந்தது
உடல் குலுங்க விலங்கென
ஓரடி பாய்ந்தேன்
இனி நாலடி பின்னடைந்தாலும்
வெற்றி எனதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தை இலையான்கள்

உனது தனிமைக்குள் தப்பியோடிவிடு நண்பனே!

புன்மைகளின் ஊசிமுனையால் புண்பட்டும், பெருமனிதர் பேரிரைச்சலில் செவிடாகியுமல்லவா நான் உன்னைக் காண்கிறேன்.

மலைகளும் மரங்களும் உன்னுடன் கூடி மௌனமாகும் திறன் கொண்டவை. பரந்த கிளைகளுடன் கடலின்மேல் பரந்து, நிசப்தமாக, செவிகளைத் தீட்டி நிற்கும் நீ நேசிக்கும் அந்த மரத்தைப்போல் மாறு.

தனிமை முடியும் இடத்தில் ஆரம்பமாவது சந்தை. சந்தை ஆரம்பிக்கும் இடத்தில் ஆரம்பிப்பதோ பெரு நடிகர்களின் கூப்பாடுகளும், நச்சிலையான்களின் பேரிரைச்சல்களுமே!

மேடையேற்றுக்காரன் இல்லாவிட்டால் இவ்வுலகில் உயர்ந்தவைகள் எனப்படுபவை எவ்விதப் பெறுமானமும் அற்றவையாகின்றன. இவ்வகை மேடையேற்றுக்காரர்களுக்கு மக்கள் பெரிய மனிதர்கள் என்று நாமம் சூட்டுகின்றார்கள். படைப்பாளிதான் மூலாதாரம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாது மேடையேற்றுக்காரர்களின்பாலும், உயர்நோக்கப் பாசாங்கு நடிகர்களின் பாலுமே கவனம் செலுத்துகிறார்கள்.

ஆனால் நவீன பெறுமானங்களைப் படைப்பவர்களைச் சுற்றியே உலகம் அநாமதேயமாகச் சுழல்கின்றது.

ஜனங்களோ, நடிகர்களையும் புகழையும் சுற்றி வலம் வருகின்றார்கள். இவ்வாறுதான் சுழல்கிறது உலகநியதி.

நடிகனிடம் உளக்கூர்மையுண்டு. ஆனால் அவனின் பிரஞ்ஞையில் அறன் இல்லை. தனது நம்பிக்கையை ஆணித்தரமாகத் திணிப்பதற்கு அனுமதியளிக்கும் அனைத்தையும் அவன் நம்புகிறான். அவன் தன்னை மட்டுமே நம்புகிறான்.

நாளை ஒரு புதிய விடயத்தை அவன் நம்புவான், மறுநாள் இன்னொன்றையும், அதன் பின்னர் புதிதாக இன்னொன்றை யும் அவன் நம்புவான். எப்போதும் மாறத் தயாராயிருப்பது அவனுள்ளம். சனக்கூட்டத்தைப் போன்று அவனின் உளநிலையும் உறுதியற்றது.

ஆதாரப்படுத்த முனையும் போதெலலாம் அவன் ஆற்றிமுடிப்பது குழப்பங்களையே. உணர்த்துவதாகக்கூறி அவன் உள்ளங்களில் விதைப்பதோ பைத்தியக்காரத்தனங்களன்றி வேறெவையுமல்ல. அனைத்து நியாயங்களிலும் உயர்ந்ததென அவன் கருதுவது குருதியை மட்டும்தான்.

கூர்மையான செவிகளுக்குள் மட்டும் புகக்கூடிய உண்மைக்கு அவன் பொய்யென்றும், வெறுமையென்றும் நாமமூட்டுகிறான். உலகெங்கும் பேரிரைச்சலிடுபவர்களின்பால் மட்டுமே அவன் உண்மையான விசுவாசம் கொள்கிறான்.

எடுப்பான கோமாளிகள் ஏராளமாகக் கூடிநிற்கும் சந்தைவெளியில் சனங்கள் பெரிய மனிதர்களுக்குப் புகழ்பாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள்தான் அவர்களின் தற்காலிகத் தலைவர்கள்.

காலம் அவர்களைத் துரத்துகின்றது, ஆகவேதான் அவர்கள் உன்னைத் துரத்துகின்றார்கள். நீ ஆமென்று கூறுகின்றாயா, அன்றி இல்லை என்று கூறுகின்றாயா என்பதையறிவது மட்டுமே அவர்களின் நோக்கம். ஆதரவுக்கும் எதிர்ப்புக்கும் இடையிலா உன் இருக்கையைப் போடப்போகின்றாய்? அவதானம் கொள்!

**மூலம்: நீட்சே**
**தமிழில்: வாசுதேவன்**

உண்மையை நேசிப்பவனே! உன்னைத் துரிதப்படுத்தும் இந்தப் பிடிவாதக்காரர்களின்மீது சினம் கொள்ளாதே. எந்த உண்மையும் இதுவரையும் ஒரு பிடிவாதக்காரனின் கையில் சிக்கிக்கொண்டதில்லை.

அவசரப்புத்திகளின் பிடியிலிருந்து தப்பியோடி. உன் தனிமைக்குள் சென்றுவிடு. சந்தையில் தரித்து நின்றால் "ஆம்"களினாலும் "இல்லை"களினாலும் துன்புறுத்தப்படுவாய்.

ஆழமான கிணறுகள் தமது அனுபவங்களைத் தாமதித்தே உள்வாங்குகின்றன. ஏனெனில், அவற்றின் அடிமட்டத்தில் வந்துவிழுபவற்றை அறிய ஆழம் காரணமாக அவர்களுக்கு அதிகநேரம் தேவைப்படுகின்றது.

சந்தைகளிலிருந்தும், புகழாசைகளிலிருந்தும் விலகிய தூரத்தில்தான் அனைத்துப் பெருமையுடையபடைப்புகள் உருவாகின்றன. ஆம், சந்தைவெளியிலிருந்தும், புகழாசைகளிலிருந்தும் விலகிய தூரத்தில் தான் நவீன பெறுமானங்களை ஜனனித்தோர் வாழ்ந்தார்கள்.

நண்பனே! உன் தனிமைக்குள் தப்பியோடு. நச்சிலையான்கள் உன்னைச் சூழ்வதை நான் பார்க்கிறேன். வேகமாகவும், பலமாகவும் வீசும் உன் தனிமைக் காற்றுக்குள் தப்பியோடிவிடு.

உன் தனிமைக்குள் தப்பியோடிவிடு. சிறுமை நிரம்பியோர்களிடையேயும், இரகத்திற்குரியவர்களிடையேயும் நீண்ட காலம் தரித்து நின்று விட்டாய். கண்ணுக்குப் புலப்படாத அவர்களின் வஞ்சகங்களிலிருந்து தப்பியோடு. உனக்கெதிராக அவர்களால் முடிந்தது வஞ்சகங்கள் மட்டுமே.

அவர்களுக்கெதிராக உன் கையை உயர்த்தாதே. எண்ணிக்கையில் அவர்கள் நிறைந்தவர்கள். அதுமட்டுமல்லாது இலையான் வேட்டையாடுவது உன் தலைவிதியல்ல.

சிறுமை நிரம்பியவர்களும், இரக்கத்திற்குரியவர்களும் எண்ணிக்கையில் அதிகமானவர்கள்.

நச்சுப்புல்லுகளும் மழைத்துளிகளும் கூட உயர்ந்த, உறுதியான கட்டடங்களைத் தகர்த்துவிட வல்லன என்பதை மறந்துவிடாதே.

நச்சிலையான்களால் நீ களைப்புற்றிருப்பது எனக்குத் தெரிகின்றது. உன் தோலெங்கும் துளையுண்டு குருதி கசிகின்றது. உனது உயர்பெருமை இதைக் கண்டு சினம்கூடக் கொள்ளவில்லை.

மிக அப்பாவித்தனமாக அவர்கள் உன்னிடம் கேட்பது உனது குருதியை. இரத்தமின்றி வெழுத்த அவர்களின் ஆத்மா இரத்தத்தாகம் கொண்டுள்ளது. அதனால்தான் அப்பாவித்தனமாக உன் நாடிகளைத் துளைக்கின்றார்கள்.

ஆனால், ஆழம் மிகுந்தவனே! சிறு காயங்கள்கூட உன்வேதனையை அதிகரிக்கின்றது. வேதனையிலிருந்து விடுபடு முன்னரே, நச்சுப்புழு மீண்டும் உன் கரங்களில் ஊர்கின்றது.

இவ்வுழக்குப் புழுக்களைக் கொன்றொழிப்பது உன் பெருமைக்கிழுக்கென நீ எண்ணுகிறாய்.

ஆனால் அவற்றின் பகைநிரம்பிய அநீதியைத் தாங்கி அனுபவிப்பதால் உனக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதை மறந்துவிடாதே.

உன்னைச் சுற்றிப் புகழ்பாடி அவை இரைச்சலிடுகின்றன. உன்தோலை அண்மிப்பதுவும் உன்குருதியை உறுஞ்சுவதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் உள்நோக்கு.

உன்னைத் தெய்வம் என்றோ அன்றில் பேய் என்றோ அவர்கள் புகழக்கூடும்.

தெய்வத்தின் முன்னால் நிற்பது போன்றோ, அன்றி பேய் முன்னால் நிற்பது போன்றோ அவர்கள் கதறக்கூடும். அதனால் என்ன? பந்தம் பிடிக்கவும், பைத்தியமாய் அலறவும் மட்டும்தானே அவர்களுக்குத் தெரியும்.

அடிக்கடி உன்னுடன் அவர்கள் அன்பு நிறைந்தவர்கள் போல் காணப்பிப்பார்கள். கோழைகளின் தந்திரத்திலிதுவுமொன்று. ஆம்! கோழைகள் வஞ்சம் நிறைந்தவர்கள்.

அவர்களின் ஒடுங்கிய ஆத்மாவில் உன்னைப்பற்றிய சிந்தனை அதிகம் எழுகின்றது. நீ நிரந்தரமாகவே அவர்களின் சந்தேகப்பிராணி. எதுபற்றி அதிகமாகச் சிந்திக்கப்படுகின்றதோ, அது சந்தேகத்திற்குரியதாகி விடுகின்றது.

உன் தவறுகளையும் தோல்விகளையும் எப்போது வேண்டுமானாலும் அவர்கள் மன்னிக்கலாம். ஆனால் உனது உயர் அறஒழுக்கங்களை அவர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

உனது ஆத்ம தூய்மையாலும், அன்பாலும் "அவர்களின் சிறுமை வாழ்க்கை பற்றி அவர்கள் அறியாமை கொண்டுள்ளார்கள்" என்று நீ கூறுகின்றாய். ஆனால் சிறுமை நிரம்பிய அவர்களோ "பெருமையுடன் இருப்பது குற்றவாளித்தனமானது" எனக் கருதுகின்றார்கள்.

நீ அவர்களுடன் தூய்மையாகப் பழகினாலும், அவர்கள் உன்னை இழிவுபடுத்து பவனாகவே கருதுகிறார்கள். உனக்கு வஞ்சகமே பதிலாகக் கிடைக்கின்றது.

உனது அடக்கமான ஊமைப்பெருமை அவர்களின் சுவைக்கு முரணானது. உன்நிலை தாழ்ந்து வரட்டுப் பெருமை காட்டினால் அவர்கள் எத்தனை மகிழ்வுறுகின்றார்கள்!

உன்முன்னால் அவர்களின் சிறுமை அவர்களுக்குப் புலப்படுகின்றது. அவர்கள் புன்மையினால் நாணுகின்றார்கள். அவர்களின் குருட்டுப் பழியுணர்வு சுடர்விட்டெரிகின்றது.

அணையும் சுடரிலிருந்து கிளம்பி மறையும் புகையைப்போன்று அவர்களின் பலமும் நீ அவர்களை அண்மிக்கும்போது போய்விடுகின்றது. அவர்கள் உன் பிரசன்னத்தில் மௌனமாகி விடுகின்றார்கள்.

ஆம், நண்பனே! என்னைச் சூழ்ந்து நிற்பவர்களின் பிரஞ்ஞையில் நீ தோற்றுவிப்பது குற்ற உணர்வையே. ஏனெனில் உன்முன்னால் அவர்கள் யோக்கியதையற்றவர்களாகி விடுகிறார்கள். அதன் காரணமாகவே அவர்களை உன்னை வெறுக்கவும், உன் குருதியை உறிஞ்சவும் செய்கின்றார்கள்.

நச்சிலையான்கள் எப்போதும் உன்னைச் சூழ்ந்திருக்கும். உனது பெருமை அவர்களிடம் நஞ்சை அதிகரிக்கும்.

தப்பியோடு நண்பனே! உன் தனிமைக்குள் தப்பியோடு! வேகமாகவும் பலமாகவும் வீசும் உன் தனிமைக் காற்றுக்குள் தப்பியோடு!

இலையான் வேட்டையாடுவது ஒன்றும் உனது தலைவிதியல்ல.

இவ்வாறு கூறினான் ஸரத்தூஸ்த்ரா.❑

---

# அலகு

இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

எனக்கு வேறுவழியில்லை
என்றும் இதனைக்
கொள்ளலாம்.

இறுதியில் ஒரு கழுகிடம்
அலகாயிருக்கும் பணியில்
சேர்ந்தேன்.

வளைவாக - தங்கமுலாமில்
மினுமினுப்பாக...
நன்றாக...
அழகாக
இருப்பதாகத்தான் சொல்கிறார்கள்
எல்லோரும்...

அசைவற்றுக்கிடக்கும்
நிணம் கொத்துவதென்றால் கூட
சமாதானமாகிவிடுகிறேன்...,
ஊசிக்காக கையைத்தூக்கித்தந்துவிட்டு
திரும்பிக்கொள்ளும் சிறுமியைப்போல
வந்து நிற்கிறவர்களையும்
பிடுங்கவேண்டியிருக்கிறதே... ?!


மன்னிக்கவேண்டும்
மன்னிக்கவேண்டும்
என்று
சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன்...,
அலகுகளில் இருக்கும் நாக்குகள்
அத்தனை தெளிவான
மொழியுடையன அல்ல... !

அவர்களுக்கு கேட்குமா
என் குரலெனக் குமைகிறேன்... !
அலகாயிருப்பதும்
நிணம் கொத்தத்தருவதும்
ஒன்றன் பொருட்டென
யார் சொல்வது அவர்களுக்கு...?!

ஐயோ...
வரலாற்றின் கையொன்றில்
வாள்முளைக்கும் அபாயமுண்டே...
எனவே...
வரலாற்றின் விதையாகப் போகும்
உங்களிடம்
சொல்லி வைக்கிறேன்...! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிழலும் ஈபிள்கோபுரமும்

கலைச்செல்வன்

வந்தேனாம் போனேனாம் என்றில்லாமல் வந்துபோன மாதிரி வளவளா வளவளா என்று அலம்பிக் கொட்டினால் இது தான் பிரச்சனை.

மனசிலை கொஞ்சம் காதல் அரும்பினால் போதும் அதை எப்படியாவது பொத்தி வைத்து விடவேண்டும் அல்லது ஒரு கயிற்றில் சுற்றி கட்டிவிட வேண்டும். பின் அந்த வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றி மேயவேண்டும்.

நான் இவளை எவ்வளவு தூரம் நம்பினேன். தப்பு. தப்பு. என்னில்தான் தப்பு.

நம்புதல்கூட ஒரு கயிற்றுக் கட்டுத்தானே.

அவளுடனான உறவு ஒரு எல்லை வரை என நான் நினைக்கவில்லை. (ஆயினும் அவள் அப்படித்தான் சொல்கிறாள்) மாறாக அது எல்லையற்று இருக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் அவளோ எனை அழைத்துப் போய் ஒரு பாதாளத்திற்குள் பொறித்துவிடப் பார்க்கிறாள்.

இதுதான் நியதி நியாயம் என்றும் கலாச்சாரம் பண்பாடு என்றும் சொல்கிறாள். அதற்கும் மேலே போய் இதுதான் அர்த்தமுள்ள, மகா அர்த்தமுள்ள வாழ்வு என்றும் சொல்கிறாள். எங்கு போய் முட்ட.

ஐயோ அறிவு கெட்ட செயல் என்று சொல்லவும் பயமாகத்தான் இருக்கிறது. அவளின் தமிழ் பற்று (?) அது நான் முழுச் சமூகத்தையுமே அறிவுகெட்டது என்று சொல்வதாக சொல்லிடும்.

எவ்வளவு அமைதியாகத் தொடங்கிய உறவு. மலையில் இருந்த ஊற்றுக் கண் போல்.

(இது எவ்வளவுதான் உண்மையாக இருந்தாலும் இப்படிச் சொல்வதிலும் ஆபத்து இருக்கிறது. நதி கடலைத் தானே அடையவேண்டும். மிஞ்சினால் நைல் மாதிரி கொஞ்சம் நீளமாகலாம். அவ்வளவு தானே என்று அவள் நியாயப்படுத்தி விடலாம்)

வேண்டாம். ஒன்றுமே வேண்டாம்.

நான் பேசுவது அவளுக்குப் புரியவில்லை. அவள் பேசுவது எனக்குப் புரியவில்லை. அவ்வளவுதான்.

அதெப்படி முடியும். மற்றெல்லா விடயங்களைப்பற்றி பேசும்போது புரிந்தது, இந்த விடயத்தில் மட்டும்...?

இல்லை. அவளுக்கு சமூக அங்கீ காரம் தேவைப்படுகிறது. இந்த மரத்துப் போன உள்ளூர உக்கிப்போன அடக்கு முறைச் சமூகத்தின் அங்கீகாரம்.

அம்மா அப்பாவைத் திருப்திப்படுத்துவதென்றால் அது என்னது?

அவர்களின் திருப்தி எல்லாம் இந்த சமூகத்தின் பெருமைப் புலம்பலில்தானே அடங்கிக் கொள்கிறது.

இந்தப் பெருமை எல்லாம் விட்டு, உள்ள யதார்த்தத்தில் வாழ்வோம் என்றால், உது யதார்த்தம் இல்லை. எல்லோரும் என்ன செய்கிறார்களோ அதுதான் யதார்த்தம் என்கிறாள். தமிழ்(?) நல்ல வளமான மொழிதானே. இந்த யதார்த்தத்தையும் எங்கு வேண்டுமானாலும் பொருத்தி நிலைப்படுத்தி விடலாம்.

வேண்டாம். ஒன்றுமே வேண்டாம். இன்றுடன் இதற்கு ஓர் முடிவு.

தொடக்கம் என்ற புள்ளி எங்காவது இருந்தால் அல்லவா முடிவு.

அவளுடன் இரண்டு மணி நேரம் ஏவுகணை யுத்தம் நிகழ்த்தியதால் என் மூளை கொதித்துக் கொண்டிருந்தது. கத்திக் கத்திச் சொன்னேன். தயவு செய்து என்னைக் கட்டிப் போடாதீர்கள். பறந்து திரியும் என் மனதைப் போல் என்னைச் சுதந்திரமாக வாழவிடுங்கள்.

என் ஆதங்கத்தை விளங்கிக் கொண்டாளோ என்னவோ, உறுதியாகச் சொன்னாள் "இன்று மட்டும் உங்களைத் தனியாகச் சந்திக்க விரும்புகிறேன். தயவு செய்து வருவீர்களா?" என்று.

"நிச்சயமாக வருகின்றேன்"

"எங்கே?"

"ஈபிள் ரவர்க்கடியில்."

அவள் வீடு அதன் அருகில் இருந்ததால் நாம் அங்கே சந்திப்பதுதான் அதிக வழக்கம்.

படி இறங்கும்போது நினைத்தேன். என்ன! இன்றுடன் எனக்கும் இவளுக்குமான உறவு முறிந்துபோகுமா என்று. நினைத்துப் பார்க்க கொஞ்சம் வருத்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தான் இருந்தது. நான் உண்மையில் அவளுடனான உறவை முறித்துக் கொள்ள எண்ணவில்லை. அவளுடன் இன் னும் இன்னும் பழகவே விரும்பினேன். அத ற்காக ஒரு கட்டுப்போட விரும்பவில்லை. அவ்வளவுதான்.

மெத்றோவில் போக மனம் இல்லை. கால் போன போக்கில் எங்காவது அலைய வேண்டும் போல் இருந்தது. மலை அருவி போல் மாடிகளின் நடுவே பெருகிக் கொண்டிருந்தேன்.

"உலகத்திலை எல்லாரும் ஒரே மாதிரி இருக்க உங்களுக்கு மட்டுமேன் இப்படி ஒரு விசர்."

அப்படி அவள் கேட்டது மனதுக்குள் என்னை மேலும் தனிமைப்படுத்தியது. குற்றம் எங்கேயிருந்தது என்பதனை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவேளை எனக்கு அது அவசியமில் லாமலும் இருக்கலாம்.

அயலூருக்குக் கூடப் போகவிடாமல் வளர்த்த அம்மா தூரதேசம் அனுப்பிய போதே இந்த அபத்தம் வந்திருக்க வேண் டும். இன்றுவரை அம்மா உயிருடன் இருக்க எனக்கு மட்டும் அம்மா என்றோ செத்துப் போனா. பத்துவருஷம். இதே மண்ணில்தான். அதுவும் என் மண் இல்லை என்கிறார்கள். பூமி முழுதும் மட்டுமில்லை முழுப் பிரபஞ்சமுமே என்னுடையதும் தான் என்றால் உனக்கு விசர் என்கி றார்கள்.

இது வரையில் பதினெட்டாவது வீடு மாறிவிட்டேன். பன்னிரண்டாவது வேலை மாறிவிட்டேன். இலங்கையில் இருந்து ஏஜென்சியால் வந்த நட்புகளும் கனடா, சுவிஸ் என்று கால்மாற நான் வெறும் சத்திரம்போல்.

நினைத்தது எதுவும் நடக்கவில்லை. கிடைத்தது எதுவும் நிலைக்கவில்லை. ஒன்றுமட்டும்தான் நிலைத்தது.'எதுவுமே நிலையானது இல்லை' உறவுகள், உண் மைகள், உணர்வுகள் எதுவுமே இல்லை. நேற்றைய எனக்கும் இன்றைய எனக்கும் மலைபோல் இடைவெளியை நான் என்று காண முற்பட்டேனோ அன்றே நான் தொலைந்தேன். இந்த சமூகத்திற்கும் எனக்கும் உள்ள உறவு பிளவுபட்டது. சொந்தங்கள் தெளிவற்ற பனிமூட்டமாக. நட்புகள் ஆள்மாறிச் சுருங்க நான்மட்டும் தனியாக.

அறிவிலியாய் வாழ்வது சுலபம் என்று அனுபவம் சொன்னது. வெறுமை என்னுள் எங்கோ ஒரு மூலையில் விறைத்துப் போய் இருந்தாலும் ஒவ்வோர் கணமும் ஒவ் வோர் முகத்துடன் சிரித்துப் பேசுவ தில் ஆனந்தமாக இருந்தேன். எந்த முகமும் என் முன் கறுத்துப் போவதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. முகங் களின் மலர்வில் நான் கிறங்கிக் கொண் டேனாகிலும் இதில் எதற்காகவும் நான் என்னை இழக்கத் தயாராக இருக்க வில்லை. அவ்வளவுதான்.


ஈபிள் கோபுரத்தின் சிலுவைமுடி தெரிய என் கால்கள் அந்தப்பக்கம் வான் பாய்ந்தன. அங்கேதான் அவளை வரச் சொல்லியிருந்தேன்.

அவள் தம்பி எனக்கு ஊர் சிநேகம். அக்காமார் வீட்டிலிருந்ததால் நம் உறவு கள் எல்லாம் படலைவரைதான். இதனால் அவளை நான் ஏற்கனவே தெரிந்திருக்க வில்லை.

தம்பி ஓர் கடிதம் எழுதி இருந்தான். 'அக்காவிற்கு எங்கேயேன் பார்' என்று. குடிவெறியில்லாத குணமாயிருக்க வேண் டுமாம். நான் அவனுக்கு குடியும் வெறியும் குணமில்லை. எது வேண்டும் என்று அக் காவைக் கேட்கிறேன் என்று எழுதிவிட்டு விலாசத்தை எடுத்துக் கொண்டு அவ ளைப் பார்க்கப் போனேன்.

அவள் ஒரு 'மடம்' வீட்டில் வேலை செய்து கொண்டு ஒரு தனி அறையில் தான் இருந்தாள். நாம் சந்தித்த முதல் நாளே நீண்டநாள் பழகியவர்கள் போல பகிடி விட்டதும், முகமன்களைப் புறக்க ணித்ததும், நேரங்களையும் சம்பிரதாயங் களையும் எங்கோ பங்கருக்குள் பதுக்கி யிருந்தது.

அவள் ஊரும் உறவும் எனக்குப் பரிச் சயம் என்பதால் நான் நீண்டநேரம் அறு வைச் சிகிச்சை செய்தேன். இந்தச் சிகிச் சையில் கலியாணச் சிறையை சந்தை



யில் வாங்கி அதனுள் கைதியாய் நுளை யும் கனவை வெட்ட முயன்றேன் என்பதும் வேலியில்லா வாழ்க்கைத் துணையை உருவாக்கும் எண்ணத்தை உள்ளே வைக்க முனைந்தேன் என்பதும் ஞாபகம் இருக்கின்றது. பின்னர் நான் திரும்பி வரும்போது அவள் கூர்மையான பார்வை கொண்டவள் என்றும் வீட்டுக்கு வெளியே யும் உலகம் இருக்கின்றது என்பதை உணர்ந்தவள் என்றும் நினைத்ததும் நினைவிருக்கிறது. அதற்கு அப்புறம் எங் கள் நட்பு நீண்டது. இலக்கியம், அரசியல் எல்லாமே எங்களிடம் அரை பட்டது. கைமாறும் புத்தகங்களால் புதிய புதிய நாவல்கள் விமரிசனங்கள் எங்களுள் விளைந்தது. ஓவியக் கண்காட்சிகள் எங்கள் கண்களை விழுங்கின. பாரிஸ் தெருக்கள் எல்லாம் எங்கள் நிலா முற்ற மாகின.

இப்படித்தான் ஓர் ஓவியக் கண்காட்சி யில் கண்களை இழந்துவிட்டு அதன் பின்னேயிருந்த பூங்கா ஒன்றினுள் நுழைந் தோம். பச்சையைப் பார்ப்பதில், அடி வாங் கிய கண்கள் ஆசுவாசம் கொண்டத னால் ஓர் பெரிய மழைக்கான போர்க் கோலத்தை நாம் உணர்ந்திருக்க வில்லை.

'மொனாலிசா'வின் ஓவியம் எங்களை நீண்டதூரம் நடத்திச் சென்றது. சூழ்ந்து வந்து பற்றும் குழந்தைகள் போல் மழை அடைத்துக் கொண்டது. ஓர் அடிமரத்தடி யில் அவளின் சின்னக் குடையில் நாம் அடைக்கலமானோம். எமது மூச்சுக் காற் றுகள் மோதிக் கொண்டபோதுதான் நமது நெருக்கம் சிறிது அதிகம் என்பதை உணர்ந்தேன்.

"வானத்தை முதலே பார்த்திருந்தால் இந்த நிலைமையைத் தவிர்த்திருக்க லாம்" என்றேன்.

"நல்ல காலம். நாம் பார்க்கவில்லை" என்று மெல்லச் சிரித்தாள்.

"ஏன்?"

"இப்படியிருப்பது நன்றாக இருக்கிறது"

"தனிய நின்று தொலைக்கிறது தானே. அதற்கேன் என்னையும் சேர்த்து."

"இல்லை. உங்களுடன் சேர்ந்து நிற் பது தான்" என்று சொல்லி எங்கோ பார் த்தாள்.

எனக்குள் ஏதோ உறைவது போல் இருந்தது. காற்று சுழன்று அடித்தது. தோள்பட்டையோடு கால்களும் நனைய ஆரம்பித்தன. அவள் இன்னும் சற்று நெருக்கமானாள். நான் குடையை இறுக் கிப் பிடித்துக்கொண்டே நினைவை எங் காவது மாற்ற முனைந்தேன்.

வெறுவான வெளிமீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை வந்து சீறும்
வெறிகொண்ட புயல் வந்து
கரகங்கள் ஆடும்.

இப்போ வீசும் புயல் எந்தப் புயல்? என்னை இந்தாட்டம் ஆட்டுகின்றதே. அன்று முழுக்க நான் நித்திரையே கொள்ளவில்லை. தூறல் மழைக்குள் நனைந்து கொண்டே பாரிஸ் தெருவெல்லாம் திரிந்தேன். தலையால் தண்ணீர் வடிய, கண்களைக் கூசிக் கீழே பார்க்கும் மின்விளக்குகளுடனும், இரவில் சிலிர்த்து இரகசியமாய்க் குசலம் விசாரிக்கும் மரங்களுடனும் பேசுவது மனசுக்கு இதமாக இருந்தது.

அவள் என்னைக் காதலிக்கிறாளா? ஒரு நூறு தடவை எல்லாவற்றையும் கேட்டுப் பார்த்தேன். மரம், கொடி, மண், ஈபிள் கோபுரம், வெள்ளம் எல்லாமே ஆம், ஆம் என்றன.

அதனால் என்ன தாராளமாகக் காதலித்துவிட்டுப் போகட்டுமே.

ஆயிரம் சமாதானம் சொல்லியும் முடியவில்லை.

உனக்கு உது பிரச்சினையில்லை.

என் உள் மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது.

கேள்விகளும் பதில்களும் என்னுள் யுத்தம் நிகழ்த்தின. நான் எனக்குள் குத்திக் கிழிக்கப்பட்டேன். அந்தக் காயங்கள் ஒவ்வொன்றும் அவளை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து நுணுகி நுணுகி ஆய்வறிக்கைகளைத் தயார் செய்து கொண்டிருந்தன.

முடிவில் எனக்குள் ஒரு முடிவுக்கு வந்தேன். பிரச்சினை என்னில்தான். நானும் அவளை அதிகமாக நேசிக்கிறேன்தான். அது அவளின் நேசிப்பி லிருந்து எந்த வகையிலும் குறைந்த தல்ல. வளியின் இருகூறுகள் சேராமலா பூமி நனையும்.

மறு நாள் மாலையும் போன் பண்ணினாள்.

"சந்திக்கவேண்டும்போல்இருக்கிறது"


"சந்திக்கலாமே"

அவளின் பார்வை என்னிடம் எதையோ எதிர்பார்ப்பதாக இருந்தது. நான் வழமை போல சர்வசாதாரணமாகத் தானாம். ஈபிள் கோபுரத்தின் நிழல் நீள நீள எங்களது பேச்சும் நீண்டது. அவள் இனியும் பொறுக்கமுடியாது என நினைத்தாளோ என்னவோ.

"உங்களை ஒன்று கேட்கலாமா?" என்றாள்.

"தாராளமாக"

"நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா?"



"யாரையாவா? எத்தனை பேரை. மரம் செடி கொடிகள் உட்பட."

மௌனம் (சில கணங்கள்தாம்.) நீண்ட மௌனம்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"சும்மாதான். அப்போ யாரைக் கட்டிக் கொள்வீர்களாம்."

"யாரையுமே இல்லை."

அவள் அதிர்ந்தது போல் இரு கைகளையும் ஊன்றி சற்றே விலகி இருந்தாள். நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே எனப் பார்த்தேன்.

அர்த்த புஷ்டியுடன் "ஏன்?" என்றாள்.

"ஏன் கட்ட வேண்டும்?" திரும்பிக் கேட்டேன்.

அவள் சிறிது நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். பின் விறுக்கென எழும்பிப் போய்விட்டாள். நான் அசையாது அதிலேயே இருந்தேன். பின் அதிலேயே பிரண்டு படுத்தேன். இரவு பன்னிரண்டு மணிக்கு ஈபிள் கோபுர வெளியின் வெளிச்சங்கள் உறங்க, பொலிஸ் வந்து எழுப்பி வீடில்லையா? என்றான்.

எனக்கு ஒரு வீடுதான் தேவைப் படுகின்றது. அப்படி இருந்திருந்தால் இந்த உறவு இப்படி முறிந்திருக்காது என்று பட்டது. இந்த உலகமே என் வீடு என்றால் பொலிஸ்காரனும் எனக்கு விசர் என்று தான் சொல்வான். சந்தேகமேயில்லை. எழும்பி எதுவும் பேசாது நடந்தேன்.

இன்றும் அதே ஈபிள் கோபுரம். அதே இடத்திற்குத்தான் வருவதாகச் சொல்லி இருந்தேன். கோபுரத்தை நெருங்கினேன். முழங்கால்களை மடித்தபடி குந்தியிருந்தாள். முகத்தில் மகிழ்ச்சியின் ஏக்கமில்லை. இழப்பின் துக்கம் இருந்திருக்கலாம். பாறை வெடிப்புப் போல் ஒரு சிரிப்பு.

அது எனக்குள் கசிவை ஏற்படுத்தியிருக்கவேண்டும். என்னையும் மறந்து அன்பாய் அவள் விரல்களைப் பற்றினேன். அவசரப்படாதது போல் அவசரமாய் விரல்களை விலக்கிக் கொண்டாள்.

"முடிவாய் என்ன சொல்கிறீர்கள்?"

மௌனமாய்ப் போய் மேலும் கீழும் பச்சைப் பாய் விரித்த மரத்தடியில் குந்தினேன். நிலம் அதிர நடந்த வந்தவள் நின்று கொண்டே

"நான் கேக்கிறனெல்லே?" என்றாள்.

"என்ன?"

"முடிவாக"

"எதைப் பற்றி?"

"உங்களுக்கு விசர்".

"உண்மைதான்".

"எது உண்மை?"

"விசர் என்றது".

அவள் சலித்துப் போனது போல் எதிரே தொப்பென்று இருந்தாள்.

எங்களுக்குள் மௌனம் பாலமிட்டது.

எனக்குள் எரிமலை வெடித்தது. எதிர்த் தரப்பு வக்கீலின் முன் குற்றவாளிக் கூண்டில் நிற்பதுபோல் இனியும் இதில் இருக்க முடியாது எனும் முடிவுக்கு வந்தவனாய் எழுந்தேன்.

"கலியாணம் தான் எங்களுக்குள் வேண்டாம். ரெஜிஸ்ரேசன் தன்னும்...."

என்ன! அடிமை சாசனம் எழுதுவதா?

"பின்னையென்ன, அதுவும் வேண்டாம் இதுவும் வேண்டாம் அப்ப உங்களுக்கு என்னதான்வேணும்?"சலித்துக்கொண்டாள்.

"நல்ல உறவு வேண்டும். நல்ல உறவு நம்பிக்கையின் மீதுதானே கட்டப்படுகிறது."அமைதியாகச் சொன்னேன்.

"அதுக்குத்தானே கேட்கிறேன்" என்று கத்தினாள்.

"அதுக்குத்தானே சட்டமும் சடங்கும் ஏன் என்கிறேன்" நானும் பதிலுக்குக் கத்தினேன்.

அருகேயிருந்தவர்கள் அதிர்ந்து பார்த்தார்கள். பின் நாகரீகம் போர்த்தி வேறெங்கோ பார்த்து எங்களைத் தனிமைப் படுத்திக் கொண்டார்கள்.

நான் மீண்டும் அவள் கால்களை அழுத் திப் பற்றினேன்.

"நான் உன்னை விரும்புகிறேன். என்றும் நல்ல உறவாக வளர்த்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு நீ சொல்வது போல் விலங்கு மாட்டி எங்களை நாங்கள் சிறைக்குள் தள்ள விரும்பவில்லை அல்லது எங்கள் உறவில் சந்தேகப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜவ்னா ஸ்ரோர்ஸ்

# JAFFNA STORES

இந்திய இலங்கை மளிகை பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பழைய புதிய வீடியோ திரைப்படங்கள் வாடகைக்கும் விற்பனைக்கும்
உங்களை இன்பமூட்டும் இசைகானங்கள் அடங்கிய
CD, ஓடியோ கசட்டுக்கள்

மற்றும் உங்கள் வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களுக்கும் நட்புடன்
நீங்கள் நாடவேண்டிய மலிவு ஸ்தாபனம்....

## ஜவ்னா ஸ்ரோர்ஸ்

**ROON Str. 1**
**59065 HAMM**
**GERMANY**
**TEL: 02381/12614**

**FEILEN Str.8**
**33602 BIELEFELD**
**GERMANY**
**TEL: 0521/174794**

**MOBILE TEL : 0171/5316539**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டச்சிறைக்குள் பாதுகாப்பாக இருக்க விரும்பவில்லை. அவ்வளவுதான்."

அவள் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தாள். நான் தொடர்ந்தேன்.

"என்றோ உன்னைச் சந்தித்த போது இப்படி ஒரு உறவு வளரும் என்று நினைத்தோமா? இல்லை."

"எங்களுக்கு ஒருவரை ஒருவர் நேசிப்பதும் ஒருவரை ஒருவர் மகிழ்விப்பதுமான உறவு போதும். அது வளருமாயின் விருட்சமாகும். விதைகள் கொட்டும்" என்றபடி அவள் நெற்றியில் முத்தமிடக் குனிந்தேன். அவள் கண்களை மூடினாள். பின் அவள் விருட்டென எழுந்தாள்.

"நீங்கள் ஆயிரம்தான் சொல்லுங்கள். அதில் உண்மையிருக்கலாம். ஆனால் நாங்கள் இணையிறது எண்டா, சடங்கு சம்பிரதாயம் எண்டு இருக்கு. அது இல்லையெண்டால்... நீங்கள் யாரிட்டையும் போய்க் கேட்டுப் பாருங்கோ. நாங்கள் ஒன்றாகலாமோ என்று!"

அவள் போய்விட்டாள்.

"ஏன் ஒன்றாக இருக்கமுடியாது".

வாழ்க்கை என்பது ஒரு தொடர்ச்சியானது. நிலையானது என்பது எதுவுமில்லை. ஒன்றில் முடிந்தது. மற்றதில் வருவது இடையில் தரித்து நிற்க நான் தயாரில்லை. நூற்றாண்டுகளாகக் கலாச்சாரம் என்று கடந்தனவற்றையும் கட்டிப் பிடித்துக் கொண்டு. நிற்பவர்கள் நிற்கட்டும். அதற்கு நானென்ன செய்ய. பாவப்பட்ட ஜென்மங்கள் என்று பரிதாபப்பட்டுப் போவதா அல்லது எனக்கு மட்டும்தான் எல்லாமே தெரியுமாம் என்று இன்னொரு அரசமரம் நாட்டுவதா?

சூரியன் நிரந்தரமாய்த் தொலைந்து போனான். விண்மீன்கள் வெண்முகில்களுடன் விளையாடத் தொடங்கின. நான் மல்லாந்து படுத்திருந்தேன். காதல் எதுவரை நீளும் என்று கணக்குப் பார்க்க முடிய வில்லை. கலாச்சாரம் இதுவரை தான் என்று மறியல் போராட்டம் செய்து என்னைக் கொல்லப் பார்த்தது. கருமுகில் நுழைந்து வெண்முகில்களை விழுங்கி ஏப்பம் விட நட்சத்திரங்கள் ஓடி ஒளித்துக் கொண்டன. ஈபிள்கோபுர வெளியின் வெளிச்சங்கள் நாளாந்த உறக்கத்துக்குச் செல்ல, இருட்டுக்குள் இருட்டாய் நான் இனம் தெரியாமல் போனேன். எழும்பி நடந்தேன். நாலா புறமும் வழிகாட்டும் பாதைகளை நான் கணக்கிலெடுக்கவில்லை. விருட்ச விதைகளையும் வெடிக்க வைக்கும் மழைத் துளிகளைப் பன்னீர் தெளிக்க, விழிகள் வெளிகளைத் தேட கால்கள் முன்னேறிக் கொண்டிருந்தன. ●

# நட்சத்திரங்கள் உதிரா

அ.ஜ.கான்

எல்லாம் - எல்லாம் முடிந்து விட்டதா?
புதிய உலகு - புதிய ஒழுங்கு யாருக்கானது?

எல்லை மீறும் கொல்லைத் திருடன்
சென்ற திசையெங்கும் குதறப்பட்ட மனிதம்
எத்தியோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும்,
சோமாலியாவிலும். . .
ஆணவங்கள்! அதிகாரங்கள்! வாழ்ந்ததில்லை.

அவசரம் அவசரமாய் அழிக்கப்படும் அமில உடல்கள்
மனித மரங்களின் ஆணிவேர்களென
கிளைக்கும் தத்துவங்கள் வெட்டத்திணரும் ஆயுதங்கள்.

மாறிவிட்டதனைத்தையும் மாற்றுவோம்
மாற்றங்களால் குழம்பி
'மாறிடுவோம்' என்பதையும் மாற்றுவோம்

சேனை கட்டித் திசைதேடும் அறிவுக் குதிரைகளின்
கனைத்தல்கள்
சுயம் ஒளிபெற சுயநலத்தின் மைதூன ஒழுகல்கள்

உண்மையில் உண்மையில்லையெனில்
புதியவைகள் தானே உண்மைகள்

நட்சத்திரங்கள் உதிர்ந்து விட்டதாம்
கூப்பாட்டின் திசையறிவாய் தோழா!

பாறைகளின் இறுகிய மௌனமாய்
உறைந்து கிடக்கும் உன் கவனம்
'ஆஸ்டிராய்டுகளின்' அதிவேகத் தாக்குதலென
வெடித்துக் கிளம்பட்டும் நூறு க்களின் மணம்.


இனியும் வேண்டுமோ? தனிமனிதக் காடுகளுக்கு வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது!

காயத்ரியின்
புதிய தொலைபேசி அட்டை




தொலைபேசி அழைப்பில் 60 வீதம் வரை சேமியுங்கள்.

**NEW GAYATHIRY ENTERPRISE S.A.R.L.**

**210, RUE DU FAUBOURG ST.DENIS
75010 PARIS**


**TEL : 01 42 09 22 43
FAX : 01 46 07 90 34**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்சிகோ கலைஞன் செபஸ்தியானின் (Sebastián) சிற்பங்கள்

ந. சுசீந்திரன்



பேர்லினில் சர்வதேசக் கலாசாரங்களின் சங்கமமாகவும் அவற்றின் ஆடல் அரங்கமாகவும் "உலகக் கலாசாரங்களின் இல்லம்" (Haus der Kulturen der Welt) என்ற பிரமாண்டமான கட்டிடம் இருக்கின்றது. றைஸ்ராக் (Reichtag) என்ற புதிதாக இனிமேல் மத்திய அரசின் பாரளுமன்றமாகப் போகின்ற கட்டிடத்தின் முன்னால் நேர்த்தியான உயர் மரங்களுக்கிடையில் மறைந்து காணப்படுகின்றது இந்தக் கட்டிடம். தொப்பி வடிவிலான இக் கட்டிடத்தின் சரித்திரம் சோகத்துடன் தான் தொடங்குகின்றது. 1959 ல் கட்டப்பட்டு காங்கிரஸ் மண்டபம் (Kongre_halle) என்று முன்னர் அழைக்கப்பட்டது. இடையில் கட்டிட நிர்மாணிப்பின் தவறுதல் காரணமாக திடீரென உடைந்து விழுந்து ஓர் உயிரையும் பலி கொண்டது. அதன் பின்னர் இப்போது 1989 ல் இருந்து "உலகக் கலாசாரங்களின் இல்லம்" எனப்படுகிறது. உலகின் பேர் பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், இசைக்குழுக்கள், அரசியல் வாதிகள், தத்துவஞானிகள் எல்லோரும் வந்து செல்லும் இடமாக இதுவரை திகழ்ந்த இந்தக் கட்டிடம் இனி பாராளுமன்றத்தின் கன்ரீன் ஆகப்போகிறது. நாடு தழுவிய எதிர்ப்புகளுக்கப்பாலும் இது இனிமேல் துாரகண்டக் கலாசாரங்களின் திரையாக இருக்கப் போவதில்லை. இந்தக் கட்டிடத்திற்கு முன்னால் நீண்டு விரியும் காட்டிலும் புல் வெளியிலும் மனிதர்கள் மாலையில் கூடுகின்றனர். குடும்பங் குடும்பமாக நெருப்பில் உணவு சுட்டு, இறைச்சி வாட்டி குதுாகலிக்கின்றனர். சென்ற ஆண்டின் மலர் பூக்குங் கோடையில் இந்தப் புல் வெளிகளில், மரங்களுக்குக் கீழே மனிதர்களோடு மனிதர்களாக தெட்டெனத் தெரியும் தேர்ந்த வண்ணங்களில் உலோக உருவங்களும் நிலைகுத்தி நின்றன. கணனி யுகத்தின் வார்ப்பென மயக்கும் நுணுக்கமும் நேர்த்தியும் அவற்றில் மிளிர்ந்த போதும், ஓர் கலைஞனின் கைகளால் ஆனவையாய், மேகஞ்சுரண்டும் கண்ணாடிக் கட்டிடங்களோடு, ஏட்டிக்குப் போட்டியாய் நாங்களும் என்று செபஸ்ரியன் என்ற மெக்சிக்கோவைச் சேர்ந்த கலைஞனது சிற்பங்கள் தெரிந் தன.

செபஸ்ரியன் என்ற அந்தக் கலைஞன், 1947ல் மெக்சிக்கோவின் கமார்கோ என்ற இடத்தில் பிறந்தவர். கட்டிடக்கலையும் சிற்பக்கலையும் இணைந்த கலாவிகசிப்பே செபஸ்ரியனது கலாபூர்வமான ஈடுபாட்டின் மையமாக அமைகிறது. பாரிய நகர் சார் கட்டிட அமைப்பாக இருந்தாலென்ன சிறிய அறைக்குள்ளான ஒரு சிற்ப வேலைப்பாடாக இருந்தாலென்ன இந்தக் கட்டிடக் கலையையும் சிற்பக்கலையையும் இணைத்த தோற்றப்பாட்டின் சாயலை அவனது சிருஷ்டிகளிற் தரிசிக்கலாம். இவரது மிகப் பிரபல்யம் வாய்ந்த பாரிய சிற்ப அமைப்பான "புரவியின் சிரசு" மெக்சிக்கோ நகரின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அங்கு மட்டுமல்லாது உலகின் பல்வேறு நகரங்களை அலங்கரிக்கின்ற இவரது சிற்ப வார்ப்புக்கள் கிங்ஸ்டன்(ஜமைக்கா), புவனஸ் அயர்ஸ் (ஆர்ஜன்டீனா), ஹவானா (கியூபா), மொன்ரவீடியோ (உறுகுவே), றியோ டி ஜெனைறொ (பிறேசில்), அல்பு கூர்க்கோ (கனடா), டென்வர் (யு.எஸ். அமெரிக்கா), நியூயோர்க் (யு.எஸ். அமெரிக்கா), பேர்ன் (சுவிற்சலாந்து), ஒசாக்கா (ஜப்பான்) போன்ற இடங்களை அலங்கரிக்கின்றன. 1968 ல் இருந்தே உலகெங்கும் சுமார் நுாற்றி இருபது செபஸ்ரியனின் சிற்பக் கண்காட்சிகள் இடம்பெற்றுள்ளன. சர்வதேசச் சிற்பக் கலைப் போட்டிகளில் ஜப்பான், நோர்வே போன்ற நாடுகளில் பல்வேறு பரிசுகள் பெற்றிருக்கிறார். ஜப்பான் நாட்டின் சகாய், கடோமா போன்ற நகரங்களுக்கான இலச்சினைகள் இவரால் ஆக்கப் பட்டவையே. 1994ல் "பீனிக்ஸ் வில்" எனும் சிற்பம் சகாயிலும், 1996ல் "ற்சுறு" என்ற சிற்பம் கடோமாவிலும் சின்னமாக்கப்பட்டுள்ளன.

மெக்சிக்கோவின் பிரபல நாவலாசிரியரும் எழுத்தாளருமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்லோஸ் புயன்டஸ்(1929) அவர்கள் 1990 ல் லண்டனில் வைத்து இக் கலைஞன்பற்றியும் அவனது சிற்பங்களைப் பற்றியும் ஆழமான பார்வை வீச்சுடைய வார்த்தைகளில் அனேக நுண்கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அவை இக்கலைஞனைத் துருவி அறிந்து கொள்ள விரும்பும் ஒரு சுவைஞனுக்கு உதவியளிப்பவை.

இன்று நாம் "செபஸ்ரியன் என்ற கலைஞனும் நவீனத்துவமும்" என்பது பற்றித் தான் பேசுகிறோம். ஆனால் இக் கலைஞன் உண்மையில் பின் நவீனத்துவக் காலத்திற்குரியவராகவே தெரிகிறார்.

தேவைகள், உற்பத்தி, நுகர்வு என்ற பின்னிய ஒரு முடிவற்ற சுழல்வட்டம். "இதுவே நீதி" என்பதற்காகவோ அல்லது ஒரு அரசியல் தத்துவத்திற்காகவோ ஆற்றப்படும் பயனற்ற சேவைகளும் கூட அச்சுழல் வட்டத்திற்குரிவை தான். அச் சக்கரத்தின் கைதிகளாகி எல்லாவிதமான அனுபவங்களையும் பெற்றுவிட்டதாகவும் அதனால் களைத்தும் இழைத்தும் போய்விட்டதாகவும் வித்தியாசமாக எண்ணுகின்ற போக்கு பின் நவீனத்துவத்துக்குரியதே.

தன் ஆக்கங்களுக்கு செபஸ்தியன் இரும்பு, அலுமினியம், மற்றும் தடித்த மட்டை, தொழிற்சாலைப் பொருட்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்கிறார். அவை வண்ண நிறங்களிற் தோய்க்கப்படுகின்றன. குயெற்சிங்கோ வர்ணங்களைவிட பௌற்றன் நிறங்களை இவர் கலைப்பொருட்கள் நெருங்கி நிற்கின்றன. அவனது காலம் நமது காலமாக இருக்கின்றது. பின்னைய கைத்தொழிலாக்க யுகத்தின் வார்ப்பாகவே அவன் இருக்கிறான். நிரந்தர மிருதுவான இளமையைக்(நவநாகரிகத்தை) காட்டும் ஒரு படிமத்தினை ஏற்படுத்துவதன் மூலம் எம்மை மயக்கும் வரைகணிதம் கொண்டவை அவன் படைப்புக்கள். எடுத்த எடுப்பில் இவரது எண்கோண வார்ப்பிலோ அல்லது அச்சிற் சுழலும் செவ்வக வடிவங்களிலோ அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடுகளில் பூரணத்துவத்தின் முழுமையை நாம் காணலாம்.

இவரது கலைவெளிப்பாடுகளில் நிறங்கள் துலக்கமாக, அப்பொருள் எப்போதும் அதிநவீனமான அதிதூய்மைசார்ந்த அதாவது சொனி கம்பியூட்டர், எலக்ரோனிக் கடிகாரம், அல்லது ஜெற் போன்று பளிச்சிடுகின்றன.

மரபைமீறிய இவரது வரைகணிதத்தின் பின்னால் புதையுண்டு மறைந்து கிடக்கும் ஒரு ஒழுங்கில்தான் செபஸ்ரியன் கலை ஆதாரப்பட்டு நிற்பதாக எனக்குப்படுகிறது. இம் மறைமுக ஒழுங்கில், கலைப்பரிமாணங்களின் பன்முகத்தன்மையும், கலைஞனது மொழியின் ஆளுமையும் நிறையவே பின்னிக் கிடக்கிறது...

பட்டினம், பாலைவனம் என்ற இரு எல்லைகளுக் கிடையிலானவை செபஸ்ரியனின் சிற்பங்கள். வரலாற்றுக்கு முற்பட்ட கால புதைகுழிக் கல்மேடையைப் (Dolmen) போன்று கண்மதியத்திற்கு ஏதாவது ஒரு தூரத்தை நிர்ணயித்துக் கொண்டு அடையாளப் படுத்துவது மாதிரியே மிகவும் இலகுவாக அவரது சிற்பங்கள் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரலாம். என்றாலுங்கூட நகரத்தின் குழப்பத்திலும் விகாரத்திலும் அதே நகரத்தின் ஒழுங்கினையும் அழகினையும்கண்டுகொள்ளலாம். இயல்பாகவே ஈவிரக்கமற்ற கவலைக்கிடமான நாகரிகமயமாகும் போக்கின் குறியீடாகத்தான் இவ்வகை எல்லைச் சிற்பங்கள் அமைகின்றன. பட்டினத்திற்கும் பாலைவனத்திற்கும் இடைப்பட்ட எல்லையில் அமைந்துள்ள இந்த வகைச் சிற்பங்கள் ஒரு வில் வடிவில் இருப்பது போன்று அனுமானம் செய்து கொண்டால் இதில் ஒருமுனை யதார்த்தத்தினை அதனின்று இன்னொரு முனைக்கு நாங்கள் மாற்றிக் கொண்டுவிட முடியும்.

ஒரு பட்டினமொன்றில் நான் கால் பதிக்க செபஸ்ரியனது வார்ப்புக்களைத்தான் தேர்ந்தெடுப்பேன். நகர்ப்புற மக்களை தாஸ்தாயெவஸ்கி மேற்கத்தையக் காட்டுமிராண்டிகள் கூட்டம் என்பார். இந் நகர்சார் கூட்டத்தின் உருவாக்கம் பற்றி, அதனது இயக்கத்திற்கும் நடத்தைகளுக்கும் வாழ்நிலைத்தன்மைகளுக்கும் பங்கமின்றி ஒரு தெளிவான கருத்தினைத்தர வேண்டுமானால், இன்று அவஸ்தைப்படுகின்ற எங்களது இப்பிறோ அமெரிக்க நகரங்களில் நிகழ்வதெல்லாம் ஒரு கலைத்துவ அரசியல் அறுவைச் சிகிச்சையாகாதா? என்று தான் கேட்கத் தோன்றுகின்றது. ●



**நண்பர்கள்**

ஓவியம்: கிருஷ்ணராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி எழுந்து...

ஒவ்வொரு தொடக்கங்களிலும்
இடறி வீழ்கிறேன்.
மீண்டும் எழுவேன் எனும் நம்பிக்கையில்,
வீழ்வது கவலையில்லை.

யதார்த்தங்களை! மறந்து போனதில்
அல்லது
நினைக்க மறுத்ததில்
இருப்புக்கள் தலைகீழாக,
எத்தனங்கள் ஒவ்வொன்றும்
என்
சுழலிடத்தையே மாற்றியது.

தகுதி > வேலை > ஊதியம்.
சமன்பாடு குழம்பிய நிலையில்
இன்னுமொரு முதலாளித்துவத் தெருவில் நான்.

ஒரு பிராங்கெனினும்
என் ஊதியம் பெருக்க
முதலாளி குண்டியைக் கூட
துடைக்கத் தயார்.

என்னைப் பார்த்து,
இன்னொரு துடைப்பான்
சிரிப்பதாயின் சிரி

இப்போது!
யதார்த்தத்தைப் புரிந்த
ஒரு
அகதித் தொழிலாளி நான்.

-தேவிகணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரையில் ஒரு கிராமம்

பொ. கருணாகரமூர்த்தி



ஜீவிதத்தில் ஒரு தடவையேனும் நான் போயேயிருக்காத என் அப்பாவின் கிராமத்துக்குப் போவதில் முதன்முதல் சந்திரத்தரையில் கால்பதிக்கப் புறப்பட்ட நீல் ஆம்ஸ்றோங் குழுவினருக்கு ஏற்பட்டிருக்காத பரபரப்பு, ஆர்வம், திறில் எல்லாமே எனக்கும் உண்டானது.

திருச்சி விமானநிலையத்திலிருந்து பஸ்ஸ்ராண்டிற்கு டாக்ஸி ஒன்றைப் பிடித்து வந்து இரண்டு மணிநேரம் காவல் இருந்து புதுக்கோட்டை போகும் பஸ்ஸைப் பிடித்தேன். பஸ் பயணமும் மேலும் ஒரு மணிநேரம் இருந்தது. பஸ் ஸ்ராண்டில் மக்களுடன் மாடுகளும் கலந்து நின்றன. இனி வடகாட்டிற்குப் போகவேண்டும். கூட்டமாக நின்று டீ குடித்துக் கொண்டு நின்ற நடத்துனர்கள், ஓட்டுனர்கள் குழாத்தை அணுகி மெல்ல விசாரித்தேன்.

"ஏங்க... வடகாட்டுக்கு போறதுக்கு எந்த பஸ்ஸைப்பிடிக்கணும் ...?"

"அந்தா மூணாவதா நிக்குதில்ல டவுண் பஸ்... அதுல போய் குந்து..." என்றபடி பஸ் நின்ற திசையில் டீ கிளாசை நீட்டினான் ஒருவன்

பஸ் தில்லைநாயகி என்று நெற்றியில் நாமம் சூடியிருந்தது. சீட்டுக்கள் எதுவும் காலியாய் இல்லை. எல்லாமே நிரம்பி விட்டிருந்தன. பஸ்ஸின் முன்பக்கமாக ஏறி இஞ்சினுக்குப் பக்கமாக இருந்த இடைவெளியில் சூட்கேஸை வைத்துவிட்டு ஒரு பக்கமாக நின்றுகொண்டேன்.

டீயைக் குடித்து முடித்து சாவகாசமாக வெற்றிலை போட்டு சிகரட் எல்லாம் பிடித்த பின்னால் ஓட்டுனரும் நடத்துனரும் வந்து ஏறினார்கள். நம்மவூரில் பிக்குமார் செல்வதைப்போல வண்டியின் முன் வாசலால் ஏறிய ஆளுங்கட்சியின் ஏதோவொரு வட்டச் செயலர் ஒருவர் முன்சீட்டில் உட்கார்ந்திருந்தவரை சுட்டுவிரலை மடித்துக்காட்டி எழுப்பிவிட்டுத் தான் அமர்ந்துகொண்டார்.

ஒரு சிறு முணுமுணுப்புக்கூடியின்றி தனது உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டு எழுந்து அப்பாவியாக கம்பத்தைப் பிடித்துக்கொண்டு நின்றான் அவ்விளைஞன்.

வடகாட்டுக்கு ஒரு டிக்கட் என்றவுடன் நடத்துனர் என்னை ஏற இறங்கப் பார்த்தான்.

"ஏன் திருவரங்குளத்துக்கில்லையா...?"

"வடகாடு என்கிறேனில்ல..."

"இல்ல திருவரங்குளத்துளதான் சிலோங்காரங்க காம்ப்... இருக்கு..."

பார்வையிலேயே சிலோன்காரன் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள்.

டிக்கெட்டை எழுதி முடிக்க முன்னே அவரிடமிருந்து இரண்டாவது கேள்வியும் எழுந்தது.

"வடகாட்டில் யாரைப் பார்க்க...?"

இனியும் விட்டா பொண்டாட்டி முழுகிட்டிருக்காங்களா முழுகாமலிருக்காங்களா என்றுங் கேட்பான் போலிருந்தது. எரிச்சலாக இருந்தாலும் அவன் பதிலுக்காக முகத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். சொன்னேன்.

"தாசில்தாரர் சுந்தரப்பெருமாள்..." என்று

"அவரை எப்படி..?"

"அவரு நம்ம பெரியப்பா..."

"அப்படீங்களா... அடடா!"

முன்சீட்டில் மாவட்டத்திற்குப் பக்கமாய் உட்கார்ந்திருந்த இளைஞனை

"ட்டேய்... எழுந்திறா... சாரை யாரென்று நெனெச்சே.... நம்ம பஸ் மொதலாளியோட மருமவப்பிள்ளடா.... அவரு நின்னுக்கிட்டு வாறாரு... நீ ஒக்காந்துக்கினு வர்ற எந்திர்றா..."

"சார்... ஒங்க வண்டி சார் இது... நீங்க ஒக்காந்துக்குங்க..." இளித்தான்.

இவனுடைய அதட்டலுக்குப் பயந்த இளைஞனோ ஏதோ தெய்வக்குற்றம் செய்தவனைப் போலப்பயத்துடன் எழுந்து பவ்யமாக ஒரு பக்கம் நின்றான்.

"வேண்டாங்க... அவரும் பணங் கொடுத்து டிக்கெட் எடுத்துத்தானே வர்றாரு... எந்திருக்கச் சொல்றதெல்லாந் தப்புங்க......"

"என்னாங்க தப்பு... ஒங்க பஸ் ...நீங்க ஒக்காராம... நல்ல ஞாயந்தான் போங்க"

பஸ்ஸில இருந்த ஜனங்க முழுவதும் இந்த சீனை வேடிக்கை பார்க்க என்னைத் தோளில் பிடித்து அமர்த்தி இருத்தி விடுவான் போலிருந்தது. வேறுவழியின்றி அமர்ந்தேன். திருவரங்குளம் அடைந்ததும் ஒரு இளைஞர் கும்பல் யாழ்ப்பாணத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைச்சுக் கொண்டு நின்றது. மார்க்கெட் பக்கமும் இன்னொரு கும்பல். தெரிந்த வர்கள் எவராவது தென்படுகிறார்களா என்று பார்க்கிறேன். ஊகூம்

வடகாட்டை அடையவும் மாலை மூன்று மணியாகிவிட்டிருந்தது. கண்டக்டர் சூட் கேஸை எடுத்துக் கையில் தந்து மரியாதை யாக இறக்கிவிட்டார். அதொரு சிறிய சந்தி. ஒரு சிறிய கூரை வேய்ந்த தேநீர்க் கடையும் பலசரக்குக் கடையும் மாத்திரம் டல்ல டித்துக் கொண்டு இருந்தன. விருட்ஷமாய் நின்ற புளியமர நிழலில் சிலர் உண்ட களைப்போ பசியோ படுத்திருந்தார்கள்.

எந்தப்பக்கம் போவதென்று தெரிய வில்லை. தேநீர்க் கடையில் இருந்தவர் களிடம் விசாரித்தேன். அதிலொருவர் கேட்டார்,

"தாசில்தாரு உறவா.....?" எல்லா விபரமும் அறிந்தபின்னால் வீட்டைக் காட்டு வதென்பதுதான் அவ்வூர்ப் பழக்கம்போல. சொன்னேன்.

"ஆமா..."

"யார் வேணும்...?"

"அவங்க என் பெரியப்பா..."

"அடாடாடா... யாரு வூட்டை யாரு வந்து கேட்கிறீக... (பக்கத்தில் நின்றவனிடம் என் சூட்கேஸைக்காட்டி) வாங்கடா பொட் டியை ஐயாகிட்டை... கல்வூட்டுக்கார ஐயா சீமைல இருந்து வாராக... மசமசன்னு பாத்துக்கிட்டு நிக்கிறியே எருமை யாட்டம்..."

அவனோ பிடுங்காத குறையாக சூட்கேஸை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

"ஐயா ஒரு கடதாசி போட்டிருந்தீ ங்கன்னா... பெரிய ஐயா வண்டி அனுப்பியி ருந்திருப்பாருல்ல..."

யாரும் எதிர்பாராமல் போயிறங்கும் என் திட்டத்தை இவர்கள் எப்படித்தான் புரிவார்கள்?

ஒரு பெரஹறா கூட்டம்போல் என்னை ஒரு கும்பல்புடைசூழ நான் முன்னே சென்று கொண்டிருந்தேன். அவர்கள் பாரதி அவாவிய தூண்களும் கூடமும் மாடமும் தோப்புமாய் அமைந்திருந்த ஒரு பழைய பங்களாவுக்குக் கூட்டிச் சென்றார்கள். அந்தப்பழைய வீட்டில் முன் விறாந்தையில் ஈஸிசேரில் இருந்தபடி பெரியப்பா யாரோ இருவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

நாங்கள் கூட்டமாக உள் நுழையவும் உரையாடலை நிறுத்திவிட்டு எழுந்து வந்தார். கூட்டத்தில் ஒருவன் முந்திக் கொண்டு சொன்னான்,

"ஐயா.... சீமையிலிருந்து வாறாக..."

பெரியப்பா மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு என்னைத் தீர்க்கமாகப் பார்க்கிறார்.

"சீமையிலிருந்தல்ல...சிலோனி லிருந்து வர்றேன் ... வாகீசன்...."

பெரியப்பா உடனே கண்டுபிடித்து விட்டார்.

"நீ ...சிவனு பிள்ளையில்ல...."

"ஆமா..."

திடீரென்று இரண்டுதரம் விம்மினார். பின் மேல் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டு கேட்டார்.

"ஒப்பன் போன தீபாவளிக்குக்கூட கடதாசி போட்டான் தான் வாரேன்னு ...கடைசியா நீங்கலாம் இருங்கன் னுட்டு...யாரு கண்ணிலும் படாம இப்படி கணக்கை முடிச்சிட்டுப் போயிட்டான் ... என்னா அவன் ஒடம்புக்கு என்னா? என்ன சொன்னான்?...சாகறப்ப எங்களையெல் லாம் விசாரிச்சானா......?"

"ஒடம்புக்கு ஒண்ணு என்னு... அவர் படுத் ததே கிடையாது....... ஒருநா மாலையில கொஞ்சம்போல...நெஞ்சு வலிக்குதென் னார்.பிறைவேட் டாக்டர்கிட்ட... கூட்டிக் கிட்டு போய் காமிச்சு மருந்து எடுத்தோம். டாக்டரும் பயப்படும்படியா ஒண்ணுமே யில்ல...ரொம்பவும் ஸ்றெயின் எடுத்திட்டா ... இந்த வயதில வர்றதுதான். பெட் றெஸ்ட் எடுத்திட்டா... எல்லாம் சரியாயிடும் என்றார். வீட்டுக்கு வந்து இரவு பிரெட் ரோஸ்டும் கோழி சூப்பும் சாப்பிட்டிட்டு... நல்லா பேசிச் சிரிச்சிட்டு படுத்தவர்தான்...காலைல எந்திரிக்கவேயில்ல..."

பெரியம்மா வந்து என்னைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு சின்னதாய் ஒரு ஒப்பாரி வைத்தார்.

"நரசிம்மன் டீக்கடையிலயில்லா ஐயா வந்து வீட்டை விசாரிக்கிறாக... இது என்னா கதை... யாரு வீட்டை யாரு விசாரிக்கிறது ...?" என்றபடி.

கன்னத்தில் பெரியம்மா செல்லமாய் இடித்தார்.

கல்வீட்டுக்கு யாரோ சீமையிலிருந்து வந்திருக்காக செய்தி ஊர்பூராகப் பரவவும் திமுதிமுவென்று வீடுபூராவும் ஜனம் முற்றுகையிட்டது. உரிமையுடன் கூடத் திற்கே வந்துவிட்டவர்கள் உறவினர்களெ ன்றும், தூரத்தே நின்றுகொண்டும் தூணைப்பிடித்துக்கொண்டும் நின்று பார்த்தவர்கள் பண்ணையில் வேலை செய்பவர்களென்றும் தெரிந்துகொண்டேன்.

பெரியம்மாவைத் தவிர்ந்த ஏனைய பெண்கள் அனைவருமே வயது வித்தியாச மின்றி கூடத்தைச் சுற்றியிருந்த நாலைந்து அறைகளின் கதவுகளின் பின்னாலிருந்தும் பார்த்தனர்.

"அவோகளை...கூட்டி வரேல்லியா...?" அசரீரி ஒரு அறையிலிருந்து வந்தது.

"என்ன கேட்கிறாங்க?" பெரியம்மா வைக் கேட்டேன் அவர் மொழி பெயர்த்தார்.

"உம் பொண்டாட்டியை கூட்டி வரல்லி யான்னு கேட்கிறாள்"

"கேட்கிற நீங்க... யாருன்னுதான் எனக்குத் தெரியல்லியே... இப்பிடி கொஞ் சம் முன்னாலதான் ... வாங்களேன்"

ஆண்கள் சமூகத்திற்கு முன்னால் இலேசில் யாரும் வந்துவிட மாட்டார்கள். உள்ளே தொடர்ந்து மௌனம்.

"உங்களை யாருன்னுபார்க்காம... நான் பதில் சொல்லப் போறதில்ல...!"

பெரியம்மா சொன்னா "பார்த்தா... அவ உனக்கொரு அத்தைமுறை ஆகணும்"

"யேய் வசந்தி வாடி, சித்த மின்ன வாடி அவன் கேட்கிறானில்ல"

ஏராளம் வெட்கம் சுமந்து கன்னங்கள் சிவக்கச் சிவக்க சின்னச் சின்ன அடிகள் வைத்து குளுகுளுவென்று என்னைவிட இளமையாக ஒரு அத்தை வந்து பத்தடி தூரத்தில் அடுக்கியிருந்த நெல்லுச்சாக்கு களில் ஒன்றின் மூலையைப் பிய்த்துக் கொண்டும், முகத்தை நாற்பத்தைந்து பாகைகள் மேற்காகத் திருப்பி வேலியில் ஓணான்ஏதாவது ஓடுகிறதா என்று ஆய்வது போல் பார்த்துக் கொண்டும் நின்றாள். அவளை மேலும் சங்கட சிரமப்படுத்தாமல் சொன்னேன்.

"அவங்க... எஸ்டேட் கொம்பனி ஒண் ணில... வேர்க் பண்ணுறாங்க... லீவ் எடுப்பது கஸ்டம்... ஆகட்டும்... அடுத்தவாட்டி பார்க்கலாம்"

இதைக் கேட்டதும் உள்ளே ஓடி மறைந்தாள்.

பெரியப்பா சத்தமாகக் கேட்டார்

"ஏன்டா... பொம்மனாட்டிங்களக் கூட உத்தியோகத்துக்கு அனுப்புவாங்களா ... அங்க"

நாங்கள் கூடத்தில் பேசிக் கொண்டி ருக்க உள்ளே முப்பது நாற்பது பேருக்கான பெருஞ்சமையல் நடைபெற்றுக் கொண்டி ருந்தது. வெளியே அடுப்பு மூட்டி இரண்டு பெரிய தாமிரக் கொப்பரைகளில் வெந்நீர் தயாரானது.

"ஐயா... அந்த மரக்குத்தியில குந்துங்க ... நான் மொண்டு ஊத்தறேன்..." என்று கொண்டு கீரைக்கொட்டை நிறத்தில் ஒருவன் வந்தான்.

"அதெல்லாம் வேண்டாம்... நானே ஊத் திக்கறேன்........."

"ஐயையோ பெரியையா வைவாரு நீங்க ஒக்காந்துக்குங்க"

பெரிய பாத்திரமொன்றால் மொண்டு மொண்டு ஊத்தினான். நாலுபேர் குளிக்கப் போதுமான அளவு வெந்நீர்.

குளித்து முடியவும் நான் சாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்திக்கொண்டு வந்தேன். பெரியப்பா அலறினார்.

"இதென்ன லுங்கி கட்டிண்டு ... வேஷ்டி இல்லையா..? அவனுக்கு ஒரு வேஷ்டி கொடுங்கடி..." உத்தரவிட்டார். அவர்களுக்கு சாரம் ஒரு கௌரவமான உடையல்ல போலும்!

நாங்கள் சாப்பிடத் தயாராகவும் வெளியே போயிருந்த பெரியப்பா மகன் ஒருத்தன் மோட்டார்ச்சைக்கிளில் வந்து இறங்கினான். அவன் பெயர்கூட ஞாபகத்துக்கு வரமறுக்கிறது. பெரியப்பா "ஒன்ட அண்ணாடா" என்று அறிமுகப்படுத்தவும் மரியாதையாய் நமஸ்கரித்தான்.

சாப்பாட்டு மேசையில் பெரியப்பா முன்பாக அமர்ந்தபோதுதான் அவருக்காக நான் வாங்கிவந்த Johnny Walker இன் ஞாபகம் வந்தது. சூட்கேசில் இருந்ததை எடுத்துவந்து கொடுத்தேன். வாங்கிக் கொண்டவர் இதை உள்ளே வை என்று பெரியம்மாவிடம் நீட்டினார்.

"எதுக்குப் பெரியப்பா... உள்ளாற வைக்கிறீங்க... சாப்பிட முதல் ஒரு சிப் எடுக்கலாமே... நல்லா பசியைக் கிளப்பும்... வேணுன்னா... உங்களுக்கு நான் கொம்பனி தர்றேன்"

எல்லாரும் நான் ஏதோ தகாத வார்த்தை பேசிவிட்ட மாதிரி மூச்சை நிறுத்திவிட்டு என்னை ஆச்சரியத்துடன் நோக்கினர். ஓஹோ என் வண்டவாளத்தை இங்கே இறக்கியிருக்கப்படாதோ?

"நீ... சும்மா தமாஷ்தானே பண்ணிறாய் ... குடிக்கமாட்டாயில்ல" பெரியப்பா நம்பிக்கையுடன் பார்த்தார். இதோ தப்பிக்க வழி! சாதுர்யமாய் பயன்படுத்தினேன்.

"ஆமா... பெரியப்பா... தமாஷ்தான் பண்ணினேன்"

அதைக் கேட்ட பின்னரே எல்லோருக்கும் திரும்ப மூச்சு வந்தது.

பதினைந்து இருபது கறிகள் சமைத்து வைத்திருந்தார்கள். சாதத்தைப் போட்டுக் கொண்டு முதலில் பொரியல் பின் கூட்டு அதற்கு மேலே குளம்பு என்று தனித்தனியே பரிமாறினார்கள். சாப்பிட்டு முடியுந் தறுவாயில் "எல்லாமே போதும் சொதியை விடுங்கள்" என்றேன்.

"அதென்ன... சொதி...?"

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். சமையற்காரனை பெரியப்பா கேட்டார்.

"ஒனக்குந் தெரியாதா....சொதின்னா என்னன்னு...?"

வெளிப் பிதுங்கிய அவன் பரிதாப முழிகளைப் பார்த்து நானே விளக்கினேன்.

"ஆகட்டும்... நாளைக்கு நிச்சயமா பண்ணித் தர்றேன்... இன்னிக்கி ரசம் ஊத்திக்கடா... ராஜா" என்று எனக்கு பெரியம்மா ரசம் ஊத்தினாள்.

இரவு பத்து மணியாகியும் வீட்டில் கூட்டம் மசமச என்று ஓய்ந்தபாடாயில்லை. அது என் விஜயத்தினால் மாத்திரம் அல்ல தினமும் அப்படித்தான் என்பது பின்னாலேயே தெரிந்தது. என்னதான் குக்கிராமமாய் இருந்தாலும் மின்சார வசதியிருந்தது பெரும் சௌகரியமாய் இருந்தது.

காலை விடிந்து பார்த்தபோதுதான் நேற்று தெரிந்ததை விட அந்த வீடு பெரிய பெரிய அறைகளுடன் இரண்டு மடங்கு பிரமாண்டமானதாய் இருந்தது. தாத்தா காலத்தது. சட்டப்படி பார்த்தால் எனக்கும் அதில் ஒரு பங்குண்டு.

சத்யஜித் ரே இன் படமொன்றில் (அந்நியன்?) பலகாலம் தேசாந்திரியாய் திரிந்துவிட்டு ஊர்திரும்பும் ஒரு பெரியப்பா எங்கே அவர்கள் தனியாகவே ஆண்டு அனுபவித்துக் கொண்டு இருக்கும் சொத்துகளில் பங்கு கேட்டுவிடுவாரோ என்று அக்குடும்பம் பூரா அவர் கிளம்பும் வரையில் எண்ணி எண்ணி பயப்படும். அது நினைவுக்கு வரவும் எனக்கு சிரிப்பு வந்தது.

பெரியப்பா வீட்டில் எனக்கு எல்லா முறையிலும் பெண்கள் இருந்தார்கள். மேலும் அயலில் இருந்தும் நிறைய உறவினர் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் வந்து என்னைப் பார்த்துவிட்டு

"கண்டிப்பா ......நீங்க ஊருக்குத் திரும்ப மொதல் எங்க யூட்டுக்கு வந்து சாப்பிட்டிட்டுதான் போகணும்" என்று அழைப்பும் விடுத்துவிட்டுத்தான் போனார்கள்.

எந்தப் பெண்ணாயினும் ஆண்கள் எதிரில் நின்று பேசவே பயப்பட்டார்கள். பெண்ணியம், பெண்விடுதலைக்கான கருத்துக்கள் அந்த ஊருக்கு வரவே பயப்படும். வீட்டுப்பெண்கள் கழுவுதல், துடைத்தல், பெருக்குதல், சமைத்துப்போடுதல், வெற்றிலை மடித்துக்கொடுத்தல் என்பவற்றுடன் நின்றுகொண்டார்கள்.

அக்கிராமத்தில் இன்னும் கொஞ்சம் வசதியாக நிலபுலன்கள் இருந்தவர்கள் வீடுகளிலும் பெண்கள் ஆண்களுக்குச் சமதையாக வயல்களிலும் தோட்டங்களிலும் உழைத்தார்கள். ஆடுமாடுகளைப் பராமரித்தார்கள்.

ஏழைவீட்டுப் பெண்கள் மற்றவர்கள் வீடுகளிலும் வயல்களிலும் தோப்புகளிலும் பாடுபட்டார்கள்.

பெரியப்பா பையன் தன் மோட்டார் சைக்கிளில் என்னை ஆலங்குடி, பேராவூரணி, அறந்தாங்கி என்ற ஊர்களெல்லாம் சுற்றிக் காண்பித்தான்.

போகும் வழியெங்கிலும் வீதியின் இருமருங்குகளிலும் தொடர்ச்சியாக இருபது முப்பது மைல் நீளத்திற்கு புளிய மரங்கள் விருட்ஷங் கொண்டிருந்தன. தவிரவும் சில ஊர்களில் முன்னரே நன்கு திட்டமிட்டு இயூகலிப்டஸ் மரங்களை நாட்டியிருந்தார்கள். வானுயர ஓங்கி வளர்ந்திருந்தன. பரவலாக எங்கும் குழாய்க் கிணறுகளும் பம்பு செட்டுகளும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள்.

கிராமங்களில் அதிகாலைப் பொழுதுகள் உண்மையில் அனுபவித்தற்குரியவைதான். இரவு பெய்த பனியில் நனைந்திருந்த புற்கள் நடக்கும்போது கால்களை நனைத்தன. மேகத்துள் இருந்து வெளிப்படுபவர்கள்போல எங்கோ மைல் தொலைவிலிருந்து பெண்கள் குடங்குடமாக தண்ணீர் மொண்டுகொண்டு பனிப் புகாருக்கூடாக வந்துகொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் பெரியப்பாவின் வீட்டிற்கு முன்பாக அவருக்கே சொந்தமான தோட்டத்தில் குழாய்கிணறும் பம்புசெட்டும் இருந்தது.

இருந்தும் இவர்களை ஏன் இவ்வளவு தூரம் நடக்கவைக்கவேணும்?

காலை நல்ல வீட்டுத்தயாரிப்பு நெய்யில் முறுகச் சுட்டுத் தந்த தோசைகளை உள்வாங்கிவிட்டு ஒரு ஈஸிசேரிலிருந்து யோசித்துக்கொண்டு இருந்தேன். எதிரிலிருந்த வெற்றிலைத்தட்டத்தைப் பார்த்ததும் காதல் பிறந்தது. எழுந்து என்பக்கமாக இழுத்தேன்.

"இருங்கோ... புது வெத்தலை கொண்டாரேன்"

உள்ளே இருந்து ஒரு அசரீரி வந்தது. பார்த்தால் என்னே ஆச்சர்யம்! வசந்தி ஐந்தாறு புதிய வெத்திலைகளைக் கழுவி எடுத்துக்கொண்டு வந்தாள்.

"ஆங்... வாங்க அத்தேய் ..."என்றேன். அழகாக வெட்கப்பட்டாள். வெத்திலைத் தட்டத்தில் வைத்துவிட்டுத் திரும்பியவள் ஏதோ நினைத்துக்கொண்டவள்போல் நின்றுகொண்டு கேட்டாள்.

"ய்ய்யேன்...அவாகளை.... கூட்டியாரலை...?"

"அதுதான் நேத்தே சொன்னேனே... அவங்களுக்கு அங்கே வேலை இருக்கென்று"

"சிலோன்பாஷையில சொன்னா... நமக்குப் புரியுமா... அண்ணனுக்கின்னாப் புரியும்."

பெரியப்பாவைத்தான் சொல்கிறாள்

"சிலோன்பாஷையில சொன்னனா ?"

"அதான் இங்கிலிஷ் மாதிரி... நிறுத்தாமப் பேசிட்டிருந்தீங்க..."

"அப்ப இரண்டு நாளா நான் கதைச்சதெல்லாம்... ஸாரி பேசிட்டிருந்ததெல்லாம் புரியல்லையா?"

"சுத்தமா ஒண்ணும் புரியல... பாப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலை மாதிரியிருந்திச்சா... ஏதோ பேசிக் கிட்டிருக்கிறீங்களேன்னு... கேட்டிட்டிருந்தோம்"

நானுஒயாவிலிருந்து ரயில் பிடிச்சதிலிருந்து வடகாடு வந்திறங்கிய காண்டம் வரை பகுதி பகுதியாய்ப்பண்ணிய உபந்நியாசங்கள் எல்லாம் வீண்!

இப்போ எனக்கு வெட்கமாயிருந்தது! வார்த்தைகளை இனி தேர்ந்தே பேசுவது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

"ஏன் பெரியப்பா... வீட்டுக்கு முன்னாலை குழாய்க்கிணறு இருக்கு... சின்னதாய் ஒரு மோட்டரைப் பூட்டி... சின்னதா ஒரு ஓவர்கெட் ராங்கும் கட்டினம்னா... தண்ணிப் பிரச்ன தீர்ந்திடும்ல... பாவம் இந்தப் பெண்ணுங்க... எம்மாந்தூரம் சுமந்து கொண்டு வருதுங்க..."

அவருக்கு அது ஒரு பொருட்டாகவே படவில்லை.

"நீயொண்ணு... அவாளுக்கும் தின்னது செரிக்கணும்லே..."

"பெண்ணுங்க பாவம் பெரியப்பா... ஒரு கொத்தனாருக்கு சொல்லியனுப்புங்க..."

ஒரு வாரத்தில ராங்க் கட்டி முடிந்தது. திருச்சிக்கு ஆளனுப்பி மோட்டார் பம்ப் செற், PVC குழாய் என்பன எடுப்பித்து நானே அவற்றை பொருத்திக் கொடுத்தேன்.

வீட்டுமுற்றத்திலே குழாயைத் திறக்கவும் சும்மா பளிங்கன்ன நீர் அருவியாய் கொட்டியது. பெண்களுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அவர்களுக்கெல்லாம் நான் ஒரு தேவகுமாரனைப்போல் தென்பட்டேன். பாயாசம், லட்டு, முறுக்கு, கொழுக்கட்டை என்றெல்லாம் பண்ணித் தந்து தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினார்கள்.

பஸ் கொம்பனி மாமாவும் குடும்பத்தோடு வந்து என்னைப் பார்த்தார்.

"அடடடா... இப்படி ஒரு பம்பு பூட்டிக்கலாமின்னு... இதுவரையில நம்ப மண்டையில தோணாமப் போச்சே...!" அங்கலாய்த்தார். அவரோடு ஒட்டிக்கொண்டு வந்த கொத்தவரங்காய்போலிருந்த ஒருவர் சொன்னார்:

"நமக்கு மின்னயே தெரியும் பம்பு பூட்டிக்கிட்டா தண்ணி வருமென்னு பெரியவாளுக்கு புத்தி சொல்றாமாதிரி இருக்கப்படாதேயின்னு இருந்துப்புட்டேன். ஹி...ஹி...ஹி... தம்பிக்கி என்னையை நெனைவிருக்கில்லா.........?"

"இல்லையே... நினைவில்லை" குற்றஞ் சுமத்தும் தொனியில் நிலத்தைப் பார்த்து வெட்கப்பட்டுக்கொண்டு கேட்டார்.

"அதுக்குள்ளாக... மறந்துப்புட்டீக....... இல்ல"

"இல்லையே... இப்போதானே மொதல் தடவையா வந்திருக்கேன்... பார்க்கிறேன்"

"நல்லாத்தான் தமாஷ் பண்ணுறீங்க... ஒங்கள எத்தன வாட்டி உப்புச் சுமந்திருப்பேன்...?"

பெங்களூரில் மருத்துவம்படித்துவிட்டு தனியார் ஆஸ்பத்திரியொன்றில்பிராக்டிஸ் பார்த்துக் கொண்டிருந்த என் இன்னொரு சித்தப்பா மகள் மலர்மகள் நான் வந்திருக்கிறேன் என்று அறிந்து ஒரு கிழமை விடுப்பு எடுத்துக்கொண்டு வந்திருந்தாள்.

தொழில் தவிர அவளுக்கு கதை, கவிதை, ஓவியம், ஜென்பௌத்தம், அத்வைதம், உபநிஷதம், ஸ்மிருதிகள் என்று உலகத்து விடயங்கள் எல்லாவற்றிலும் ஆர்வமிருந்தது. மணிக்கணக்கில் உட்கார்ந்து பேசுவோம் விவாதிப்போம். கொஞ்ச நாட்கள் கிராமத்தில் பொழுது போக்க நல்ல துணையாக இருந்தாள். பகல்வேளைகளில் இருவரும் சேர்ந்தே ஊர்முழுவதும் சுற்றினோம். ஓவியங்கள் சிற்பங்களுக்குப் பெயர் பெற்ற சிற்றன்ன வாசல், சமணர் குகை எல்லாம் போய்ப் பார்த்தோம்.

ஆண்கள் சமூகத்தில் பெண்களையே அழைத்துப் பேசாத, அவர்களைப் பொருட்டாக மதித்து அவர்கள் அபிப்பிராயங்களையே காது கொடுத்துக்கேளாத அக் கிராமத்தின் பெண்களுக்கு நான் அவளுடன் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பது பேராச்சர்யம் தந்தது.

சும்மா சும்மா கதவிடுக்குகளிலிருந்தும், நடைக்கு அப்பாலிருந்தும் என்னை வேடிக்கை பார்த்த பெண்களிடமும் அப்பப்போ வேண்டுமென்றே ஏதாவது பேச்சுக் கொடுப்பேன். நாட்கள் கழிய மெல்ல மெல்ல தம் படுதாக்களை நீக்கிக்கொண்டு என்னை நோக்கி வந்தனர்.

அப்படி வந்தவர்களை இன்னும் நெருக்கி வைத்த நிகழ்ச்சி ஒரு காலை நடந்தது.

நானும் மலைமகளும் அரட்டை அடித்தபடியே இட்லி சாப்பிட்டுவிட்டு, அவள் வெற்றிலை போடுவதால் உடல்-பல் நலத்திற்கு விளையும் தீங்குகள் பற்றி அடித்த லெக்ஸரைக் கேட்டுக்கொணடே நான் வெற்றிலைத் தட்டத்தில் நல்ல சீவல்களைத் தேடிக்கொண்டிருக்க வெளியில் இரண்டு துணிவியாபாரிகள் தலையில் துணிப் பொட்டளிகளுடன் தோன்றினர்.

"ஐயா... நல்ல சின்னாளம் காஞ்சீபுரப் பட்டு... எல்லாமிருக்கு... எடுக்கிறீங்களா?"

"ஐயா புடவையெல்லாம் உடுத்திறதில்ல... அதெல்லாம் பொண்ணுங்க சமாச்சாரம் கூப்பிடு மலர்... பெரியம்மாவை"

புடவையென்றதும் ராணித் தேனீயும் கூட்டின் மற்றக் கும்பலும்போல வீட்டிலிருந்த முழுப்பெண்களும் பெரியம்மாவை புடைசூழ்ந்து வேடிக்கை பார்க்க வந்தனர்.

என்னதான் நினைத்துக்கொண்டாளோ சொன்னா: "ஆம்புளைக அசலூரு போயிருக்காக... போயிட்டு இன்னொரு வாட்டி வாங்க... பாத்துக்கலாம்."

வியாபாரிகள் முகம் இருண்டு இறுகியதைக் கண்டுகொள்ளாமலே கேட்டா: "காப்பியோ மோரோ.... குடிக்கிறீகளா?"

"ஏன் பெரியம்மா.... என்னையப் பாத்தா ஆம்பளை மாதிரித் தெரியலையா?" என்றேன்.

"அதுக்கில்ல... புடவை துணியெல்லாம் ...பெரியப்பாவை கலந்துக்காம... எடுத்தா கோச்சுக்குவார்..."

"சரி இன்னிக்கு... நானிருக்கேன்... பெரியப்பா கோச்சுக்க மாட்டாராம்... இறக்குங்கப்பா மூடைங்கள..." என்றேன்.

பெரியம்மா இடைமறித்தார் "கொஞ்சம் பொறு ராஜா... பணமெல்லாம் பெரியப்பா கைலதானிருக்கு... ஒண்ணும் அவசரப்படாதப்பா."

"அதுக்கெல்லாம்...நானிருக்கிறேன் றனில்ல... நீங்க ஒண்ணும் பேசக் கூடாது... இப்போ செலக்ட் பண்றது மட்டுந்தான் ஓங்க வேல"

முன்கட்டுத் திண்ணையில் நொடியில் கடை விரிக்கப்பட்டது.

"நல்லதாய் பட்டு... என்ன இருக்குங்க காட்டுங்க........." என்றாள் மலர்மகள்.

எல்லாச் சேலைகளுமே நல்ல இறுக்கமாய் இழைகள் ஓடப்பட்டிருக்க ஜரிகைகளிலும் ஒரு தரமிருக்கவே செய்தது. ஒரு பேட்டியில் பட்டு நெசவாளி ஒருவர் எப்படி உண்மையான காஞ்சிபுரம் சேலையை இனம்காணுவது என்று விளக்கியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது.

காஞ்சிபுரம் பட்ல விசேசம் என்னன்னா சேலையோடு சேர்ந்தே நாங்க முகதலையும் நெசவுபண்றதில்லே. முகதலையை தனியே நெசவு பண்ணிட்டு பின்னாலதான் உடலோடு சேர்த்து இழைப்போம்.

வியாபாரி எடுத்து அவள் பக்கமாய் காஞ்சிபுரம் என்று நீட்டியவைகளைப் பார்த்தேன். முகதலை தனியாக இழைக்கப்பட்டே இருந்தது.

"பெரியம்மா ஒங்களுக்குப் புடிச்ச பட்டுச் சேலை எடுத்துக்குங்க"

ஏராளம் தயக்கத்தின்பின் ஒரு சேலை எடுத்தார்.

"மலர்மகள் நீயுமொண்ணு எடுத்துக்கோ. No fussing please."

அழகான காஞ்சிபுரமொன்றைத் தேர்ந்தெடுத்தாள்.

"சரி இன்னொரு பட்டு இதேமாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலக்ட் பண்ணு"

"யாரு அண்ணிக்குத்தானே?... போட்டோவில பாத்தது... என்ன விட... செவப்பாயிருப்பாங்கல்லே..."

"அண்ணிக்கில்ல... இவ சாந்திக்கு..."

எல்லாருமே "ஆங்..."என்று ஏககாலத்தில் வாயைப் பிளந்தனர்.நான் விளக்கினேன்.

"மத்தப்பெண்டுகள் எல்லாமே சும்மா எட்டவெட்ட நின்னு என்னை வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்க அவதான் நேரடியாய் என்கிட்ட வீட்டுக்காரிய ஏன் கூட்டி வரலேன்னு துணிச்சலாய்க் கேட்டவ. இந்த வடகாட்டில பெண்ணியம் நோக்கி முதலடிய எடுத்துவைத்த அந்தத் துணிச்சலைப் பாராட்டி என் எளிய பரிசு! சரி அவவே தனக்குப்பிடிச்சத எடுத்துக்கட்டும். எங்க கூப்பிடு அவளை"

அதிர்ச்சியிலிருந்து விடுபடாதவள் "வாடி மின்னே" என்று பெரியம்மா அதட்டவும் புதுமணப் பெண்மாதிரி சின்னச் சின்ன அடிகளாக வைத்து வந்து பெரியம்மாவின் முகத்தையே பார்த்துக் கொண்டும் தயங்கிக்கொண்டும் நின்றாள்.

"உனக்கு எது பிடிச்சிருக்கோ அதை எடுத்துக்க" என்றேன்.சேலை அடுக்குக்குள் கையை வைக்கத் தயங்கிக் கொண்டு நின்றாள். மலர்மகள் அவளுக்கு மாட்சான சில சேலைகளை எடுத்துக் காட்டவும் அதிலொன்றை ஈஸிக்கொண்டு மறைந்தாள்.

"இதுக்கு அடுத்த ரகத்தில வேற என்னப்பா இருக்கு"

"ஏராளம் இருக்கு சார் கோடம்பாக்கம்... கண்டாங்கி... கோயம்புத்தூர்..." என்று அடுக்கிக் கொண்டே எடுத்துப் போட்டான்.

"சரி இன்னும் எத்தனை பொண்ணுங்க பாக்கியிருக்கு"

"மலர்மகள் தலைகளை எண்ணிவிட்டு சொன்னாள் ஒம்பது"

"சரி நீங்க எல்லாரும் இதுல யாருக்கு எது பிடிச்சிருக்கோ ஆளுக்கொண்ணு எடுத்துக்குங்க"

ஒருவருக்கொருவர் முண்டியடித்துக் கொண்டு எடுத்தார்கள்.

"You are too generous" என்றாள் மலர்மகள்.

சேலைகள் அன்பளிப்பு செய்ததும், மலர்மகள் கூட இருந்ததும் பெண்களுக்கும் எனக்குமான இடைவெளியை நீக்கி நெருக்கத்தை அதிகரித்துவிட்டிருந்தது.

விடுப்பு முடிவடையவும் மலர்மகள் பெங்களூர் திரும்பிவிட்டாள். இப்போது பெண்களெல்லாம் என்னோடு அரட்டைக் கச்சேரிகளே வைக்க ஆரம்பித்து விட்டார்கள். தினமும் மாலைவேளைகளில் ஒரு மாதர்மன்றமே கூடிவிடும்.

மேற்கு நாடுகளில் பெண்கள் என்னவென்னவெல்லாம் சாதனைகள் பண்ணுகிறார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறுவேன். பெண்களின் வேலைச் சுமைகளைக் குறைக்க என்னவென்ன நவீன கண்டுபிடிப்புகள் எல்லாம் வந்துள்ளன மைக்கிரோ வேவ் அடுப்புகள், வாஷிங் மெஷின்கள், வாக்கியூம் கிளீனர்கள் என்று விபரித்தேன் இதெல்லாம் இந்தப் பூமியில் தானா என்பது போன்ற அதிசயத்துடன் கேட்பார்கள். சொந்த மனைவி உடனிருக்க வீட்டிலேயே வேறு பெண்களைக் கூட்டிக் கொண்டு வந்து கொட்டமடித்துக் கொண்டிருந்தவனின் லிங்கத்தை வெட்டியெறிந்த பெண்ணின் கதையைச் சொல்வதா விடுவதா என்று என்னுள் போராட்டமாக இருந்தது.

நானும் ஊர் திரும்ப இன்னும் நாலைந்து நாட்களேயிருக்க ஒரு நாள் வீட்டில் எல்லாரும் இருக்கையில் பெரியப்பா என்னிடம் கேட்டார்

"ஆமா உனக்கு எத்தனை பசங்க"

முதலில் என்னைக் கலாட்டாதான் பண்ணுகிறார் என்று நினைத்துச் சும்மா சிரித்துக்கொண்டிருந்தேன். பின்பு மீண்டுந் திருப்பிக் கேட்டார்.

"இல்லை பெரியப்பா நமக்கின்னும் கிடைக்கல"

"உண்மையாவா!"

"நிஜமாத்தான் பெரியப்பா"

"அப்ப நீ பேசாம வசந்தியக் கட்டு"

நான் சிரித்தேன்.

"அங்க அவ இருக்கிறா இல்லை?"

"அவ அங்க இருக்கட்டும் இவள இங்க கட்டேன் இந்த ஆண்டே பேரனைப் பார்த்திடறனே"

"பாவம் அவ ரொம்ப சின்னப் பொண்ணு பெரியப்பா"

"என்னாது சின்னதும் பெரிசும்னு பேசிக்கிட்டு ஆணெண்டால் விருட்ஷம் பாங்க சும்மா உம்னு சொல்லு ஜாம்னு முடிச்சுரலாம்"

உள்ளே வசந்தியை யாரோ கிண்டல் பண்ணுவது ஸ்படிகமாகக் காதில் விழுந்தது.

"அப்போ ஒனக்கு வூட்டுவேலை மாத்ரந்தான் செய்யவிருக்கும். கொடுத்து வச்சவடி நீ"

என்னால் அப்போதைக்குச் சிரித்து வைக்கத்தான் முடிந்தது.

பிறகு தினமும் இதே பேச்சை எடுத்து என்னை வற்புறுத்தத் தொடங்கிவிட்டார்.

ஏதோ நல்ல காலம் நம்ம கேஸ் அங்கே கோர்ட்டில் இருக்கிறது. எப்படியும் இரண்டு மாதத்தில் டிவோர்ஸ் கிடைத்துவிடும் என்கிற விஷயத்தை உளறியிருப்பேனாயின் நான் அங்கிருந்து மீண்டு வந்திருக்கவே முடியாது.

பெரியம்மா எங்கள் அரட்டை அரங்கப் பக்கமாய் வரும் போதெல்லாம் பொத்தாம் பொதுவில் கேட்பா, "அடி... யென்னா.... சொல்லுறாக... மவ? என்னமும் யோசிக்கிறாகளாமா...?"

மறுநாள் காலை எழுந்து உட்கார்ந்திருக்கிறேன். நேரே என்னிடம் வசந்தி வாறாள்.

"எதுக்கு மாமா... அம்மாந் தூரத்தில... போயி இருக்கீங்க ?"

அவள் மந்திரக்குரலில் மாமா என்றதும் என்னுள் பன்னீர்த் திவலைகள் தூவப்பட மனசு சற்றே ஆடித்தான் போகிறது.

"ஏதோ அப்பா உத்தியோகம்னு போனாரா... நாமளும் அங்கேயே பொறந்துட்டோம்..."

"சரி... சரி... எந்திரிங்க... எந்திரிங்க... குளிக்க வெந்நீ போட்டிட்டேன்... ஆறிடப் போவுது நானே தண்ணியை மொண்டு ஊத்தவா...?"

இது வெறும் வெகுளித்தனத்தாலா இல்லை யாரும் சொல்லிக் கொடுத்ததா?

ஒன்றும் புரியவில்லை.

"ஐயையய்ய வேண்டாந் தாயீ யாரும் என்பக்கத்தில நின்னாலே என்னால குளிக்க முடியாதும்மா வெந்நீ போட்டதுக்கு ரொம்பவும் நன்றி நானே குளிச்சுக்கறேன்."

குளித்து முடிந்ததும் அவள் என்னருகே இன்னொரு முறை வரநேர்ந்தபோது கேட்டேன்

"வசந்தி ஒனக்கு இப்போ எத்தனை வயசு?"

"இருவத்தி மூணு"

"எனக்கு நாற்பத்து மூணு தெரியுமோ பழைய ஆளுங்கதான் விபரமில்லாம பேசறாங்கன்னா பெண்ணியம் பெண்விடுதலை பத்திப் பேசற நானே இது போல முட்டாள் தனம் எல்லாம் பண்ணலாமா?"

"ஒங்கள ஆரம்பத்திலயும் புரியல மாமா ...இப்ப புறப்படறப்பவும் புரியல எப்படின்னாலும்... நீங்க படிச்சவங்க மாமா ...சரியாய்த்தானே செய்வீங்க..."

பின்பெல்லாம் வசந்தியின் கண்களை நேர்கொண்டு பார்ப்பதைத் தவிர்த்தேன்.

ஊர் வந்ததும் முதற்காரியமாய் ஆங்காங்கே தலையில் வெள்ளியாய் நீட்டிக் கொண்டு நின்றவற்றைக் கறுப்பாக்குவதற்கு வாங்கிய முழு சாயசாதனங்களையும் குப்பையில் சேர்த்தேன்.

மனம் மிக இலேசாகத் தொடங்கியது.❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையும் மனித உரிமைகளும்

ரெஜி சிறீவர்த்தனா

(கந்தசாமி நினைவுப் பேருரை -1989)

நியாயவாதியும் நிவாரண, புனருத்தாரணத் தொண்டரும் மனித உரிமைகள் ஆதரவாளரும் ஆகிய க.கந்தசாமி அவர்கள் 19 ஜூன் 1988 அன்று யாழ்ப்பாணத்தில் கடத்திச் செல்லப்பட்டதையடுத்துக் கொல்லப்பட்டார் எனக் கருதப்படுகிறது.

"வன்முறையும் மனித உரிமைகளும்" எனப் பெயரிய இப் பேருரை, ரெஜி சிறிவர்த்தனா அவர்களால், கடத்தலின் முதலாண்டு நிறைவையும், "அகால மரணம் - கந்தசாமி நினைவுமலர்" என்ற நூல்வெளியீட்டையும் குறிக்குமுகமாக, கொழும்பில் 1989 ஜூன் 19 இல் ஆற்றப்பட்டது.

---

இப் பேருரை நிகழ்த்தப்பட்டு 8 ஆண்டுகள் கடந்து விட்ட பின்னரும், இன்னும் இதன் தேவை உணரப்படுவதால் மீண்டும் நினைவு கொள்ளப்படுகிறது.

- மலர்க்குழு

---

கந்தசாமி ஞாபகார்த்த வெளியீட்டுக்குழு அதன் நினைவு மலர் இறுதியில் "படைவீரன் வரவு பார்த்திருத்தல்" என்ற எனது பாடலை சேர்த்திருப்பதை நான் முதலில் குறிப்பிட வேண்டும். அதனை மலரில் வெளியிட்டுக் கொள்ள விரும்பியதற்குக் காரணம், கந்தசாமியின் பரிதாப முடிவுக்கு சில நாள் முன்னர் அவருக்கு அப்பாடலை யாரோ ஒரு நண்பர் அனுப்பியிருந்தமையாகத் தெரிகிறது. 1987இன் இறுதியில் இந்திய-இலங்கை உடன்படிக்கையால் தூண்டப்பட்ட சமாதான நம்பிக்கைச் சுடர், வன்செயல் மீண்டும் நாட்டில் தலையெடுத்ததன் விளைவாக, மங்கத் தொடங்கிய சமயத்தில் இப்பாடல் புனையப்பட்டது. பாடலின் தொனிப் பொருள் யாதெனில் பொதுமக்கள் உலகத்தை எவ்வாறாயினும் முன்னேறச் செய்யவியலாத நிலையில் ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கை வெளியுலகிலுள்ள அமைதியின்மையாலும் வன்செயல்களாலும் எந்தக்கணமும் ஒழிக்கப்படலாம் என்ற உணர்வு மீதூரும் நிலையில் அறிவியல் நாட்ட உலகினுள் அடைக்கலம் புகுவதே எவரும் செய்யத்தக்கது என்பதாகும். அப்பாடலின் பொருளை இப்போது நான் குறிப்பிடுவதற்குக் காரணம் யாதெனில் நாம் இன்று வாழ்கின்ற இருள் மயமான உலகில் கந்தசாமியின் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்ட ஒரு நோக்கத்திற்குச் சான்றாக அமைந்தமையேயாகும். கந்தசாமி அவர்கள் தமது வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்த துறையில் அவர்பால் இயல்பாகவே துலங்கிய வியத்தகு ஆற்றலையும் அபரிமித உழைப்புச் சக்தியையும் பயன்கூர விருத்தி செய்து அதன்மூலம் கிட்டும் அனுகூலத்திலும் திருப்தியிலும் களிப்புற்று வாழ்ந்திருக்கலாம். அதற்குப் பதிலாக, அநீதியை எதிர்த்துப் போராடவும் அநீதிக்குப் பலியானார்க்கு உதவவுமென்றே தனது வாழ்வை அர்ப்பணம் செய்தார். மானிடத்துக்கும் நியாயத்துக்கும் இழைக்கும் கொடுமையைச் சாடத் தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தினார். இத்தகைய பரித்தியாகத்தால் தம் வாழ்வையே பலியிட்டார். ஆக்கிமெடீஸின் மரணத்துக்கும் கந்தசாமியின் மறைவுக்கும் உள்ள பொதுவான அம்சம், நாகரிகம் வாய்ந்த நற்பண்புகள் மீது விலங்கியல் பலாத்காரம் வெற்றி கொண்ட கொடூரந்தான். ஆதலால் "படைவீரன் வரவுபார்த்திருத்தல்" என்னும் பாடல் கந்தசாமிக்கு ஏற்புடைய காஞ்சிச் செய்யுளாகாது. அதற்குப் பதிலாக, அவரது வாழ்வும் மரணமும் பற்றிய எனது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்து விளங்கும் ஆங்கிலக் கவிஞர் டபிள்யூ. எச். ஓடனின் பின்வரும் பாடலடிகளை அவர்க்கமைந்த போற்றரவாகப் புகல்வேன். வெளிக்கொள்ளாமலும் அடக்கமாகவும் மனித வர்க்க ஈடேற்றத்துக்கு அளப்பரியன செய்து புகழாரத்தையும் போற்றலையும் எதிர்கொள்ளாது ஒதுக்கமாக நின்ற இவ்வுத்தமரை நினைத்துப் பார்க்கையில் ஓடனின் ஆடம்பரமற்ற அடிகளே ஏற்புடைத்ததாகப்படுகின்றன.

கணந்தொறும் இறப்போர் கணக்கிலராய்எம்
கண்ணீர் அருவி கரைகடந்தோட
சமூகப் பொதுமையாய் சாத்துயர் விளங்கும்
அவல நிலையில் யாரை புகழ்வது யாரை விடுவது
மக்கள் உயர்வுறு வகையிற் செய்பணி
எல்லையின் றாயினும் எம்மாலியன்றதை
இயற்றுவம் யாமென அரும்பணி புரிந்தவாறு
மாய்ந்து மகான்களும் மறைகின்றனரால்

இச்சொற்பொழிவையாற்றும்படி கந்தசாமி ஞாபகார்த்தக் குழுவினர் என்னையழைத்தபோது "வன்முறையும் மனித உரிமைகளும்" என்ற தலைப்பில் பேசுவதெனத் தீர்மானித்தேன். தனது சகாக்களான மனித வர்க்கத்தினரின் உரிமைகளைப் பேணுதலை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து, அத்தகைய பணியில் ஈடுபட்டிருந்தகாலை வன்முறையால் இறக்க நேர்ந்த ஒரு சான்றோனை நினைவு கூருவதற்குரிய பொருத்தம் நோக்கியே இத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். அது மாத்திரமன்றி, அடிப்படை உரிமைகளுள் அதிமுக்கிய உரிமையான வாழ்வு உரிமை நாள்தோறும் மீறப்பட்டு வரும் இவ்வேளையில் இதனைவிட முக்கியத்துவம் வாய்ந்த விடயம் இருக்கமுடியாது என்பதாலும் இத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். இவ்வுரையின் வடிவப்பாங்கு, நாம் இன்று எதிர்கொள்ளும் சூழ்நிலையின் தன்மையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதெனலாம். இன்று மனித உரிமைகள், அரசினால் ஜனநாயகத்தின் பேரில் அல்லது நாட்டின் இறைமையையும் பாதுகாப்பையும் பேணுதல் என்ற தோரணையில் மீறப்படுகின்றன. மறுதரப்பில் தீவிரவாதக் குழுக்களினால் தேசிய அல்லது சமூக விடுதலையின் பேரில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இங்கே ஒருபுடைச் செயற்பாடுகளை மட்டும் எடுத்துக்கூறி மறுபுடைச் சார்ந்தவற்றைக் கூறாமல் விடுவது ஏமாற்றத்தை விளைவித்தல் மட்டுமன்றி நேர்மையீனமானதுமாகும். ஆதலின் எனது உரை இருபாகங்களை உடையதாய் விளங்கும்- முதலில் அரச வன்முறையையும் பின்னர் இயக்க வன்முறைகளையும் எடுத்துக்கூற முயல்வேன். இந்த இருவகையான வன்முறைகள் பற்றிப் பேசுவதற்கு முன், சில தொடக்க நிலைக் குறிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

இலங்கையில் இன்று காணப்படும் வன்முறைச் செயற்பாட்டுத் தன்மையினை நோக்கிற் கொண்டு இதற்குப் பெரும்பாலும் ஏதுவாயமைந்த சமூக காரணிகளை ஆராய்வதற்கும் அதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கல் என்பவற்றின் பங்கீட்டின் பொருட்டும், பல்வேறு இன, வர்க்கக் குழுக்கள் நடத்திய போராட்டத்தை ஆய்வு செய்தற்கும் இயலும். ஆனால் வன்முறை பற்றிய எனது நோக்கு, இந்த வகையில் அமைவதன்று. எமது சமூகத்தில் பிளவும் பகையுணர்வும் நிலவுவதற்குரிய சமூக ஏதுக்கள் யதார்த்தமானவையே. ஆனால் இச் சூழ்நிலைகளும் அவற்றால் எழும் பிரச்சினைகளும், வன்முறைகளாக உருப்பெற்றும் பரந்தும் தொடர்ந்தும் நிலவும் போக்கானது விலக்க முடியாததொன்றல்ல. பிணக்கு அல்லது முரண்பாடு வன்முறையாகப் பரிணமிக்கும். இப்போக்கு அரச நிருவாகப் பொறியைக் கையாளும் தலைவரும், அந்நிருவாகத்துடன் முண்டிக் கொண்டு நிற்கும் அரச விரோத சக்தியினருமாகிய இரு சாராரும் மேற்கொள்ளும் முடிவுகளைப் பொறுத்தமைவது. நாட்டின் பாதுகாப்பைப் பேணுதற்கியன்ற நெறிமுறை யாது என்பதை நிர்ணயிக்கும் அரச தலைவரின் முடிவிலும் அதனை எதிர்ப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு அரச விரோத சக்திகள் நியாயமானதெனக் கருதி மேற்கொள்ளும் செயற்பாட்டிலும் தங்கியுள்ளது. இதன் தொடர்பில் அரச சக்தி, அரச விரோத சக்தி ஆகிய இரண்டினுள் ஒன்று மேற்கொள்ளும் முடிபுகள் பெரும்பாலும் மற்றதன் எதிர்ப்புச் செயற்பாட்டினைத் தூண்டுவனவாக அமைவதுண்டு. சமீப காலத்தில் நமது நாட்டில் இடம்பெற்ற அரச வன்முறைகளும் அரச விரோத வன்முறைகளும் இதற்குச் சான்றுபகர்வன. நமது சமூகத்தில் வன் செயல்களைப் பெருக்கவல்ல அல்லது குறைக்கவல்லதான உணர்வுபூர்வ முடிவுகளை அரசியல் நாடக சூத்திரதாரிகள் மேற்கொள்ளுவதற்கிடமாயமைந்த இத்துறை பற்றியே எனது உரை துலக்க முயலும்.

உணர்வு பூர்வ முடிவுகள் என்று நான் குறிப்பிடுகையில், முடிவு மேற்கொள்பவர் அரசாங்கத் தலைவராயினும் சரி அல்லது தீவிரவாத இயக்கத் தலைவராயினும் சரி தாம் எடுக்கும் முடிவால் ஏற்படத்தக்க விளைவுகளின் தன்மையை அறிந்து செய்கின்றார் என்பது எனது கருத்தன்று. அவரின் முடிவுகள், வேளைக்கேற்ற உடனடித்தேவை நோக்கிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதே எனது கருத்தாகும். ஆனால் அத்தகைய முடிவுகளால் காலாந்தரத்தில் நீண்ட காலத் தாக்கவியல்பினதாய் ஏற்படவல்ல விளைவுகளைக் கருத்தில் கொண்டு நோக்குவது வெகு அவசியமாகும்.

உதாரணத்துக்கு 1956இல் அரசகருமமொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நாளை எடுத்து நோக்குவோம். சிங்களம் மட்டும் சட்டம் என்ற கொள்கை கைக்கொள்ளப்பட்டமையே இலங்கை வரலாற்றுப் போக்கினை மாற்றியமைத்த பாரிய தாக்கமிக்க முடிவுகளுள் ஒன்றாகும். இவ்விடயத்தில் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, தென்னிந்தியாவில் இந்தித் திணிப்பைத் தவிர்ப்பதில் தாராளமான போக்கையும் துணிவையும் கடைப்பிடித்த ஜவஹர்லால் நேரு போன்று மனோ திடமும் கொள்கைத் திட்பமும் கொண்டிருந்ததாலோ என்று நம்மவரிற் சிலர் இன்று அங்கலாய்க்கலாம். 1956இல் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இந்த அம்சம் பற்றி யான் இப்போது ஆராய முற்படவில்லை. ஆனால் வன்முறை விடயம் தொடர்பில் நெருங்கிய சம்பந்தம் உடைய ஓர் அச்சம் பற்றியே பேச முற்படுகின்றேன். பாராளுமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்ட அதேநாள் பிற்பகல் மசோதாவை எதிர்ப்பவரான சில தமிழர்கள் காலிமுகத் திடலில் மௌனமாக, அமைதியான சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தினர். அவ்வாறு நடத்திய வேளை அங்கு ஏவி விடப்பட்ட குண்டர்களால் தமிழ்ப் பிரமுகர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். நாட்டின் அரசுத் தலைவர் இது நடைபெற அனுமதித்தது மாத்திரமன்றி, அமைதியை நிலைநாட்டவென அவ்விடம் வந்து சேர்ந்த பொலிசாரை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மீண்டு செல்லுமாறு பணித்தனர். இவ்வாறு அரசாங்கமானது தமிழ் அரசியற் குழுக்களின் அமைதியான எதிர்ப்பை வன்முறை கொண்டு தடுக்க முற்பட்ட செயலானது ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தொடர்ந்து இடம் பெறலாயின. இத்தகைய வன்முறைச் செயற்பாடுகளின் தர்க்க விளைவுகள் எழுபது எண்பதுகளில் போர்முனைப்புக் கொண்ட இளந் தலைமுறையொன்று வன்முறை வழியில் உரிமைப் போராட்டத்தை நடத்தும் நோக்கம் கொண்டு உருப்பெற்றமையில் புலப்படலாயின.

இந்தச் சம்பவங்களை இனத்துறையிலன்றி சமூக பொருளாதாரத்துறையில் இடம்பெற்ற சில சம்பவங்களோடு ஒப்பிட்டு நோக்குவது பயனுடைத்தாகும். 1978இலும் 1989இலும் வேலைநிறுத்தம் செய்யும் வேலைக்குச் செல்வோரைத் தடுத்து நிறுத்தியும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியாளர்களும் ஆர்ப்பாட்டம் செய்த பல்கலைக்கழக மாணவர்களும் காடையர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். அமைதியான முறையில் வேலைநிறுத்தம் செய்யவும் ஆர்ப்பாட்டம் செய்யவும் அமைந்த உரிமைகள் அதுவரை காலமும் வழமையான சனநாயக ரீதியான உரிமைகளாகவே கருதப்பட்டு வந்தன. இப்போது வன்முறை கொண்டு அவற்றைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தன்மையில் சிறுபான்மைச் சத்தியாக்கிரகிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் என்றின்னோரை அதிகாரத்திலுள்ளோர் இவ்வாறு நடத்த முனைந்ததன் அந்தரங்க எண்ணம்தான் யாது? "இவர்கள் ஒரு போதும் மறவாத விதமாக ஒரு பாடம் புகட்டிவிடுவோம்" என்று உள்ளூரச் சிந்தித்தார்கள் போலும். ஆனால் அதிகாரத்திலுள்ளோர் புகட்டக் கருதிய பாடம் ஒன்று. அவர்கள் கற்றுக் கொண்ட போதனை வேறாயிற்று. தமிழ் அரசியல் இயக்கம், தொழிலாளர் இயக்கம், மாணவர் இயக்கம் என்பவற்றிற்குத் தலைமை தாங்கினோர் அரசியல் யாப்புக்கும் சனநாயகச் சட்டகத்துக்கும் உட்பட்டு இயங்கிய அமைப்புகளிலிருந்து வளர்ந்தவர்களே. இவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள், சனநாயக முறையில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்ப்பதாயமைந்தன. அமைதியான சனநாயக ரீதியான எதிர்ப்புகளை நசுக்கியொழிக்க முயன்றதன் விளைவாக வன்முறையை கையாளத்தயாராக உள்ள அரசாங்கத்துக்கு எதிராகப் பயன்படத்தக்க ஒரே ஆயுதம் எதிர்வன்முறைச்செயலே என்ற நம்பிக்கை சிறுபான்மை, தொழிலாள, மாணவ கூட்டத்தின் புதிய தலைமுறையினரிடையே தோன்றி வளரலாயிற்று. 1982ல் நடைபெற்ற மக்கள் தீர்ப்பெடுப்பு - அதோடியன்ற அரசாங்கத் தரப்பில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, சனநாயக நெறிமுறையின் பிரதான அங்கமாகிய தேர்தல் முறையின்பாலும் இத்தகைய கருத்துப் பாங்கினையே கொள்ளும்படி செய்தது. இவ்வாறு வடக்கிலும் தெற்கிலும் அரசவன்முறை கடுந் தீவிரவாதப் போக்கை வளர்த்ததோடு தமது பிணக்கைப் பயன்படுத்தும் உத்திகளாக ஏகே 47, ரீ 56 ஆகிய ஆயுதங்களைக் கொண்டவர்களை வலுப்படுத்தவும் வழி சமைத்தது.

ஆயுதம் தரித்த கிளர்ச்சியை எதிர்கொள்ளவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டபோது கட்டவிழ்த்து விடப்பட்ட கரையற்ற வன்முறையை நியாயப்படுத்துவதற்கு பிறிதொரு தர்க்கிக ஞாயம் மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் நிலைபேறு அச்சுறுத்தலுக்குள்ளாகிய நிலையில் நாசம் செய்ய முயல்வோர்க்கெதிராக எத்தகைய நடவடிக்கையும் செயற்பாடும் அனுமதிக்கப்படலாம். போர் நிகழ்கையில் நெறிமுறையேது என்ற வார்த்தைகள் மக்களது வாழ்வும் மரணமும் உள்ள சகல நிகழ்வுகள் மீதும் யதேச்சாதிகாரம் செலுத்துவோர் வாயில் வாழ்வதை அவதானித்திருக்கலாம். இந்த அடிப்படையில் சித்திரவதை கொலை, போராளிகளல்லாதார்க்கெதிரான பயங்கரச் செயல்கள் என்றின்ன யாவும் அரசு தனது உய்வினைப் பேணுதற்கு அவசியமானவை என நியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்படுத்தப்படுவது சகஜமாயிற்று.

ஆட்சி நடத்தும் அதிகாரபீடத்தினரது தருக்க நெறிக்கும் போராளிக் குழுக்களது தருக்க நெறிக்குமிடையே பயங்கரமான ஒற்றுமை காணப்படுகிறது. இரு சாராரும் குறிக்கோளை எய்துதற்கு எந்த வழியையும் பின்பற்றலாம் என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள். சனநாயகத்தைப் பேணுவதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், தேசிய ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பதுமே குறிக்கோளாக உடையவர்கள் அரச தரப்பினர். தேசிய விடுதலை அல்லது சமூக விடுதலையே குறிக்கோளாக உடையவர் மறுதரப்பினர். இருதரப்பினர் பார்வையிலும் தாம் போற்றும் குறிக்கோளை எய்தும் நெறியில் தனிப்பட்ட மக்களது வாழ்க்கையின் பெறுமானம் அற்பமே. இந்நியாயத் தொடையை ஏற்க முடியாமைக்குக் காரணம் வெறும் காருணிய உணர்வு நோக்கு மாத்திரமன்று. இந் நோக்கினைச் சிலர் அறநெறி உணர்ச்சி நுணுக்க சிந்தனை என ஒதுக்கிவிடலாம். இ-து ஏற்கப்படாமைக்குரிய உண்மைக் காரணம் கையாளப்படும் மார்க்கம் குறிக்கோளை நிர்ணயிக்கும் நிலையுடையதாகிறது என்பதேயாம். கடந்த நூற்றாண்டில் ஜேர்மனிய சோஷலிச கவிஞனான லசாலி கூறியது. இங்கு பொருத்தமுடைத்து.

*மார்க்கத்தை வகுக்காமல் நோக்கத்தை காட்டாதீர்*
*நோக்கமொடு மார்க்கங்கள் பிணைந்துறுதல் இயல்பதனால்*
*ஒன்றினை நீர் மாற்றுவதால் மற்றதையும் மாற்றிடுவீர்*
*வெவ்வேறு மார்க்கத்தால் வேறுபட்ட பயன்விளையும்*

போராளிக் குழுக்களின் போக்குகள், செயற்பாடுகள் பற்றிப் பின்னர் விளக்குவேன். முதலில் சனநாயக நெறியற்ற வழிமுறைகளால் சனநாயகத்தைப் பேணுதலும் சட்ட நெறிமுறைகளைக் கடந்து சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதுமாகிய அர்த்தமற்ற நிலைப்பாடு ஆராயப்படற்குரியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தினை, பலாத்காரமாக வீழ்த்த எவரேனும் முயலுமிடத்து, அம்முயற்சியை முறியடித்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் உரிமை அரசுக்கு நிட்சயமாக உண்டு. ஆனால் ஒரு சனநாயக நாடு பயங்கரவாதத்தையும் கிளர்ச்சிவாதத்தையும்கூட நெறிமுறையிலே வழிவகைகளைக் கையாண்டு போராடவியலாது. அவ்வாறு போராடுமிடத்தோ, போராட முற்படுமிடத்தோ எதிர்க்கும்அரசுக்கும் எதிர்க்கப்படும் சக்திக்குமிடையே, இரு சாராரும் நெறியல்லா நெறியைக் கையாளும் தன்மையால் பேதம் காணவியலாது போய்விடுகின்றது. இதன் விளைவாக அத்தகைய வழிமுறைகளைக் கையாளுவதால் எந்த மக்களைப் பாதுகாக்க முயல்வதாக அரசு சொல்லிக்கொள்கிறதோ அம்மக்களின் அனுதாபமும் ஒத்துழைப்பும் கிட்டாமல் அந்நியமாகி விடுகின்றன. உள்நாட்டு யுத்தங்களில் துப்பாக்கியாலன்றி, மக்களின் ஆதரவு மூலமே வெற்றி காணப்படுகின்றது. அவ்வரசியல் போரில், ஒவ்வொரு நபருக்கும் இழைக்கப்பட்ட சித்திரவதையையும் காரணமின்றிப் புரியப்பட்ட கொலையும், பயங்கரமூட்டப்பட்ட ஒவ்வொரு கிராமமும், காலாந்தரத்தில் மறுதரப்பின் வெற்றி நிலைக்கு அனுகூலமாகவேயமையும். இவ்வுண்மை வடக்கிலும் கிழக்கிலும் தெளிவாக நிரூபிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய பாகங்களிலும் இது உறுதியாக்கப்பட்டு வருகிறது.

இப்போது போராளிக் குழுக்களின் தருக்க நிலைப்பாட்டினை நோக்கலாம். இவர்கள் தமது அரசியற் போராட்டத்துக்கு வன்முறையினை தேர்ந்த நெறியாகக் கொண்டுள்ளனர். இங்கு தோன்றும் பிரச்சினைகள், சில முக்கிய அம்சங்கள் நோக்கில் அரச வன்முறைப் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவையாகும். பாராளுமன்ற சனநாயக சட்டத்துக்கு அமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் நெறிமுறையற்ற வன்முறைக்கு இடமளிக்காத அரசியற் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாகக் கூறுவன. ஓரொரு கால் சட்ட முரணான வன்முறைகளை அரசாங்கம் கைக்கொள்ளுமிடத்து, அவை பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சட்ட நெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசாங்க நடவடிக்கைகளை ஆட்சேபிக்கலாம். ஆனால் போராளிக்குழுக்கள் வன்முறையே தமது மார்க்கம் என்பதனை ஒளிவு மறைவேதுமின்றித் தெட்டத் தெளிவாக ஒத்துக்கொள்கின்றன. அத்துடன் வன்முறை நெறியாலேதான் சமூகத்தை மாற்றியமைத்தலும் சாலும் என்பதும் அவர்களது நம்பிக்கை.

போராளிக்குழுக்கள் தமது செயற்பாடு விடுதலை நோக்குடையதெனக் கூறி வரலாற்று புரட்சிப்பாரம்பரியத்தோடு தம்மையும் சார்த்தித் தம் உன்னத நிலையை உணர்த்த முற்படுவர். அடுத்த மாதம் பிரான்சும் உலகமும் மாபெரும் புரட்சியொன்றின் இருநூற்றாண்டு நிறைவை நினைவுகூர உள்ளன. இதனையடுத்து ருஷ்ய, சீனப்புரட்சிகளும் இன்னும் அவற்றையடுத்த புரட்சிகளும் கொடுங்கோன்மையும் அநியாயமும் மலிந்த ஆட்சிகளை அகற்றுவதற்கு மக்களுக்கு உரிமையுண்டென்ற எமது நம்பிக்கைக்கு உரமூட்டுவனவாயுள்ளன. இப்புரட்சிகள் நடைபெற்றபோது இடம்பெற்றவையெல்லாம் நியாயத்தின்பாற்பட்டவையோ என்று கேட்க இடமுண்டு. ஆனால் என்னதான் குறைகள் கூறப்படினும் மாபெரும் புரட்சிகளது விடுதலைப்பண்பு அங்கீகரிக்கப்பட வேண்டியதொன்றே. அத்துடன் காலாந்தரங்களில் அவற்றுக்கெதிராகப் பூசல்கள் கிளப்பப்பட்ட போதும் அவை மீண்டும் புத்துயிர் பெற்றுத் தம் புரட்சித் தன்மையை செறியச் செய்து நின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆகவே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனைத்துத் தோற்றங்களிலும் வன்முறைகள் கண்டிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியும்? அல்லது, மாறாக, விடுதலையின் பெயரால் வன்முறை இழைக்கப்படும் போதெல்லாம், அது நியாயமானதென ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனப் புகலும் போராளிகள் கூற்றை நாம் ஏற்றுக்கொண்டு அனுசரிப்பதா?

மாக்ஸிய வேதாந்தம் ஆசங்கைக்கிடமற்ற புனிதக் கோட்பாட்டதிகாரமுடையதெனக் கருதுபவருள் யான் ஒருவன் அல்லன். உண்மையில் இன்றைய காலகட்டத்தில் மாக்ஸியவாதி என்ற நாமப்பட்டி புனைவதையும் விரும்பவில்லை. ஆனால் இந்த வன்முறை என்ற குறிப்பிட்ட விடயத்தைப் பொறுத்தவரை உயர்தனிச் செம்மை சான்ற மாக்ஸியவாதிகளின் சிந்தனை பயன்தரும் தாற்பரியம் உடையதென்றே கருதுகின்றேன். அத்துடன் இன்றைய போராளிக் குழுக்களின் வன்முறைபற்றிய நிலைப்பாட்டைக் கணிப்பதில் இச்சிந்தனை துணை நிற்க வல்லது. என்றெண்ணுகிறேன். செம்மை மாக்ஸியவாதிகள் நடப்பிலுள்ள அரசினைக் கவிழ்ப்பதற்கு பெருந்தொகை மக்களும் ஈடுபாடு கொண்டு போராடும் புரட்சிகளுக்கும், ஒரு சிறுபான்மைக் கூட்டம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் மேற்கொள்ளும் சடுதிச்சதி, கலகம் போன்ற தீவிர செயல்களுக்குமிடையே தெளிவான வேறுபாடு உண்டென்பதைக் கண்டனர்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு, இவ்விரு சார்பினரும் கையாண்ட வழிமுறைகளிடையே உள்ள பேதங்களையும் வேறுபடுத்திக் கண்டனர். மக்கள் கலந்துகொள்ளும் மாசனக் கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு போன்ற செயற்பாடுகள் புரட்சியின் வடிவங்கள். பகிரங்க இடங்களில் குண்டுகள் வெடித்தல், நாசகார நடவடிக்கை, தனிநபர்களைக் கொலை செய்தல் போன்ற செயற்பாடுகள் மாற்றத்தின் முகவர்களாக மக்கள் பேரில் தம்மைப் பதிலீடு செய்ய முனையும் குழுக்கள் மேற்கொள்ளும் செயல்களாகும். இப்படிச் சொல்வதால் புரட்சி விடயத்தில் தாமே சுயமாகத் தொழிற்பட்டார்கள் என்று பொருளாகாது. புரட்சியிலும், மக்கள் அணிகளாகத் திரட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு வழிநடத்தப்பட்டார்கள். ஆனால் பொதுமக்கள் கூட்டம் தங்கள் நிலையை மாற்றிக் கொள்ள வேறு வழியில்லை என்று உணர்ந்தாலன்றி கிளர்ந்தெழ மாட்டார்கள். மாசனப்புரட்சியின் போது வன்முறை இடம் பெறுங்கட்டத்தில் கூறத்தகு தார்மீக நியாயவாதம் இதுவே. அதாவது மக்கள் தங்கள் செயற்பாங்கு மூலம், தமக்கு விமோசனத்துக்கு வேறுவழியில்லை என்பதைப் புலப்படுத்தலேயாம். ஆனால் ஒரு சிலரைக் கொண்ட குழுவானது, மக்கள் வெறும் பார்வையாளர்களாய் விளங்க, பயங்கரத்தையும் வன்முறையையும் கையாண்டு தாமே சமூகத்தை மாற்ற முனையும் போது, விரும்பிய குறிக்கோளை எய்துதற்கு எத்தகைய வழிவகைகளையும் கையாளலாமா? என்ற வினாவை நாம் எழுப்புவது மாத்திரமன்றி லசோல் (Lassalle) வினாவிய பாணியில் கடைப்பிடிக்கும் மார்க்கம், கருதிய குறிக்கோளையடைய வழி வகுக்குமா? என்ற வினாவையும் எழுப்பவேண்டும். விடுதலையே குறிக்கோள் எனில்-அத்தகைய விடுதலையானது உள்ள நிலையிலும் கூடிய சுதந்திரமும் , நீதியும், பரிவுணர்வும் நாகரிகப் பண்பும் கொண்ட சமுதாயத்துக்கு வழிவகுப்பதாதல் வேண்டும் - யாரைக் கொன்றழிக்கும் என்ற உணர்வின்றிக் குண்டு வைத்தலும், அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்தல், தமக்கு மாறுபட்ட அரசியல் முகாமைச் சேர்ந்தவர்களை ஒழித்துக் கட்டுதல் என்றின்ன செயற்பாடுகளால், இவ்விடுதலைக் குறிக்கோள் எய்தப் பெறலாமா? இத்தகைய கட்டற்ற கண்மூடித்தனமான வன்முறைச் செயற்பாட்டு நடைமுறை அதில் பங்குகொள்வோரையும் செய்யக் கட்டளையிடுவோரையும் கட்டளைகளை நிறைவேற்றுவோரையும் முரட்டுத்தனமும் மிருகவெறியுமுடையவர்களாக்கிவிடுகிறது. இவர்கள் அதிகாரத்துக்கு வரும் பட்சத்தில் அவர்கள் உருவாக்கும் சமூகத்திலும் இவ்வன்முறைச் சுவடு பதிக்கப்படவே செய்யும். அத்தகைய சமுதாயம் பொதுமக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளியாது அரசியல் தலைவர்களால் நடத்தப்படும் இறுக்கமான, விறைப்பான கட்டுப்படுத்தப்பட்ட சமுதாயமாகவே விளங்கும். இங்கு அரசுக்கு மாறுபட்ட அபிப்பிராயம் நிலவுவதற்கே இடமிருக்காது. அத்தகைய போக்கும் நோக்கும் தீவிரமாகக் களையப்படும். இத்தகைய நிலையை விடுதலை எனக் கூறுவது இரணியன் தனது ஆட்சியில் "இரணியாய நம" என்ற பாங்கில் சொற்களுக்கு அவன் கற்பித்த பொருளே பொருளாக மக்கள் கையாண்ட மொழி நடைமுறைக்கே அமைவுடையதாகும்.

இனி, தனிப்பட்டவர் கொலை செய்யப்படுவது பற்றி இங்கு சிறிது குறிப்பிட விரும்புகின்றேன். ஏனெனில் அது நாம் இன்று நினைவு கூரும் நடுநாயகமான சான்றோனின் விதியோடு சம்பந்தப்பட்ட விடயமாக உள்ளது. கடந்த சகாப்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அவதானிக்குமிடத்து, எத்தகைய விடுதலை எய்தல் நோக்கிலும் கொலை செய்தல் ஆகிய வழிமுறை ஒவ்வாதது என ஒதுக்கப்பட்டமையின் அறிவுடைமை உணர்தற்பாலது. ஜனரஞ்சக அபிமானமற்ற அல்லது அடக்குமுறையில் அரசின் முகவர்களாக விளங்கியவர்களைக் கொலை செய்துவிட்டு அவர்களுக்கு விதித்த கொலைத் தண்டனை அவர்கள் கடந்த காலத்தில் இழைத்த கொடுஞ் செயல்களுக்குப் பரிகாரமாயமைந்தவை என்ற கூறலாம். அதனால் அவர்களுக்காக எவரும் கண்ணீர் வடியாமலும் இருக்கலாம். ஆனால் இத்தகைய தூய்மையிழந்த பாசி படர்ந்த மார்க்கத்தில் பயிலத் தொடங்கிவிட்டால் அது நிறுத்தமுடியாத தொடர்கனவு நிகழ்வாக அமையும். பொலிசுக்கு தகவல் கொடுப்பவரை ஒழிக்க முற்படுவீர்கள். அது தக்க செயலே என்று நியாயப்படுத்துவீர்கள். ஆனால் அவ்வளவோடு நிறுத்திக் கொள்ளமாட்டீர்கள். ஏனென்றால் விடுதலை என்ற புனித குறிக்கோளை எய்த நின்ற மார்க்கத்தில் குந்தகமாக நிற்பவர்களைக் கொலை செய்வது நியாயமே என ஏலவே நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு விடுதலை அடையப் பெறுவதற்கான சரியான உபாயம் உங்களிடத்தும் உங்கள் குழுவிடத்தும் மட்டுமே உண்டென்பது பற்றியும் உறுதியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒருபோதும் தவறிழைக்கமாட்டீர்கள் என்ற உமது பூரணமான உறுதி படைத்த நம்பிக்கையும் நீங்கள் பின்பற்றும் மார்க்கத்தின் இரக்கவுணர்வற்ற பாங்கும் இணைந்த நிலை வெகு பயங்கரமானது. இத்தகைய தர்க்கிக நியாயத்தை அரணாகக் கொண்டு உங்களைப் போன்று தாமும் அதே இலட்சியத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் (ஆனால் உங்கள் கருத்துப்படி) தவறான மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற கட்சியினரை அல்லது குழுவினரையும் கொலை செய்யப் புகுவீர்கள். ஆனால் அவ்வளவோடு அமையமாட்டீர்கள். உங்கள் தர்க்க நியாயப்படி, உங்கள் குழுவினருக்குள்ளேயே உங்களோடு மாறுபடுபவர்களை துரோகிகளாகக் கருதி அவர்களையும் ஒழிக்க முனைவீர்கள். இன்னும் இந்நடைமுறைப் பாங்கானது விரும்பிய அதிகாரம் கைப்பற்றப்பட்டவுடன் ஓய்ந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. அது வகுத்துச் செல்லும் பாதையானது சித்திரவதைக் கூடங்கள், ஓயாத ஒழித்துக்கட்டல்கள், கொலை முகாம்கள் மலிந்த சமுதாயத்துக்கே இட்டுச் செல்வதாகும். இந்த ஒளிவெளிச்சத்தில் கந்தசாமி அவர்கள் ஏன் இறக்க நேர்ந்தது என்பதைப் புரிந்து கொள்ளல் இயலும். அவர் தனி மனித மனச் சாட்சிச் சுதந்திரத்திலும் நீதியிலும் நம்பிக்கை கொண்டவர். அவர் அதனை எந்த ஒரு அரசியற் குழுவுக்கோ தலைவர்க்கோ தாரை வார்த்துக் கொடுக்க விரும்பவில்லை. அவருடைய நினைவு மலரைப் படிக்க நேர்ந்த போது அவர் கைப்பட எழுதிய சில பகுதிகளை வாசித்து, வியப்பும் அதிர்ச்சியுமடைந்தேன். சுதந்திரமான தடையற்ற சிந்தனை, செயற்பாடு பற்றிய அவர் தம் கருத்துக்களை அப்பகுதிகள் துல்லியமாகவும் ஒழிவுமறைவுமின்றி நேரிதாகவும் புலப்படுத்துவன. ஒரு குறிப்பு சற்றடே ரிவியூ (SATURDAY REVIEW) பத்திரிகை தொடங்குவது பற்றிய திட்ட ஆலோசனை விஞ்ஞாபனத்தின் ஓர் பகுதியாகும். அக்குறிப்பில் வருவன இவை.

"இது அரசியல் பத்திரிகையாகவோ அல்லது ஒருபுடைச் சார்பினதாகவோ அமையும் நோக்கமுடையதன்று. தமிழர்கள் உரிமைகள், இந்நாட்டில் இன உறவுகள் என்பவை பற்றிய சகல கருத்துக்களும் வெளிப்படுத்தற்குரிய அரங்காகவே அது அமையும். இருப்பினும் குறுகிய நோக்கமுடையதாகாது. பத்திரிகைப் படைப்பின், எழுத்து நடை தனித்தன்மை வாய்ந்ததாயினும் அணுகுமுறை தாராண்மையும் தூய்மையுமின்றதாகவே விளங்கும். பின்னர் ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். நாம் பத்திரிகையின் சுதந்திரத்தைப் பேணுவதில் மிகுந்த கவனமுடையவர்களாதல் வேண்டும். இச் சுதந்திரம் நமது கருத்துக்கொவ்வாததை மறைப்பதைவிட முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவதன் மூலமே எய்தப் பெறலாம்"

அவர் கடத்தப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், ஏலவே உயிர்க்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்டிருந்த வேளையிலும் த.அ.பு.அ. பற்றிப் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"சுதந்திரமான அமைப்பாக நம்மால் இயங்க முடியாது விட்டால், அதனை மூடிவிடுவதே உகந்தது."

இத்தகைய ஒரு மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பது பலவந்தமான அபிப்பிராய ஒருமைப்பாட்டை செயலுறுத்த முனையும் எக் குழுவின் இயக்கத்திற்கும் ஒரு சவாலாகவே அமையும் என்பதை உணர்ந்து கொள்வது சிரமமன்று. கந்தசாமி அவர்கள், இன்று இந்நாட்டில் சிலரினுஞ் சிலரே பாதுகாக்க முனையும் ஒரு இலட்சியத்துக்குத் தம் வாழ்வை அர்ப்பணித்த மாபெரும் தியாகி என்று துணிந்து கூறலாம். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகன் ஜுவலரி மார்ட்

# MOHAN JEWELLERY MART

23வது இலக்கிய சந்திப்பு மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்




உங்களுக்கு,
புதிய – அதி நவீன டிசைன் தங்க நகைகளை அறிமுகப்படுத்துவதில்
பாரிசில் நாம் முன்னிலை வகிக்கிறோம்

உங்கள் அனைத்து நகைத் தேர்வுகளையும்
நகரில் சிறந்த கைவேலைப்பாடுகளுடன்
குறித்த நேரத்தில் செய்துகொள்ள எம்மை நாடுங்கள்.

**201 RUE DU FBG ST. DENIS - 75010 PARIS**

**TEL: 0142056526 FAX: 0142056579**

**METRO: LA CHAPELLE / GARE DU NORD**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மனங்களில் இடங்கொண்ட
குமார் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் நிறுவனம்

# SINGAPORE EXCHANGE CO

(SANS COMMISSION)

நாணய மாற்று வங்கி

(கொமிசன் இல்லாத சேவை)

KUMARS SHOP
80, BD BARBES
75018 PARIS
TEL: 0142593510
FAX: 0142593500

KUMARS JEWELS
80, BD BARBES
75018 PARIS
TEL: 014259125
FAX: 0142593500

KUMARS
TRAADE CENTRE
193 RUE DUFBG ST DENIS
75010 PARIS
TEL: 0142054136

மங்கையர் ஆடவருக்கான
அழகிய ஸ்கைக்கடிகாரங்கள்
உங்கள் உடைத் தேவைகள்
அனைத்துத் தெரிவுகளுக்கும்
பாரிசில்
குமார்ஸ்

குமார்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org